# வன்னியர்





CPL 650795

தென்றல்
நிலையம்

நடன. காசிநாதன்

# வன்னியர்

தொல்லியர் அறிஞர்

நடன. காசிநாதன்

தமிழ்நாட்டரசு தொல்லியல்துறை

மேனாள் இயக்குநர்

தென்றல் நிலையம்

12 பி, மேலசன்னதி

சிதம்பரம்-608001.

# நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **வன்னியர்** |
| பொருள் | : | வரலாறு |
| ஆசிரியர் | : | நடன. காசிநாதன் |
| தென்றல் வெளியீட்டு எண் | : | 5 |
| பதிப்பாண்டு | : | முதல் பதிப்பு : அக்டோபர், 2001 |
| | | திருத்திய இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 2007 |
| மொழி | | தமிழ் |
| நூலின் அளவு | : | டெம்மி |
| தாள் | : | 16 Kg |
| கட்டமைப்பு | : | அட்டைக்கட்டு |
| அச்சு எழுத்து | : | 10 பாயின்ட் |
| மொத்தப் பக்கங்கள் | : | 488 |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| **விலை** | : | **ரூ. 175.00** |

*கிடைக்குமிடங்கள் :*

## மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ✆ 230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ✆ 25361039
6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை-600017 ✆ 24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ✆ 2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ✆ 2397155
78, செரி சாலை, சேலம்-636001. ✆ 3207722
28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ✆ 2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021
தொலைபேசி : 25954528

# வன்னியர் வரலாற்று ஆவணம்

## (முதல் பதிப்பின் பதிப்பாளர் உரை)

## மெ. மீனாட்சி சோமசுந்தரம்

தமிழ்நாட்டு வரலாறு முடியுடை மூவேந்தர்களான சேரர், சோழர், பாண்டியர் வரலாறு தொடங்கி, பல்லவர், பாண்டியர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், விசயநகர வேந்தர், நாயக்கர், மராத்தியர், சேதுபதி அரசர் ஆகியோர் வரலாறு முடிய தொடர்ந்து, ஆங்கிலேயர் வரலாறு வரை நீளும். இப்பெருவேந்தர்களின் வரலாற்றோடு குறுநில வேந்தர்களின் வரலாற்றையும் ஆராய்தல் அவசியம் என்று கருதி அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் டாக்டர் கே.ஏ. கிருஷ்ணசாமி, டாக்டர் எம்.எஸ். கோவிந்தசாமி, சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறை முன்னாள் பேராசிரியர் முனைவர் பாலாம்பாள் ஆகியோர் ஆய்ந்து நூல்கள் வெளியிட்டுள்ளனர்.

அவர்களது வழியைப் பின்பற்றி இந்நூல் ஆசிரியர் **தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன்** அவர்களும், களப்பிரர், முத்தரையர் போன்ற குறுநிலத் தலைவர்கள் பற்றி ஆய்ந்து தனித்தனியே நூல்களை எழுதியிருக்கிறார். சம்புவராயர் என்னும் குறுநிலத் தலைவர்கள் பற்றி டாக்டர் கோ. தங்கவேலு, திரு. இல. தியாகராசன் ஆகியோர் இணைந்தும், டாக்டர் ல.கு. சிவநேசன், டாக்டர் கோ. திருமாவளவன், டாக்டர் தாமரைக் கண்ணன் ஆகியோர் தனித்தனியாகவும் நூல்கள் யாத்துள்ளனர்.

சம்புவராயர் என்போரும் வன்னியச் சிற்றரசர்களே என்றாலும், அவர்கள் புரிந்த சார்பு ஆட்சி மற்றும் தன்னாட்சிக் காலம் மிகக் குறுகிய காலமே ஆகும். அவர்களுக்கு முன்பும் பின்பும் இருந்த வன்னியக் குறுநிலத் தலைவர்கள் பற்றிய முழுமையான நூல் இதுவரை எழுதப்படாமலேயே இருந்தது. அக்குறையைக் நீக்கும் வகையில் அறிஞர் நடன. காசிநாதன் **'வன்னியர்'** என்னும் நூலை எம் பதிப்பகம் வாயிலாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

**அறிஞர் நடன. காசிநாதன்** அவர்கள் தொல்லியல் துறையின் இயக்குநராகப் பத்தாண்டு காலம் பணியாற்றி, கல்வெட்டு, நில அகழாய்வு மற்றும் கடலகழாய்வு, காசு இயல், கலை இயல், ஆகிய துறைகளில் மிகுந்த தேர்ச்சி பெற்று விளங்குபவர். எம் பதிப்பகம் இவரது **கல்லெழுத்துக்கலை, மாமல்லபுரம், தடயம்** ஆகிய நூல்களை முன்னமேயே வெளியிட்டுப் பெருமையடைந்திருக்கிறது. தற்பொழுது **'வன்னியர்'** என்னும் இந்நூலை வெளியிடுவதிலும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

இந்நூலில் ஆசிரியரின் ஆய்வு முத்திரைகளைப் பல இடங்களில் காண முடிகிறது. **'பள்ளி'** என்பார் பற்றி கல்வெட்டுக்கள் தரும் சான்றுகளை மிகச் சிரமப்பட்டுத் தொகுத்துத் தந்திருப்பது பாராட்டத் தக்கது. வன்னியர் குறித்த இலக்கியம், கல்வெட்டு, வெளிநாட்டார் ஆவணங்கள், ஓலைச் சுவடிகளிலிருந்து பெயர்த்தெழுதப் பெற்ற கையெழுத்துப் பிரதிகள், செப்பேடுகள், காசுகள், அகழாய்வுச் சான்றுகள் எனப் பல்விதச் சான்றுகளைச் சுமார் 100 பக்கங்களில் திரட்டியளித்திருப்பது ஆசிரியரின் கடுமையான உழைப்பைக் காட்டுவதாக உள்ளது. மேலும் இலங்கையிலிருந்த வன்னியத் தலைவர்கள் பற்றிய செய்திகளைத் தந்திருப்பது புதுச் செய்தியாகக் காணப்பெறுகிறது. மேற்கூறப் பெற்றிருப்பவை தமிழ்நாட்டு வரலாற்றாய்வாளர்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

நான் வசிக்கும் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள உடையார் பாளையம், அரியலூர், முகாசாபரூர், பிச்சாவரம் ஆகிய இடங்களில் வன்னியக் குறுநிலத் தலைவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களைப் பற்றிய முழுவிவரங்களை இந்நூலில்தான் முதன் முதலில் பெறமுடிகிறது. பாண்டிநாட்டின் ஏழாயிரம் பண்ணை, அளகாபுரி, சிவகிரி ஆகிய இடங்களிலும் வன்னியக் குறுநிலத் தலைவர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள் என்று இந்நூல் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிவது சிறப்பான தொன்றாகும்.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போன்று நூலின் இறுதியில், வன்னியர் பற்றிய சான்றுகளை வழங்கும் 42 செப்புப் பட்டயங்களைப் பின்னிணைப்பாகத் தந்திருப்பது தமிழக வரலாற்றார்வலர்களுக்கு கிடைத்தற்கரிய கருவூல மாகும். வன்னியர் பற்றி முனைவர் பட்டத்துக்கான ஆய்வு செய்வோருக்கு இச்செப்புப் பட்டயங்கள் முக்கிய ஆதாரங்களாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறந்த நூலினை எழுதியுள்ள **அறிஞர் நடன. காசிநாதன்** அவர்கள் மேலும் மேலும் பல புதிய நூல்களை வெளிக்கொண்டு வருவார் என நாம் எதிர்பார்க்கலாம். **'வன்னியர்'** என்னும் இந்நூலினைப் படித்து, வன்னியக் குறுநிலத் தலைவர்கள் குறித்த முழு வரலாற்றினை அறிந்து பயனடையுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# முதல் பதிப்பின் ஆசிரியருரை

**'வன்னியர்'** என்னும் சொல் தற்காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைக் குறிக்கிறது என்றாலும், பழங்காலத்தில் அரசர்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாக விளங்கியிருக்கிறது. சமுதாயத்தை அந்தணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பிரிவாகப் பகுத்திருந்த காலத்தில் க்ஷத்திரியர் என்பார் அரசர்களேயாவர். அந்த க்ஷத்திரியர் 'வன்னியர்' என்றும் குறிக்கப்பட்டனர்.

அரசர்களுக்குப் பொதுப் பெயராக விளங்கிய அச்சொல் பின்னாளில் ஒரு குறுநிலத் தலைவர்களை மட்டும் குறிக்கும் சொல்லாகச் சொல்லாட்சியில் சுருங்கிவிட்டது. அக்குறுநில மன்னர் பிற்காலச் சோழர் காலத்தில் 'சம்புவராயர்' என்று அழைக்கப் பெற்றனர்.

பிற்காலச் சோழர் காலத்திலும், அதற்கு முன்பும் பின்பும் 'வன்னியர்' தமிழ்நாட்டில் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பது பற்றியும், இலங்கையில் இவர்கள் நிலை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு எழுதப்பட்டதே இந்நூல். தற்காலத்தில் வாழும் வன்னியர் என்னும் சமுதாயத்தினர் அவர்கள் வழிவந்தவர்களேயெனினும், தற்கால வன்னியர் சமுதாயத்தினைப் பற்றிய சமுதாயக் கண்ணோட்டத்தோடு எழுதப்பட்டதல்ல இந்நூல். இது 'வன்னியர்' என்னும் குறுநிலத் தலைவர்களின் வரலாற்று நூலேயன்றி வன்னியச் சமுதாயத்தின் சமுதாய வாழ்க்கை பற்றிச் சித்திரிக்கும் நூல் அல்ல.

தமிழக வரலாற்றில் **களப்பிரர், முத்தரையர், காடவரையர், சேதியரையர், அதியரையர்** போன்ற குறுநிலத் தலைவர்கள் விளங்கியிருப்பது போன்றே வன்னியர்களும் **சம்புவரையர், மழவரையர், கச்சியரையர், காலாட்கள் தோழர், சோழகனார், ராவுத்தமிண்டர்** என்ற பல பட்டப்பெயர்களைக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். அவர்களைப் பற்றி இதுவரை முழுமையாக யாதொரு நூலும் எழுதப்படவில்லை. ஆதலால் அந்த முயற்சியில் ஈடுபட்டு இந்நூலை யாத்திருக்கிறேன்.

இந்நூலை யான் எழுதுவதற்கு, எனக்கு முதல் தூண்டுகோலாக அமைந்தது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் **டாக்டர் இந்திரபாலா,** இலங்கையிலிருந்த வன்னியக் குறுநிலத் தலைவர்களைப் பற்றி எழுதியுள்ள நூலேயாகும். நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கருத்தரங்கு ஒன்றில் பங்குபெற 1976-ல் இலங்கைக்குச் சென்றிருந்தபோது அந்நூலை எமக்கு அன்பளிப்பாக அவர் வழங்கி உதவினார்.

அடுத்த தூண்டுகோலாக அமைந்தது கோவையில் வாழும் முனைவர் குருசாமி சித்தரால் திங்கள்தோறும்.வெளியிடப்பட்டு வரும் 'மள்ளர் மலர்' என்னும் திங்களிதழாகும்.

மூன்றாம் தூண்டுகோலாக விளங்கியது க. துரைசாமி நாயகரால் வெளியிடப் பெற்றுள்ள 'வன்னிகுலாதிக்கம்' என்னும் நூலாகும்.

நான் இந்நூல் எழுதுவதற்கு முன்பாகக் 'களப்பிரர்' என்றொரு நூலையும் 'முத்தரையர்' என்றொரு நூலையும் எழுதியுள்ளேன். வரலாற்றார் வலர்களிடத்தில் அவ்விரு நூல்களுக்கும் நல்ல வரவேற்பு இருந்ததை என்னால் உணர முடிந்தது. அவர்களின் உளப்பூர்வமான வரவேற்பும் எனக்கு நான்காம் தூண்டுகோலாக அமைந்தது.

எனது இளவல் திருமிகு வ. பாலசுப்பிரமணியனார் 'மற்ற குறுநிலத் தலைவர்களைப் பற்றி எழுதுகிறாய். ஆனால் வன்னியக் குறுநிலத் தலைவர்கள் பற்றி ஏன் எழுதத் தயங்குகிறாய்? அக்குறுநிலத் தலைவர்கள் பற்றியும் எழுது. நான் அதனை நூலாக வெளியிட முயற்சிக்கிறேன்' என்று உறுதிமொழியளித்து எம்மை ஊக்கப்படுத்தியதுதான் மேற்கூறப்பெற்ற அனைத்துக்கும் மேலான தூண்டுகோலாக அமைந்தது.

அத்தூண்டுகோல்கள் தந்த வலிவினால், **வன்னிய குறுநிலத் தலைவர்கள்**, பற்றிய நூல் எழுத முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளேன் என்று கருதுகிறேன். நூல் எழுதி முடித்தபோது, எம் இளவல் தமிழ்நாட்டுத் தேர்தல் களத்தில் மும்முரமாக இருந்ததால், நூல் எழுதும் பணியில் எம்மைத் தொடக்கக் காலம் முதல் உற்சாகமளித்து ஆதரவு நல்கிவரும் பதிப்புச் செம்மல் **முனைவர் மெய்யப்பனாரிடம்** எம்நூல் அச்சாக்கப்படுதல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். இந்நூல் ஒரு சமுதாயம் பற்றிய நூல்போன்று தெரிகிறதே எனத் தொடக்கத்தில் சிறிது தயக்கம் காட்டினாலும், நூலின் கையெழுத்துப் பிரதியை முழுவதும் படித்துப் பார்த்த பின்னர், உடன் வெளியிட அவரது பதிப்பக மேலாளர் திரு. குருமூர்த்தியிடம் கூறி ஏற்பாடு செய்தார்.

இந்நூல் வன்னியக் குறுநிலத் தலைவர்களின் வரலாற்றை விளக்குவதோடு அவர்கள் பற்றித் தெரிவிக்கும் முக்கியச் சான்றான 42 செப்பேடுகளின் முழுவாசகங்களையும் உரிய வரலாற்றுக் குறிப்புக்களோடு பின்னிணைப்பாகக் கொண்டு இலங்குகிறது. இச்செப்பேடுகள் சிலவற்றின் வாசகங்கள் சில அறிஞர்களால் முன்னமேயே சில நூல்களில் வெளியிடப் பட்டிருக்கின்றன என்றாலும், முறையாக ஒருங்கிணைத்து, சில புதிய செப்பேடுகளையும் சேர்த்து இந்நூலில்தான் முதன்முதலாகத் தரப்பட்டிருக்கின்றன. வன்னியர் பற்றி ஆய்வு செய்வாருக்கு இவை மிகவும் முக்கியச் சான்றாதாரங்களாக அமையும்.

அதே போன்று தமிழகத்தின் பல பகுதிகளில் வன்னியக் குறுநிலத் தலைவர்கள் இருந்து ஆட்சி புரிந்திருக்கின்றனர். அவர்கள் அனைவரின் வரலாற்றுக் குறிப்புக்களும் இந்நூலில் ஒருசேரத் தரப்பட்டுள்ளன; அந்த வகையிலும் இந்நூல் முக்கியத்துவம் பெறுகிறது.

எமக்குத் தூண்டுகோலாக அமைந்த நூல்களின் ஆசிரியர்களுக்கும், எம் இளவல் திரு. வ. பாலசுப்பிரமணியனாருக்கும், பதிப்புச் செம்மல் முனைவர் மெய்யப்பனார் அவர்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலின் பதிப்பாளர் **திரு. மெ. மீனாட்சி சோமசுந்தரம்** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை யான் எழுதும்போது எமக்குப் பல ஆதார நூல்களைப் பெற்று உதவிட்ட எம் அருமை நண்பர்கள் **திரு. கி. ஸ்ரீதரன், திரு. வெ. இராமமூர்த்தி** ஆகியோருக்கும், நூல் எழுதும் பணியில் தொடர்ந்து எம்மை ஊக்குவித்த எம் இல்லத்தார் **திருமதி திலகம் காசிநாதன், திரு. கா. கதிரவன், திருமதி. ஜெயந்தி கதிரவன், திரு. கா. அருண்மொழி, திரு. கா. ஆதித்யன்** ஆகியோர்க்கும் எம் அன்பு கலந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலைப் பொதுமக்களும் அறிஞர்களும் படித்துப் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

அன்பன்,

*நடன. காசிநாதன்*

*136, ஐந்தாம் தெரு,*
*மல்லீசுவரி நகர்,*
*சேலையூர்,*
*சென்னை - 600 073.*
*தொலைபேசி : 22290757*

# இரண்டாம் பதிப்புக்கான முன்னுரை

**வன்னியர்** என்னும் நூலை 2001–இல் முதன் முதலாக வெளியிட்ட பொழுது படிப்போர்களிடம் இதற்கு நல்ல வரவேற்பு கிடைக்குமா என்று நான் அச்சப்பட்டேன். இவ்வரலாற்று நூலைப் பிற வரலாற்று நூல் போன்று அறிஞர் உலகம் ஏற்குமா என்ற கவலையும் எமக்கு இருந்தது. நூலைப் பதிப்பித்த எம் மரியாதைக்குரிய நண்பர் **அமரர் மெய்யப்பனார்**, "நீங்கள் உங்கள் நண்பர்களுக்கெல்லாம் இந்நூலின் பிரதியை அனுப்பி வையுங்கள்" என்ற அன்பு வேண்டுகோள் விடுத்தார். அதன்படி எம் நண்பர்களுக் கெல்லாம் அனுப்பி வைத்தேன். 'நன்றாக இருக்கிறது' என்ற சர்வ சாதாரணச் சான்றிதழ்தான் கிடைத்ததே தவிர, இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்து உரிய பாராட்டு கிடைக்கப் பெறவில்லையே என்ற ஏக்கம் எம் உள் மனத்துள் இருந்தே வந்தது.

அந்த காலகட்டத்தில், 2002–இல், எம் உடல்நிலையில் ஒருவித பாதிப்பு ஏற்பட்டது. எம் வாழ்நாள் நீளுமா என்ற சந்தேகம் எமக்குத் தோன்றியது. ஆதலால் இனி இதுபோன்ற நூலை நாம் எழுதப்போகிறோமா என்ற எண்ணத்தில், பெரியவர் அறிஞர் சண்முகசுந்தரனார் வெளியிட்டு எம்மால் சேகரித்து வைக்கப் பெற்றிருந்த **'பல்லவரையர்'** போன்ற முக்கிய திங்களிதழ் களையும், சில பழைய நூல்களையுமே பழைய தாள் வாங்கும் கடைக்காரரிடம் விற்பனை செய்து விட்டேன். அந்த அளவுக்கு எம் உடல் நலிவுற்றிருந்த நேரம். மீண்டும் எம்மால் நூல்கள் எழுத இயலும் என்ற நிலையை ஏற்படுத்தியவர் எம் குடும்ப மருத்துவர் **அறிஞர் டாக்டர் சுபாஷ் எம்.டி.** ஆவார்கள். அவர்கள் பரிந்துரை செய்த மருந்துகளாலும், எம் வாழ்நாள் நீட்டிக்கப்பட வேண்டும் என உளமார விரும்பும் திருவாளர்கள் வெ. இராமமூர்த்தி, நா. முரளி, பெ. லெனின் போன்ற இளம் நண்பர்களாலும், எம் இல்லத்தார் எம்மைக் கண்காணித்துச் சரியான நேரத்தில் சரியான உணவளித்து உபசரித்து வருவதாலும், ஊக்கப்படுத்தி வருவதாலும் எம்மால் மேலும், **'சோழவேந்தர் பரம்பரை வன்னியப் பாளையக்காரர் வரலாறு'**, **'வன்னியர் மாட்சி'**, **'தமிழகம் அரப்பன் நாகரிகத் தாயகம்'** **'Tamils Heritage'** **'தமிழகச் சிற்பிகள் வரலாறு'**, **'வன்னியர் வரலாறு' (முதல் தொகுதி)**, போன்ற நூல்களை எழுத முடிந்தது. அவற்றுடன் இவ்விரண்டாம் பதிப்பையும் வெளிக்கொணர முடிகிறது.

2001–இலிருந்து 2007 ஆகும் இந்த காலகட்டத்தில், நான் சந்தித்த சில எதிர்பாராச் சூழல்களையும் நான் எண்ணிப்பார்க்க எம் மனம் தூண்டுகிறது. நான் சென்னையில் 1967–இல் பணியில் சேர்ந்த காலத்திலிருந்து எம் இல்லம், எம் உறவினர்கள் வெளியூர்களிலிருந்து வந்து தங்கும் ஒரு தங்கும் விடுதியாகவே விளங்கியது. எம் தாயார் அமரர் **திருமதி. ருக்மணி** அவர்களும், எம் இல்லத்தரசி **திருமதி. திலகவல்லி** அவர்களும் "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு" என்ற குறட்பாவுக்கிணங்க (குறள்–86), வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று, உணவளித்து, உபசரித்தார்கள்.

சில உறவினர்கள் எம் இல்லத்தில் மாதக் கணக்கில், அல்ல அல்ல ஆண்டுக் கணக்கில் கூடத் தங்கியிருந்திருக்கின்றனர். நெருங்கிய உறவினர், தூரத்து உறவினர், நெருங்கிய நண்பர்கள் என்று பலபேர் வந்து தங்குவர். சின்னாள் கழித்துச் செல்வர்.

இந்தச் சூழ்நிலையில் எம் உறவினர் ஒருவரின் தோட்டத்தில் ஒரு ஒட்டுச் செடி முளைத்தது. அது இரு இரகத்திலிருந்து ஒட்டப்பட்டு முளைத்தெழுந்த தென்பதால் துளிர் விடும் நிலையிலேயே அதனை வெட்டியெறிய நினைத்தார் தோட்டக்காரர். உயிர் நீர் ஊற்றுவார் யாரும் இல்லாதக் காரணத்தால் பட்டுவிடும் நிலையில் அச்செடி ஊசலாடிக் கொண்டிருந்தது. அதுபோது நானும், எம் அருமை மாமன் அமரர் திருமிகு **பு.சி. கலியமூர்த்தி** அவர்களும் அச்செடியைப் பக்குவமாகப் பெயர்த்தெடுத்து வந்து எம் வீட்டுத் தோட்டத்தில் நட்டு நல்ல உரம் இட்டு வளர்த்தோம்.

அச்செடி இன்றைக்குத் தம் பலதரப்பட்ட முயற்சிகளால் பெருமரமாக வளர்ந்து கனிகள் மிகுந்து காணப்படுகிறது. அவ்வாறு வளர்ந்த அந்த மரம் இன்று எம்மை இகழ்ந்து பேசுகிறது, ஏளனப் பார்வை பார்க்கிறது எமக்குப் பல்வகையில் கேடு செய்கிறது. எம் இல்லத்துக்குப் படையெடுத்து வந்து தங்கிய உறவினர்களும், பழுத்த அம் மரம் நோக்கிப் பறந்து சென்று அம்மரத்தில் தொற்றிக் கொண்டு, எம்மைப் பார்த்துப் பரிகசிக்கின்றனர், கேலி பேசுகின்றனர், கை கொட்டிச் சிரிக்கின்றனர். வெட்டியெறிய நினைத்த அந்த வீரமிகு தோட்டத்துக் காரரும், அவரது மக்களும் அம்மரத்தின் பழங்களைத் தின்று சுவைக் கின்றனர். அதற்கு நன்றிக் கடனாக அம்மரத்துக்குப் 'பல்லாண்டு' பாடி பல்லிக்கின்றனர். வாழ்க இந்த வல்லவர்கள் என்று வாழ்த்துவதைத் தவிர எமக்கு வேறொன்றும் தோன்றவில்லை.

மேற்கூறப்பெற்ற உறவினர்கள் மத்தியிலும் சில நல்லுள்ளங்களும் உள்ளன. ஒரு உள்ளம், அதுவும், அதன் மக்களும் தற்போது சிறந்த நிலையில் இருக்கின்றபோதும்; எம்மைக் காணும் போதெல்லாம் "உங்களால்தான் எங்களுக்கு இந்த நல்வாழ்வு" என்று தனிப்பட்ட முறையிலும், உறவினர்கள் மத்தியிலும், கூறிவருவதைக் காணும்போது நாங்கள் பட்டபாடு முழுவதும் வீணாகிவிடவில்லை யென்ற ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுகிறது.

இந்தச் சூழ்நிலையில் **'வன்னியர்'** நூலின் இரண்டாம் பதிப்பைக் கொணர்வதற்கு எமக்கு ஆதரவுக் கரம் நீட்டி அரவணைத்துச் செல்பவர்கள் இருவர். ஒருவர் **தமிழினப் போராளி, தமிழ்க் குடிதாங்கி, மருத்துவர் ச. இராமதாசு அய்யா** அவர்கள். மற்றொருவர் பதிப்புச் செம்மல் மெய்யப்பனாரின் திருக்குமரனார் **திருமிகு மெ. மீனாட்சி சுந்தரம்** அவர்கள். மருத்துவர் அய்யா **'வன்னியர்'** நூலைப் போற்றும் வண்ணம் எம்மைப் பாராட்டித் **"தமிழறிஞர்"** என்று விருதளித்தார்கள். அதன் காரணமாக வன்னிய மக்களிடையே எம் **'வன்னியர்'** நூலுக்குப் பெருத்த ஆதரவு கிடைத்தது. முதல் பதிப்பு நூல் முழுவதும் விற்பனையாகிவிட்டது.

`இந்நூல் மக்கள் மத்தியில் பெற்றிருக்கின்ற செல்வாக்கினைக் கருத்தில் கொண்டு இரண்டாம் பதிப்பு வெளியிடுதல் வேண்டும் என்ற முனைப்பு காட்டி வருபவர்கள் **திருமிகு எம். மீனாட்சி சுந்தரம்** அவர்களும், அவர்களது பதிப்பகத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான **மேலாளர் திருமிகு. குருமூர்த்தி** அவர்களும் ஆவர். மேற்சொல்லிய அனைவர்க்கும் மற்றும் **எம் குடும்பத்தாருக்கும்** என் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விரண்டாம் பதிப்பில், கி.பி. 7–ஆம் நூற்றாண்டிலேயே **"பள்ளி"**கள் என்னும் வன்னியர் இருந்துள்ளனர் என்று தெரிவிக்கும் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டையும், **"பள்ளி நாட்டார்"** பற்றி தெரிவிக்கும் **திட்டக்குடி மற்றும் பழுவூர்க்** கல்வெட்டுக் களையும் புதிதாகச் சேர்த்துள்ளேன்.

மேலும் புதிதாகப் பதின்மூன்று செப்பேடுகள் சேர்க்கப் பெற்று அவற்றின் முழு வாசகங்கள் தரப்பட்டுள்ளன. இச்செப்பேடுகளுள் திருவண்ணாமலைப் பகுதியை ஆட்சி புரிந்துவந்த **வல்லாளன், சேரமன்னன்** என்று தெரிவிக்கும் நீலம்பூர் செப்பேடும் (தாராபுரத்தில் கிடைத்தது), தமிழகத்தின் தென் பகுதியில் ஆட்சி செய்த வன்னியப் பாளையக்காரர் ஏழாயிரம் பண்ணை, **ஆண்டுக் கொண்டார் விருது பெற்ற பாளையக்காரர்கள்** செப்பேடும், குண்ணத்தூர் **மழவராயர்– கடந்தையார் செப்பேடும், அரியலூர் மழவராயர்** செப்பேடும் குறிப்பிடத் தக்கவை களாகும்.

ஆதனூர் – சாத்தனூர் பட்டயத்திலும், புதுக்கோட்டை அருங் காட்சியகப் பட்டையத்திலும் வன்னியப் பாளையக்காரர்கள் பற்றிய செய்தி காணப்பெறுவதால் அவைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. பிற செப்பேடுகள் வன்னியர் சாதிப்பிள்ளைகளிடம் இருக்கும் வன்னியர் புகழ்பாடும் செப்பேடுகளாகும்.

அண்மையில் எம்மால், கல்வெட்டுக்கள் மற்றும் செப்பேடுகள் துணை கொண்டு அரியலூர் மழவராயர் வரலாறு சரியான காலக் கணிப்புடன் எழுதப் பெற்றிருக்கிறது. அதுவும் இதில் "வன்னியப் பாளையக்காரர்– தொடர்ச்சி (அரியலூர்)" என்னும் பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் சமுசிகாபுரம் வன்னியப் பாளையக்காரர் பற்றியக் குறிப்பையும் படிக்கலாம்.

மேற்கூறப் பெற்றவைகளை நான் இந்நூலில் சேர்த்திருப்பதன் நோக்கம் '***வன்னியர்***' பற்றிய அனைத்துச் சான்றுகளும் ஒரே நூலில் இடம் பெறுதல் வேண்டும் என்பதேயாம்.

எனவே பல புதியச் செய்திகளோடு வெளிவரும் இவ்விரண்டாம் பதிப்பையும் அறிஞர்களும், மாணவர்களும், வன்னிய இன மக்களும் பொதுமக்களும் வரவேற்று வாழ்த்துவார்கள் என்று நம்புகிறேன்.

அறுபத்தெட்டாம் அகவையில்
அடியெடுத்து வைத்துள்ள
அன்பன்

**நடன. காசிநாதன்**

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வன்னியர் | ... | 13 |
| 2. | வன்னியர் தொடக்க நிலை | ... | 100 |
| 3. | வன்னியச் சிற்றரசர்கள் (சோழர்களின் கீழ்) | ... | 107 |
| 4. | வன்னியர் தன்னாட்சி | ... | 124 |
| 5. | வன்னியச் சிற்றரசர்கள் (பாண்டியர்களின் கீழ்) | ... | 126 |
| 6. | மீண்டும் வன்னியர் தன்னாட்சி (சம்புவராய மன்னர்கள்) | ... | 129 |
| 7. | வன்னியர் இலங்கையில் | ... | 136 |
| 8. | வன்னியப் பாளையக்காரர் (அரியலூர்) | ... | 145 |
| 9. | வன்னியப் பாளையக்காரர் (உடையார் பாளையம்) | ... | 157 |
| 10. | வன்னியப் பாளையக்காரர் (பிச்சாவரம்) | ... | 175 |
| 11. | வன்னியப் பாளையக்காரர் (வடகால்) | ... | 181 |
| 12. | வன்னியப் பாளையக்காரர் (ஏழாயிரம் பண்ணை) | ... | 187 |
| 13. | வன்னியப் பாளையக்காரர் (அளகாபுரி) | ... | 193 |
| 14. | வன்னியப் பாளையக்காரர் (சிவகிரி) | ... | 200 |
| 15. | வன்னியர் காந்தவராயர் சிற்றரசு (திருவிடைச்சுரம்) | ... | 202 |
| 16. | தொகுப்புரை | ... | 208 |
| 17. | பின்னிணைப்பு – 1 வன்னியர் செப்புப் பட்டயங்கள் | ... | 212 |
| 18. | பின்னிணைப்பு – 2 | ... | 353 |


**அ. உள்ளுறை தொடர்ச்சி (வரலாறு)**


| | | | |
|---|---|---|---|
| அ 1. | வன்னியப் பாளையக்காரர்–தொடர்ச்சி (அரியலூர்) | ... | 353 |
| அ 2. | வன்னியப் பாளையக்காரர்–தொடர்ச்சி (சிவகிரி) | ... | 368 |

அ 3. வன்னியப் பாளையக்காரர் (சமுசிகாபுரம்) ... 372

## ஆ. செப்பேடுகள்

ஆ 1. அரியலூர்ச் செப்பேடு ... 377
ஆ 2. ஏழாயிரம் பண்ணைச் செப்பேடு ... 380
ஆ 3. விருத்தாசலம் வன்னிய மடாலயச் செப்பேடு ... 386
ஆ 4. குண்ணத்தூர் செப்பேடு ... 389
ஆ 5. நீலம்பூர்ச் செப்பேடு ... 396
ஆ 6. புரவிப்பாளையம் செப்பேடு ... 398
ஆ 7. பேரூர்ச் செப்பேடு ... 404
ஆ 8. ஒளவையார் குப்பம் செப்பேடு ... 405
ஆ 9. கொஞ்சிக் குப்பம் செப்பேடு ... 413
ஆ 10. விழுப்புரம் செப்பேடு ... 417
ஆ 11. சிறிய கிருஷ்ணாபுரம் செப்பேடு ... 423
ஆ 12. ஆதனூர் – சாத்தனூர் செப்பேடு ... 431
ஆ 13. புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேடு ... 433

## இ. கல்வெட்டுக்கள்

இ 1. பலிஞ்சரஹள்ளிக் கல்வெட்டு ... 435
இ 2. தோகைமலைக் கல்வெட்டு ... 435
இ 3. கருங்காலக்குடிக் கல்வெட்டு ... 436
இ 4. பழுவூர்க் கல்வெட்டு – 1 ... 437
இ 5. பழுவூர்க் கல்வெட்டு – 2 ... 438
இ 6. திட்டக்குடிக் கல்வெட்டு ... 439
இ 7. பரங்கிமலைக் (சென்னை) கல்வெட்டு ... 443

## ஈ. ஆவணங்கள்

ஈ 1. உடையார்ப் பாளையம் வன்னியர் ஜமீன் ஆவணம் ... 445
ஈ 2. அரியலூர் வன்னியர் பாளையம் ஆவணம் ... 459
ஈ 3. கீழூர் வன்னியர் பாளையம் ஆவணம் ... 466
ஈ 4. செஞ்சி வன்னியர் சமஸ்தானமு கைபியது (ஆவணம்) ... 469

இயல் – ஒன்று

# வன்னியர்

## வன்னியர் என்னும் சொல்லுக்குப் பொருள்

'வன்னியர்' என்ற சொல்லுக்கு அரசர் என்று பொதுப் பொருளாகவும்,[1] ஒரு இனத்தின் சிறப்புப் பொருளாகவும்[2] தொன்றுதொட்டு ஆளப்பட்டு வந்திருப்பதை இலக்கியங்கள் மூலம் உணரமுடிகிறது. வன்னியர் என்ற சொல் எவ்வாறு உருவானது என்பது பற்றியும் ஆய்வாளர்கள் ஆய்ந்திருக் கின்றனர். 'வன்னி' என்பது மூலச்சொல் என்றும்; அச்சொல் 'வஃனி' என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம் என்றும் பெரும்பாலோர் கருதுவர்.[3] வஃனி என்பதற்கு 'அக்னி', 'தீ' என்று பொருள். ஆதலால் வன்னியர் அக்கினி குலத்தைச் சேர்ந்தோர் என்று கொண்டு,[4] வன்னியர்கள் பற்றிய புராணமும் உருவாகியுள்ளது. இதற்கு 'வன்னியர் புராணம்' என்று பெயர்.[5]

## வன்னியர் பற்றிய சான்றுகள்

வன்னியர் தொன்றுதொட்டு அப்பெயரில்தான் அழைக்கப்பட்டனரா? அல்லது வேறு பெயர்களில் அழைக்கப்பெற்று, ஒரு காலகட்டத்தில் 'வன்னியர்' என்னும் பெயர் நிலை நிறுத்தப்பட்டதா? தமிழகத்தில் எந்தப்பகுதியில் முதலில் இவர்கள் வாழ்ந்தனர்? இவர்களது தொடக்கத் தொழில் யாது? தொடர்ந்து ஒரே நிலையில் இருந்தனரா? அல்லது சிறுகச் சிறுக முன்னேற்றம் அடைந்து அரசாளும் அளவுக்கு உயர்ந்துள்ளனரா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு நமக்கு விடையளிக்க அடிப்படைச் சான்றுகளாக இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், கையெழுத்துப் பிரதிகள், காசுகள், ஆங்கிலேயர்களால் தயாரிக்கப்பெற்ற ஆவணங்கள் போன்றவை தெரியவந்துள்ளன.

## தமிழ் இலக்கியச் சான்று

### சிலையெழுபது

வன்னியர்களைப் பற்றி தெரிந்து கொள்ள கிடைக்கும் பழமையான இலக்கியச் சான்று கம்பர் எழுதியதாகக் கருதப்படும் 'சிலையெழுபது' என்னும் நூலே ஆகும்.[6] இச் சிலையெழுபதைப் பதிப்பித்த வித்வான் ஜெகந்நாதாசாரியர் 'காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மரபினனாகிய சிற்றரசன் கருணாகரத் தொண்டைமானின் வேண்டுகோளின்படி கம்பர் அவன் அவையில் முதியோர் கேட்கப்பாட, அத்தொண்டைமானாகிய வன்னிய குலவேந்தன் கம்பருக்குப் பொற்றண்டிகை, ஆபரணங்கள் முதலியன கொடுத்ததோடு, கவிக்கு ஆயிரம் பொன் பரிசளித்தான் என்றும் தெரிய வருகிறது. முதற் குலோத்துங்கச் சோழனின் தலைமைச் சேனாதிபதியென்பது கலிங்கத்துப் பரணியால் தேற்றமாதலின், இவன் காலம் அச்சோழன் ஆட்சிபுரிந்த காலமாகும் என்பது விளங்கும்.[7] என்று எழுதியுள்ளார். எனவே இந்நூல் கி.பி. 11–12–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளலாம்.

இந்நூலில் வன்னியர், வன்யர்,[8] வனியர்,[9] பண்ணாடர்[10] என்றும் 'பண்ணாட்டார்'[11] என்றும் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஆட்சி செய்த நாடு 'பண்ணாடு'12 என்று கூறப்பட்டுள்ளது. பள்+நாடு என்பது பண்ணாடு என்று ஆகியுள்ளது. பன்நாடு என்பது பள்ளிநாடு என்பதின் சுருக்கம். வன்னியர், 'பள்ளி' என்றும் தொடக்கத்தில் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களது நாட்டின் தலைநகர் காஞ்சி மாநகர்[13] என்றும்; பல்லவராயர்[14] வழிவந்தோர் என்றும் இந்நூலால் புலனாகிறது.

### வன்னியர் தோற்றம்

வன்னியர் சம்புமுனிவர் செய்த யாகத்திலிருந்து[15] தோன்றியதால் சம்பு குலத்தவர்[16] என்றும், அக்னியிலிருந்து உதித்தவர்[17] என்றும், அக்னிக்குதிரை ஏறியவர்[18] என்றும் புகழப்படுகின்றனர். மேற்காணும் கருத்துக்கள் 'வன்னிய புராணத்தில்' கூறப்பட்டுள்ள கருத்துக்களையொட்டியே உள்ளன. ஆதலால் முதியவர் சண்முகசுந்தரனார் சுட்டிக்காட்டியுள்ளவாறு[19] வன்னியபுராணக் கருத்துக்களை அடிப்படை

யாகக் கொண்டே இச்சிலையெழுபது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வது பொருத்தமானதாகும்.

## வன்னியர் வில் சிறப்பு

இந்நூலில் வன்னியர்களின் வில் பற்றித்தான் சிறப்பாகப் பேசப்படுகிறது. ஒன்றுமுதல் இருபத்திரண்டு பாக்கள் முடியவும், மீண்டும் இறுதியில் நான்கு பாடல்களிலுமாக மொத்தம் இருபத்தாறு பாடல்களில் வில்லின் (சிலையின்) சிறப்பே புகழ்ந்துரைக்கப்படுகிறது.

மலைகளில் மேருமலையைத்தவிரவும், கலைகளில் அறுபத்துநான்கு கலைகள் தவிரவும், அலைகளில் ஊழிக்கால வெள்ளத்தின் அலையைத் தவிரவும் வேறு இல்லையோ அதுபோன்று திறமை மிக்க வன்னியரின் வில்லைத் தவிர வேறு இல்லை என்றும்;[20] வன்னியரின் சிலை மூடரை அறிஞராக்கும், முனிவரைத் தவத்தால் சிறக்கும்படி செய்யும், நல்லவர்க்கு அரசு வழங்கும், தம்மை அண்டியவர்க்கு வலிமையை நல்கும்[21] என்றும், வன்னியர் என்னும் பண்ணாடர் தம் கரத்தில் உள்ள வில்லினை உறுதியாகப் பிடித்திருக்கின்ற காரணத்தாலல்லவா அகன்ற ஞாலம் உரம்பெற்று விளங்குகின்றது என்றும்,[22] வெஞ்சினத்தால் உறுமி பெருமூச்சுவிடும் அக்கினி குலத்தரச ராகிய விக்ரமர் பற்றியிருக்கும் வில், அரக்கரைப் போரில் அழித்தது; பகைவரின் மதில் அருகில் வீரர்களின் துண்டிக்கப் பட்ட தலைகளை வீழச் செய்தது; உடல்கள் சிதைந்து உருளச் செய்தது, அவைகளிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் இரத்தம் நதிபோன்று சுழித்துக் கொண்டு ஓடியது என்றும்[23] கம்பர் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். இவ்வாறு கம்பர் வன்னியரின் வில்லைப் புகழ்ந்திருப்பதற்குக் காரணம் சம்புமுனி வளர்த்த யாகத்திலிருந்து வீர வன்னியன் வில்லுடன் தோன்றினான் என்று புராணத்தில் கூறப்பெற்றிருப்பதாலாகும் என்று ஊகிக்கலாம்.

## வன்னியர் கொடி

வன்னியர்களின் மூன்று வகையான கொடி கூறப் பட்டுள்ளது. ஒன்று சுடர்க்கொடி, இரண்டாவது வனக்கொடி, மூன்றாவது புலிக்கொடி. இந்நூலுக்கு உரையெழுதியாருள் ஒருவரான வித்வான் ஜெகந்நாதாசாரியர், சுடர்க்கொடி என்பது

அக்கினிக் கொடியென்று கூறி, அது மேல்உலகத்துக்காயிற்று என்றும், வனக்கொடி என்பது நீர்க்கொடி என்று பொருள் கொண்டு அது பாதாள லோகத்துக்கானது என்றும், புலிக்கொடி இந்நிலவுலகத்துக்காயிற்று என்றும் எழுதியுள்ளார்.[24]

## செங்கோல் சிறப்பு

வன்னியரின் செங்கோன்மைச் சிறப்பு எத்தகையது என்று கூறவந்த சிலையெழுபதின் ஆசிரியர், வீரசம்பு முனிவரின் யாகத்தில் தோன்றிய முடியணிந்த வன்னியரின் செங்கோல் திறத்தினால் அல்லவா அந்தணர் முத்தீயோம்பப் பயன்படுத்தும் அரணக்கட்டையெனும் தீக்கடைகோலும், வைசியர் கொள்வதும் கொடுப்பதும் குறைபடாது காத்துவரும் நிறைகோல் எனும் துலாக்கோலும், வேளாளர் வேளாண்மைத் தொழில் சிறக்க உதவும் உழுகோல் என்னும் உழவுக்குரிய தாற்றுக்கோலும் சிறந்து விளங்குகின்றன என்று பாடியுள்ளார்.[25]

## நூலுக்குப் பரிசு

இந்நூலின் இறுதியில், கம்பர் வன்னியரின் சிறப்பைப் பாடியதால், அதனைத் தம் காதுக்கு அமிழ்தமெனக் கேட்டு மகிழ்ந்த கருணாகரத் தொண்டைமானாகிய வன்னியன் தம் நிலத்தால் செலுத்தப்பட வேண்டிய ஆயிரம் பொன் வரியை நீக்கியதோடு, அழகிய பல்லக்கும், பொன்னாபரணங்களும், ஒவ்வொரு கவிக்கும் (பாட்டுக்கும்) ஆயிரம் பொன் பரிசும் அளித்தான் என்று தெரிவித்துள்ளார்.[26] கம்பர் நிகழ்கால நிழ்ச்சியாகவே இதனைக் கூறியிருக்கிறார். மேலும் கருணாகரத் தொண்டைமானின் அவைக்களத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்ற தாகவும், அவன் ஒரு வன்னிய அரசன் என்பதையும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

## சிலை எழுபதின் காலம்

கருணாகரத் தொண்டைமான் முதற்குலோத்துங்கனின் ஆட்சிக் காலமான கி.பி.1070-1120 வரையிலான காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறலாம். ஆதலால் 'சிலையெழுபதின் காலத்தையும் கி.பி. 12ஆம் நூற்றாண்டினது என்று கருதலாம்.

சொல்லின் செல்வனான திருமங்கை மன்னனால் பாடப்பெற்றுள்ள பல்லவ குல மன்னர் மரபில் வந்த ஒரு

வன்னியர், கச்சியேகாம்பரேஸ்வரருக்கு, முன்னாளில் ஒளி மகுடமும் பொற்றேரும் வழங்கி பெருமை படைத்தார் என்று ஒரு பாடலில் கூறப்பெற்றிருக்கும் செய்தி சம்புவராய மன்னன் ஒருவன் ஏகாம்பரேஸ்வரருக்கு மகுடமும் பொற்றேரும் வழங்கியதைத்தான் நினைவு கூறுகிறது எனக் கருதலாம். அவ்வாறாயின் அம்மன்னர் காலத்துக்குப் பிறகு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது என்பதும்; முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்துக்கு முன்பே சம்புவராய மன்னன் ஒருவன் இருந்திருக்கிறான் என்பதும் புலனாகிறது. அச்சம்புவராய மன்னன் சோழ மன்னனுக்கடங்கிய சிற்றரசனாக இருந்திருக்க லாம். இம்மன்னன் திருமல்லிநாதன் என்பது இரட்டைப் புலவர் களால் பாடப்பெற்ற ஏகாம்பரநாதருலா மூலம் தெரிய வருகிறது.[27] இம்மன்னன் வீரசம்பனாக (கி.பி. 1306-1317) இருக்கலாம் என்று மதுரா விஜயம் என்ற சமஸ்கிருத நூலைப் பதிப்பித்த திருவேங்கடாச்சாரி கருதியுள்ளார்.[28] ஆனால் வீரசம்பனுக்குத் 'திருமல்லிநாதன்' என்ற பட்டம் வழங்கப் பெற்றதாகச் சான்றுகள் யாதும் காணப்பெறவில்லை. மாறாக மூன்றாம் இர்ாசநாராயணனுக்கு 'மல்லிநாதன் என்ற பட்டம்' வழங்கப்பெற்றிருப்பது கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.[29] ஆனால் இவரது ஆட்சிக்காலம் கி.பி. 1356 முதல் 1379 முடிய உள்ள காலமாகும். சிலையெழுபது எழுதப்பெற்ற காலம் முதலாம் குலோத்துங்கச் சோழனின் சேனாதிபதியாக விளங்கிய கருணாகரத் தொண்டை வன்னியனின் காலம். ஆதலால் சச்சிஏகாம்பரேசருக்கு முடி செய்தளித்த சம்புவராயன் மூன்றாம் இராசநாராயணன் என்று கொள்ள இயலாது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் செல்வாக்குடன் திகழ்ந்து பல கோயில்களை எடுப்பித்தும், குளங்களை நிர்மாணித்தும், மக்களைப் பல்வித இன்னல்களிலிருந்து காத்துதவியும் வந்த காரணத்தால் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்த செங்கேணி சம்புவராயன் நாலாயிரவன் அத்திமல்லன் என்னும் இராசேந்திர சோழச் சம்புவராயனாக[30] இருக்கலாம்.

## சிவாலய சந்தோஷன்

வந்தவாசி வட்டம் கீழ்ப்புத்தூரில் காணப்பெறும் ஒரு கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்றிருக்கிறது. இது நாலாயிரவன் சிவாலய சந்தோஷன் செங்கேணி அம்மையப்பன் என்னும்

சம்புவராயன், பொன்னூர் நாட்டிலுள்ள இருக்கலாம்புத்தூர் ஆளுடையார் திருக்குமரரீஸ்வரம் உடையார் கோயிலுக்கு நிலக்கொடை வழங்கியதைக் குறிக்கிறது.[31] இக்கல்வெட்டில், குறிக்கப்பெறும் மன்னன் 'நாலாயிரவன்' என்று காணப்பெறுவதால், செங்கேணி சம்புவராயன் நாலாயிரவன் அத்திமல்லன் என்னும் இராசேந்திரசோழ சம்புவராயனாக இருக்கலாம். ஆதலால் 'சிவாலய சந்தோஷனான' இவன் காஞ்சி ஏகாம்பரேசுவரர்க்கும், அருளாளப் பெருமாளுக்கும் கொடை வழங்கியுள்ளான் என்று கொள்வது பொருத்தமானதேயாகும்.

## அத்திமல்லன்

மேலும் இம்மன்னன் 'அத்திமல்லன்' என்றும் அழைக்கப் பெற்றிருப்பதால், அத்தியான காஞ்சிபுரம் இவனது ஆளுகைக்குக் கீழ் அப்பொழுது இருந்திருக்கும் போன்று தோன்றுகிறது.

முதல் குலோத்துங்கச் சோழனின் முதல் கலிங்கப் படையெடுப்பின்போது கலிங்கப் பகுதியை ஆட்சி செய்து வந்த சம்புசோழனின் கீழ் பெரிய சம்புவராயர் என்றும் சிறிய சம்புவராயர் என்றும் இராஷ்டிரகூட பிரமுகர்கள் இருவர் இருந்திருக்கின்றனர் என்பது குண்டூரில் கிடைத்துள்ள செப்புப்பட்டயத்தால் தெரிய வந்துள்ளது.[32] மேற்காணும் பெரிய சம்புவராயர் மற்றும் சிறிய சம்புவராயர் ஆகிய இருவரும் சம்புவராய குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என அச் செப்பேட்டைப் பதிப்பித்த பி.ஆர். சீனிவாசனும், மற்றும் இச்செப்பேடைக் கண்ணுற்ற ஹெச். கிருஷ்ணசாஸ்திரியும் கூறியுள்ளனர்.[33] ஆதலால் சம்புவராயச் சிற்றரசர்களோ அல்லது படைத்தலைவர்களோ கலிங்கப்போரில் பங்கேற்றதும் செப்புப்பட்டயத்தால் உணரமுடிகிறது. ஆனால் இவர்களுக்கும் கருணாகரத்தொண்டை வன்னியனுக்கும், செங்கேணி சம்புவராயன் நாலாயிரவன் அத்திமல்லன் என்னும் இராசேந்திர சோழச் சம்புவராயருக்கும் என்ன தொடர்பு இருந்தது என்பது தெரியவில்லை. ஒருவேளை கருணாகரத் தொண்டை வன்னியனைப் பெரிய சம்புவராயன் என்றும், இராசேந்திர சோழச் சம்புவராயனைச் சிறிய சம்புவராயன் என்றும் கூறியுள்ளதோ என்பது அறிய முடியவில்லை.

## வன்னிய புராணம்

வன்னியபுராணம் என்னும் இந்நூல் மதுரை மாநகரில் சுந்தர பாண்டியன் ஆட்சி செலுத்தி வந்த காலத்தில் இயற்றப்பட்டதாகவும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணப்பிள்ளை குமாரர் வீரப்பிள்ளை என்பார் இப்புராணத்தை எழுதியதாகவும் 1967–ல் சென்னை பிரேமா பிரசுரத்தால் வெளியிடப்பட்ட 'வீரவன்னியர் கதை' (வன்னியர் புராணம்) என்னும் நூலில், நூல் வரலாறு என்னும் பகுதியில் கூறப்பெற்றிருக்கிறது. இதே நூல் பிறிதோரிடத்தில்[34] அரசர்களாகத் திகழ்ந்த வீர வன்னியர்கள், சிவபெருமானின் அருளால், அக்னியில் தோன்றி வில்லும் சேனைகளும் பெற்றார்கள். அவர்களில், வேதவியாசர் அருளிய பதினெண் புராணத்தில் ஆக்னேய வட்டபாகத்தில் கூறப்படும் உருத்திர வன்னியரின் கதையைக் கூறுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்புராணம் வேதவியாசரால் முதன் முதலில் எழுதப்பெற்றதென்பது புலனாகிறது.

"வன்னிய ராஜாக்களின் சரிதத்தை ஆதியில் சிவபெருமான் நந்தியாருக்குச் சொல்ல, நந்தி வேத வியாசருக்குச் சொன்னார். வியாசர் சூத முனிவருக்குச் சொன்னார். சூத முனிவர் சனகாதி முனிவருக்குச் சொன்னார். அந்தச் சனகாதி முனிவர் அத்திரி மகாமுனிவருக்குச் சொன்னார். அவர் உலகினருக்குக் கூறியதாக நூல்வரலாறு கூறப்படுகிறது" என்று வன்னியபுராணம் வழிவழி கூறப்பட்டு வருவதும் இப் புராணத்தில் சொல்லப்பெற்றிருக்கிறது.[35]

## வன்னியர் தோற்றம் பற்றிய புராணக்கதை

கடுந்தவம் புரிந்த ரிஷிக்கும், ஒளிமயமான கயிலாய மலையிலிருந்து மின்னல்போன்று ஒரு பெண் வரவேண்டும் என்று நினைத்து, அவ்வாறு வந்த மாயா என்ற பெண்ணுக்கும் மூன்று புதல்வர்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். அவர்கள் சூரபத்மன், கஜமுகாசுரன், சிங்கமுகாசுரன் என்ற ஆண் மக்களும், அஜோமுகி என்ற பெண்ணும் ஆவர். மேற்காணும் மூன்று அசுரர்களும் முருகப் பெருமானால் சம்ஹாரம் செய்யப் பெற்றனர்.

அஜோமுகி, துர்வாச முனிவருடன் கூடி இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுத்தாள். அவர்கள் முறையே

வில்லவன், வாதாவி என்று அழைக்கப்பெற்றனர். இவ்வரக்கர்கள் பெரும் பலசாலியாக விளங்கினார்கள். கர்வத்தினால் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெருங்கேடு செய்தார்கள். வாதாவி, மயனின் மகளான சொக்கக் கன்னி மூலம் நான்கு ஆண்மகவுகளைப் பெற்றெடுத்தான். அவர்கள் கம்பன், கஜமுகன், கும்பன், சம்புமாலி என்றழைக்கப் பெற்றனர். வாதாவியின் தமையன் வில்லவன் குறுமுனியான அகஸ்தியரால் அழிக்கப்பெற்றான். வாதாவி சிவபெருமானை எண்ணி தவம் செய்து அளப்பரிய வரங்கள் பெற்றான். ஆதலால் தனக்கு நிகர் யாருமில்லையென எண்ணி உலகத்திலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும், மற்றும் தேவர்களுக்கும் பெரும் துன்பம் விளைவித்தான்.

அத்துன்பங்களைப் பொறுக்கமுடியாமல் தேவர்கள் பரமசிவனிடம் சென்று முறையிட, சிவன் நாரதர் மூலம் அனைத்தையும் அறிந்து, பின் பிரமன், விஷ்ணு ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார். அப்போது விஷ்ணுபகவான் "வடக்குத் திசையில் தவம் செய்யும் சம்புமுனிவர் இருக்கிறார். அவரது வேள்வியில் உமது நெற்றிக்கண்ணில் எழும்பும் நீரை ஆகுதியாகக் கொடுத்தால், அதில் ஒரு வீரமனிதன் உதிப்பான். அந்நாயகன் வீரவன்னிய மகராஜனாக விளங்குவான். அவனது கைப்பாணத்தாலேயே அந்த வாதாவி சூரன் மடிவானேயல்லாமல், மற்ற யாராலும் மடியமாட்டான்"[36] என்று கூறினார்.

உடன் சம்பு முனிவர் வரவழைக்கப் பெற்றார். தேவதச்சன் மயன் உதவியோடு யாக சாலை மண்டபம் உருவாக்கப் பெற்றது. சம்பு முனி ஓம குண்டத்தில் தம் வேள்வியைத் தொடங்கினார். பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் சிவனாரின் நெற்றிக் கண்ணில் வியர்வை தோன்றியது. அவர் அந்த வியர்வையைத் தம் கையில் ஏந்தி செங்கழுநீர் மலருடன் ஓம குண்டத்தில் ஆகுதி கொடுத்தார். அப்போது சிவனாரும் மற்றைய தேவர்களும் மனம் மகிழ, வீர வன்னிய மகாராஜன் அக்கினிக் குதிரையின் மேலேறி வேள்வித்தீயில் தோன்றினான்.

அப்போது சிவனார் அவனை நோக்கி தேவர்களுக்குத் துன்பமிழைத்து வரும் வாதாவி அரக்கனின் கர்வத்தை நீ அடக்குவாயாக என்று ஆணையிட்டார். பிறகு வீரவன்னியனுக்கும் தேவேந்திரனின் இளைய மகளான மந்திரமாலைக்கும் வைகாசி மாதம் ஏழாம் நாள் குருவாரம் தசமி பூச நட்சத்திரங்கூடிய கடக ராசியில் திருமணமாகியது.

மண்மக்கள் சிவபெருமானின் இடமான கைலாயம் வந்தவுடன் சிவபெருமான் வீரவன்னியனுக்கு 'ருத்திர வன்னியன்' என்று பெயரிட்டார். பிறகு ருத்திரவன்னியன் சிவனாருடன் தங்களுக்குப் பிள்ளைகள் வேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் ஓமகுண்டத்திலிருந்து நான்கு ஆண்பிள்ளைகள் வெளிவரும்படிச் செய்தார். அப்பிள்ளைகளுக்குச் சிவபெருமான் முறையே 'கிருஷ்ண வன்னியன்', 'பிரம்ம வன்னியன்', 'சம்பு வன்னியன்', அக்னி வன்னியன்' என்று பெயரிட்டார். அப்பிள்ளைகள் வளர்ந்து வாலிபப் பருவம் அடைந்ததும் காந்த முனிவரின் பெண்களான இந்திராணி, நாரணி, சுந்தரி, சுமங்கலி ஆகியோரை மணமுடித்தனர்.

அதன்பிறகு வீரவன்னியனான ருத்திர வன்னியனும் அவனது குமாரர்களும் வாதாவி என்னும் அரக்கனை வதஞ்செய்து வரவேண்டுமென்று ஆணையிட்டு அனுப்பினார். அவர்கள் வாதாவி, கடலின் நடுவில் அமைத்திருந்த இரத்தினா புரி நகரம் சென்று வாதாவியோடு கடும்போரிட்டு வாதாவியைக் கொன்றனர். நகரத்தையும் தீயிட்டுக் கொளுத்தி னர். இச்செய்தியை அறிந்த தேவர்கள் கற்பக மலர்மாரி பொழிந்தனர். சிவன் வீரவன்னியனை நோக்கி "நீ உன் தேவியாகிய மந்தரமாலையுடன் சம்புதேசத்துக் கதிபதியாகி இருப்பாயாக. உன் பிள்ளைகளான மற்றவர்கள் தத்தமது பகுதி யில் ஆட்சி செய்யட்டும்" என்று வாழ்த்தி வழியனுப்பினார். வீரவன்னியனான ருத்திரவன்னியன் பாலாற்றின் வடதிசை வரையிலும், பெண்ணையாறுவரை கிருஷ்ண வன்னியனும், காவிரியாற்றின் வடபகுதியைச் சம்பு வன்னியனும், கீழைச் சமுத்திரக் கரைக்கு மேற்குப் பகுதியை அக்னி வன்னியனும் ஆட்சி செய்து வந்தார்கள்.

அவ்வாறு ஆட்சி செய்யுங்கால், வீர வன்னியனின் மனைவி மந்தரமாலை கருவுற்று ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள். அக்குழந்தைக்குச் 'சந்திர சேகர மகாராஜன்' என்று பரமசிவனாரின் பெயரையே பெற்றோர் சூட்டினர். சந்திரசேகரன் வாலிபப் பருவம் அடைந்ததும் சோழமன்னனின் மகளைத் திருமணம் செய்த வைத்தனர். பிறகு சந்திரசேகரனுக்கு முடிசூட்டி சம்பு ராஜ்யத்தை ஆட்சி செய்து வரும்படி செய்தனர். அப்போது தேவேந்திரன் தேவர்களோடு வந்து வீர வன்னியனைத் தேவ லோகத்துக்கு அழைத்துச் சென்றார், என்று புராணத்தில் காணப்படுகிறது.

## வீரவன்னியன் உருவ அமைப்பு

வீரவன்னிய ராஜன் ஓமகுண்டத்தில் தோன்றியபோது சிரசில் மகுடமும், கையில் வில்லும், கேடயமும், வேலும், மார்பில் மேகலாபரணமும், இரண்டு புஜங்களில் புயகீர்த்தியோடு சிங்கமுகத்தோடாவும், மலர்ப்பாதத்தில் வீரகண்டா மணியும், தோளில் அம்புகளும் அம்பறாத்தூணியும், காதுகளில் மகர குண்டலங்களும், முருடும், நெற்றியில் வெண்ணீறும், கட்டாரியும், வாளும், செங்கழுநீர் மாலையணிந்த தோளும், இடுப்பில் கட்டிய கச்சையும் சல்லடமும், பொற்பீதாம்பரமுமாகத் தோன்றினான்[37] என்று புராணத்தில் வருணிக்கப் பட்டுள்ளான்.

## படைக்கலன்கள்

வீரவன்னியன் வாதாவியை எதிர்த்துப் போரிடப் புறப்பட்டபோது, "சிவபெருமான் மார்போடணைத்து "வீரவன்னியா! உன் பெருமையை நான்கு திசைகளிலும் உள்ளவர் போற்றிப் புகழும்படியாக, உனக்குப் பயன்படும் பாணங்களைத் தருகிறேன்!" என்று கூறி நாகாஸ்திரம், கருமாஸ்திரம், கிரியாஸ்திரம், விஷ்ணுவின் சக்கரம், தேவேந்திரனின் வைரவாள், சூலாயுதம், மிண்டிபாலம், தண்டாயுதம், சாரங்கம், யமனாஸ்திரம், சக்தி, வேலாயுதம், விச்சுனிபாணம், கஜமுகாஸ்திரம், நரசிம்மாஸ்திரம், பினாகாஸ்திரம், முசுகுந்தம், மோகனாஸ்திரம் ஆகிய பாணங்களை வீரவன்னியனிடம் வழங்கி அந்தந்த ஆயுதங்களுக்குரிய மந்திரங்களையும் உபதேசித்தார்[38] என்று கூறப்பட்டிருக்கிறது.

## 'பள்ளி' என்பதன் பொருள்

வீரவன்னியனும் அவனது நான்கு குமாரர்களும் வாதாவியைக் கொன்றுவிட்டு, அவனது இரத்தினபுரியைச் செந்தழலுக்கு இரையாக்கிவிட்டு, சிவபெருமானிடம் சென்று பணிந்து கூறி வாழ்த்தும் வரிசைகளும் பெற்றதற்குப் பிறகு வீரவன்னியரின் மகன்கள் தங்கள் மனைவியரோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்த நாளையில், ஒருநாள் அவர்களைப் பார்த்து தேவர்களின் தலைவர் 'பள்ளியாரே' பரமசிவன் வரத்தால் பிறந்த உங்களுக்கு இந்த அல்லல் வந்தது என்ன? என்று விளையாட்டாகக் கேட்க, உடனே வன்னிய குமாரர்கள்

பள்ளியாரே என்று கூறியதற்காகக் கோபமுற்று தங்களது வீரவாளை உறையிலிருந்து எடுக்க, "என் பேரப்பிள்ளைகளே! உங்களைப் பள்ளி என்று சொன்னதற்கு நீங்கள் வருந்த வேண்டாம். மகாவிஷ்ணுவுக்கும், பிரமனுக்கும், பரம்சிவனுக்கும் **மலர்மாலையணியும் ராஜனுக்குப் பள்ளி** என்று பெயர். பள்ளி அனைவருக்கும் பொதுவானது. படுக்கைக்கும் பொருத்தமானது. ஆதிசேஷன் பேரில் திருமால் பள்ளியானார். பரமசிவனோ கைலையில் பள்ளி கொண்டார். என் மார்பில் அணிந்திருக்கும் இந்தப் பதக்கத்திற்குப் பள்ளி என்றே பெயர். பூவுலகில் 'பள்ளி' என்றால் பள்ளிக்கூட மாகும்."[39] என்று கூறிவிட்டு தேவேந்திரன் தேவலோகம் சென்று விட்டதாகப் புராணம் கூறுகிறது.

## இடங்கை வலங்கைப் புராணம்

அரசின் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் வெளியிடப் பட்டிருக்கின்ற "இடங்கை வலங்கையர் வரலாறு" என்னும் நூலில்[40] இடங்கை வலங்கைப் புராணம் என்னும் பகுதியில் **இடங்கைப் பெரியோனாகிய பண்ணாட்டார்** பிறப்பு வளர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. இப்பகுதி வன்னியர் புராணத்தை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பெற்றிருக்கிறது. ஆனாலும் மேலே கூறப்பட்டுள்ள வன்னிய புராணத்திலிருந்து சில நிகழ்ச்சிகளில் மாறுபட்டும் காணப்படுகிறது.

தொடக்கப் பகுதியிலேயே மாற்றம் காணமுடிகிறது. ஆதி காலத்திலே, ஆதிசேஷனுக்கும் வாதராஜனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு மகாமேரு கிரியில் பறித்த கொடுமுடி மூன்று, அதில் ஒரு கொடுமுடி கதிர் காம்ய (கதிர்காமம்) மென்னும் சிவசுப்ரமணிய ஸ்தலமாய் விளங்கிற்று என்றும், மற்றொரு கொடுமுடி லங்காபுரி பட்டணமென்றும், அதை இராவணன் பரிபாலனம் செய்தான் என்றும்; மூன்றாம் கொடுமுடி இரத்தனகிரிப் பட்டணமென்றும், அதை இல்வலன், வாதாபி ஆட்சி செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

## வில்வலன் வாதாபி பிறப்பு

மேலும், அந்த வாதாபி ராட்சசன் பிறப்பு வளர்ப்பு சொல்லவேண்டுமானால், என்று கூறி, கைலயங்கிரியில் பார்வதியாரும் பரமேசுவரனும் ஏகாந்தமாக இருக்கும்நேரம், ஒரு ரிஷீசுவரன் ஸ்வாமியைக் காண வந்தபோது, வாயில்

காக்கிற துவாரபாலகர் இரண்டு பேரும் அவரைத் தடுக்காமல் விட்டுவிட்டனர். பரமேசுவரன் அத்துவாரபாலகர்களுக்குச் சாபம் கொடுத்ததின் விபரம் சொல்லப்பட்டிருக்கிறது.

பரமசிவன் துவாரபாலகர்களை நோக்கி, ஏழ் பிறப்பு மித்ரராகப் பூலோகத்தில் பிறந்து அதற்குப் பின்னர் தம்முடைய கைலயங்கிரிக்கு வருகிறீர்களா? அல்லது மூன்று பிறப்பு சத்ருவாகப் பூலோகத்தில் பிறந்து அதற்குப் பின்பு கைலயங்கிரிக்கு வருகிறீர்களா? என்று கேட்டதற்கு மூன்று பிறப்பு சத்ருவாகப் பிறந்து வாரோம் என்று அவர்கள் கூறியதற்கொப்ப, இரணியன், இரணியகசிபு ஒரு பிறப்பும், இராவணன், கும்பகர்ணன் மற்றொரு பிறப்பும், சிசுபாலன். தந்தவக்த்ரன் என்று மூன்றாம் பிறப்பும் பிறந்து கழித்தனர்.

பூலோகத்தில் மேலும் சிறிதுகாலம் அவர்கள் வாழ வேண்டியிருந்ததால் அவர்கள் இவ்வலன், வாதாபி என்ற அரக்கர்களாகப் பிறந்தார்கள் என்று விரிவாக இடங்கை வலங்கைப் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.[41]

இவ்வரக்கர்களின் பெயர்கள் வில்லவன், வாதாவி என்று வன்னியபுராணத்தில் கூறப்பட, இடங்கை வலங்கைப் புராணத்தில் இவ்வலன், வாதாபி என்று காணப்படுகிறது.

## வன்னியர் பிறப்பு

இடங்கை வலங்கைப் புராணத்தில் வன்னியர் தோற்றம் பற்றி கீழ்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "ஜம்புமகா முனீசுவரர் விசுவகர்மனை யாகசாலை உண்டு பண்ணச் சொல்லி அந்த யாகசாலைக்குச் சந்திர சூரியர் திருவிளக்காகவும், பிரும்மா வேதமோதவும், பங்குனி உத்திரத்திலே சுவாமியார் திருநுதலாகிய நெத்திக்கண்ணில் அக்னி ஹோமாக்னியாக, சுவாமியார் திருமாரில் அணிந்திருக்கிற செங்கழுநீர் மாலையை வாங்கி, ஜம்பு மஹா முனீசுவரர் கையில் கொடுக்க, இவர் கையில் கொண்டு வாங்கி அபிமந்திரிச்சு, **தசாவதாரமெடுத்து விளையாடித் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட நர நாராயணரே நீர் அக்னிகுமார வீர தீரனாய் இடங்கைக்கரசாய் வரவேணுமென்று** ஜம்புமகாமுனிவர் அந்த செங்கழுநீர் மாலையை ஹோமாக்னியில் போட, காதில் குண்டலம், கருப்புச் சடையும், காவித்தோடு, கழல், கையில் வில்லும், முதுகிலே அம்பராத் தூணியும், அரையிலே வீரகிங்கிணியும், பக்கமாடிய வாள்

வரிசை, கத்தி கேடயமும், வாங்கி, வீடியம்பு, வளதடி, சக்ரம், சொட்டை, சூரி, வீரவேல், வல்லயத்துடன், பூசி சந்தனம், புலிக்கொடி பதாகையும், பல்மணித் தாவடமும் பஞ்சவர்ணப் பாவாடையும், வர்ணத்தடுக்கும், செங்கழுநீர் வாடாத மாலையும், காலில் கட்டிய சாமித்ரோக வண்டயத்துடன், செந்தாமரைப் பூப்போலே கண் சிவந்து, நெரிப்பழ பொடி மூடிய தணலாய், அக்னி வீரனாகிய ருத்ரப் பள்ளியார் கையமர்த்தி, சுவாமியார் மந்திரோபதேசம் பண்ணினார்,[42] என்று கூறிச் செல்கிறது.

## கடலைக் கடக்கத் தவம் புரிந்தது

வாதாபியை வெற்றிபெறத் தோற்றுவிக்கப்பெற்ற வீர வன்னியன் தம் புத்திரர்களான நீலகங்கன், வஜ்ரபாகம், கங்க பரிபாலன், ஸம்பு குலவேந்தன், பரசுராமன் ஆகியோருடனும் மற்றபோர்ப் படைகளுடன் சமுத்திரக் கரையை அடைந்ததும் சமுத்திரத்தை எவ்வாறு கடந்து வாதாபியின் பட்டணமான இரத்தினபுரிக்குச் செல்வது என்பதில் குழப்பம் ஏற்பட்டபோது, "வில்வீர மகாராஜாவானவர் சமுத்திரத்தில் வைரத்தூண் நிறுத்தி அதன் மேலே ஊசியை நாட்டி, விக்னேசுரப் பிரார்த் தனை பண்ணி, பஞ்சாட்சரத்தை உச்சரித்து, ஊசி முனையில் பெரிய விரலை ஊன்றி, துர்க்கா தேவியை நோக்கி தபஸ் பண்ணும்போது, துர்க்கா பகவதி அம்மன் மோர் விற்கும் இடைச்சியைப் போலே வந்து ஸான்னித்யமாகி, "வாராய் குமாரா" என்று ஒரு எலுமிச்சங்காயை கையிலே கொடுத்து, இது வத்திப் போம். ரத, கஜ, துரக, பதாதிகளெல்லாம் தாண்டிப் போய் பின் பெருகவென்றால் பெருகும் என்று வரங்கொடுத் தாளம்மன். அதேமேரக்கி கனியை உருட்டி தாண்டிப் போனார்".[43] என்று இப்புராணத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் வன்னியபுராணத்தில் காணப்படவில்லை. அதில் சாதாரணமாகத் "துர்க்கா பரமேஸ்வரியின் அருளினால் சமுத்திரம் முன்வற்றிப் பின் சுரக்கும்படியாக வீரவன்னியர் ஐவரும் தமது சேனைகளுடன் கடலைக் கடந்து இரத்தின புரிக்குச் சென்றனர்"[44] என்று மட்டுமே கூறப்பட்டிருக்கிறது.

## வன்னியர் வாழ்ந்த பகுதிகள்

இந்நூலில், வன்னியர்களான, நீலகங்கன், வஜ்ரபாகன், கங்கபரிபாலன், சம்புகுலவேந்தன், பரசுராமன் ஆகியோர்

பாரடப் பள்ளியென்றும், துஷ்டப் பள்ளியென்றும், சிஷ்டப் பள்ளியென்றும், வன்னிப்பள்ளி என்றும், அரசுப் பள்ளி யென்றும் அழைக்கப்பெற்றார்கள் என்றும் குறிக்கப் பட்டுள்ளது[45] மேலும் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் வாழ்ந்தார்களென்பது இப்புராணத்தில் சற்று விரிவாகத் தரப்பட்டிருக்கிறது.

"நீலகங்கன் வரத்திலே வந்தவாள் என்ற பள்ளியர் (பாரடப் பள்ளியர்) க்ஷீரநதிக்கு உத்தரவாகும் கிருஷ்ணா பர்யந்தமும் இருந்த வன்னியர் கிருஷ்ணவன்னியர். அந்த தேசம் வன்னியருக்கு கோத்ரம் மத்மகோத்ரம், ஜம்புகோத்திரம், ப்ருகு கோத்ரம், ஸத்ய கோத்ரம், நித்ய கோத்ரம், இந்த சொன்ன ஸ்தலத்தலே இந்த அஞ்சு கோத்ரக்காரரும் மிருப்பாள்.

வஜ்ரபாகன் வம்சத்திலே வந்தவாள் துஷ்டப் பள்ளி ஜம்பு வன்னியர். க்ஷீரநதி முதல் கொண்டு, தஷிண பினாகினி மட்டுக்கும் இருப்பாள். அந்த ஜம்பு வன்னியர் கோத்ரம் முனிவர் கோத்ரம், நிர்மல கோத்ரம், இந்த சொன்ன ஸ்தலத்திலே இந்த அஞ்சு கோத்ரகாரருமிருப்பர்.

கங்கபரிபாலன் சிஷ்டப் பள்ளி ப்ருஹ்ம வன்னியர். தஷிண பினாகினி முதற்கொண்டு காவேரி பர்யந்தரம் இந்தப் பிரும்ம வன்னியர்தாம். இவர்கள் கோத்ரம் பரம கோத்ரம், வசு கோத்ரம், வன்யகோத்ரம், தனஞ்ய (தனஞ்சய) கோத்ரம், கிருஷ்ண கோத்ரம் - இந்த சொன்ன ஸ்தலத்திலே இந்த அஞ்சு கோத்ரக்காரரும் இருப்பாள்.

ஜம்புகுலவேந்தன் வன்னியப் பள்ளி கங்க வன்னியர். காவேரி முதற்கொண்டு சேதுபர்யந்தம் கங்க வன்னியர்தாம். அவர்கள் கோத்ரம் கந்தர்வ கோத்ரம், கமண்டல கோத்ரம், கௌமாரி கோத்ரம், நளகோத்ரம், கந்தோத்ரம். இந்த சொன்ன ஸ்தலத்திலே இந்த அஞ்சு கோத்ரக்காரரும் இருப்பாள்.

பரசுராமன் சந்ததி - அரசப்பள்ளி இந்த்ர வன்னியர். சிதம்பரத்துக்கு பூர்வபாகம் (கிழக்கு) சமுத்திரம் மட்டுக்கும் இந்திர வன்னியர். இவர்கள் கோத்ரம் இந்திர கோத்ரம், வீரகோத்ரம், விஜய கோத்ரம், தாரா கோத்ரம், ததி கோத்ரம். இந்த சொன்ன ஸ்தலத்திலே இந்த அஞ்சு கோத்ரக்காரரும் இருப்பாள்."[46]

## வன்னியருக்குள்ள குலங்கள்

*மேற்கூறப்பட்ட ஐந்து வன்னியர்களுக்குமுள்ள குலங்கள், (உறுதுணையாளர்கள்?) "நகதகர் (நாவிதர்?) கம்மாளர், எகிலியர் (ஏகாலியர், வண்ணார்?), எடையர், வேடர், கள்ளர், மொறவர் (மறவர்), சக்கிலியர் ஆக குலம் எட்டு" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*[47]

## ராசப் புள்ளைக்குத் தந்த பட்டயம்

*இந்த இடங்கை வலங்கைப் புராணத்தில் முற்பகுதி வன்னியர் புராணத்தையும், பிற்பகுதி ராசப் புள்ளை அய்யனவர்களுக்கு பண்ணாட்டார் நிஜவர்த்தனை பிரசன்ன பட்டயம் எழுதித்தந்ததையும் குறிக்கிறது. பிற்பகுதியில் கூறப்பெற்றிருக்கும் பட்டயத்தின் பெயர் இப்புராணத்தில் 'ராசிப்புள்ளையனுக்கு ஒழிகரெநாட்டுப் புன்னப்பான் எழுதிக் கொடுத்த பட்டயம்' என்று காணப்படுகிறது. இத்தலைப்பு 'ராசப்புள்ளையனுக்கு எழுகரை நாட்டுப் பண்ணாட்டார் எழுதிக் கொடுத்த பட்டயம்' என்று இருந்திருத்தல் வேண்டும். இப்பட்டயம் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை*[48] *பதிப்பித்துள்ள பன்னாட்டார் பட்டயத்தின் நகலாகவே தெரிகிறது. பட்டயத்தின் முக்கியச் செய்தி இரண்டு பட்டயத்திலும் ஒன்றாகவே காணப்பட்டாலும் வன்னியர்களின் மெய்க்கீர்த்திப் பகுதி மேலும் விரிவாக்கம் செய்யப்பெற்றதாக இடங்கை வலங்கைப் புராணத்தில் காணமுடிகிறது.*[49]

*இதில் பட்டயம் எழுதப் பெற்ற காலம் சக ஆண்டு 1615 என்றும், கலி ஆண்டு 4794 என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி கி.பி. 1693 என்று தெரிகிறது. ஆனால் பன்னாட்டார் பட்டயத்தில் அதன் காலம் சக ஆண்டு 1555 என்றும், கலி ஆண்டு 4734 என்றும் காணமுடிகிறது. எனவே கி.பி.1633 என்று ஆகிறது. அதன்படி பார்க்கையில் இடங்கை வலங்கைப் புராணம், முன்னர் இருந்த பன்னாட்டார் பட்டயத்தையும், வன்னியர் புராணத்தையும் அடிப்படையாகக் கொண்டு அறுபது ஆண்டுகள் கழித்து எழுதப் பெற்றிருக்கும் போன்று தோன்றுகிறது.*

## வன்னியர் மெய்க்கீர்த்தி

1. *"ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா விஷ்ணுவானவர் தம்முடன் பாதார விந்தத்தினாலே அளக்கப்படாணி(ன்ற)*

2. பூலோகமெங்கும் அசையாமல் காத்து செயஸ்தம்பம் னாட்டி வைக்கும் வண்ணிய குல மகா மண்ட

3. லாதீஸ்வரன் கண்டரில் கண்டன் மிண்டரில் மின்டன் வன்ட ராவுத்தன் உத்தண்ட கோலாகலன் யிடங்

4. கைச் சமய குலதீரன் மதியாத வன்னியப் பெருமாள் மணிமகுட முடி மாலை சூடும் மனோபயங்க

5. ரன் யீழ மிலங்கையுந் திறை கொண்டருளிய ராசாதிராசன் ராச பரமேஸ்வரன் நவகண்ட சக்கி

6. றவர்த்தி மலை கலங்கிலும் மனங்கலங்காதவன் ஒரு கொடைக் கீழ் உலக முழுவதும் ஆண்(ட) ராசகோலா

7. கலன் சுவாமி கயிலாச கிரிக்கு பிறதானிக்கா(ர)ராகவும் சதகோடிச் சத வருஷமான அக்கினி பாண

8. ம் பெத்தவர் சங்குநிதி பற்பநிதிக்குடையவரான குபேரனைப் பொக்கிஷமாகப் படைத்தவர் கண்ட

9. னாடு கொண்டு கொண்ட னாடு விடாத மகமேரு சமான வங்ஷ் னாராயணன் வங்கிஷ பரிபாலகர்

10. வங்கிஷ சிந்தாமணிகர் செங்கழுநீர் புஷ்பம் வாடாத மாலை வற்ணத்தடுக்கு(யி) வலம்புரி சங்கும் பஞ்ச

11. வற்ணப் பாவாடை உடனே காமாட்சி அம்மன் கையி முத்து மாலிகையும் மோகனப் பதக்கமும் அழிவி

12. லாச் செல்வமும் அதிகவரம் பெத்தவர் அக்கினியில் பிறந்து அம்பிணுரங் கண்டவர் கெங்கை கொ

13. ண்டான் சோழந் திருமுடி காத்தவர் யீயனானாட்டுக் கிறவனாகிய யில்வலன் வாதாவியைச் செயித்துக் கா

14. கமாரிஷி கன்னி அபிமானங் காத்தும் சோழனாடு விளங்காத்து துஷ்ட ராட்சதாளைக் கொன்றும் அறுபத்துனா

15 லடிக் கம்பத்திலேறி நமனைப் பசாரித்த வன்னிய குலராசன் முன்னூல் பின் குடிமி புலிக்கொடிப் பதா

16. கையும் அஞ்சபஞ்ச விருத்தும் பெத்த யிடங்கைச் சமைத்துக் கதிபதியானவர் சுல கண்டிகைத் தேரு

17. ம் அக்கினிப்புரவியும் சாமித்துரோக வெண்டையந் தவள சங்கமும் செகசம்புக் குடையும் பஞ்சமு

18. கத் தீவட்டியும் முடைத்தான கலை சாம்மிறாச்சிய லக்ஷ¬மி னிவாசன் சிவசமைய விஷ்ணு சமைய

19. தேவப் பிறாமண காரிய துரந்தரர் ஆயி ள(ர)ரோக்கி அஷ்ட ஐஸ்வரிய வில்விசைய பராக்கிறமர் எழுகரை

20. ர நாட்டுக் கதிபதியான சறுவாம்மானி யாபிமானங் காத்தவர் விபூதி ருத்திராக்ஷ மாலிகாபரணர் அன்

21. னதான வினோதர் சகல திறம் பரிபாலகர் குமாரசுவாமியையும் துர்கையும் படைத்தலவராகப் ப

22. டைத்த பண்ணாட்டாரிட கீற்தி".

## ஏகாம்பர நாதருலா

இந்நூல் காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் மீது கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாகக் கருதப்பெறும் இரட்டைப் புலவர்களால் பாடப்பெற்றதாகும். இதில் ஏகாம்பரேசுவரர் தேரில் அமர்ந்து வீதியுலா வருவதாகவும், அவரைப் பார்த்துப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை ஆகியோர் மன்னன்மீது காமுற்றுப் பாடுவதாகக் காணப்பெறும். அவ்வாறு அவர்கள் பாடுகையில் சம்புகுல வேந்தரான வன்னிய அரசர் ஏகாம்பரேசருக்கு அளித்த கொடைச் சிறப்பையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் வன்னிய மன்னனைப் பற்றி அறிந்துகொள்ள துணைபுரிகின்றன.

ஏகாம்பரேசுவரர் வீதியுலா வரும் தேர்,

*"......விருப்பால்*
*வடித்தசுடர் வேற்சம்பன் வாழ்மல்லிநாதன்*
*கொடுத்த திருத்தேர் மேற்கொண்ட"*

மிகுந்த பெரு விருப்பத்தால் சுடர்வேலினைக் கொண்டிலங்கும் சம்பன் மல்லிநாதன் வழங்கிய தேர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.[50] இத்தேர் பற்றி மற்றோர் இடத்தில்,

*"செம்பதுமை கேள்வன் திருமல்லிநாத னுயர்*
*சம்புபதி நல்கும் தடந்தேர் போல்",*

திருமல்லிநாதனாகிய சம்புகுலத்தரசன் நல்கிய அகலமான தேர்போல் என்று வருணிக்கப்பட்டிருக்கிறது.[51]

ஏகாம்பரேசுவரர் வீதியுலா வருவதை மக்கள் பெருங் கூட்டமாகப் பற்பல இடங்களில் இருந்து கண்ணாரக் கண்டு களித்தபோது,

*"......... வெஞ்சமரில்*
*தத்துபரி பல்லவன் சம்புகுலப் பெருமான்*
*வைத்த துலாபார மண்டபத்தும்",*

போரில் தாவி வரும் குதிரைகளையுடைய பல்லவனாகிய சம்பு குலப் பெருமான், தன் எடையளவு பொன் தானம் செய்ய அமைத்திருந்த துலாபாரமண்டபத்தும் இருந்து மக்கள் கூட்டம் பார்த்து மகிழ்ந்தது என்று கூறப்பட்டிருக்கிறது.[52]

காஞ்சி மாநகரின் பல்வேறு இடங்களையும் மங்கை என்னும் பெண் வாயிலாகச் சிறப்பித்துக் கூறும் இரட்டையர்,

*"......... திங்கள்*
*முடித்த முடிக்கு முடிகொடுத்த சம்பன்*
*படைத்த துலா மண்டபமும் பார்த்து".*

என்று சம்பு மன்னரான வன்னிய அரசன் ஏகாம்பரேசுவர ருக்குப் பொன் முடி செய்தளித்ததையும் துலாமண்டபம் அமைத்திருப்பதையும் புகழ்ந்து பேசியுள்ளனர்.[53]

சம்பு மன்னர் ஏகாம்பரேசுவரருக்குச் சாத்துவதற்காக மணிமகுடம் செய்தளித்த செய்தி வேறோர் இடத்திலும் இதே நூலில்,

*"சம்புகுலத்தொருவன் சாத்துகைக்காம் என்றளித்த*
*செம்பொன் மணிமகுடம் சேர்வித்து"*

என்று சம்புகேசுவரருக்கு அணிவிக்கப்பெற்ற அணிகலன்களில் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கிறது.[54]

இந்நூலில் சம்புகுலவேந்தன், 'பல்லவன்' என்று குறிப்பிடப் பட்டிருப்பது நோக்கத்தக்கதாகும். வன்னியர் பல்லவ அரசர் வழிவந்தோர் என்று கூறப்படும் கருத்துக்கு முக்கிய சான்றாக அமைந்துள்ளது.

## திக்விசய விலாசம்

தமிழகத்தின் தென்பகுதியில் சிவகிரிப் பகுதியைப் பாண்டிய மன்னன் வரகுணராமன் ஆட்சி செய்திருக்கிறான். அவன் காலத்தில் வாழ்ந்த கடிகை முத்துப் புலவர் என்பார் அம்மன்னன்மீது 'திக்விசய விலாசம்' என்னும் நூலை

இயற்றியுள்ளார். அதில் அம்மன்னன் 'வன்னியன்' என்று அழைக்கப்பெற்றிருப்பது கீழ்க்காணும் வரிகளால் புலனாகிறது.

*'சிங்கம் வரகுணராம பாண்டிய வன்னியனைச்*
*செப்புவரின் படியாலும் செப்புவரென்றுளதே*
*வரகுண பாண்டிய வன்னிய ராசா விசயிபவா'*[55]

இப்புலவரது தனிப்பாடல்கள் இரண்டு, சிவகிரி பாண்டியனைக் குறிப்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

"சிவகிரி ஜமீந்தாரவர்கள் மீது திக்குவிசயம் பாடியரங்கேற்றியபோது, பல்லக்குப் பரிசு கொடுப்பதாக நிச்சயித்ததைச் சிலர் தடுக்க வுடன்பட்டிருந்ததைத் தெரிந்து இவ்வெண்பா முதலிரண்டடியைக் கூற, அதைக்கேட்ட ஜமீந்தாரவர்கள் தங்களுக்குச் செய்யுங் காரியங்களிலே நான் மறுத்துப் பேசவில்லையே யென்றார்கள். உடனே புலவரவர்கள் என் விஷயமாகக் கூறவில்லையேயெனப் பின்னிரண்டடியைக் கூறினார்கள்.

*"வர்க்கிரண்டு பேசா வரகுணராமேந்திரனே*
*வாக்கிரண்டு பேச மனம் வைத்தான் – றாக்கு*
*மருவலரைக் கொல்லென்றான் வந்தடைந்தபோது*
*வெருவாமற் காப்போமென்றான்".*

பின்பு பல்லக்கு முதலியன கொடுத்துபசரித்துத் 'திக்கு விசய'த்தைக் கொல்லங்கொண்டான் ஜமீந்தாரவர்களிடத்துஞ் சேற்றூர் ஜமீந்தாரவர்களிடத்தும் வாசித்துக் காட்டி வரச் சொல்ல, இரண்டிடத்துக்கும் போனபோது அங்கு நடந்ததைக் கீழ்க்காணும் கவியாற் கூறினார்கள்.[56]

*"வேண்டாத மருவலரை வென்றரசுபுரியு முயர்வேந்தே நாளுந்*
*தூண்டாத மணிவிளக்கே வருணராமேந்திரனே சொல்லக் கேளாய்*
*கூண்டார வாரமுட னின் றானாபதியுடன் யான் கூடப் போனேன்*
*வாண்டாயன்றலை மறைந்தான் செம்பொன் வடமலைத்திருவன்*
*வழங்கினானே"*

## கருணாகரத் தொண்ட வன்னியனார் சதகம்

சோழப் பேரரசன் முதலாம் குலோத்துங்கனுக்காகக் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றி வாகை சூடிய கருணாகரத் தொண்டைமான் மீது 'கருணாகரத் தொண்ட வன்னியனார் சதகம்' என்றொரு கவிதை நூல் பாடப்பட்டிருக்கிறது. இந்நூலில் ஒரு பாடலில்,

*"எரிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரச் சம்*
*பெனும் தமிழால்*
*பொறிக்கும் புலிக்கொடியான் புகழ்பெற்ற*
*புலமை யெல்லாம்*
*தரைக்கு மதனப் புறத்துந் தெரிந்திடும்*
*தன்மை கண்டேன்*
*மறைக்குவா லோதுங் கருணாகரத்*
*தொண்ட வன்னியனே"*[57]

கருணாகரத் தொண்டைமான் வன்னியன் என்று பாடப் பட்டிருக்கிறது. ஆதலால் கி.பி. 12ஆம் நூற்றாண்டளவிலேயே வன்னியர், படைத்தளபதிகளாகச் சிறந்து விளங்கியிருந்திருக் கின்றனர் என்பது தெரியலாகிறது.

## திருக்கைவளம்

இந்நூல் வன்னிய அரசர்களின் கொடைத்திறம் பற்றி புகழும் ஒரு சிற்றிலக்கியமாகும். இது அரியலூர்ப் பகுதியை ஆட்சி செய்துவந்த மழவராயர்களில் விஜயரங்க ஒப்பிலாத் மழவராயர் அவையில் புலவராக இருந்த கூடல் இருவாட்சிப் புலவரால் அரங்கேற்றப்பெற்றது. இந்நூலை 1955ல் சென்னை வன்னியகுல மித்திரன் ஆசிரியர் ஆ. சுப்பிரமணிய நாயகர் பதிப்பித்திருக்கிறார். இதில் அரியலூர் மழவராயர்கள் மற்றும் வன்னியர் ஈகைத்திறம் விரிவாக எடுத்தியம்பப் பெற்றிருக்கிறது.

*"ஆத்துறத்தும் கோல்துயில்வான் அரியென்ற பாலனுக்கு*
*மாத்துயரப் பொற்றேங்காய் வழங்குங்கை"*[58]

என்னும் பாடல் வரியில் மழவராய மன்னனின் கொடைத்திறம் விதந்து பாராட்டப்பட்டிருக்கிறது.

பொற்றேங்காய் வழங்கியது பற்றி ஒரு சுவையான செய்தி கூறப்படுகிறது.

மழவராயர் அவையில் அரசவைப் புலவர்களாகப் பன்னிருவர் இருந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் இறந்த சில நாளில் விஜயதசமி விழா வந்தது. வழக்கப்படி பன்னிரு புலவர்களுக்கும் வழங்குவதற்காகப் பன்னிரு பொற்றேங்காய் செய்யப்பெற்றுத் தயாராக இருந்தன. ஒவ்வொரு புலவருக்கும் பொற்றேங்காய் வழங்கி வரும் நேரத்தில் இறந்த புலவரின் மகனும் அங்கு வந்திருப்பதைக் கண்ணுற்ற அரசர் அம்மைந்தனுக்கும் பொற்றேங்காய் வழங்குவது சரியாகுமா

என்று ஆலோசிக்கலானார். புலவர்களும் அச்சிறுவன் பரிசுபெறத் தகுதியுடையவனோ என்று ஏளனமாகப் பேசி, பின்னர் அச்சிறுவனைப் பார்த்து 'பரந்தாமன் பள்ளிகொள்ளும் இடம் எது என்று அறிவாயோ?' என்று வினவினர்.

உடனே அச்சிறுவன்,

"பாலினும் இன்சொல், குழலினும் மென்மொழிப் பாவை நல்லாள்
மேலினும் காமன் சரம் தைக்குமோ – வடவேங்கடத்து
ஆலினும், வேலை நடுவிலும், பாம்பிலும் ஆத்துறத்தும்
கோலினும் பள்ளிகொள்வாய்! மழவா! பள்ளி கொண்டவனே".

என்று விஷ்ணுவின் அம்சமாகவே மழவராயரைக் கொண்டு நற்றாய் இரங்கற்றுறையில் மேலே கூறப்பட்ட பாடலைப் பாடியதும் மன்னர் வியந்தார். புலவர்கள் வெட்கத்தால் தலை குனிந்தனர். பொற்றேங்காய் சிறுவனுக்குப் பரிசாகத் தரப்பட்டது.[58எ]

செங்கற்பட்டுக்கருகிலுள்ள திருவிடையீச்சுரத்தில், விசய நகரவேந்தன் கிருஷ்ணதேவராயர் காலத்தில் காந்தவராயன், சேந்தவராயன் என்னும் இரு சகோதரர்கள் கோட்டை அமைத்துக் கொண்டு ஆட்சி புரிந்திருக்கின்றனர். காந்தவ ராயனைத் திருக்கைவளம்,

"......... துட்டர்பயம்
காக்கும் காந்தவராயர் கலம்பகம் சொல் பாவலர்க்கு
ஆக்கம் அளித்தருள் அம்போருகக்கை
சீராரும் சென்னிகுலச் செல்வர் முடிதரித்துப்
பாராளச் செங்கோலைப் பற்றுங்கை"[59]

என்பதாகப் பாடியுள்ளது. அதாவது மக்களிடையே துஷ்டர்கள் பற்றிய பயத்தை நீக்கிய காத்தவராயன் பற்றி **கலம்பகம்** பாடிய பாவலர்க்கு பரிசளித்துப் பாராட்டும் வளப்பமான கையென்றும்; சோழ மன்னர் முடி சூடிக்கொண்டு நிலவுலகை ஆள்வதற்காகச் செங்கோலை எடுத்தளிக்கும் கையினையுடையவர் என்றும் வன்னியர்களைப் பாராட்டிப் பாடப்பட்டிருக்கிறது.

மேலும்,

"கச்சி நகராண்டு ஏகாம்பரருக்குக் கோபுரங்கள்
இச்சையுடன் செய்வித்து இலங்குங்கை"[60]

காஞ்சி யம்பதியை ஆட்சி செய்து, அங்குள்ள ஏகாம்பரேசருக்குக் கோபுரங்களை மனமுவந்து செய்தளித்த கையினையுடையவர் வன்னியர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நூலில் ஒரு இடத்தில் கருணாகரத் தொண்டைக் காவலன்மீது பாடப்பெற்ற வன்னியனார் சதகத்தைப் பாடியதற்குப் பரிசளித்துப் புகழ் எய்திய கை வன்னியரின் கையென்பதையும்; பண்ணாடராகிய வன்னியர் சூழ்ந்து விளங்கும் பண்ணாட்டை ஆளுகின்ற வீரம் செறிந்த கை வன்னியர் கை என்பதையும் பின்வரும் பாடல் வரிகளால் புலப்படுத்தியுள்ளது.

"......... காந்திமிகு
கருணாகரத் தொண்டைக் காவலன்தன் சதகத்திற்கு
இருநால் வாய்தந்து புகழ் எய்திடுங்கை"[61]
"......... செந்நெல் விளை
தன்னாடு உயர் தங்கச் சாலை வைத்துப் பொன் வழங்கிப்
பண்ணாட்டை யாளும் பராக்கிரமக்கை".[62]

## தனிப்பாடல்கள்

இரட்டையர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், சுப்ரதீபக் கவிராயர், கடிகை முத்துப் புலவர் போன்றோர் வன்னிய மன்னர் சிலர் மீது பாடிய சில தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. அவையும் வன்னியர் வரலாறு பற்றி அறிந்துகொள்வதற்குப் பெரிதும் உபயோகமாயுள்ளன.

இரட்டைப்புலவர், இளஞ்சூரியர், முது சூரியர் எனப்பட்ட பெருங் கவிப்புலவர்கள் ஆவர். இவர்கள் திருவக்கையிலிருந்த ஆட்கொண்டான் எனப் பெயரிய கொங்கராயனாலும், கச்சியிலிருந்த சம்புவராயனாலும் நன்கு போற்றப்பெற்றவர்கள். இவர்கள் திருவாமாத்தூர் கலம்பகம் பாடி 'கலம்பகத்திற் கிரட்டையர்கள்' என்று பிற்காலத்தவரால் பாராட்டப்பெறும் புகழ்பெற்றவர். இவர்களில் ஒருவர் முடவரும் மற்றொருவர் குருடருமாயிருந்தனர் எனவும்; குருடர் முடவரைத்தூக்க, முடவர் குருடர்க்கு வழிகாட்டச் செல்வார்களெனவும், ஒரு செய்யுளை ஒருவர் பாதியும், மற்றொருவர் பாதியுமாகப் பாடி முடிப்பார்கள் எனவுங் கூறுவர்.

ஒருசமயம் சம்புவராய மன்னன் 'விகட சமுத்தி' பாடச் சொல்லியபோது, இரட்டையர்,

"எரிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரன் சம்பனெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடியான்புயம் வேட்டபின் பூவையன்னாள்

வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந் துள்ளித்
தெறிக்குத் துவரை பழிக்குஞ்சிந்தூர ரத்திலகத்தையே"

என்று பாடியிருக்கின்றனர்.

மேலும் சம்புவராய மன்னர்களின் தலைநகரான படைவீட்டைப் பாண்டியன் முற்றுகையிட்டிருந்தபோது, பாண்டியனுக்கு அறவுரை வழங்கும் விதத்தில்,

"காற்றா லலைப்புண்டு கண்ணன் கடல் கடைந்து
மேற்றாளெடுத்து வளைத்தெய்து – மாற்றாத
செம்பொன் மலையில்லைச் சேலுக்கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா"[63]

சம்புவராய மன்னர்களாகிய வன்னிய அரசர் இரட்டைப் புலவர்களை ஆதரித்திருக்கின்றனர் என்பதும், அவர்களது தலைநகர் படைவீடு என்பதும், அதனைப் பாண்டிய மன்னன் முற்றுகையிட்டிருக்கிறான் என்பதும் மேற்காணும் பாடல்களால் தெளிவாகும்.

சம்பு குலத்துதித்த வீரசம்பு என்ற மன்னர் இரட்டைப் புலவர்களுக்குப் பரிசளித்தபோது, அவர்கள் இடக்கையால் அதனைப்பெற,

அது குறித்து வீரசம்பு பாடியதாக ஒரு தனிப் பாடல் உள்ளது. அது கீழ்வருமாறு.

"பதிவீர சம்புவென்று பாராமற் கல்விக்கு
இதமுடை யிரட்டையரே ஈகை – உதவில் வலக்
கைத்தலத்திற் கொண்டு களிக்காம லும்மிடது
கைத்தலத்திற் கொள்ளுவ தேன் காண்".

கல்வியிற் சிறந்த இரட்டையரே, வீரசம்பு அரசன் என்று மதியாமல், அவன் அளித்த கொடையை வலக்கரத்தால் பெற்று மகிழ்ச்சியடையாமல், இடக்கரத்தால் பெற்றது ஏன் என்று வீரசம்பு வினவியுள்ளார். அதற்கு அப்புலவல்கள்,

"கூவராயன் தியாகங் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினுமிடக் கை கொள்வோம் – பூவுலகில்
மின்பணி மின்னார் மதனே வீரசம்புவே யினி நாம்
அன்பெவர்பால் காண்போம் அடுத்து".

என்று பதில் அளித்திருக்கிறார்கள். கூவராயன் என்ற மன்னன் அளித்த கொடையைத் தாங்கள் வலக்கையால் கொண்டதாகவும், பிறமன்னர் யாராயினும் அவர்களளிக்கும்

கொடையைத் தாங்கள் இடக்கையால்தான் கொள்வோம் என்று கூறியுள்ளனர்.

அதனைச் செவியுற்ற வீரசம்பு, கூவராயன் கொடை பற்றி மிகுந்த ஆவலுடன் கூறினீர்கள். அவ்வாறாயின், அவர் சிறப்பு யாது என்று மீண்டும் இரட்டையரைக் கேட்டான்.

"என்னுடைய பேரும் புகழும் இருஞ்சீரும்
என்னுடைய ஈகையுங் கண்டெப்படி முன்னவனை
ஆவலுடனதிகஞ் சொன்னீர் இரட்டையரே
கூவராய னியல்பென் கூறு"

என்பதாக, அதற்கும் அவர்கள்,

"மாதா பிதாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதா அவனே தருங்கீர்த்திக் – காதரன்
தியாக சமுத்திரன் தென் கூவராயன்றன்
ஈகைதனைச் சொல்ல வெளிதோ"

கூவராயன், தங்களுடைய தாய், தந்தை, குரு, தெய்வம், வள்ளல் போன்றோர் ஆவான் என்றும், தங்கள் புகழுக்கு அடிப்படையானவன், கொடை வழங்குவதில் கடல் போன்றவன் என்றும் பதிலளித்திருக்கின்றனர்.[64]

அரியலூர்ப் பகுதியை ஆண்டு வந்த மழவராய அரசனைப் புலவர்களில் ஒருவரான அந்தகக் கவி வீரராகவ முதலியார், அவர் படி கொடுத்தபோது பாடிய பாட்டு,[65]

"சேய செங்குன்றை வருமொப்பி லாதிக்குச் செங்கமலத்
தூய செங்கண்ணனிணை யொப்பனோ தண்டுழாயணிந்த
மாயனளக்கும்படி மூன்று கிட்ணைய மாமழவ
ராயனளக்கும் படியோத நாளைக் கிலக்க முண்டே".

திருமாலானவர் உலகத்தையளந்தது மூன்று அடியால் மட்டுமே. ஆனால் ஒப்பிலாத மழவராயர் ஒரு நாளைக்கு அளவற்ற படியளக்கிறார் (ஊதியம் வழங்குகிறார்) என்ற பொருள்தரும்படி மழவராய மன்னனை உயர்த்திப்பாடியது.

மற்றொரு பாடல்[66] அப்புலவர், மழவராயனது இசையைக் கேட்ட பின்பு பாடியதாக உள்ளது.

"வாழொப்பிலாதவன் சேயொப்பிலாத மழவதிசை
ஆழக்கடல் விட்டு நீபாடுங்காலத் தரிசெலுங்கால்
நீழற்கவுத்துவ நீத்துச் செல்வானந்த நீண்மணிதான்
காழொப்பினு நின்னிசை கேட்குங் கார்கரைத்தேரு மன்றே"

பது அப்பாடல்.

சுப்ரதீபக் கவிராயர் மழவமன்னர் குன்னரங்கன் இறந்தபோது மனமுருகிப் பாடிய பாடல்,

"தென்னரங்கன் அரங்கனென்பார் வாய்திறவான்
கண்விழியான் திரும்பிப்பாரான்
என்னரங்கன் துரங்கரங்கன் ஏழையர்பாற் கருணை
யுடனி ரங்கா ரங்கன்
மன்னரங்கன் தமிழ்ப் பெருமான் மழவரங்க
னளித்தருளு மைந்தனான
குன்னரங்கா வெனக்கிரங்காய் கொண்டுவந்த
தமிழ்க் கிரங்கிக் குழைந்தெழாயே"

சுப்ரதீபக்கவிராயர், மழவரங்கனின் மைந்தனான குன்னரங் கனைத் தமக்கிரங்காவிடினும், தாம் பாடும் பாட்டுக்கேனும் இரங்கி எழு என்று எழுப்பும் வண்ணம் அமைந்துள்ளது.

மற்றொரு பாடலில், குன்னரங்கள் மண்ணாளும் ஆசையை விட்டு விண்ணாள நடந்திட்டானோ என்று ஆச்சர்யப்படுவது போன்று பாடியிருக்கிறார்.

"எண்டிசைக்கும் புகழ்படைத்த குன்னரங்க
மகிபாலா வினிமே லிந்த
மண்டலத்துக் கரசாள ஒப்பிலாநின்
புதல்வன் மழவன்போதும்
விண்டலத்துக் கிந்தரனுக் கரசு நிலை
யில்லாமல் வெகுநாளாக
நண்டளந்த நாழியாக் கிடக்கு மந்த
விண்ணாள நடந்திட்டாயே".[67]

அரியலூர் மழவராய மன்னர்களில் ஒருவரான யுவரங்க மழவராயர் அவையில் புலவர் சுப்பிரமணிய கவிராயர் என்பார் இருந்தார். இவர் அரசவையில் 'அரிகண்டம்' பாடிச் சிவிகையும், கவிகையும் பெற்றவர். இவரது மகன் கனகசபைக் கவிராயர் தாம் இராமேசுவரம் செல்ல விரும்பி மன்னரிடம்,

"மானூறு படத்தரக்கும் வடிக்கணையோன் மாசிகளை
வழிபட்டேத்தத்
தானூறு தீர்த்தருள் செய்தனி யிராமேசுவரமாம் தலத்திற்கேகக்
கானூறு மலர்மாலை கச்சியுவரங்கேந்திர காவல் மன்னா
நானூறு பொருளுதவி விடை நல்கி நலமல்கி நண்ணு வாயே"

என்று பாடல் மூலம் விண்ணப்பித்தார்.

அதனைப் புரிந்துகொண்ட மழவர் ஒரு பொற்றட்டில் நூறு ரூபாய்களை வைத்துக் "கவிராயரே நானூறு (நான் நூறு) தந்தேன்" என்று கவி நயத்துடன் கூறியபோது, அரசரின் கூர்மை யான மதிநுட்பத்தை வியந்த புலவர்; மீண்டும் பணம் வைத்துத் தந்த தங்கத்தட்டு எளியேனுக்கோ? ஏந்தலுக்கோ? என்று கேட்டாராம். அரசரும் சளைக்காமல் தட்டு என்பதற்குத் தட்டுப்பாடு என்னும் பொருள் தொனிக்கும் வகையில் 'தங்கத் தட்டு புலவருக்கே இருக்கட்டும் என்று கூறி மேலும் புலவரைத் திகைக்கச் செய்தாராம்.[68]

மழவராயர் அரசவையிலிருந்த கவிராயர் மரபினைச் சேர்ந்த பெரியசாமிக் கவிராயர் என்பார் தம் முன்னோர் 'மழவராயர் கலித்துறை அந்தாதி', 'ஆலந் துறையார் சதகம்', 'கோதண்டரா்மசுவாமி சதகம்', 'கயிலாசநாதர் சதகம்' போன்ற நூல்களை எழுதியுள்ளனர். அவற்றில் கோதண்டராசுவாமி சதகத்தில் 101ஆம் பாடல் மட்டும் தற்போது தெரியவந்துள்ளது. அதில் அரியலூர் விஜய ஒப்பிலாத மழவராயர் பெருமையைத் தொகுத்த அந்நூலின் ஆசிரியரான இராமதாச பரம பாகவதர்,

"மகாராஜராஜஸ்ரீ வன்னிய குலசந்திரன் மகிதலத்தினில் இந்திரன்
வளர்வசனமாது குடிகொண்ட சவுபாக்கியன் மகா
மண்டலீகயோக்யன்
தகுதரிவலாரியிட [illegible]சந்தத் திளிக்கவே சரமாரி பொரி விஜயனாம்
கருவை நிகர் மா[illegible]ர் ஒப்பிலா மழவையுரை தந்துதவு சீவரத்னம்
சுகபோகமாகிய வைபோக கர்ம்பீரன் சுந்தவைராக்கிய சித்தத்
துரை விஜயன் ஒப்பிலா மழவேந்திரன் அனுதினந் துதிபரவு
கமலசரணம்
குகனுடைய மருகனென வந்தவா உனதடிமை கோரி வரத்தை
யருள்வாய்
கோதண்டராமனெனும் முதண்டம் வளர் அரியில்
கோதண்டராம குருவே"[69]

என்று கூறியுள்ளார்.

மழவராயர்களில் குன்னரங்கன் என்ற மன்னனை வாழ்த்திப் பாடப்பெற்ற பாடலை மேலே கண்டோம். அதே மன்னனை இகழ்ந்து பாடப்பெற்ற ஒரு பாடலும் இராமச் சந்திரக்கவிராயர் என்பவரால் பாடப்பெற்றிருப்பது தனிப் பாடல் திரட்டால் அறிய முடிகிறது. அப்பாடல்,

*"கள்ளிக்கேன் முள்வேலி கழுதைக்கேன் கடிவாளம் கறுப்பிலாத*
*உள்ளிக்கேன் பரிமளங்கள் உவர்நிலத்துக்கேன் விதைகள்*
*ஒடித்துப்போடுஞ்*
*சுள்ளிக்கேன் கோடாலி துடைப்பத்திற்கேன் கவசம் சும்மாபோகும்*
*பள்ளிக்கேன் அதிவீர மழவரங்க பூபனெனும் பட்டந்தானே".*[70]

இராமச் சந்திரக் கவிராயர் மழவர் அவைக்கு வந்தபோது அரசன் அவரை உரிய முறையில் வரவேற்காது பரிசுப் பொருளும் வழங்காமல் இருந்து விட்டார் போலும். ஆதலால்-தான் கவிராயர் மிகவும் மனம் வேதனைப்பட்டு மேற்கூறிய பாடலைப் பாடினார் போலும்.

## தொண்டை மண்டல சதகம்

கச்சியை ஆட்சி செய்த ஏகாம்பரச் சம்பு பாராட்டும்படி இரட்டையர் கச்சிக் கலம்பகமும் ஏகம்பவாணருலாவும் பாடிய செய்தியைத் தொண்டை மண்டல சதகம் கீழ்க் காணும் பாடலால் புலப்படுத்துகிறது.

*"மேதைப் புலவரெண் ணேகாம்பரச்சம்பு மெச்ச நெடுங்*
*காதைப் புலவரிரட்டையர் பாடுங் கலம்பகமு*
*மோதற் கரியநல் லேகம்ப வாணருலாவு மந்த*
*மாதைப் பனுவலும் பாராட்டிடுந் தொண்ட மண்டலமே"*[71]

## சிவகிரி காதல்

தற்காலத்திய திருநெல்வேலி மாவட்டம் சிவகிரிப் பகுதியை ஆண்டுவந்த வரகுண பாண்டியனை, 'வெண்பா விற்கொரு புகழேந்தி' என்று புலவர்களால் போற்றிப் புகழப்பெறும் கவிஞர் 'சிவகிரி காதல்' என்னும் தம் நூலில்,

*"வன்னிய குலராசா வரகுண பாண்டிய",*

என்றும்

*"வேந்தன் வரகுணராம பாண்டிய*
*வன்னியனுக்கே விசயம் சொன்னேன்"*

என்றும் பாடியுள்ளார்.[72]

## கல்லாடம்

இந்நூல் வன்னியரை 'நாற்படை வன்னியர்' என்று குறிக்கிறது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை,

காலாட்படை என்னும் நால்வகைப் படையிலும் வன்னியர் பணி புரிந்ததைக் குறிப்பதாக இருக்கலாம் என்று யாழ்ப்பாணத்து வரலாற்றுப் பேராசிரியர் முனைவர் இந்திரபாலா கருதியுள்ளார்.[73]

பன்னிரு பன்றிகள் மனிதர்களாக மாற்றப்பட்டு அவர்கள் வன்னியர் என்று அழைக்கப்பெற்றனர் என்று இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறிக்கப்படுவதற்குக் காரணம் வன்னியர், வராகத்தை இலச்சினையாகக் கொண்ட சாளுக்கிய மன்னர்களிடம் அடங்கி ஆட்சி செய்தவர்களாக இருந்த் காரணத்தாலாகும் என்று ஞானப்பிரகாசர் கருதியுள்ளார்.[74]

திருவிளையாடற் புராணத்தில், 'பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்' என்று ஒரு படலம் உள்ளது. அப்படலத்தில் தாய்ப்பன்றி இறந்துவிட்ட காரணத்தால் பால் அருந்தமுடியாது வாடிய பன்றிக் குட்டிகளுக்குப் பர்மசிவன் தாய்ப்பன்றியாக உருமாறி பால் கொடுத்ததும், பின்பு அப்பன்றிகள் பன்றி முகத்தோடு கூடிய மனித உருவங்களாக உருமாற்றம் பெற்றதால், பாண்டிய மன்னன் இராஜராஜப் பாண்டியன் அவர்களைத் தம் அமைச்சர்களாக ஆக்கிக் கொண்டதும் இப்படலத்தில் கூறப்பட்டிருக்கிறது.[75]

ஏழாயிரம் பண்ணை பாளையப்பட்டு வரலாறு பற்றி தெரிவிக்கும் கைபீது, அப்பாளையப்பட்டின் தோற்றத்தைப் பன்னிரு பன்றிமுக ஆண்கள் பாண்டியன் அவையில் அமைச்சர்களானக்கதையோடு தொடர்புபடுத்திக் கூறுகிறது. அப்பன்னிரு அமைச்சர்களின் அறிவுக் கூர்மையையும், செயல்திறனையும் நம்பகத்தன்மையையும் அறிந்து பாராட்டிய பாண்டிய மன்னன், மதுரைக்குக் கீழ்த்திசையில் சிறிய இராச்சியம் அவர்களுக்கு அளித்து ஆண்டு வரும்படி செய்தான். அவர்களது பரம்பரை அவ்வாறு ஆட்சி செய்து வருகையில், மதுரைக்குத் தெற்கே உள்ள தென் சீர்மையில் சுண்டனென்று ஒரு துட்டன் அரசுக்குத் தொந்தரவு அளித்து வந்ததால், அம்மரபில் வந்த பட்டக்காரன் அப்பைத் தறைக்குடி ஆண்டு கொண்டாரை, அத்துட்டனை அடக்கி வரும்படி ஆணையிட்ட தாகவும், அவரும் அவ்வாறே அத்துட்டனை அடக்கி வந்ததாகவும், மேலும் சில துட்டர்கள் தொடர்ந்து அப்பகுதியில் அரசுக்குக் கேடு செய்து வருகிறார்களென்றறிந்து, அந்தப் பகுதியில் ஒரு சீர்மையை விட்டுக் கொடுத்து அங்கேயே ஆட்சி

செய்து வரும்படி ஆணையிட்டு அனுப்பி வைத்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இப்பரம்பரையினர் வன்னியர் என்பது அவர்களது குலம் அக்கினி கோத்திரம் என்று பாண்டிய அரசனிடம் அவர்கள் தெரிவித்ததிலிருந்து தெளிவாகப் புலனாகிறது.[76] இந்த மரபில் பல மன்னர்கள் ஆட்சி செய்தபிறகு இறுதியாகக் கும்பினியார் ஆட்சிக் காலத்தில் சிதம்பர வன்னியர் என்பார் ஆங்கிலேயருக்கு எழுதிய கடிதம்தாம் மேற்கூறப்பட்ட கைபீதாகும்.[77]

## பிறமொழி இலக்கியச் சான்று

### மஹாபாரதம்

மஹாபாரதம், ஆக்னேய புராணம், வடபாகத்தில் (உத்தரபாகம்) ருத்ர வன்னியர் புராணம் என்று ஒரு பகுதி உள்ளது. இதில் ருத்ரவன்னியரின் தோற்றம் பற்றிய புராணக்கதை கூறப்பட்டிருக்கிறது.[78] அடுத்து கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் வடபகுதியில் படைவீட்டைத் தலைநகரமாகக் கொண்டு தனியாட்சி செலுத்திய சம்புவராய மன்னர்களைப் பற்றி குறிக்கும் ஓரிரு வடமொழி மற்றும் தெலுங்கு இலக்கியங்களும் தெரியவந்துள்ளன. அவற்றுள் வடமொழியில் உள்ள 'மதுராவிஜயம்' என்னும் வீரகம்பணராய சரித்திரம் மிகவும் முக்கியமானதாகும். இந்நூலை முதலாம் புக்கராயனின் மகனான இரண்டாம் கம்பணனின் பட்டத்தரசி கங்காதேவி எழுதியுள்ளார். கம்பணனது மதுரை படையெடுப்பும், முகம்மதியரை வெற்றி கொண்டதும் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

### மதுராவிஜயம்

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆட்சி செய்து வந்த சுல்தானைத் தோற்கடித்து மதுரையை விசய நகர ஆட்சியின் கீழ் கொண்டுவர முதலாம் புக்கன் விரும்பி, தம் இளவரசனான கம்பணனின் தலைமையில் பெரும் படையை மதுரை நோக்கி அனுப்பி வைத்தான். அவ்வாறு அனுப்பும்போது மதுரைக்குச் செல்லும் வழியில் சில புரட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் அழித்துவிடு என்று அறிவுரை வழங்கியுள்ளான். கங்காதேவியும் தம் நூலான மதுராவிஜயத்தின் மூன்றாம்

அத்தியாயத்தில், தொண்டைமண்டலத்திலிருந்த மக்கள் தலைவனான சம்புவராய மன்னன் போருக்கான முன்னேற்பாடுகளைச் செய்துக் கொண்டிருந்தான் என்றும் எழுதியுள்ளார்.

காஞ்சிக்குச் செல்வதற்கு முன்பாக அதற்கு வட பகுதியில் ஆட்சிபுரியும் சம்புவராய மன்னனை வெற்றி பெறுதல் வேண்டும் என புக்கன் அறிவுறுத்தியிருப்பதால் சம்புவராயர் காஞ்சிக்கு வடக்கேயிருந்த பகுதிகளை ஆட்சி செய்து கொண்டிருந்தனர் என்பதும் அவர்கள் புரட்சிக் காரர்களாக விளங்கியிருக்கின்றனர் என்பதும் புலனாகிறது.

மதுராவிஜயத்தின் நான்காம் அத்தியாயம் கம்பணன் போர் புரிவதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொண்டிருந்தான் என்பதை விரிவாகக் கூறியுள்ளது. மேலும் சம்புவராயர்களின் படைவீடு முற்றுகையிடப்பட்டு, இராணுவ முகாம் அங்கு தங்கியிருந்ததெனவும், இராஜகம்பீர ராஜ்யத்தில் உள்ள ராஜகம்பீர மலைப் பகுதியில் இருந்த படைவீட்டுக் கோட்டை விசய நகர அரசன் புக்கணனின் படைகளால் சூழப் பட்டது என்றும், கம்பணனே சம்புவராயனை எதிர்த்துப் போரிட்டு அம்மன்னனைச் சாகடித்தான் என்றும் தெரிவித் திருக்கிறது.[79]

## சாளுவாப்யுதயம்

மற்றொரு வடமொழி நூலான 'சாளுவாப்யுதயம்' என்னும் நூலில் அதன் ஆசிரியர் ராஜநாத திணடிம என்பார் கம்பணனின் உறவினனான சாவண்ண ' உடையாரின் சேனாதிபதி மங்கு; சம்புவராய மன்னனைத் தோற்கடித்தான் என்றும், பிறகு மீண்டும் அம்மன்னனிடமே ஆட்சியை ஒப்படைத்து ஆளச் செய்தான் என்றும் தெரிவித்துள்ளார்.[80]

இக்கருத்தைப் பில்லலமற்றி பினவீரபத்ர என்பாரால் எழுதப்பெற்ற 'ஜய்மினி பாரதமு' என்னும் தெலுங்கு மொழி நூலும் உறுதிப்படுத்துகிறது.[81]

## ராமாப்யுதயம்

சாளுவ நரசிம்மரால் எழுதப்பெற்ற 'ராமாப்யுதயம்' என்னும் வடமொழி நூல் கம்பராஜாவின் நண்பனான

குண்டாவின் மகன் மங்கியால் சம்புவராய மன்னன் வீரசம்பன் தோற்கடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது.[82]

## அச்சுதராயாப்யுதயம்

அச்சுதராயர் பற்றி எழுதப்பெற்றுள்ள இந்நூலிலும் வன்னிய குறுநிலத் தலைவன் பற்றியக் குறிப்பு காணப் பெறுகிறது.[82ஏ]

## நிர்வசன ராமாயணமு

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திக்கண சோம யாஜியால் எழுதப்பெற்ற 'நிர்வசனராமாயணமு' என்னும் தெலுங்கு மொழி நூலும், மங்கு என்னும் சேனாபதி, முதலாம் திக்கன் என்னும் கண்டகோபாலனால் வெல்லபபட்ட செங்கேணே வீரப்பெருமாள் கணடகோபாலன் எனனும் குலோத்துங்க சோழ சம்புவராயனின் வழிவந்த ஒரு சம்புவ்ராய மன்னனைத் தோற்கடித்தான என்று குறிப்பிடுவதோடு, மங்கு ஒரு 'அமாத்ய' என்றும் தெரிவிக்கிறது[83]

## சிங்கள மற்றும் பாலி இலக்கியங்கள்

## எளு அத்தனகளு வம்ஸ

அநுராதபுரத்தை ஆண்டு வந்த முகலன என்பானின் ஆட்சிக்கு அடங்காமல் சிறிவன்னிகள் அததனகளு பகுதியில் இருந்தார்கள் என்று இந்நூல் கூறுகிறது.[84] இந்த முகலன் என்னும் அரசன், முகலன் எனற பெயரில் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்த மூன்று அரசர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதும்; 'எளு அத்தனகளு வம்ஸ' என்னும் நூல் பொலநருவ காலதுக்குப் பிந்தையது (கி.பி. 1215க்குப் பிந்தையது) என்பதால், கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பாக இருந்த சிறி வன்னியர்களை இது கூறுகிறது, என்பதும் ஏற்றுக் கொள்ள இயலாதது என்றும் பேராசிரியர் இந்திரபாலா கருதியுள்ளார்.[85]

## நிகாய சங்க்ரஹய

முதலாம் பராக்ரமபாகு என்னும் சிங்கள மன்னன், முன்னூற்று அறுபத்து நான்கு வன்னி நாடுகளை வெற்றி கொண்டதாக இந்நூல் குறிப்பிடுகிறது.[86]

## ஜிராசந்தேசய மற்றும் சூளவம்சம்

மேற்கூறப்பெற்ற இரு இலக்கியங்களிலும் மற்றும் டி. சுதபாலாவால் 1924-ல் பதிப்பிக்கப் பெற்ற ஜிராசந்தேசய என்னும் மற்றொரு இலக்கியத்திலும் சுட்டப்படும் 'வன்னி' என்னும் சொல் ராஜரட்டா மற்றும் மற்ற வனப் பகுதிகளில் அரசோச்சிய குறுநில மன்னர்களையும், தலைவர்களையும் குறிப்பதாகும் என்றும்; சிங்களமொழி நூல்களில் 'வன்னி' என்று ஒரு சொல்லாலே வன்னிய ராஜியமோ அல்லது வன்னியத் தலைவனோ குறிக்கப்படுகையில், சூளவம்சத்தில் வன்னி ராஜத்தம், வன்னிராஜ, வன்னிரானா, வன்னி மஹிபால, மஹா வன்னி ராஞ்ஞு (மஹா வன்ய ராஜஞ்ஞு என்றும் உள்ளது), மற்றும் மஹா வன்னிராஜ ூஹி என்று கூட்டுச் சொற்களால் வன்னி அரசர்கள் குறிப்பிடப்படுகின்றனர் என்றும் இந்திபாலா கூறியுள்ளார்.[87]

மேலும் 'சிங்கள வன்னி அரசர்கள்' என்று 'சூளவம்சத்திலும்', 'சிங்கள மஹா வனனியர்' என்று 'பூஜவலியத்திலும்' குறிப்பிடப்படும்போது, அப்பொழுதே 'தமிழ் வன்னியர்' என்று ஒரு பிரிவினர் இருந்திருப்பது தெளிவாகிறது என்றும் ஊகித்திருக்கிறார்.[88]

## இலங்கைத் தமிழிலக்கியங்கள்

தென்னிந்தியாவிலிருந்து வன்னியர் இலங்கைக்குக் குடியேறியது பற்றி இலங்கையில் எழுதப்பெற்ற சில தமிழிலக்கியங்கள் மூலமாகவும் அறியமுடிகிறது.

'யாழ்ப்பாண வைப மாலை'[89] என்னும் நூலில் வன்னியரின் இலங்கைக் குடியேற்றம், குளக்கோட்டன் என்பவனோடு தொடர்புபடுத்திக் கூறப்பெற்றிருக்கிறது.

'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூல் வன்னியர் யாழ்ப்பாணக் குடியேற்ற நிகழ்ச்சியை, மாகா (மாகோன்) என்பவனோடு தொடர்புபடுத்திக் குறிப்பிடுகிறது.[90]

'வையாபாடல்' என்னும் நூல் ஒரு பாண்டிய இளவரசனோடு தொடர்பு படுத்தி வன்னியர் இலங்கைக் குடியேற்றத்தைத் தெரிவிக்கிறது.[91] இதேபோன்று 'உபாசக ஜனாலங்கார' என்னும் நூலும் பாண்டியனின் குறுநில

மன்னனான சோழகங்கன் என்னும் வன்னியன் ஒருவன் பற்றி குறிப்பிடுகிறது.[91ஏ]

## கல்வெட்டுச் சான்றுகள்

தமிழகத்தில் கிட்டத் தட்ட 300 கல்வெட்டுக்கள் பள்ளிகள், வன்னியர் மற்றும் சம்புவராயர் பற்றி தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் சோழர் காலம் தொடங்கி, அண்மைக் காலம் முடிய காணப்படுகின்றன. சோழ மன்னன் கண்டராதித்தன் (கி.பி. 955-963) காலத்தியக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருக்கும் "உறையூரி வன்னி நங்கலி வெள்ளி குணவி" என்பது வன்னியப் பெண்மணியின் பெயராகும். இக்கல்வெட்டு தஞ்சைமாவட்டம் திருவிடைமருதூர் மகா லிங்கக்கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கிறது.[92]

இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழனின் மற்றொரு கல்வெட்டிலும், முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) காலத்தியக் கல்வெட்டிலும் வன்னியர் தெளிவாகப் பேசப்படு கின்றனர். சுந்தரசோழன் கல்வெட்டுக்கள் ஒன்றில் 'பாரதாயன் பள்ளி' என்றொருவனும்,[93] மற்றொன்றில் "ஓமயிந்தன் முன்னூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம்" என்றொரு வனும்[94]; இராசராசன் காலத்தியக் கல்வெட்டில் "குப்படி வன்னியான க்ஷத்ரிய சிகாமணித் தொங்கற்பேரையன்"[95] என்றொருவனும் குறிக்கப்படுகின்றனர். முதலாம் இராசராசன் காலத்திய மற்றொரு கல்வெட்டில்[96] 'வன்னியப் பற்று' என்று வன்னியர்கள் பெற்றிருந்த நிலம் பற்றி குறிப்பிடப்படுகிறது.

முதலாம் இராசராசனின் மைந்தனான முதலாம் இராசேந்திரன் காலத்தியக் கல்வெட்டொன்றில்[97] சாளுக்கியர் களின் படைத்தலைவன் ஒருவன் 'வன்னிய ரேவ' என்று அழைக்கப்பட்டிருக்கிறான் .என்பது தெரியவருகிறது. இவன் சாளுக்கிய நாட்டிலுள்ள கெம்பாவிப் பகுதியை கி.பி.1054-55-ல் ஆட்சி புரிந்து கொண்டிருந்த ரேவரசனாக இருக்கலாம் என்று கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கூறியுள்ளார்.[98]

சுந்தரசோழன் காலத்திலேயே முன்னூற்றுவன் பள்ளி என்று குறிக்கப்படுபவன், முஞ்நூற்றுக் குடிப்பள்ளி செங்கேணி சம்புவராயர்களின் முன்னோடியாக இருக்கலாம். அந்த வகையில் இக்கல்வெட்டு முக்கியத்துவம் பெறுகிறது. 'குப்படி

வன்னியான க்ஷத்ரிய சிகாமணியைக்' குறிக்கும் முதலாம் இராசராசன் கல்வெட்டின் வாசகம் கீழ்வருமாறு உள்ளது.

> "திருப்பள்ளித் தொங்கல் பிடிக்கு ஆளுக்கு உள்படுவான்
> ஒருவனுக்குப் பங்கு ஒன்றும், ஆள் பதின்மர்க்குப் பேராற்
> பங்கு எட்டு மாவும் ஆக உடையான் திருவிசலூரரான்
> மும்முடி சோழத் தொங்கற் பேரையனுக்கும் குப்படி
> வன்னியான க்ஷத்ரிய சிகாமணித் தொங்கற்பேரைய
> னுக்குமாகப் பங்கு ஐஞ்சும்"[99]

முதலாம் ராசராசன், தஞ்சை ராஜராஜ ஈஸ்வரம் உடையார்க்கு அளித்த நிவந்தக்காரர்களில் (பணி செய்வார் களில்), திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பதற்காக ஒருவரையும் அவருக்கு உதவியாளர் பத்துப் பேரையும் நியமித்து மொத்தம் ஐந்து பங்கு அளித்திருக்கிறார். பங்கு ஒன்றுக்கு ஒருவேலி நிலம் அளிக்கப் பெற்றிருக்கிறது. ஒரு வேலி நிலத்துக்கும் ஈடாக நூறு கலம் நெல் என்று வழங்கப்பட்டிருக்கிறது.

திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பவர் திருவிசலூரரான் மும்முடிசோழத் தொங்கற்பேரையனும், குப்படி வன்னியான க்ஷத்ரிய சிகாமணித் தொங்கப் பேரையனும் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். தொங்கலைப் பிடிப்பவர் 'தொங்கர்' என்று அழைக்கப்பெற்றனர் என்று உணரமுடிகிறது. மேலும் 'பேரையன்' என்று காணப்பெறுவதால் தொங்கர்களின் தலைவர் என்று ஊகிக்கலாம். மேற்காணும் இருவரில் ஒருவர் 'வன்னி' என்று தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கிறார். மற்றொருவரும் வன்னியராகத்தான் இருத்தல்வேண்டும். இருவரும் 'திருப்பள்ளித் தொங்கலைப்' பிடிப்பதற்காக நியமிக்கப் பெற்றவர்கள்.

இதிலிருந்து மற்றொன்றும் புலனாகிறது. அதாவது பள்ளித் தொங்கல் பிடிப்பவர்கள் 'பள்ளிகள்' என்னும் வன்னியரேயாவர் என்பதும்; அவ்வாறு 'பள்ளித் தொங்கலைப்' பிடிப்பவர்களாக அவர்கள் பணியாற்றியதால் 'பள்ளிகள்', என்று அழைக்கப் பெற்றனர் என்பதும் தெரியவருகிறது. 'பள்ளி' என்றால் 'சிறுஊர்' என்று தமிழிலும், சமஸ்கிருதத்திலும் ஒரு பொருள் உண்டு. சிற்றூர்களில் தொடக்கத்தில் அவர்கள் குழு குழுவாக வாழ்ந்து வந்ததாலும் 'பள்ளி' என்று வன்னியர் அழைக்கப் பெற்றிருக்க லாம்.

சுந்தரசோழன் காலத்தியக் கல்வெட்டில் காணப்பெறும் 'ஓமயிந்தன் முன்னூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம்' என்னும் பெயரும் சிறப்புடையதாகும். விக்கிரம சோழனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஓய்மாநாட்டு முந்நூற்றுப் பள்ளி செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் ராஜேந்திரசோ்ழ சம்புவராயன்[100] என்ற சம்புவராயன் குறிக்கப்பட்டிருக்கிறான். அதே முன்னூற்றைச் சேர்ந்த பள்ளியான கரணமாணிக்கம் என்பான் விக்கிரமசோழன் காலத்துக்குச் (கி.பி.1129) சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே குறிக்கப்பட்டிருப்பதால் முன்னூற்றுப் பள்ளி என்னும் வன்னியர் கி.பி.10ஆம் நூற்றாண்டு முதலே வாழ்ந்திருக்கின்றனர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

மன்றாடிகளும் சில கல்வெட்டுக்களில் பள்ளி என்று குறிப்பிடப்படுகின்றனர். 'மன்றாடி அயலஞ்சி பள்ளி' என்று கும்ப கோணம் நாகேஸ்வரசுவாமி கோயிலில் உள்ள உத்தம சோழன் காலத்தியக் கல்வெட்டில் காணப்படுகிறது.[101] அதேபோன்று முதலாம் இராசராசன் கல்வெட்டில் 'இடையன் தண்ணாளன் வன்னி' என்றும் எழுதப்பட்டிருக்கிறது.[102] ஆதலால் வன்னியரில் ஒரு பிரிவினர் மன்றாடிகள் என்றோ அல்லது இடையர்கள் என்றோ அழைக்கப்பட்டிருக்கலாமோ என்ற ஒரு ஐயம் எழுகிறது.

முதலாம் இராசேந்திரனனின் கடைசிப் புதல்வனான அதிராசேந்திரன் (கி.பி. 1067-1070) காலத்தில் செங்கேணி சாத்த நாலாயிரவன் என்னும் கரிகால சோழ செங்கேணி நாடாழ்வான் என்பான் பேசப்படுகிறான்.[103] இவன் சம்புவராய னாக இருக்கலாம் என்றும், கரிகாலச் சோழ நாடு என்னும் சிறு பகுதியை ஆட்சி புரிந்தவனாகவும் இருக்கலாம் என்றும் பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி கருதியுள்ளார்.[104] பேராசிரியர் எம்.எஸ் கோவிந்தசாமியின் ஊகம் ஓரளவுக்குச் சரியானதுதான். அவன் ஆட்சி செய்த பகுதி கரிகால சோழ நாடு என்பதைவிட செங்கேணி நாடு என்று பொருள் கொள்வதுதான் சரியாக இருக்கும்போன்று தெரிகிறது. 'செங்கேணி'' என்பது சம்புவராயர்களின் குடிப்பெயராக இருந்து, அவர்கள் வாழ்ந்து வந்த சிறு பகுதிக்கும் பெயராக அமைந்துவிட்டது என்று ஊகிக்கமுடிகிறது.

'செங்கேணி என்ற குடிப்பெயர் 'செங்கழுநீர்' என்பதன் மாற்று வடிவமாக இருக்கலாம். சம்புவராயர் காலத்துக்கு

முன்பாகவே வன்னிய புராணம் எழுதப் பெற்றுவிட்டது என்பதும் அதன் தாக்கம் பரவலாக ஏற்பட்டு விட்டது என்பதும் தெரிகிறது. அதன் காரணமாகவே பரமேசுவரனால் அளிக்கப் பெற்ற செங்கழுநீர் மாலையைத் தாம் வேட்ட ஓம குண்டத்தில் போட்டு, சம்புமகரிஷி வீர வன்னியனை உருவாக்கினார் என்பதன் நினைவாகவே செங்கழுநீர் பூவையே தம் குடிப்பெயராகச் சம்புவராயர் கொண்டுவிட்டனர் போலும்.

முதற்குலோத்துங்கச் சோழனின் பதினைந்தாம் ஆட்சி யாண்டுக் (கி.பி.1085) கல்வெட்டொன்றில் 'செங்கேணி சாத்தன் சோழனான சேனாபதிகள் வாணராயன்' என்பான் திருவேங்கடம் உடையாருக்குக் கோயில் எழுப்பியது பற்றிய குறிப்பு காணப்பெறுகிறது.[105] இவன் அதிராஜேந்திரன் கல்வெட்டில் குறிக்கப்படும் 'செங்கேணி சாத்த நாலாயிரவன் என்னும் கரிகாலசோழ செங்கேணி நாடாழ்வானாகவே இருத்தல் கூடும். சோழனுக்குச் சேனாபதியாக இருந்து வாணாதிராயர்களை வெற்றிபெற்றதால், 'வாணராயன்' என்று சோழ மன்னனால் விருதளித்துப் பாராட்டப் பெற்றிருக்கலாம். அத்தோடு அதிராஜேந்திரன் மிகவும் குறைந்த காலமே ஆட்சி செய்திருப்பதால் அவனுக்கு அடுத்து அரியணையேறிய முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலும் அவன் படைத்தளபதியாக இருந்திருக்கக்கூடும்.

செங்கேணி குடியைச் சேர்ந்த சம்புவராயர்கள் பற்றி முதலாம் குலோத்துங்கனின் மகனான விக்கிரம சோழன் காலம் முதல் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முடிய சுமார் 250 கல்வெட்டுக் களிலிருந்து அறியமுடிகிறது. சுந்தர சோழன் காலத்திலிருந்து மூன்றாம் இராசேந்திரன் காலம் முடிய சோழர்களுக்கு அடங்கிய அரசு அலுவலர்களாகவும் சிற்றசர்களாகவும் இருந்து, பின்னர் தெலுங்குச் சோழர் விஜய கண்டகோபாலனுக்கு அடங்கியிருந்து, மீண்டும் பிற்காலப் பாண்டியர்களான விக்ரம பாண்டியன் காலம் தொடங்கி மாறவர்மன் திரிபுவனச் சுந்தரபாண்டியன், சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலம் முடிய சிற்றரசர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். பின்புதான் தனியரசாளத் தலைப்பட்டனர்.

சோழர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் ஆட்சிபுரிந்த மூன்றாம் இராசேந்திரனின் காலத்திலேயே இராசகம்பீரச் சம்புவராயன் என்பான் தனியரசு செலுத்தத் தொடங்கி

விட்டான். பிறகு பாண்டியரின் படையெடுப்பால் சம்புவராயர் மீண்டும் சிற்றரசு நிலைக்குத் தள்ளப்பெற்று, பின்னர் இரண்டாம் தனியரசு ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயன் முதல் தொடங்கப்பட்டிருக்கிறது. கி.பி. 1322–ல் ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயன் தன் மகன் வென்று மண்கொண்ட சம்புவராயனோடு சேர்ந்து[106] தன்னாட்சி செய்து வந்திருக்கிறார்.

அரசு அலுவலர்களாகவும், தனியரசு சிற்றரசர்களாகவும் வாழ்ந்த சம்புவராயர்களில் சிலர் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்திருக்கின்றனர்.

சம்புவராயச் சிற்றரசர்களில் மிகவும் உன்னதமானவர் என்ற பெருமையைப் பெற்றவர் விக்கிரமசோழன் காலம் தொட்டு இரண்டாம் இராசாதிராசன் காலம் முடிய வாழ்ந்த முன்னூற்றுக் குடிப் பள்ளி செங்கேணி சம்புவராயன் நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் ராஜேந்திரசோழ சம்புவராயன் ஆவார். இவர் சில சிவாலயங்களை நிர்மாணித்தும், பல கோயில்களுக்குக் கொடையளித்தும், குளங்கள் வெட்டியும் பல அறச் செயல்கள் புரிந்திருக்கிறார்.[107] அதன் காரணமாக இச்சிற்றரசர் "சிவாலய சந்தோஷன்" என்ற விருதும் பெற்றிருக்கிறார்.[108]

இவரது மூன்று மைந்தர்களில் மூன்றாம் மைந்தர் செங்கேணி அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் என்னும் க்ண்டர் சூரியன் சம்புவராயன்[109] என்பார் தம் குலத்துக்கும் பொதுமக்களுக்கும் அதிக நன்மைகள் செய்திருப்பார் போன்று தெரிகிறது. அதனால்தான் தம் குலத்துக்கு ஒரு சூரியன் போன்று இவர் இருந்ததைத் தெரிவிக்கும் வகையில் 'கண்டர் சூரியன்' என்ற பட்டத்தைத் தாங்கியிருக்கிறார். இவர் இரண்டாம் இராசாதிராசன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சிற்றரசனாக விளங்கியிருக்கிறார். சம்புவராயர் குலம் 'கண்டர் குலம்' என்று வழங்கப் பெற்றது என்பதும், சம்புவராயர்களை வெற்றிபெற்றதால் தான் விசய நகர வேந்தர்கள் 'கண்டர் கண்டன்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்கள் போன்றும் தெரியவருகிறது.

திரிபுவனவீரதேவன் என்னும் பட்டம் பூண்ட சோழன் காலக் கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் வன்னிய நாயன் சம்புவராயன்[110] குறிக்கப்படுகிறார்.

விசயகண்டகோபாலன் காலத்தியக் கல்வெட்டொன்றில் அழகிய பல்லவன் எதிரிலிசோழ சம்புவராயன் என்று ஒரு சிற்றரசர் குறிப்பிடப்பட்டுள்ளார்.[111] இப்பெயர் சம்பு குலத்தவருக்கும் காடவராயர்களுக்கும் இருந்த தொடர்பை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சடகோபவர்மன் என்னும் திரிபுவனச் சக்ரவர்த்தி விக்ரமபாண்டியன் கல்வெட்டில் சம்புகுலோத்துங்க சம்புவராயன் வீரசம்பன் என்பாரது பெயர் காணப்படுகிறது.[112] இவரது பெயரிலிருந்து இச்சிற்றரசர் சம்புகுலத்துக்குப் பெருமை சேர்த்தவர் என்பது புலனாகிறது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தன்னாட்சி அதிகாரம் பெற்று ஆட்சி புரிந்த வென்றுமண்கொண்ட சம்புவராயர், முதலாம், இரண்டாம், மூன்றாம் இராசநாராயணச் சம்புவராயர்களின் காலத்தியக் கல்வெட்டுக்கள் சுமார் 200 அளவுக்குக் கிடைத் திருக்கின்றன.

இக்கல்வெட்டுக்கள் சுயாட்சி நடத்திய சம்புவராய மன்னர்கள் காலத்தின் சமுதாயம், அவர்களது அறப்பணிகள், நிலவருவாய், வரிகள், அரசியல் நிலைமை ஆகியவை பற்றி அறிந்துகொள்ள பெரிதும் உதவிபுரிகின்றன. இறுதியாக இவர்களது ஆட்சி, குமார கம்பணனால் வீழ்த்தப்பட்டது குறித்தும் கல்வெட்டு[113] புலப்படுத்துகிறது.

இவர்களது ஆட்சிப்பரப்பு தற்போதுள்ள வேலூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மாவட்டத்தின் வடபகுதி ஆகியவற்றை உள்ளடக்கி யதாக இருந்திருக்கிறது.

## பள்ளி

மதுரை மாவட்ட கருங்காலக்குடி என்னும் ஊரில் காணப்பெறும், கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் காலக் கல்வெட்டொன்றில்[114] பாண்டியரின் குறுநிலத்தலை வனாகப் 'பள்ளிதரையன்' என்பார் குறிக்கப் பெற்றிருக்கிறார். 'பள்ளி அதியரையன்' என்னும் சொல்லே பள்ளிதரையன் என்று குறுகி வழங்கப்பெற்றிருக்கலாம். 'வாண அதியரையர்' என்பது வாணாதராயர் என்று குறுகி வழங்குவது போலாகும். பள்ளி அதியரையன் என்றால் பள்ளி என்ற குலத்தின் பெருந்தலைவன் என்று பொருள்.

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் உள்ள பல்நாடு பகுதி 'பள்ளிதேச 300' என்று வழங்கப் பெற்றிருக்கிறது.[115] இதுவே பல்லிநாண்டு – 300 என்ற நாட்டுப் பிரிவாகச் சக ஆண்டு 1056க்குச் சரியாக கி.பி. 1134–ல் பொறிக்கப்பட்டுள்ள ஹைஹேயர் காலத்தியக் கல்வெட்டில்[116] பேசப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டும் குண்டூர் மாவட்டம் பல்நாடு வட்டத்தில் கண்டுபிடிக்கபபட்டுள்ளது. மேலும் குண்டூர் மாவட்டம் பல்நாடு வட்டம் குரசால என்னும் ஊரிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ள கீழைச் சாளுக்கிய மன்னன் முதலாம் ஜயசிம்ஹனின் செப்புப் பட்டயத்திலும்[117] 'பள்ளிராஷ்ட்ர' என்னும் நாட்டுப் பிரிவு குறிப்பிடப்படுகிறது.

'பள்ளி' என்னும் சொல் சாதிப்பெயரையும் குறிக்கிறது என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. எறும்பூர் காணியுடைய 'பள்ளி', ஆளப பிறந்தான் ஏழிசைமோகனான குலோத்துங்க சோழ காடவராதித்தன் என்பார் ஒரு கற்றளி எடுப்பித்து, பாடிகாவல் உள்ளிட்ட அனைத்து வரிகளும் அக்கோயில இறைவனுக்கே உரியது என்று கொடையளித்து விட்டு, அக்கொடைக்குத் தன் வமிசத்திலுள்ளாரும், தம் சாதியிலுள்ளாரும் மற்றும் யாரேனும் தீங்கிழைத்தால் ஸ்ரீயாக்ஞைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று எழுதிவைத்துள்ளார்.[118] இவர் தம்மைக் காடவராதித்தன் என்று கூறிக் கொள்வதால் காடவர்களுககுச் சூரியன் போன்று, தலைவனாக விளங்கியிருப்பார் போன்று தெரிகிறது. இவர் மூன்றாம் குலோததுங்கன் காலத்தில் வாழ்ந்த 'பள்ளி' என்று அறிய முடிகிறது. இவர் காடவர் குலத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவதால் காடவர்களும் வன்னியர் என்பது தெரியவருகிறது.

சோழர் காலக் கல்வெட்டுக்களில் 'குடிப்பள்ளி' என்று பலர் குறிக்கப்படுகின்றனர். இவர்களில் சிலர் சோழர் படைத் தளபதிகளாகவும் பதவி வகித்திருக்கின்றனர். 'வேசாலி பிரமதேயத்திலிருக்கும் குடிப்பள்ளி பெருமான் இரணடாயிர வனான ஸேநாபதி ராஜேந்திர சோழ வேசாலிப பேரையன்' என்பார் ஒருவர் மற்றொரு கல்வெட்டு மூலம் தெரிய வருகிறார்.[119]

பள்ளிகள் வில்லை ஏநதி வேட்டையாடுவதில் வல்லவர்களாக விளங்கியிருந்திருக்கின்றனர். அவ்வாறு விலங்கு வேட்டைக்குச் செல்கையில் கை தவறி சில மனிதர்களைக் கொன்றுவிட்டதைச் சில கல்வெட்டுக்கள[120] மூலம் உணர

முடிகிறது. வில்லைக் கையாளுவதில் சிறந்தவர்களாகப் பள்ளிகள் விளங்கியதால் 'வில்லிகள்' என்றும் அழைக்கப் பெற்றிருக்கின்றனர்.[121] சோழ மன்னர்கள் வில்லிகள் படையைப் பெற்றிருந்திருக்கிறார்கள் என்பது கீழ்க்காணும் கல்வெட்டு வாசகங்களால் உணரமுடிகிறது.

ஜனநாதத் தெரிந்த வில்லிகள்[122]

பண்டிதசோழத் தெரிந்த வில்லிகள்[123]

உடையார் படை வீரநாராயணத் தெரிந்த வில்லிகள்[124]

உடையார் படை ராஜகுஞ்சரந் தெரிந்த வில்லிகள்[125]

தியாக ஸமி(மு)த்திரந் தெரிந்த வில்லிகள்[126]

தெரிந்த வில்லிகள் என்பதற்கு தேர்ந்தெடுக்கப் பெற்ற வில்வீரர்கள் என்ற பொருளாக இருக்கலாம். பள்ளிகள், பள்ளி நாட்டவர் என்றும்[127] பண்ணாட்டார் என்றும், அவர்கள் வாழ்ந்த பகுதி பள்ளிநாடு[128] என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போதுள்ள கடலூர், மயிலாடுதுறை மற்றும் நாகை மாவட்டங்களில் வாழ்ந்த பள்ளிகள் ஒரு தீர்மானம் நிறை வேற்றியிருப்பது மிகவும் வியப்பூட்டுவதாக உள்ளது.

> "வீரநாராயணன் பேரேரிக்கு மேற்கு பச்சைமலைக்கு கிழக்கு காவேரி ஆற்றுக்கு வடக்கு உள்ளிட்ட பள்ளிகள் திருநாள் தோறும் குடிக்கு ஐம்பது காசும், அரிசி குறுணியுமாக குறைவறுக்க (குறைவற இறுக்க) கடவோ மாகவும் சம்மதித்து கல்வெட்டிக் குடுத்தோம் பள்ளி நாட்டவரோம். இப்படி செய்த பள்ளி நாட்டவர்க்கு பட்டு பரிவட்டமும் பன்னாட்டான் தம்பி என்கிற திருச்சின்னம் பணி மாறக் கடவதென்று பெருமாள் குலோத்துங்க சோழதேவர் திருவாய் மலர்ந்தருளினபடிக்கு"

என்று அக்கல்வெட்டு[129] நீள்கிறது.

திருவிழாக்காலங்களில் பள்ளிகள் குடி ஒன்றுக்கு ஐம்பது காசும், குறுணி அரிசியும் கொடுக்கக் கூடிய அளவுக்கு வசதிபடைத்தவர்களாக கி.பி.13ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்திருக்கின்றனர் என்பதும் அவ்வாறு தந்தவர்களுக்கு 'பட்டுப் பரிவட்டம்' கட்டியும், 'பண்ணாட்டார் தம்பி' என்ற விருதுப் பெயர் வழங்கியும் கௌரவிக்கப் படவேண்டும் என்று

குலோத்துங்கச் சோழன் ஆணை பிறப்பித்திருக்கிறார் என்பதும் தெரியவருகிறது.

பள்ளிகள் மீது 'வில்வரி'[130] என்று ஒரு வரி அரசால் வசூலிக்கப்பட்டிருக்கிறது. வில்வரியையே, 'வில்பணம்'[131] என்றும் 'விற்பணம்'[132] என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பள்ளிகளுக்கு அளிக்கப்பெற்ற . கொடை 'பள்ளிப்பேறு' என்று வழங்கப்பெற்றிருக்கிறது.[133]

திருச்சி மாவட்டம் வாலிகண்டபுரத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில்[134] பன்னாட்டார் இடங்கை சமூகத்தவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1227 ஆகும். பன்னாட்டார் நிவுடைமையாளர்களாக மாறிவிட்ட நிலையை இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது. இதே மாவட்டத்தில் உள்ள ஆடுதுறை மற்றும் கீழப்பழுவூர் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள்[135] வன்னியர் படைத் தலைவர்களாகப் பணிபுரிந்ததைத் தெரிவிக்கின்றன. இக் கல்வெட்டுக்களின் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு.

இலங்கையில் வன்னியர் பற்றி தெரிவிக்கும் இரண்டு கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[136] அரியலூர் மழவராயர்,[137] உடையார்பாளையம் உடையார் ஆகியோர் காலத்திய சில கல்வெட்டுகளும்[138] கிடைக்கப் பெற்றிருக் கின்றன.

## செப்புப் பட்டயங்கள்

வன்னியர் பற்றி குறிப்பிடும் செப்பேடுகள் கணிசமான அளவில் கிடைத்திருக்கின்றன. எனினும் வன்னியர், பள்ளி என்னும் வில்லிகளாகவும், சம்புவராய மன்னர்களாகவும் இருந்த காலகட்டங்களைச் சார்ந்த செப்புப் பட்டயங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. ஆனாலும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் 18–19ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்திய வன்னியர் பற்றி நாற்பதுக்கும் மேற்பட்ட செப்பேடுகள் கிடைத் திருக்கின்றன.

## வெள்ளோடை செப்பேடு–1

தற்போது கிடைத்திருக்கின்ற செப்பேடுகளுள் மிகப் பழமையானது கி.பி. 1416-ல் வெளியிடப் பட்டதாகும். இச்செப்பேடு[139] எந்த இடத்திலிருந்து கிடைத்தது என்பது அறிய

முடியவில்லை. இதில் தொண்டைமண்டலத்துப் பையூர் கோட்டத்து கும்மங்கலத்துக்கு அடுத்த வெள்ளேடையிலிருக்கும் வன்னியராய கோத்திர ஆண்டியப்ப நாயக்கன் குமாரன் முத்து நாயக்கன் உள்ளிட்டார், வெள்ளோடை பாதி கிராமத்தை, அதே நாட்டில் உப்பளத்தில் உள்ள வைசியர் கோட்டை பெரிய பொம்மு செட்டி உள்ளிட்டாருக்கு விற்று விலையாவணம் செய்து தந்தது எழுதப் பெற்றுள்ளது. வன்னியரை நாயக்கர் என்று அழைக்கும் மரபு கி.பி. 15ஆம் நூற்றாண்டளவிலேயே தமிழகத்தின் வடபகுதியில் வழக்கில் வந்துவிட்டது என்பதை இப்பட்டயம் உறுதிப்படுத்துகிறது.

## கிருஷ்ணன் ஒடைச் செப்பேடு: 1

கி.பி. 1418ல் விசயநகர அரசர் ஸ்ரீவீரசிங்கராயர் காலத்தின் செப்புப்பட்டயமும்[140] நிலவிலை ஆவணமாகவே உள்ளது. தொண்டை மண்டலத்துப் பையூர் கோட்டம் கும்மங்கலத்துக்கு அடுத்து கிருஷ்ணன் ஓடையைச் சேர்ந்த வன்னியராய கோத்திரம் மூக்காநாயக்கன் குமாரன் முனியப்ப நாயக்கன் கிருஷ்ணன் ஓடை கிராமத்தில் பாதியை அதே நாட்டைச் சேர்ந்த காவண மங்கலத்திலிருக்கும் வயிசியரில் ஆரணி செட்டியப்ப செட்டி உள்ளிட்டாருக்கு விற்று விலை ஆவணம் செய்து தந்தது குறிக்கப் பெற்றிருக்கிறது.

## இலங்கைச் செப்பேடுகள்: 2

வன்னியர் பற்றி தெரிவிக்கும் இரு செப்பேடுகள்[141] இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளன. ஒன்று கி.பி. 1547ஆம் ஆண்டையும் மற்றது கி.பி. 1722ஆம் ஆண்டையும் சார்ந்தவை. ஹாணுவிலாவைச் சேர்ந்த நவரத்ன வன்னியனை முதல்செப்பேடும், கயிலாய வன்னியன் மற்றுமுள்ள வன்னிய தலைவர்களை இரண்டாம் செப்பேடும் குறிப்பிடுகின்றன.

## திருவொற்றியூர் செப்பேடு: 1

செங்கற்பட்டு மாவட்ட நீதிமன்றத்தின் பாதுகாப்பிலிருந்த ஒரு செப்புப்பட்டயம்[142] திருவொற்றியூர் பூசாரிகள், மதரு, ஒண்டியூர், நித்தியூர் ஆகிய ஊர்களின் கோயில் பூசை உரிமையையும் மற்றும் சில சிறப்புகளையும் வன்னிய சின்னபிள்ளை தந்த்ரிக்கு, அவரிடமிருந்து எழுநூற்றைம்பது

பகோடாக்கள் (பணம்) பெற்றுக் கொண்டு விற்றுக் கொடுத்த விலை ஆவணம் பற்றி தெரிவிக்கிறது. இந்த வன்னிய சின்ன பிள்ளை தந்த்ரி என்பார் காஞ்சிபுரம் சங்கராச்சாரிய சுவாமிகளோடு பயணங்களில் சென்றவர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இச்செப்புப் பட்டயத்தின் காலம் கி.பி. 1454.

## அளகாபுரம் செப்பேடு: 1

சேலம் அளகாபுரம் பண்ணாட்டார் செப்பேடு ஒன்று சேலம் கவிஞர் தமிழ்நாடனால் வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது.[143] இப்பட்டயத்தின் வாசகத்தைப் பேராசிரியர் புலவர் செ. இராசு படித்தளித்திருக்கிறார். பட்டயம் எழுதப் பெற்ற ஆண்டு சாலிவாகன சகாப்தம் 1517 என்று குறிப்பிடு வதற்குப் பதிலாகத் தவறாக கலியுக சகாப்தம் என்று பட்டயத்தில் எழுதப் பெற்றிருக்கிறது. சாலிவாகன் சகாப்தம் எனக் கொண்டு பார்த்தால் கி.பி. 1595ஆம் ஆண்டு என ஆகிறது. எழுத்தமைதி, பட்டய வாசகங்கள் ஆகியவை கொண்டு நோக்குகையில் சாலிவாகன சகாப்தமே சரியெனப் படுகிறது.

பல்வேறு நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த வன்னியர் (பண்ணாட்டார்) ஒன்று சேர்ந்து கும்பகோணம் சீர்காழிச் சீர்மையிலிருந்த வைத்தீஸ்வரன் கோயில் சன்னிதியில் மேலத்தெரு வீதியில் தென் சிறகில் தங்கள் மரபின் பெயர் பிரதாபமடைய வேண்டுமென்று ஒரு பெரிய மடம் அமைத்ததைக் குறிப்பிடுகிறது. பல நாட்டு வன்னியர்களைக் குறிப்பிடுகையில் தொண்டைமண்டலமான சோழகனார் காலாக்கள் தோளுடையார் (உடையார் பாளையம் ஜமீன்தாரர்), மழவராய நயினார் (அரியலூர் ஜமீன்தாரர்), பருவூர் கச்சிராய நயினார் (பருவூர் ஜமீன்தாரர்) ராவுத்த மிண்ட நாயினார், (வடகால் ஜமீன்தாரர்), ஊத்தங்கால் வன்னிய நயினார், பெண்ணைகரை கச்சிராயர் வாண்டையார், ஆகியோர் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## நெய்வேலிச் செப்பேடு: 1

அச்சிறுபாக்கம் தமிழாசிரியர் டாக்டர் தாமரைக் கண்ணனால் வெளிக் கொணரப்பட்டு இந்நூலாசிரியரால் பதிப்பிக்கப்பெற்ற 'பன்னாட்டார் பட்டயம்' என்பதும்[144] வன்னியர் பற்றி தெரிவிக்கும் பட்டயங்களுள் மிக முக்கிய

பட்டயமாகும். இராசநாராயணய்யர் என்பாருக்கு எழுகரை நாட்டுப் பன்னாட்டார் எழுதிக் கொடுத்த சாதனப் பட்டயம் இதுவாகும். இதன்காலம் கி.பி. 1633.

இச்செப்பேட்டில் உருத்திரப் பள்ளியாரின் மெய்க்கீர்த்தி, வன்னியர் தோற்றக் கதை, வலங்கை இடங்கைப் போர்வழக்கு மன்னனிடம் கூறப்பெற்று தீர விசாரித்து மன்னர் அளித்த தீர்ப்பு, பன்னாட்டார் இராச நாராயண ஐயருக்கு வழங்கிய கொடை, 62 ஊரைச் சார்ந்த பன்னாட்டார் பட்டியல் ஆகியவை எழுதப்பட்டுள்ளன. வலங்கை இடங்கையாருக் குரியவை உடலில் எந்தெந்த பாகங்கள் என்றும், வலங்கைச் சாதியினர் பதின்மர் என்றும், இடங்கைச் சாதியர் எண்மர் என்றும் மேலும் பேசப்பட்டுள்ளது.

## சித்தாண்டபுரம் செப்பேடு: 1

வன்னியர் வீரம் பற்றி அறிவிக்கும் செப்பேடு ஒன்று தருமபுரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டம், அஞ்செட்டிக்கு அருகில் உள்ள சித்தாண்டபுரம் என்னும் ஊரின் நாட்டுக் கவுண்டர் ஏகாம்பரக் கவுண்டர் என்பாரிடம் இருந்ததைக் கிருஷ்ணமூர்த்தி கண்டறிந்துள்ளார்.[145] இச்செப் பேட்டின் நகல் அதே மாவட்டத்திலுள்ள மலையூர் ஏகாம்பரக்கவுண்டர் என்பாரிடம் இருப்பதாகவும்; மேற்காணும் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் ஆவார் என்றும் தம் கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இச்செப் பேட்டின் ஓலை நகல் பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் நஞ்சப்பன் என்பாரிடம் உள்ளது என்று மாணிக்கம் என்பார் தம்மிடம் கூறியதாகவும் தெரிவித்திருக்கிறார்.

சிறுதலைப் பூண்டியைச் சார்ந்த உலகளந்த கவுண்டனும், ஏகாம்பரக் கவுண்டனும் மேற்குத்திசை நோக்கிப் பிழைக்க வந்தார்கள். வழியில், சிக்கிரிபட்டி கணவாயில் நூறு வேடர்கள் அவர்களைத் தாக்கினார்கள். அவர்களில் நால்வரைக் கொன்றுவிட மற்றவர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். பிறகு ஆலம்பாடி போய்ச் சேர்ந்தார்கள். அங்கு வாழ்ந்து கொண்டிருக் கையில் அப்பகுதியில் குறுநில மன்னனாக ஆட்சி செய்து கொண்டிருந்த இறுப்பாளி நாயக்கனுடன் நட்பு கொண்டார்கள்.

இறுப்பாளி நாயக்கனுக்குப் பெண்ணாகரத்தைச் சேர்ந்த கோடா கவுண்டன், பாடி மார்ரியண்ண கவுண்டன் ஆகியோர்

பகைவர்கள். இறுப்பாளி ஊரில் இல்லா சமயத்தில் இறுப்பாளி நாயக்கன் நாட்டில் இருந்த முத்தூரு மலைச் சந்தில் அவர்கள் போருக்கு வந்தார்கள். இதனையறிந்த ஏகாம்பர கவுண்டன் எதிரிகளோடு போரிட்டு அவர்களைச் சேர்ந்த பன்னிருவரைக் கொன்றுவிட்டார். மற்றவர் புறமுதுகிட்டோடிவிட்டனர். தமக்கு வெற்றி தேடித் தந்த ஏகாம்பரக் கவுண்டனுக்கு இறுப்பாளி நாயக்கன் சாதி நாட்டாண்மை வழங்கி கௌரவித்தான் என்ற செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.

## உடையார் பாளையம் ஜமீன் செப்பேடுகள்: 6

உடையார் பாளையம் உடையார்கள் காலத்தில் வெளியிடப்பெற்ற சில செப்புப் பட்டயங்கள் தெரிய வந்துள்ளன. ஒரு செப்புப்பட்டயம்[146] கி.பி. 1679-ல் தெலுங்கு மொழியில் எழுதப் பெற்றிருக்கிறது. இது கச்சிக் கல்யாண ரங்கப்ப காலக்கதோள உடையார், திருப்பூப்பனேந்தல் அருணாஜடேஸ்வரர் கோயிலுக்கு அமுத்தராங்கோட்டை என்னும் ஊரை, சில கட்டளைகளையும் உச்சிகால பூசையையும் நடத்துவதற்காகக் கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

மற்றொரு செப்புப்பட்டயம்[147] முத்து விஜயரங்கப்ப காலக்க தோள உடையார் காலத்தில் அதாவது கி.பி. 1784-ல் எழுதப் பெற்றிருக்கிறது. சிதம்பரம் சபாநாயர் கோயிலில் நாள்தோறும் உச்சிக்காலப் பூசை செய்வதற்காகச் செந்தொரை என்னும் ஊரின் ஒரு பகுதியை உடையார் கொடையளித்தது இப்பட்டயத்தின் மூலம் புலனாகிறது.

மேற்காணும் இரு செப்புப்பட்டயங்களும் உடையாரின் ஆட்சிப் பகுதி உத்தர காவேரிக்கும் ஸ்வேத நதிக்கும் (வெள்ளாறு) இடைப்பட்ட பகுதி என்று கூறுகின்றன.

முத்து விஜயரங்கப்ப காலக்கதோளர் உடையாரே, பாளையம் சீமை, பாலார்மாகாணம், காரைக்குறிச்சி என்னும் ஊரைச் சேர்ந்த நாற்பது காணி நஞ்சை, புஞ்சை நிலங்களைக் காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவில் பூசை நைவேத்தியத் துக்காகக் கொடை வழங்கிய செய்தி மற்றொரு செப்பேட்டில்[148] எழுதப் பட்டிருக்கிறது. இப்பட்டயம் கி.பி. 1784ல் வரையப் பட்டிருக்கிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிபதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு, சென்னை அரும்பொருட்காட்சியகத்திலிருக்கும்

மற்றொரு செப்பேட்டில்[149] இரண்டு செய்திகள் எழுதப் பட்டுள்ளன. முதலாம் செய்தி ஆயிபாளையம் சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு இரு காளைகளை நல்லப்ப காலாட்கதோழர் ஏஜண்ட் முத்து வைத்யநாத பிள்ளை கொடையாக வழங்கியதையும்; இரண்டாம் செய்தி அதே கோயிலுக்கு, வடுகநாதபிள்ளை என்பார் விளக்கு எரிப்பதற்காக ஒரு பசுவைத் தானமாக வழங்கியதையும் தெரிவிக்கின்றன.

'காலக்க' என்ற சொல் இச்செப்பேட்டில்தான் சரியாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் 'காலாட்க' என்று காணப்படுகிறது. 'காலாட்கள்' என்ற சொல்லின் சுருக்கமாக இருக்கும் போன்று தெரிகிறது. 'காலாட்களின் தோழன்' என்பதைத்தான் 'காலக்க தோழன்' என்று அழைத்துக் கொண்டனர் போலும். மிகுந்த அளவில் போர்வீரர்களைக் கொண்ட காலாட்படையை உடையர் பாளையம் ஜமீன்தாரர்கள் பெற்றிருந்திருப்பார்கள். 'காலக்க தோழன்' என்னும் சொல்லுக்கு ஒரு நூலில் 'காலனின்-எமனின் தோழன்' என்று பொருள் என்று கூறி 'பகைவர்களுக்கு எமன்போன்று அச்சத்தைத் தருபவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.[150]

சக ஆண்டு 1726, கலி ஆண்டு 4905 (கி.பி.1804)ல் எழுதப்பெற்று குருநமசிவாய மடத்தின் பாதுகாப்பில் உள்ள மற்றொரு செப்பேட்டின் மூலம்[151] ரங்கப்ப உடையார், வன்னியூர் மற்றும் விச்சியூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 15 காணி நிலத்தை அம்மடத்தின் பூசைப் பணிகளுக்காகக் கொடையாக அளித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது.

அதே மடத்தில் உள்ள மற்றொரு செப்பேட்டின் மூலம்[152] அம்மன்னரே சகம் 1728, கலி 4907 இதற்குச் சரியான கி.பி. 1806ல் தம் பாளையத்தின் மொத்த வருவாயில் பதினாறில் ஒரு பங்கு ஆண்டுதோறும் இம்மடத்துக்கு வழங்கப்படும் என்று எழுதித் தந்துள்ளார் என்பது புலனாகிறது.

## மதுரைச் செப்பேடு: 1

மதுரை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டு சென்னை அருங்பொருட்காட்சியகத்தில் பாதுகாக்கப்பெறும் ஒரு செப்புப்பட்டயம்[153] மதுரையை ஆட்சி புரிந்த கான்சாகிப் காலத்தில் எழுதப்பெற்றிருக்கிறது. இது எழுதப்பெற்ற காலம் கி.பி. 1760.

மதுரைக் கோட்டை வடக்குக் கோபுரத்துக்கு அருகிலுள்ள கிழக்கு மாசி வீதியில் மறவன் மண்டபத்துக்கும் பள்ளி வாசலுக்கும் இடையில் இருந்த வெற்றிடத்தில் நாச்சியான் படையாட்சி எடுப்பித்த தருமர் கோயிலுக்கு நிதிவசதி பெறுவது சம்பந்தமான வழிமுறைகளைப் படையாட்சி சாதியார் வகுத்ததை இப்பட்டயம் குறிப்பிடுகிறது.

## சிவகாசிச் செப்பேடு: 1

கி.பி. 1753 வாக்கில் எழுதப்பெற்ற வன்னியர் பற்றிய ஒரு செப்பேடு சிவகாசியிலிருந்து கிடைத்திருக்கிறது. இச்செப் பேட்டை திரு. முனுசாமி நாயுடு என்பார் தம் குடும்பச் சொத்தாக வைத்திருந்தார். இத்தோடு மேலும் மூன்று செப்பேடுகளும் அவரிடம் இருந்தது. அவற்றில் சிவன் படவர், ஆயர் குலத்தவர், தங்கசாமி நாயுடு ஆகியோர் பற்றி பேசப் பட்டுள்ளன.

வன்னியர் பற்றி தெரிவிக்கும் செப்பேட்டில் பரமேகவர னால் உண்டாக்கப் பெற்ற ஐந்து வன்னிய வீரர்கள், தங்களது பிரம்மஉறத்தி தோஷம் நீங்க, காஞ்சிபுரம் சன்னதி மடம் சிவந்தபாதம் ஊருடைய முதலியார் சன்னிதானத்தில் அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து தீட்சை பெற்று திருநீறும் அருள்வாக்கும் பெற்றதால், சிங்களதேசத்தரசனை வென்று, அவன் கன்னிகைகள் ஐந்து பேரையும் மணந்து, வன்னி நாட்டில் வாழ்ந்திருந்த போது, காஞ்சி அரசனுக்குப் பகைவர் குச்சிலி ராசன், சதாதேவசங்குராசன், தாரேர்சிர ராசன், அப்போத்து மீரான் ஆகியோரிடம் போரிட்டு வென்றதற்காக 'வன்னியராயன்' என்ற விருது பெற்றதால், அவர்கள் காஞ்சிபுரம் குருவுக்குக் கொடை வழங்கிய செய்தி குறிக்கப்பட்டிருக்கிறது[154] வன்னியர்களுக்குப் 'பள்ளி', 'படையாட்சி' என்ற பெயர்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

வீர வன்னியர்கள் 'ஐவருக்கும் பார்வதி திருநீறளித்து, திருப்பள்ளித்தாம ஆரம் கொடுத்துத் தரித்த மகிமையால்ப் 'பள்ளி'யென்று, யிந்தப் படைக்கு தலைவனானதால்ப் 'படையாச்சி'யென்று, அப்பரமசிவன் திருவாக்கால் பள்ளி, படையாச்சியென்று நாமகரணஞ் செய்து அளைக்க' என்ற விளக்கத்தைச் செப்பேடு தந்துள்ளது.

## வடகால் பாளையக்காரர் செப்பேடு: 4

சீர்காழிச் சீமை பாளையக்காரர் அழகப்ப இராவுத்த மிண்ட நயினார் பேரனும், நல்லப்ப இராவுத்தமிண்ட நயினார் மகனும் ஆன அழகிய சிதம்பரம் இராவுத்தமிண்ட நயினார், கி.பி. 1701-ல் மராத்திய மன்னன் இரண்டாம் சகாசி ஆட்சிக்காலத்தில், தமக்குச் சொந்தமான வரிசைப் பத்துக் கிராமத்தில், பன்னிரண்டு அந்தணர்களுக்கு நிலக் கொடையளித்து எழுதப்பட்டது இச்செப்பேடு.[155] இது வடகால்துறை திரு. வி.எஸ். செல்வம் இராவுத்தமிண்ட நயினாரிடம் குடும்பச் சொத்தாக இருந்து வந்தது. அவர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு இதனைக் கொடையாக மனமுவந்து அளித்துள்ளதால் அப்பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறையில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

மற்றொரு பட்டயம் கி.பி.1763-ல் எழுதப்பெற்றிருக்கிறது.[156] தஞ்சை மராத்திய மன்னன் பிரதாபசிங் ஆட்சி செய்து வருகையில், ராகுசாயபு முகாசில் ஸ்ரீமுத்துகுமாரசுவாமித் தம்பிரான் மத்திஷத்தில் சாதாதுகான் பருக்கி செமேயிதார் குத்தகையில், பாளையகாரர் நல்லப்ப ராவுத்தமிண்ட நயினார் பண்டாரத்தார் காரியத்துக்கு கர்த்தரான அருணாசலம் பிள்ளை தென்திருமுல்லை வாயில் முல்லை வனனாத ஈசுரர், அணிகொண்டகோதை அம்மன் ஆகியோருக்கு பிரதோஷக் கட்டளை, சுக்கிரவாரகட்டளை ஆகியன செய்வதற்கு மகிமை தர்மசாதனப் பட்டயம் எழுதித் தந்ததை இது கூறுகிறது. இப்பட்டயமும் பின்வரும் மேலும் இரு பட்டயங்களும் தருமபுர ஆதினத்தின் பாதுகாப்பில் இருந்து வருகின்றன.

கொள்ளிடங் காவேரி மத்யஸ்தலமாகிய தென் திருமுல்லை வாயல் முல்லை வனனாத உடையதம்பிரானார் நித்ய அர்ச்சனை, அபிஷேக நெய்வேதினங்களுக்குச் சோழ காவலன், ராயர் மெச்சிய ராவுத்த மிண்டன், ஏகோசிராச மெச்சிடுந் தன்மையில் கொலுவீற்றிருப்பவர், கன விருது பெற்று அக்கினிப் பரியேறிய நல்லப்ப ராவுத்த மிண்ட நயினார் பூமிதானம் அளித்ததற்கு எழுதித் தந்த தாம்பிர சாதனப் பட்டயம் மற்றொரு பட்டயமாகும். இப்பட்டயமும் கி.பி. 1763-ல் எழுதப்பட்டது.[157]

தஞ்சையை ஆண்ட துளசி மகாராசா முல்லை வனனாத சுவாமி பூசைக்கு, முத்துகுமாரசுவாமி தம்பிரானார்

அதிகாரத்தில், பெரிய வகுப்பு முத்துகுமார ராவுத்தமிண்ட நயினார் நாளில் திருமுல்லைவாயில் பற்றில் நஞ்சை நிலம் கொடையாக அளித்த செயதியை மற்றொரு செப்புப் பட்டயம் விவரிக்கிறது.[158] இரண்டு காலகட்டங்களில் இரு திறத்தார் அளித்த கொடைகள் ஒரே செப்புப்பட்டயத்தில் எழுதப் பெற்றிருக்கிறது. முதல் செய்தி கி.பி.1767லும், இரண்டாம் செய்தி கி.பி.1770லும் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

## மல்லிகுந்தம் பட்டயம்: 1

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம், மேச்சேரி ஒன்றியம் மல்லிருந்தம் என்னும் சிற்றூரில் இராம கண்டன் என்பாரிடம் இப்பட்டயம்[159] உளளது. இபபட்டயத்தின் இறுதியில் 63-64ஆம் வரிகளில் உடையார் பாளையம் பண்டாரத்தார் திருமுகம் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் இது உடையார் பாளையம் ஜமீன்தாரரால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். பட்டயத்தைப் பதிப்பித்த மேச்சேரி தண்டபாணி, பட்டயத்தில் காணப்பெறும் சக ஆண்டு, சக ஆண்டாக இருக்க முடியா-தென்று கூறி கலியாண்டாக இருக்கலாம் என்று கருத்து தெரிவித்திருப்பதோடு, பட்டயத்தில் கூறப்பட்டுள்ள சர்வதாரி ஆண்டு கி.பி.1708-க்குச் சரியாக உள்ளதால் அந்த ஆண்டில் இசசெப்புபபட்டயம் வெளியிடப் பட்டிருக்கலாம் என்று முடிவு செய்துள்ளார். அவரது முடிவு சரியான முடிவாகப்படுகிறது.

காஞ்சிபுரத்து வலங்கை இடங்கைச் சமூகத்தாருக்குள் காமாட்சியம்ம்னுக்கு இரதம் செய்து ஓட்டியபோது ஏற்பட்ட சச்சரவு பற்றி இப்பட்டயம் தெரிவிக்கிறது. இறுதியில் இடங்கையர் வெற்றி பெறுகின்றனர். இவ்வெற்றியைத் தேடித்தந்த தங்களஃ சாதிபபிள்ளைக்கு எழுதிக் கொடுத்த பட்டய மாகும் இது. இடங்கைப் பிரிவில் வன்னியரும் கூறப்பட்டுள்ளனர். 'காமாடசியம்மனுக்கு இரதம் உண்டுப பண்ணியவர் களாகக் காஞ்சிபுரத்திலிருந்த பெரிய சோழனார், சின்ன நல்ல பண்டாரத்தார், உடையார் பாளையம், பிச்சிவரம் பண்டாரத் தார், அவர்களைச் சேர்ந்த சமூகத்தார்' ஆகியோர் குறிக்கப் படுகின்றனர். மேலே கூறபபட்டிருப்பவர்கள் அனைவரும் அக்கினிக் குதிரை, வெட்டுப்பாவாடை, வெண்சாமரம பெற்றவர்கள் என்று மெய்க்கீர்த்திப் பகுதியில் பேசப்படுவதா. அவர்கள் வன்னியர் என்பது விளங்கும்.

இப்பட்டயத்தின் முன்பக்கத்தின் தலைப்பிலும் பின் பக்கத்தின் தலைப்பிலும் சில கோட்டுருவங்கள் வரையப் பட்டிருக்கின்றன. இவற்றில் பின்பக்கமுள்ள உருவங்கள் மிக முக்கியமானவை. பட்டயத்தைப் பதிப்பித்த தண்டபாணி அவற்றை "ஆண் கழுதை ஒன்றின்மீது மனிதன் ஒருவன் அமர்ந்து இருப்பது போலவும், அதன் முன்னும் பின்னும் இரண்டிரண்டு மனிதர்கள் நின்று கொண்டிருப்பது போலவும், ஆக ஐவர் கரங்களிலும் கேடயங்களும், போர்க்கருவிகளும் தாங்கியபடி நின்று கொண்டிருப்பது போலவும் படங்கள் வரையப்பட்டுள்ளன" என்று எழுதியுள்ளார்.[160]

மேற்கூறப்பெற்ற பதிப்பாளர் வன்னியர் புராணத்தைப் பற்றி கேள்விப் படாதவர்போலும். வன்னியர் அக்னிக் குதிரையேறியவர் என்பதையும்; அவர்களில் மொததம் ஐவர் முதலில் தோன்றியவர் என்பதையும்தான் மேற்கூறப் பெற்ற படங்கள் சித்திரிக்கின்றன. குதிரையைக் கழுதை என்று தவறுதலாகக் கொண்டுவிட்டார் பதிப்பாளர்.

## யாழ்ப்பாணம், பரராசசேகரன் பட்டயம்: 1

யாழ்ப்பாணம் தொல்லியல் கழகத்தலைவர் கலாநிதி பத்மநாபன் இச்செப்புப் பட்டயத்தைப் படித்தளித்துள்ளார். இதன் வாசகம் தேனோலையில் தரப்பட்டுள்ளது.[161]

யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த பரராசசேகர மகாராசா சிதம்பரம் வந்து, சிதம்பரேசரைத் தரிசனம் பண்ணிவிட்டு, சபாபதிக்குப் பொன்னாபரணங்களைக் காணிக்கை ஆக்கி விட்டு, சுவாமிக்கு நித்திய கட்டளைகள் ஏற்படுத்தி நடக்கும்படி செய்ததோடு, இராசாக்கள் தம்பிரான் வீதி ஒன்றை அமைப்பதற்கும், நந்தவனம் ஏற்படுத்துவதற்கும் கொத்தங் குடியில் பாதி ஊரையும், யாட்பாணத்தில் தமது இராச்சியத்தி லடங்கிய அச்சுவேலி, புத்தூர், அளவெட்டி ஆகிய மூன்று ஊர்களையும் கொடையளித்துள்ளார்.

தாம் ஏற்படுத்திய தருமங்களை நிர்வகிப்பதற்காக "இராசாவாசலுக்கு மந்திரிமாராகவும், இராசவங்கிஷமாகவும் இருக்கிறவர்கள் தில்லியூர் சேனாபதியார், சிங்கையூர்ப் படை ஆண்டவர், தில்லியூர் குலத்துங்கர், பரநிருப சிங்கள குல நிருவாங்கப் படையாராச்சி யவர்கள் வங்கிஷத்திலே நாலுபேரும் சம்மதிச்சு தங்களினத்துக் குள்ளே ஒருத்தரைக் காவி

வேட்டித் தம்பிரானாராக வைத்து "இராசாக்கள் தம்பிரானார் திருச்சிற்றம்பலம்" என்றவருக்கு பட்டமுங் கட்டி வைத்து உள்ளார் என்ற செய்தியையும் பட்டயம் தெரிவிக்கிறது.

படையாட்சியாரில் ஒருவருக்குத் தம்பிரான் பட்டம் கட்டி, அளித்தத் தருமங்களை நிருவகிக்கச் செய்த மன்னன் பரராசசேகரனும் வன்னியர் இனத்தைச் சேர்ந்தவரோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

## தென்காசி வட்டம் அகோர சிவந்தபாதமுருடைய ஆதீனப் பட்டயம்: 1

இப்பட்டயம்[162] சாலிவாகன சகாப்தம் 1382ல் அதாவது கி.பி. 1460ல் எழுதப் பெற்றிருக்கிறது. அக்கினி கோத்திறத்தான் வன்னிய வரகுணபாண்டியன், தாம்பிரபரணி ஆற்றுக்கு வடக்கி லிருந்த பழைய ஆழ்வார் கோயிலுக்கும், ஆழ்வார் குறிச்சி ஆழ்வார் கோயிலுக்கும் பூசை முதலியவற்றுக்கு நிலக்கொடை அளித்ததையும், காஞ்சிபுரம் அகோர சிவந்தபாதமுருடைய தேசிகரவர்களைத் தரிசனம் செய்து திருநீறுபெற்று, அவருக்குச் சில காணிக்கைகள் வழங்கியதையும் இச்செப்பேடு கூறுகிறது.

## வில்லவனல்லூர் வன்னியர் மடாலயப் பட்டயம்: 1

இச்செப்புப்பட்டயம் புதுவையையடுத்த வில்லவ நல்லூரில் உள்ள அக்கினி வம்ச க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலயத்தில் இருப்பதாக உணரமுடிகிறது. இதனை 'வன்னி குலாதிக்கம்' என்னும் நூலில் க.துரைசாமி நாயகர் பதிப்பித்திருக்கிறார்[163]

சக ஆண்டு 1563 (கி.பி.1641), ஆங்கிரச ஆண்டு மல்லி கார்ச்சுன தேவ மஹாராயர் ஆட்சி செய்து கொண்டிருக் கையில், "தொண்டைவளநாட்டுக் கழகான வில்லவனல்லூரிலே அந்தந்த ஜாதிக்கு மடாலயங்கள் உண்டாகின்றன, நமக்கு சிவாலய பூசை மாத்திரமிருக்கின்றது. தென்தேசத்தில் நமது வம்ஸ பண்ணாடர் தங்கள் பேரும் பிரதாபமும் உண்டாக வேண்டுமென்று மடங்கள் கட்டியிருக்கிறார்கள். இராயரை போய் கண்டு மடங்கட்ட உத்திரவு பெற்று வருவோமென்று திருவக்கரை வல்லவ நாட்டு மழவராய பண்டாரத்தார், கருத்த நாயனார் , பண்டாரத்தார், சின்னகுமார நாயனார் பண்டாரத்தார், சிதம்பரம் மழவராய பண்டாரத்தார்,

கச்சிராயர் பெரியண்ண நாயனார், சிற்றம்பல நாயனார், தாண்டவநயினார், சடையப்ப நாயகார், அழகு சிங்க நாயனார், மெய்யோக நாயனார் பண்டாரத்தார் இவர்களும்; கண்டன்மார், தந்திரியார், படையாக்ஷியார் என்னும் பல பட்டப் பெயர் பெற்ற உறவின் முறையாரும்" இராஜவன்னிய ராஜஸ்ரீ மல்லிகார்ச்சுன தேவ மஹாராயரிடம் வேண்டி வில்லவனல்லூரில் வன்னியருக்கென ஒரு தனிமடம் கட்டிக்கொள்வதற்கு அனுமதி பெற்று வந்ததையும் மடம் கட்டும் பொருட்டு செலவுக்கு ஒவ்வொருவரும் எவ்வளவு பொருள் தரவேண்டும் என்று முடிவு செய்யப் பெற்றதையும் விளக்குகிறது இப்பட்டயம்.

உபநய முகூர்த்தம் (பூணூல் அணியும் விழா) நடைபெறும் போது பணம் ஒன்றும், சுயவரம் திருமணம் நடைபெறும்போது பொன் பத்தும், கத்தி நாட்டிக் கலியாணம் செய்யும்போது பணம் பத்தும், மற்ற முகூர்த்தங்கள் நடைபெறுகையில் மாப்பிள்ளை வீட்டார் பணம் ஒன்றும் பெண் வீட்டார் பணம் ஒன்றும் தரப்படுதல் வேண்டும் என்று நிர்ணயம் செய்யப் பெற்றிருப்பது அக்காலத் திருமண வழக்கங்களையும் மற்ற நடைமுறைகளையும் புலப்படுத்துவதாக உள்ளது.

மேலும் 'மன்னவேடு' கிராமத்தார் அரிவாளுக்கு ஆறுபடி தானியமும், களைவெட்டுக்குப் பதக்கு தானியமும், ஏருக்கு முக்குறுணி தானியமும் கொடுக்கப்படுதல் வேண்டும் என்று கூறபெற்றிருப்பதிலிருந்து கி.பி. 17ஆம் நூற்றாண்டிலேயே வன்னியர்களுக்கென அளிக்கப்பெற்ற 'மன்னவேடு' கிராமங்கள் இருந்தனவென்பது உறுதியாகிறது.

## வைத்திஸ்வரன் கோயில் வன்னியர் மடாலயப் பட்டயம்: 1

இப்பட்டயம் பற்றிய விபரமும் 'வன்னிகுலாதிக்கம் என்னம் நூலில் காணமுடிகிறது.' இப்பட்டயம் அளகாபுரம் செப்பேட்டின்[164] நகலாக உள்ளது. ஆயினும் அளகாபுரம் செப்பேட்டின் தொடக்கத்தில் உள்ள 'ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை' என்னும் வாக்கியமும், ஆனை முகத்தான் காப்புச் செய்யுளும், புள்ளிருக்குவேளூர் வன்னியர் மடம் பொறுப்பு அளிக்கப் பெற்ற பண்டாராங்களின் பெயர்ப் பட்டியல் ஆகியன இப்பட்டயத்தில் காணப்பெறவில்லை.

அல்லது மடத்துப் பட்டயத்தைப் பதிப்பித்தவர் அப்பகுதி தேவையற்றது என்று விட்டு விட்டாரோ! தெரியவில்லை.

### காஞ்சிபுரம் முத்துகச்சேஸ்வர குருசாமியாரவர்கள் மடத்துப் பட்டயம் : 1

காஞ்சிபுரத்திலுள்ள அனைவரத சவுந்திரியப் பட்ட முத்துகச்சேஸ்வர குருசாமியாரவர்கள் மடத்துக்கு, காஞ்சி-புரத்துக்குக் கிழக்கு அங்கிக்கோட்டத்துக்கு மேற்கு தேவப்பிரயாகைக்குத் தெற்கு, இராமநாபுரத்துக்கு வடக்கு உட்பட்ட இடங்களில் வாழும் வன்னியர் தங்கள் கலியாண முதலாய சுப காரியங்களுக்குக் கட்டணம் செலுத்துதல் வேண்டும் என்ற விபரத்தை இச்செப்பேடு[165] விவரிக்கிறது.

### விருத்தாசலம் ஈஸ்வரர் கோயில் கட்டளை பெரிய மடத்துப் பட்டயம் : 1

விருத்தாசல ஈசுவரர்க்கு அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராய நயினார் பண்டாரத்தாரவர்கள் அவடுழக் கட்டளை ஏற்படுத்தி அதற்குண்டாகும் செலவுகளுக்கு அரியலூர் குசந்தப்பேட்டை கடைகளிலிருந்தும் ஆடுதுறை துறையி லிருந்தும் கிடைக்கும் வருவாயைக் கொடையாக வழங்கியதை இப்பட்டயம்[166] தெரிவிக்கிறது. இதில் குறிப்பிடப்படும் மன்னர் அரியலூர் ஜமீன்தார். இவர் கி.பி. 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்துள்ளார் என்பது இவர் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள மற்ற செப்பேடுகளால் அறிய முடிகிறது.

### அரியலூர் மழவராயர் பட்டயங்கள்: 7

உடையார் பாளையம் வரதராசப் பெருமாள் கோயில் பெருமாளய்யங்காரிடம் முதல் பட்டயம்[167] உள்ளதாகக் காணப் படுகிறது. இப்பட்டயம் சக ஆண்டு 1685, கலி ஆண்டு 4864ல் (4894 ஆக இருக்க முடியாது. தவறாகப் படிக்கப் பெற்றுள்ளது.) எழுதப்பெற்றிருக்கிறது. இதற்குச் சரியானது கி.பி.1763ஆம் ஆண்டாகும்.

உடையார் பாளையம் ஸ்ரீ வரதராசப்பெருமாள் சன்னிதி உச்சிக்காலக் கட்டளைக்கு முத்து வெங்கிடப்ப மழவராயர் பெயரன், விஜய ஒப்பிலாத மழவராயர் புத்ரர், அரசு நிலையிட்ட விசைய ஒப்பிலா மழவராயர் தம் ஆட்சிப்

பகுதியிலிருந்து சில நிலங்களைத் தானமாக வழங்கியது இரண்டாம் பட்டயத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

அரியலூர் சுப்பிரமணிய கோயில் பண்டாரம் மடத்தில் உள்ள ஒரு செப்பேடு[168] அரசு நிலையிட்ட மழவராயர் ரங்கப்ப மழவராயர் காலத்தில் அதாவது சக ஆண்டு 1625க்குச் சரியாக கி.பி.1703ல் சிதம்பரம் நடராசர் பூசைக்காகச் சந்தை வருமானத்தையும், பொருட்களின் மீதான வரி வசூல் வருமானத்தையும் கொடையாகத் தந்ததைத் தெரிவிக்கிறது.

அரியலூர் கங்காதரேசுவரர் கோவிலில் பூசை செய்யும் சுப்பராய குருக்கள் வசம் உள்ள செப்பேட்டில்[169] சக ஆண்டு 1674ல் (அதாவது கி.பி. 1752ல்) கங்காதரேஸ்வர ஸ்வாமிக்கும் சுவர்ண மௌக்திகாம்பாள் அம்மனுக்கும் வெங்கப்ப மழவ ராயர் தாயார் துங்க முத்தாயி உக்கலூர் கிராமத்தில் 15குழி நிலமும் வயல்பாடு கிராமத்தில் 20 குழி புஞ்சை நிலமும் தானமாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

அரியலூர் கோதண்டராமசுவாமி கோவிலில் உள்ள ஒரு செப்பேட்டில்[170] சக ஆண்டு 1651ல் (கி.பி.1729ல்) அரசு நிலையிட்ட ரங்க மழவராயர் காலத்தில் கோதண்டராமசுவாமிக்காக ஆயப்பாடி கோபால வம்சத்தார் கொடை வழங்கியது எழுதப்பெற்றிருக்கிறது.

திருச்சி மாவட்டம், திருமழபாடி வைத்தியநாத சுவாமி எனப்படும் சிவன் கோயிலைச் சார்ந்த பட்டயம்[175] திருமழபாடி உடையநாயனார் பொன்னார் மேனியாருக்குக் காலைச் சந்தி, அர்த்தசாம பூசை ஆகியவற்றுக்காக நிலக்கொடை வழங்கி விசைய ஒப்பிலாத மழவராயர் சாசனப்பட்டயம் எழுதித் தந்ததைத் தெரிவிக்கிறது. இப்பட்டயம் 1740ல் எழுதப் பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், திருமானூர் தர்மகர்த்தா திரு.டி. சம்பந்தம்பிள்ளை என்பவரிடமிருந்து ஒரு செப்புப்பட்டயம் பெறப்பட்டதாக, அச்செப்புப் பட்டயம் வாசகத்தைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 'கல்வெட்டு'என்னும் இதழில் வெளியிட்டுள்ள அ.அப்துல்மஜீத் குறிப்பிட்டுள்ளார்.[176] இப்பட்டயம் அரியலூர்ச் சமஸ்தானம் ஸ்ரீமழவராயதுரையவர்கள் இராச்சிய பரிபாலனம் செய்த சக ஆண்டு 1712, கலி ஆண்டு 4891ல் (சரியான கி.பி.1790ல்) எழுதப்பெற்று உள்ளது. அரியலூர் விருதுமத்தர் வலியுடைய

துரை சிகாமணியாகிய ஸ்ரீவிசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீகுமார ஒப்பிலாத மழவராயர், திருமானல்லூர் தலத்திலே விளங்கும் அகிலாண்ட கோடி பிருமாண்ட நாயகராய், அரி, அயன் தேடுதற்கரிய பொருளாய், மான், மழு, சூல, கபாலம், காள கண்டம் ஆகியவற்றை ஏந்திய, நான்கு கரங்களையும், முக்கண்ணையும் உடைய ஸ்ரீகாமாட்சியம்மன் சமேதரராய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு அபிஷேக, நெய்வேதனம், திருவிளக்கு, திருமாலை, திருப்பள்ளிக்கு, தம் இராச்சியத்தில் தமக்குச் செலுத்த வேண்டிய வரியில் ஒரு பகுதியை அனுபவித்துக்கொள்ள எழுதித் தரப்பட்ட சாசனமாக விளங்குகிறது.

## மன்னவேடு கொடை பற்றிய செப்பேடுகள்: 6

"மக்கென்ஸியின் உதவியாளர்கள் தயாரித்துள்ள பிரதிகளிலே பின்வரும் ஆறு சாசனங்களும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து காணப்படுகின்றன. எனினும் அவை எந்த இடத்திலிருந்து கிடைத்த சாசனங்களின் பிரதிகள் என்பது குறிக்கப்பெறவில்லை. ஒவ்வொன்றின் தலைப்பிலும் வலது மூலையில் 'தாம்பர சாசனப் பிரதி' என்று தெலுங்கில் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றின் மூலப் பிரதிகளான செப்பேடுகள் இப்போது சென்னை (மியூசியம்) பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. கி.பி. 1858 ஆம் ஆண்டு செங்கல்பட்டு ஜில்லா கலெக்டரால் அவை மியூசியத்துக்கு அனுப்பப் பட்டன என்பதைத் தவிர வேறு விவரங்கள் கிடைக்கவில்லை. சென்னை ராஜதானியின் புராதனச் சின்னங்களின் அட்டவணை என்று ஸுவல்துரை எழுதிய நூலிலும், ஜேம்ஸ் பார்ஜஸ், பண்டித எஸ்.எம்.நடேச சாஸ்திரி ஆகியோர் பதிப்பித்த தமிழ், ஸம்ஸ்கிருத சாசனங்கள் என்ற நூலிலும் இவை இடம் பெற்றுள்ளன."[171]

இந்தச் சாசனங்கள் தமிழ் மொழியிலும், கிரந்த எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன. மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றின் பிரதிதான் மற்றவையெனத் தோன்றும். உண்மையில் ஒவ்வொன்றுக்கும் சிறு சிறு வேறுபாடு உள்ளது. ஒவ்வொரு செப்பேட்டின் தலைப்பிலும் 'ராஹேலில்லா' என்று பாரசீக எழுத்தில் பொறிக்கப்பெற்ற முத்திரை காணப்பெறுவதாகவும் ராஹேலில்லா என்ற சொலலுக்குத் தர்மம் என்று பொருள்

என்றும், அதேபோன்று யெக்கோல் அப்பாஜி அல்லது எக்கோடி அப்பாஜி என்று வாசிக்கக் கூடிய முத்திரையும் ஒவ்வொரு பட்டயத்தின் இறுதியிலும் காணப்பெறுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.[172]

காஞ்சி மண்டலத்தில் ஒரு பகுதியில் வீரசங்குடையான் சோழராஜன் என்ற அரசர் அழகய்யர் என்பாருக்கு ஒரு அக்ரஹாரம் அமைத்துத் தந்திருக்கிறார். பின்னர் ரத, கஜ, துரக, பதாதியுடைய ராயர் என்பார் அந்த அக்ரஹாரத்தை அழித்து, குளம் ஏற்படுத்தி மீதமுள்ள பகுதியை நான்கு கூறாக்கி **மன்னவேடாக்கி,** வன்னியர்களுக்குப் பிரித்துத்தந்தார் என்பதை இச்செப்பேடுகள்[173] கூறுகின்றன. இச்செப்பேடுகளில் வன்னியரின் பல்வகைக் கோத்திரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

வன்னியர்களுக்குக் கொடுக்கப்பட்ட 'மன்னவேடு' ஊர்களை கி.பி.19ஆம் நூற்றாண்டில் அந்தணர்களும் வேளாளர்களும் தங்களுக்கு வழங்கப் பெற்றிருந்த முறையே அக்கிரஹாரத்தோடும், நத்தத்தோடும் ஆட்சியாளரின் ஆதரவோடு சேர்த்துக் கொண்டார்கள். அம்மன்னவேடு ஊர்களைத் திரும்பவும் வன்னியர்களுக்கே ஒப்படைக்க வேண்டுமென்று அப்பொழுதிருந்த ஆங்கிலேய அரசுக்கு, செங்கற்பட்டு ஜில்லா பாரயக்காரி ஏஜெண்டு என்று அழைக்கப்பெற்ற அத்திப்பாக்கம் அ.வெங்கடாசல நாயக்கர் எழுதிய கடிதங்கள் 1883ஆம் ஆண்டில் வெளிவந்த 'தத்துவவிவேசினி' என்னும் பருவ இதழில் வெளியிடப்பட்டிருக்கின்றன.[174]

## நல்லூர் நாட்டார் பட்டயம்: 1

செங்கற்பட்டு மாவட்டம், சதுரங்கப்பட்டினத்துக்கு அருகில் உள்ள நல்லூர் நாட்டாரிடம் இருந்த பட்டயத்தின் நகலைச் சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கு. இராசேந்திரன் வழிகாட்டுதல்படி சுப்பிரமணியன் என்னும் அத்துறை முதுகலை பயிலும் மாணவர் இந்நூல் ஆசிரியரிடம் கொண்டு வந்து கொடுத்து, அதில் என்ன கூறியிருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

பட்டயத்தைப் படித்ததில, இது காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மனுக்குத் தேர் செய்து வீதியுலாவுக்கு இழுத்து வருகையில் வலங்கை சமூகததாருக்கும் இடங்கைச் சமூகத்தாருக்கும் ஏற்பட்ட தகராறையும், வலங்கையார் மாந்திரீகத்தால் நிறுத்தி

விட்ட தேரை, இடங்கையார் மலையாள நாட்டிலிருந்து மாந்திரீகன் ஒருவனை வரவழைத்து, அவன் தன் மகனைப் பலிகொடுத்துத் தேரைத் தன் மூக்கில் கட்டி இழுத்து நான்கு வீதி உலா வந்து நிலையில் நிறுத்தினான் என்பதையும், அவ்வாறு அம்மாந்திரீகன் தன் மகனையே தியாகம் செய்ததற்கு கைம்மாறாக இடங்கைச் சமூகத்தார்க்குத் தலைமையாக இருந்த வன்னியரும் மற்றும் கம்மாளர், வைசியர், தேவேந்திரப் பள்ளர் ஆகியோரும் அவனைத் தங்கள் சாதிப் பிள்ளையாகக் கொண்டு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட அளவு ஆட்டுக்கிடாய் மற்றும் பொருள் வழங்குவதாக எழுதிக் கொடுத்த தர்மசாதனமாக இருப்பதை அறியமுடிகிறது.

முன்னர் குறிப்பிட்டுள்ள மல்லிகுந்தம் பட்டயமும் இச்செய்தியைத்தான் குறிக்கிறது. அப்பட்டயத்தில் மாந்திரீகன், தன் மனைவியைப் பலிகொடுத்ததாகக் காணப்பெறுகிறது. ஆனால் இந்த நல்லூர்ப் பட்டயத்தில் மாந்திரீகன் தன் மகனைப் பலிகொடுத்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செய்தியைத் தெரிவிக்கும் தர்ஸ்ட்டன், தம் நூலில் தேரை இழுப்பதற்காக இடங்கையார் மாந்திரீகன், தலைப் பிரசவத்துக்குத் தயாராக இருந்த தன் மனைவியைப் பலிகொடுத்ததாக எழுதியிருக்கிறார். இதற்கு ஆதாரமாக 1906ஆம் ஆண்டில் 'மெயில்' என்னும் ஆங்கில நாளிதழில் வெளிவந்த ஒரு கட்டுரையைத் தாம் படித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[177]

இடங்கைப் பிரிவினர்களுக்கு உதவ வந்த மாந்தீரீகன் பற்றியும் வெவ்வேறு வகையான செய்திகள் தெரியவருகின்றன. மல்லிகுந்தம் பட்டயம், 'கொச்சி மலையாளத்திலிருக்குர யிடக்கை சிம்ம அனுமந்தனை அழைப்பிச்சு' என்று தெரிவிக்கிறது.

நல்லூர் பட்டயமும் 'கொச்சி மலையாயாளத்திலே யிருக்குற சிம்ம ஒண்டிப்பிலி[178] அனுமந்தனை அழச்சு' என்று கூறுகிறது.

ஆனால் தர்ஸ்டன் தம் நூலில், 'குடகு ராஜாவிடம் தலைமை அமைச்சனாகப் பணியாற்றிய இராமசாமி நாய்க்கன், பள்ளிகள் அவ்வரசனை வேண்டிக்கொண்டதால் அரசனால் அனுப்பிவைக்கப்பட்டான். அவன் தன் முதல் பிரசவ நிறை மாதக் கர்ப்பிணியைப் பலி கொடுத்துத் தேரை ஓடச்செய்தான்' என்று எழுதியிருக்கிறார்.[179]

பஞ்சகம்மாள இனத்தாரால் காஞ்சி காமாட்சியம் மனுக்குத் தேர் செய்து ஓடவிட்டு, அது தடுக்கப்பட்ட நிகழ்ச்சியையும், பின்னர் ஒரு மாந்திரிகளைக் கொண்டு மீண்டும் ஓடச்செய்ததையும் சித்திரிக்கும் இரு செப்புப்பட்டயங்கள் கிடைத்திருக்கின்றன. ஒன்று வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து சென்னை அருங்காட்சியகத் துக்குத் தரப்பெற்றது.[180] மற்றது திருப்பதி கடைத் தெருவிலிருந்து அருங்காட்சியகத்துக்கு வாங்கப்பெற்றது.[181]

முதல் பட்டயத்தில் கம்பளத்தான் மனைவி மங்கம்மாள் தம் மகன் உதவியால் தேரை ஓடச்செய்வதாக வாக்களித்து, காஞ்சிபுரம் வந்து, அவள் மகன் தன் இரண்டாம் மனைவியைப் பலிகொடுத்துத் தேரை ஓடச் செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாம் பட்டயத்தில் மாந்திரீகன் தன் கர்ப்பிணி மகளைப் பலிகொடுத்துத் தேரை ஓடச்செய்ததாகவும், பலி கொடுக்கப்பெற்ற மகள் மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்றாள் என்றும் எழுதப் பெற்றிருக்கிறது.மேற்காணும் இரு பட்டயங் களிலும் குறிக்கப்பட்டுள்ள ஆண்டு மிகப் பழங்காலமாகவும், பட்டயத்தில் காணப்பெறும் எழுத்துக்கள் அண்மைக் காலத்த தாகவும் உள்ளதால் பிற்காலத்தில் எழுதப்பெற்ற பட்டயமாகத் தோன்றுகின்றன என்று குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

ஆதலால் மேற்காணும் நிகழ்ச்சி ஒரு உண்மை நிகழ்ச்சி போன்று தோன்றுகிறது. நரபலி கொடுக்கப்பட்டிருக்கிறது. அது யார் என்பதில் வேறுபாடு காணப்படுகிறது. இடங்கையைச் சேர்ந்த வன்னியர், பஞ்சாளத்தார் ஆகிய இருபிரிவினரும் தங்களுக்குப் பெருமை சேர்த்திட்ட மாந்திரீகனைத் தங்கள் சாதிப் பிள்ளையாகக் கொண்டு ஆண்டு தோறும் நிதி உதவியும் பொருள் உதவியும் செய்து வந்திருக்கின்றனர் என்பதையே மேற்காணும் வன்னியர் செப்பேடுகளும், பஞ்சகம்மாளத்தார் செப்பேடுகளும் புலப்படுத்துகின்றன.

**உயர்நீதிமன்ற பட்டயம்: 1**

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு சம்பந்தமாகக் காண்பிக்கப் பெற்ற இப்பட்டயம்[182] அதைத் திருப்பிக் கோருவார் யாருமில்லாதிருந்த காரணத்தால் தென்வட்ட தொல்லியல் உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளருக்கு அனுப்பப்பெற்று ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்

பெற்றது. பின்பு சென்னை அருங்காட்சியகத்திடம் அது ஒப்படைக்கப்பட்டது.

அரியலூர் ஜமீன்தார் ஸ்ரீவிஜய ஒப்பிலாத மழவராயர் காலத்தில் வழங்கப்பெற்ற பட்டயத்தின்படி, தற்பொழுது ராம பத்ர அய்யா, மீனாக்ஷி அய்யா, ராமலிங்கம்பிள்ளை ஆகியோர் குமாரசுவாமி பண்டாரம் என்பவருக்கு நிலக்கொடை அளித்தது பற்றி இப்பட்டயம் தெரிவிக்கிறது.

## ஆவணச் சான்றுகள்

### தர்ஸ்ட்டன் குறிப்பு

வன்னியர் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து "இந்தியா அல்லது பாரதவர்ஷத்தில் ஆதிமக்கள்" என்னும் கட்டுரையில் டாக்டர் ஒப்பர்ட் என்பார் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார்.

"வன்னியன் என்னும் சொல் பொதுவாக சமஸ்கிருத வஹ்னி அதாவது தீ என்னும் சொல்லிலிருந்து உருவாகியது. மன்னர்கள் தங்கள் கையில் தீச்சக்கரம் அல்லது அக்னேய சக்கரத்தை ஏந்தியிருப்பதால் அக்னிக் கடவுளும் அரசாட்சி செய்தவர் என்று கருதப்படுவார். ஆதலால் வன்னியரும் தாங்கள் அரசபரம்பரையில் வந்தவர்கள் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். வட இந்தியாவிலும் தென்னிந்தியா விலும் இந்த தீக்குலமான அக்னிக்குல அல்லது வஹ்னிகுல மக்கள் வாழ்ந்து வருவது மகத்தான உண்மையாகும்.... தென்னிந்திய வன்னிய சமுதாயம் ஆரியரல்லாத ராஜ் புதர்களின் பிரதிநிதிகளாவார் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய தாகும்".[183]

வடார்க்காடு மாவட்ட மேனுவல் என்னும் நூலில் எச்.ஏ. ஸ்டுவார்ட் என்னும் ஆங்கிலேயர் "வன்னியர் என்னும் பெயர் சம்ஸ்கிருத வஹ்னி (தீ) என்னும் சொல்லிலிருந்து உருவானது என்பது கீழ்க்காணும் புராணக் கதையால் புலனாகிறது என்று எழுதியுள்ளார்.

"வாதாபி, மாஹி என்னும் இரு அரக்கர்கள் பிரம்மனை வேண்டி தங்களுக்கு எந்தவிதப் பொருளாலும் இறப்பு ஏற்படக்கூடாது என்ற வரத்தைப் பெற்றனர். 'தீ' என்னும்

பொருளாலும் தங்களுக்கு இறப்பு ஏற்படக்கூடாது என்று கேட்க மறந்துவிட்டனர். தங்களுக்கு இறப்பு ஏற்படாது என்ற வரத்தைப் பெற்றுவிட்ட கர்வத்தில் வாதாபி வாயுவையும், மாஹி சூரியனையும் விழுங்கிவிட்டனர். அதன் காரணம், நிலவுலகம் அசையாமலும், இருளில் மூழ்கியும் விளங்கவே தேவர்கள் மனதில் அச்சம் ஏற்பட்டது. உடன் அவர்கள் பிரம்மனிடம் முறையிட்டனர். அரக்கர்கள் கூறாது விடுபட்ட 'தீ' பிரமனின் ஞாபகத்துக்கு வரவே, ஜாம்பவ மஹாமுனியை அழைத்து தீயை ஏற்படுத்தி யாகம் செய்ய ஏற்பாடு செய்யும்படி கூறினார். அவ்வாறு யாகம் செய்யவே தீச்சுடரிலிருந்து ஆயுதங்கள் ஏந்திய, குதிரைமீதமர்ந்த போர் வீரர்கள் தோன்றினர். அவர்கள் வாதாபி, மாஹி மீது பன்னிருமுறை போர் தொடுத்து அவர்கள் இருவரையும் அழித்தனர். பின்பு அவர்களது உடலிலிருந்து வாயு மற்றும் சூரியனை வெளியேற்றினர். பின்னர் அவ்வீரர்களின் தலைவனான ருத்ர வன்னிய மஹாராஜன் அரசு பட்டமேற்று ஆட்சிபுரியலானான். அவனுக்கு ஐந்து புதல்வர்கள். இக்கதை தஞ்சை மாவட்டம் வைத்தீசுவரன் கோயிலில் பொறிக்கப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது'' என்று மேலும் தெரிவித்திருக்கிறார்.[184] இக்கதையானது பள்ளி அல்லது பல்லவ மன்னான நரசிம்மவர்மன் வாதாபி நகரத்தை அழித்ததை மறைமுகமாகக் குறிப்பதாக இருக்கலாம் என்றும் அவரே ஊகித்திருக்கிறார்.

எஃப்.ஆர். ஹெமிங்வேயின் குறிப்பிலிருந்து தாம் சேகரித்த செய்தி என்று கீழ்வருவனவற்றை தர்ஸ்டன் தெரிவித்துள்ளார். "சம்பு முனிவரால் தோற்றுவிக்கப்பெற்ற வீரவன்னியரின் வழிவந்தோர் தாங்கள் என்று ஒரு நீண்ட கதையைப் பள்ளிகள் சொல்கின்றனர். வீரவன்னியன் வாதாபி மற்றும் எனதாபி என்ற இரு அரக்கர்களை அழித்தான். பின்னர் அவன் இந்திரனின் மகளை மணந்து ருத்ர, பிரம, கிருஷ்ன, சம்பு, கை என்று ஐந்து புதல்வர்களைப் பெற்றான். அப்புதல்வர்களின் வழிவந்தோர் தற்பொழுது காவேரி பீடபூமியிலுள்ள பாலாற்றுக்கு வடக்கே, பாலாற்றுக்கும் பெண்ணையாற்றுக்கும் இடையில் வாழ்கின்றனர். இக்கதையை அடிப்படையாகக் கொண்டு ஒரு புராணத்தையும் நாடகத்தையும் எழுதி வைத்திருக்கின்றனர். பிராமணர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். எவ்வாறெனில் பிராமணர்கள் தாங்கள் பிறந்து

சில நாட்கள் கழித்தே பூணூல் அணிகின்றனர். ஆனால் வன்னியரோ பிறக்கும் போதே பூணுலோடே பிறப்பதாகக் காரணம் கூறுகின்றனர்"[185]

"தற்பொழுது சிறு விவசாயக் குடியானவர்களாகக் காணப் பெறும் வன்னியர்கள் முற்காலத்தில் தென்னிந்தியாவில் உயர்ந்த நிலையில் இருந்த பழங்குடிகளில் ஒரு பழங்குடியின் வழிவந்தோராக இருந்திருப்பார்கள் என்று கருத காரணம் உள்ளது. மெக்கன்சி கையெழுத்துப் பிரதிகளில் 90ஆம் பக்கத்தில் உள்ள ஒரு குறிப்பு, வன்னியர்கள் அக்னி குலத்தைச் சார்ந்த வர்கள் என்றும், சம்பு முனிவர் வழி வந்தவர் என்றும், அவர் களின் விற்போரினால் பல வெற்றிகளைக் குவித்தனர் என்றும் தெரிவிக்கிறது. அதே கையெழுத்துப் பிரதியில் பக்கம் 427ல் உள்ள குறிப்பு வன்னியர்களில் இரு சிறந்த குறுநிலத் தலைவர்கள் இருந்ததையும், அவர்கள் வழக்கமாக ராயருக்குக் கொடுத்து வந்த திறைப் பொருளைக் கொடுக்க மறுத்ததையும், இராயர் படையால் அவர்களை நெடுங்காலமாக அடக்க முடியவில்லையென்பதையும் கூறுகிறது",[186] என்று நெல்சன் எழுதியிருப்பதைத் தர்ஸ்ட்டன் மேலும் எடுத்துக் காட்டி யுள்ளார்.

மெக்கன்சி கையெழுத்துப் பிரதியில் உள்ள இரு வன்னியக் குறுநில மன்னர்களைப் பற்றியக் குறிப்பு செங்கல்பட்டுக்கருகில் உள்ள திருவிடைச்சுரம் பகுதி மக்களிடையே வழங்கும் மரபுக் கதையாலும், 'தாசி மோகனவல்லி சூக்ஷியாகிய கிருஷ்ண தேவராயன் சேந்தவராயன் சண்டை' என்னும் வன்னியர் வீரமுழக்க நாடகத்தாலும் உறுதிப்படுத்தப் படுகிறது.[187]

மக்களிடையே பேசப்பெற்று வரும் மரபுக் கதை கீழ்வருமாறு.

"விசயநகரவேந்தன் கிருஷ்ணதேவராயன் (கி.பி.1509-1530) ஆட்சி செய்து வருகையில், திருவிடைச்சுரம் பகுதிக்குக் காந்தவராயன் மற்றும் சேந்தவராயன் என்னும் இரு சகோதரர்கள் தலைவர்களாக இருந்தனர். அவர்கள் கிருஷ்ண தேவராயனுக்குத் திறை செலுத்தவேண்டியதைச் செலுத்தாமல் புறக்கணித்தனர். கிருஷ்ணதேவராயனால் அவர்களைப் பணியவைக்க முடியவில்லை. அத் தலைவர்களின் நாட்டிய மகளிருள் ஒருத்தியான குப்பி மூலம் காந்தவராயனுக்கு நஞ்சு கொடுத்து சாகடித்தான் மன்னன். இதனையறிந்த காந்தவ

ராயனின் இளவல் சேந்தவராயன் குப்பியையும் அவ்ளது குழந்தைகளையும் பிடித்து அவ்வூரிலுள்ள குளத்தில் மூழ்கடித்து இறக்கச் செய்தான். அதன் காரணமாக அக்குளம் குப்பிச்சிக் குளம் என்றும், அருகிலுள்ள குன்று குப்பிச்சிக் குன்று என்றும் அந்நாட்டியக்காரியின் பெயராலேயே வழங்கப்பெறுகிறது.[188]

## கிருஷ்ணதேவராயன் காந்தவராயன் சண்டை நாடகம்

இக்கதையை மையக்கருத்தாகக் கொண்டு எம். என். காத்தமுத்து என்பார் ஒரு அருமையான நாடகத்தை நூல் வடிவில் பதிப்பித்துள்ளார். இந்நாடகத்தில் காந்தவராயன் கோட்டை பற்றி விரிவாக விவரித்திருக்கிறார்.[189] "கோட்டையை சுற்றி அகழியிருக்கிறது. இந்த அகழியைக் கணக்கிட்டு பார்த்தால் தெற்கு வடக்கில் சுமார் 1149 அடி நீளமும், கிழக்கு மேற்கில் சுமார் 200யும், இதன் ஆழமோ சுமார் 30அடி இருக்கும் போல் இருக்கிறது. இந்த அகழியோ கோட்டையை சுற்றி நால்புறமும் சூழ்ந்திருக்கிறது. இதற்கப்பால் கோட்டை மதில் இருக்கிறது. அதற்கப்புறம் கோட்டை இருக்கிறது" என்று கூறியிருக்கிறார். இந்த விபரத்தை இவர் மெக்கன்சி குறிப்பிலிருந்து திரட்டி யிருப்பார் போன்று தெரிகிறது.

நாடகத்தில், காந்தவராயன் தனது மந்திரிகளை அழைத்து, வன்னியர்களாகிய தங்களுக்கு ஏற்பட்டிருக்கும்படியான பட்டப்பெயர்களைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டு கீழ்க்காணும் பட்டப்பெயர்களைக் குறிப்பிட்டிருப்பதும் வன்னியர் வரலாறு பற்றி எழுதுவதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

"அரசுப்பள்ளி, அண்ணலங்காரர், அஞ்சாத சிங்கம், இராயர், இராசாளி, இரெட்டியார், இரெளத்திரமிண்டார், உடையார், கங்கண உடையார், கண்டர், கச்சிராயர், காவண்டர், காடவராயர், காசிராயர், காளிங்கராயர், கிடாரங்கார்த்தவர், சமுட்சியர், சம்புராயர், சமர்த்தியார், சரமந்தர், சுவாமி செம்பியன், சேதிராயர், சேரனார், சோழனார், தந்திரியார், துரைகள், தேவர், தொண்டைமான், நயினார், நாயகர், நாட்டார், நாயனார், நீலகங்கரையார், பள்ளிகள், பல்லவராயர், படையாட்சியார், ராயர், பல்லவர், பண்டாரத்தார், பரமேஸ்வரனார், பாளையத்தார், பாண்டியனார், பிள்ளை, பூபதிகள், பூமிக்குடையவர்கள், பொறையார், மழுவர், மழவராயர், மானங்கார்த்தத் தமிழர்,

முதன்மையார், மூப்பனார், வல்லமையுடையார், வர்மா, வணங்காமுடியார், வன்னியர், வாளண்டையார், வல்லவர், வீரமிண்டார் என்பன அப்பட்டப் பெயர்களாகும்.

ஒற்றுமையும் கட்டுப்பாடும் உடையரா இருந்தமையால் சமுட்சியர் என்றும், வீரமிக்கவர் ஆதலால் சமர்த்தியர் என்றும் சமத்தர் என்றும், தலைமைத்தன்மையும் இறைமையுமுடையவர் ஆதலால் சுவாமி என்றும், ஆய்ந்துதேறும் திறமையுடையார் ஆதலால் தந்திரியார் என்றும், மிக்கவர் ஆதலால் துரை என்றும், இறைமையார் ஆதலால் தேவர்கள் என்றும், தொண்டைக் காட்டை அழித்து நாடாகச்செய்தமையால் தொண்டை நாட்டு மன்னர் இவர் ஆதலால் நாயகர் என்றும்; அறச்சாலை, தர்மசத்திரம் செய்தவர் ஆதலால் பள்ளியார் என்றும், வலிவுமிக்கவர் ஆதலால் பல்லபவர் என்றும், படை செலுத்தும் ஆட்சி உடையவர்கள் ஆதலால் படையாச்சியார் என்றும், பல்லவராயர் என்றும்; செல்வக் கருவூலங்கள் அதாவது பொக்கிஷசாலையின் பெயர் பண்டாரம் ஆதலின் செல்வத்திற்கு உரிமையுடையவர் வன்னியர் ஆதலால் பண்டாரத்தார் என்றும், மேலான தலைமை செலுத்தும் தன்மையால் பரமேஸ்பரனார் என்றும், பாளையத்திற்கு உடையவர் ஆதலால் பாளையத்தார் என்றும், பாண்டியர்தம் மரபினர் ஆதலால் பாண்டியனார் என்றும், வீரமிக்கவர்களை பிள்ளை என்று சொல்வதுண்டு ஆதலால் பிள்ளை என்றும், நிலத்தாயமை உடையவர்கள் ஆதலால் பூபதிகள் என்றும், பூமிக்குடையார் என்றும், கீழ்மக்களின் பண்பில்லாத செயலையும் பொறுத்தலினால் பொறையார் என்றும், வெற்றியைப் பூண்பவர்கள் ஆதலால் மழவர் என்றும், அரசகுடியில் வீரமிக்க குடி ஆதலால் மழவராயர் என்றும், உலகிற் மகளிர் கர்ப்பிணைகார்க்கும் காவர்குடியினர் ஆதலால் ஒப்பில்லாமானங்கார்த்த மழவராயர் என்றும், எவ்வகை சிறப்பிர்க்கும் முதன்மை கொண்டவர் ஆதலால் முதன்மையர், முதலியார் என்றும், பொறுமை உடையார் ஆதலால் மூப்பனார் என்றும், விறல் உடையார் ஆதலால் வல்லமை யுடையார் என்றும், வர்மா என்றும்; எவரும் தன்னடி வணங்கப் பெற்றுத் தான் பிறருக்குத் தாழாத பெருமையுடையவர் ஆதலால் வணங்காமுடியார் என்றும், கனல்கக்க அமர்புரியும் கன்னித்தமிழ் நாட்டார் ஆதலினாலும்,

பகைவர் அருகில் நெருப்பினிடமுள்ளது போல் நெருங்க முடியாத தன்மையுடையார் ஆதலினாலும் வன்னியர் என்றும், வையகமும் வணங்கவரும் வாள்வீரர் எப்போதும் வாள் அண்டையிலே உடையார் ஆதலால் வாளண்டையார், வாண்டையார் என்றும்; வில்திறனில் வல்லவர் ஆதலால் வில்லவர் என்றும், வீரமும் வலிவும் உடையவர் ஆதலால் வீரமிண்டார் என்றும், வீரமிக்க மரபினராம் வன்னியர் குடியில் பெயர்களாகும். மேலும் குப்தர் என்றும், இன்னம் நாகவடம், நாட்டாமன், ஒலைவன்னியன், பாண்டமுட்டி, பெருமான் கோத்திரம், வனப் பள்ளிகள் என்னுமோர் பட்டமுண்டு. இவர்கள் யாருடனும் சேராமல் தூயவரானதால் தனித்தே வசிப்பார்கள். இவர்கள் வாழும் வீதிக்குப் பெயர் 'பள்ளித் தெரு' எனப்படும்."

அப்பட்டப் பெயர்கள் ஏற்பட்டிருப்பதற்கான காரணம் என்னவாக இருக்குமென ஊகித்துக் கூறியிருப்பது நாடக ஆசிரியரின் அறிவுத் திறனைப் புலப்படுத்துகிறது.

இந்நாடகத்தில் காந்தவராயனைச் சூழ்ச்சியால் சாகடித்த தாசி, மோகனவல்லி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார். மரபு வழிக் கதையில் 'குப்பி அல்லது குப்பிச்சி' என்று குறிப்பிடப் படுபவளை 'மோகனவல்லி' என்று பெயர் மாற்றம் செய்திருப்பது தம் நாடகத்துக்கு மெருகேற்றுவதற்காக அவ்வாறு செய்துள்ளார் என்று கருதலாம்.

சேந்தவராயன், கிருஷ்ணதேவராயரின் யுத்த வீரராகிய ராமராயரைத் தோற்கடித்துக் கழுதை மீதேற்றி, திருப்பி அமர வைத்துத் துரத்தியதை, நாடக ஆசிரியர்,

"முத்தாளின் வாகனம் தன்னையே அதை
முன்னே கொண்டுவாரும் பிள்ளையே
சேர்த்துமே அதன் மேலே திருப்பி அமரவைத்து
பார்த்துமே கிருஷ்ணதேவர் பதைக்கவே துரத்துங்கள்"

என்று எழுதியிருப்பதிலிருந்து காந்தவராயன் சேந்தவராயன் என்ற தலைவர்கள் எத்தகைய வலிவு பெற்றவர்களாக விளங்கியிருக்கின்றனர் என்பதைக் காட்டுவதாக உள்ளது.

காந்தவராயன் சேந்தவராயன் ஆகியோரைச் சூழ்ச்சியால் சாகடிப்பதற்காகத் தாசி மோனவல்லிக்கு, "கி.பி. 1520 வருஷம் ஜுலை மாதம் 9 தேதி இந்த விஜயநகர் பட்டினத்தில் வாசம்

செய்து வந்து காலஞ்சென்ற கோவிந்தநாயர் குமாரத்தி தாசி மோகனவல்லிக்கு, மேற்படி நாட்டு மன்னராகிய கிருஷ்ண தேவராயர் எழுதிக் கொடுத்த பத்திரம் என்னவென்றால், நீ என் இஷ்டப்படி திருவிடையீச்சூர் சென்று காந்தவராயன் தம்பி சேர்ந்தவராயன் இவர் இருவரின் சிரசை கொண்டு வந்து என் கண்ணில் காட்டினால், இரண்டு லக்ஷம் பொன்னும், இருவரில் யாறையாகிலும் ஒருவர் சிரத்தை கொண்டு வந்தால் ஒரு லக்ஷம் பொன்னும் நான் கொடுப்பதாக சம்மதித்து எழுதிக்கொடுத்த பத்திரம். இப்படிக்கு கிருஷ்ணதேவராயர்" என்று நாடக ஆசிரியர் எழுதியிருப்பது, எந்த ஆதாரத்தைக் கொண்டு ஆண்டு, மாதம், தேதி ஆகியவைகளைக் குறிப்பிட்டுள்ளார் என்பது விளங்கவில்லை.

கிருஷ்ணதேவராயன் சேந்தவராயன் சண்டை நாடகத்தைப் பதிப்பித்துள்ள சண்முகானந்த புத்தகசாலை, புதிய நாடக வெளியீடுகள் பட்டியலில் "சிவவல்லி, சித்திரவல்லி, செந்திருவல்லி, ஜெயவல்லி திருமணம் என்னும் வாரதாசூரன் கிருஷ்ண வன்னியர் சண்டை நாடகம்" என்ற ஒரு நாடக நூலையும் பார்க்கமுடிகிறது.[190] அந்நூலை என்னால் பெற முடியவில்லை. ஆதலால் அந்நூலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று அறிய முடியவில்லை.

காந்தவராயன், திருக்கழுக்குன்றத்து மலைமேல் உள்ள வேதகிரீஸ்வரர் கோயிலின் முன்பாக ஒரு மண்டபம் அமைத்தான் என்பதை, அக்கோயில் பிரகாரத்தின் மேற்குச் சுவரில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.[191]

## இடங்கை வலங்கை வரலாறு

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில், உள்ள இச்சுவடி[192] இந்நூலாசிரியர் தொல்லியல் துறையில் இயக்குநராக இருந்த காலத்தில் நூலாக அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்றது. சுவடியில் தலைப்பு, 'ராசிப்புள்ளையனுக்கு, ஒழிகரெ நாட்டுப் புன்னப்பான் எழுதிக் கொடுத்த பட்டயம்' என்று எழுதப்பட்டிருக்கிறது. இது 'ராசப்பிள்ளையனுக்கு எழுகரை நாட்டு பன்னாட்டார் எழுதிக் கொடுத்த பட்டயம்' என்று இருக்க வேண்டும். இதன் நகல் போன்று தோன்றும் நெய்வேலிப் பட்டயம் ஒன்றை இந்நூலாசிரியர் தமிழ் நாடரசு

தொல்லியல் துறை காலாண்டிதழான 'கல்வெட்டில்' பதிப்பித் திருக்கிறார்.[193] அப்பட்டயத்தில் கூறப்படாத வேறு பல செய்தி களும் இவ்வாவணத்தில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

எடுத்துக் காட்டுக்களாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். (1) வாதாபி ராட்சசன் பிறப்பு பற்றிய கதை (2) இராவணாவ தாரத்தில் ராவணன் கைலாச நாதரிடத்தில் தனக்கு ஆயுசு மூன்றரை கோடி ஆண்டு வரம் கேட்டுப் பெற்றது. (3) பின்பு மஹா விஷ்ணுவின் தூண்டுதலால் மேலும் அரை கோடி ஆண்டு ஆயுள் வரம் கேட்கபோய் வெறும் அரை கோடி ஆண்டு ஆயுள் வரம் தவறுதலாகக் கேட்டுவிட்டதால், முன்பு பெற்றிருந்த மூன்றரை கோடி ஆண்டு ஆயுள் நீங்கி பின்பு கேட்ட அரை கோடி ஆண்டு ஆயுள் மட்டும் வரமாக நின்றது. (4) வாதாபியின் பிள்ளைகள், படைத்தலைவர்கள், மந்திரிகள் பற்றிய செய்தி (5) சிவபெருமான் மற்ற தெய்வங்களுடன் சேர்ந்து வாதாபி அரக்கனை ஒழிக்க ஆலோசனை நடத்தியது. (6) சம்பு மகாமுனிவர் அழைக்கப்பெற்று, யாகம் ஏற்படுத்தி அக்னி வீரனாகிய ருத்ர பள்ளியை உண்டாகியது மற்றும் ருத்ரபள்ளி தம் புதல்வர்களுடன் வாதாபி ராச்சியம் இரத்தினபுரி சென்று வாதாபியை வென்றது. (7) வாதாபியின் மனைவி காமவல்லி வில்வீரமஹார்ராஜனை எதிர் கொண்டு வரவேற்று, அவரது குமாரர்கள் ஐந்து வன்னியருக்கும் எண்ணாயிரம் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்தது. (8) காமவல்லி மகனுக்கு வில்வீரனாகிய ருத்ரப்பள்ளியார் பட்டாபிஷேகம் சூட்டி வைத்தது (9) ஜம்பு தேசம் திரும்பி ஐந்து வகைப் பள்ளியும் ஐந்து பகுதிகளை ஆட்சிபுரிந்தது போன்றவைகளாகும் அவை.

இறுதியில் வன்னியர்களின் விருதாவளி தரப்பட்டிருக் கிறது. மேலே கூறப்பட்ட புதுச்செய்திகளும் மற்றும் வன்னியர் விருதாவளியும் வன்னியர் புராணத்திலிருந்து சேகரிக்கப் பெற்றவைகளாக இருக்கும் போன்று தோன்றுகிறது. வன்னி யரின் விருதாவளிகள் கீழ்க்காணுமாறு:

"ஸ்ரீமத் ஸகல குணாதியசயம் படைத்த மஹா தபாஸாடைய சம்புமஹா முனிவர் வரப்ரஸாதியாகி கைலாஸ கிரி கோவில் கொண்டோர் உறளான, மஹா விஷ்ணுவானவர் தம்முடைய பாதாரவிந்தத்துநாலே அளக்கப்படாநந்த பூலோக மெங்கும் அசயாமல் காத்து, ஜயஸ்தம்பம் நாட்டிவிக்கும் வன்யகுல மண்டலாதீச்வர ரானவர், கண்டரிர்கண்டன்,

கொண்டாரிர் கொண்டன், வண்டராவுத்தன், உத்தண்ட கோலாஹலன், மையகுல ஸித்தாங்க தீரநாந்ய மஹா பராக்ரம சூராதிசூரனை மதியாத வன்னிய பெருமாள்; மணிமகுட முடிமாலை சூடும் மநோ பயங்கரரான; ஈழ மெலெங்கை தெரகொண்டருளிய ராஜாதி ராஜன், ராஜபரமேஸ்வரன், றவண்ட சக்ரவர்த்தி, மலை கலங்கிலும் மனங்கலங்காத வில்வீர பராக்ராம தீரனான தேவர்கள் ஸ்நேகிதன், தேவேந்தரன் ஸம்பந்தி, மந்திர மாலையம்மன் கர்ப்ப சுதாகரன், பள்ளி யென்றும் பேர் படைத்து படத்தினோர்களான; சதகோடி சத வர்ஷமான அக்நிபாணம் பெத்தோர்களான; சங்கநிதி, பத்மநிதிக் கொடைய குபேரனை பொக்கிஷமாகப் படைத் தோர்களான; வருணனும் வாயுவும் ஸாரதியாக மேகப் பொரவி பூட்டிய இந்திர விமானத் தேர் படைத்தோர்களான; விநாயகர் கௌயவன், வீரேச்சுவரன் தமயன், சம்பு மஹாபுரி பட்டணம் செழிக்க வந்தோர்களான; அகஸ்தியன் கமண்டலம் கங்கா ஜலத்தை காவேரியாறாக்கி கரைகண்ட வல்லோர்களான; அக்னிப் புரவியும், வெள்ளை யானையும், தங்கக் கொடையும் வெள்ளிக் கொடையும், ஜெகஜம்புக் கொடையும், ஈரட்டு வெண்சாமரம், வீர மல்லாரி, விஜயமல்லாரி, படைத்த படைகொண்ட ராஜாளி, ரெட்டத் தீவட்டி, பஞ்சமூக தீவட்டி, பங்சவர்ண பாவாடை, வர்ணத்தடுக்கும், செங்கழுநீர் வாடாத மாலையும் பூண்ட வன்யகுல ராஜன், கோழிக் கொடியும், புலிக்கொடியும், தண்டையும், வெற்றிப்பதாகையும், வீர கிங்கிணியும், ஆறுகால் பீடமும், புண்டரீகாஸனம் படைத்த பூலோக தேவேந்தரரான; பேரிகை, டக்கை, மல்லாரி, துந்துபி, பேரிசை, திரிச்சின்னம், நகசரம், பூரிகை, டமாரம், தவண்டை, தவளச்சங்கம், கனகதப்பு, வலம்புரிச் சங்கம் அதிகபிருது பதினெட்டு மேளவாத்ய பிருதுள்ளோரர்களான, மந்த்ரவாள், சத்த்ராயுதம், வாங்கு வலயம், எறியம்பு, வளைதடி, சக்ரம், சாமித்ரோக வெண்டயம், அம்பும்வில்லும், அம்பராத் தோணியும், அஸ்த்ர சஸ்த்ர மென்னும் பதினெட்டாயுதம் படைத்த பண்ணாட்டா ரென்னும் பள்ளிகளானோர், சுப்ரஷ்மன்ய ஸ்வாமியாரெயும் துர்க்காதேவி யம்மனெயும் படைத் தலைவராகப் படைத்து பதி நாலுலகம் விண்ணோடு காத்தோர்களான; யமனுக்கஞ்சி அடைக்கலம் புகுந்த சீயாழி மறையோனுக்காக யமனைத் துரத்தி (வி) ரட்டி, அறுபத்தி நாலடி கம்பத்திலேறி நமனெபசாரித்த தீரரான, நாரத பகவான்

ராஜவட்டத்தில் அந்தணனென்னும் வேத வேதியர்க்கு ஆயிரம் அசுரம் தானம் கொடுத்து, அதிக வரம் பெத்தோர்களான; முன்னூலு மார்பின் பின்குடுமி யாசுரன், தேவி யனுக்ரஹத் தினால் வேத மோதி விளங்கிய பெரியோர்களான, கௌதமர் ரிஷி கன்னிகை அபிமானம் காத்தோர்களான; அக்னியில் பிறந்து அம்பொரம் கொண்டு, கண்டனாடு கொண்டு கொண்ட நாடு விடாத குபேரரான வல்லானை விண்ணு மகுடம் துணித்து மகா பர்வதம் கைக்கொண்டோர்களான; துஷ்டர் கண்டன், துரந்தரிகரன், வாதாவி ரத்னகிரி பட்டணம் கொள்ளை யிடும்போது வாதாவி மனைவி காமவல்லி வில்வீர மஹாராஜனாகிய ருத்ரப்பள்ளியார் நாணமுடன் எதிர் கொண்டு கண்டு, தன் மகள் எண்ணாயிரம் பொங்கள் உம்முட குமாரர்க்கு காணிக்கையென எண்ணாயிரம் பொங்களையும் தம்முடைய குமாரர்க்கு அஞ்சு பேருக்கும் பாணிக்ரஹனம் பண்ணி, இன்னுமநேகம் கோடி பேருக்கு அநேகங்கோடி பொங்களை கல்யாணம் பண்ணியும்; பட்டணத்திலுள்ள அநேகம் பெங்களை அநேகம் பேருக்கு உத்தாரம் கொடுத்து, காமவல்லி மகன் மேஷனுக்கு பட்டாபிஷேகம் சூட்டி ஸ்திரம்ஜீவி பட்டமும் கொடுத்து, வீரதீர புரந்தரன், வீரதீர பராக்ரமன், வீரமார்த்தாண்டன், வீர கேஸரி, வில்வீர மகாராஜவென்னும் ருத்ரப்பள்ளியார் ஜம்புமஹாபுரி பட்டணம் நோக்கி ஸமுத்ரகோஷணம் பண்ணி, திரும்பும்போது; பெரு மாளும் ப்ரும்மதேவனும், முப்பத்தி முக்கோடி தேவர்களும் புஷ்பமாரி பொழிய, நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீச்வராளும் ஸ்த்தோத்ரம் பண்ண, ஸமுத்ராதேவியம்மன், ஸரஸ்வதி தேவியம்மன், இந்த்ராணியம்மன், லஷ்மிதேவி யம்மன், சந்த்ரமதியம்மன் இவர்கள் அன்னம் கேட்டவர்க்கு அன்னம், பால் கேட்டவர்க்குப் பால், நெய் கேட்டவர்க்கு நெய், தயிர் கேட்டவர்க்கு தயிர், மோர் கேட்டவர்க்கு மோர் இப்படி வழங்கும், அநேகம் கோடி ரத கஜ துரக பதாதிகளொடனே ப்ரளய கால ருத்ராவதாரமாய், துந்துபி, பேரியை, நாகஸ்வரம், பூரிகை, திருச்சின்னம், எக்காளை, கொம்பு, தாரை, கின்னரி, தவளச் சங்கம், கனக தப்பு, தவண்டை, உடுக்கை, மத்தளம், மேளத்தாளத்தொடன் மத்துமுண்டான ஸம்ப்ரமதாடம்பரத் தொடன்; சம்புமாபுரீ பட்டணம் நோக்கி வரும் விராதி வீரரானவர், முடி பொருத்த மூவராஜாக்களும் சேர, சோழ, பாண்டிய னெதிர் கொண்டு கப்பங் கட்ட, கங்கை கொண்டான்

சோழன் திருமுடி காத்தோர்களான, காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் பாதம் பணிந்து அங்கிலுண்டான பூத போதாங்களை பிடித்து, கழுவேற்றி, காஞ்சிபுரம் குடியேத்தி, ஓடாத தேரை யோட்டினவர்க்கும் வன்னியகுல தீரரான; பாதாள கம்பா நதியிலும் காமாக்ஷிம்மை பாதார விந்தம் பணிந்து, முத்து மாலையும் வாங்கி வாமபாகத்தில் வரம்பெத்த, **இடங்கைப் பெரியோன், இடங்கைக் கரசன், இடங்கைக் கதிபன்;** ஆக்ஞா சக்ர ப்ரதிஞா பரிபாலன், நீதிகார்ய துரந்தரன், ஸர்வாமி மானம் காத்தவர், ஸகல தர்ம பரிபாலகர், ஸகல ஸாம்ராஜ்ய லஷ்மி கடாக்ஷி நிவாஸர், ஜகதலப்ரஞாதிபன், செல்வக் குபேரன், வம்ச நாராயணன், வம்ச மார்த்தாண்டன், வம்ச பரிபாலன், வம்ச சிந்தாமணிகரான, ஏழெட்டம்பத்தாறு தேசத்து இடங்கை பள்ளியென்னும் பண்ணாட்டுடையவர், சிவஸமய பரிபாலகர், சிவபூஜா துரந்தரர், விபூதி ருத்ராக்ஷமாலிகாபரணர், சிவஸமய விஷ்ணுஸமய தேவப்ராஹ்மண காரிய துரந்தரரான, அரிபூஜை, சிவபூஜை, குருபூஜை மறவாதே அன்னதான வநோதரான, அதிக வரம்பெத்த அகண்டித லக்ஷ்மிப்ரஸன்னரரான மஹாமேரு ஸமான தீரரான; எழுகரை நாட்டு பண்ணாட்டார்".

## இலங்கை ஆவணங்கள்

செனரத் பரணவிதன என்னும் அறிஞர் தாம் எழுதியுள்ள கட்டுரையில் 'வன்னி' என்பது ஒரு வகை குறுநிலத்தலைவர் களைக் குறிக்கும் சொல் என்றும், அது அவர்கள் ஆட்சி செய்த பகுதியான 'வனம்' என்பதிலிருந்து ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்.[194] மேலும் இலங்கையில் வன்னியர் ஆட்சி செய்த பகுதிகள் சிலவற்றில் பதினெட்டு என்றும், வேறு சிலவற்றில் முன்னூற்று அறுபத்து நான்கு என்றும் கூறப்பட்டுள்ளது. அத்தோடு அவர்கள் 'மஹாவன்னி' என்றும் 'சிறிவன்னி' என்றும் குறிக்கப்படுகின்றனர். பதினெட்டு என்பத மஹாவன்னி யரையும், 364 என்பது சிறிய வன்னியரையும் குறிப்பதாக இருக்கலாம் என்று இந்திரபாலா கருதியுள்ளார். ஜீஜர் என்பவர் 'வன்னி' என்பது ஒரு இனத்தையோ அல்லது ஒரு சாதியையோ குறிக்கும் சொல் என்றும்; அவர்கள் அனைவரும் சிங்களர் என்றும், அதன் மூலம் அவர்கள் ஆரியர் வழிவந்தவர் என்றும் எழுதியிருக்கிறார்.[195]

எஸ். பௌலர் (S. Fowler) என்பார், "வன்னியர் வேட்டையாடும் தொழிலில் முழுமையாகவும், சிலவேளைகளில்

பயிர்த்தொழில் செய்தும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஒரு தனிச் சாதியினர். இவர்கள் வாழும் பகுதிகளில் வேறு சாதியினர் யாரும் இல்லை. இவர்கள் பழங்கால வில், அம்பையே கொண்டுள்ளனர். வேட்டையாடுவதற்கும், தேன் திரட்டுவதற்கும் காடுகளில் பல இடங்களுக்குச் செல்வதால் அந்த காட்டு வழிகளில் நன்கு பழக்கப்பட்டிருக்கின்றனர்" என்று குறித்திருக்கிறார்.[196]

## சிதம்பர வன்னியன் வம்சாவளி[197]

பரமசிவன் பார்வதி ஆகியோர் ஆடிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்தத் திருவிளையாடலும் ஒன்று. பார்வதி தேவியானவரின் பாலமுதத்தைப் பன்றிக்குட்டிகள் குடித்ததனால், மிக்க அழகும் வீரமும் பொருந்திய மனிதர்களாய் உருமாறின. பரமசிவன் அருளால் பாண்டிய மன்னனிடம் அவர்கள் அமைச்சர்களாய் பணிபுரிந்தனர். அவ்வாறு இருக்கும் நாளையில் பாண்டிய அரசர் மனமகிழ்ந்து மதுரைக்குக் கிழக்கே சிறிது சீர்மையைப் பாளையப்பட்டாக அவர்களுக்கு விட்டுக் கொடுத்து, முடிசூடி ஆண்டு வருகையில், அவர்கள் வழிவந்த ஒரு அரசன் மதுரைக்குச் சென்று பாண்டிய அரசரைக் கண்டு சரிசமானமாக இருக்கையில் அமர்ந்ததும், பாண்டிய அரசன் 'நீர் எப்படி எனக்குச் சமமாக இருக்கையில் அமரலாம்' என்று வினவினார். அப்போது தாங்கள் அக்னி கோத்ரமானதனால், அதன் பெருமையறிந்த முன்பிருந்த பாண்டிய மன்னர்கள் சரியாசனம் தந்து வெகு மரியாதையாக நடத்தி யிருக்கின்றனர். அதே வகையில் தற்போதும் நடப்பிக்கவேண்டும் என்று பாளையக்காரர் வேண்ட, நீங்கள் அக்னி கோத்ரமெனில் பழுக்கக் காய்ச்சிய செப்புக் குதிரையேறி நடத்திக் காட்டினால் மீண்டும் அம்மரியாதை வழங்கப்படும் என்று பாண்டியன் கூறினான். அவ்வண்ணமே அக்னிக் குதிரையேறி வலம் வந்து காட்டவே, மன்னன் மிகவும் மகிழ்ச்சியடைந்து அனேக பரிசுகள் பாளையக்காரருக்களித்து அனுப்பி வைத்தான்.

தொடர்ந்து இப்பாளையக்காரர்கள் ஆண்டுக்கொண்டு வருகையில், தென் சீர்மையில் சுண்டன் என்றொரு பள்ளர் சில துஷ்டர்களைச் சேர்த்துக் கொண்டு ஆட்சிக்கு இடையூறு ஏற்படுத்தி வந்ததால் அங்கு சென்று அவரையடக்கிவர

வேண்டுமென்று ஒரு அம்பைதறைக்குடி ஆண்டுகொண்டாரை பாண்டியர் அனுப்பியதில், ஆண்டு கொண்டார் அவரையடக்கி வெற்றியோடு திரும்பி வந்ததால், அந்தத் தென் பகுதியில் சிறு சீர்மையை ஆண்டு கொண்டாருக்கு அளித்து ஆண்டு வரும்படி பாண்டியர் ஆணையிட்டார்.

அப்படி தென் சீர்மையில் ஏற்பட்டது தான் ஏழாயிரம் பண்ணை பாளையப் பட்டு என்று இவ்வம்சாவளி கூறுகிறது. இப்பாளையப்பட்டில் தொடர்ந்து ஆட்சி செய்த பாளையக்காரர்கள் மும்முடி ஆண்டு கொண்டார், கவுசிலை ஆண்டு கொண்டார். விருசடை ஆண்டு கொண்டார் எனப் பல பாளையக்காரர்களையும், அவர்கள் காலத்தில் நிகழ்ந்த சில வெற்றிச் செயல்கள்ளயும் விவரித்துவிட்டு, இறுதியாகக் கும்பெனியார் ஆட்சிக் காலத்தில் ஆண்டு கொண்டார் பரம்பரையினர் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு உதவி செய்தார்கள் என்று தவறாக ஆங்கிலேய அரசு புரிந்துகொண்டு, அவர்களது நிலங்களைச் சப்தி செய்து ஏலம் போட்டுவிட்டு அப்பொழுது பாளையக்காராக இருந்த முத்துசாமி ஆண்டு கொண்டாரைச் சென்னைப் பட்டணத் துக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து தீவாந்திரத்துக்கு (அந்தமானுக்கு?) அனுப்பிவிட்டனர். ஆதலால் அப்பாளையக் காரரின் தம்பி சிதம்பர வன்னியன், தம் அண்ணனை விடுவித்து, மீண்டும் தங்களது சீர்மையைத் தங்களுக்கு அளித்துத் தங்களைக் காப்பாற்றி இரட்சிக்க வேண்டுமென்று வேண்டி கும்பெனியாருக்கு எழுதியக் கடிதம் இக்கைபீது ஆகும்.[198]

## அளகாபுரி ஜமீன்தார் வம்சாவளி[199]

இச்சமீன்தார் பூர்விகமும் பன்றிக்குட்டிகளுக்குப் பார்வதி தேவியார் பால் கொடுத்ததால், அப்பன்றிக்குட்டிகள் அழகான உருவத்தையும் மிகுந்த வீரத்தன்மையையும் உடைய மனிதர்களாக மாற்றம் அடைந்து பாண்டியனின் அவையில் அமைச்சர்களாகப் பணிபுரிந்து, பின்பு பாளையக்காரர்களாக ஆக்கப்பெற்றனர் என்றே தொடங்குகிறது. அவர்களின் மரபில் வந்த வரகுணராமன் என்பவருக்குச் சயதுங்க வரகுணராம பாண்டியன் வன்னிய னென்ற பெயர் பாண்டிய அரசனால் வழங்கப்பெற்று திருப்பூவணச் சீர்மையை ஆண்டு வந்தார்.

அவ்வாறு ஆட்சி செய்து வருகையில், திருப்பூவணத்துக்குப் பாண்டிய அரசன் வந்து திருப்பூவணநாத சுவாமியைத் தரிசிக்கப் பயணமாகியுள்ளார் என்ற செய்தியறிந்து, அரசர் வருவதற்கான வழி செப்பனிடப்பட்டு, வழி நெடுகிலும் மகரத் தோரணங்கள் கட்டப்பெற்றன. மேலும் பொன்னால் சன்னச்சம்பா நெற்கதிர் குலைபோல் செய்து, அது கொண்டு முடியொன்று அழகாக அலங்கரித்து பாண்டிய ராசா முன்பாக அதைப் பாதகாணிக்கையாக வைத்தார். அதனைக்கண்டு மன்னர் மிகமகிழ்ந்து அந்தநெல் முடியை எடுத்து, சயதுங்க வரகுணராமபாண்டிய வன்னியனார் சிரசில் தரித்து, 'நெல்முடிகொண்டான்' என்று பெயரும் கொடுத்தார்.

சயதுங்க வரகுணராமப் பாண்டிய வன்னியருக்குப் பிறகு அவர் மகன் பராந்தக வன்னியனார், புனித மார்க்கண்ட வன்னியனார், புண்ணியகுமார வன்னியனார், பிறகு புத்திர சம்பத்து வன்னியனார் என்று மன்னர்கள் தொடர்ந்து ஆண்டு வந்தனர்.

பின்னர் சத்துரு சம்ஹார வன்னியனார் ஆண்டு வருகையில் தயிரியவர்மப் பாண்டியராசர், இவர்களுக்குப் பாண்டியர் அரசவையில் சரி இருப்பும் பொன்முடியும் எவ்வாறு தரப்பட்டது என்ற கேள்வியை எழுப்ப, மீனாட்சி சுந்தரரேசுபரன் அருளால் அக்னி குதிரை யேறி சத்துரு சம்ஹார வன்னியனார் நிரூபித்துக் காண்பித்ததால் அவருக்கு அனேக வரிசைகள் பாண்டி மன்னனால் தரப்பட்டு, மதுராபுரிக்குத் தென்கிழக்கில் இராமேசுவரம் பாதை மார்க்கத்தில் ஆனையூர், ஆப்பனூர், பசுமையூர், மங்கையூர், இளசையூர், அம்பையூர் ஆக ஆறூரிலும் ஆறு கோட்டை கட்டிக்கொள்ளச் சொல்லி 'ஆறு கோட்டை வன்னியனா ரென்று" பெயரும் கொடுத்து அனுப்பி வைக்கப் பெற்றார்.

தாஷ்ட்டீக சவுந்தர பாண்டிய வன்னியனார் காலத்தில், தென்சீமையில் பாண்டிய அரசுக்கு இடையூறு தந்து வந்த சுண்டனென்றொரு பள்ளரை அடக்க அவர் அனுப்பப்பெற்று, அவரை அடக்கி வந்ததால், தாஷ்ட்டீக சவுந்தர பாண்டிய வன்னியனாருக்குத் தென்சீமையில் சில பூமி தரப்பெற்று அவருடைய குமாரர்களில் அவனியங்கோன் ஏந்தலில் ஒருவரும், அச்சந்தவிர்த்தானில் ஒருவரும், புத்தூரில் ஒருவரும், தென்மலையில் ஒருவரும், திருவேங்கிடத்தில் ஒருவரும் ஆக ஐந்து பேர் ஐந்து இடத்தில் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள்

தென்காசிப் பாண்டிய ராசாக்களுக்கு அடங்கி ஆட்சி செய்திருக்கின்றனர்.

அதன் பின்பு பல வன்னிய மன்னர்கள் ஆட்சிபுரிந்த பின்னர், சிதம்பர ரெட்டைக்குடையார் 65 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தார். அவர் மகன் கட்டாரி ரெட்டைக் குடையார் ஆட்சியிலிருந்து கும்பெனியார்களுக்குக் கிஸ்தி செலுத்தி வந்தார் என்று இந்தக் கைபீது தெரிவிக்கிறது.[200]

## வயலூரில் ஆதிநாராயண சம்புவராயனுடைய புராதீனக் கோட்டையென்றதுகளின் விசேஷித்தக் கைபீது.

பண்டைக் காலத்தில் பாரச ரிஷியும் மார்க்கண்ட ரிஷியும் பகவானுடைய தரிசனம் கிடைக்க வேண்டுமென்று சுதரிசன பர்வதத்துக்கு வந்து தவம் புரிந்து கொண்டிருக்கையில், மஹாவிஷ்ணு, லக்ஷிமி சமேதரராய் வந்து அவர்களுக்குக் காட்சியளித்து விட்டு, அதே மலையில் பள்ளி கொண்டு உலகத்தில் உள்ள மக்களுக்கெல்லாம் மோக்ஷம் வழங்கிக் கொண்டிருக்கையில், சகல விதமான தேவதைகளும் மற்றும் ரிஷிகளும் இம்மலைக்கு வந்து பகவான் தரிசனம் வேண்டி தவம் செய்தார்கள் என்றும்; அம்மலைமேல் ஐந்து தீர்த்தங்கள் மற்றும் ஒரு கோயில் இருந்தன என்றும் இக்கைபீது கூறுகிறது.

மேலும் இம்மலைக்குக் கிழக்கே அரை நாழிகை வழியில் வீர நாராயண சம்புவராயன் கோட்டை கட்டி, அதில் சில நாள் வாழ்ந்து தேவாலயங்களுக்குத் திருப்பணி நடத்தியதோடு, கொடைகளும் வழங்கினார் என்றும்; அவரிருந்த கோட்டையில் தற்பொழுது ஆறு செங்கற் கட்டுமானங்களும் கற்களும் காணப்படுகின்றவென்றும், இம்மலைக்கு மேற்கே அரை நாழிகை வழியில் அவனுடைய அரண்மனை கட்டியிருந்த இடத்திலும் செங்கல் கட்டுமானங்கள் காணப்படுகின்றன என்றும்; அங்கு ஒரு பெருமாள் கோயிலும் சில வீடுகளும் உள்ளன என்றும்; அப்பகுதி தற்பொழுது வயலூரென்று பெயருண்டாகி வழங்கப்பட்டு வருகிறது என்றும் இக்கைபீதில் காணப்படுகிறது.[201] இதனைத் திருவாய்ப்பாடி கோவில் நம்பியானும் வெங்கிடாசல முதலியும் எழுதிக் கொடுத்திருக் கின்றனர்.

இக்குறிப்பு இராசநாராயணச் சம்புவராயனைப் பற்றியும் அம்மன்னன் படைவீட்டில் அமைத்திருந்த கோட்டை,

அரண்மனை, கோயில்கள் ஆகியவற்றைப் பற்றியும் குறிப்பதாகத் தெரிகிறது.

## வல்லாள மகாராஜன் புகழ் சரித்திரம்

தற்போதுள்ள திருவண்ணாமலைப் பகுதியைச் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு வல்லாள மகாராசர் என்னும் வன்னியகுல ஷத்திரிய வேந்தன் அரசாண்டு வந்தான். அம்மனனுக்கு இரு பட்டத்தரசிகள். ஒருவர் பெயர் மல்லமா தேவி, மற்றொருவர் பெயர் சல்லமாதேவி. அறப்பணிகளில் மிகவும் ஈடுபாட்டோடு தம் அரசாட்சியைச் சிறப்பாகச் செய்து எல்லா நலமும் பெற்றிருந்தும், பிள்ளைப்பேறு இல்லாமல் அரசர் மனம் வருத்தப்பட்டார்.

அக்குறை தீர சிவனடியார்கள் வேண்டுகிற அனைத்தையும் இல்லையென்னாது அளித்து வந்தார். இவ்வரிய செயலை நாரதர் மூலம் அறிபவர் போல் அறிந்த எல்லாவற்றையும் அறிந்து வந்த எம்பெருமான், தாம் ஒரு சங்கமர் வேடங் கொண்டு, தம் பூதகணங்களை சிவ யோகிகளாய் வடிவம் தரிக்கச் செய்து திருவண்ணாமலை நகரடைந்து, அங்குள்ள எல்லா தாசிகளிடத்தும் தம் பூதகணங்களாகிய சிவயோகிகளை, தாசிகள் கேட்ட பொன்னோடு அனுப்பிவிட்டு, வல்லாள மகாராசனைக் கண்டு, தாம் மன்மதபாணத்தினால் தாக்கப் பெற்று மிகுந்த துயருருவதாகக் கூறி தமக்கொரு தாசியை அமர்த்தித் தருமாறு வேண்டினார்.

மன்னனும் தம் மந்திரிகளை அனுப்பி மிகுந்த அழகு பொருந்திய ஒரு தாசியை உடன் அப்பெருமகனாருக்கு அமர்த்தித் தர ஆணையிட்டார். அமைச்சர்கள் சென்று அனைத்துத் தாசிமார்களிடமும் கேட்க, அவர்கள் முன்பே சில சிவயோகிகளிடம் பணம் பெற்றுவிட்டதாகக் கூறிவிடுகின்றனர். செய்தியறிந்த வல்லாளர் தாமே நேரில் சென்று தாசிகளில் யாராவது ஒருவர் அச்சங்கமருக்கு வருதல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டும், தாங்கள் முன்பே சிவயோகிகளுக்கு வாக்குக் கொடுத்து விட்டதால் மன்னனின் ஆணையை நிறைவேற்ற இயலாமல் மனம் தத்தளித்துத் தங்கள் இயலாமையை மன்னனிடம் எடுத்துக் கூறியதும், மன்னன் மிகவும் மனம் கலங்கினான். மன்னனின் பெரும் துயரையறிந்த

பட்டத்தரசிகளுள் இளையவளான சல்லமாதேவி, மன்னனிடம் வந்து, மன்னனின் மனக்குறையை, மன்னன் ஒப்புதல் அளித்தால் தாம் தீர்த்து வைப்பேன் என்று பணிவுடன் கூறினாள். மன்னனும் மிக்க மகிழ்ச்சியுற்று தம் இளைய பட்டத்தரசியை ஒரு இரவு சங்கமரோடு தங்கியிருந்து சங்கமரின் காமநோயைத் தீர்த்துவைக்க அனுப்புகிறார்.

அன்று இரவு சல்லமாதேவி சங்கமரோடு மகிழ்ந்திருக்க அவரை நெருங்கியதும் சங்கமராகிய எல்லாம் வல்ல எம்பெருமான் குழந்தை வடிவாகி அழுகுரலெழுப்பினார். குழந்தையழும் குரல் கேட்ட மன்னனும் மற்றவரும் இது ஈசனின் திருவிளையாடல் என்றும், குழந்தை இல்லையே என்று துயருற்ற தங்களது குறையைப் போக்கவே இறைவன் இத்தகைய திருவிளையாடல் புரிந்துள்ளான் என்றும் உளமகிழ்ந்திருந்த வேளையில், குழந்தை மறைந்துவிட்டது. வானில் அசரீரி எழுந்தது.

'பிள்ளைப்பேறு வேண்டி மனத்துயருற்றிருக்கும் பக்தனே! மனம் கலங்க வேண்டாம். பூலோகத்தில் உன் ஆயுள் முடிவடையும் காலத்தில் யாமே உமக்குப் புத்திரனாக இருந்து உன் ஈமக் கருமங்களைச் செய்து முடிப்போம்' என்ற ஆறுதல் வார்த்தை விண்ணில் கேட்டது. மன்னனும் பட்டத்தரசிகளும் எல்லையிலா மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் திளைத்தனர். இறைவனே தம் இறுதிக் கடனை நிறைவேற்றும் பேறு பெற்றமைக்குத் தாம் என்ன தவம் செய்தோமோ என்று நினைந்து நினைந்து ஆறுதல் அடைந்தார் மன்னர். தொடர்ந்து தான தருமங்கள் செய்து சுக போகங்களையும் அனுபவித்து இறுதியில் இறைவனடி சேர்ந்தார்.

அவ்வல்லாள மகாராஜாவின் இறுதிக் கடனை இறைவனே திருவண்ணாமலையின் கீழ்த்திசையில் ஓடும் கௌதம நதிக்கரையில் செய்து முடித்ததாகவும், அங்கிருந்த வன்னியப்பெருமக்கள் அருள்மிகு அண்ணாமலையானைச் சம்மந்திமுறை ஏற்று தலைக்கட்டு நடத்தியதாகவும், அதனால் அவ்வன்னியர் வாழ்ந்த ஊருக்கு 'சம்மந்தனூர்' என்று பெயர் வழங்கியதாகவும்; இந்நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் அதுமுதல் ஒவ்வொரு ஆண்டும் மாசி மக நாளன்று சம்மந்தனூருக்கருகில் உள்ள பள்ளிகொண்டாப்பட்டில் விழா கொண்டாடப்படுகிறது என்றும் குருநாதன் எழுதியுள்ளார்.[202]

மேற்காணும் செவிவழிச் செய்தி உண்மையாக இருக்குமோ என்று எண்ணும் வகையில் போசளமன்னன் மூன்றாம் வீர வல்லாளன் காலத்திய இரு கல்வெட்டுக்கள் திருவண்ணாமலைக் கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. வல்லப்ப தண்ணாயகர் என்பார் அளித்த கொடைகள் பற்றி இரு கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன.[203] வீரவல்லாளன் வன்னியர் குலத்தைச் சார்ந்தவரா என்பதைக் கல்வெட்டுக் களிலிருந்து அறியமுடியவில்லை.

## அகழாய்வுச் சான்று

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம் படைவீடு, தொடக்கத்தில் குறுநிலத் தலைவர்களாக இருந்து கி.பி. 13-14ஆம் நூற்றாண்டுகளில் சுய ஆட்சியை நிறுவி ஆட்சி செலுத்திவந்த சம்புவராய மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. அவர்கள் ஆட்சி செய்த இராஜ்யம் 'இராஜ கம்பீர ராஜ்யம்' என்று வழங்கப்பெற்றது.

படைவீட்டில் இவர்களது கோட்டை, அரண்மனை மற்றும் நகர்ப்பகுதி இருந்தமை பற்றிய குறிப்புகள் 'மதுரா விஜயம்' என்னும் சமஸ்கிருத நூல் மூலம் தெரியவருகிறது.

படைவீட்டில் தொல்லியல் அலுவலர்கள் கள ஆய்வு செய்த போது; அங்கு மக்கள் வாழ்விடம் இருந்ததற்கான மேட்டுப் பகுதியும், கோட்டைச் சுவரும். தோண்டுமிட மெல்லாம் வெளிவரும் செங்கல் சுவர்ப்பகுதியும், சில பழமையான கற்சிற்பங்களும், பல அரிய தொல் பொருட்களும் தெரியவந்தன

அவற்றின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இந்நூலாசிரியரின் வழிகாட்டுதலில் 1993 ஆம் ஆண்டு படைவிட்டில் மேடான பகுதியில் அகழாய்வை மேற்கொண்டு சில கட்டடப்பகுதிகளையும், குடிநீர் மற்றும் கழிவு நீர் செல்லும் நீர்ப்பாதைகளையும், சில உறைகிணறுகளையும் வெளிப்படுத்தி யது.[204]

மேலும் சில அரிய தொல்பொருட்களாகக் காசுகள், மட்கலன்கள், தந்தப் பொருட்கள், கல்மணிகள், சுடுமண் விளக்குகள், சுடுமண் பொம்மைகள், சொருகு ஓடுகள், கண்ணாடி வளையல்கள், செப்பு, இரும்புப் பொருட்கள் ஆகியனவும் அகழ்ந்தெடுக்கப் பெற்றன.

சென்னை டி.வி.எஸ். நிறுவனத்தார் படைவிட்டில் இடிபாடுற்ற சிவன் கோயில் அமைந்திருந்த பகுதியில் அக்கோயிலைப் புதுப்பிக்கு முகத்தான் அடித்தளப் பகுதி வரை அகழ்ந்தபோது பல அரிய செப்புப் படிமங்களும், செப்புக் கலன்களும், தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[205]

மேற்காணும் கட்டடப்பகுதிகளும் மற்றும் அரி செப்புப் படிமங்களும், தொல்பொருட்களும்; படைவீடு, சம்புவராய மன்னர்கள் காலத்தில் முக்கியத் தலைநகரமாக விளங்கியது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளாக விளங்குகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. கம்ப இராமாயணம், இலங்கையையழித்த படலம், பாடல் 11.
2. கம்பர் சிலையெழுபது பாடல் 68.
3. ஞானப்பிரகாசர், யாழ்ப்பாண வைபவ விமர்சனம், (அச்சுவேலி 1928).
4. கம்பர், சிலையெழுபது.
5. அரு. ராமநாதன், வீரவன்னியர் கதை (வன்னிய புராண வசனம்) பிரேமா பிரசுரம் சென்னை-24, 1967.
6. ஆறூர் சுப்பராய முதலியாரவர்களால் துர்முக ஷ ஆனி மாதம், சென்னை சூளை பிரின்ஸ் ஆப் வேலஸ் அச்சியந்திர சாலையில் 'செம்பொற்சிலையெழுபது' பதிப்பிக்கப்பட்டிருக் கிறது. வித்துவான் ஜெகந்நாதாசாரியாரால் பிலவங்க, மாசி மாதம் (1968) திருவல்லிக் கேணியில் மற்றொரு 'சிலை யெழுபது' பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. க. சண்முகசுந்தரம் அவர்களின் உரையுடன் 1986-ல் சூளைமேட்டில் மேலும் ஒரு 'சிலையெழுபது' பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது.
7. சிலையெழுபது, (1968), பக்கங்கள் 1-2
8. பாடல்கள். 10, 14, 17, 26, 31, 60, 64.
9. பாடல்கள்: 8, 22, 26, 29, 34, 46, 48, 50, 58, 62, 63, 70, 71.
10. பாடல்கள்: 6, 8, 23, 27, 53, 54, 56, 67.
11. பாடல்கள்: 43, 45,
12. பாடல்கள்: 65, 66.

13. பாடல்: 29
14. பாடல்: 50
15. பதிகம் 2, பாடல் 39, 64
16. பதிகம் 4,
17. பதிகம் 6, பாடல் 12, 41, 57, 63
18. பாடல் 26,
19. க. சண்முக சுந்தரம், சிலைஎழுபது, (1986) பக்கம் 16.
20. பாடல் 3,
21. பாடல் 5,
22. பாடல் 6.
23. பாடல் 12,
24. மேற்படி நூல், பக்கம் 30
25. பாடல் 39
26. பாடல் 50
27. ஏகாம்பரநாதருலா, வரிகள் 101–102, 146, 61, 150–151, 320–321.
28. S. Thiruvenkatachari, "Madura Vijayam of Gangadevi", 1957, Annamalai University, pp. 12–13
29. ARE. 434, of 1925
30. ARE. 422 of 1922
31. S.I.I. Vol. III, No. 61
32. E.I. XXXIX, pp 205ff. see also ARSIE; 1918; c.p.4; part II, pp. 170–171
33. Ibid, p. 207, ARSIE, 1918, part II, p. 171
34. அரு. ராமநாதன் தயாரிப்பு, வசனவடிவில் எழுதியவர் துர்க்காதாஸ், எஸ்.கே. ஸ்வாமி, பக்கம்.10
35. மேலது பக்கம் 7.
36. வீர வன்னியர் கதை, பக்கம் 48.
37. மேலது பக்கம் 58
38. மேலது பக்கம் 73

39. மேலது பக்கங்கள் 143–144

40. டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன், பதிப்பாசிரியர், நடன. காசிநாதன், பொதுப்பதிப்பாசிரியர், (1995).

41. மேலது, பக்கங்கள் 2–3

42. மேலது, பக்கங்கள் 4–5

43. மேலது பக்கங்கள், 8–9

44. வன்னியபுராணம், பக்கம் 139

45. மேலது, பக்கம் 12

46. மேலது பக்கங்கள் 22–23

47. மேலது பக்கம் 23,

48. நடன காசிநாதன், பன்னாட்டார் பட்டயம், கல்வெட்டு (காலாண்டிதழ்) 22, (1989, மே திங்கள்), பக்கங்கள் 25–46

49. இடங்கை வலங்கைப் புராணம், மேலது, பக்கங்கள் 19–22

50. கோ. கதிர்வேல் முதலியார், ஏகாம்பரநாதருலா, அருள்நெறி மன்ற வெளியீடு, (1989), பக்கம், 144, வரிகள் 101–102

51. மேலது வரி 146

52. மேலது வரிகள் 150–151

53. மேலது, வரிகள் 320–321

54. மேலது, வரி 61

55. .திக்குவிசய விலாசம், பாடல் 18

56. செந்தமிழ், தொகுதி ங (3), விசுவாவசு, ஆனி பகுதி அ(8), பக்கங்கள் 295–296

57. கருணாகரத் தொண்ட வன்னியனார் சதகம், பாடல் 68

58. கூடல் இருவாட்சிப்புலவர், திருக்கைவளம்.

58ஏ. ஆர் ராமசேஷன் எம்.ஏ., 'அரியலூர் மழவராயர்கள்' திருச்சிராப்பள்ளி மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு மலர், தொ.து. வெளியீடு.

59. கம்பர், திருக்கைவளம், பாடல் 63

60. மேலது, பாடல் 33

61. மேலது, பாடல் 70

62. மேலது, பாடல் 76

63. செந்தமிழ், தொகுதி (3) விசுவாவசு, ஐபபசி பகுதி கஉ (12), 'இரட்டையர்', பக்கம் சசரு (445)

64. கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப்புலவர், தனிப்பாடல் திரட்டு (முதல் தொகுதி) (1963), பக்கங்கள் 200-201, பாடல்கள், 566, 567, 568, 569

65. மேலது, பக்கம் 237, பாடல் 641

66. மேலது, பக்கம் 237, பாடல் 642

67. மேலது, பக்கங்கள் 308-309

68. ஆர். ராமசேஷன், முன்கூறிய கட்டுரை, திருச்சிராப்பள்ளி மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு மலர் தொ து. வெளியீடு.

69. மேலது

70. கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப் புலவர், தனிப்பாடல் திரட்டு (முதல் தொகுதி) (1963), பக்கம் 376

71. தொண்டமண்டல சதகம், பாடல் 89

72. எழில் நிலவனார், வன்னியர் உரிமை முழக்கம், 1977, பக்கம் 20

73. Dr. Indrapala. K, The Ceylon Journal of the humanities, Vol. I, July, 1970 Number two; 'The origin of the Vanni Chief tancies of Ceylon; p. 116.

74. எஸ். ஞானப்ரகாசர், யாழ்ப்பாணவைபவ விமர்சனம், (அச்சுவேலி 1928) பக்கம் 41

75. புலவர் மணி, திருவிளையாடற்புராணம் மற்றும் தசாவதாரம், ஏழாம் பதிப்பு (1972), பக்கங்கள் 147-149

76. க. குழந்தைவேலன், பதிபபாசிரியர், பாளையப பட்டுக்களின் வரலாறு. தொகுதி 3, த.நா அ. தொ. துறை வெளியீடு (1981), பக்கங்கள் 88-93

77. அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடி டி.2841

78 அரு. ராமநாதன் தயாரிபபு, வீரவன்னியர் கதை

79 Madura Vijayam, Canto IV, Verses 67 and 82

80. Saluvabhyudayam, Canto 1, 46-47

81. Jaimini Bharatamu, Canto 1, 33–34

82. Ramabhyudayam

82ஏ. ARE. for 1937, part II, p. 85

83. M.S. Govindasamy, Role of Feudatories in Later Chola History, p.202.

84. Elu Attanagalavamsa ed. P. Aryaratna, (Colombo 1932), p.41.

85. The Ceylon Journal of the Humanities, Vol. I, No.II, p.121.

86. Nikaya Sangrahaya, ed. D.P.R. Samaranayaka (Colombo 1960), p.20.

87. மேலே குறிப்பிடப்பட்ட நூல் பக்கம் 122

88. மேலது பக்கம் 123

89. S. Casie Chetty, Ceylon Gazetteer (Colombo 1834), p. 190; யாழ்ப்பாண வைபவமாலை ed. கே. சபாநாதன், கொழும்பு 1953, ப. 8

90. F.C.X. Nataraja (Colombo 1962), ed. Mattakkalappu Manmiyam, p. 95

91. இந்திரபாலா, மேலே குறிப்பிடப்பட்ட நூல், பக்கம், 126.

91ஏ. மேலது. பக்கம் 132

92. S.I.I. Vol. V.No. 716

93. Ibid. No. 157

93A. Ibid, No. 157

94. Ibid. Vol. VII No. 500

95. Ibid. Vol. II, No. 66

96. ARE. of 1920, No 556 of 1919

97. S.I.I. Vol. III, No. 29, 1-10, p. 59, S.I.I Vol. VIII, No. 1, p. 1

98. K.A.N. Colas, Second Edition, 1955, p. 278

99 S I.I. Vol. II, No 66, line 15

100. ARE. 422 of 1922

101. S.I.I. Vol 19, No. 205

102 Ibid. Vol. 2, No. 94 line 7

103. ARE 227 of 1902, S.I.I. Vol. 7, No. 854
104. Dr. M.S. Govindasamy, 'The Role of Feudatories in later Chola History, Ch. IX, p. 189
105. *டாக்டர் கோ. திருமாவளவன், சம்புவரையர் (1990) பக்கம் 21;* A.R.E. 138 of 1896
106. N. Sethuraman, 'The Sambuvarayas of the 14th century" J.E.S.I, Mysore, Vol. XIII, (1986)
107. V. Venkatasubba Aiyar, 'Two Inscriptions of Kampana from Madam, E.I. Vol. XXVIII, No. 28, Appendix p. 163
108. ARSIE, 1915, No. 163
109. ARE 190, 194, 195 of 1904
110. ARE 234 of 1910; S.I.I. Vol. IV. No. 849
111. S.I.I. Vol. III, p. 123
112. ARE 52 of 1900, 183 of 1916
113. ARE 162 of 1939-40
114. ARE for 1912, Part II, para 1
115. ARE for 1910, Part II, para 60
116. ARE for 1940-43, p. 256; p. 233, Part II, para 42, B 18
117. ARE for 1940-43, p. 233; para 41, A 39.
118. ARE 137 of 1900; S.I.I. Vol. 7, No. 150
119. ARE 124 of 1902
120. ARE 44 of 1898; S.I.I. Vol. 6. No. 327; ARE 64 of 1900; 174 of 1904.
121. ARE 219 of 1904.
122. S.I.I. Vol. 2.
123. ARE 360 of 1902
124. ARE 394 of 1921
125. ARE 200 of 1928-29

126. ARE 227 of 1904; டாக்டர் கோ. தங்கவேலு, இல. தியாகராசன்; சம்புவராயர் வரலாறு, (1990) பக்கம் 12
127. ARE 183 of 1973-74; 35 of 1913
128. ARE 35 of 1913
129. Ibid 324 of 1911
130. Ibid 142 of 1921
131. Ibid 139 of 1924;
132. Ibid 389 of 1925
133. Ibid 200 of 1904 'பள்ளிப்பேறு' என்பதை ஒரு வரி என்று கோ. தங்கவேலுவும் இல. தியாகராசனும் பொருள் கொண்டிருக்கின்றனர். அதுசரியாகப் படவில்லை.
134. ARE 276 of 1943-44
135. Ibid 34 of 1913. 253 of 1926
136. K. Indrapala, Kilakkilangai Cacanankal, Cintanai (Tamil) II, Nos 2 and 3, July - Octo 1968 (Peradeniya) pp. 35-40
137. சாசனம் 1227, தென்னிந்திய கோயிற்சாசனங்கள், பாகம் 3, பகுதி 1, 1955, பக்கம் 1242-43
138. M.R. Ry. Sri Kachi Chinna Nallappa Kalaka Thola Udaiyar Avergal, Zamindar of Udayarpalayam (Trichinopoly District) pp. 8, 9 and 10.
139. சாசனம் 1257 (டி. 2944எ), தெ. கோ. சா. பாகம் III பகுதி 11, பக்கம், 1378-1381.
140. சாசனம் 1258, தெ. கோ. சாசனம் பாகம் III, பகுதி 11, பக்கங்கள் 1381-1384.
141. Dr. Indrapala, Op.Cit, p. III, Foot Note. It is said that the first is referred to in Ceylon Gazetteer ed by S. Casie Chetty in page. No. 190-191 and the other is in the possession of Mr. S. Siva Kolunthu of Kalliyankadu.
142. S.L.I. No. 21, T.S.I. 1886, p. 150, Catalogue of Copper-plate grants, Govt Museum, Madras, 1918, p. 69, Private grant - 6.

143. திருமதி மண்டோதரி கணேசனிடமிருந்த இச்செப்புப் பட்டயத்தைக் கவிஞர் தமிழ் நாடன், வி.ஆர். துரைசாமி, எம்.எம். மணி ஆகியோர் ஆய்வு செய்துள்ளனர்.

144. நெய்வேலி என்.எஸ் பெரியசாமியிடமிருந்து புலவர் தாமரைக்கண்ணன் பெற்று வந்தார். கல்வெட்டு, காலாண்டிதழ் (1989 மே திங்கள்), தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு எண். 22 பக்கங்கள் 25–46; இச்செப்பேடு பற்றி அறிமுகக் கட்டுரையொன்றை, செல்வராஜ், தமிழாசிரியர்கள் கருத்தரங்கு மலரில் எழுதியிருக்கிறார்.

145. இச்செப்புப் பட்டயம் பற்றிய ஒரு கட்டுரையின் நகலை எனக்கு அனுப்பி வைத்தார். எந்தச் சந்தர்ப்பத்தில் இந்த கட்டுரையை எழுதினார் என்பது தெரியவில்லை.

146. Catalogue of Copper - plate grants, Petty chiefs and Zamindars - 14, page 62.

147. Ibid Petty Chiefs and Zamindars - 20, page, 63.

148. A book, M.R. Ry Sri Kachi Chinna Nallappa Kalaka Thola Udaiyar Avergal, p. 22.

149. Catalogue of Copper-plate Grants in the Govt. Museum, Madras (1918) p. 66

150. M.R. Ry. Op. Cit, p. 4

151. Ibid pp 29-30

152. Ibid p. 30

153. Catalogue of Copper-plate grants, private Grant - 27, pp. 75-76.

154. Natana. Kasinathan, Collected papers (Studies in Tamil Culture) (1994), pp. 94-97.

155. புலவர் செ. இராசு, எம், ஏ., 'வடகால் செபேடு', தேனோலை, காலாண்டிதழ், எண். 36, 1993, ஏப்ரல். இச் செப்பேட்டை முதன் முதலில் பார்வையிட்ட சுந்தரேச வாண்டையார் 1.11.1960ல் சுதேசமித்திரன் நாளிதழில் சுருக்கமான செய்தி வெளியிட்டிருக்கிறார்.

156. டாக்டர். கோ. தெய்வநாயகம், தருமை ஆதீனச் செப்பேடுகள், *(1988) பட்டயம் எண். 7 பக்கங்கள் 54–56.*

157. மேலது, *பட்டயம் எண்.8, பக்கங்கள் 63–65*

158. மேலது, *பட்டயம் எண்.9, பக்கங்கள் 71.*

159. *கி. தண்டபாணி, மேச்சேரி, 'மல்லிகுந்தம் பட்டயம்' தேனோலை, எண்–6, 1975, அக்டோபர், பக்கங்கள் 37–42*

160. *மேலது, பக்கம் 38,*

161. *கொடுமுடி, சண்முகப் பிரகதம் 'பரராசசேகரன் பட்டயம்' தேனோலை, எண். 8, ஏப்ரல் 1974, பக்கங்கள் 12–14.*

162. *சு. துரைசாமி நாயகர், வன்னி குலாதிக்கம், (1966) பக்கம் 97–98.*

163. *மேலது, பக்கங்கள் 40–45*

164. *மேலது, பக்கங்கள் 45–49.*

165. *மேலது, பக்கங்கள் 49–50*

166. *மேலது, பக்கங்கள் 53–54*

167. *மேலது, பக்கங்கள் 55–56*

168. *எஸ்.ஐ.டி.ஐ. வால்யூம்–3, பாகம்–1 எண்.1226, பக்கம் 1242*

169. Ibid, No. 1230, pp. 1244-1245

170. Ibid, No. 1231, pp. 1245-1246

171. T.N. Subramaniam, South Indian Temple Inscriptions, Vol. III part II, p. 1325 (1957)

172. Ibid p. 1325

173. S.I.T.I. *சாசனம் எண்கள் 1274–1279*

174. *திருச்சி வே. ஆனைமுத்து, பதிப்பாசிரியர், பார்ப்பாரும் வேளாரும் பறித்துக் கொண்ட வன்னியரின் மன்னவேடு ஊர்கள், (1993), பக்கங்கள் 71–94*

175. *எஸ்.ஐ.டி.ஐ. வால்யூம் 2, பக்கம் 652, சாசனம் 693 (டி.3641)*

176. *அ. அப்துல் மஜீத், மழவராயர் செப்பேடு, 'கல்வெட்டு' (காலாண்டிதழ்), இதழ் 19, பக்கங்கள் 19–22.*

177. E. Thurston, Castes and Tribes of Southern India, Vol. VI, P to S (1909) pp 24-28.

178. *இற்றைநாளில் கூட கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் வன்னியர் வாழும் பகுதியில், ஒவ்வொரு ஆண்டும் அறுவடைப் பருவத்தில் வருகிற சாதிப்பிள்ளையை 'உண்டுபிலி' என்றுதான் மக்கள் அழைக்கிறார்கள்.*

179. Ibid, P. 27.

180. Catalogue of Copper-plate grants in the Govt Museum, Madras, (1918), Private Grants, 1, pp. 66-67

181. Ibid, Private Grants, 35, p. 78

182. Ibid, Private Grants, 23, p. 74

183. E.Thurston, Castes and Tribes of Southern India, Vol. VI, P-S (1909), p. 3

184. Ibid, p. 4

185. *மேலது பக்கங்கள் 5–6*

186. Nelson, Manual of Madura District, E. Thurston, Op. Cit, p. 6.

187. *எம். என். காத்தமுத்து-நாடக ஆசிரியர், புதுப்பாளையம், கடலூர் என்.டி., தென்னாற்காடு மாவட்டம் (1968), சண்முகானந்த புத்தக சாலை, பார்க்டவுன், சென்னை – 600 003.*

188. E. Thurston, Op. Cit, p. 7

189. *எம்.என். காத்தமுத்து, கிருஷ்ணதேவராயன் சேந்தவராயன் சண்டை, பக்கம். 13.*

190. *மேலது நூல் பக்கம் 64*

191. Na.193-L, Chingleput District, A Topographical List of the Inscriptions of the Madras Presidency Vol. 1, (1919), p. 344.

192. *சுவடி எண். டி., 2793 டாக்டர் எஸ். சௌந்தர பாண்டியன், பதிப்பாசிரியர், (1995) பக்கங்கள் 1–23*

193. *காலாண்டு இதழ் (1989, மே திங்கள்) எண். 22*

194. Senerat Parana Vitana, 'Civilization of the period, Economic, Political and Social conditions', ed H.C. Ray, University of Ceylon History of Ceylon (UCHC)', Colombo 1960, 1, ii, pp - 736 - 737

195. William Geiger, 'Die Vannis' Sitzungsherichte der Bayerischen Akedemie der wissenschaften, II, Heft 4 (Munchen, Juni 1941), pp 3-11.

196. S. Fowler Diary of 3rd May 1887, quoted in the MLR of NQC, II, No. 5, May. 1894.

197. இது ஏழாயிரம் பண்ணை பாளையப்பட்டு கைபீது என்றும் எழுதப்பட்டிருக்கிறது. சுவடி எண். டி.2841

198. பாளையப்பட்டுக்களின் வரலாறு, தொகு 3 (1981) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, பக்கங்கள் 88-93.

199. அளகாபுரி சமீந்தார் பூறுவோத்திரம் கைபீது, எண்.டி.2849

200. பாளையப்பட்டுக்களின் வரலாறு, பொறுப்பாசிரியர் டாக்டர் இரா. நாகசாமி (1981), பக்கங்கள் 136-143.

201. Mackenzie Manuscript, Serial No. 4963, Record No. 3168.

202. அ. குருநாதன், வல்லாளமகாராஜன் புகழ் சரித்திரம், (1983)

203. ஏ.ஆர்.இ. 499 & 509 ஆஃப் 1902

204. Natana, Kasinathan, Padavedu Excavation (1993), Published by the Tamilnadu State Department of Archaeology, Chennai - 600 113.

205. நடன காசிநாதன், 'அண்மையில் கண்டெடுக்கப்பெற்ற படவேட்டுச் செப்புத் திருமேனிகளும் அணிகலன்களும்,' 'கல்வெட்டு' (காலாண்டிதழ்), எண். 50-51, பக்கங்கள்-20-30; 'படவேட்டுச் செப்புத் திருமேனிகளும் அணிகலன்களும்', ஆவணம்:9 (1998) பக்கங்கள் 134-139.

## இயல் – இரண்டு

# வன்னியர் தொடக்கநிலை

வன்னியர் பற்றி தெரிவிக்கும் மிகப்பழமையான சான்று பாண்டி நாட்டில் கிடைக்கும் கல்வெட்டேயாகும். இக்கல்வெட்டு மதுரை மாவட்டம் கருங்காலக் குடிக்கு அருகிலுள்ள பஞ்சபாண்டவர்குட்டு என்னும் மலையில் சமணச் சிற்பங்கள் காணப்பெறும் இடத்துக்கு மேற்பகுதியில், இயற்கையாக அமைந்திருக்கும் மூன்று குகைகளில், ஒன்றில் பொறிக்கப் பெற்றிருக்கிறது. இது வட்டெழுத்தில் காணப்பெறுகிறது. ஆனால் மொழி தமிழாகும். பாடலாக உள்ளது. வழுதி அல்லது மீனவன் என்ற பாண்டிய மன்னனின் குறுநிலத் தலைவனான 'பள்ளிதரையன்' என்பான், கோயிலொன்றுக்கு அழகிய விமானம் அமைத்ததையும், கடலைத் தடுத்ததையும், தம் அறிவுத்திறத்தாலும், துறவு நிலையாலும், திருப்பொதியிலில் விலங்குகள் பலியிடுதலைத் தடுத்ததையும் விதந்து பாராட்டும் வகையில் அப்பாடல் அமைந்திருக்கிறது. கல்வெட்டின் எழுத்தமைதிகொண்டு இக்குறுநில மன்னனான பள்ளிதரையனும், பாண்டிய மன்னனும் கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாக இருக்கலாம் என்று கல்வெட்டுத் துறையினர் கணித்துள்ளனர்.[1] 'பள்ளிதரையன்' என்னும் சொல் பள்ளி அதியரையன் என்னும் சொற்களின் கூட்டுக் குறுக்கம் ஆகும். வாண அதியரையர், பிரம்ம அதி அரையர், வேட்டு அதி அரையர், கங்க அதி அரையர் ஆகியோர் இருந்தது போன்று பள்ளி அதி அரையர் இருந்திருக்கின்றனர் போலும். பாண்டிய மன்னனின் ஆட்சியின்கீழ் அடங்கிய குறுநிலத் தலைவர்களில் ஒருவராகப் பொதிகை மலைப் பகுதியிலோ அல்லது மதுரையை அடுத்துள்ள பகுதியிலோ பள்ளிதரையர் வாழ்ந்திருக்கின்றார் என்று தெரிகிறது. பள்ளி என்று குறிப்பிடப்படுவதால் இவர் வன்னியர் என்று கொள்ளலாம்.

வன்னியர் பற்றி அடுத்துத் தெரிவது சோழ மன்னன் கண்டாராதித்தன் (கி.பி. 955–963) காலத்தியக் கல்வெட்டு மூலம்

ஆகும்.[2] இக்கல்வெட்டில் வன்னியப் பெண்ணொருத்தி 'உறையூர் வன்னி நங்கலி வெள்ளி குணவி' என்று குறிக்கப் படுகிறாள். இவள் உறையூரைச் சார்ந்தவள் என்று தெரிகிறது. உறையூர் சங்ககாலச் சோழர்களின் தலைநகரமாகவும், பிற்காலச் சோழர்களின் ஆட்சிப் பகுதியின் தென்னெல்லையில் அமைந்திருந்த முக்கிய நகரமாகவும் விளங்கியது. ஆதலால் அங்கும் வன்னியர் வாழ்ந்திருக்கின்றனர் என்பது புலனாகிறது.

முதலாம் இராசராசனின் தந்தையான சுந்தர சோழன் கல்வெட்டுக்களிலும், முதலாம் இராசராசனின் கல்வெட்டிலும் தெளிவாகவே வன்னியர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சுந்தரசோழன் காலத்தியக் கல்வெட்டொன்றில் 'பாரதாயன் பள்ளி'[3] என்றொருவனும், மற்றொரு கல்வெட்டில் 'ஓமயிந்தன் முந்நூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம்'[4] என்பானும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஓமயிந்தன் என்பது ஓய்மா நாட்டைச் சேர்ந்தவன் என்பதாக இருக்கலாம். முந்நூற்றுவன் என்பது முந்நூறு என்னும் ஊரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். விக்கிரமசோழன் காலத்தியக் கல்வெட்டில் ஓய்மா நாட்டு முந்நூற்றுப் பள்ளி செங்கேனி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் ராஜேந்திரசோழச் சம்புவராயன் பேசப்படுகிறான். ஆதலால் கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதலே ஓய்மா நாட்டில் உள்ள முந்நூற்றைச் சேர்ந்த பள்ளிகள் சோழப் பேரரசைச் சார்ந்த குறு நிலத் தலைவர்களுள் முக்கியமானவர்களாக குறிக்கப்படுவதை அறியமுடிகிறது. ஓய்மா நாடு என்பது தற்போதுள்ள திண்டிவனத்தைத் தலைநகரமாகக் கொண்ட பகுதியாகும்.

முதலாம் இராசராசன் காலத்தியக் கல்வெட்டில் வன்னியர், "தொங்கர்" என்று அழைக்கப்பட்டுள்ளனர். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணப்பெறும் கல் வெட்டில், அக்கோயிலில் பணி செய்யும் நிவந்தக்காரர்களுக்கு அளிக்கப் பெற்ற ஊதிய விபரம் தரப்பட்டுள்ளது. அதில்,

*"திருப் பள்ளித் தொங்கல் பிடிக்கு உள்படுவான்*
*ஒருவனுக்கு பங்கு ஒன்றும்; ஆள் பதின்மர்க்குப்*
*பேராற் பங்கு எட்டுமாவும் ஆக உடையான்*
*திருவிசலூரான் மும்முடி சோழத் தொங்கற் பேரை-*
*யனுக்கும், குப்படி வன்னியான க்ஷத்ரியசிகா-*
*மணித் தொங்கற் பேரையனுக்குமாகப் பங்கு ஐஞ்சும்".*

என்ற விபரம் காணப்படுகிறது.[5] அதாவது திருப்பள்ளித் தொங்கல் பிடிக்கு உள்படுவானான திருவிசலூரான் மும்முடிசோழத் தொங்கற்பேரையனுக்குப் பங்கு ஒன்று;

அவனுக்கு உதவிக்காகப் பத்துபேருக்கு, ஆள் ஒருவருக்கு எட்டு மா வீதம் பத்து ஆளுக்கு 80 மா. எண்பது மா என்பது நான்கு கழஞ்சு, அதாவது நான்கு பங்கு. இந்த நான்கு பங்கும் குப்படி வன்னியான க்ஷத்ரியசிகாமணித் தொங்கற் பேரையனுக்கு என்று தெரிகிறது.

மேற்காணும கல்வெட்டிலிருந்து திருவிசலூரான் மும்முடி சோழத் தொங்கற் பேரையனும் குப்படி வன்னியான க்ஷத்ரியசிகாமணித் தொங்கற் பேரையனும் வன்னியர்கள் என்பதும், இவர்கள் திருப்பள்ளித் தொங்கலைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதும், திருப்பள்ளித் தொங் கலைப் பிடிக்கும் பணியில் வன்னியர் ஈடுபட்டிருந்ததால்தான் 'பள்ளி' என்று அழைக்கப் பெற்றனர் போலும் என்பதும் தெரியவருகிறது.

பேரரசன் இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திரன் காலத்தியக் கல்வெட்டினால்[6] சாளுக்கியர்களின் படைத்தலைவன் ஒருவன் 'வன்னியரேவன்' என்று இருந்திருக் கிறான் என்பதும் தெரிகிறது. சாளுக்கியர் நாட்டிலுள்ள கெம்பாவிப் பகுதியை கி.பி. 1054–55ல் ஆட்சி புரிந்த ரேவரசனாக இவன் இருக்கலாம் என்று வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் தெரிவித்திருப்பதால்[7] ஆந்திரப் பகுதியில் வன்னியர் கி.பி. 11–ஆம் நூற்றாண்டளவில் ஒரு சிறு நிலப்பகுதியை ஆளுகின்ற வகையில் சிறந்து விளங்கியிருக் கின்றனர் என்று உணர்முடிகிறது.

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்நாடு பகுதி "பள்ளிதேச 300" என்று வழங்கப்பெற்றிருக்கிறது.[8] இப்பகுதியே "பல்லி நாண்டு 300" என்ற நாட்டுப் பிரிவாகச் சக ஆண்டு 1056–ல் குறிக்கப்பெற்றிருப்பது ஹைஹேயர் கல்–வெட்டினால் தெரியவருகிறது.[9] மேலும் இதே மாவட்டம், இதே வட்டத்திலிருந்த 'குரசால' என்னும் ஊரிலிருந்து கிடைத்துள்ள செப்புப் பட்டயத்திலும் "பள்ளிராஷ்ட்ரம்" என்னும் நாட்டுப் பிரிவு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பட்டயம் சளுக்கிய மன்னன் முதலாம் ஜயசிம்ஹனின் காலத்தைச் சார்ந்ததாகும்.[10]

முதற் குலோத்துங்கச் சோழனின் கலிங்கப் படையெடுப்பின்போது, கலிங்கப் பகுதியின் ஒரு சிறு பகுதியைச் சம்புச் சோழன் ஆட்சி செய்து வந்ததையும், அம்மன்னின் இராட்டிரகூடப் பிரமுகர்கள் இருவர் பெரிய சம்புவராயன், சிறிய சம்புவராயன் என்னும் பெயரில் இருந்திருக்கிறார்கள் என்பதையும் முன்னமே கண்டோம்.[11] அவர்கள் சம்புவராய குலத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் என்று ஆராய்ச்சி யாளர்கள் கருதியுள்ளனர்.[12] இவர்களும் சோழ மன்னனுக்காகக் கலிங்கப் போரில் கருணாகரத் தொண்டை வன்னியனோடு சேர்ந்து போர் புரிந்திருக்கிறார்கள். இவர்கள் முதலாம் இராசேந் திரனின் கங்கை படையெடுப்பின்போது இராட்டிரகூடப் பகுதியில் தங்கிவிட்டவர்களாக இருக்கலாம். அங்கு இராசேந்திர சோழனால் சிறுபகுதி இவர்களுக்கு அளிக்கப் பெற்று ஆட்சி செய்து வந்திருக்கலாம். எனவே சம்புவராய குலத்தைச் சேர்ந்த வன்னியர் வடக்கே இராட்டிர கூடப் பகுதிவரையிலும், 'பள்ளி' என்னும் பெயரில் தெற்கே பொதிகைமலைப் பகுதி வரையிலும் கி.பி. 9–10ஆம் நூற்றாண் டளவிலேயே வாழ்ந்திருக்கின்றனர் என்பதும், சிற்றரசர் நிலையை அவர்கள் வகித்து வந்திருக்கின்றனர் என்பதும் மேற்காணும் கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயம் ஆகியவற்றால் தெரிய வருகின்றன.

முதலாம் இராசராசன் காலத்திலேயே சில வன்னியர் நில உடைமையாளர்களாக மாறிவிட்டனர் என்பது அம்மன்னன் காலத்தியக் கல்வெட்டு குறிப்பிடும் 'வன்னியப் பற்று' என்னும் சொல்லால் புலனாகிறது.[13]

ஆனாலும் 'வில்' தான் அவர்களது முக்கிய ஆயுதம் என்பதும்; வேட்டையாடும் தொழிலும், போர்புரியும் தொழிலும்தான் அவர்களது தொடக்கத் தொழில்கள் என்பதும் பல கல்வெட்டுச் சான்றுகளால் தெரியவருகின்றன.

போர் புரிவதையும், சிறு நிலப்பகுதியை ஆட்சி செய்வதையும் தொழிலாகக் கொண்டவர்கள் 'வன்னி அல்லது வன்னியர்' என்று அழைக்கப்பட்டனர். வேட்டையாடும் தொழிலையும், வேளாண்மைத் தொழிலையும் மேற்கொண்ட வர்கள் 'குடிப்பள்ளி' என்று வழங்கப்பெற்றனர் போலும். வில்லைப் படைக்கலனாகக் கொண்டு இவர்கள் போர் புரிந்ததால் 'வில்லி'கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

'குடிப்பள்ளி' என்றும், 'செங்கேணி சம்புவராயர்' என்றும் 'வில்லிகள்' என்றும் வன்னியரைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன.

சமுதாய அமைப்பில் வன்னியர் நில உடைமையாளர்களாகவும், வேளாண் தொழில் செய்பவர்களாகவும் மாறிய பிறகு 'குடிப்பள்ளி' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. 'பள்ளி' என்று மட்டும் தொடக்கத்தில் அழைக்கப் பெற்றவர் நில உடைமையாளர்களாக ஏற்றம் பெற்றதும் 'குடிப்பள்ளி' என்று அழைக்கப் பெற்றனர் என்று தெரிகிறது.

இவர்கள் குறு நிலப்பகுதிகளுக்குக் காவலர்களாக ஆனபொழுது 'அரையர்' என்றழைக்கப் பெற்றிருக்கின்றனர். இவர்களுக்கு என்று ஒரு புராணத்தை ஏற்படுத்திக் கொண்டு, சம்பு என்ற சிவபெருமானின் அல்லது சம்பு என்ற முனிவரின் வழிவந்தவர் என்று கூறிக்கொண்டபோது 'சம்புவரையர்' என்று அழைக்கப்படலாயினர் என்று கருதப்படுகிறது. ஒருவேளை சம்புப் பகுதியை இவர்கள் ஆட்சி செய்து வந்ததால் 'சம்புவராயர்' என்று பெயர் பெற்றனரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. ஓய்மா நாட்டிலிருந்த முஞ்னூற்றைச் சேர்ந்த பகுதி முன்னாளில் 'சம்புப் பகுதி' என்றழைக்கப் பெற்றதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. 'செங்கேணி நாடு'[14] என்று குறிப்பிடப் படுவதும் இதைத்தானோ என்ற சந்தேகமும் எழுகிறது. சோழ நாட்டை ஆட்சி செய்தவர்கள் 'சோழர்' என்றும், சேர நாட்டை ஆட்சி செய்தவர்கள் 'சேரர்' என்றும் அழைக்கப் பெற்றது போன்றும்; மற்றும் கச்சிப் பகுதியை ஆண்டு வந்தவர் 'கச்சியரையர்' என்றும், வாணகோப்பாடி பகுதியை ஆண்டு வந்தவர் 'வாணராயர்' என்றும், சேதிப் பகுதியான திருக்கோயிலூர்ப் பகுதியை ஆட்சி புரிந்து வந்ததால் 'சேதி யரையர்' என்றும் பெயர் பெற்றிருந்தது போன்று, சம்புப் பகுதியை ஆட்சி புரிந்து வந்ததால் 'சம்புவரையர்' என்றும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

பள்ளிகள் வேளாண்மைத் தொழிலுக்கு வருவதற்கு முன்னர் வேட்டைத் தொழிலை மேற்கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் வேட்டையாடச் சென்றபோது தங்களது கைப்பிழையால் சிலர்மீது தங்கள் அம்பை எய்துவிட, அதன் காரணமாக இறந்தவர்களுக்குத் தங்கள் சமூகத்தார் வழங்கிய தண்டனையின் பேரில் அளித்த கொடைகள் பற்றி கூறும் பல கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன.

"விருக வேட்டை போறவிடத்தில் சூற்றி
மகன் கொங்கன் செல்வ முத்தரையன்
செடத்தில் விருகத்தை தப்பி புலியனை
பட புலியன் பட்டவாறே பன்னாட்டார்
திரண்டு திருவோத்தூருடையார்க்கு செல்வ
முத்தரையனை இடுவிச்சு பகை அறவிடு
விச்ச பசு பதினாறு"[15]

"வயலூரிலிருக்கும் காடந் மகந் வேட்டை
போறயிடத்து எழுவந் கைப்பிழையால்
வீரர்பட பந்நாட்டார் கூடி
துரணான்டீசுரர்க்கு அரை விளக்கு
வைக்க சொல்லி"[16]

பள்ளிகளான சம்புவராயர் வேட்டைத் தொழில் செய்து வந்ததால், வேட்டுவர்களுக்கும் இவர்களுக்கும் மிகுந்த நட்பும் மிகுந்த மரியாதையும் இருந்து வந்ததுவும் தெரியவருகிறது. சம்புவராயர்கள் நன்றாக இருப்பதற்காக வேட்டை விச்சாதிரர் பனங்காட்டு நாயனாருக்கு அமுதுபடி அளித்திருப்பது கீழ்க்காணும் கல்வெட்டால் புலனாகிறது.

"திருப்பனங்காடான உள்ளூரும்
திருவெல்லையும் ஸ்ரீகோயிலுமான
திருக்கண்ணப்ப விளாகமுஞ் சிறு
பநங்காட்டில் வடக்கிலுடைய நாய
னார்க்கு திருவமுதுபடி செலுத்துவ
தாகச் சம்மதித்து சம்புவராயர்
களுக்கு நன்றாக விட்டோம் வேட்டை
விச்சாதிரரோம். இதுக்கழிவு சொல்
லுவார் வேட்டைக்காரரும் திருக்கண்ணப்ப
வம்சமு மல்லாதார்"[17]

மேற்காணும் ஒரு சில எடுத்துக் காட்டுக்களிலிருந்து பள்ளிகள் தங்களைப் 'பன்னாட்டார்', 'சம்புவராயர்' என்று அழைத்துக் கொண்டதும் அறியமுடிகிறது.

## அடிகுறிப்புகள்

1. ARE Report for the year 1912, part II, Para 1, p.50
2. S.I.I.Vol. V, No.716
3. Ibid. No.157

4. Ibid. Vol.VII, No.500

5. S.I.I. Vol. 2, No.66

6. Ibid Vol.3, No.29, 1-10; S.I.I.Vol.VIII, No.1, p.1.

7. K.A. Nilakanta Sastri. Colas, Second Edition, 1955, P.278

8. ARE 1910, Part II, Para 60.

9. Ibid 1940-43, p.256, p.233, Part II. Para 42, B.18

10. Ibid 1940-43, p.233, Para 41, A49

11. E.I.Vol, XXXIX, pp. 205, ff See also ARSIE, 1918, C.P.4, **Part II**, PP.170-171.

12. Ibid P.207. ARSIE, 1918, Part II, P.171

13. ARE of 1920, No, 556 of 1919

14. ARE. 222 of 1902

15. ARE. 77 of 1900

16. Ibid 66 of 1900

17. ARE 247 of 1906 இக்கல்வெட்டின் பொருளைச் சற்று மாறுதலாகக் கொண்டுவிட்ட காரணத்தால் டாக்டர் கோ. தங்கவேலுவும், இல. தியாகராசனும் பள்ளிகள் தங்களைக் கண்ணப்பர் வழி வந்தோர் என்றும் அழைத்துக் கொண்டனர் என்று தெரிவித்திருக்கின்றனர். (சம்புராயர் வரலாறு பக்கம் 11). அது சரியாகப்படவில்லை.

இயல் – மூன்று

# வன்னியச் சிற்றரசர்கள்

## (சோழர்களின் கீழ்)

### பள்ளிதரையன்

பாண்டிநாட்டில் குறுநிலத் தலைவனாகப் 'பள்ளி தரையன்' என்னும் வன்னியர் விளங்கியதையும் அவன் சில அறச் செயல்கள் புரிந்திருத்தலையும் முன்னரே காணப்பட்டது.[1] இவன்காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

### ஓமயிந்தன் முன்னூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம்

சோழ மன்னன் சுந்தரசோழன் காலத்தில் (கி.பி. 10ஆம் நூற்றாண்டு) 'ஓமயிந்தன் முந்நூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம்' என்னும் வன்னியன் பேசப்படுகின்றான்.[2] இவன் முந்நூற்றூர் செங்கேணி சம்புவராயர்களின் முன்னோடி யாக இருக்கலாம். ஆதலால் சுந்தரசோழன் காலத்திலேயே செங்கேணி சம்புவராயர்கள் என்னும் வன்னியர்கள் குறுநில மன்னர்களின் நிலையைப் பெறத் தொடங்கிவிட்டனர் என்பது தேற்றம். இக் குறுநில மன்னர்கள், தொடக்கக் காலத்தில் சோழப் பேரரசுக்கும், பின்னர் பாண்டியப் பேரரசுக்கும் அடங்கி ஆட்சி புரிந்தனர்.

### செங்கேணி சாத்த நாலாயிரவன் என்னும் கரிகாலச் சோழ செங்கேணி நாடாழ்வான்

கி.பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அதாவது சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரனுடைய மகன்களில் ஒருவரான அதிராஜேந்திரனின் காலம் முதல் 'செங்கேணி நாட்டை' ஆண்ட குறுநில மன்னர்களாகச் சம்புவரார்யர் குறிக்கப்படுகின்றனர். அவர்களில், அதிராஜேந்திரனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1068) கல்வெட்டில் செங்கேணி சாத்த நாலாயிரவன் என்னும் கரிகாலச் சோழ செங்கேணி நாடாழ்வான் என்பவன் பேசப்படுகிறான்.[3]

இவனைப் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டு திண்டிவனத்தின் ஒரு பகுதியான கிடங்கிலில் காணப்பெறுகிறது. நாலாயிரவன் என்னும் அடைமொழி நாலாயிரம் படைவீரர்களைக் கொண்ட காலாட்படையை உடையவன் என்பதைக் குறிப்பதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் ராஜேந்திர சோழ சம்புவராயன்

அடுத்து கி.பி. 1118-ல் ஓய்மா நாட்டு முந்நூற்றுப் பள்ளி செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் ராஜேந்திர சோழச் சம்புவராயன் காணப்படுகிறான். இவன் செங்கேணி சாத்த நாலாயிரவனின் பெயரனாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இக்குறுநில மன்னன் பத்துக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளான். இக்கல்வெட்டுக்கள் விக்ரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன் மற்றும் இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தியவைகளாகும். அதாவது கி.பி. 1123லிருந்து கி.பி. 1174 முடிய உள்ள காலத்தில் எழுதப்பெற்றிருக்கின்றன. வேலூர் மாவட்டம், திருவல்லம்,[4] வாயலூர்,[5] காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம்,[6] திருவண்ணாமலை மாவட்டம் சீயமங்கலம்[7], மடம்[8], தேவனூர்[9]; திருக்கழுக்குன்றம்[10] ஆகிய இடங்களில் மேற்காணும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

விக்ரம சோழனது திருக்கழுக்குன்றம் கல்வெட்டில் ராஜேந்திர சோழச் சம்புவராயனின் மனைவி தவஞ் செய்தாள் என்னும் முலையெழுந்த பெருமாள் புழல் கோட்டத்துச் செம்பியன் மணவியில் உள்ள பள்ளியறை நாச்சியார்க்குப் பல ஆபரணங்களைக் கொடையாக வழங்கியிருப்பது குறிக்கப் பட்டிருக்கிறது. வாயலூரில் காணப்பெறும் கல்வெட்டில் இம்மன்னன் தூம்போடு குளங்கள் அமைத்ததையும், கோயில்கள் கட்டியதையும், நிலங்களைத் திருத்தி வேளாண் மைக்குத் தயார் செய்து தந்ததையும், தம் ஆட்சிக்குட்பட்ட மக்களைக் காப்பாற்றியதையும் காணமுடிகிறது. அதன் காரணமாக இவன் மக்களிடத்தில் பெரும் செல்வாக்கோடு திகழ்ந்ததும் தெரியவருகிறது. திருவண்ணாமலை மாவட்டம் மடம் என்னும் ஊரில் உள்ள கல்வெட்டு ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து, தென்னாற்றூர் நாட்டுக் குளத்தூர் திருவக்நீஸ்வரமுடைய நாயனார்க்கு திருபபடி

மாற்றுக்கும் திருச்சாந்தாடலுக்கும் (சந்தன அபிஷேகம்?) நிலக்கொடை வழங்கியதும் புலனாகிறது. மற்றொரு கல்வெட்டில்[11], இக்குறுநில மன்னன் திருப்புலிவலமுடைய நாயனார்க்குப் பூசைக்கும், திருப்பணிக்கும் தனக்குச் சேரவேண்டிய வரிகளைத் தானமாக வழங்கியது குறிக்கப் பட்டுள்ளது. மடம், திருப்புலிவனம் மற்றும் திருவொற்றியூர்[11a] கல்வெட்டுக்களில் இவன் செங்கேணி அத்திமல்லன் சம்புவராயன் என்று குறிக்கப்பட்டிருக்கிறான்.

திருவல்லம் கல்வெட்டு இவனது மற்றொரு மனைவியான இரண்டாயிரவி ஆசாரவல்லி என்பவளையும், அவள் திருவல்லத்திலிருந்த ஒரு மடத்தின் நிர்வாகத்துக்காக நிலக் கொடையளித்ததையும் குறிப்பிடுகிறது.[12] இராஜேந்திர சோழச் சம்புவராயன் பல கோயில்களை எடுப்பித்த காரணத்தால் இவனுக்குச் சிவாலாய சந்தோஷன் என்ற பட்டபெயரும் விளங்கியிருக்கிறது என்பது வந்தவாசி வட்டம் கீழ்ப்புத்தூர்க் கல்வெட்டினால்[13] தெரிய வருகிறது.

மேற்காணும் கலவெட்டுக்களைக் கொண்டு பார்க்கையில் தற்போதுள்ள வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பகுதி இவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்ததுவும், குடி மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்ததால், குடிமக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றவனாக இவன் விளங்கியதுவும் புலனாகிறது.

## செங்கேணி அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் எனும் ராஜநாராயண சம்புவராயன்

இவனுக்கு அடுத்து செங்கேணி அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் என்னும் ராஜநாராயண சம்புவராயன் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறான். வேலூர் மாவட்டம் திருவத்தியூரில் காணப்பெறும் விக்ரம சோழனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், செங்கேணி அம்மையப்பன் சீயனிடமிருந்து, 6½ கழஞ்சு பொன்னைப் பெற்றுக் கொண்டு அவ்வூர்க் கோயில் இறைவனை ஒவ்வொரு அமாவாசை நாளன்றும் வீதியுலா எழுந்தருளச் செய்ய, ஊரின் திருவுண்ணாழிகைச் சபையார் ஒப்பந்தச்சீட்டு எழுதித் தந்ததைக் குறிக்கிறது. இவன் மேலும் இரண்டாம் குலோத்துங்கன் காலம் முதல், இரண்டாம் இராஜராஜன்,

இரண்டாம் இராஜாதிராஜன் காலம் முடிய பேசப்படுகிறான். இவன் கல்வெட்டுக்கள் முந்நூர், அனந்த மங்கலம், அச்சரப்பாக்கம், மடம் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன.

இக்குறுநில மன்னன் செங்கேணி அத்திமலலன் என்னும் ராஜேந்திர சோழச் சம்புவராயனோடும், ஓதுவான் என்னும் ராஜகம்பீரச் சம்புவராயனோடும் சேர்ந்து அத்தியாண்டான் என்னும் விக்ரமசோழச் சம்புவராயனுகவு எதிராகச் செயல் பட்டிருக்கிறான்.[14] ஆதலால் அம்மையப்பன் பல்லவாண்டானது உடன்பிறந்தவர்களாகச் செங்கேணி அத்திமல்லனும், ஓதுவான் இராஜநாராயணனும் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் இவனுக்கு வீராகரன்,[15] வீராக்கட[16] என்ற பட்டப் பெயர்களும் வழங்கப்பெற்றிருக்கும் போன்று தோன்றுகிறது.

## செங்கேணி மிண்டன் சீயன் அம்மையப்பன் என்னும் எதிரிலி சோழ சம்புவராயன்

மேற்காணும் குறுநிலமன்னன் காலகட்டத்திலேயே செங்கேணி மிண்டன் சீயன் அம்மையப்பன் என்னும் எதிரிலிசோழ சம்புவராயன் குறிக்கப்படுகிறான். இவன் செங்கேணி அம்மையபபன் சீயன் பலலவாண்டான் என்னும் ராஜநாராயணச் சம்புவராயனின் மகனாக இருக்கலாம். இவனது கல்வெட்டுக்கள் திருக்கழுக்குன்றம், திருவல்லம், வாயலூர், திருப்புலிவனம், ஆர்ப்பாக்கம், அரகண்ட நல்லூர் ஆகிய ஊர்களில் பொறிக்கப் பெற்றிருக்கின்றன.

இவனைப் பற்றி தெரிவிக்கும் ஆர்பபாக்கம் கல்வெட்டு மிக முக்கிய வரலாறுச் செய்தியைப் புலப்படுத்துவதாக உள்ளது. பாண்டிய மன்னன் குலசேகரனைத் தோற்கடித்த இலங்கை நாட்டுப்படை, சோழ மன்னன இரண்டாம் இராஜாதிராஜனுடைய குறுநிலமன்னர்களையும் புறமுதுகிட்டு ஓடச் செய்து, சோழ நாட்டின் மீதும் படையெடுத்து வந்த செய்தி எதிரிலிசோழச் சம்புவராயனுக்குத் தெரியவரவே, சுவாமிதேவர் என்னும் ஒரு முனிவரை அணுகி இலங்கைப் படையால் சோழ நாட்டுக்கு எந்தத் தீங்கும் விளையாத வகையில் உதவி புரியும்படி வேண்டிக் கொண்டான். இலங்கைப் படையைத் தோற்கடிப்பதற்காகச் சுவாமிதேவரும் 28 நாட்கள் தொடர் பூசை செய்தார். அதன் காரணமாகச் சோழர் படை இலங்கைப் படையைத் தோற்கடித்துப புறமுதுகிட்டு ஓடச்

செய்தது. அதற்குக் கைம்மாறாகச் சுவாமிதேவருக்கு எதிரிலி சோழச் சம்புவராயன் ஆர்ப்பாக்கம் கிராமத்தையே அளித்து அதிலிருந்து கிடைக்கும் அனைத்து வருவாயையும் பெற்றுக் கொள்ளும்படி செய்திருக்கிறான்.[17] இலங்கை வரலாற்று நூலான மஹாவம்சமும்[18] இப்போர் பற்றியும், எதிரிலிசோழச் சம்புவராயன் சோழ மன்னனுக்கு உதவியாக இருந்தது பற்றியும் தெரிவிப்பதால் சம்புவராயன் சோழ மன்னனிடம் மிகவும் நன்றியோடு இருந்தது தெரியலாகிறது. ஒரு வரலாற்றாசிரியர் சம்புவராயர்களைப் பற்றி குறிப்பிடுகையில் 'குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பவர்கள்' என்றும் நம்பிக்கைத் துரோகம் (Treachery) செய்பவர்கள் என்றும் எழுதியிருக்கிறார்.[19] அவர் இத்தகைய சம்புவராய மன்னர்கள் இருந்ததை ஏன் மறந்து விட்டார் என்பது புரியவில்லை. மேலும் பல்லவர்களுக்குச் சிற்றரசாக இருந்து பாண்டியர்களைத் தோற்கடித்த சோழர், தக்க சமயம் வந்தபோது விஜயாலய சோழன் தலைமையில் தனியரசு அமைத்துக் கொண்டதை, சோழர், 'குழம்பிய குட்டையில் மீன் பிடித்துக் கொண்டார்கள்' எனவும், நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார்கள் (Treachery) எனவும் ஏன் கூறாதுவிட்டார் என்பதும் புரியவில்லை.

இடையார்ப் பாக்கத்தில் காணப்பெறும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய ஒரு கல்வெட்டில், செங்கேணி அம்மையப்பன் வன்னியநாயன் சம்புராஜன் என்பான் நிலம் வழங்கியது குறிக்கப்பெறுகிறது.[20] இக்குறுநிலத் தலைவன் செங்கேணி அம்மையப்பன் எதிரிலிசோழச் சம்புவராயனாகவே இருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. இவ்வூகம் சரியான தெனில் எதிரிலிசோழச் சம்புவராயன் மூன்றாம் குலோத் துங்கன் காலத்திலும் அவனுக்கடங்கிய சிற்றரசனாக ஆட்சி புரிந்திருக்கலாம்.

## அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் என்னும் கண்டர் சூரியன் சம்புவராயன்

மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் சம்புவராயச் சிற்றரசர்கள் பலர் இருந்தமை தெரியவருகிறது. அவர்களில் செங்கேணி கண்டர் சூரியன் சம்புவராயன் மிக முக்கியமானவனாக இருந்திருக்கிறான்.[21] சில கல்வெட்டுக்களில் இவன் அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் கண்டன் சூரியன் என்னும் ராஜராஜசம்புவராயன் என்றும்

குறிக்கப்பட்டுள்ளான்.[22] இவனது பாட்டனாக அம்மையப்பன் குலமாணிக்கம் பாண்டிநாடு கொண்டான் என்பான் இருந்திருப்பது மற்றொரு கல்வெட்டால் புலனாகிறது[23]

அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் என்னும் கண்டர் சூரியன் சம்புவராயன் 'கண்டர் கூளியனான ராஜராஜசம்புவராயன் என்னும் பட்டமும்[24] பெற்றிருந்தமை காஞ்சிபுரம் மாவட்டம் அச்சரபாக்கம் கல்வெட்டினால் உணர முடிகிறது.

கி.பி. 1191–ல் இச்சிற்றரசனும் ராஜராஜ மூவேந்தரையர், ஜனநாத மூவேந்தரையர் மற்றும் உலகுய்ய கொண்ட காடவராயர் ஆகியோரும் ராஜராஜ நீலகங்கரையனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு ஆபத்து நேருங்காலங்களில் நீலகங்கரையன் உதவி புரிய வேண்டும் என்று உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.[25]

மேற்காணும் ஒப்பந்தம் விரைவிலேயே முறிந்துவிட்டது என்பது இவர்கள் பிற சிற்றரசர்களோடு செய்து கொண்ட வேறொரு ஒப்பந்தம் மூலம் தெரிய வருகிறது. கி.பி. 1205–ல் பாண்டிநாடு கொண்டான் என்னும் கண்டர் சூரியன் சம்புவராயனும் மற்றவர்களும் ராஜராஜசேதிராயன் தலைமையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். இவ்வொப்பந்தப்படி இவர்கள் அனைவரும் மூன்றாம் குலோத்துங்கச் சோழனுக்கு உறுதுணையாக இருப்பதெனவும், மகதைநாடாழ்வான் என்னும் வாணகோவரையன், குலோத் துங்கச் சோழ வாணகோவரையன் மற்றும் ராஜராஜகாட வராயர் ஆகியோருக்கு எதிராகச் செயல்படுவதெனவும் உறுதி யளித்திருக்கின்றனர்.[26]

மேலே கூறப்பெற்றுள்ள இரு ஒப்பந்தங்கள் மூலம் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் சோழப் பேரரசின் வடபகுதியில் எத்தனை சிற்றரசர்கள் இருந்தனர் என்பதும், பேரரசு எவ்வளவு வலிமை குன்றியதாக ஆகி, சிற்றரசர்களின் துணையைப் பெறவேண்டிய சூழ்நிலையில் இருந்ததென்பதும் அறியமுடிகிறது.

சம்புவராயர்களே இரண்டு மூன்று பிரிவினராகப் பிரிந்து வெவ்வேறு பகுதிகளுக்குத் தலைவர்களாகவும், சேதிராயர், நீலகங்கரையர், வாணகோவரையர், காடவராயர்,

மூவேந்தரையர் ஆகியோரும் சிறுசிறு பகுதிகளுக்குத் தலைவர்களாகவும் இருந்து ஆண்டு வந்திருக்கின்றனர்.

அனைத்துக் குறுநிலத் தலைவர்களுள்ளும் சம்புவராயச் சிற்றரசன் செங்கேணி அம்மையப்பன் என்னும் கண்டர் சூரியன் சம்புவராயனே மிக்க வலிமைபெற்றவனாகத் திகழ்ந் திருக்கிறான்.[27] காஞ்சிபுரம் மாவட்டம் திருப்புட்குழியில் உள்ள கல்வெட்டு மூலம் யாதவராயன் என்பான் இவனுக்கடங்கிய தலைவனாக இருந்தமை புலனாகிறது. இவன் இரண்டாம் ராஜாதிராஜன் காலம் முதல் மூன்றாம் ராஜராஜன் காலம் முடிய சிற்றரசனாக ஆண்டு வந்திருக்கிறான். இவனது பிறந்த நட்சத்திரம் அவிட்டம் என்பது மற்றொரு கல்வெட்டினால் அறியமுடிகிறது.[28]

இக்குறுநிலமன்னன் சோழ மன்னன் இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தில் (கி.பி. 1169-70) விழுப்புரம் மாவட்டத் திலுள்ள திருவக்கரை சந்திரமௌலீசுவரர் கோயிலுக்குத் தம்பேரால் 'கண்டர் சூரியன் திருக்கோபுரம்' என்னும் கோபுரத்தை அமைத்திருக்கிறான்.[29] பத்தாண்டுகள் கழித்து இம்மன்னனே மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1179-80) அதே கோயிலில் ஒரு மண்டபத்தையும் கட்டித் தந்திருக்கிறான்.[30] அதே கோயிலிலுள்ள இறைவன் ஆளுடைய நாயனாருக்கு கி.பி. 1193-94ல் ஐந்து முகமுடைய ஒரு நிலை விளக்கையும் அவற்றுக்குரிய சங்கிலிகளையும் கொடையளித் துள்ளான்.[31]

## செங்கேணி அத்தியாண்டான் என்னும் விக்ரம சோழ சம்புவராயன்

காஞ்சிபுரம். மாவட்டம் திருவத்தியூர் கல்வெட்டில், இரண்டாம் ராஜாதிராஜனின் சிற்றரசனாக அத்தியண்டான் என்ற சம்புவராயன் குறிக்கப்படுகிறான்.[32] இவன் 'செங்கேணி வீராண்டான்' என்பானின் மகன் என்றும் அதே கல்வெட்டு தெரிவிக்கிறது. அத்தியாண்டானின் முழுப்பெயர் மற்றொரு கல்வெட்டில் அத்தியாண்டான் என்னும் விக்ரமசோழச் சம்புவராயர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது.[33] மூன்றாம் குலோத்துங்கச் சோழனது காவேரிப்பாக்கம் கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் வீரமிண்டன் என்னும் அத்தி மல்லன் விக்ரமசோழ சம்புவராயன் என்பவன் பேசப் படுகிறான்.[34] இவனும் அத்தியாண்டான் விக்ரமசோழனும்

ஒருவனாக இருக்கலாம். செங்கத்தில் உள்ள இரு கல்வெட்டுக்களிலும்[35] இவன் அத்திமல்லன் என்னும் விக்ரமசோழன் என்று குறிக்கப்பட்டிருக்கிறான்.

இவனுக்குச் செங்கேணி அம்மையப்பன் கண்ணுடையப் பெருமாள் என்னும் விக்ரம சோழச் சம்புவராயன் என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இவன் திருவல்லம் இறைவனுக்கு நிலக்கொடை அளித்திருக்கிறான்.[36] இக்குறுநில மன்னன் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் ராஜேந்திரசோழச் சம்புவராயனின் ஒன்று விட்ட சகோதரனாக இருக்கலாம். இவர்களது தந்தைகள் உடன்பிறந்தவர்களாக இருந்திருப்பர். இப்பட்டமுடைய கல்வெட்டுக்கள் ஆறு தெரியவந்துள்ளன.[37] இவை ஆறும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தவை.

இவன் கரிகாலசோழ ஆடையூர் நாடாழ்வானோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு பிறந்த பெருமாள் என்னும் ராஜராஜ அதிகமானுக்கு உதவியோ அல்லது கெடுதலோ செய்வதற்கு முடிவெடுத்திருக்கிறான்.[38] இவன் காலத்தில் மற்றொரு உடன்படிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வுடன்படிக்கையில் இச்சிற்றரசன் கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான், விடுகாதழகிய பெருமாள் என்னும் ராஜராஜ அதிகைமான் ஆகியோரோடு சேர்ந்துகொண்டு, யாதவராயர், சீயகங்கர் மற்றும் குலோத்துங்க சோழச் சம்புவராயரின் இரு மகன்கள் ஆகியோருக்கு எதிராகச் செயல்படுவது எனத் தீர்மானித்துள்ளான்.[39] முதல் உடன்படிக்கையில் கூறப்பெறும் பிறந்த பெருமாள் என்னும் ராஜராஜ அதிகைமானும் இரண்டாம் உடன்படிக்கையில் கூறப்பெறும் விடுகாதழகிய பெருமாள் என்னும் ராஜராஜ அதிகைமானும் ஒருவனாகவே இருக்கலாம்.

## செங்கேணி வீரசோழன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்கசோழச் சம்புவராயன்

இவன், மேலே கூறப்பட்டுள்ள செங்கேணி அம்மையப்பன் வீரமிண்டன் என்னும் அத்தியாண்டான் விக்ரம சோழனின் உடன்பிறந்தானாக இருக்கலாம். ஏனெனில் இவனும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்திருக்கிறான். இவன் கூடல் அரச நாராயணன் ஆளப் பிறந்தான் என்னும் காடவராயனோடு சேர்ந்துகொண்டு ஆளப்பிறந்தான்

எதிரிலிசோழ சம்புவராயனை எதிர்த்திருக்கிறான்.[40] இவனது மக்கள் இருவர் இவனது உடன்பிறந்தானான அத்தியாண்டான் விக்ரமசோழ சம்புவராயனை எதிர்த்திருக்கின்றனர்.[41] இவன் மூன்றாம் குலோத்துங்கச் சோழனுக்கு அடங்கிய சிற்றரசனாக விளங்கிய காரணத்தால் 'பிள்ளையார் குலோத்துங்க சோழ சம்புவராயர் என்றும் குறிக்கப்பட்டுள்ளான்.[42] இவனது கல்வெட்டு, மடம், அச்சரப்பாக்கம், சீயமங்கலம், திருவண்ணா மலை ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. மதுராந்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில்[43] குறிக்கப்பெறும் திரிபுவனவீர சம்புவராயனும் இவனாகவே இருக்கலாம்.

## செங்கேணி அம்மையப்பன் அழகியசோழன் என்னும் எதிரிலிசோழ சம்புவராயன்

இச்சிற்றரசனும் மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் அதிகாரத்துக்குட்பட்ட குறுநிலத் தலைவனாக இருந்திருக் கிறான். ஆதலால் இவனுக்கும் 'சோழப் பிள்ளை என்னும் அழகிய சோழ சம்புவராயன்' என்ற பெயரும் விளங்கி யிருக்கிறது.[43ஏ] இவனுக்கு வீராண்டான்[44], வீராசனி[45], தனி நின்று வென்றான்[46], தன்வசி காட்டு வான்[47], வீரசோழன்[48], பல்லவாண்டான்[48ஏ] என்ற பட்டப் பெயர்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. இவனது தந்தை அம்மையப்பன் என்று காணப்படுகிறது.[49] இந்த அம்மையப்பனும் செங்கேணி அம்மையப்பன் வன்னியநாயன் சம்புவராயனும்[50] ஒருவராக இருக்கலாம். பிரமதேசம் கல்வெட்டில் குறிக்கப் பெறும் 'செங்கேணி மங்கல மீட்டான் அம்மையப்பன் என்னும் சோழேந்திர சிங்க சம்புவராயனும் இவனாகவே தோன்றுகிறது.[50ஏ]

செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழன் என்னும் எதிரிலிசோழச் சம்புவராயனின் மகன் அழகியசீயன் என்று தெரிகிறது.[51] இச்செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழன் மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் மூன்றாம் இராஜராஜன், விஜயகண்டகோபாலன் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் சிற்றரசனாக இருந்திருக்கிறான்.

## வீரப்பெருமாள் எதிரிலிசோழ ஆளப்பிறந்த நாயன் என்னும் ராஜராஜ சம்புவராயன்

இச்சிற்றரசன் சோழ மன்னன் மூன்றாம் ராஜராஜன் காலத்தில் குறுநிலப் பகுதியை ஆண்டு வந்திருக்கிறான். சிறிய

காஞ்சியில் உள்ள கல்வெட்டில்[52] இவன் செங்கேணி வீராகரச் சம்புவராயனின் பெயரன் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்-வீராகரச் சம்புவராயன் செங்கேணி வீராக்கட சம்புவராயனாக இருக்கலாம் என்று கருதப்பட்டிருக்கிறது.[53] அத்திமல்லன் சம்பு குலப் பெருமாள் என்னும் ராஜகம்பீரச் சம்புவராயன்[54] என்று குறிப்பிடப்பெறுபவனும் இவனாகவே இருக்கக்கூடும். இவனது கல்வெட்டுக்கள் திருவண்ணாமலை மாவட்டம் திருமலை, அத்தி,[55] காஞ்சிபுரம் மாவட்டம், சிறிய காஞ்சி, பெருநகர்[56] ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. இவன் சோழப் பேரரசு வீழ்ந்த பிறகு தெலுங்குச் சோழ மன்னனான விஜய கண்ட கோபாலனுக்கும் அடங்கிய சிற்றரசனாக வாழ்ந்திருக்கிறான்.

மேலே நாம் கண்டவற்றிலிருந்து சம்புவராயர் என்னும் வன்னிய சிற்றரசர்கள் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று கிளைகளாக இருந்து குறுநிலப் பகுதிகளை ஆட்சி செய்து வந்திருப்பது தெரியவருகிறது. இக்காலத்துச் சம்புவராய வன்னியர்களின் பட்டியலை ஒருவாறு ஊகித்து அடுத்த இரு பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

இப்பட்டியல் கல்வெட்டுச் சான்றைக் கொண்டும், ஊகத்தின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டு இங்கு தரப்பட்டிருக்கிறது. மேலும் சான்றுகள் எதிர் காலத்தில் தெரிய வரின் இப்பட்டியலில் கண்டுள்ள சிற்றரசர் வரிசை முறை மாற்றப்படலாம். சிலரது உறவு முறையும் மேலும் தெளிவாக அறியப் பெறலாம்.

தமிழகத்தின் தென்பகுதியில் பாண்டிநாட்டில் கி.பி. 9ஆம் நூற்றாண்டளவில் பள்ளிதரையன் என்று ஒரு வன்னிய குறுநிலத் தலைவன் இருந்திருக்கிறான். அதற்குப் பிறகு அவனது சந்ததியினர் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் தமிழகத்தின் வடபகுதியில் தற்போதுள்ள விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் பகுதியிலிருந்து சமபுவராய வன்னியர்கள் சோழப் பேரரசுக்கும், பின்பு பாண்டியப் பேரரசுக்கும் அடங்கிய சிற்றரசர்களாக கி.பி. 11ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதி முடிய ஆட்சி புரிந்திருக்கிறார்கள் என்பது கல்வெட்டுச் சான்றுகளால் தெரியவந்துள்ளது.

சோழர்களுக்கடங்கிய முதல் சம்புவராய வன்னியன் முதலாம் இராஜராஜனின் தந்தையான சுந்தரசோழன்

# சோழர்களுக்கடங்கிய சம்புவராயர் வன்னியச் சிற்றரசர்கள் பட்டியல்.

| சோழர் | |
|---|---|
| சுந்தரசோழன் | 1.. ஒமயிந்தன் முன்னூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம். |
| அதிராஜேந்திரன் | 2. செங்கேணி சாத்த நாலாயிரவன் என்னும் கரிகாலச் சோழ செங்கேணி நாடாழ்வான். |

2-இன் மக்கள்:

- 3. செங்கேணி வீராகரன்
  - 4. செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் இராஜேந்திர சோழ சம்புவராயன் (அத்திமல்லன் என்ற பட்டப்பெயரும் சிவாலயசந்தோஷன் என்ற பட்டப் பெயரும் உண்டு.
  - 5. செங்கேணி அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் என்னும் ராஜநாராயண சம்புவராயன் (வீராகரன், வீராக்கட என்ற பட்டங்கள் கொண்டவன்)
  - 6. ஒதுவான் என்னும் ராஜகம்பீர சம்புவராயன்
- 7. செங்கேணி வீராண்டான்
  - (மகன்) 8. செங்கேணி அம்மையப்பன் வீரமிண்டன் என்னும் அத்தியாண்டான் விக்ரமசோழ சம்புவராயன். (கண்ணுடையப் பெருமாள் என்ற பட்டம் பெற்றவன்)
  - 9. செங்கேணி வீரசோழன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்க சோழ சம்புவராயன். (பல்லவாண்டான் என்ற விருதுப் பெயருடையவன்)
    - இரு மகன்கள்

விக்ரம சோழன்
குலோத்துங்கன் II
ராஜராஜன் II
ராஜாதிராஜன் II
குலோத்துங்கன் III

| | | | |
|---|---|---|---|
| குலோத்துங்கன் III | 10. அம்மையப்பன் குலமாணிக்கம் பாண்டிநாடு கொண்டான். | 11. செங்கேணி மிண்டன் சியன் அம்மையப்பன் என்னும் எதிரிலிசோழ சம்புவராயன் (அம்மையப்பன் வன்னிய நாயன் என்ற பட்டம் பூண்டவன்.) | |
| ராஜாதி ராஜன் II முதல் ராஜராஜன் III முடிய | 12. (மகன்) அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் என்னும் கண்டர் சூரியன். (கண்டர் சூளியான ராஜராஜ சம்புவராயனும் இவனேயாகும்) | 13. செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழன் என்னும் எதிரிலி சோழச் சம்புவராயன் (வீராண்டான், வீராசனி போன்ற பட்டங்களைக் கொண்டவன். | 14. வீரப்பெருமாள் எதிரிலிசோழ ஆளப்பிறந்த நாயகன் என்னும் ராஜராஜ சம்புவராயன் (அந்திமல்லன் சம்பு குலப்பெருமாள் என்னும் ராஜகம்பீரச் சம்புவராயனும் இவனாகலாம்.) |
| | | (மகன்) 15. செங்கேணி அழகிய சீயன் | |

காலத்திலேயே இருந்திருக்கிறான். இவன் ஓமயிந்தன் மூந்நூற்றுவன் பள்ளியான கரணமாணிக்கம் என்பவனாவான். இவனுக்கடுத்து சம்புவராய வன்னியச் சிற்றரசன் முதலாம் இராஜேந்திரனது புதல்வர்களில் ஒருவரான அதிராஜேந்திர னின் காலத்தில் இருந்திருப்பது அறிய முடிகிறது. இவனது பெயர் செங்கேணி சாத்த நாலாயிரவன் என்னும் கரிகாலச்சோழ செங்கேணி நாடாழ்வான் என்பதாகும். இவனுக்கடுத்து இவனது பெயரன் என்று ஊகிக்கப்படும் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் இராஜேந்திர சோழ சம்புவராயன் காணப்படுகிறான். இச்சிற்றரசனுக்கு 'அத்திமல்லன்', 'சிவாலய சந்தோஷன்' என்ற விருதுப் பெயர்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. இவனுக்குச் செங்கேணி அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் என்னும் ராஜநாராயண சம்புவராயனும், ஓதுவான் என்னும் ராஜகம்பீர சம்புவராயனும் உடன் பிறந்தவர்களாக இருந்திப்பர் என்று தெரிகிறது. மேற்காணும் மூன்று சகோதரர்களும் செங்கேணி அம்மையப்பன் வீர மிண்டன் என்னும் அத்தியாண்டான் விக்ரம சோழ சம்புவராயனுக்கு எதிராக ஒரு உடன்படிக்கை செய்துக் கொண்டிருக்கின்றனர்.

செங்கேணி அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் என்னும் ராஜநாராயணச் சம்புவராயனுக்கு 'வீராகரன்', 'வீராக்கட' என்ற பட்டப் பெயர்கள் இருந்திருக்கின்றன.

செங்கேணி அம்மையப்பன் வீரமிண்டன் என்னும் அத்தி யாண்டான் விக்ரமசோழ சம்புவராயனுக்குக் 'கண்ணுடையப் பெருமாள்' என்ற விருது வழங்கப் பெற்றிருக்கிறது. இவனின் தந்தை செங்கேணி வீராண்டான் என்று அறிய முடிகிறது.

செங்கேணி வீராண்டானின் தந்தையும், செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் இராஜேந்திர சோழ சம்புவராயன் மற்றும் அவனது இரு சகோதரர்கள் ஆகியோரின் தந்தையும் உடன் பிறந்தார்களாகவும், செங்கேணி வீராண்டான் அவர்களில் இளையவனாகவும் இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. மூத்தவனது பெயர் செங்கேணி வீராகரன் என்று இருந்திருக்கலாம். மூன்று உடன்புறப்புகளில் முதலாமவன் தாத்தாவின் பெயரில் ஒரு பகுதியையும்,. இரண்டாமவன் தந்தையின் பெயரில் ஒரு பகுதியையும் தங்கள் பெயர்களுடன் சேர்த்து வழங்கியிருப்பார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் மேற்காணுமாறு எண்ணமுடிகிறது.

செங்கேணி அம்மையப்பன் வீரமிண்டன் என்னும் அத்தியாண்டான் விக்ரம சோழ சம்புவராயனின் உடன் பிறந்தவனாகச் செங்கேணி வீரசோழன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்கச் சோழ சம்புவராயன் இருந்திருப்பான் போன்று தோன்றுகிறது. இவனுக்குப் பல்லவாண்டான் என்ற விருதுப் பெயரும் வழங்கியது. செங்கேணி வீரசோழன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்கச் சோழச் சம்புவராயனுக்கு இரு புதல்வர்கள் இருந்திருக்கின்றனர். அத்திமல்லன் குலோத்துங்கச் சோழச் சம்புவராயர், பாண்டிநாடு கொண்டான் ராஜராஜ சம்புவராயனோடு சேர்ந்து சிலபேரை எதிர்த்து ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறான்.

அடுத்து, செங்கேணி அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் எனும் கண்டர் சூரியன் என்பான் பேசப்படுகிறான். இவன் வலிமை பொருந்திய சிற்றரசனாகத் திகழ்ந்திருப்பான் போன்று தெரிகிறது. இவனுக்குக் கண்டர் கூளியனான ராஜநாராயணச் சம்புவராயன் என்னும் பெயரும் வழங்கப் பெற்றிருக்கிறது. இவனது பாட்டனாக அம்மையப்பன் குலமாணிக்கம் பாண்டிநாடு கொண்டான் குறிக்கப் பெறுகிறான்.

இச்சிற்றரசனையடுத்து செங்கேணி மிண்டன் சீயன் அம்மையப்பன் என்னும் எதிரிலிசோழச் சம்புவராயன் பேசப்படுகிறான். இவனுக்கு 'வன்னியநாயன்' என்ற விருது வழங்கியிருப்பது வன்னியர்களின் அபிமானமிக்கத் தலைவனாக இவன் விளங்கியிருந்தமையைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இவருக்குச் செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழன் என்னும் எதிரிலிசோழச் சம்புவ்ராயன் என்பானும், வீரப் பெருமாள் எதிரிலிசோழ ஆளப் பிறந்த நாயகன் என்னும் ராஜராஜ சம்புவராயன் என்பானும் மகன்களாக இருந்திருப்பர் போன்று உணர முடிகிறது. இருவரில் முதலாமவன் மிக்க வலிமை பொருந்தியவனாக இருந்திருப்பான் போலும். அதன் காரணமாக வீராண்டான், வீராசனி, தனிநின்று வென்றான், பல்லவாண்டான் போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கிறான். இளையவனான வீரப் பெருமாள் எதிரிலிசோழ ஆளப்பிறந்த நாயகன் என்னும் ராஜராஜ சம்புவராயனும் தமையனுக்கு நிகரான தம்பியாக விளங்கியிருக்கிறான். இவனுக்குச் சம்புகுலப் பெருமாள் இராஜகம்பீரச் சம்புவராயன் என்னும் பெயரும் வழங்கியிருக்கிறது.

செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழன் என்னும் எதிரிலிசோழச் சம்புவராயனது மகனாக அழகிய சீயன் என்பான் கூறப்பெற்றுள்ளான்.

செங்கேணி சம்புவராய வன்னியர்களில் சிலர் 'பல்லவாண்டான்', 'அத்தியாண்டான்', 'அத்திமல்லன்' போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கின்றனர். இதிலிருந்து இவர்கள் அத்தி என்று வழங்கப்பெறும் காஞ்சிபுரத்திலிருந்து ஆட்சி புரிந்ததும், பல்லவர்கள் வழிவந்தவர்கள் என்பதும் உணரமுடிகிறது.[7]

## அடிக்குறிப்புகள்

1. ARE for 1912, Part II, para I, P.50
2. S.I.I-Vol. VII, No.500
3. ARSIE, 1902, No.227, S.I.I.Vol.VII, No.854
4. ARE 232 of 1921
5. Ibid 422 of 1922
6. Ibid 400 of 1922
7. Ibid 63 of 1900
8. Ibid 234 of 1919, 238 of 1919, 252 of 1919 and 100 of 1939-1940
9. Ibid 298 of 1929 and 302 of 1929
10. Ibid 126 of 1932-33
11. Ibid 394 of 1923

11A Ibid 80 of 1900, S.I.I.Vo.VII, No.88

12. Ibid 232 of 1921
13. Ibid 163 of 1915
14. ARE.252 of 1919
15. Ibid 566 of 1919
16. Ibid 58 of 1908
17. ARSIE, 1899, introduction, p.8-9, No.20
18. Mahavamsa, chapters 76 and 77

19. N. Sethuraman, The Sambuvarayas of the 14th century, (1986), p.10
20. ARSIE, 1910, No.234
21. ARE 195 of 1904, 194 of 1904, 190 of 1904 and 345 of 1917
22. Ibid 345 of 1917, 223 of 1904, 219 of 1902, S.I.I.Vol.VII, No.846
23. ARE.222 of 1904
24. ARE.239 of 1901; S.I.I.Vol.VII, No.453.
25. Ibid 56 of 1922
26. ARSIE. 219 of 1901, 219,221 and 516 of 1902; 190, 194, 195 and 223 of 1904; 176 and 183 of 1922.
27. Ibid, 184 of 1916
28. ARE 195 of 1904 and 57 of 1919
29. Ibid 176 of 1918
30. S.I.I.Vol.XVII, No.217
31. Ibid.No.212
32. Ibid No.216.
33. ARE 76 of 1900; S.I.I.Vol.VII, No.84
34. Ibid 252 of 1919
35. Ibid 405 of 1905
36. Ibid 115 of 1900, 107 of 1900; S.I.I.Vol, VII, No.127 and 119
37. S.I.I Vol.I, p.136, 343 of 1912, vide also S.I.I. Vol.III, p.208, S.I.I.Vol III No.61, ARE 553 of 1902, 422 of 1921, 620 of 1919
38. ARE. 115 of S.I.I.Vol.VII, No.127
39. Ibid 107 of 1900, S.I.I.Vol.VII, No.119
40. ARE 254 of 1919
41. Ibid 107 of 1900
42. Ibid 61 of 1900; S.I.I.Vol.VII, No.454.
43. Ibid 406 of 1922

43ஏ. Ibid 36 of 1893; S.I.I.Vol.IV, No.849

44. Ibid 516 of 1902; S.I.I.Vol.VIII, No.106

45. S.I.I.Vol.I, No.59

46. S.I.I.Vol.I, No.59

47. S.I.I.Vol.I, No.59

48. ARE 551 of 1902; S.I.I.Vol.VIII, No.142

48ஏ. Ibid 106 of 1912

49. Ibid 36 of 1893; S.I.I.Vol.IV, No.849

50. Ibid 234 of 1910; S.I.I.Vol.IV, No.849

50ஏ. Ibid 189 of 1918

51. Ibid 106 of 1912; S.I.I.Vol.XII, No.170

52. ARE 566 of 1919

53. V. Venkatasubba Aiyar, No. 28 Two inscriptions of Kampana from Madam; E.I.Vol.XXVIII, Appendix, p.169

54. S.I.I.Vol.1, pp.105, 108

55. ARE 302 of 1912, 303 of 1912

56. Ibid 353 of 1923

57. அத்தி என்பதைச் சிலர் காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள ஒரு ஊர் என்றும் கருதியுள்ளனர்.

இயல் – நான்கு

# வன்னியர் தன்னாட்சி

## (இராசகம்பீரச் சம்புவராயன்)

## (கி.பி.1236–1268)

---

வீரப்பெருமாள் எதிரிலிசோழ ஆளப்பிறந்த நாயகன் என்னும் ராஜராஜ சம்புவராயனுக்கே சம்பு குலப்பெருமாள் எ்ன்னும் ராஜகம்பீரச் சம்புவராயன் என்ற பெயரும் வழங்கப்பெற்றிருத்தல் வேண்டும் போன்று தெரிகிறது.

இராஜகம்பீரச் கம்புவராயன் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் திருமலை,[1] இரண்டேரிப்பட்டு,[2] படவேடு,[3] விரிஞ்சிபுரம்,[4] ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.

சோழ மன்னன் மூன்றாம் இராசராசனின் ஆட்சிக்கடங்கிய சிற்றரசனாக இருந்த ராஜகம்பீரச் சம்புவராயர் கி.பி.1258 வாக்கில் தனியாட்சி செய்யத் தலைப்பட்டிருக்கிறார். போளூருக்கு வடக்கே சுமார் 15 கி.மீட்டர் தொலைவில் உள்ள மலையும் காடும் சூழ்ந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து கோட்டையும் அரண்மனையும் நிறுவிக்கொண்டு தனியாட்சி புரியலானார். அந்த இடத்துக்கு 'மருதரைசர் படைவீடு' என்று பெயர் சூட்டியிருக்கிறார்.[5] இப்படை வீட்டை மதுரையை ஆண்டு வந்த பாண்டிய அரசருக்காக முதலில் தோற்றுவித் திருக்கலாம். ஆதலால் தான் மதுரை என்பது மருவி மருதை என்று ஆகி, 'மருதரசர்' என்பது 'மருதரைசர்' என்று மருவி வழங்கியிருக்கும் என்று ஊகிக்க முடிகிறது.

படைவீட்டிலேயே தம் குலத் தெய்வமான சிவபெரு மானுக்கு 'அம்மையப் பீசுவரமுடையார் கோயில் ஒன்றையும் கட்டுவித்திருக்கிறார்.[6] 'அம்மையப்பர்' என்று இறைவனுக்குப் பெயர் சூட்டியிருப்பது வன்னியபுராணத்தில் வீரவன்னியன் சிவபெருமான் மற்றும் உமையம்மை ஆகியோரின் திருக்குமரன் என்று கூறப்பெற்றிருப்பதின் நினைவாக இருக்கலாம்.

*மேற்காணும் கோயிலுக்கு இவரது மனைவி ஆராயும் பெருமாள் என்பவர் விக்னேசுவரப்பிள்ளையார் செப்புத் திருமேனி செய்தளித்திருக்கிறார்.[7] இவளே விரிஞ்சிபுரம் கோயிலில் நந்தாவிளக்கெரிக்கவும் கொடையளித்திருக்கிறாள்.[8]*

*இவரமைத்த கோட்டைக்கு அருகிலுள்ள மலை இவரது பெயராலேயே 'இராஜகம்பீர மலை'[9] என்றும்; இவர் ஆட்சி செய்த பகுதி 'இராஜகம்பீர ராஜ்யம்'[10] என்றும் அழைக்கப் பெற்றிருக்கின்றன.*

*கி.பி.1267இல் இவரது தன்னாட்சி வீழ்ச்சியுற்று முதலில் தெலுங்குச் சோழ மன்னன் விஜய கண்ட கோபாலனுக்கும், பின்னர் பாண்டியனுக்கும் அடங்கிய சிற்றரசாக ஆட்சி செய்து வரும்படியான சூழ்நிலை ஏற்பட்டது.*

## அடிக்குறிப்புகள்

1. S.I.I.Vol.1, No.74
2. A.R.E 95 of 1941-42
3. Ibid 70 of 1940-41, S.I.I.Vol.1, No.78
4. Ibid 179 of 1939-40
5. *டாக்டர் கோ. தங்கவேலு, இல. தியாகராசன், சம்புவராயார் வரலாறு, (1990), பக்கம் 280; கல்வெட்டு வரிசை எண்.3*
6. *சம்புராயர் வரலாறு,* Op.cit. *க.வ.எண்.3*
7. ARE. 70 of 1940-41
8. Ibid 179 of 1939-40
9. Ibid 220 of 1919
10. Ibid 18 of 1889

இயல் – ஐந்து

# வன்னியச் சிற்றரசர்கள்

## (பாண்டியர்களின் கீழ்)

### சுந்தர பாண்டிய சம்புவராயர்

பாண்டியர் ஆட்சியில், முதன் முதலில் முதலாம் சடாவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1267) சந்தரபாண்டியன் சம்புவராயன் வேலூர் மாவட்டம் ஆரணிக்கருகில் உள்ள வாலாசாப் பேட்டைப்பகுதியில் சிற்றரசனாக ஆட்சி செய்து வந்திருப்பது ஆரணிக்கருகிலுள்ள கலவையில் காணப்பெறும் கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.[1]

### வீரபாண்டிய சம்புவராயர்

இச்சிற்றரசன் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் சகோதரனான சடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் (கி.பி.1253–83) ஆட்சி புரிந்திருக்கிறான். இவர் தென்னேரியிலுள்ள கோயிலுக்கு நிலக் கொடை வழங்கியதைக் குறிக்கும் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது.[2]

### வீரசம்பன் (கி.பி.1306–1317)

வீரசம்பன், இரண்டாம் சடாவர்மன் சந்தரபாண்டியனின் (கி.பி.1304–1319) காலத்தில், வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் இறைவனுக்குக் கொற்ற மங்கலம், ஆரணி ஆகிய ஊர்களை இறையிலி தேவதானமாகக் கொடையளித்துள்ளார்.[3]

இச்சிற்றரசனின் தந்தையின் பெயரைச் சோழன் என்று திருவல்லம் கல்வெட்டும்[4], வீர சோழன் என்று காஞ்சிபுரம் கல்வெட்டும்[5] குறிப்பிடுகின்றன.

வீரசம்பன், தான் பிற மன்னர்களை வென்று கொண்டு வந்த செல்வங்களை ஞானாத்மன் என்னும் தவசீலரிடம் தந்து திருவல்லம் கோயிலில் உறையும் சிவனுக்கு ஒரு மண்டபத்தைக் கட்டும்படி செய்தார் என்பதும்; காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலுக்கு 'புஷ்யரதம்' ஒன்றைச் செய்து

வழங்கினார் என்பதும் மேற்காணும் கல்வெட்டுக்களால் அறிய முடிகின்றன.

இவருக்கு 'வீரசம்ப நாயனான சம்புவராயன்'[6], 'சம்பு குலோத்துங்கன்'[7] போன்ற விருதுகள் வழங்கப்பெற்றமையும் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

போளூருக்கு அருகில் உள்ள குன்னத்தூரில் வீரசம்பீஸ்வரம் என்னும் கோயிலை இச்சிற்றரசரோ அல்லது இவர் வழி வந்தவரோ எழுப்பியிருக்கின்றனர்.[8]

## வீரசம்பன் பணம்

வீரசம்பன் பணம், வீரசம்பன் குளிகை என்னும் காசு சம்புவராயர், பாண்டியர், விசய நகர மன்னர் ஆகியோர் கல்வெட்டுக்களில் பேசப்படுகிறது.[9] இக்காசு இச்சிற்றரசனால் வெளியிடப்பெற்றிருக்கலாம்.

## ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயர்

இவர் மாறவர்மன் குலசேகரபாண்டியனது ஆட்சிக்காலத்திலேயே ஒரு சிறு பகுதியை ஆட்சி செய்திருக்க வேண்டும். அதன் காரணமாகத்தான் தன் பெயரோடு தன் மேலாண்மை அரசரின் பெயரான குலசேகரன் என்பதையும் சேர்த்துத் தரித்திருக்கிறார். பின்பு சடாவர்மன் வீரபாண்டியன், சடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர் காலத்திலும் தொடர்ந்து சிற்றரசராக ஆட்சி செய்தார். இவரைப் பற்றிக் குறிக்கும் கல்வெட்டுக்கள் இதுவரை பதினைந்து கிடைத்திருக்கின்றன. வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா, விரிஞ்சிபுரம், உக்கல், திருவோத்தூர்; திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி; காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஆகிய இடங்களில் அவை காணப்படுகின்றன.[10] மேற்காணும் கல்வெட்டுக்கள் காணப்பெறும் இடங்களைக் கொண்டு பார்க்கையில் வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய நிலப்பரப்பு இவரது ஆட்சியில் இருந்திருப்பது தெரியவருகிறது.

கி.பி.1306 முதல் தன்னாட்சி செய்திருக்கிறார் என்பது திருவண்ணாமலை மாவட்டம் வெடாலில் கிடைத்துள்ள இவரது கல்வெட்டால் புலனாகிறது.[11] மேற்காணும் கல்வெட்டு

இவரது 25-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்றிருப்பதால் கி.பி.1330 முடிய இவர் ஆட்சி புரிந்திருப்பது உறுதியாகிறது.

இவருக்கு அந்தலில் வென்றான்,[12] செய்யாற்றில் வென்றான்'[13] என்ற விருதுப்பெயர்கள் வழங்கியுள்ளன. இவரது பட்டப்பெயரான செய்யாற்றில் வென்றான் என்ற பெயரில் 'செய்யாற்றில் வென்றான் சதுர்வேதி மங்கலம்'[14], 'செய்யாற்றில் வென்றான் திருவீதி'[15] ஆகியவைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இவரையடுத்து இவரது மகன் ஏகாம்பரநாதன் வென்று மண்கொண்ட சம்புவராயர் தனியாட்சி புரிந்துள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. ARE 232 of 1901; S.I.I.Vol.VII, No.446
2. Ibid 239 of 1922
3. Ibid 189 of 1939-40; 183 of 1939-40
4. Ibid 3 of 1890; E.I.Vol.3, p.70
5. Ibid 51 of 1893; E.I.Vol.3, p.71
6. ARE 97 of 1900; S.I.I.Vol VII, No.107
7. Ibid 52 of 1900; Ibid.Vol VII, No.55
8. Ibid 106 of 1941-42
9. ARE 162 of 1939-40, 202 of 1932-33, 414 of 1921, 491 of 1921, 386 of 1905, 373 of 1921, 45 of 1922, 81 of 1940-41
10. ARE 458 of 1925, 462 of 1925, 459A of 1925, 180 of 1939-40, 463 of 1925, 178 of 1939-40, 459 of 1925, 456 of 1925, 457 of 1925, 177 of 1939-40, 460 of 1925, 92 of 1900, 195 of 1923, 156 of 1939-40, 77 of 1908.
11. Ibid 77 of 1908
12. Ibid 180 of 1939-40
13. JESI, Vol XIII, (1986); ARE 92 of 1900
14. S.I.I.Vol.VIII, No.101
15. ARE 255 of 1901; S.I.I.Vol VII, No.470



வன்னியர் முதல் பதிப்பு நூலை வெளியிட்டு வாழ்த்துகிறார் முன்னாள்
தலைமை வன அலுவலர் திருமிகு. சண்முகசுந்தரனார்.
அருகில் தினமலர் ஆசிரியர் முனைவர். இரா. கிருட்டிணமூர்த்தி
திருமிகு. வ. பாலசுப்பிரமணியன் திருமிகு. கவிஞர். கல்லாடன் ஆகியோர்



சேர வன்னியர் வல்லாள மகாராசர் சிற்பம்
கி.பி. 17ஆம் நூற்றாண்டு வல்லாள மகாராசன் கோபுர மாடம்,
திருவண்ணாமலை



புதுப்பள்ளி பற்றி தெரிவிக்கும் மகேந்திர
வர்மப் பல்லவன் கல்வெட்டு கி.பி. 7 ம் நூற்றாண்டு



பள்ளித்துண்டன் பற்றி தெரிவிக்கும் தோகைமலைக்
கல்வெட்டு, கரூர் மாவட்டம், கி.பி. 7ம் நூற்றாண்டு



'பள்ளித் துண்டன்' என்பது தெளிவாகத் தெரியும் பகுதி



பள்ளி தறையன் பற்றி குறிப்பிடும் பாண்டியர் காலக் கல்வெட்டு, கி.பி. 8-9 ம் நூற்றாண்டு, கருங்காலக்குடி, மதுரை மாவட்டம்.



மதுரைப்பாண்டிய மன்னனால் அனுப்பப்பட்டு முதன் முதலில்
வன்னியப்பாளையம் அமைந்த இடம் " சுண்டன் குளம்", அவ்வூர் கோயில்



பெருங்காவிதி சடையன் பள்ளி என்று தெரிவிக்கும் திருவெள்ளறைக் கல்வேட்டு. மூன்றாம் நந்திவர்மன் காலம். கி.பி. 9- ஆம் நூற்றாண்டு



மற்றொரு அரண்மனை தென்மலை, கி.பி. 18 ஆம் நூற்றாண்டு



வரகுணபாண்டிய வன்னியனாரின் சந்ததியினரில்
அரசி பாக்ய துரைச்சி, தென்மலை,
இந்நூலாசிரியரின் நேர்காணல்



தென்மலை அரண்மனையில் வாழ்ந்து வரும்
வரகுணபாண்டிய வன்னியனாரின் வாரிசுகளும்,
உறவினர்களும் (இந்நூலாசிரியருடன்)



தென்மலை அரண்மனை வரகுணராம பாண்டிய
வன்னியனார் வாழ்ந்த இடம். கி.பி. 18 ஆம் நூற்றாண்டு



சிவகிரி அரசக்குடும்பத்தினர் தற்போது வசிக்கும் வீடு, முன்னாளில் கார்த்திகை மடம்.
வரகுணராம பாண்டிய சின்னத்தம்பியார் மகன் சங்கிலி வீரபாண்டிய சின்னதம்பியாரின்
தாயார்களால் கட்டியதுகி.பி. 1887, கொல்லம் ஆண்டு 1063



சிவகிரி இரண்டாம் சமீன்தார் சமீன்தாரிணி வீரம்மாள் நாச்சியார் (கி.பி.1819-1835) இவர் கணவர் செந்தட்டிக் காளை வன்னியனார்



வரகுணபாண்டிய வன்னியனாரின் சிவகிரி அரண்மனை. அதன் வாயிற்கதவுக்கு முன்பாகத் திரு.முரளி நாயகர்




அரசி கருப்பாயி நாச்சியார் பிறந்த இடம் : சிவகிரி
வாழ்க்கைப்பட்ட இடம் : ஆத்திப்பட்டு கி.பி.1922 இல் ரூ.3
கோடியளவுக்கு அறக்கொடை அளித்திருக்கிறார்



V.A.T.K.முத்துசாமி பாண்டியன் ரெட்டைக்குடையார், அளகாபுரி சமீன் (இறப்பு : 18.01.1996)



சிவகிரி 5 ம் சமீன்தாரர் மைனர் இராமலிங்க வரகுணராம பாண்டிய வன்னியனார் கி.பி.1910 – 1914 இவர்தான் கடைசி சமீன்தார்.



ராணி V.S.பாலகுமாரி நாச்சியார், V.S.V.சேவுகப்பாண்டியன் என்னும்
விக்னேஷ்வர சின்னத்தம்பியார் ராஜா ஆகியோர் இந்நூலாசிரியருடன்



அளகாபுரி V.A.T.K.முத்துசாமி பாண்டியன் ரெட்டைக்குடையார் பட்டத்தரசி
செயராணி நாச்சியார், அவர்களுடன் இந்நூலாசிரியர் நேர்காணல்.
அருகில் அரசியின் மூத்தமகனும், சிவகிரி ஜெகதீஸ்வர பாண்டியனும்



அளகாபுரி சமீன் அரண்மனை இருந்த இடம்.
தரைமட்டமாக்கப்பட்டு விட்டது.



அளகாபுரி சமீனுக்கு வேண்டப்பட்ட முதியவரிடம் இந்நூலாசிரியர் நேர்காணல். அருகில் தென்மலை சமீன்தாரின் வாரிசு திரு.சின்னதங்கதுரை மற்றும் திருவாளர்கள் வீரபாண்டியன், முரளி நாயகர், ஜெகதீஸ்வர பாண்டியன்



ஏழாயிரம் பண்ணை சமீன்தாரிணி அரசி வெள்ளைத்துரைச்சியுடன்
இந்நூலாசிரியர் நேர்காணல்



ஏழாயிரம் பண்ணை சமீன்தாரிணியும் அவரது உறவினர்
திரு.ஜெகதீஸ், திரு.சின்னதங்கதுரை உள்ளிட்டோரும் இந்நூலாசிரியர்



பித்தர்புரம் சமீன்தாரர் ஆ.சிதம்பரநாத சூரப்ப சோழனாருடன், இந்நூலாசிரியர், திரு.வி.எம்.சந்திரபாண்டிய படையாண்டவர், திரு.செயச்சந்திரகலிங்கராயர்



மயிலாடுதுறை முத்துக்குமாரசுவாமி துரை ராசா அஞ்சாதசிங்கம், திருமண ஊர்வலம்

இயல் – ஆறு

# மீண்டும் வன்னியர் தன்னாட்சி

## (சம்புவராய மன்னர்கள்)

### சகலலோகச் சக்கரவர்த்தி ஏகாம்பரநாதன் வென்று மண்கொண்ட சம்புவராயர் (கி.பி.1322–1340)

தன் தந்தையான குலசேகர சம்புவராயரால் உருவாக்கப் பட்ட இரண்டாம் தனியரசாட்சியை முழு அளவில் நிலைநிறுத்திக் காட்டியவர் ஏகாம்பரநாதன் வென்று மண்கொண்ட சம்புவராயரே ஆவார். தந்தையின் இயற் பெயரான ஏகாம்பரநாதன் என்பதைத் தம்பெயருக்கு முன்பாகச் சூட்டிக் கொண்டிருந்திருக்கிறார்.

இவரது கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் பஞ்சாங்க (ஐந்து அங்கக்) குறிப்புகளைக் கொண்டு, இவர் 18.5.1322க்கும் 27.6.1322க்கும் இடைப்பட்ட காலத்தில் தனியரசாட்சிக் கட்டி லேறினார் என்று அறிய முடிகிறது.[1]

இம்மன்னரது கல்வெட்டுக்கள் வேலூர், காஞ்சிபுரம், மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் காணப்பெறுகின்றன.[2] இவர் 18 ஆண்டுகள் அதாவது 1340 முடிய ஆட்சிபுரிந்துள்ளார் என்பது காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டால்[3] புலனாகிறது.

இவர் ஆட்சிக்கு வந்து 14 ஆண்டுகள் கழித்து ‘சகலலோகச் சக்கரவர்த்தி வென்று மண்கொண்ட சம்புவராயர்’ என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார் என்று தெரிகிறது.

வாலாசாபேட்டை வட்டம் வேப்பூரிலுள்ள கல்வெட்டு இம்மன்னன் ‘சென்றதிசை வென்றான் திருவீதி’ [4]யொன்றை அமைத்ததைக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து இவருக்குச் ‘சென்ற திசை வென்றான்’ என்ற பட்டப்பெயரும் வழங்கப் பெற்றிருக்கும் எனத் தெரிகிறது.

இவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, இசுலாமியப் படை மாலிக்காபூர் தலைமையில் கி.பி.1311லும், குசுருகான் தலைமையில் கி.பி.1319லும் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்து ஊர்களையும், கோயில்களையும் சிதைத்துச் சீரழித்தன. மேலும் கி.பி.1324ல் இவரது ஆட்சியின் தொடக்கத்தில் தில்லி சுல்தான் முகமதுபின் துக்ளக்கின் படைகள் தமிழகத்தைத் தாக்கின. இத்தாக்குதல்களினால் சீரழிந்துபோன பல கோயில்களைச் சீரமைக்கும் பணியில் இம்மன்னன் ஈடுபட்டதைத் திருவா மாத்தூர் (விழுப்புரம் வட்டம்) கல்வெட்டு [5]தெரிவிக்கின்றது.

திருவாமாத்தூரில் 'துருக்கர்' வந்து கோயில் சொத்துக் களைக் கொள்ளையடித்துச் சென்றதுபோக மீதமிருந்த நிலங்களை ஊரில் இருந்த சிலரும் தங்களுடையதாக்கிக் கொண்டனர். அதன்காரணமாகக் கோயிலில் வழிபாடு இல்லா நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இக்கோயிலைச் சேர்ந்த அடியார் "அய்யுறவு தீர்த்தான் பல்லவராயர்" என்பார் மன்னனைச் சந்தித்து கோயில் நிலைமையை எடுத்துக்கூறி, மீண்டும் கோயிலில் வழிபாடு நிகழ ஏற்பாடு செய்ததற்காக அவ்வடியார்க்குக் கோயில் தானத்தார் காணி ஆட்சி வழங்கிச் சிறப்பித்ததை இக்கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது.

ஆரணிக்கருகிலுள்ள (வேலூர் மாவட்டம்) வலையாத்தூர் சிவன் கோயிலையும் புதுப்பிக்க இம்மன்னர் ஏற்பாடு செய்திருக்கிறார்.[6] காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கச்சூர் அம்மன் கோயிலும் இவர் காலத்தில் எடுப்பிக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பது அக்கோயில் சுவற்றில் பொறிக்கப் பெற்றுள்ள இவரது பெயரால் உணர முடிகிறது.[7]

இம்மன்னர்க்கு 'ஸ்ரீமல்லிநாதன்' என்ற பெயரும் வழங்கப் பெற்றிருப்பது வேலூருக்கருகிலுள்ள காங்கேய நல்லூரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினால் அறியலாகிறது.[8]

இம்மன்னருக்குத் திருமல்லிநாதன் இராச நாராயணன் என்று ஒருவரும், பொன்னின் தம்பிரான் இராச நாராயணன் என்று ஒருவரும் மகன்களாக இருந்திருக்கின்றனர்.[9]

வென்று மண்கொண்ட சம்புவராயர் கி.பி.1339-ன் இறுதியில் இயற்கை எய்தியதாக அறியமுடிகிறது.[10] இவரது உடல் தகனம் செய்யப்பெற்று, எரிசாம்பலைக் கங்கையாற்றில் கரைப்பதற்காக எழும்போதன் கங்கையாடி மாதையன் என்னும்

அதிகாரி மூலமாக இவரது புதல்வர்கள் அனுப்பி வைத்த செய்தியைக் குட்டியம் (வேலூர் மாவட்டம்) கல்வெட்டு எடுத்தியம்புகிறது.[11] இம்மன்னர் பெயரில் அவ்வதிகாரி குட்டியத்தில் ஒரு கோயில் எடுப்பித்து வழிபட்டார் என்பதையும் அக்கோயிலிலே பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு [12]மூலம் அறிய முடிகிறது.

## சகல லோகச் சக்கரவர்த்தி திருமல்லிநாதன் இராசநாராயண சம்புவராயர் (முதல் இராசநாராயணன்) கி.பி.1337–1363

சகலலோகச் சக்கரவர்த்தி இராச நாராயண சம்புவராயருக்குத் திருமல்லிநாதன் என்றொரு பெயரும் வழங்கப் பெற்றிருக்கிறது என்பது திருக்கழுக்குன்றத்திலுள்ள (காஞ்சிபுரம் மாவட்டம்) இவரது 10ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு [13]மூலம் தெரிகிறது. அதில் இவரது பெயர் "திருமல்லிநாதனான இராசநாராயண சம்புவராயர்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

குட்டியத்தில் காணப்பெறும் இரு கல்வெட்டுக்களின் மூலம் [14]இவரது தந்தை ஏகாம்பரநாதன் வென்று மண்கொண்ட சம்புவராயர் என்றும், இவரது இளவல் ஸ்ரீ சகலலோகச் சக்கரவர்த்தி ஸ்ரீ பொன்னின் தம்பிரான் இராசநாராயண சம்புவராயன் என்றும், பொன்னின்தம்பிரான் இராசநாராயண சம்புவராயனுக்கு "உதாரகுணராமன் சம்புவராயன்" என்று மற்றொரு பெயரும் உண்டு என்றும் தெரியவருகிறது. மேற்காணும் இரு இராசநாராயண சம்புவராயர்களுக்கும் தந்தையான ஏகாம்பரநாதன் வென்று மண்கொண்ட சம்புவராயருக்குத் திருமல்லிநாதன் என்ற பெயரும் வழங்கி வந்ததால், திருமல்லிநாதன் என்ற பெயரை மூத்த மகன் தம் பெயருக்கு முன்பாக இணைத்துத் 'திருமல்லிநாதன் இராசநாராயண சம்புவராயன் என்றழைத்துக் கொண்டார்.

இவ்வரசர் கி.பி. 3.2.1337க்கும் 4.3.1337க்கும் இடைப்பட்ட காலத்தில் முடிசூட்டிக் கொண்டார் என்பது இவரது கல்வெட்டுக்களில் காணப்பெறும் பஞ்சாங்கக் குறிப்புகளால் கணிக்கப் பட்டுள்ளது.[15]

திருவண்ணாமலை மாவட்டம் உக்கலில் பொறிக்கப் பட்டுள்ள இம்மன்னரின் 26ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே[16] இறுதியாகக் காணப்பெறுவதால், 26 ஆண்டு காலம், அதாவது

கி.பி.1362 முடிய ஆட்சி புரிந்துள்ளார் என்று உணரமுடிகிறது. ஆனால் முனைவர் எ. கிருஷ்ணசாமி தம் நூலில் இம்மன்னர் கி.பி. 1374 முடிய ஆட்சி புரிந்தார் என்று எழுதியுள்ளார்.[17] இவரது ஆட்சிக்காலம், சம்புவராய மன்னர்களின் பொற்காலம் என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இம்மன்னரின் புதல்வர் ஒருவர் 'இராச நாராயணன் திருமல்லிநாதன்' என்ற பெயரில் இருந்திருக்கிறார்.

சகலலோகச் சக்ரவர்த்தி திருமல்லிநாதன் இராச நாராயண சம்புவராயரின் கல்வெட்டுக்கள் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், விழுப்புரம், புதுச்சேரி ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. இதுவரை 67 கல்வெட்டுக்கள் இவர் காலத்தவை என்று கண்டறியப்பட்டுள்ளன.'

இவரது ஆட்சிக்காலத்தில் பல கோயில்கள், மண்டபங்கள் புதிதாக எழுப்பப்பெற்றிருக்கின்றன.

## சகலலோகச் சக்கரவர்த்தி பொன்னின் தம்பிரான் இராசநாராயண சம்புவராயர் (இரண்டாம் இராசநாராயணன்) கி.பி.1338–1356

வென்று மண் கொண்ட சம்புவராயர், சகலலோகச் சக்கரவர்த்தி பொன்னின் தம்பிரான் இராச நாராயணனைத் தம் மகன் என்று வேலூர் மாவட்டம் கீழ்மின்னல் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார்.[18] இக்கல்வெட்டில் தம் மகனை 'பொன்னின் பெருமாள்' என்று அழைத்திருக்கிறார். கீழ்மின்னலுக்குப் 'பொன்னின் பெருமாள் ஊர்' என்ற பெயர் இருந்திருக்கிறது.

புலியனூர்க் கல்வெட்டில்[19] பொன்னின் தம்பிரான், 'பொன்னாயன் சம்புவராயர்' என்று குறிக்கப்பட்டுள்ளார். திருத்தலூரிலுள்ள மூன்றாம் இராசநாராயணனின் (திருமல்லிநாதன் இராச நாராயணனின் மகன்) கல்வெட்டில்[20] இரண்டாம் இராச நாராயணன், 'பொன்னாயன் உதார குணராமன் சம்புவராயன்' என்று குறிக்கப் பெற்றிருக்கிறார்.

தேவனூரில் பொறிக்கப்பட்டுள்ள பொன்னின் தம்பிரான் இராசநாராயணனது நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'சகலலோகச் சக்கரவர்த்தி உதார குணராமன் சம்புவராயன்' என்று இவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.[21] வலையாத்தூர்க் கல்வெட்டிலும் இவர் மேலே உள்ளது போன்றே குறிப்பிடப் படுகிறார்.[22]

## முடிபுனைந்துக்கொளல்

இவருடைய கல்வெட்டுக்கள் தரும் பஞ்சாங்கக் குறிப்புக்களைக் கொண்டு பார்க்கையில் இவர் கி.பி.1338-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாளுக்கும் ஏப்ரல் திங்கள் 10ஆம் நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் முடிபுனைந்து கொண்டிருக்கலாம் என்று கருத முடிகிறது. [23]இவர் கி.பி.1363 முடிய ஆட்சிபுரிந்திருக்கிறார் என்று ஊகிக்கப்படுகிறது.[24]

இவர் காலத்தில் பொறிக்கப்பெற்றுள்ள 25 கல்வெட்டுக்கள் இதுவரை இனம் கண்டறியப்பட்டுள்ளன. இவை வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களில் காணப்பெறுகின்றன.

## சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் திருமல்லிநாதன் (மூன்றாம் இராசநாராயணன்) கி.பி.1356–1379

இவர் முதல் இராசநாராயணன் புதல்வர் ஆவார். கல்வெட்டுக்களில்[25] இவர் 'இராசநாராயணன் திருமல்லிநாதன்' என்றழைக்கப்பட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட வசூரில் காணப்பெறும் கல்வெட்டில் இம்மன்னர் 'சகலலோகச் சக்கரவர்த்தி இராசநாராயணன் திருமல்லிநாதன் திருநீற்றுச் சம்பன்' என்று குறிக்கப்பட்டிருக்கிறார். திருத்தலூர்க் கல்வெட்டு, 'பகை மன்னர் பதியில் பல விதைத்த இராசநாராயணன் திருமல்லி நாதன்' என்று குறிப்பிடுகிறது.

இம்மன்னரது கல்வெட்டுக்கள் வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 38 கல்வெட்டுக்கள் இவர் காலத்தைச் சார்ந்தவை என்று அறியப்பட்டுள்ளன.

இவர் காலத்தியக் கல்வெட்டுக்கள் தரும் பஞ்சாங்கக் குறிப்புகளைக் கொண்டு இவர் கி.பி.21.11.1355க்கும் 4.1.1356க்கும் இடைப்பட்ட காலத்தில் முடிபுனைந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. [26]இவர் 23 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருப்பதாக அறியமுடிகிறது. கி.பி.1379ல் இவரது ஆட்சி முடிவடைந்திருக்கும் எனத் தெரிகிறது.[27]

இவரது ஆட்சிக் காலத்திலும் பல அறப்பணிகள் நடந்தேறியிருக்கின்றன. மொத்தத்தில் சம்புவராயர்களது ஆட்சி

கி.பி.1362ல் நலிவடையத் தொடங்கிவிட்டது என்று கூறலாம். அந்த ஆண்டில்தான் விசயநகர வேந்தன் கம்பணன், வென்று மண் கொண்ட சம்புவராயன் என்ற தந்தை பெயரை முன்னொட்டாகப் பெற்றிருந்த முதலாம் இராச நாரா யணனைத் தோற்கடித்து கைப்பிடியாகப் பிடித்ததோடு இராசகம்பீரன் மலையையும் கைப்பற்றிக் கொண்டான்.[28] இச்செய்தியைக் கவிதை நடையில் தெரிவிக்கும் மதுராவிசயம், கீழ்வருமாறு கூறுகிறது.

> "இராசகம்பீரன் மலையில் உள்ள கோட்டையைக் கம்பணனின் படைகள் முற்றுகையிட்டன. இங்கு நடந்த கடுமையான போரில் சம்புவராயரின் படைகள் பெருத்த அளவில் அழிந்தன. கோட்டை முழுவதும் கைப்பற்றப் பட்ட நிலையில் சம்புவராய மன்னன் கையில் உருவிய வாளொடும், மிகு சினத்தோடும் புற்றிலிருந்து சீற்றத்துடன் வெளிப்படும் பாம்பைப்போல் தன்னுடைய மாளிகையி லிருந்து வெளியே வந்தான். கம்பணனுக்கும் சம்புவ ராயனுக்கும் இடையில் கடும்போர் நடைபெற்றது. இறுதியில் கம்பணன் சம்புவரா்யன் உடலில் வாளைப் பாய்ச்சி அவனை இந்திரனுடைய உலகுக்கு விருந்தினராக அனுப்பிவைத்தான்."

ஆனாலும் அவனது சந்ததியர்களான சம்புவராயர்களைத் தொடர்ந்து ஆள்வதற்கு அனுமதியளித்திருக்கிறான். சம்புவராயர்களது ஆட்சி கி.பி.1379ல் முடிவுக்கு வந்துவிட்டதாக உணரமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. N. Sethuraman, The Sambuvarayas of the 14th century. J.E.S.I, Vol. XIII, (1986)
2. Op.cit. சம்புவராயர் வரலாறு, பிற்சேர்க்கை. இம்மன்னன் காலத்தியக் கல்வெட்டுக்களைக் காண்க.
3. ARE. 48 of 1921
4. Ibid 499 of 1926, சம்புவராயர் வரலாறு, க.வ.எண்.37
5. ARE 434 of 1903
6. Ibid 29 of 1933-34

7. Op.cit *சம்புவராயர் வரலாறு, பிற்சேர்க்கை, க.வ.எண்.46*
8. ARE 24 of *1887; சம்புவராயர் வரலாறு, க.வ.எண்.39*
9. ARE 33 of 1933-34; *சம்புவராயர் வரலாறு, க.வ.எண்.117*
10. N.Sethuraman, Op.cit
11. ARE 32 of 1933-34
12. Ibid 33 of 1933-34
13. *சம்புவராயர் வரலாறு; பிற்சேர்க்கை க.வ.எண்.89*
14. ARE 32 of 1933-34, ARE 33 of 1933-34
15. N. Sethuraman Op.cit
16. Ibid
17. Dr. A. Krishnaswamy, The Tamil Country under Vijayanagar (1964), pp.*55*
18. ARE 35 of 1933-34, *சம்புவராயர் வரலாறு, க.வ.எண்.40*
19. Ibid 386 of 1925, Ibid எண் 146
20. Ibid 434 of 1925, Ibid எண் 171
21. Ibid 301 of 1928-29, Ibid எண் *121*
22. Ibid 28 of 1933-34, Ibid எண் *126*
23. N. Sethuraman, Op.cit
24. Ibid
25. ARE *424* of *1904 (குடிமல்லூர்), 86* of *1921 (பிள்ளையார் பாளையம்), 344* of *1909 (கூவம்), 83* of *1941-42 (வசூர்), 434* of *1925 (திருத்தலூர்), 139* of *1924 (கீழ்க்கொடுங்காலூர்)*
26. N. Sethuraman. Op.cit
27. *டாக்டர் கோ. தங்கவேலு, இல. தியாகராசன், சம்புவராயர் வரலாறு, பக்கம் 71*
28. ARE 267 of 1919; *சம்புவராயர் வரலாறு, க.வ.எண்.197*

## இயல் – ஏழு

# வன்னியர் இலங்கையில்

இலங்கையில் வன்னியர் வாழ்ந்து ஆட்சி செய்த பகுதி 'வன்னி நாடு என்றே வழங்கப் பெற்றிருக்கிறது. இப்பகுதி கி.பி.13 – 14ஆம் நூற்றாண்டுகளில் மக்கள் வாழாத காட்டுப் பகுதியாக இருந்தது எனவும், இலங்கை அரசு ஆட்சிப் பகுதிக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழரசு ஆட்சிப் பகுதிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியாக இருந்ததெனவும் சிங்கள ஆவணங்கள் தெரிவிக்கின்றன. கிழக்கு மாகாண ஆவணங்களில் பட்டிச் சோளப் பகுதியைச் சேர்ந்த அரசாட்சிப் பகுதிகளும் வன்னிப் பகுதியென்றே வழங்கப்பெற்றன. ஆங்கிலேய மற்றும் டச்சு ஆட்சிக் காலங்களில் வன்னிப் பகுதி என்பது தற்காலத்திய வவுனிய மாவட்டமும், பொலநருவா மாவட்டத்தின் சில பகுதிகளும் உள்ளடங்கியதாகும். தமிழ் வன்னி என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் பகுதிகள் மன்னார், வவுனியா, பட்டிச்சோள, திரிகோணமலை மற்றும் பொலநருவா ஆகிய பகுதிகளாகும்.[1]

இலங்கையில் வன்னியர்கள் பற்றி குறிப்பிடும் பழமையான நூல் 'பூஜவலியா' என்னும் நூலாகும். இந்நூல் கி.பி.13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எழுதப் பெற்றதாகும். இந்நூலில் வன்னியர் ஆட்சிப்பகுதி பற்றியும் தெரிவிக்கப்பெற்றிருக்கிறது. கி.பி.1215 வாக்கில் மாகா என்னும் அரசன் ராஜரட்ட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டதைத் தெரிவிக்கையில் 'மஹாவன்னிப் பகுதிகளையும், அப்பகுதிகளின் தலைவர்கள் மாகாவுக்குப் பயந்து வாழ்ந்தார்கள் என்றும் தெரிவிக்கிறது.[2] இதிலிருந்து கி.பி.13ஆம் நூற்றாண்டளவிலேயே வன்னியர் இலங்கையில் சில பகுதிகளில் தாங்கள் தலைவர்களாக விளங்கினர் என்பதும், மஹாவன்னியர், சிறிவன்னியர் என்னும் இருபெரும் பிரிவினராகப் பிரிந்திருந்தனர் என்பதும் தெரியவருகிறது.[3]

'சூலவம்ச' என்னும் இலங்கை வரலாற்று நூலும் வன்னியர்களைப் பற்றி குறிப்பிடுகிறது. இதுவும் பிற்காலப் பொலநருவ (கி.பி.1215) காலத்தைச் சேர்ந்த வரலாற்றைக் குறிப்பிடும் போதே குறிப்பிட்டுள்ளது. ஜீஜர் என்பார் அந்நூல் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் போதே குறிப்பிடுகிறது என்று கூறியிருக்கிறார் என்று தெரிவித்து, ஆனாலும் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை என்று இந்திரபாலா கருதியுள்ளார்.[4]

மேலும் பரணவிதனா என்னும் அறிஞர் 'நிகாய சங்க்ரஹயா' என்னும் நூலிலும், 'எளு அத்தனகலு வம்ச' என்னும் நூலிலும் கூறப்பெற்றுள்ள சில கருத்துக்களின் அடிப்படையில் வன்னியர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இலங்கையில் குறிப்பிடப்படுகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார். 'எளு அத்தனகலு வம்ச' என்னும் நூல், அநுராதபுரத்தில் ஆட்சி செய்து வந்த முகலன் என்னும் அரசனின் ஆட்சியை அத்தனகலுப் பகுதியிலிருந்த 'சிறி வன்னியர்' மதிக்கவில்லை என்று கூறுகிறது.[5] எளு அத்தன கலுவம்ச குறிப்பிடும் முகலன் என்ற பெயரில் மூன்று அரசர்கள் இருந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்றும் குறிப்பிட்டு, இந்நூல் பொலநருவா காலத்துக்கும் பிற்பட்டது என்ற காரணத்தால், வன்னியர் பற்றிய குறிப்பு கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முந்தையதாக இருக்கலாகாது என்று இந்திரபாலா தெரிவித் துள்ளார்.[6] இந்திரபாலாவின் குறிப்பிலிருந்து கி.பி.8ஆம் நூற்றாண்டளவிலேயே வன்னியர் பற்றிய குறிப்பு இலங்கை நூல் ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. தமிழகத் தின் தென் பகுதியும், இலங்கைக்கு அருகிலுள்ளதுமான மதுரைக்கு அருகில் உள்ள கருங்காலக்குடியில் காணப்பெறும் ஒரு கல்வெட்டில் கி.பி.9ஆம் நூற்றாண்டளவில் 'பள்ளிதரையன்' என்னும் வன்னியர்[7] குறிக்கப்பெற்றிருப்பது, கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வன்னியர் குடியேறியிருக்க வாய்ப்புண்டு என்பதைப் புலப்படுத்தவதாக உள்ளது. மேலும் சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் (கி.பி.993-1070) அவர்கள் வன்னியப் போர் வீரர்களையும் இலங்கைக்கு அழைத்து வந்திருப்பர் என்றும், வேளைக்காரப்படைகளுக்கு அவர்களது சேவையைப் பாராட்டி நிலக்கொடை வழங்கியது போன்று,

வன்னியர்களது சேவையையும் பாராட்டி நிலக்கொடையளித்து அங்கேயே தங்கச் செய்திருப்பர் என்றும் பரணவிதன ஊகித்திருக்கிறார்.[8]

நிகாய சங்க்ரஹயா என்னும் நூல் முதலாம் பராக்ரமபாகு 364 வன்னியர் பகுதிகளை வெற்றி கொண்டது பற்றி குறிப்பிடுகிறது[9]. சில நூல்களில் பதினெட்டு வன்னியர் பகுதி என்று பேசப்படுகின்றது. [10]தமிழ் நூழ்களில் ஏழு வன்னியர் பகுதி குறிக்கப்பட்டுள்ளன[11]. இது யாழ்ப்பாண அரசுக்கு அடங்கிய ஏழு முக்கிய வன்னிய சிற்றரசுகளைக் குறிப்பதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[12]

இற்றைக்கு நாம் பேசும் வன்னியர் இனத்தைச் சார்ந்த தலைவர்கள் இலங்கைத் திரிகோணமலைப் பகுதியில் கி.பி.12ஆம் நூற்றாண்டுக்குப்பின்பு பல ஆட்சிப் பகுதிகளை ஏற்படுத்திக் கொண்டு ஆட்சி செய்திருக்கின்றனர். இலங்கைத் தீவில் ஆட்சி புரிந்த முதல் தென்னிந்திய வன்னியர்கள் இவர்களாகவே இருக்கக்கூடும் என்று இந்திரபாலா கருதியுள்ளார்.[13]

தென்னிந்தியாவிலிருந்து வன்னியர்கள் இலங்கைத் தீவுக்குக் குடியேறியது பற்றி பல மரபுக்கதைகள் 'தமிழ் மரபுவழி நூல்களில்' (Tamil Chronicles) கூறப்பட்டுள்ளன. 'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் இலக்கியத்திலும், 'கோனேசர் கல்வெட்டிலும்' குளக்கோட்டன் என்ற பெயருடைய தலைவன் மூலம் குடியேற்றம் நடைபெற்றது என்று பேசப்படுகின்றன. ஆனால் மட்டக்களிப்பு மான்மியம்[14] என்னும் நூல் 'மாகோன்' என்னும் தலைவன் வழி நடைபெற்றது என்றும், 'வையாபாடல்' என்னும் நூல் ஒரு பாண்டிய இளவரசி மூலம் நடைபெற்றது என்றும் கூறுகின்றன. மேற்காணும் மரபு வழிக்கதைகளில், 'குளக் கோட்டன்' மூலம் வன்னியர் குடியேற்றம் ஏற்பட்டது என்று கூறும் கதையே செல்வாக்கு பெற்று விளங்குகிறது. இக்குளக்கோட்டன் பற்றியும் அவனது அறச்செயல்கள் பற்றியும் 'தக்ஷிணகைலாச புராணமும்', 'திரிகோணாசல புராணமும்' கூடத் தெரிவிக்கின்றன. மேலும் திரிகோணமலை பிரடரிக் கோட்டையிலுள்ள கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டும் இதுபற்றி குறிப்பிடுகிறது.[15]

குளக்கோட்டன், சோழ நாட்டைச் சேர்ந்த ஒரு இளவரசன் எனவும், அவன் சைவ சமயத்தில் ஆழ்ந்த

பற்றுடையவன் என்றும், இலங்கைக்குச் சமயச் சுற்றுலா வந்தபோது திரிகோண மலையில் சில காலம் தங்கினான் என்றும், அப்போது கோணேசுவரம் கோயிலைப் பழுது பார்த்ததாகவும், திரிகோணமலையில் ஆட்சிப் பகுதியை உருவாக்கினான் என்றும் தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன.

திரிகோணமலை கோணேசுவரர் கோயிலில் திருப்பணி வேலை முடிவுற்றதும் தமிழகத்தின் பல ஊர்களிலிருந்து வளவ இனத்தார், காராளர், ஆசாரியார் ஆகியோரோடு மதுரையி லிருந்து ஒரு பெருந்தனக்காரரையும் அழைத்து வந்தார். அவருக்கு வன்னிபம் (வன்னியத் தலைவன்) என்ற பட்டத் தையும் தந்தார் என்று கோணேசர் கல்வெட்டு கூறுகிறது.[16]

யாழ்ப்பாண வைபவமாலை இந்நிகழ்ச்சியைச் சிறிது மாறுதலுடன் கூறுகிறது. திரிகோணேசுவரர் கோயிலுக்குத் திருப்பணிகளைச் செய்து முடித்த பின்னர். அக்கோயிலுக்கு ஏழு மாவட்டங்களிலுள்ள சில நிலங்களைக் குளக்கோட்டன் கொடையாக வழங்கினார். அதன் பிறகு வன்னியர்களை அழைத்து வந்து அவ்வேழு மாவட்டங்களிலும் குடியமர்த்தி கொடையளிக்கப் பெற்ற நிலங்களில் வேளாண்மை செய்யுமாறு செய்தார். குளக்கோட்டன் இறந்தபிறகு மேலும் 59 வன்னியர் பாண்டிய நாட்டிலிருந்து வந்து அவ்வேழு மாவட்டங்களிலும் குடியேறினர். இம்மாவட்டங்களின் வருவாய் திரிகோணேசுவரர் கோயிலுக்குச் சென்றதால் கண்டி மன்னர்கள் இப்பகுதியின் வளர்ச்சியில் ஈடுபாடு கொள்ளவில்லை. ஆதலால் இப்பகுதி பல சிறு தலைவர்களால் கண்காணிக்கப்பெற்று வந்தது. இறுதியில் வன்னியர் அனைவரும் ஒன்று சேர்ந்து, தங்களில் ஏழுபேரைத் தேர்ந்தெடுத்து ஏழு மாகாணத்தையும் ஆட்சி செய்து வரும்படி ஏற்பாடு செய்தனர் என்று யாழ்ப்பாண வைபவமாலை தெரிவிக்கிறது[17]

இக்குளக்கோட்டன் யார் என்று தீர்மானிப்பதில் அறிஞர்களிடையே பல்வேறு கருத்து நிலவியது. தக்ஷிண கைலாசப்புராணம் குளக்கோட்டனைச் சோழகங்கன் என்றும், அவனுடைய தந்தை மனுசோழன் என்றும் தெரிவிக்கிறது[18] திரிகோணாசலப்புராணம் குளக்கோட்டனைச் சோழ நாட்டைச் சேர்ந்த சோழகங்கன் என்றும், வரராமதேவரின் மகன் என்றும் கூறுகிறது.[19] குளக்கோட்டன் என்னும் சோழகங்கன் பாண்டிய மன்னன் ஒருவனின் சிற்றரசனான

வன்னியன் என்று 'உபாசக ஞானாலங்காரம்' என்னும் நூலில் காணப்படுகிறது.[20]

மட்டக்களப்பு மான்மியம், கலிங்க அரசன் மாகோன்(மாக) காளிகட்டத்திலிருந்து (காழி என்று வழங்கப்பெற்ற சீர்காழியிலிருந்து இருக்கலாம்) படையாட்சி இனத்திலுள்ள சிறந்தவர்கள் சிலரை அழைத்து வந்து தம் படைத்தளபதிகளாக அமர்த்தினார், சிலகாலம் கழித்து அவர்களைப் பட்டிச்சோளாவின் சிலபகுதிகளை ஆண்டு வரும்படி ஆணையிட்டார் என்று விவரிக்கிறது.[21]

வையாபாடல் மற்றும் வையா ஆகிய நூல்களில் வேறு வகையாக இந்நிகழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்கிரசிங்கனின் மகனான வரராச சிங்கன் என்னும் அரசன் இலங்கையின் ஒரு பகுதிக்குத் தலைவனானான். இவன் பாண்டி நாட்டின் இளவரசியைத் திருமணம் புரிந்து கொண்டான். அவ்விளவரசி இலங்கைக்கு வருகையில் அறுபது வன்னியர் குடும்பங்களையும் தம் குழுவினரோடு அழைத்து வந்தாள். அறுபது வன்னியர் குடும்பங்களில் ஒரு குடும்பத்தை மட்டும் தம் தலை நகரில் வைத்துக் கொண்டு, மற்றவர்களை 'அடங்கப்பற்று' பகுதிக்குத் தலைவர்களாக இருக்குமாறு அனுப்பிவிட்டாள் என்று அந்நூல்கள் தெரிவிக்கின்றன.[22] அடங்கப்பற்று பகுதி தற்போதுள்ள வவுனிய மாவட்டமும், திரிகோண மாவட்டத்தின் வடபகுதியுமாகும். வையாபாடல், திரிராய் மற்றும் காட்டுக்குளம் பகுதிகளில் பூபால வன்னிமை, கோபாலன் மற்றும் சிலர் தங்கி வாழ்ந்தனர் என்று மேலும் கூறுகிறது. மேற்கூறியவற்றையெல்லாம் பார்க்கையில் சில வன்னியர்களே சோழக்கங்கர் என்று அழைக்கப்பெற்றிருப்பர் என்றும், குளக்கோட்டன் (குளத்தையும் கோயிலையும் அமைத்தவன் என்று பொருள் தரும்) அவர்களில் ஒருவராக இருக்கலாம் என்றும், கீழலங்கையில் தாம் நிலைப்படுத்திக்கொண்ட பின்னர், தம்முடைய உறவினர்களான வன்னியர்களைக் கொண்டு வந்து குடியமர்த்தியிருப்பார் என்றும் இந்திரபாலா ஊகிக்கிறார்.[23]

## வன்னி சிற்றரசர்கள்

மேற்கூறியவாறு அமைந்த சிற்றரசுகள் பிற்காலத்தில் 'வன்னி சிற்றரசுகள்' என்றழைக்கப் பெற்றன. அச்சிற்றரசுத் தலைவர்களுள் 'மாக' என்னும் சிற்றரசன் திரிகோண

மலையிலும், பட்டிச்சோள மாவட்டங்களிலும் சிற்றரசுகள் அமைவதற்குக் காரணமானவனாவான். இக்காலகட்டத்தில் புத்த வழிபாட்டுத் தலங்கள் சீரழிக்கப் பெற்றன. இந்துமத வழிபாட்டுத் தலங்கள் ஏற்றம் பெற்றன. இச்சிற்றரசர்களில் சிலர் அப்பகுதிகளின் நீர்ப்பாசன வசதிகளைச் செப்பனிடுவதில் மிகவும் ஈடுபாடு கொண்டு பணிபுரிந்தனர்.[24]

திரிகோணமலையில் வன்னியர் தலைமையிலான சிற்றரசு பொலனருவாவை ஆண்டு வந்த நிசங்கமல்லன் காலத்திலோ அல்லது அவனுக்கு முன்னோனான முதலாம் பராக்ரம பாகுவின் (கி.பி.1153-1186) காலத்திலோ அமையப்பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதுவது இடர்ப்பாடுடையதாகத் தெரிகிறது என்று கூறிவிட்டு கி.பி.13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வன்னியர் சிற்றரசுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று இந்திர பாலா திட்டவட்டமாகக் கருதியுள்ளார்.[25]

## வன்னியர், 'இராசாக்கள் தம்பிரான்' பட்டம் பெற்று மடத்தின் தலைவராகியது.

தமிழகம் விஜயநகர வேந்தர் வேங்கடபதி தேவமஹாராயர் ஆட்சியின்கீழ் இருந்து வருகையில், யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த **பரராசசேகர மகாராசர்** சிதம்பரத்துக்கு வந்து சிதம்பரேசரைத் (நடராசரைத்) தரிசித்து விட்டு, சபாபதிக்குக் குண்டலம் கொடுத்துவிட்டு, சுவாமிக்கு ஒவ்வொரு நாளும் கட்டளை நடப்பிப்பதற்கு நித்தியம் ஒரு வராகனுக்குப் படிக் கட்டளையும், நாளொன்றுக்கு ஐங்கல அரிசி நெய்வேத்தியமும், மடத்தில் பிச்சை அளிப்பதற்கான அரிசியும், சுவாமிக்குப் பரிவட்டமும் ஆக ஒவ்வொரு வேளையும் நடக்கும்படிக்கு முதல் வைத்தார். மேலும் வாகனம் வைப்பதற்கு அங்கண ஓத்தியும் வாங்கி யளித்தார். ஒரு நாள் திருவிழா நடத்தவும் ஏற்பாடு செய்தார். வெளியூர்களிலிருந்து வரும் பரதேசிகள் தங்குவதற்காக முன்னூற்றறுபது மனை வாங்கி வீடுகட்டி, தெரு ஏற்படுத்தி, அதற்கு 'இராசாக்கள் தம்பிரான் தெருவீதி' என்று பெயரிட்டார். நந்தவனம் அமைப்பதற்கும், நல்ல நீர்க் கிணறு வெட்டுவதற்கும் கிழக்கும் தெற்கும் 30,000 குழி நிலமும் வாங்கி அதற்கு 'இராசாக்கள் தம்பிரான் வெளி' என்று பெயரிட்டார். அத்தோடு கொத்தங்குடி (கொற்றவன்குடி) யில் பாதி ஊரை வாங்கி, அதனையும் மற்றும் யாழ்ப்பாணத்தில் தமது இராச்சியத்தில்

அடங்கியுள்ள அச்சுவேலி, புத்தூர், அளவெட்டி ஆகிய மூன்று ஊர்களையும் சறுவமான்யமாக சிதம்பர தர்மத்துக்குக் கொடுத்து, இந்த தர்மம் என்றும் சரியாக நடந்து வருவதைக் கண்காணிக்க, "இராசா வாசலுக்கு மந்திரிமாராகவும், இராச வங்கிஷமாகவும் இருக்கிறவர்கள் தில்லியூர் சேனாபதியார், சிங்கையூர்ப் படை ஆண்டவர், தில்லியூர் குலத்துங்கர், பரநிருப சிங்கள குல நிருவாங்கப் படையாட்சியார் அவர்கள் வங்கிஷத்திலே நாலுபேரும் சம்மதிச்சு தங்களினத்துக்குள்ளே ஒருத்தரைக் காவிவேட்டித் தம்பிரானாக வைத்து 'இராசாக்கள் தம்பிரானார் திருச்சிற்றம்பல' மென்றவருக்குப் பட்டமுங் கட்டிவைத்து என்றைக்கும் இந்தத் தருமம் விசாரிச்சுக் கொள்ளும்படிக்கு இந்த நாலுபேரையும் பரராசசேகர மகாராசா இந்தப்படி கட்டளை பண்ணி தருமம் நடக்கும் படிக்கு" ஏற்பாடு செய்திருக்கிறார் என்று பரராசசேகரன் செப்புப் பட்டயம் தெரிவிக்கிறது.[26] இச்செப்புப்பட்டயத்தின் காலம் கி.பி.16-17ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

இதிலிருந்து இலங்கையில் தில்லியூர்ப் பகுதிக்குச் சேனாபதியாகவும் சிங்கையூர்ப் படை ஆண்டவராகவும் வன்னியர் விளங்கியிருக்கின்றனர் என்பது தெளிவு. இவர்கள் படையாட்சி வமிசத்தைச் சேர்ந்தவர் என்று தெளிவாகக் குறிக்கப்படுகின்றனர். இவர்களில் ஒருவர் யாழ்ப்பாண அரசர் பரராசசேகரன் சிதம்பர சபாபதி கோயிலுக்கு அளித்த தானங்களை நிர்வகிக்கும் தம்பிரானாக நியமிக்கப் பெற்றார் என்று அறிய முடிகிறது.

தொடர்ந்து திரிகோணமலைப் பகுதிகளில் வன்னியர்கள் சில பகுதிகளுக்குத் தலைவர்களாக விளங்கியிருக்கின்றனர். "பல்வேறு காலகட்டங்களில், கண்டி அரசுக்கும் ஐரோப்பியருக்கும் ஏற்பட்ட போர்களைத் தங்களுக்குச் சாதகமாக ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் சுதந்திரமாக ஆட்சிசெய்யும் நிலையை உருவாக்கிக் கொண்டனர் என்றும், ஆனால் இறுதியாக டச்சுக் காரர்களுக்குப் பணியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்றும்," டபிள்யூ ஹேமில்டன் தம் நூலில் எழுதியிருக்கிறார்.[27]

"கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வன்னியப் பகுதி, அங்கு வாழ்ந்த வன்னிய அரசர்களாலேயே ஆட்சி செய்யப்பெற்று வந்ததது என்றும், சில காலங்களில் 'வன்னிச்சி' என்று

அழைக்கப்பெற்ற பெண்ணரசிகளாலும் ஆளப்பெற்று வந்தது" என்றும் ஜே.இ. டென்னன்ட்[28] என்பார் கூறியிருக்கிறார். மேலும் அக்காலகட்டத்தில் இலங்கையில் வன்னியர் இரு பிரிவாக வாழ்ந்தனர். வவுனியா மாவட்டத்தில் வாழ்ந்தவர்கள் தமிழ் பேசும் வன்னியர்களாகவும், நவரகலவியா மாவட்டத்தில் வாழ்ந்தவர் சிங்கள மொழி பேசும் வன்னியராகவும் இருந்தனர். சிங்கள மொழி பேசிய வன்னியரும் தமிழ்மொழி பேசிய வன்னியரின் வழி வந்தவர்களே என்று கருதுவதற்கு அவர்களது பழக்க வழக்கங்கள் துணைபுரிகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. Dr. Indrapala, 'The Origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon', (1970), The Ceylon Journal of the Humanities, Vol.1, No.2, (Pub) University of Ceylon, Paradeniya.
2. Pujavaliya, p.109
3. Dr. Indrapala, Op.cit, p.120
4. Ibid
5. Elu-Attanagalu Vamsa, ed.P. Aryaratna, (Colombo 1932), p.41.
6. Dr. Indrapala, Op.Cit, p.121
7. ARE Report for the year 1912, Part II, Para I, p.50
8. S. Paranavitana, The Polannaruva Inscription of Vijayabahu 1, E.I. XVIII, p.337
9. Nikaya-Songrahya, ed. D.P.R. Samaranayaka (Colombo 1960), p.20
10. Senarat Paranavitana Civilization of the Period; Economic, Political, and Social Conditions, ed H.C.Ray, University of Ceylon History of Ceylon (UCHC) (Colombo 1960), 1, ii, pp.736-737
11. *யாழ்ப்பாண வைபவம், பக்கம்.38*
12. Dr. Indrapala, Op. Cit, p.123
13. Ibid, p.126
14. Mattakkalappu manmiyam, ed F.X.C. Nataraja, (Colombo 1962), p.95

15. Dakshina Kailasa Puranam, ed. P.V.Vaityalinka Tecikar (Pt Petro 1916); Trikonacala Puranam, ed. A. Canmukarathina Aiyar (Jaffna 1909); H.W. Codrington, "The Insscription at Fort Frederick, Trincomalee", JCBRAS, XXX, No.80, p.448.

16. Dr. Indrapala, Op.Cit,pp.126-127

17. Ibid

18. *தக்ஷிண கைலாசப் புராணம், பாயிரம், பாடல் 8, பக்கம் 67, பாடல் 8.*

19. *திரிகோணாசலப் புராணம், பக்கம் 94, பாடல் 53*

20. *உபாச ஞானாலங்கார, பக்கம் 157*

21. *மட்டக்களப்பு மான்மியம், பக்கம் 104*ff

22. Vaiyapatal, ed J.W. Arutprakacam (Jaffna 1921), vv 29-81; Vaiya, ed. S. Gnanapragasar (Jaffna 1921), p.26ff

23. Dr. K. Indrapala, Op.cit, p.136

24. Dr. K. Indrapala, Op.cit, p.132

25. Ibid p.137

26. *பதிப்பாசிரியர் கொடுமுடி சண்முகப் பிரகதம், தேனோலை, இதழ் எட்டு (ஏப்ரல் 1974) பக்கம் 12-14.*

27. W. Hamilton, Geographical, statistical and historical descriptions of Hindustan and the adjacent countries 1820; Thurston, Castes and Tribes of Southern India, Vol VI - P to S, 1909, p. 8

28. Ceylon, 4th edition (London 1860)

இயல் – எட்டு

# வன்னியப் பாளையக்காரர்

## (அரியலூர்)

அரியலூரின் பழைய பெயர் 'அரிசில்' என்று கருதப்படுகிறது. 'அரிசில் கிழார்' என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரைச் சார்ந்தவர் என்று சிலர் கூறுவதுண்டு என்று தமிழ் தாத்தா உ.வே. சுவாமிநாதய்யர் எழுதியிருக்கிறார்.[1] இவ்வூருக்குக் "குன்றை" என்ற பெயரும் வழங்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.[2] அரியலூருக்கருகிலுள்ள 'குன்னம்' என்னும் ஊர் இக்கருத்துக்கு வலிமை சேர்ப்பதாகக் கருதப்பட்டுள்ளது. அரிக்கு இல்லாக (இருப்பிடமாக) இத்தலம் இருத்தலால் அரியிலெனப் பெயர் பெற்றதென்றும் கூறுவர்.

'தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் வன்னியர்தம் பழங்குடிகளில் ஒன்று மழவர் குடியாகும். இம்மழவர்கள் சிறந்த வீரர்களாய் விளங்கினர். சங்க நூல் களிலும் பண்டைய சாசனங்களிலும் மழவர்களைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. மழவர்கள் வாழ்ந்த நாடு மழவர் நாடென விளங்கிப் பின் மழநாடாயிற்று. இம் மழநாடு மேல் மழநாடெனவும் கீழ் மழநாடெனவும் இரண்டாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அரியலூர் கீழ் மழ நாட்டைச் சேர்ந்தது.[3]

அதியமான் 'மழவர் பெருமகன்' என்று ஔவையாரால்[4] பாடப்பட்டுள்ளார். ஆதலால் அதியரும் வன்னிய இனத்தைச் சார்ந்தவர் என்னும் கருத்தும் நிலவுகிறது. அதியர் சேரரின் கிளையினர் என்று கொள்வதால் சேரரும், சேரர்வழி வந்தவர் பழுவேட்டரையர் என்பதால் பழுவேட்டரையரும் வன்னியரே என்ற கருத்தும் உண்டு.

அரியலூரில் மழவராயர்கள் பாளையக்காரர்களாக கி.பி.14ஆம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி செய்திருக்கிறார்கள் என்பது மெக்கன்சி என்பார் சேகரித்துள்ள குறிப்புகளாலும், திருச்சி மாவட்ட கஸெட்டியர் வாயிலாகவும் தெரியவந்

துள்ளது. மெக்கன்சி சேகரித்துள்ள குறிப்புகள் 'அரியலூர் பாளையக்காரர் கைபியது' என்னும் தலைப்பில் சென்னை அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகத்தில் காணப் பெறுகிறது. இக்கைபியது 1805 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 8ஆம் நாள் எழுதப் பெற்றிருக்கிறது. இது பேச்சு வழக்கில் எழுதியிருப்பதாகக் காணப்படுகிறது. இக்கைபியது 'மாளவராயர் அரியலூர் பாளையக்காரர், ஸம்ஸ்தானம் மதுரை, திருச்சிராப் பள்ளி வகையறா' என்று தொடங்கப்பெற்றிருக்கிறது. 'ஜாதியில் வன்னிய குலத்தவர்களுடைய வமிசாவளி. பூர்வத்தில் வன்னிய குலத்தில் நயினார் என்று பெயர் உள்ளவர்கள் பட்டம் கட்டிக் கொண்டு அர்சாட்சி செய்தவர்கள் பதினெட்டு பேர்களுக்கு வருஷங்கள் 497' என்றதோடு மேலும் கூறிச்செல்கிறது. யார் யார் ஆட்சி புரிந்தார்கள் என்பதையும், ஒவ்வொருவரும் எத்தனை ஆண்டுகள் ஆட்சி நடத்தினார்கள் என்பதையும் கீழே காணமுடிகிறது. இதில் இவர்கள் அனைவரும் ஆட்சி செய்த ஆண்டுகளைக் கணக்கிட்டால் மொத்தம் 510 ஆண்டுகள் வருகின்றன. ஆனால் மேலே 497 ஆண்டுகள் என்று தரப்பட்டுள்ளன. மேலும் மாளவராயர் என்று குறிப்பிடுவது மழவராயர்களையே ஆகும். மழவராயர் என்பதை மழ – அரையர் என்று பிரிக்கலாம். இதற்கான பொருள் மழ நாட்டுக்குத் தலைவர்கள் என்பதாகும்.

மழவராய மன்னர்கள் கீழ்க்காணுமாறு ஆட்சி செய்தார்கள் என்று குறிக்கப் பெற்றுள்ளனர்.

| வரிசை எண் | பெயர் | ஆட்சிபுரிந்த ஆண்டுகள் |
|---|---|---|
| 1. | ராமநயினார் | 45 |
| 2. | பூம நயினார் | 30 |
| 3. | மல்லரச மழவராயர் | 39 |
| 4. | பள்ளிக்கொண்டை ஒப்பிலா மழவராயர் | 35 |
| 5. | நாண்டாய மழவராயர் | 38 |
| 6. | கட்டியப்ப மழவராயர் | 47 |
| 7. | கிருஷ்ணப்ப ஒப்பிலா மழவராயர் | 32 |
| 8. | குமார ஒப்பிலா மழவர்ாயர் | 30 |
| 9. | பெரியலக்ஷ்மண மழவராயர் | 30 |
| 10. | ரங்கப்ப ஒப்பிலா மழவராயர் | 40 |

| | | |
|---|---|---|
| 11. | விஜய ஒப்பிலா மழவராயர் | 20 |
| 12. | முத்து வெங்கட ஒப்பிலா மழவராயர் | 20 |
| 13. | குமார ரங்கப்ப ஒப்பிலா மழவராயர் | 10 |
| 14. | பெரிய லக்ஷ்மண ஒப்பிலா மழவராயர் | 14 |
| 15. | ரணவிஜய ஒப்பிலா மழவராயர் | 24 |
| 16. | குமார ஒப்பிலா மழவராயர் | 35 |
| 17. | குமார ஒப்பிலா மழவராயர் | 13 |
| 18. | விஜய ஒப்பிலா மழவராயர் | 8 |
| | ஆக மொத்தம் | 510 |

குமார ஒப்பிலா மழவராயர் இருமுறை அடுத்தடுத்து குறிக்கப்பெற்று, இரண்டாம் முறை காணப்பெறும் 13 ஆண்டுகள் தவறுதலாகக் குறிக்கப்பெற்றிருக்கும் போன்று தெரிகிறது. ஏனெனில் இந்த 13 ஆண்டுகள் மேற்கூறப்பட்ட வித்தியாச ஆண்டுகள். எனவே மொத்த ஆண்டுகள் 497 என்று கொடுக்கப் பெற்றிருப்பதே சரியானதாக இருக்கும். அரசர்கள் மொத்தம் 18க்கு பதிலாகப் பதினேழு பேர்தான் ஆட்சி செய்திருப்பர்.

ஆதிகாலத்தில் வடக்கு ராஜ்யத்தில், ஆனைக்குந்தி (ஆனெகொந்தி) ஸம்ஸ்தானத்தில் உள்ள குன்ன நகரம் என்னும் ஊரில் இந்த வமிசத்தவர் ஒருவர் பாளையக்காரராக இருந்திருக்கிறார். இவரது வமிசத்தைச் சார்ந்த ராமநயினார், பூம நயினார் ஆகியோர் ஆட்சி செய்து வருகையில், விசைய நகர வேந்தன், கோடிகம் நாகம நாயக்கருக்குத் தென் தமிழகத்தில் மதுரை, திருச்சி சம்ஸ்தானத்துக்குப் பட்டம் கட்டி, அவரோடு ராமநயினார், பூமநயினார் ஆகியோரையும் அவரது உதவிக்காகச் செல்லும்படி சகம் 1230க்குச் சரியான கி.பி.1308ல் ஆணையிட்டார்.

அதன்படி கோடிகம் நாகம நாயக்கரோடு மதுரைக்கு வந்து, அவரது முடிசூட்டுவிழா முடிந்த பின்னர், திருச்சிவரை நாகம நாயக்கரை அழைத்து வந்து திருச்சியில் விட்டுவிட்டு, ராம நயினாரும் பூம நயினாரும் ராயர் சம்ஸ்தானத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கையில், கொள்ளிடத்துக்கு வடக்கு, வெள்ளாற்றுக்குத் (ஸ்வேத நதி) தெற்கு, ஜில்லிகா வனத்துக்கு மேற்கு, பில்வ வனத்துக்கு கிழக்கு இப்படியுள்ளிட்ட வனத்தில் வரும்போது அந்தக் காட்டையழித்து நகரம் உருவாக்க வேண்டும் என்று அவ்விருவர் மனத்திலும் எண்ணம் எழுந்தது.

அதற்குத் தகுந்தாற்போன்று அங்கு முயல் ஒன்று நாயை விரட்டிச் செல்வதைக் கண்ணுற்று, அந்த இடம் மிகவும் வலிமை பொருந்திய இடம் என்று தீர்மானித்துக் கொண்டனர். அந்தநாள் இரவில் அங்கேயே தங்கினர். உறங்குகையில் அவர்களது கனவில் அந்தக் கிராம தேவதை சுமங்கலியாய்த் தோன்றி, அந்த காட்டில் நகரம் உருவாக்கினால், தாமே அவர்களது குலதெய்வமாய் இருந்து காப்பாற்றுவேன் என்று கூறியது. அத்தோடு தம் பெயர் 'ஒப்பிலியம்மா' என்று சொல்லி, அவர்கள் வமிசத்தில் பிறக்கும் முதல் குழந்தைக்குத் தன் பெயரைச் சூட்டும்படியும் அறிவுறுத்தியது.

அதன்படி அவர்கள் அக்காட்டையழித்து கிழக்கு மேற்கில் அரைக்கால் மைல், வடக்குத் தெற்கில் அரைமைல் சுற்றளவில் இருந்த பூமி நடுவில் நகரத்தை உருவாக்கி, அந்நகரத்துக்கு அரியலூர் என்ற பெயரிட்டு, அந்நகரத்தில் பூம நயினாரை இருக்கும்படி செய்துவிட்டு, இராம நயினார் ராயர் சம்ஸ்தானம் சென்று நடந்த நிகழ்ச்சிகளைக் கூறினார். ராயர் மிகவும் மகிழ்ச்சியடைந்து ராமநயினாருக்கு 'ராம ஒப்பிலா மழவராயர்' என்ற விருதுப் பெயர் வழங்கி, மேலும் பல பரிசுப் பொருட்களையும் அளித்து (உபய சாமரங்கள் சந்திர காவிப் பாவாடைகள், பஞ்சவர்ண சுருட்டி, மயில் கொச்சுகள், பல்லக்கு, ஒரு கடகம் (ஒரு ஒட்டகம்?, பன்னிரண்டு யானைகள், இருநூறு குதிரைகள், பத்தாயிரம் மக்கள்), அந்த அரியலூர் நகரத்துக்குச் சேர்ந்த நாலு திக்குகளில் தெற்கில் கொள்ளிடம், வடக்கில் வெள்ளாறு, கிழக்கில் ஸ்ரீமுஷ்ணம், மேற்கில் கூட்டத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ராமநயினார் அவருடைய சுபேதாராக இருக்கும்படி ஆணை பிறப்பித்தார். அதன்படி சகம் 1232க்குச் சரியான கி.பி.1310ல் ஆனை கொந்தியில் சுபேதாராகப் பட்டமேற்று, ராயர் அளித்த விருதுப் பொருட்களுடனும், படை மற்றும் பொதுமக்களுடனும் அரியலூருக்குச் சென்று ராம நயினார் ஆட்சி செய்தது 45 ஆண்டுகள்.

இவ்வாறு ஆட்சி செய்து கொண்டிருக்கையில் ராயர் அவர்களைக் கஜபதி பிரதாப ருத்திரன் (இரண்டாம் பிரதாப ருத்திரனாக இருக்கும், கி.பி.1295-1326) எதிர்த்துப் போரிட வந்தான். உடன் ராயர் தம் மனசுபாதார்களை அழைத்தார். அரியலூர் சுபாதாரான ராம நயினாரும் அழைக்கப்பெற்றார். மற்ற சுபாதார்களால் வெற்றி கொள்ள முடியாத

*பிரதாபருத்திரனை ராமநயினார் வெற்றி கொண்டார். வெற்றியின் பரிசாக ராயர் 'ரணவிஜய ஒப்பிலா மழவராயர்' என்ற விருதுப்பெயர் அளித்து மேலும் சில விருதுப் பொருட்களுடன் அரியலூருக்கு அனுப்பி வைத்தார்.*

## பூம நயினார்

*பிறகு ராம நயினாருடைய தம்பி பூம ஒப்பிலா மழவராயர் அண்ணன் செய்த ஆட்சியின் படியே 10,000 மக்களை வைத்துக் கொண்டு 30 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.*

## மல்லரச மழவராயர்

*பூம ஒப்பிலா மழவராயருக்குப் பிறகு மல்லரச மழவராயர், அவரது குமாரர் பள்ளி கொண்ட மழவராயர், அவரது மகன் நாண்டாய மழவராயர், அவரது குமாரர் கட்டியப்ப மழவராயர், அவரது மகன் கிருஷ்ணப்ப மழவராயர், அவரது குமாரர் குமார ஒப்பிலா மழவராயர், அவரது மகன் பெரியலக்ஷ்மண மழவராயர் ஆகிய எழுவர் மொத்தம் 251 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் தங்கள் முன்னோர் வழி 'மனசுபேதார்' பொறுப்பிலேயே சிறப்புடன் ஆண்டு வந்தார்கள். அரியலூர் கட்டிருகலு (கட்டி நாணயங்கள்) 4,50,000க்கு, ரூபாய் 1க்கு 34 கட்டி நாணயங்கள் என்ற விகிதத்தில், ரூ.1,00,000 ரூபாய்களை (தொகை சரியில்லை) அனுபவித்துக் கொண்டு, சிவஸ்தலங்கள் 7, விஷ்ணு ஸ்தலங்கள் 3 ஆகியவற்றை ஏற்படுத்தி, உத்ஸவங்கள், திருவிழாக்கள் ஆகியவை நடத்திக் கொண்டு கி.பி.1526 முடிய மகிழ்ச்சியாக இருந்தனர்.*

## பெரிய ரெங்கப்ப மழவராயர்

*பெரிய லக்ஷ்மண மழவராயருக்கு இரு குமாரர்கள். ஒருவர் பெரிய ரங்கப்ப மழவராயர். மற்றவர் சின்னரங்கப்ப மழவராயர். பெரிய ரங்கப்ப மழவராயர் கி.பி.1556ல் பட்டம் ஏற்றார். இவர் 40 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.*

*இவர் காலத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. சகம் 1576க்குச் சரியான கி.பி.1654ல், பஹுதான்ய வருடத்தில் தில்லியின் அரசர் பாச்சா சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்கும்–போது, ஒரு பகிர் அப்பந்தயத்தில் யானையைப் பந்தயத்தில் வைத்துத் தோற்றுவிட்டார். யானையைக் கொண்டு வந்து*

தரும்படி பாச்சா வற்புறுத்தவே, பகீர் யானையைக் கொடுக்க முடியாமல் தன் ஒரு பக்கம் மீசையைக் கத்தரித்து அடகு வைத்து விட்டு, யானையைக் கொடுத்த பிறகு மீசையை மீட்டுக் கொள்கிறேன் என்று உறுதியளித்தார். பிறகு ஒரு யானையைப் பெறுவதற்காகத் தேசம் தேசமாகச் சென்றார். அவ்வாறு வருகையில் அரியலூர் வந்து பெரிய ரங்கப்ப மழவராயரிடம் யானை கேட்டு விண்ணப்பம் செய்தார். டில்லி பாச்சாவின் உறவினர்கள் கொடுக்க வேண்டாம் என்று தடுத்தபோதிலும் அதைப்பொருட்படுத்தாது பகீருக்குத் தனது பட்டத்து யானையைக் கொடுத்ததோடு தம் ஸ்தானாதிபதி நாகவரய் யாவையும் பகீருக்கு உதவிக்கு அனுப்பிவைத்தார். பகீர் டில்லி சென்று யானையைப் பாச்சாவிடம் கொடுத்து மீசையை மீட்டுக் கொண்டார்.

யானையைக் கொடுத்துதவியவர் அரியலூர் மழவராயர் என்றறிந்து, ஸ்தானாதிபதிக்குத் தகுந்த வெகுமானங்கள் தந்ததோடு, அரியலூர் மழவராயர் தமக்குச் சமமானவர் என்று அறிவித்து அவருக்கு 'ரங்கப்ப மழவராய பாச்சா' என்ற விருது பெயரை வழங்கி, சிம்மலாடம், கொடி, மஹதாபி விருது ஆகியவற்றையும் அரியலூருக்கு அனுப்பி வைத்தார்.

## ஸாதுல்லாகானுடன் போரிட்டு வெற்றி பெற்று 'கலியுக அர்ஜுனன், அசகாய சூர விக்கிரமாதித்யன்' பட்டம் பெறல்.

சகம் 1581க்குச் சரியான கி.பி.1659, சித்ரபானு ஆண்டு[5] திருச்சிராப்பள்ளி சம்ஸ்தானத் ததிபதியான கோடிகம் அவர்கள் கோட்டையை ஸாதுல்லா கான் முற்றுகையிட்டார். அப்போது கோடிகம் ஸம்ஸ்தானத்தார் அரியலூர் பாளையக்காரருக்குச் சொல்லி அனுப்பினார். உடன் ரங்கப்ப ஒப்பிலா மழவராயர் பாச்சா நான்காயிரம் காலாட் படை, இருநூறு குதிரைகள் ஆகியவற்றுடன் புறப்பட்டுச் சென்று யுத்தத்தில் தான் ஒருவராய்ப் பிறரறியாமல் நவாப் ஸாதுல்லாகான் படையில் நுழைந்து அவர்களில் பலரை வெட்டி நறுக்கிக் கொண்டு வடக்கில் யோசனை தூரம் படையைத் துரத்தியடித்தார். அதனையறிந்த கோடிகம் வீரப்பநாயகர் மிக்க மகிழ்ச்சியுற்று ரெங்கப்ப மழவராயருக்குக் 'கலியுக அர்ஜுனன், அஸகாய சூர விக்கிரமாதித்யன்' என்னும் பட்டப் பெயர்களைச் சூட்டி, பட்டத்துக் குதிரைகளையும் சில விருதுப் பொருட்களையும் கொடுத்து, நவராத்ரி உத்சவத்தில் ஐந்து நாட்களுக்குக்

கொலுமண்டபத்தில் அமரச் செய்து சகலவிதமான வெகுமதிகளையும் செய்து அனுப்பினார்.

ரங்கப்ப ஒப்பிலா மழவராயருக்கு பட்டத்தரசிகள் 30, பிள்ளைகள் 60.

## மேலும் ஐந்து அரசர்கள் ஆட்சி

சகம் 1596க்குச் சரியான கி.பி.1674ல் ஒப்பிலா மழவராயர் (இவர் சின்னரங்கப்ப ஒப்பிலா மழவராயராக இருக்கலாம்) 20 ஆண்டுகளும், அவரையடுத்து விஜய ஒப்பிலா மழவராயர் 20 ஆண்டுகளும், அவரையடுத்து முத்து வெங்கடப்ப மழவராயர் 10 ஆண்டுகளும், அவருக்குப்பிறகு குமார ரங்கப்ப மழவராயர் 13 ஆண்டுகளும், அவரையடுத்து லக்ஷ்மண மழவராயர் ஒரு ஆண்டும் ஆட்சி புரிந்தனர்.[6]

மேற்கூறப்பெற்ற குமார ரங்கப்ப மழவராயர் திருச்சிராப் பள்ளி நகரில் உள்ள தேவஸ்தானங்களில் அநேக மண்டபங் களைக் கட்டிவைத்தும், உத்ஸவங்கள் நடத்தி வைத்தும் மகிழ்ந்திருக்கிறார். மேலும் அரியலூரில் உள்ள கோதண்ட ராம சுவாமி கோயில் பூஜையையும் முட்டாமல் நடத்தி வந்திருக்கிறார்.

## விஜய ஒப்பிலா மழவராயர்

சகம் 1661க்குச் சரியான கி.பி.1739ல் மேற்கூறப்பட்ட லக்ஷ்மண மழவராயருக்குப் பிள்ளைகள் இல்லாததால், அவரது பங்காளிகளில் முன்பு பட்டம் சூட்டியிருந்த முத்து வெங்கட மழவராயரின் குமாரன் விஜய ஒப்பிலா மழவராயர் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பெற்றார்.

முன்பு லக்ஷ்மண மழவராயருக்கு உடையார் பாளையம் உடையார் தம் விருப்பத்தால் பட்டம் கட்டி வைத்தார். அவரை விஜய ஒப்பிலா மழவராயர் அரியணையிலிருந்து நீக்கிவிட்டு தாம் பட்டம் கட்டிக் கொண்டதால் உடையார் பாளையம் உடையார் போருக்கு வரவே அவரைத் தோற்கடித்துத் தாமே தொடர்ந்து ஆட்சி செய்தார்.[7]

அப்போது துறையூர் பாளையத்தைச் சேர்ந்த பாபிரெட்டி குமாரர் முத்து பஸவாரெட்டி அரியலூர் பாளையத்தில் அடைக்கலம் பெற்றிருந்ததால், அவருக்குதவுவதற்காகத்

துறையூர் நல்லப்ப ரெட்டியுடன் போரிட்டு வெற்றி பெற்று முத்து பஸவா ரெட்டிக்குப் பட்டம் கட்டி வைத்தார்.

உடையார் பாளையம், துறையூர் ஆகிய பாளையங்களுடன் போர் செய்து வெற்றி பெற்றதால் 'ரணஜய ஒப்பிலா மழவராயர்' என்ற விருதுப் பெயர் இவருக்கு வழங்கப் பெற்றது.

## அன்வர்தீகானுக்குக் கப்பம் அளித்தல்.

சகம் 1668க்குச் சரியான கி.பி.1746ல் அன்வர்தீகான் ஆட்சியில் இம்மன்னர் பேரிஜ் ரூ.2,10,000 உள்ள தேசத்தை அனுபவித்துக் கொண்டு கப்பமாக ரூ.20,000 கொடுத்துக் கொண்டிருந்தார். இம்மாதிரியாக 24 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். சகம் 1684க்குச் சரியான கி.பி.1762 சித்ரபானு ஆண்டில் இவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

## குமாரர் ஒப்பிலா மழவராயர்

சகம் 1685க்குச் சரியான 1763ல் மூன்று வயது நிரம்பிய அவரது குமாரர் ஒப்பிலா மழவராயர் பட்டம் சூட்டப் பெற்றார். இவர் ஆட்சிக்காலத்தில் வாலாஜாவை ஆட்சி புரிந்த நவாப் மஹமதலிகானுக்கு 20,000 ரூபாய் கப்பம் கொடுத்து வந்தார்.

சில காலததுக்குப் பிறகு அரியலூர் பாளையக்காரர்களால் கப்பம் செலுத்தவும், நவாபுக்குப் படையுதவி செய்யவும் முடியாமல் போயிற்று. மஹமதலிகான் மதுரை மீது படையெடுத்துச் சென்றபோது இப்பாளையக்காரர்கள் உதவிக்கு வராமலிருந்ததால், இவர்கள் மீது கோபமுற்று, மதுரையிலிருந்து திரும்புகையில் அரியலூரில் வந்து தங்கினார். அப்போது அரியலூர் மழவராயர் கோட்டையை விட்டுத் தனிமையில் கிழக்கே சோழ தேசத்துக்குத் தாரண ஆண்டு, மார்கழித் திங்கள் 24ஆம் நாள் புறப்பட்டுச் சென்றார். நவாபானவர் அரியலூர் அரண்மனையிலிருந்த பணம், வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டதோடு அங்கிருந்த 12 யானைகள், 20 குதிரைகள் ஆகியவற்றையும் கைக்கொண்டு தம் பொறுப்பில் வைத்துக் கொண்டார்.

மழவராயர் தம்மோடு சோழ நாட்டுக்குக் கொண்டு சென்ற 15,000 வராகன்களையும், பாத்திரங்கள், யானைகள்

குதிரைகள் ஆகியவற்றையும் சகம் 1668ல் (கி.பி.1746) தஞ்சாவூர் போஸ்லே வமிச துளஜா மஹாராஜா அபகரித்துக் கொண்டார்.[8] மேலும் மழவராயர் குட்டி வெங்கடராம செட்டியிடத்தில் கொடுத்து வைத்திருந்த தனத்தையும் தஞ்சாவூரரசர் கைப்பற்றிக் கொண்டார்.

சிலநாள் தஞ்சாவூரில் சாமிநாத பிள்ளையின் ஆதரவில் தங்கியிருந்துவிட்டு, சகம் 1698 (கி.பி.1776), மன்மத ஆண் முதல் மைசூர் தேசத்தில் உள்ள அனந்தகிரி தாலுகா, வீரநல்லூரில் விவசாயப் பணியில் ஈடுபட்டு சார்வரி ஆண்டு முடிய வாழ்ந்து வந்தார்.

சகம் 1703 (கி.பி. 1781), சார்வரி வருடம் ஹைதர் அலி அரியலூர் பிராந்தியத்தைத் தன் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தபோது, அரியலூர் மழவராயர் விவகாரங்கள் யாவற்றையும் கேள்வியுற்று மைசூர் தேசத்தில் இருந்த மழவராயரை வரச் சொல்லி அவர் தேசத்தை அவருக்கேயளித்து, மூன்று ஆண்டு களுக்கு அறுபது ஆயிரம் பரங்கி வராகன்கள் (ஆங்கிலேயர் வெளியிட்ட வராகன் காசு) கப்பம் செலுத்தும்படி நிச்சயித்து அவற்றை வசூல் செய்ய மக்கரதாஸ் என்னும் சௌகாரை நியமித்தார். இதன் பிரகாரம் மழவராயர் ஆட்சி சுபகிருது ஆண்டு பங்குனித் திங்கள் முடிய (கி.பி.1782 முடிய) நடைபெற்று வந்தது.

## ஆங்கிலேயர் பிடியில்

பிறகு சகம் 1705 (கி.பி.1783), சோபகிருது ஆண்டு கும்பினியார் ஜப்தியில் லார்டு மெகார்ட்னி (Lord Macartney), இர்வின் பிரபுக்கள் இருவர் (Lord Irwin and Lord Irwing) ஆகியோர் மழவராயரிடம் பரிதாபப்பட்டு அவர் வசமே இரண்டு ஆண்டுகளுக்கு (கி.பி.1783 மற்றும் 1784) நிர்வாகத்தை ஒப்படைத்து 20,000 வராகன் கப்பம் பெற்றார்கள்.

## நவாப் மஹமதலி பிடியில்

கி.பி.1785, விசுவாவஸு ஆண்டில் நவாபு மஹமதலி இப்பாளையத்தைச் சப்தி செய்து கொண்டார். இவரிடம் 20,000 பரங்கி வராகன்கள் கப்பம் செலுத்தினார் மழவராயர்.

## நவாப் மதார்மல்கு பிடியில்

பின்பு கி.பி.1786ல் நவாப் மதார்மல்கு அரசாட்சிக்கு வந்தபோது, அரியலூர் பாளையத்தை அவர் கைப்பற்றிக் கொண்டதால், கி.பி.1789 முதல் ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாய் கப்பம் மழவராயர் செலுத்தினார்.

## மீண்டும் ஆங்கிலேயர் பிடியில்

கி.பி.1790-91 களில் ஆங்கிலேயர் பிடியில் சிக்கிய அரியலூர் பாளையப்பட்டு, பரங்கி வராகன்கள் 35,000 கப்பம் செலுத்த வேண்டுமெனத் தீர்மானித்த ஒப்பந்தப்படி குமார ஒப்பிலா மழவராயருக்கு மீண்டும் விட்டுக் கொடுக்கப்பெற்றது.

## மீண்டும் நவாபுவின் பிடியில்

கி.பி.1796லிருந்து மீண்டும் நவாபு சாயபு ஜாதாவின் ஆதிக்கத்தில் பாளையப்பட்டு சேரவே, நவாபுக்கு முன்பு செலுத்தியவாறே கப்பம் மழவராயர் செலுத்த வேண்டி நேரிட்டது.

## மீண்டும் ஆங்கிலேயர் பிடியில்

கி.பி.1801ல் ஆங்கிலேயரின் கீழ் அரியலூர் பாளையப்பட்டு வரவே, மேஸ்தர் ஜான் வாலீஸ், குமார ஒப்பிலா மழவராயரின் புதல்வர் விஜய ஒப்பிலா மழவராயரை அழைத்து முன்பு செலுத்தி வந்த கப்பத்தில் ஒரு பங்கை ரொக்கமாகச் செலுத்தினால் போதுமானது என்று இரக்கம் காட்டினார்.

## அரியலூர்க் கோட்டை

அரியலூர் பாளையக்காரர் கோட்டை அரியலூரிலிருந்து சிறிது தொலைவில் இருந்தது. அதை ஆங்கிலேயர்கள் இடித்து விட்டார்கள். கோட்டையில் பெண்களின் அந்தப்புறப் பகுதி சுவற்றைச் சுற்றிலும் கூண்டு கூண்டான அமைப்பு பெரும் வியப்பை ஏற்படுத்தும் வண்ணம் நூதனமான முறையில் அமைக்கப் பெற்றிருந்தது.

ஊரின் நடுவில் உள்ள குளத்துக்கும் கோட்டையில் உள்ள சின்ன குளத்துக்கும் நீர் செல்லும் வழி ஒன்று இருந்தது. கோட்டையில் இருந்த சின்னகுளத்தின் கரையில் பந்தல் போட்டுக் கொண்டு ஜலக்கிரிடை (நீர் விளையாட்டு) பெண்கள் விளையாடுவர். அப் பந்தல் மிகவும் விசித்திரமாக அமைக்கப் பெற்றிருந்தது.

**பாளையத்தின் அலுவலர்கள்.**

**தளவாய் மற்றும் அமைச்சர்கள்** *குட்டிப்பிள்ளை, தாஹனப்பிள்ளை, மசமச ரங்காப்பிள்ளை, தீத்தியப்பிள்ளை, சுப்பராயப் பிள்ளை, தம்பாபிள்ளை, பெரிய சக்ர மய்யங்கார், கிருஷ்ணய்யங்கார், மாமா வய்யங்கார், தம்பா பிள்ளை, தங்கப்பிள்ளை, தீத்தியப்பிள்ளை, குமாரசாமிப் பிள்ளை, சுப்பராயப்பிள்ளை, வேலாயுதப்பிள்ளை, சாமிநாதப் பிள்ளை, தம்பாபிள்ளை.*

**ஸாமயாதிகம் செய்பவர்** *மீனாக்ஷியய்யா என்ற பிராமணன். இவர் அரியலூரில் கோயில்கள், குளங்கள், மண்டபங்கள் ஆகியவைகளை ஏராளமாக ஏற்படுத்தினார். சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலம் ஆகியவற்றை மழவராயர்கள் புதுப்பித்து குடமுழுக்கும், தேர் திருவிழாவும் செய்து வைத்தனர்.*

**பிரதானிகள்** *(மந்திரிகள்) 1. ஆனைகுட்டியாபிள்ளை 2. தாஹனப் பிள்ளை (பல்லவாரு, பல்லையைச் சேர்ந்தவர்கள்)*

*3. மசமசரங்காயி (நத்தமான்) 4. பெரிய சக்ரமய்யங்கார் 5. கிருஷ்ணமய்யங்கார் 6. மாமாவைய்யங்கார்* **(வைஷ்ணவ பிராமணர்கள்)**

*7. தீத்தியப்பிள்ளை 8. தம்பாபிள்ளை 9. தீத்தியபிள்ளை* **(தமிழ் வெலமக் குடும்பத்தினர்)**

*10. ரங்கப்பிள்ளை–* **(நத்தமான்)**

*11. நல்லப்ப நயினார் 12. நல்லப்பெருமாள் நயினார்* **(பல்லவாரு, பல்லையைச் சேர்ந்தவர்கள்.)**

*13. ராமசந்திர அய்யங்கார் –* **(வைஷ்ணவ பிராமணர்)**

*14. சுப்பராயபிள்ளை –* **(தமிழ் வெலம குடும்பத்தவர்)**

*15. குமாரபிள்ளை 16. தீத்தியபிள்ளை 17. வேலாயுதம்பிள்ளை* **(நத்தமான்)**

*18. தம்பாபிள்ளை 19. சுப்பராயபிள்ளை 20. சாமிநாதப் பிள்ளை* **(தமிழ் வெலம குடும்பத்தவர்)**

*கி.பி. 1805ஆம் ஆண்டில் பாளையக்காரர் பிராமணர் தெருவில் (அக்கிரஹாரத்தில்) ஒரு வீட்டில் வசித்து வந்தார். இந்தப்பாளையக்காரரை 'ஹப்வல் பாளையக்காரர்' என்று புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர் பெயர் விஜய ஒப்பிலா மழவராயர். 30 வயதானவர். அரசக்களையுடன் தோற்ற மளித்தார்.*

மேற்கூறப்பெற்றவை யனைத்தும் கி.பி.1805ல் எழுதப்பெற்ற கைபியதில் கூறப்பெற்றிருப்பவையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. உ.வெ. சுவாமிநாதய்யர், நல்லுரைக் கோவை, முதற் பாகம், பக்கம் 38.
2. ஆர். ராமசேஷன், அரியலூர் மழவராயர்கள், Poligars and Pattagarers of South Indian History, (1982), pp. 65-71
3. மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 66
4. புறம், பாடல் - 88
5. இவ்வாண்டு விகாரி ஆண்டாக இருக்கவேண்டும் என்று கையெழுத்துப் பிரதியிலிருந்து பெயர்த்தெழுதிய பண்டிட் தெரிவித்திருக்கிறார்.
6. இக்கைபியதில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள அரசர் பட்டியலில் பெரிய ரங்கப்ப ஒப்பிலா மழவராயரை அடுத்து நான்கு மன்னர்கள் அடுத்தடுத்து மொத்தம் 64 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும்; உள்ளே காணப்பெறும் விரிவான பகுதியில் ஐந்து மன்னர்கள் அடுத்தடுத்து 64 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் எழுதப் பெற்றிருக்கின்றன. தொடக்கப் பட்டியலில், சின்ன ரெங்கப்ப மழவராயர் 20 ஆண்டுகள் ஆட்சி செய்தது பெயர் விடுபட்டிருக்கிறது. அதன் காரணமாகக் கையெழுத்துப் பிரதியைப் பெயர்த் தெழுதிய பண்டிதர் முத்து வெங்கடப்ப மழவராயர் ஆட்சி செய்தது 10 ஆண்டுகள் என்று பட்டியலில் இருந்ததை 20 ஆண்டுகள் எனத் திருத்தியிருக்கிறார். மேலும் நான்கு மன்னர்களுக்கான ஆட்சி செய்த ஆண்டுகள் தான் 64 ஆண்டுகள் என்று தவறாகக் கொண்டுள்ளார்.
7. இக்கையெழுத்துப் பிரதியைப் பெயர்த்தெழுதிய பண்டிதர் தம் எண்ணத்திற்கேற்ப சிலவற்றைச் சேர்த்திருக்கிறார். அவை தேவையில்லாததாகும்.
8. இங்கு தரப்பட்டுள்ள ஆண்டில் பிழை இருக்கும் போன்று தெரிகிறது. இது சகம் 1686 ஆக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் கி.பி.1764 ஆகும்.

இயல் – ஒன்பது

# வன்னியப் பாளையக்காரர்

## (உடையார்பாளையம்)

உடையார்பாளையம் ஜமீன் வரலாறு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சமஸ்தானாதிபதி ஸ்ரீ கச்சி சின்ன நல்லப்ப காலாக்க தோழ உடையார் காலத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றிருக்கிறது. அதில் கூறியுள்ளவாறு இங்கு தரப்படுகிறது.

### 1. பள்ளி கொண்ட ரங்கப்ப உடையார்

உடையார்பாளையம் ஜமீனின் முன்னோர் காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரத்தில் கச்சி என்னும் ராஜவீதியில் வாழ்ந்துகொண்டு, காஞ்சிபுரத்தையும் மற்ற பகுதிகளையும் ஆண்டு வந்தனர். பள்ளிகொண்ட ரங்கப்ப உடையார் காஞ்சி புரத்தின் பாளையக்காரராக இருக்கையில், விஜயநகர வேந்தராக வீர நரசிம்மராயர்[1] (கி.பி.1505-09) இருந்தார். சாளுவ குலத்தவரான இவர் தன் பரந்த ஆட்சிப்பகுதியில் அடங்கிய தென்பகுதியைச் செஞ்சி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மைசூர் மற்றும் மதுரை ஆகிய குறுநிலப்பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் தம் உறவினர் ஒருவரை ஆட்சிபுரிபவராக நியமனம் செய்தார். அதன் தொடர்ச்சியாகக் காஞ்சிபுரம் பாளையக்காரர் பள்ளிகொண்ட ரங்கப்ப உடையாரை, செஞ்சிக்கு அதிபதியாக நியமனம் செய்யப்பெற்ற உதயகிரி ராமபத்ர நாயக்கருக்கு உதவியாக இருக்கும்படி ஆணையிட்டதோடு, குன்னத்தூர் துர்கத்தையும், அதன் அருகிலிருந்த பகுதிகளையும் ஜாகீராக வழங்கினார்.

ரங்கப்ப உடையார் ராமபத்ர நாயக்கருக்கு மிகவும் விசுவாசமாகவும், நம்பிக்கையுடனும் இருந்த காரணத்தால் நாயக்கர், உடையாருக்கு யானைகளையும், குதிரைகளையும், படையாட்களையும் சில அரசுச் சின்னங்களையும் வழங்கி தோடு, 'செஞ்சி புராதி ராஜ தத்த மஞ்சிர உபயசாமர' (செஞ்சி

அரசரால், தங்க மணிகள் கோர்க்கப்பெற்ற இரு சாமரங்களை வழங்கப் பெற்றவர்) என்ற விருதையும், 'காஞ்சி புராதிபாலா' (காஞ்சியை ஆள்பவர்) என்ற விருதையும், அளித்து மகிழ்ந்தார்.

விஜய நகரப் பேரரசை பிடார் அரசின் மன்னனான பரித்ஷா தாக்கியபேது, ராயர் தமது ஆளுகைக்குட்பட்ட பாளையக்காரர்களையும் மன்சுபாதாரர்களையும் தமக்குதவிக்கு அழைத்தார். ராமபத்ர நாயக்கர் படையின் தலைமைப் பொறுப்பை ஏற்று போரிடச் சென்ற ரங்கப்ப உடையார், பரித்ஷாவைக் கொன்றதோடு, அவரது அரசுச் சின்னங்களான (Royal insignia) மத்தளங்கள், பஜாரி ஜண்டா, கஞ்சுகொம்பு, உள்ளே பச்சை வண்ணமும், வெளியே சிவப்பு வண்ணமும் உடைய அரசுக்குடை மற்றும் நவபத் ஆகியவற்றைக் கைப்பற்றினார். வெற்றிக் களிப்போடு வந்த ரங்கப்ப உடையாரை ராமபத்திர நாயக்கர் ராயரிடம் அழைத்துச் சென்று நடந்தவற்றை விளக்கிக் கூறினார்.

ராயர் மிகவும் மகிழ்ச்சியுற்று ரங்கப்ப உடையார் போரில் வென்று கைப்பற்றி வந்த அரசுச் சின்னங்களை அவரிடமே திருப்பித் தந்துவிட்டு மேலும் சில விருதுப் பெயர்களை வழங்கிச் சிறப்பித்தார். "பரித் ஸப்தாங்க ஹரனா" (பரித்தின் ஏழு அங்கங்களையும் துண்டாக்கியர்) என்ற விருதுப்பெயரும், "ரணவிஜய வசிகிரித கம்ஸிய தூதும்பிக ஹரனா" (தம் வெற்றியை அறிவிக்கும் உலோகத்தால் செய்யப்பெற்ற ஊதுகுழலையுடையவரும், அவ்வூதுகுழலைப் போர்க்களத்தில் கைப்பற்றியவரும்) என்ற விருதுப் பெயரும், "கனக தண்ட மந்திதருன சதிரலாஞ்சனா" (இவரது அரசு சின்னமான தங்கக் கைப்பிடியையுடைய சிவப்புக் குடையுடையவர்) என்ற விருதும், "நவ விதுங்க பேரிரவ முகரித திகந்தர" (எதிரிகளின் பேரிகை முழங்கும் சப்தத்தை மிஞ்சும் வகையில் தம் பேரிகைகளின் ஒலியை எழுப்புபவர்) என்ற விருதும், "காஞ்சி புராதிபால" (காஞ்சி புரத்தை ஆள்பவர்) என்ற விருதும்; "காலாக்க தோழர்" (காலாட் படையை மிகுதியாக உடையவர்) என்ற விருதும் அவைகளாகும்.

விருதுப்பெயர்கள் அளித்துச் சிறப்பித்ததோடு 12 யானைகளையும் 200 குதிரைகளையும், 5000 காலாட் படையையும் அவருக்கு வழங்கி, ஜில்லிகாவனம் என்னும் ஒரு பகுதியை அவரும் அவரது சந்ததியினரும் ஆண்டு வரும்படியும்

ஆணையிட்டார். ஜில்லிகாவனம் பகுதி வேதாரணியத்துக்குக் கிழக்கிலும், வீராணம் ஏரிக்கு மேற்கிலும், வேலூருக்குத் தெற்கிலும், கொள்ளிடம் ஆற்றின் தொடக்கத்திலும் உள்ளிட்ட பகுதியாகும். இப்பகுதி கிழக்கு மேற்கில் 3½ காவதமும் (சுமார் 35மைல்) வடக்குத் தெற்கில் 3½ காவதமும் (சுமார் 35மைல்) அடங்கிய சதுரமாகும்.

இப்புதுப் பகுதியை ஆட்சிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டதால் காஞ்சிபுரத்தை ஆளும் உரிமையை வரதராஜ உடையாரிடம் ஒப்படைத்து விட்டு புவனகிரிக்கு அருகிலுள்ள ஒரு இடத்தில் ரங்கப்ப உடையார் வாழ்ந்துவரலானார். அந்த இடம் தற்பொழுது 'அரசக்குடி' என்று வழங்கப்பெறுகிறது. தமக்குப் புதிதாக அளிக்கப் பெற்ற பகுதியில் இருந்த திட்டகுடி, புவனகிரி, விருத்தாசலம், மன்னார்குடி, சிதம்பரம் ஆகிய இடங்களை ஆண்டுவந்த சிறு பாளையக்காரர்களையும், திருடர்களையும் அடக்கி வெற்றி பெற்று அச் செய்தியைச் செஞ்சி ராமபத்திர நாயக்கருக்குத் தெரிவித்தார். நாயக்கர் மிகவும் மகிழ்ச்சியடைந்து அச்சிறுபாளையங்கள் அனைத்தி லிருந்து பெறப்படும் அனைத்து அரசுகாவல் வருமானத்தை பள்ளிகொண்ட ரங்கப்ப காலாட்கள் தோழ உடையாரே பெற்றுக் கொள்ளும்படி கட்டளையிட்டார். அனைத்து அரசுகாவல் வருமானத்தையும் பெற்றுக்கொண்ட ரங்கப்ப உடையார் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்.

## 2. பெரிய நல்லப்ப காலாட்கள் தோழ உடையார்

இவரையடுத்து இவரது மூத்த மகன் கச்சி பெரிய நல்லப்ப காலாட்கள் தோழ உடையார், தம் தந்தையார் வழியைப் பின்பற்றி ஆட்சி புரிந்து வந்தார்.

ஒரு இரவில் மேற்கூறப்பெற்ற சிறுபாளையக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இவரை எதிர்த்தார்கள். அவர்களது தாக்குதலைச் சற்றும் எதிர்பாராத உடையார், அவர்களோடு வீரத்தோடு பொருதார். இறுதியில் சற்றும் எதிர்பாராத நிலையில் உடையார் புவனகிரித் தெரு ஒன்றில் ஒரு பாளையக்காரரால் சாகடிக்கப்பட்டார்.

## 3. சின்ன நல்லப்ப காலாட்கள் தோழ உடையார்

ஓரளவுக்குச் சிறு வயதிலேயே ஆட்சிப் பொறுப்பை, இவர் ஏற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. தமையனின்

நினைவாகப் புவனகிரியில், தம் அண்ணன் எந்த இடத்தில் இறந்தாரோ அங்கேயே ஒரு கோயிலை எழுப்பி 'உடையார் கோயில்' என்று பெயரிட்டழைத்தார். இவர் ஒரு அக்ரஹாரத் தையும் குளத்தையும் ஏற்படுத்தினார். குளத்துக்கு 'ஆயிகுளம்' என்று பெயர் சூட்டினார். அக்ரஹாரத்துக்குக் 'காலாட்கள் தோழர்புரம்' என்று பெயரிட்டார்.

தமையனை இழந்த ஆறாத் துயரத்தால் சமயப் பயணம் மேற்கொண்டார். செல்லும் வழியில் சிதம்பரம் வந்தபோது 'குருநமசிவாயர்' அருளால் தில்லைத் திருக்கோயிலில் சில திருப்பணிகள் செய்தார். சிறிது நாட்கள் சிதம்பரத்தில் இருந்துவிட்டு, சோழத்தரம் வழியாக நேரே ஜில்லிகாவனம் சென்றார். அங்கு சில நிமித்தங்களைக் கண்ணுற்றார். மேலும் அங்கே ஒரு சிவன் கோயிலையும் குளத்தையும் கண்டறிந்தார். அக்கோயில் இருந்த இடத்திலேயே பகல் பொழுதைக் கழித்துவிட்டு இரவிலும் அங்கேயே உறங்கினார். உறங்கும்போது கனவில் சிதம்பரேஸ்வரர் தோன்றி, அக்காட்டிலேயே ஒரு நகரத்தை உருவாக்கி வாழ்ந்து வந்தால், தாம் அவருக்குக் குலதெய்வமாக இருந்து அனைத்து அருளையும் வழங்குவதாக வாழ்த்தி மறைந்தார்.

மறுநாள் பகல்பொழுதையும் அங்கேயே கழிக்கையில் பிராமணர்களை அழைத்து ஆலோசனை கேட்டபின்பு, அங்கேயே ஒரு நகரத்தை உருவாக்கி அரண்மனையையும் எழுப்பத் திட்டமிட்டார். கி.பி. 15ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் அவற்றுக்கான தொடக்கப் பணிகளைச் செய்யவும் ஆணை வழங்கினார். மயலூருக்கு வடக்கிலும், கழுமங்கலம் மற்றும் பரணத்துக்குக் கிழக்கிலும், எசக்குழி மற்றும் கச்சி பெருமாளுக்குத் தெற்கிலும், சூரியமணலுக்கு மேற்கிலுமாக ஒரு மைல் சுற்றளவில் நகரத்தை உருவாக்கினார். இந்நகரம் 'உடையார் பாளையம்' என்றும், இதற்குச் சொந்தமான பகுதிகள் அனைத்தும் 'உடையார் பாளையம் சமஸ்தானம்' என்றும் வழங்கப்படலாயிற்று.

அங்கிருந்த காட்டைச் சுமார் 20 மைல் சுற்றளவுக்கு, அதாவது திட்டக்குடி வரை மேற்கிலும், ஸ்ரீமுஷ்ணம் வரை வடக்கிலுமாக அழித்து 150 கிராமங்களை ஏற்படுத்தினார். மேலும் அவைகளைச் சடூர், அங்கனூர், சென்னிவனம், செந்துறை மற்றும் கௌதூர் என ஐந்து மாகாணங்களாகப் பிரித்து 30,000 கெட்டிப்பொன் அளவுக்கு வருவாயை ஈட்டினார்.

சிதம்பரம் சபாநாயகருக்குத் தங்கம் மற்றும் வெள்ளியால் இரதங்கள் செய்தளித்ததார். மேலும் அக்கோயிலில் 'சர்வ கட்டளை' ஒன்றை நிறுவி, அதை நடத்தி வருவதற்காக இளங்க மூர் என்னும் கிராமத்தை வழங்கினார். இவ்வாறு அறப்பணிகள் செய்துகொண்டு, 'உடையார் பாளையம் சமஸ்தானத்தார்' என்ற விருதுப் பெயரோடு மகிழ்ச்சியாகத் தம் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தார்.

சிதம்பரத்தில் உள்ள குருநமசிவாயர் மடத்தின் உட்பகுதியில் உள்ள குளக்கரையில் சின்ன நல்லப்ப உடையாரின் திருவுருவம் கல்லில் வடிக்கப்பட்டு நடப் பெற்றுள்ளது என்று தொடக்கத்தில் குறிக்கப் பெற்ற நூலில் காணப்பெறுகிறது.[2] இவரால் இவரது தமையனாரின் நினைவாக எடுப்பிக்கப்பெற்ற கோயில் 'உடையாரப்பன் கோயில்' என்று வழங்கப் பெறுவதாகவும் மேலும் அந்நூலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 4. முனியப்ப உடையார்

சின்ன நல்லப்ப காலாட்கள் தோழர் உடையார் மகன் முனியப்ப உடையார் அடுத்து பட்டமேற்றார். இவர் பல கோயில்களின் திருப்பணிகளையும் அறப்பணிகளையும் மேற்கொண்டார். மன்னார் குடியிலுள்ள முன்னை நாத சுவாமி கோயிலைப் புதுப்பித்தார். ஸ்ரீ முஷ்ணம் கோயிலையும் மற்றும் சில கோயில்களையும் பராமரித்தார். உடையார்பாளையம் நகரத்தை மேலும் பல வகையில் மேம்படுத்தினார்.

## 5. பொய்யப்ப உடையார்

முனியப்ப உடையாரது மகன் பொய்யப்ப உடையார் அடுத்து ஆட்சி பொறுப்பேற்றார்.

## 6. இராமப்ப உடையார்

அடுத்து பொய்யப்ப உடையார் மகன் இராமப்ப உடையார் பட்டத்துக்கு வந்தார்.

மேற்காணும் மூன்று பாளையக்காரர்களும் கோயில் களுக்குச் செய்த அறப்பணிகள் சம்பந்தமான கல்வெட்டுக்கள் சில காணப்படுகின்றன.

### 7. வெங்கடப்ப உடையார்

இராமப்ப உடையாரின் மகன் வெங்கடப்ப உடையார் அடுத்து பட்டமேற்றார். இவர் தம் காலத்தில் உடையார் பாளையத்தைச் சுற்றியிருந்த காட்டுப் பகுதிகளில் மேலும் சில பகுதிகளை அழித்து அங்கு மக்களைக் குடியேற்றினார். அதன்மூலம் பாளையத்துக்கு 50,000 கெட்டிப்பொன் வருவாய் வந்தது. தம் அரண்மனைப் பகுதியையும் விரிவுபடுத்தினார். மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பை உருவாக்கினார். தம் அரசில் நாணயம் அச்சடித்தலைத் தொடங்கி, தங்கம் மற்றும் செம்பு நாணயங்களை அச்சடிக்கச் செய்தார். தங்கக் காசுகள் 'உடையார் பாளையம் புதுப்பணம்' என்று வழங்கப்பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில்கூட மழைக்காலத்தில் அக்காசுகள் மக்களால் கண்டெடுக்கப் பெற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. கி.பி. 1801க்குப் பிறகு நாணயம் அச்சடிக்கும்பணி நிறுத்தப் பெற்று கூடமும் மூடப்பெற்று விட்டதாக எழுதப்பெற்றிருக்கிறது. கி.பி. 1808ல் திருச்சிராப்பள்ளி கலெக்டராகப் பணியாற்றிய மிஸ்டர் வாலஸ் என்பவர் அரசு வருவாய்க் கழகத்துக்கு (Board of Revenue) எழுதிய கடிதத்தில் 'உடையார் பாளையம் பணம்" பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

### அடுத்து ஆட்சிக்கு வந்த உடையார்கள்

வெங்கடப்பா உடையாருக்குப் பிறகு அடுத்தடுத்து

### 8. முத்துக் கிருஷ்ணப்ப உடையார்

### 9. சந்த்ரசேகர உடையார்

### 10. நல்ல நைநாக உடையார்

என்று மூன்று உடையார்கள் ஆட்சி புரிந்தனர்.

நல்ல நைநாக உடையார் காலத்தில் குருவாலப்பர் கோயில் குளத்தின் படிக்கட்டுகளை உடையாரின் பணியாளரொருவர் கட்டுவித்த செய்தி அங்குள்ள கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது.

கல்லமேடு என்னும் ஊரைச் சார்ந்த குமரப்பன் கோயிலில் வெட்டப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டு சக ஆண்டு 1532 (கி.பி.1610)க்குச் சமமான சாதாரண ஆண்டைச் சார்ந்ததாகும். இக்கல்வெட்டில் கொண்டம நாயக்கருக்காக

நல்ல நைநாக உடையார் கல்லமேடு என்னும் ஊரைச் சர்வமானியமாக சென்னியந் தவ தம்பிரானுக்குக் கொடுத்தது குறிக்கப்பட்டிருக்கிறது.

திருக்களப்பூர் என்னும் ஊரில் உள்ள கோயிலில் காணப்பெறும் ஒரு கல்வெட்டு துந்துபி ஆண்டு சித்திரை 17ஆம் தேதி பொறிக்கப் பெற்றிருக்கிறது. இதில் நாயக்கருக்காகக் கச்சி சந்த்ரசேகர் காலாட்கள் தோழர் உடையாரின் புத்ரன் கச்சி நல்ல நைநாக காலாட்கள் தோழர் உடையார், அக்கோயில் பூஜை வழிபாட்டுக்கும், திருப்பணிக்குமாகத் திருக்களப்பூர் கிராமத்தைக் கொடையளித்தது தெரிவிக்கப்பட்டுள்ளது. நல்ல நைநாகக் காலாட்கள் தோழரை அடுத்து கல்யாண ரங்கப்ப உடையார் ஆட்சிக்கு வந்தார்.

## 11. கல்யாண ரங்கப்ப உடையார்

சகம் 1600 (கி.பி.1678)க்குச் சரியான காளயுக்தி ஆண்டு, கண்யாண ரங்கப்ப உடையார், தம் ஆளுகைக்குட்பட்ட கருப்பூர் மாகாணத்தில் அடங்கிய கொள்ளிடம், வெள்ளாறு ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்டதான அமுதரங்கோட்டை என்னும் ஊரைத் திருப்பனந்தாளிலுள்ள அருணஜடை ஈஸ்வரசுவாமி மற்றும் கிருஷ்ணைஸ்வரசுவாமி கோயில்களில் நண்பகல் பூசை நடைபெறுவதற்கும், நாள்தோறும் விளக்கெரிப்பதற்கும் கொடையாக வழங்கினார்.

## 12 நல்லப்ப உடையார்

கல்யாண ரங்கப்ப உடையாரின் மகன் நல்லப்ப உடையார் அடுத்து ஆட்சிக்கு வந்தார். இவர் மிகச் சிறப்பாகத் தமது நாட்டுப் பகுதியை ஆண்டு வந்தார்.

அப்போது திருச்சிராப்பள்ளி நாயக்கர் சொக்கநாத நாயக்கருக்கும் அவரது சகோதரர் முத்துலிங்க நாயக்கருக்கும் மனக் கசப்பு ஏற்பட்டிருக்கிறது. முத்துலிங்க நாயக்கர் உடையார் பாளையம் ஜமீனிடம் அடைக்கலம் பெற்று கசனங் கோட்டை என்னும் ஊரில் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தார்.

அதேபோன்று தெலுங்கு நாட்டிலிருந்த ஒரு அரசராகிய யசம்ம நாய்க்கர் தம் ஆட்சியுரிமையை இழந்து அடைக்கலம் தேடி உடையார் பாளையம் ஜமீனில் நல்லப்ப உடையார் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார்.

விஜய நகர ராயர் ஆட்சி நலிந்த நிலையில், காஞ்சிபுரப் பகுதியில் சுரப் சிங் என்பானின் தொல்லையினால், காஞ்சிபுரத்திலிருந்த ஏகாம்ப்ரேஸ்வரர், வரதராஜர், காமாட்சியம்மன் திருமேனிகள் மற்றுமுள்ள கடவுள்களின் செப்புத் திருமேனிகள் ஆகியவற்றை உடையார் பாளையத் துக்குக் கொண்டு வந்து பாதுகாப்பாக வைத்து, நாள்தோறும் நல்லப்ப உடையாரால் அனைத்து வழிபாடுகளும் செய்யப் பெற்றன.

நல்லப்ப உடையார் ஆட்சிக் காலத்தில் உடையார் பாளையம் 22 மாகாணங்களாகப் பிரிக்கப் பெற்று 250 கிராமங்களை உள்ளடக்கியதாக விளங்கியது. ஆண்டு வருவாய் மொத்தம் 70,000 கெட்டிப் பொன்களாகும். மேலும் திட்டகுடி, விருத்தாசலம், புவனகிரி, சிதம்பரம் மற்றும் மன்னார்குடி ஆகிய சிறுபாளையங்களின் அரசு காவல் மூலம் 6000 கெட்டிப் பொன்களும் வருவாயாக வந்தன.

கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நட்பினைப் பெற்றதன் பயனாய்த் தேவனாம் பட்டம் மற்றும் குண்டு கிராமங்களின் அரசு காவல் வருவாயான 10,000 நட்சத்திர பகோடாவை (ரூ.35,000)யும் பரிசாகப் பெற்றார்.

கசனங்கோட்டை என்ற ஊரை அஹோபல மடத்துக்குத் தானமாக வழங்கியவர் இம்மன்னரேயாவர். காஞ்சிபுரம் கோயிலுக்கு இவரால் கொடையளிக்கப் பெற்ற 'வேணு கோபாலப் பதக்கம்' என்னும் கழுத்தணி இன்றும் கோயிலில் உள்ளது.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் ஸ்தூபியில் காணப்பெறும் கல்வெட்டு, அக்கோயில் இவரால் கட்டப் பட்டது என்பதைப் புலப்படுத்துவதாக- உள்ளது என்று மேற்கூறப்பெற்ற நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இவ்வுடையார் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டது என்பதைக் குறிப்பதாக இருக்கும்.

நல்லப்ப உடையாருக்கு எட்டு மனைவிகளும் 52 தாசிகளும், 30 பிள்ளைகளும் இருந்தனர்.

## 13. உத்தம ரங்கப்ப உடையார்

நல்லப்ப உடையார் ஆட்சிக் காலம் முடிய உடையார் பாளையம் ஜமீன் மற்றவர்களுக்குக் கப்பம் செலுத்தாமல், படை

உதவி மட்டும் செய்துக் கொண்டு ஓரளவுக்குச் சுதந்திர அரசாட்சி நடத்திக் கொண்டிருந்தது. நல்லப்ப உடையார் மகன் உத்தம ரங்கப்ப உடையார் தம் அறுபதாம் வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில நாட்களில், செஞ்சியை நாயக்கரிட மிருந்து சுரப்சிங் கைப்பற்றிக் கொண்டான், விசய நகர வேந்தர் ஆட்சியும் முடிவுக்கு வந்துவிட்டது. அக்கன்னா, மதன்னா ஆகியோர், கோல்கொண்டா சுபாவைக் கைப்பற்றிக் கொண் டனர்.

கர்நாடக நவாபான ஹஸரத் தாவூத்கான் பஹதுர் தம் படைபலத்தால் செஞ்சியைக் கைப்பற்றி ஆர்க்காட்டு சுபாவோடு இணைத்துவிட்டான். தாவூத்கான் உடையார் பாளையம் உடையாருக்கு ஒரு யானையைப் பரிசாக அளித்து விட்டு, தமக்கு ஆண்டுதோறும் 40,000 பேஷ்கஷ் கப்பம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தான். ஆதலால் ஒவ்வொரு ஆண்டும் 40,000 பேஷ்கஷ் தாவூத்கானுக்குக் கப்பம் செலுத்திக்கொண்டு ஆட்சி புரிந்து வந்தார் உத்தம ரங்கப்ப உடையார்.

இவ்வுடையாரின் தந்தை திருச்சிராப்பள்ளி நாயக்கர் முத்துலிங்க நாயக்கருக்கு அடைக்கலம் தந்ததால், மதுரை நாயக்கரின் சார்பில் ஆட்சிபுரிந்து வந்த ராணி மங்கம்மாள், நரசய்யா தலைமையில் ஒரு படையை உடையார் பாளையத் துக்கு அனுப்பி உடையாரைத் தோற்கடித்து வரும்படி கட்டளையிட்டார். உடையார் பாளையம் உடையாரும் தம் படையைத் திரட்டிக் கடுமையாகப் போரிட்டார். முதலில் உடையார் பாளையம் படை தோல்வியடைந்தது. பின்னர் ஒரு இரவில் மேலும் படையினரைத் திரட்டி மதுரை நாயக்கர் படையை எதிர்த்துப் போரிட்டு வெற்றி வாகை சூடியது. இவவெற்றியின் பயனாய் உடையார்க்கு 'கச்சி குலதீரன் ம்ரி கங்கா' என்றும், 'கதனர் ஜிதோர்தண்ட பாண்டிய தலரன் மகரங்க' என்றும் விருதுகள் வழங்கப் பெற்றன.

இவரது ஆட்சியின் போது ஒவ்வொரு ஆண்டும் 40,000 கெட்டிப் பொன் பேஷ்கஷ்ஷாக ஆர்க்காடு நவாபுக்குச் செலுத்திக் கொண்டும், தமக்கு 10,000 கெட்டிப்பொன் வருவாய் பெற்றுக் கொண்டும் மகிழ்ச்சியாக இருந்து வந்தார்.

## 14. ரங்கப்ப உடையார்

உத்தம ரங்கப்ப உடையாரின் உடன் பிறந்தாரின் மகன் ரங்கப்ப உடையார் அடுத்து ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சிக்

காலத்தில் 30,000 கெட்டிப் பொன் செலவில் பதினாறு மஹாதானங்கள் என்னும் ஷோடச மகாதானத்தைச் செய்தார். அதன் பயனாய் “வகூத் விதய சங்க்ய புங்கித மஹாதான சமேதமன எசோவிசால' என்ற பட்டம் இவருக்கு வழங்கப் பெற்றது. மேலும் எக்குறையும் இல்லாமல் ஆட்சி செய்து வந்ததால்” “ராஜ ரிஷி” என்றும் அழைக்கப் பெற்றார்.

இவரது ஆட்சிக் காலத் தொடக்கத்தில் காஞ்சியிலிருந்து கொண்டு வந்திருந்த தெய்வத் திருமேனிகளுக்கு நித்ய வழிபாடு சிறப்பாக நடைபெற்று வந்தது. ஆட்சியின் மத்திய காலத்தில் அதாவது சகம் 1632 (கி.பி.1710)ல் ஏகாம்ப்ரேஸ்வரர் மற்றும் வரதராஜர் திருமேனிகள் காஞ்சிபுரத்துக்குக் கொண்டு செல்லப் பெற்றன. மீனாட்சியம்மன் தங்க உருவம் மட்டும் உடையார் பாளையம் ஜமீனிலேயே வைத்து வழிபடப்பட்டு வந்தது.

சகம் 1635ல் (கி.பி. 1713) எழுதப் பெற்ற பூவராகசாமிக் கோயில் கல்வெட்டில், ரங்கப்ப உடையார் அக்கோயிலில் ஆஸ்தான மண்டபத்தையும், கலியாண மண்டபத்தையும் அமைத்ததும்; மூலவரின் நைவேத்தியங்களுக்கும், விழாக்கள் நடத்துவதற்குமாக ராங்கியம், சிலுதசேரி, தவடநல்லூர், சூரக்குழி மற்றும் வளநத்தம் ஆகிய கிராமங்களைக் கொடையாக வழங்கியதும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

## 15 யுவ ரங்கப்ப உடையார்

ரங்கப்ப உடையார் உயிரோடிருக்கையிலேயே தமது மூத்த மகனான யுவரங்கப்ப உடையாருக்குப் பட்டம் சூட்டிவிட்டார். யுவரங்கப்ப உடையார் 18 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். பாளையக்காரர் ஒருவருக்கு வேண்டிய அனைத்துத் தகுதி களையும் இவர் பெற்றிருந்தார். இவர் ஒரு சிறந்த அறிஞர், கவிஞர், இசை மேதை. அனைத்துக் கலைகளையும் ஆதரித்துப் போற்றினார். இவரது அவையை சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் சிறந்த புலவர்கள் அலங்கரித்தனர். கோபால சாஸ்திரி என்ற வடமொழிப் புலவர் தம் கவியாற்றலால் 'அபினவ காளிதாஸ' (இரண்டாம் காளிதாசர்) என்று இவ்வுடையாரால் கௌரவிக்கப்பெற்றார். சமஸ்கிருதப் புலவர்களும், தமிழ்க் கவிஞர்களும் யுவ ரங்கப்ப உடையாரைத் தங்கள் கவிதைகளால் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

யுவ ரங்கப்ப உடையாரும் ஆர்க்காட்டு நவாபுக்கு 40,000 பேஷ்கஷ் கப்பம் செலுத்திக் கொண்டு தம் ஆட்சியை நடத்தி வந்தார். இவர் காலத்தில் உடையார்பாளையம் ஜமீன் 300 ஊர்களைக் கொண்ட 27 மாகாணங்களாக விளங்கியது. பாளையக்காரர்கள் வழக்கமாகச் செய்து வந்த அறப்பணி களையும் திருப்பணிகளையும் இவர் தொடர்ந்து செய்து வந்தார்.

## 16. நல்லப்ப உடையார்

யுவ ரங்கப்ப உடையாரின் இளைய சகோதரர் நல்லப்ப உடையார் அடுத்து பட்டம் ஏற்றார். இவர் காலத்தில் உடையார் பாளையம் முக்கிய வணிக நகரமாகவும் விளங்கியது. துணி மற்றும் இதரப் பொருட்கள் விற்பனை செய்யும் செல்வ மிகுந்த வணிகர் பலர் உடையார் பாளையத்தில் வாழ்ந்தனர். இவ்வுடையாரது தாயார் 'ஹிரண்ய கர்ப்ப மஹாதவம்' மேற்கொண்டபோது அதற்குத் தேவைப்பட்ட பொன் அனைத்தையும் இந்நகரத்தைச் சேர்ந்த 'கோமட்டி' வணிகர் ஒருவரே வழங்கினார்.

நல்லப்ப உடையார் உடையார் பாளையம் சிவன் கோயில் கிழைக் கோபுரத்தையும் மண்டபத்தையும் அமைத்துந் தந்தார். காண்டீப தீர்த்தத்தின் ஒரு பகுதிக்குக் கற்களால் படிக்கட்டு அமைத்துதவினார். பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலின் கோபுரத்தையும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். மேற்காணும் திருப்பணிகள் அனைத்தும் 'நொண்டிச் சிந்து' என்னும் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவர் கி.பி.1748ல் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர் களுக்கும் பாண்டிச்சேரி சம்பந்தமாக நிகழ்ந்த போரில் ஆங்கிலேயர்களுக்கு உதவியாக இருந்தார். அதே போன்று கர்நாடக நவாபுக்குத் தம் படையை அனுப்பி உதவி புரிந்துள்ளார்.

கிபி. 1749ல் பிரெஞ்சுக்காரர்கள் உதவியோடு முஸாபர் ஜங்கும் சந்தாசாகிபும் உடையார் பாளையம் பாளையத்தைத் தாக்கி அதிக பணத்தைக் கப்பமாகத் தரும்படி கேட்டனர். முதலில் தரமறுத்த பாளையக்காரர் இறுதியில் அவர்களோடு பேசி ஒரு ஒப்பந்தம் செய்துக் கொண்டார்.

கி.பி. 1755ல் மீண்டும் பிரெஞ்சுப் படை உடையார் பாளையத்தைத் தாக்கியது. கிழக்கிந்தியக் கம்பெனியின் உதவி

பெற்று அவர்களை விரட்டியனுப்பினார். இருப்பினும் கி.பி.1757ல் டி. ஆண்டேவில் என்பார் தலைமையில் மீண்டும் பிரெஞ்சுப் படை பாளையத்தைத் தாக்கியது. இம்முறையும் பாளையக்காரர் அவர்களைத் தோற்கடித்தாலும், எதிர் காலத்தில் மேலும் போர் நிகழா வண்ணம் அமைய, பிரெஞ்சுக் காரர்களுக்கு 40,000 ரூபாய் கப்பம் செலுத்துவற்கு ஒப்புக் கொண்டார்.

இவரது ஆட்சியின் பிற்பகுதியில், உடையார் பாளை யத்தில் வைத்து வழிபட்டு வந்த சுவர்ண காமாட்சியம்மன் திருமேனி, தஞ்சை மன்னரால் தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்லப் பெற்றது.

## 17. முத்து விஜய ரங்கப்ப உடையார்

நல்லப்ப உடையாருக்கு அடுத்து முத்து விஜய ரங்கப்ப உடையார் ஆட்சிக்கு வந்தார். இவருடைய ஆட்சிக் காலத்திலும் ஆர்க்காட்டு நவாபின் தொந்தரவினால் அரியலூர் மற்றும் துறையூர் பாளையக்காரர்கள் உடையார் பாளையத்தில் தஞ்சம் புகுந்தனர். கி.பி. 1765ல் நவாப் வாலாஜா, உடையார் பாளையம் மீது போர் தொடுத்தார். உடையாரும் மிகத் திறமையோடு தம் படைகளைத் திரட்டி எதிர்த்துப் போர் புரிந்தாலும், இறுதியில் நவாப் படையின் வலிமையால், உடையார் பின் வாங்கி, தஞ்சாவூரிலுள்ள ஒரு கோட்டைக்கு 2000 காலாட்படை, 200 குதிரைகள், 14 யானைகள் மற்றும் மிகுந்த செல்வத்தோடு குடியேறிவிட்டார்.

சில நாட்கள் மைசூர் மாநிலத்திலும், சந்தமங்கலம் தாலுகா தத்தம் கரம்பேட்டை என்னும் கிராமத்திலும் தங்கி யிருந்துவிட்டு, மீண்டும் கி.பி. 1780ல் உடையார் ஹைதர் அலியின் உதவியோடு பாளையம் திரும்பி, நவாபின் படைகளை விரட்டியடித்துவிட்டு முன்னாளில் இருந்தது போன்றே ஆட்சி புரியலானார். உடையார் பாளையம் வட்டம் விளந்தை என்னும் ஊரில் காணப்பெறும் கல்வெட்டு சகம் 1713 (கி.பி.1791), பரிதாபி ஆண்டில் முத்து விஜய ரங்கப்ப காலாட்கள் தோழர் உடையார், அவ்வூர் அகத்தீசுவர சுவாமி கோயிலைப் புதுப்பித்துக் கட்டினார் என்று கூறுகிறது. மேலும், இவ்வுடையார் 'கச்சி பிரம்ம வன்னியர்' என்றும், 'சிங்கக் கொடியுடைத் தலைவர்' என்றும் அழைக்கப் பட்டார் என்றும்

தெரிவிக்கிறது. கி.பி. 1792ல் முத்து விஜய ரங்கப்ப உடையார் விண்ணுலகடைந்தார்.

## 18. அபிநவ யுவ ரங்கப்ப உடையார்

முத்து விஜய ரங்கப்ப உடையாருக்குப் பிறகு அவரது மூத்த மகன் அபிநவ யுவ ரங்கப்ப உடையார் முடிசூட்டப் பெற்றார். ஆர்க்காட்டு நவாபுக்குச் சரிவர கப்பம் கட்ட முடியாதபடி சில எதிர்பாரா இடர்ப்பாடுகள் பாளையத்துக்கு ஏற்பட்டன. ஆதலால் நவாபுக்கும் பாளையத்துக்கும் வேண்டிய வரான சின்னய்யா முதலியார் என்பவர் பாளையத்தை நிர்வகிக்கும் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார். உரிய தொகையை நவாபுக்குச் செலுத்தியதோடு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 12,000 பாளையத்துக்கு வருமானம் பெறுவதற்கு முதலியார் ஏற்பாடு செய்தார். முதலியாரின் சேவையைப் பாராட்டி பாளையக்காரர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாளப் புத்தூர் என்னும் ஊரைத் தானமாக வழங்கினார். இவ்வுடையார் கி.பி. 1801ல் கீழ்ப்பழுவூரில் காலமானார்.

## 19. கச்சி ரங்கப்ப காலாட்கள் தோழர் உடையார்

அபிநவ யுவ ரங்கப்ப உடையார் இறந்த பிறகு அவருடைய ஒன்று விட்ட சகோதரர் ரங்கப்ப உடையார் ஆட்சிக்கு வந்தார். ஆட்சிப் பொறுப்பேற்ற ரங்கப்ப உடையார் 15 வயதே நிரம்பிய இளைஞராவார்.

இவர் ஆட்சிக்கு வருமுன்னே ஆர்க்காட்டு நவாபின் ஆட்சிப் பகுதியைக் கிழக்கிந்தியக் கம்பெனி கைப்பற்றிக் கொண்டது. ஆதலால் உடையார் பாளையம் ஜமீன் திருச்சிராப் பள்ளி மாவட்டக் கலெக்டரின் அதிகார வரம்பில் கொண்டு வரப்பட்டது.

மற்றொரு முக்கிய மாற்றமாக மாவட்ட ஆட்சித் தலைவரே பாளையத்தின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டு, கி.பி. 1817ல் பாளையக்காரருக்கு 65 கிராமங்களை மட்டும் அளித்து 175 நட்சத்திர பகோடா வரி செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார். மற்ற எல்லா வசதிகளும் அதிகாரமும் இவரது முன்னோர் பெற்றிருந்து போன்றே இருந்து வரவும் அனுமதியளித்தார்.

இவர் காலத்தில் உடையார் பாளையம் சமஸ்தானத்தில் இருந்த அலுவலர்கள் விபரம்:

மந்திரிகள், தளவாய்கள், பிரதானிக்கங்கள், வக்கீல்கள், ஜவர்பாவிகள், சம்பிரதிகள் (காசாளர்கள்), மெய்க்காவலர்கள், சுபாதார்கள், ஹவில்தார்கள், சிறு தலைவர்கள், சமதிக பிரமுகர்கள், பண்ணை நிலங்களுக்கான கடைசாரம் சம்பிரதிகள் (கணக்கு அலுவலர்கள்), சேர்வைகாரர்கள், புரோகிதர்கள், தானாதிகாரிகள், காலம் கணிப்பவர்கள், பாகவதர்கள், ஸாஸ்திர பண்டிதர்கள், பகல் விளக்கு ஏந்திகள், வீணை வாசிப்போர், பால ராஜாக்கள், கட்டியம் கூறுவோர்கள், ஷராப்கள், தெலுங்கு பண்டிதர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், அட்டவணைகள், பல்சரக்கு பாதுகாவலர்கள், அவசரக் காரர்கள், அணுக்க உதவியாளர்கள், கமத்ததன்கள், பாவாடைக் காரர்கள், பெண்வேலைக்காரர்கள், சாயம் தோய்ப்போர், கொடியேந்துவோர், ஊதுகுழல் ஊதுவோர், நாட்டியக் குழுவினர், சங்கு ஊதுவோர், மத்தளம் கொட்டுவோர், நகர நவபத்கள், அல்கொஜகர்கள், அராபிய ஊதுகுழல் வாசிப்போர், பரித்து மத்தளம் கொட்டுவோர், கொல்லர், முடி திருத்துதலோடு மருத்துவமும் செய்வோர், கருநாடகக் காவலர்கள், காவல் அதிகாரிகள், காவல் கணக்காளர்கள், ஆண் காவல்காரர்கள், தானதார்கள் மற்றும் தலையாரிகள்.

இவரைத் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதப் புலவர்கள் தங்கள் கவிதைகளால் போற்றிப் பாராட்டியிருக்கின்றனர். இவ்வுடையார்மீது பிள்ளைத் தமிழ், கோர்வை ஆகிய தமிழ் நூல்களும், சம்ஸ்கிருதத்தில் அமிர்தத்வனியும், தெலுங்கில் பதியமும், பிரபந்தமும் இயற்றப்பட்டன. கி.பி. 1835ல் இவர் இயற்கை எய்தினார்.

## 20. முத்து விஜய ரங்கப்ப உடையார்

கச்சி ரங்கப்ப காலாட்கள் தோழர் உடையார் இறந்த பிறகு அவரது மூத்த புதல்வர் முத்து விஜய ரங்கப்ப உடையார் அடுத்து பட்டமேற்றார். இவர் தனது மாமன் அரியலூர் ஜமீன்தாரின் மகளை மணந்தார். இவர் ஆறுமாத காலமே ஆட்சி புரிந்தார். எதிர்பாரா விதமாக கி.பி. 1836 ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் நாள் மரணமடைந்தார்.

## 21. ரங்கப்பா உடையார்

முத்து விஜய ரங்கப்ப உடையாரின் இரண்டு வயது நிரம்பிய மகன் ரங்கப்ப உடையாருக்கு அடுத்து பட்டம் சூட்டப்பட்டது. பட்டக்காரர் குழந்தையாக இருந்த காரணத்தால், பாளையத்தின் நிர்வாகத்தைக் கோர்ட் ஆப் வார்ட்ஸ் என்னும் அதிகாரக் குழுவிடம் கிழக்கிந்தியக் கம்பெனி ஒப்படைத்தது. அரண்மனை நிர்வாகம் பாளையக் குடும்பத்தாரிடமே இருந்து வந்தது. இவ்வரசர் கி.பி. 1842ல் இறக்க நேர்ந்தது.

## 22. கல்யாண ரங்கப்ப உடையார்

ரங்கப்ப உடையாருக்குப் பிறகு அவரது சிறிய தந்தை கல்யாண ரங்கப்ப உடையார் பட்டத்துக்கு வந்தார். தம் முன்னோர் ஏற்படுத்தியிருந்த அறக்கட்டளைகளை இவரும் தொடர்ந்து நடத்தி வந்தார். முன்பு இருந்த சத்திரங்களில் அங்கு வரும் யாத்ரீகர்களுக்கு உணவு எவ்விதக் குறைவுமின்றி அளிப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீமுஷ்ணம் பூவராஹ சுவாமிக்கு தங்கக் கவசமும் மற்றும் ஆபரணங்களும் வழங்கி மகிழ்ந்தார். ஸ்ரீமுஷ்ணத்தில் மாசி மற்றும் சித்திரை மாதங்களில் நிகழும் தேர்த் திருவிழாவில் தாமே நேரில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்புற நடத்தி வைத்தார்.

சிதம்பரம் சபா நடேசர் கோயிலில் உள்ள அழகிய திருச்சிற்றம்பலமுடையாருக்கும் தங்கக் கவசம் செய்தளித்தார். மேலும் தங்கத்தால் செய்யப் பெற்ற ஸஹஸ்ரதர தட்டு ஒன்றை மேற்குறிப்பிட்ட தெய்வத்துக்கு அபிஷேகம் செய்வற்காக அளித்தார்.

கும்பகோணத்திலிருந்த ஸ்ரீ சங்கராசாரியார் மடத்துக்குத் தேவமங்கலம் கிராமத்தைச் சார்ந்த 40 காணி நிலத்தைக் கொடை வழங்கினார்.

இவர் 1885 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20ஆம் நாள் இயற்கையெய்தினார்.

## 23. ஸ்ரீ யுவரங்கப்ப உடையார்

கி.பி. 1869ல் ஸ்ரீ யுவராஜா உடையார், கல்யாண ரங்கப்ப உடையாருக்கு மகனாகப் பிறந்தார். தந்தை இறந்த போது இவர்

16 வயது நிரம்பியவராக இருந்து பட்டமேற்றார். இளைய வயதினராக இருந்த காரணத்தால், இவர்து தந்தையின் கடைசி மனைவி இவருக்குப் பாதுகாவலராக இருந்து ஆட்சி நடத்தி வந்தார். கி.பி. 1887ல் இப்பாளையக்காரர் தம்பொறுப்பில் அரசாட்சியேற்றார்.

தம் முதல் திருமணத்தை 1888ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாளில் முடித்தார். இவரது முதல் பட்டத்தரசி சௌபாக்யவதி ஜலஜகந்தி ஆயா ஆவார். இவ்வரசி மூன்று ஆண் மகவுகளையும், மூன்று பெண் மகவுகளையும் ஈன்றளித்துவிட்டு 1898ல் இறந்து விட்டார்.

அரசர் இரண்டாம் திருமணத்தை 1899லும், முன்றாம் திருமணத்தை 1904லிலும் நடத்திக் கொண்டார். மேற்குறிப்பிட்ட மூன்று அரசிகளுமே கடலங்குடி ஜமீன்தாரரின் மகள்களாவர்.

ஸ்ரீ யுவரங்கப்ப உடையாருக்கு மிக நெருங்கிய உறவினர்களாக அரியலூர், கடலங்குடி மற்றும் பிச்சாபுரம் ஜமீன்கள் விளங்கினர்.

இவ்வுடையார் கல்விக்குச் சிறந்த தொண்டு புரிந்துள்ளார். குஸ்பா உடையார் பாளையத்தில் ஒரு பள்ளி நிறுவி அதில் சம்ஸ்கிருதமும் வேதமும் கற்றுத் தர ஏற்பாடு செய்தார். கும்ப கோணத்தில் வேதம், சம்ஸ்கிருதம் மற்றும் விசிஷ்டாத்வைதம் பயிலும் மாணவர் ஒருவருக்கு ஆண்டு தோறும் ரூ.50 உதவிப் பணம் அளித்து வந்தார்.

திருச்சியில் உள்ள தேசீய உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.3,500 அளித்து, புதிதாக ஒரு கூடம் கட்டும்படி செய்து அவ்விடத்தில் தொடக்கக் கல்வி கற்றுத் தருவதற்கு வகை செய்தார்.

கி.பி. 1906ல், சென்னை விக்டோரியா கோஷா மருத்துவ மனையில் மேலும் ஒரு படுக்கை அமைப்பதற்கு ரூ. 2200 வழங்கியுள்ளார்.

இவ்வுடையார் ஆட்சிக் காலத்தில், உடையார் பாளையம் அரண்மனை சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய கட்டடப் பகுதிகளைக் கொண்டு விளங்கியது. இவ்வரண் மனையைச் சுற்றிலும் அகழி, கோட்டைச் சுவர் ஆகியவை கி.பி. 1802ஆம் ஆண்டு வரையிலும் காணப் பெற்றன. 64 அறைகள் இருந்த இவ்வரண்மனையில் 25 அறைகள் நன்றாக இருந்தன. சில அறைகள் ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் போன்று சிறந்த

வேலைப்பாடுகளுடன் விளங்கின. இவ்வரண்மனையில் இருந்து தர்பார் ஹால், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் உள்ளதைப் போன்று காட்சியளித்தது.

இவ்வரண்மையில் இருந்த பகுதிகளைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதற்காக இவ்வுடையார் ரூ.2,00,000 அளவில் செலவு செய்தார். பழுதுபார்க்கும் பணிகளைத் தம் நேரடிப் பார்வையிலேயே வைத்துக் கண்காணித்தார்.

புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்டி ஒவ்வொரு ஆண்டும் அதில் இருமுறை ஏழைகளுக்கு உணவளித்தார். அவ்வாறு உணவளிக்கையில் சாதி, மத வேறுபாடு பாராமல் எல்லா தரப்பு ஏழைகளுக்கும் உணவு வழங்கப்பட்டது.

இவ்வுடையார் 1918-ஆம் ஆண்டு, அக்டோபர் 24-ஆம் நாள் இறந்து விட்டார்.

## 24. ஸ்ரீ கச்சி சின்ன நல்லப்ப காலாட்கள் தோழர் உடையார்

உடையார் பாளையம் உடையார் வமிசத்தின் 24-ஆவது பாளையக்காரராக, ஸ்ரீயுவ ரங்கப்ப உடையாரின் மகன்களில், உயிரோடு இருந்த மூத்த மகனான ஸ்ரீ கச்சி சின்ன நல்லப்ப காலாட்கள் தோழர் உடையார் அடுத்து முடிசூட்டிக் கொண்டார்.

அரண்மனை ரங்க விலாசத்தில் தர்பார் கூடியபோது கும்பகோணம் அருள்மிகு ஸ்ரீ சங்கராசாரியாரின் அருளாசியை உடையார் பெற்றுக் கொண்டார்.

தம் தந்தையின் நினைவாக ரூ.50,000 செலவில் கைலாச மஹால் என்னும் கோயிலை எழுப்பினார். இவர் தம் உறவினர்களிடத்து மிகவும் அன்பாக இருந்தார். அரசுக்குச் செலுத்த வேண்டிய இறையைச் செய்ய இயலாதவர்கள் செலுத்தவேண்டாம் என்று உத்திரவு பிறப்பித்தார். பிரிட்டிஷ் அரசிடம் மிகவும் நாணயமாக நடந்து கொண்டார்.

இவ்வுடையார் அரியலூர் மழவராயரின் மகளான சௌபாக்யவதி ஒப்பயா அவர்களை மணந்தார். அவருக்கு ஒரு மகளும், பின்பு ஒரு மகனும் பிறந்தனர். மகள் ஒரு ஆண்டு இருந்து இறந்து விட்டது. இவ்வுடையாருக்குப் பின்பு

பட்டமேற்க ஆண்மகவு இருந்து வருகிறது என்று உடையார் பாளையம் ஜமீன் வரலாற்றை எழுதியவர் தெரிவித்துள்ளார்.[3]

## அடிக்குறிப்புகள்

1. இவர் துளுவ குலத்தின் நரச நாயக்கரின் மகனான வீரநரசிம்மராவார்.
2. M.R.Ry Sri Kachi Chinna Nallappa Kalakka Thola Udaiyar Avergal, Zanindar of Udaiyar palayam (Trichinopoly District), p. 8.
3. ஆங்கிலத்தில் உள்ள இந்நூலை உடையார் பாளையம் ஜமீன்தாரர்களுக்கு உறவினரான முடிகொண்டநல்லூர் ஜமீன்வழி வந்த கிருஷ்ணப்பாவின் திருமகனார் திரு. கி. ஸ்ரீதரன் செராக்ஸ் நகல் எடுத்து எமக்குக் கொடுத்து உதவினார்.

இயல் – பத்து

# வன்னியப் பாளையக்காரர்

## (பிச்சாவரம்)

பித்தர்புரம் என்னும் பெயர் பிச்சர்புரம் என்று மருவி, பின்பு பிச்சாவரமாக சிதைந்து வழங்கப்படுகிறது. பித்தர் புரம் என்பது பித்தன் என்ற சிவபெருமான் பெயரில் உருவாகிய நகரம் என்பதைத் தெரிவிப்பதாகும்.

பிச்சாவரம் என்னும் இவ்வூர் தற்பொழுது சிதம்பரத்தி லிருந்து கிழக்கே சுமார் 7 கி.மீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் சிற்றூராகும். கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 19–ஆம் நூற்றாண்டு முடிய இங்கு ஒரு சிறு ஜமீன் அமையப் பெற்று அப்பகுயிலுள்ள கிராமங்களில் வரிவசூல் செய்து ஆட்சி செய்து வந்திருக்கிறது. இச் சமீன்தார்கள் வன்னிய இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இச்சமீன் உடையார்பாளையம் ஜமீனுக்கு உறவுடையதாக இருந்திருக்கிறது.

இச்சமீன் பற்றிப் பேசியுள்ள வரலாற்றறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "இவர்கள் (சோழர்கள்) வழியில் வந்தவரே சிதம்பரத்தைச் சார்ந்த பிச்சபுரத்தில் இப்போது சமீன்தாராக வாழ்ந்து வரும் குறுநில மன்னர் என்பது நாம் அறிந்துக் கொள்வதற்குரியதாகும். சோழ மன்னர்கள் தமது குல தெய்வமாகிய சிதம்பர நடராச பெருமான் திருமுன்னர் முடிசூட்டப் பெறுவது பழைய வழக்கம். பிற வேந்தர்கள் அங்கு முடிசூடும் பேறு பெற்றிருக்கவில்லையென்பது பெரிய புராணத்திலுள்ள கூற்றுவநாயனார் வரலாற்றால் நன்கு அறியக் கிடக்கின்றது. எனவே சோழ மன்னர்கட்கு மாத்திரம் ஏற்பட்டிருந்த தனி உரிமை அஃது என்பது இனிது பெறப்படும்.
>
> அத்தனியுரிமையை இன்றும் உடையவர்களா யிருப்பவர் பிச்சபுரத்தில் வாழும் குறுநில மன்னர் என்பது

யாவரும் அறிந்ததொன்றாகும். சில ஆண்டுகட்கு முன்னர் காலஞ்சென்ற பிச்சபுரம் மன்னர் ‘சாமிதுரை சூரப்ப சோழகனார்’ சிதம்பரம் நடராசப் பெருமான் திருமுன்னர் பஞ்சாக்கரப் படியில் (பஙச அக்ஷரப்படியில், அதாவது ‘நவசிவாய’ என்ற ஐந்து எழுத்துப் படியில்) அபிசேகஞ் செய்து முடிசூட்டப் பெற்றதை நேரில் பார்த்து மகிழ்ந்தவர் பலர் இன்னும் இருக்கின்றனர். எனவே பிச்சபுரம் சமீன்தார் பண்டைத் தமிழ் வேந்தர்களுள் ஒருவரான சோழ மரபினர் என்பது ஐயமறத் தெளிதிற் புலப்படுதல் காண்க” என்பதாகும் அவர்தம் கூற்று.[1]

பிச்சாபுரம் சமீன்தாரின் பெயர் இறுதியில் ‘சோழகனார்’ என்று இருப்பதின் காரணத்தாலும், நடரா்சப் பெருமான் கோயிலில் முடிசூட்டிக் கொள்ளும் பேறு பெற்றிருந்ததாலும் இச்சமீன்தாரர் சோழர் வழி வந்தவர் என்று கொள்ளுவதற்கு இடமேற்படுகிறது.

பிச்சாவரத்தில் ஒரு பள்ளி குடும்பம் உள்ளது என்றும், அது தாங்கள் ஹிரண்யவர்மன் வழி வந்தவர் என்று கூறிக் கொள்கிறது என்றும் ஒரு மாறுபட்ட கருத்தைத் தர்ஸ்ட்டன் கூறியுள்ளார்.[2] “ஒரு வேடிக்கையான விழா சிதம்பரம் கோயிலில், மூலவர் உண்ணாழிகைக்குச் செல்லும் வழியில் உள்ள படிக்கட்டுகளில் நடைபெறுகிறது. பிச்சாவரக் குடும்பத்தின் மூத்த மகனுக்குத் திருமணம் முடிவுற்றதும், அவரும் அவரது மனைவியும், அங்குள்ள வேளாளர் ஒருவரும் சிதம்பரம் கோயிலுக்கு வந்து கோயில் திருப்பணிகள் செய்கின்றனர். மேலும் தம் குல மக்களும் மற்றவர்களும் புடைசூழ ஒரு வேள்வி உண்டு பண்ணி, அதில் சில பொருட்களைப் படைக்கின்றனர். பின்பு மணமக்கள் இருவரும் ஒன்பது வகை நன்னீரால் நீராட்டப் பெறுகின்றனர். அவர்களுடன் வந்த வேளாளர் கோயில் இறைவன், இறைவி முடிகளை அவர்களுக்குச் சூட்டுகிறார். கோயில் பிராமணர்களின் உதவியோடு முடிசூட்டு வைபவத்தை நடத்தும் வேளாளர் அவர்களது முன்னோனான ஹிரண்யவர்மனிடத்துப் பணிபுரிந்த அமைச்சனின் வழிவந்தவர் என்று கூறப்படுகிறது.

இந்த விழா பெரும் பொருட்செலவை ஏற்படுத்துகிற காரணத்தாலும், அனைத்துச் செலவையும் அம்மணமகனே

ஏற்கவேண்டியிருப்பதாலும் அக்குடும்பத்தின் மூத்த மகன் பெரும்பாலும் தம் வாழ்நாளின் பாதி காலம் திருமணம் ஆகாதவராகவே இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது." என்று தர்ஸ்ட்டன் மேலும் எழுதியுள்ளார்.

தர்ஸ்ட்டன் 'பள்ளி குடும்பம்' என்று குறிப்பிட்டிருப்பது பிச்சாபுரம் ஜமீன் குடும்பத்தைத்தான் என்பது சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சமீன் குடும்பத்தாருக்கு சிதம்பரம் நடராஜர் கோயில் தீக்ஷிதர்கள் அளித்த மரியாதை மற்றும் செவிவழிச் செய்திகள் மூலம் தெளிவாகப் புலனாகிறது.

"அந்தக் காலத்தில் இந்தத் திருக் கோயிலின் (நடராஜர் கோயில்) திறவுகோல் நமது பித்தர் புர மன்னர் பரம்பரையாரிடம்தானிருந்தது. இந்தத் திறவுகோல் தினம் தினம் ஆலய பூசைகள் முடிந்த பின்பு பித்தர்புரத்திற்குப் பல்லக்கில் தகுந்த பாதுகாப்போடு போகுமாம், திரும்பியும் வருமாம். இத் திறவுகோலை எதிர்நோக்கி தீட்சதர்கள்... காத்துக்கிடப்பார் களாம். கோயில் எல்லா உற்சவங்களும் நமது அரசரின் ஆலோசனை கேட்டு நடந்து வந்ததாம். மன்னரை முக்கிய நிகழ்ச்சிகளில் அரச மரியாதையோடு வரவேற்பது கோயிலில் பணிபுரியும் தீட்சதர்களின் கடமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

இந்த சோழ பரம்பரை வன்னியர்கள் அந்த காலத்தில் பித்தர்புரத்தைச் சேர்ந்த 18 கிராமங்களில் அதிகம் வாழ்ந்திருக்கிறார்கள் என்று கருதப்படுகிறது. இந்த 18 கிராம வன்னியர்களுக்கெல்லாம் தலைக்கிராமம் சிதம்பரத்திற்குக் கிழக்கே 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நக்கரவந்தன் குடியாகும். நமது சமுதாயப் (வன்னிய சமுதாயம்) பெரியவர்கள் நம் இனத் திருமணத்தின்போது, நடராசப் பெருமானது தரிசன விழாவில் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து கோயில் முகப்பு வரை போடப்படும் பந்தலுக்காகப் பணம் வசூலிப்பது இன்று வரை இருந்து வருகின்றது. இந்தப் பந்தல்கள் 3ல் நமது வன்னியர்களால் போடப்படும் பந்தல் இறைவன் நடனம் செய்து வரும் நடனப் பந்தலாகிய நடுவில் உள்ள பந்தல். அன்றைய மண்டகப்படி நம் இனத்தவர்களது. நம் இனத்தவர் களது இந்த விழாவை மட்டும் நக்கரவந்தன்குடி கிராமத்தில் வசிக்கும் பெருந்தனக் காரர்களாகிய ச. சாமிநாதன், வை. சிவசங்கரன், ஊ.ம. தலைவர், இவர்கள் நடத்தி வருகின்றனர்.

இதே போன்று நம் இன பித்தர்புரம் மன்னரால் செய்யப்படும் சோழ மண்டகப்படி அப்போதைய செலவு சுமார் 16 ஆயிரம் மாகுமாம்" என்று 'பல்லவராயர்' என்ற பருவ இதழின் ஆசிரியர் சண்முகசுந்தரம் எழுதியிருக்கிறார்.[3] இரவது கட்டுரைக்குத் துணையாக 'சாமிதுரை சூரப்ப சோழகனார்' நிழற்படத்தை வெளியிட்டிருக்கிறார். அத்துடன் கட்டுரையில் 'பித்தாபுரம் சோழ பரம்பரை மன்னர் குல இளவல் அ. சிதம்பரநாத சூரப்ப சோழகனார் 1987ஆம் ஆண்டில் இருந்தார் என்ற செய்தியையும் தந்திருக்கிறார்.

பிச்சாவரம் மன்னர் பரம்பரையின் மன்னர்களாக மேலே குறிப்பிட்ட இருவரது பெயர்கள்தான் தெரிய வருகின்றன. இவர்களுக்கு முன்பிருந்தார் பெயர்கள் யாதும் அறியமுடிய வில்லை. ஆனால் அவர்கள் பற்றி பெயர் குறிப்பிடப்படாமல் 'சோழகனார்' என்ற பட்டப்பெயரால் குறிப்பிடப்பட்டிருப்பது சில செப்புப் பட்டயங்களால் தெரிய வருகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள வன்னியர் மடாலய தர்ம சாசனத்தில் கீழ்க்காணும் வரிகள், அச்சாசனம் எழுதப் பெற்றபோது இருந்த வன்னிய வம்சத்துப் பாளையக்காரர்கள் சிலரைப் பற்றி தெரிவிக்கின்றன. அச்சாசனம் கி.பி. 1595ல் துர்முகி ஆண்டு தை மாதத்தில் எழுதப் பெற்றதாக அதில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. பாளையக் காரர்கள் பற்றி தெரிவிக்கும் வரிகள் கீழ்வருமாறு:

"தொண்ட மண்டலம் சோழகனார், காலாக்கத் தோழவுடையார், மழவராய நாயகர், பருவூர் கச்சிராயனார், இராவுத்த மிண்ட நாயனார், ஊத்தங்கால் வன்னிய நாயனார், சமுஷ்டியார், பாஞ்சால நாயனார், வாண்டையார், கொங்குடையார், பெண்ணைக்கரை சீராய நாயனார்"

மேலே குறிக்கப் பெற்றவர்களில் தொண்டைமண்டலச் சோழகனார் என்பவர் பிச்சாவரம் ஜமீன் ஆவார். காலாக்கத் தோழ உடையார் என்பவர் உடையார் பாளையம் ஜமீன் ஆவார். மழவராய நாயகர் அரியலூர் ஜமீன். பருவூர் கச்சிராய நாயனார், பருவூரில் ஆட்சி செய்த ஜமீன். இராவுத்த மிண்ட நாயனார் என்பவர் சீர்காழிக்கு அருகில் உள்ள வடகால் ஜமீன் ஆவார். ஊத்தங்கால் வன்னிய நாயனார், கடலூர் மாவட்டத்தில் நெய்வேலிக்கருகில் உள்ள ஊத்தங்கால் ஜமீனாக இருக்கலாம். இவருக்கு வணங்காமுடியார் என்ற பட்டமும்

வழங்கப் பெற்றிருக்கிறது. மற்றவர்களைப் பற்றி என்னால் அடையாளம் காண முடியவில்லை.

இச்செப்புப் பட்டயத்தின்படி கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் அதாவது இற்றைக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பாகவே பிச்சாவரம் ஜமீன்தாரர்கள் சிறந்து விளங்கியிருக்கின்றனர் என்பது தெரியலாகிறது.

புதுவை மாநகரையடுத்த வில்லவனல்லூர் அக்கினி வம்ஸ க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலய பட்டயத்தில்,[4] "தென் தேசத்தில் நமது பண்ணாடர் தங்கள் பேரும் பிரதாபமும் உண்டாக வேண்டுமென்று மடங்கள் கட்டியிருக்கிறார்கள். நாம் இராயரைப் போய்க்கண்டு மடங் கட்ட உத்திரவு பெற்று வருவோமென்று திருவக்கரை வல்லவ நாட்டு மழவராய பண்டாரத்தார். கருத்தாயனார் பண்டாரத்தார், சின்னகுமார நாயனார் பண்டாரத்தார், சிதம்பரம் மழவராய பண்டாரத்தார், கச்சிராயர், பெரிய பண்ணை நாயனார், சிற்றம்பல நாயனார், தாண்டவ நாயனார், சடையப்ப நாயனார், அழகு சிங்க நாயனார், மெய்யோக நாயனார் பண்டாரத்தார் இவர்களும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ராயரைப் போய்ப் பார்ப்போம் என்று கூறியர்வளில் சிதம்பரம் மழவராய பண்டாரத்தாரும் ஒருவராகக் காணப்பெறுகிறார். இவர் பிச்சாபுரம் ஜமீன்தாராராக இருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

கி.பி. 1708ல் எழுதப் பட்டதாகக் கருதப் படும், சேலம் மாவட்டம் மல்லி குந்தம் என்னும் ஊரிலிருந்து கிடைத்த செப்புப் பட்டயத்தில்[5], வன்னியர்களின் மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பிறகு "காஞ்சிபுர த(ள)லத்தில் பெரிய சோழனார், சின்ன சோழனார், பெரிய நல்ல பண்டாரத்தார், சின்ன நல்ல பண்டாரத்தார், உடையார் பாளையம், பிச்சிவரத்து பண்டாரத்தார் அவர்களைச் சேர்ந்த (9) சாதியார்" என்று பேசப்படுகிறது. இதில் தெளிவாகப் பிச்சாவரத்து ஜமீன், 'பிச்சிவரத்து பண்டாரத்தார்' என்று குறிக்கப்பட்டுள்ளார். ஆதலால் கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் பிச்சாவரத்து ஜமீன்தாரர் இருந்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது. கி.பி. 19-20ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த உடையார்பாளையம் ஜமீன் ஸ்ரீயுவரங்கப்ப உடையார் பிச்சாபுரம் ஜமீனோடு நல்ல உறவு கொண்டிருந்தார் என்று தெரிகிறது.

வன்னிய ஜமீன்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கிருந்தார்கள் என்பதை சேலம், ராஜரிஷி அர்த்தநாரீஸ்வரவர்மா அவர்கள் தம் கவிதையில் கீழ்க்காணுமாறு தொகுத்துப் பாடியிருக்கிறார்.[6]

"அரியலூரரசிபெறு மழவர்கோவு
மளகைபுரிப் பாண்டியரு முடையார் தாமும்
பெருமைமிகு பித்தர்புரப் பிரானார் பாரூர்
பிறங்கு கச்சிராயர்சிவ கிரி வாழ்ந்து
விரிமரபில் வழுதிகுல வேந்தர் தாமும்
வென்றி வணங்காமுடியா ருற்றங்காலிற்
பரமவிச் சுரவன்னி மன்னர் முன்னோர்
பகர் நமது குலவுறவிற் பவித்தா ரன்றே."

என்பதாக.

## அடிக்குறிப்புகள்

1. அமரர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார், 'நமது பெருமை' ஐம்பெரும் விழா மலர், 10.01.93. சமூக முன்னேற்ற சங்கம், சென்னை.
2. E. Thurston, Castes and Tribes of Southern India, (1909), Government Press, Madras, Vol. VI, P-S, pp.2-3
3. க. சண்முக சுந்தரம், 'சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலும் பித்தர்புரம் சோழ பரம்பரை அரச குடும்பமும் உரிமைகளும்', பல்லவராயர், ஜுன் 1987, பக்கம் 14-15.
4. க. துரைசாமி நாயகர், வன்னிகுலாதிக்கமும் வன்னிகுலப் பிரமுகர்களும், (1966), பக்கம் 40-41.
5. பதிப்பாசிரியர் கொடுமுடி. சண்முகப் பிரகதம், தேனோலை, 6, (1975) 'மல்லிகுந்தம் பட்டயம்,' பக்கங்கள் 37-42.
6. க. துரைசாமி நாயகர், மேலது நூல், பக்கம் 57.

## இயல் – பன்னிரெண்டு

# வன்னியப் பாளையக்காரர்

## (ஏழாயிரம் பண்ணை)

தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 'யேழாயிரம் பண்ணை பாளையப்பட்டு கைபீது' என்று ஒரு கையெழுத்துப் பிரதி உள்ளது. இதுவும் மெக்கன்சி பிரபு காலத்தில் சேகரிக்கப் பெற்றது. இது எந்த ஆண்டு எழுதப்பெற்றது என்பது தெரியவில்லை.

வன்னியர்களில் சிலர் பாண்டியர் அவையில் எவ்வாறு அமைச்சர்களாகப் பணிபுரிந்து பின்னர் ஆளும் உரிமையை அடைந்தார்கள் என்பதைச் சிவபெருமானின் 64 திருவிளை யாடல்களில் ஒன்றான, 'உமை பன்றிக்குப் பால் கொடுத்த படல'த்தோடு தொடர்பு படுத்தி இப்பிரதியில் கூறப்படுகிறது.

இச்செய்தி தமிழிலக்கியமான கல்லாடத்திலும் கூறப் பட்டிருக்கிறது. பன்றிக்குட்டிகள் உமையன்னையின் பாலை உண்டதும் அழகுமிகு மானிட உரு பெற்று மிகுந்த வலிமையுடையவர்களாக விளங்கியதால், இறைவனின் ஆணைக்கிணங்க பாண்டியன் அரசவையில் அமைச்சர்களாக அமர்த்தப் பெற்று அரசனுக்கு நல்ல ஆலோசனைகளை அளித்து வந்தனர் என்று திருவிளையாடற் புராணம் கூறும். பன்றி முகத்தோடு மனித உருவங்களும், பன்றி வடிவில் உமை குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் காட்சியும் சுந்தரர் அவதரித்த தலமான திருநாவலூர்க் கோயிலில் சிற்ப வடிவில் காணப்படுகின்றன. வரலாற்று ரீதியில் பார்க்கையில், சாளுக்கியர்களுக்கு இலச்சினையாக விளங்கியது பன்றியாத லால் அச்சாளுக்கியர்களின் கீழ் சிற்றரசர்களாகத் திகழ்ந்தவர் வன்னியர் என்பதை விளக்குகிறது இப்புராணம் என்றும் சிலர் கருதியிருக்கின்றனர்.

வடகால் ஜமீனின் ஆட்சிப் பகுதி, ராஜாதி ராஜ வளநாடு, வெண்ணெயூர் வழுதலம்பட்டு சாவடிக்குத் தெற்கில கொள்ளிடத்துக்கும் தெற்கு, காவேரிக்கு வடக்கு, உபயகாவேரி மத்தியில் உள்ள சீர்காழிச் சீமையாகும்.

பட்டயத்தின் இறுதிப் பகுதியில் இச்செபபேடு அழகிய சிதம்பர இராவுத்தமிண்ட நயினாரும் மேலும் மூன்று இராவுத்த மிண்ட நயினார்களும் சேர்ந்து எழுதிக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றவர்களது பெயர் (1) சவிதானந்த ராவுத்தமிண்டர், (2) ஸ்வயம்பிரகாச ராவுத்தமிண்டர் (3) பரம்பிரம்ம ராவுத்த மிண்டர் என்று காணப்படுகின்றன. இம்மூவரும் அழகப்ப இராவுத்த மிண்டருக்குச் சகோதரர்களா அல்லது மகன்களா அல்லது சகோதரரும், மகனுமா என்பது பற்றி அறியமுடியவில்லை.

ஆனால் இவர்களது பெயர்களைப் பார்க்குமிடத்தில், சைவ சமயத்திலும, வடமொழியிலும் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் என்பது மட்டும் உணர முடிகிறது.

தஞ்சை மராத்திய மன்னரான பிரதாபச் சிங் காலத்தில (சகம் 1685, கலி 4864, கி.பி. 1763, தமிழ் ஆண்டு பார்த்திப ஆணடு), சாதாதுகான் பருக்கி நவாபின் குத்தகைதாரரான பாளையக் காரர் நல்லப்ப ராவுத்தமிண்ட நயினார் எனபவர் தருமபுர ஆதீன செப்புப் பட்டயத்தில் குறிக்கப் படுகிறார். இவர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் பாளையக்காரராக இருந்திருந்கிறார் என்பது தெரிய வருகிறது.

இப்பாளையக்காரர் மராத்திய மன்னன் எக்கோஜி காலத்திலிருந்த அழகிய சிதம்பர ராவுத்தமிண்ட நயினாரின் பெயரனாகவோ அல்லது மகனாகவோ இருந்திருக்க வேண்டும.

மேற்கூறப்பட்ட ஆதினத்தைச் சேர்ந்த மற்றொரு செபபேட்டிலும் நல்லப்ப ராவுத்த மிண்ட நயினார் பேசபபடுகிறார். இசசெப்பேடு வெளியிடப் பெற்ற காலமும் கி.பி. 1763 ஆகும்.

இவருக்கு அடுத்து முத்துக்குமார ராவுத்தமிண்ட நயினார் பாளையக்காரராக விளங்கியிருக்கிறார் என்பது இம்மடததின் மற்றொரு செப்பேட்டால் விளக்கமாகிறது இச் செப்பேட்டின் காலம் கி.பி. 1770 ஆகும். ஆதலால் நல்லப்ப ராவுத்தமிண்ட

↓

ஸ்வயம் பிரகாச ராவுத்த மிண்டர்

↓

பரப்பிரம்ம ராவுத்த மிண்டர்

↓

நல்லப்ப ராவுத்த மிண்ட நயினார் (கி.பி.1763) தருமபுரம் ஆதீனச் செப்பேடுகள்

↓

(மகன்)

முத்து குமார ராவுத்த மிண்ட நயினார் (கி.பி. 1770)

↓

நடராஜ ராய ராவுத்த மிண்ட நயினார் திருக்கைவளம்

↓

வி.எஸ். செல்வம் ராவுத்த மிண்ட நயினார்
(தம் முன்னோரின் செப்பேட்டைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்குக் கொடையளித்தவர்)

## வன்னியப் பாளையக்காரர் (கடலங்குடி)

*நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் மணல்மேட்டுக்கு அருகில் கடலங்குடி என்னும் சிற்றூர், மணல்மேடு-திருப்பனந்தாள் சாலையில், மணல்மேட்டிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கும் ஒரு வன்னிய ஜமீன் இருந்திருக்கிறது. இச்சமீனைச் சேர்ந்த மூன்று சகோதரிகளை உடையார் பாளையம் ஜமீன் ஸ்ரீ யுவரங்கப்ப உடையார் கி.பி. 1888, கி.பி. 1899 மற்றும் கி.பி. 1904ல் முறையே மணந்தார்.*

*உடையார் பாளையம் ஜமீனுக்குப் பெண் கொடுக்கும் தகுதியில் கடலங்குடி ஜமீன் கி.பி. 19-20ஆம் நூற்றாண்டுகளில் விளங்கியிருக்கிறது. ஆனால் நற்பேறின்மையால் மற்ற பாளையங்களைப் போலவே 20ஆம் நூற்றாண்டில் இதுவும் நலிந்து போயிற்று.*

*1980ஆம் ஆண்டு வாக்கில் இந்நூலாசிரியர் தமது உறவினர் கிராம மணியம் திரு. இரா. கலியமூர்த்தி அவர்களின் ஊரான*

ஆத்தூருக்குச் சென்ற போது, அவருடன் கடலங்குடி அரண்மனைக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டியது.

அப்பொழுது கடலங்குடி பாளையக்காரர் அரண்மனை மிகவும் சிதலமடைந்து காணப்பெற்றது. அரண்மனைப் பல்லக்கு, வாகனங்கள், மற்றும் சிம்மாசனம் ஆகியவை சிதைந்து உபயோகமின்றி ஒரு பகுதியில் குவித்து வைக்கப் பெற்றிருந்தன. பாளையக் காரரின் வெள்ளிச் செங்கோல், வெள்ளிக் கத்தி மேலும் சில வெள்ளிப் பொருட்களைக் காணமுடிந்தது. அங்கு பார்க்கப் பெற்றவை, அரண்மனையைச் சேர்ந்தார் உயிர் வாழ்வதற்காக விற்றுச் சாப்பிட்டு விட்டது போக மீதம் இருந்தவை. அவற்றையும் விற்பதற்கு விலைபேசிக் கொண்டிருப் பதாக அங்கு சந்திக்கப் பெற்ற அச்சமீன் குடும்பத்தாரொருவர் கூறினார். மத்திய அரசு ஜமீன்தார்களுக்கு அளித்து வந்த உதவித் தொகையை நிறுத்திவிட்ட காரணத்தால் அத்தகைய பரிதாப நிலை ஏற்பட்டு விட்டதென உணரமுடிந்தது.

## வன்னியப் பாளையக்காரர் (முகாசாபரூர்)

கதுரைசாமி நாயகர், வன்னிகுலாதிக்கம் என்னும் தம் நூலில், "பாண்டியர் மரபைச் சேர்ந்தவர்கள் நாளதும் சிவகிரி, ஏழாயிரம் பண்ணை, அளகாபுரி ஜமீன்தாரர்களாகவும், சேர அரசர் பரம்பரையார் அரியலூர், ஊத்தங்கால் முதலிய ஸ்தலங்களிலும் , சோழ மன்னர் கால்வழிகள் பித்தர்புரம், நல்ல நாயகபுரம், கடலங்குடி முதலிய பிரதேசங்களிலும், பல்லவர் பார்த்திபர்கள் உடையார்பாளையம், முகாசாபரூர் முதலிய நகரங்களிலும் நாளதும் ஜமீன்தாரர்களாய் வாழ்ந்து வருதல் பிரத்தியட்சம்" என்று எழுதியிருக்கிறார்.[2]

சேலம் ராஜரிஷி அர்த்தநாரீஸ்வர வர்மாவும்,

"பெருமை மிகு பித்தர் புரப் பிரானார் பாரூர்
பிறங்கு கச்சிராயர்"

என்று முகாசாபரூர் ஜமீனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இம்முகாசாபரூர் ஜமீன் கடலூர் மாவட்டம் விருத்தாசலத் துக்கு அருகில் இருந்திருக்கிறது. இப்பாளையக்காரர்கள் தங்கள் பெயரோடு 'கச்சிராயர்' என்னும் அடைமொழியைச் சேர்த்து அழைத்துக் கொண்டிருக்கின்றனர். 'கச்சியரையர்', என்னும் பெயரே கச்சிராயர் என்று குறுகிவிட்டது. அதாவது கச்சியான

காஞ்சியின் காவலர்கள் என்பது அதன் பொருள். அதன் காரணத்தினாலேயே இவர்கள் பல்லவப் பார்த்திபர்கள் என்று வழங்கப் பெற்றிருக்கிறார்கள் போலும்.

வில்லவநல்லூர் அக்நி வம்ஸ க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலயப் பட்டயமும் 'கச்சிராயர் பற்றி' குறிப்பிடுகிறது. இப்பட்டயம் சகம் 1563ல் அதாவது தமிழ் ஆங்கிரஸ ஆண்டில் (கி.பி.1641ல்) எழுதப் பெற்றதாகக் குறிக்கப் பெற்றிருக்கிறது.

வைத்தீஸ்வரன் கோயில் மடத்துச் செப்புப் பட்டயத்தில் 'பருவூர் கச்சிராயனார்' என்று எழுதப் பெற்றிருக்கிறது. இப்பட்டயத்தின் காலம் கி.பி. 1595. ஆதலால் இப்பாளையக் காரர்களும் கி.பி.16-ஆம் நூற்றாண்டிலிருந்தே சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பது தேற்றம்.

## அடிக்குறிப்புகள்

1. இதன் பொருளைக் 'காவிரி, கனவிருது' என்று டாக்டர் கோ. தெய்வநாயகம் கொண்டுள்ளார், தருமை ஆதீனச் செப்பேடுகள், (1988) பக்கம். 58.

2. வன்னிகுலாதிக்கம் (1966) பக்கம் 56.

இயல் — பதினொன்று

# வன்னியப் பாளையக்காரர்

## (வடகால்)

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள வடகாலில் ஒரு வன்னியப் பாளையக்காரர் கி.பி.16–ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்திருக்கிறார் என்பது முன்பே குறிப்பிடப்பட்ட வைத்தீஸ்வரன் கோயில் செப்புப்பட்டயம் மூலம் தெரிய வருகிறது. பாளையக்காரர்களின் பட்டியலைத் தருமிடத்தில் 'இராவுத்தமிண்ட நாயனார்' என்னும் பாளையக்காரரையும் குறிப்பிட்டிருக்கிறது. இப்பாளையக்காரர் வடகாலில் இருந்து சோழநாட்டின் சிறுபகுதியை ஆண்டு வந்தவரேயாவர்.

இப்பாளையக்காரர் பற்றி நாம் விவரமாகத் தெரிந்து கொள்ள உதவுபவை இப்பாளையக்காரர்களால் வெளியிடப் பட்ட நான்கு செப்புப் பட்டயங்களாகும்.

முதல் செப்புப் பட்டயம் தஞ்சாவூரை ஆட்சிபுரிந்து வந்த மராத்திய மன்னர் எக்கோஜிமஹாராஜா புத்ரன் ஸஹஜி மஹாராஜா ஸாகெபு அவர்கள் காலத்தில், அதாவது சாலிவாகன ஆண்டு 1623, கலி ஆண்டு 4802, இவற்றுக்குச் சரியான தமிழ் ஆண்டு விஷு ஆண்டில், அழகப்ப ராவுத்த மிண்ட நயினார் அவர்கள் பெயரனும், ராய ராஜ ஸ்ரீ நல்லப்ப ராவுத்தமிண்ட நயினார் அவர்கள் மகனுமான, ராஜஸ்ரீ அழகிய சிதம்பர ராவுத்த மிண்ட நயினார் அவர்கள் நிலக்கொடை அளித்தது பற்றி தெரிவிக்கும் பட்டயமாகும். இப்பட்டயம் கி.பி. 1701ல் வெளியிடப்பட்டிருக்கிறது.

அழகிய சிதம்பர ராவுத்த மிண்ட நயினார் கி.பி.1701ல் இருந்திருக்கையில் அவரது தந்தையும், பாட்டனாரும் கி.பி.17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், பிற்பகுயிலுமாக முறையே ஆட்சி செய்திருப்பர்.

பாண்டியன் அரசவையில் மந்திரிகளாகப் பணியாற்றி வருகையில், இவர்களிடத்தில் அரசனுக்கு மிகுந்த பாசம் ஏற்பட்டு மதுரைக்குக் கிழக்கில் சிறு பகுதியை இவர்களுக்குப் பாளையப் பட்டாக விட்டுக் கொடுத்து, அங்கு பட்டம் கட்டிக் கொண்டு ஆண்டு அனுபவித்து வரும் நாளையில், ஒரு பாளையக்காரர் பாண்டிய அரசனைப் பார்த்து வருவதற்காக பாண்டியன் அரசவைக்கு வந்து அரசர்க்குச் சமமான ஆசனத்தில் அமர்ந்தபோது, அவரைப் பார்த்து அரசன், தமக்குச் சமமாக ஆசனத்தில் அமர்வது எப்படிச் சரியாகும் என்று வினவவே, அப்பாளையக்காரர் தாங்கள் அக்நி கோத்திரத்தைச் சார்ந்தவர்களாதலால் அந்த பெருமையறிந்து முன்பு இருந்த பாண்டிய மன்னர்கள் தங்களுக்குச் சமமானயிருக்கை கொடுத்தார்கள். அதே போன்று அவர் நாளிலும் மன்னர்க்குச் சமமான இருக்கை தங்களுக்கு அளிக்கப் படுதல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அக்நி கோத்திரத்தால் வந்த மகத்துவம் என்று கூறுவதை மெய்ப்பிக்க வேண்டுமென்று கூறியபடியினால், செப்புக் குதிரை உண்டாக்கி, அக்நி சொரூபமாய், அக்நியில் காய்ச்சி, அந்தக் குதிரைமீதேறி மதுராபுரிப் பட்டணத்தில் மாசி வீதியின் நாலுபக்கமும் நடத்தி, மீனாட்சி சுந்தரேசுவரர் சன்னிதானம் முன்பாக வந்து குதிரையிலிருந்து இறங்கி பாண்டிய மன்னனிடத்தில் வந்தபோது, மன்னன் மிகவும் மகிழ்ச்சியுற்று, அநேகப் பொருட்களைப் பரிசாக அளித்ததோடு மேலும் சில நிலப்பகுதிகளை அப்பாளையக்காரருக்குக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அப்படியிருந்து வரும் நாளையில் அம்பைத் தறைக்குடி ஆண்டு கொண்டார் என்னும் பாளையக்காரர் பட்டமேற்று ஆண்டு வந்தபோது, அவரைப் பாண்டியன் தன் அவைக்கு வரவழைத்து, தென் சீர்மையில் சுண்டனென்றொருவன், சில தீயவர்களைச் சேர்த்துக்கொண்டு அரசுக்குக் கேடு செய்து கொண்டிருக்கிறான். ஆதலால் பாளையக்காரர் அங்கு சென்று அவனை அடக்கி வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதன்படி பாளையக்காரரும் தென்பகுதிக்குச் சென்று அச்சுண்டனென்பானையும், அவனது கூட்டத்தினரையும் அடக்கி வெற்றி பெற்று பாண்டிய அரசனிடம் வந்து விபரம் தெரிவித்தபோது மன்னன் மிகுந்த மகிழ்ச்சியடைந்து பரிசுப்

பொருட்களும், சில விருதுப் பெயர்களும் பாளையக்காரருக்கு வழங்கியதோடு மேலும் சில சீர்மைகளைத் தென் பகுதியில் விட்டுக் கொடுத்து, அங்கிருந்துகொண்டு ஆண்டுவரும்படி அனுப்பி வைத்தார்.

அவ்வாறு தென் சீர்மைக்கு வந்து தீயவர்களை ஒடுக்கிவிட்டு, பாண்டிய மன்னன் விட்டுக் கொடுத்த சீர்மையை வன்னியப் பாளையக்காரர்கள் ஆண்டு வந்தார்கள்.

மும்முடி ஆண்டு கொண்டார்
கவுசிலை ஆண்டு கொண்டார்
விரு(ரி) சடை ஆண்டு கொண்டார்
மதகனிர ராண்டு கொண்டார்
பொன் னாண்டு கொண்டார்
காத்த வ(ா)ண்டு கொண்டார்
சின்னப் பிள்ளை ஆண்டு கொண்டார்
பொன்னின் குடுக்கைத்தலை ஆண்டுக் கொண்டார்.
சகத்துரை ஆண்டு கொண்டார்.

ஆகியோர் அடுத்தடுத்து ஆண்டு வந்தனர்.

சகத்துரை ஆண்டு கொண்டார் நாளையில் தென்காசியில் அரசாட்சி செய்துவந்த ராமவர்ம குலசேகர பாண்டிய ராசாவுக்குத் தம் தாயாதிக்காரர் செய்த இடையூறினால் ஆபத்து ஏற்பட்டபோது, பாண்டிய அரசர், சகத்துரை ஆண்டுக் கொண்டாரை வரவழைத்து அந்த ஆபத்தை முறியடிக்க வேண்டுமென்று சொன்ன போது, அவ்வாறே சகத்துரை ஆண்டுக் கொண்டார் அவ்வாபத்தை வெற்றி கொண்டதன் காரணத்தால், ராமவர்ம குலசேகர பாண்டியருக்குச் சகத்துரை ஆண்டு கொண்டார் மீது மிகவும் பாசம் உண்டாகி 'ராமவர்ம குல சேகர ஆண்டு கொண்டாரென்று' பட்டமளித்து தென்காசி மூப்புக்கூறும் விட்டுக் கொடுத்து, நான்கெல்லையிலும் மேலும் சீர்மையையும் விட்டுக் கொடுத்து ஆண்டு அனுபவித்து வரும் படி ஆணையிட்டு அனுப்பிவைத்தார்.

பிறகு தென்னம்பை ஆண்டுகொண்டார் நாளையில், ராயர் பிரதிநிதியாகக் கொட்டியம் நாகம நாயக்கரவர்களின் குமாரர் விசுவநாத நாயக்கரவர்கள் பாண்டி நாட்டுக் கதிபதியாகி பாண்டி நாட்டை ஆண்டு வந்தபோது, மதுரையைச்

சுற்றி எழுபத்திரண்டு கொத்தளத்துடன் கோட்டையை எழுப்பினார். ஒவ்வொரு கொத்தளத்தையும் தன் பாளையக் காரர்களில் ஒருவர் காத்து வரும்படி ஏற்பாடு செய்தார். அப்பொழுது இவ்வன்னியப் பாளையக்காரர் அக் கோட்டையின் தெற்குப் பக்கத்தில் இருந்த கொத்தளம் ஒன்றைக் காத்து வந்தார். அந்த சமயம் திசைகாவல் விட்டுக் கொடுக்கிற வேளை வரவே தென்னம்பை பாளையக்காரரையும் அழைத்து திசை காவல் பூமியும் விட்டுக் கொடுத்து வெகுமதியும் செய்து அனுப்பி வைத்தார். பாளையக்காரர் மீண்டும் தன் பாளையத்துக்கு வந்து ஆட்சி செய்தார்.

தென்னம்பை ஆண்டு கொண்டாருக்குப் பிறகு,

குமாரசுவாமி ஆண்டு கொண்டார்

நள்ளி யாண்டு கொண்டார்

அளகப்ப ஆண்டு கொண்டார்

திருமலை ஆண்டு கொண்டார்

வடமலை யாண்டு கொண்டார்

சிதம்பரம் ஆண்டு கொண்டார்

சிவனுத்தம்பி ஆண்டு கொண்டார்

சிவனணைஞ்சு ஆண்டு கொண்டார்

ஆகியோர் அடுத்தடுத்து ஆண்டு வந்தனர். இவர்கள் கர்நாடக அரசுக்குக் காணிக்கைப் பணம் செலுத்திக் கொண்டு அரசாட்சி செய்தனர். அதற்குப் பிறகு,

அன்னதானச் சிதம்பர ஆண்டு கொண்டார்

முத்துசுவாமி ஆண்டு கொண்டார்

குலசேகர ஆண்டு கொண்டார்

ஆகியோர் நாள்வரையில் திவானுக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் விதித்த காணிக்கைப் பணத்தைச் செலுத்திக் கொண்டு, தங்களது சீர்மையையும், காவல் பூமியையும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு வந்தனர்.

அவ்வாறு ஆண்டு வருகிறபோது, அதுவரை இப்பாளையக் காரரைக் கும்பிட்டுக் கைகட்டிக் கொண்டு நின்றிருந்த பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மு நாயக்கர், கும்பிடும் பழக்கத்தை நிறுத்தித் தமக்குப் பாளையக்காரரோடு சமமாக

அமர அனுமதி வழங்கவேண்டு மென்று ஆள் அனுப்பிப் பேசிவரும் படி செய்தார். அதற்கு இப்பாளையக்காரர் சம்மதிக்க மறுத்ததால், கட்டபொம்மு நாயக்கர் இம்மரியாதையை வலுக்கட்டாயமாகப் பெறக்கருதி, அப்போது தெற்குச் சீமைக்கு வந்திருந்த பாருகானிடம் சிறிது பணம் கையூட்டாகக் கொடுத்து, தாம் ஏழாயிரம் பண்ணை பாளையத்தில் சில பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளப் போவதாகவும், அது குறித்து அப்பாளையத்தார் முறையிட்டால், பாருகான் கண்டு கொள்ளாமல் இருந்துவிட வேண்டுமென்றும் கேட்டுத் தமக்குப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டு, தம் சேனையுடன் வந்து ஏழாயிரம் பண்ணை பாளையத்தைச் சேர்ந்த சில கிராமங்களில் கொள்ளையிட்டு, மக்களைக் குத்தி, வெட்டி அனேக உயிர்களை வதை செய்து விட்டுப் போய் விட்டார். இது குறித்துத் திவான் சமூகத்துக்குத் தெரிவித்த போது, யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிறகு முத்துசுவாமி ஆண்டு கொண்டார் ஆட்சிக் காலத்திலும் கும்பினியாரே தங்கள் தெய்வம் என்று கருதி அவர்களது ஆணைக்கிணங்க, நிர்ணயித்தத் தொகையைக் காணிக்கையாகச் செலுத்திக் கொண்டு வந்தார்.

அப்போது சிவகிரி பாளையக்காரருக்கும் அவர் குமாரருக்கும் தகராறு ஏற்பட்டு, பாளையக்காரர் குமாரனும் அவர் மைத்துனன் கறுப்பு வன்னியனும் விலகி வந்தபோது, கறுப்பு வன்னியன் மட்டும் தம் மனைவியோடு வந்து ஏழாயிரம் பண்ணை பாளையத்தில் தங்கியிருந்தார்.

ஒருநாள் தம் மனைவியை மட்டும் விட்டு விட்டு பக்கத்தில் ஓரிடம் சென்று வருகிறேன் என்று கூறிச் சென்ற கறுப்பு வன்னியன், பாஞ்சாலங் குறிச்சிக்குச் சென்று, அங்கு யாதோ இரகசியமாய்ப் பேசி முடிவெடுத்துக் கொண்டு, அங்கிருந்து கட்டபொம்மு சேனைகளைக் கூட்டிக் கொண்டு ஏழாயிரம் பண்ணை பாளையத்தின் பக்கவழியாகச் சிவகிரிக்குப் போகிறவன் எளையரசனேந்தலில் இருந்து கொண்டு ஏழாயிரம் பண்ணைக்குத் தூது அனுப்பினான்.

அவனுக்குத் துணையாக ஏழாயிரம்பண்ணை சேனை அனுப்ப வில்லையென்றால், ஏழாயிரம் பண்ணையைச் சார்ந்த சில ஊர்களைக் கொள்ளையிட்டு விடுவோம் என்று பயமுறுத்தி விட்டு, ஏழாயிரம் பண்ணை பாளைத்தின் அம்மையா

பட்டியைக் கொள்ளையிட்டான். அக்கிராமத்தைக் கொள்ளை யடிக்கவிடாமல் பாதுகாப்பதற்காக ஏழாயிரம் பண்ணையி லிருந்து படை அனுப்பப் பெற்றது. மற்றபடி அவனுடன் சேர்ந்து சிவகிரி பாளையத்தோடு போரிட படை அனுப்பப் படவில்லை. இருப்பினும் கும்பினியார் ஏழாயிரம் பண்ணையின் பூமிகளைச் சப்தி செய்து ஏலம் போட்டு விற்று விட்டனர். மேலும் முத்துசாமி ஆண்டுக் கொண்டாரைக் கைது செய்து சென்னைப் பட்டணத்துக்குக் கொண்டு சென்று சில காலம் வைத்திருந்து, பின்னர் தீவாந்திரத்துக்கு (அந்தமானுக்கு?) அனுப்பி வைத்தார்கள்.

தாங்கள் எந்த விதத் தவறும் செய்யாத காரணத்தால் தம் தமையனான முத்துசாமி ஆண்டு கொண்டாரை விடுவிப்ப தோடு, தங்கள் சீமையையும் தங்களுக்கு மீண்டும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று விண்ணப்பித்து முத்துசாமி ஆண்டு கொண்டாரின் தம்பி சிதம்பர வன்னியன் கும்பெனியாருக்கு எழுதிய கடிதமே இக்கைபீதாகும்.[2]

## அடிக்குறிப்புகள்

1. ஞானப்பிரகாசர், யாழ்ப்பாண வைபவ மாலை, (அச்சுவேலி 1928), பக்கம். 41.

2. க. குழந்தைவேலன், பதிப்பாசிரியர், பாளையப் பட்டுக்களின் வரலாறு, தொகுதி (III), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, (1981), பக்கங்கள். 88–93..

இயல் – பதின்மூன்று

# வன்னியப் பாளையக்காரர்

## (அளகாபுரி)

அளகாபுரி ஜமீன் பற்றி, 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த சிதம்பரம் ரெட்டைக் குடையார் மகன் கட்டாரி ரெட்டைக் குடையார் கூறிய விபரம் 'அளகாபுரி சமீந்தார் பூறுவோத்திரம் கைபீது' என்ற பெயரில் கையெழுத்துப் பிரதியாக சென்னை அரசினர் ஓலைச் சுவடிகள் நூலகத்தில், இருந்ததைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 'பாளையப்பட்டுக்களின் வரலாறு, தொகுதி IIIல் சேர்த்து நூலாக வெளியிட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ள விபரமே இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.[1]

துவாபர யுகத்தில் அளகாபுரி ஜமீன் வன்னியரைச் சேர்ந்த முன்னோர், ரிஷி சாபத்தினால் பன்றி வயிற்றில் பிறந்து, மீனாட்சியம்மனின் திருமுலைப் பாலை உண்டு, அந்தப் பன்றி உரு நீங்கி மானிட உரு பெற்றார்கள். இவர்கள் தெய்வ கடாட்சம் பெற்றவர்கள் என்பதையறிந்த பாண்டிய அரசர்கள் அவர்களைப் பாராட்டி, அவர்களுக்குச் சிறு சீமையை விட்டுக் கொடுத்து ஆண்டு வரும்படி செய்தார்கள்.

அவ்வாறு ஆண்டுவருங் காலத்தில், அவர்கள் வம்சத்தில் வரகுண ராமனென்றொருவர் ஆண்டு வரும் நாளையில், மதுரையிலிருந்த பாண்டிய அரசர்கள் தேசாந்திரம் சென்று கொண்டிருக்கையில் ஒரு இடுக்கண் ஏற்பட, அவ்விடுக்கணை வரகுணராமன் போக்கிய காரணத்தால் அவருக்குப் பாண்டியன், 'சயதுங்க வரகுணராம பாண்டிய வன்னிய னென்று' விருதுப்பெயர் சூட்டி, திருப்பூவணத்தில் சீர்மையும் காவலும் விட்டுக் கொடுத்து ஆண்டு வரும்படி ஆணைப் பிறப்பித்தார்.

பிறகு வரகுணராமரை அழைத்து, தம்முடைய தந்தைக்கும் பாட்டனாருக்கும் போர் ஏற்பட்ட போது தம் தந்தையின் பக்கம்

வரகுணராமரின் பெரியவர்கள் (தந்தையாக இருக்கலாம்) இருந்து அப்போரில் தம் தந்தையாருக்கு வெற்றி பெற்றுத் தந்தனர். அது முதல் தங்கள் சமஸ்தானத்துக்கு மிகவும் நெருக்கம் ஆகிவிட்டதால், வரகுணராமருக்குச் சில பூமி விட்டுக் கொடுப்பதாகக் கூறி, மீனக்கொடி விருதும் சிங்கமுகத் தண்டியும் கொடுத்து, திருப் பூவணம் சீமையையும் அவருக்கே சொந்தமாக விட்டுக் கொடுத்து, பிறமலைக் காவலும் விட்டுக் கொடுத்து, வஸ்திர பூஷணங்களும் கொடுத்து திருப்பூவணத்துக்கு அனுப்பி வைத்தார்.

திருப்பூவணத்தில் வரகுணராமர் ஆட்சி செய்து கொண்டிருக்கையில், பாண்டிய மன்னன் திருப்பூவணம் கோயிலுக்கு வருகிற செய்தி அறிந்து, வழிகளை நன்கு செப்பனிட்டு, வழி நெடுகிலும் மகரத் தோரணங்கள் கட்டி வைத்ததோடு, பொன்னால் சன்னச் சம்பா நெற்குலை போன்று முடி தயாரித்து, பாண்டிய மன்னன் வந்தபோது அவரது பாதமலர்களின் முன்பாக வைத்தார்.

அதனைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியுற்ற பாண்டியர், அம்முடியை எடுத்து சயதுங்க வரகுணராம பாண்டிய வன்னியனார் சிரசில் தரித்து, “நெல்முடி கொண்டானென்று' பெயரும் அளித்து பாராட்டிவிட்டு, கோயில் தெரிசனம் செய்துவிட்டு மீண்டும் அரசர் மதுரை போய்ச் சேர்ந்தார். சயதுங்க வரகுணராமப் பாண்டிய வன்னியனாரும் பாண்டிய அரசுக்குக் கட்டுப்பட்டவராய் இருந்து அமைதியாக ஆட்சி நடத்தி வந்தார்.

அவருக்குப் பிறகு அவரது மகன்

புராதக (பராந்தக) வன்னியனார்

புனிதமாற்கண்ட வன்னியனார்

குமார வன்னியனார்

புத்திர சம்பத்து வன்னியனார்

ஆகியோர் அடுத்தடுத்து ஆட்சி புரிந்தனர்.

புத்திர சம்பத்து வன்னியனாரைப் பாண்டிய அரசர் மதுரைக்கழைத்து, சோழ அரசருக்கும் தமக்கும் பகை ஏற்பட்டு, சோழ அரசர் போருக்கு வந்து கொண்டிருக்கிற காரணத்தால், புத்திர சம்பத்து வன்னியனார் தம் சேனையுடன் சென்று எதிர்த்துப் போரிட வேண்டுமென்று ஆணை வழங்கியதின்

பேரில், புத்திர சம்பத்து வன்னியனார் தம் சேனையுடன் சென்று சோழர் படையை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற்று, அச்செய்தியைப் பாண்டிய மன்னரிடம் தெரிவித்தார். அரசன் மிகவும் மகிழ்ச்சியடைந்து, கன்னடி காத்தாநாடு நூற்றியெட்டு கிராமம் காவல் கிராமமாகக் கொடுத்து, மேலும் பல வெகுமதிகளையும் அளித்து அனுப்பி வைத்தார்.

அவருக்குப் பிறகு சத்துரு சங்கார (ஸத்ரு சம்ஹார) வன்னியனார் பட்டம் ஏற்று ஆண்டு வருகையில், மதுரைப் பாண்டிய மன்னன் தயிரிய வர்மப் பாண்டியர் சத்துரு சங்கார வன்னியனாரை அழைத்து, 'உங்களுக்கு சரியிருப்பும், பொன்முடியும் யார் கொடுத்தார்கள்' என்று வினவினார். அப்பொழுது பாண்டியன் அவையிலிருந்த அமைச்சர்கள், 'இவர்கள் முன்னோர் மீனாட்சி சுந்தரேசுரர் கிருபாகடாக்ஷம் பெற்றவர்கள் என்பதாலும், முன்பிருந்த பாண்டிய மன்னர்களுக்குப் பல உதவிகள் புரிந்ததாலும் பொன்முடியும், சமமான இருப்பும், மரியாதையும் பெற்றார்கள் என்று கூறினார்கள். அதை ஏற்றுக் கொள்வதென்றால் தற்போது நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று அரசர் மறுமொழி யளித்தார்.

ஆதலால் மனச்சஞ்சலத்தில் இருந்த சத்துரு சங்கார வன்னியனாரின் கனவில் மீனாட்சியம்மை ஐந்து வயதுப் பிராமணப் பெண்போல் வந்து, 'அஞ்சாமல் அக்னிக் குதிரையேறு. நீ வெற்றியடைவாய்' என்று கூறி மறைந்தார்.

அடுத்த நாள் சத்துரு சங்கார வன்னியனார் பழுக்கக் காச்சிய செப்புக் குதிரை மேல் ஏறியதும், குதிரை உயிர் பெற்று ஓடி கோயில் மூன்று பிரகாரத்தையும் சுற்றி வந்து நின்றது. சத்துரு சங்கார வன்னியனார் குதிரை விட்டிறங்கி, பாண்டிய அரசன் முன் வந்து நின்றார். தயிரிய வர்மப் பாண்டியராசா மிகுந்த மகிழ்ச்சியுற்று, சத்துரு சங்கார வன்னியனாருக்குச் சிங்கக் கொடியும் அனுமக் கொடியும் கொடுத்து, அனேக வஸ்திராபரண அலங்காரங்களும் செய்து, ரத்தின கடகமும் அணிவித்து, மதுராபுரிக்குத் தென்கிழக்கில் இராமேஸ்வரம் செல்லும் வழியில் ஆணையூர், ஆப்பனூர், பசுமையூர், மங்கையூர், இளசையூர், அப்பையூர் ஆக இந்த ஆறு ஊர்களிலும் ஆறு கோட்டை அமைத்துக் கொள்ளச் சொல்லி, "ஆறுகோட்டை வன்னியனார்" என்று விருதும் அளித்து

ரெட்டைக் குடையும் கொடுத்து அவருடைய சமஸ்தானத்துக்கு அனுப்பி வைத்தார். அதன் பிரகாரம் ஆறுகோட்டைகளைக் கட்டிக் கொண்டு மகிழ்ச்சியாக ஆண்டு வந்தார் சத்துரு சங்கார வன்னியனார்.

இவருக்குப் பிறகு தாஷடீக சவுந்திரபாண்டிய வன்னியனார் பட்டத்துக்கு வந்தார். இவருக்கு ஆறு பிள்ளைகள்.

ஆணையூரில் ஒரு பிள்ளையும்

ஆப்பனூரில் ஒரு பிள்ளையும்

பசுமையூரில் ஒரு பிள்ளையும்

மங்கையூரில் ஒரு பிள்ளையும்

இளசையூரில் ஒரு பிள்ளையும்

அம்பையூரில் ஒரு பிள்ளையும்

ஆக ஆறு பிள்ளைகளையும் ஆறு கோட்டையில் இருந்து ஆண்டு வரும்படி செய்துவிட்டு, தாஷடீக சவுந்திர பாண்டிய வன்னியனார் திருப்பூவணத்திலிருந்து ஆண்டு வந்தார்.

அந்நாளில் பாண்டிய அரசர் தாஷடீக சவுந்திர பாண்டிய வன்னியனாரை அழைத்து, தென் சீமையில், சுண்டன் என்றொருவன், சிறு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு தொல்லைகள் தந்து கொண்டிருக்கிறான். அவனை வன்னியனாரும் அவரது பிள்ளைகளும் அங்கு சென்று ஒடுக்கி வரவேண்டும் என்று ஆணையிட்டார். அதன் பிரகாரம் தென் சீமை சென்று சுண்டனை ஒடுக்கிவிட்டு நாட்டில் எந்தவித சச்சரவும் இல்லாமல் செய்துவிட்டு மதுரைக்குத் திரும்பி அரசனைப் பார்த்து நடந்த விபரத்தைக் கூறினார். மன்னர் மகிழ்ந்து தாஷடீக சவுந்திர பாண்டிய வன்னியரின் பராக்கிரமத்தை மெச்சி, தென் சீமைக்கே சென்று ஆட்சி செய்யுங்கள் என்று கூறி பல விருதுகளையும் வெகுமதிகளையும் அளித்துப் பட்டமுங் கட்டி அனுப்பினார்.

தாஷடீக சவுந்திர பாண்டியனார், பாண்டிய மன்னர் தென்சீமையில் அளித்த சீமையில், தம்பிள்ளைகளில்

ஒருவரை அவனியங்கோன் ஏந்தலிலும்

ஒருவரை அச்சந்த விளத்தானிலும்

ஒருவரை புத்தூரிலும்

ஒருவரை தென்மலையிலும்

ஒருவரை திருவேங்கிடத்திலும்

அமர்த்தி ஆண்டு வரும்படி செய்தார்.

முன்னாளில் வரகுணராம ரெட்டைக்குடையார் செவ்வல்குளத்தில் ஆண்டு கொண்டிருக்கையில், தென்காசியில் இருந்த அளகம் பெருமாள் ராசாவினிடத்தில் மிகவும் அன்பாகப் பழகி பல உதவிகளையும் புரிந்து வந்தார். ஆதலால் அவ்வரசர் "அளகம் பெருமாள் வன்னியராயன் ரெட்டைக் குடையரென்று" விருதும் கொடுத்தார்.

ஒரு சமயம் தென்காசி அளகம் பெருமாள் ராசாவுடன் மதுரைக்குச் சென்றிருந்தபோது கள்ள நாட்டுப் போர் ஏற்பட்டது. அப்போரில் வரகுணராம வன்னியனார் தலைமை ஏற்று அந்தக் கள்ள நாட்டுக்கெல்லாம் தலைவனான 'காலாள்க்கள் நாயன்', 'மேலாள்க்கள் தோழன்'[2] என்ற பெயருடைய கள்ளனுடன் போர் புரிந்து, வெற்றி கண்டு அந்தக் கள்ளனைச் சிறை பிடித்து வந்தார்.

மன்னர் அக்கள்ளனைச் சிரச்சேதம் செய்யும்படி ஆணையிட்டுவிட்டு, வன்னியனாரைப் பார்த்து அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டபோது, கள்ளனுக்குச் சிரச்சேதம் யாதும் இல்லாமல் அவனை மன்னித்து விட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதன் பிரகாரம் மன்னர் கள்ளனை விடுவித்ததால், கள்ளர் இன மக்கள் அனைவரும் ஒன்று கூடி, அரசர் முன்னிலையில் "தங்களது தாலிக்கு வேலியிட்ட ரெட்டைக் குடையாரென்று" பெயரிட்டழைத்தார்கள்.

அவ்வாறிருக்கும் நாளில், ஒரு சமயம் சாளுவ தேசத்து அரசர் மதுரைக்கு வந்திருந்தார். அப்போது "வரகுணராம ரெட்டைக் குடை அளகம் பெருமாள் தாலிக்குவேலி வன்னியராயனென்று" விருது கட்டியம் கூறி வருவதைக் கேள்வியுற்றதும், இந்த விருது கட்டியம் கொடுத்தது யார் என்று கேட்டதால் போர் எழுந்து வன்னியனார் வெற்றி பெற்றதால், "சாளுவக் கட்டாரி" என்ற விருதையும் கொடுத்தார்கள். அதன் பிறகு தென்காசியரசர் மதுரையை விட்டுத் தென்காசிக்குத் திரும்பி வருகையில் வரகுணராம வன்னியனாரைச் செவ்வல் குளத்துக்கு அனுப்பி வைத்தார்.

அவரும் செவ்வல் குளத்துக்கு வந்து சிறிது காலம் ஆண்டு வந்தார். அவருக்குப் பிறகு,

கறுத்தத் தம்பி ரெட்டைக் குடையார்.

கறுத்தான் ரெட்டைக்குடையார் சீமை ஆண்டார்

அவர் மகன் சிதம்பரம் ரெட்டைக்குடை வன்னியனார்

ஆகியோர் அடுத்தடுத்து ஆண்டு வந்தனர். சிதம்பரம் ரெட்டைக்குடை வன்னியனார் ஒரு நாள் தென்காசி பாண்டிய அரசரைக் காணக் காத்திருந்தபோது, ஒரு யானை மதம் பிடித்து அங்குமிங்கும் ஓடியது. பலரும் அதனையடக்க முயற்சித்து பயனளக்கவில்லை. சிதம்பரம் ரெட்டைக் குடை வன்னியனார் சென்று அந்த யானையை அடக்கி வெட்டிச் சாய்த்ததனால் "ஆனை வெட்டிச் சிதம்பர ரெட்டைக் குடையா ரென்று" மன்னன் பெயர் கொடுத்தான். பிறகு தம் பாளையம் சென்று இனிது ஆண்டு வந்தார்.

பிறகு விசயநகர அரசர் சமஸ்தானத்திலிருந்து கொட்டியம் நாகம நாயக்கர் குமாரர் விசுவநாத நாயக்கர் பாண்டிய தேசத்துக்கு அதிபதியான பொழுது, மதுரையில் 72 கொத்தளத்தையும் இன்னார் இன்னார் காத்து வருதல் வேண்டும் என்று ஆணையிட்டு திசைக் காவலும் விட்டுக் கொடுத்தார். அவ்வாறு செய்தபோது 'ஆனை வெட்டிச் சிதம்பர ரெட்டைக்குடை வன்னியனார்' மகன் கந்தசாமி ரெட்டைக் குடையாரை மதுரைக்கு வரவழைத்து திசைக் காவலும் விட்டுக் கொடுத்து, மதுரைக் கோட்டை திருமஞ்சன வாசலுக்குக் கிழக்கு முதல் பிரதட்சணமாகத் (தென் திசையாகச் சுற்றி வருகையில்) 25-ஆம் கொத்தளத்தைக் காத்து வரும்படி ஆணையிட்டமைக் கேற்ப கந்தசாமி ரெட்டைக்குடையார் தம் சேனையைக் கொண்டு காத்து வந்தார்.

கந்தசாமி ரெட்டைக் குடையாரை அடுத்து குமாரசாமி ரெட்டைக்குடையார்

சிதம்பர தாண்டவ ரெட்டைக் குடையார்

வீரமார ரெட்டைக் குடையார்

குமாரசுவாமி ரெட்டைக் குடையார் ஆகியோரும் மேற் கூறப்பட்ட கொத்தளத்தைத் தம் ஆட்சிக் காலங்களில் காத்து வந்ததோடு தம் சீமையையும் ஆண்டு வந்தனர்.

அதற்குப் பிறகு ரெட்டைக் குடை ரெட்டைக் குடையார் காலத்தில் மதுரையை ஆட்சி செய்துவந்த ஸ்ரீ ரெங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் செவ்வல்குளம் கோட்டையை

அக்கிரகாரமாக மாற்றுவித்து, அதன் வடபகுதியில் அளகாபுரி என்று ஊர் ஏற்படுத்தி, அந்த ஊர்களையும் காத்துத் திசைகாவல் அனுபவிக்குமாறு ரெட்டைக்குடை ரெட்டைக் குடையாருக்கு உத்திரவிட்டார். இந்த ரெட்டைக் குடை ரெட்டைக்குடையார் 60 ஆண்டுகள் வாழ்ந்தார்.

அவர் மகன் ஆண்டி ரெட்டைக் குடையார் 47 ஆண்டுகள் வாழ்ந்தார். இவருக்குப் பிறகு தவசி ஆண்டி ரெட்டைக் குடையார் 22 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

அவருக்குப் பிறகு சிதம்பர ரெட்டைக் குயைார் 65 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவரது மகன் கட்டாரி ரெட்டைக் குடையார் கும்பினியார்களுக்கு அடங்கித் தம் ஆட்சியைச் செலுத்தி வந்தார். அவரது காலத்தில்தான் இக்கைபீது எழுதப் பெற்றிருக்கிறது. கைபீதின் இறுதியில் 'இந்தப் படிக்கி அளகாபுரி ஜமீன்தார் ரெட்டைக் குடை வன்னியன்' என்று கையொப்பம் இடப்பட்டிருக்கிறது.

## அடிக்குறிப்புகள்

1. க. குழந்தைவேலன், பதிப்பாசிரியர், பாளையப் பட்டுக்களின் வரலாறு தொகுதி (III), (1981) பக்கங்கள் 136-142
2. மேற்கூறப் பெற்ற பதிப்பில், 'காலாளக்கள நாயன் மேலாளக் கன் தோழன்' என்று காணப்படுகிறது.

இயல் – பதினான்கு

# வன்னியப் பாளையக்காரர்

## (சிவகிரி)

தமிழகத்தின் தென் பகுதியில் தற்போதுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரி என்ற இடத்தில் ஒரு வன்னியர் ஜமீன் இருந்ததுபற்றி தமிழ்ச் சிற்றிலக்கியங்களிலும், அளகாபுரி ஜமீன் கைபீதிலும் பேசப்படுகிறது.

சிவகிரியில் ஆட்சி புரிந்த வன்னியர் 'வரகுணராம பாண்டிய வன்னியன்' என்று குறிக்கப்படுகிறார். இவ்வரசர் காலத்தில் வாழ்ந்த கடிகைமுத்துப் புலவர் என்பார் அம்மன்னன் மீது 'திக்விசய விலாசம்' என்னும் நூலை இயற்றியிருக்கிறார். அதில் இம் மன்னர்,

'சிங்கம் வரகுண பாண்டிய வன்னியன்' என்று குறிக்கப்பட்டுள்ளார்.

அப்புலவராலேயே இப்பாண்டிய வன்னியனைப் பற்றி பாடப் பெற்ற தனிப்பாடல்கள் இரண்டும் தெரிய வந்திருக்கின்றன. வன்னியர் குறித்து கிடைக்கும் சான்றுகள் என்னும் பகுதியில் அவ்விரண்டு பாடல்களும் தரப்பட்டுள்ளன. அதில் இம்மன்னர் 'வரகுண ராமேந்திரன்' என்றழைக்கப் பட்டிருக்கிறார்.

புகழேந்திப் புலவரால் பாடப்பெற்ற 'சிவகிரி காதல்' என்னும் நூலில்,

**'வன்னிய குலராச வரகுண பாண்டியன்'**

என்று சிவகிரியை ஆட்சி செய்த வன்னிய மன்னர் பாராட்டப் பட்டுள்ளார். மேலும் அப்புலவரே,

**'வேந்தன் வரகுணராம பாண்டிய<br>வன்னியனுக்கே விசயம் சொன்னேன்'**

என்று அம்மன்னன் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைய வாழ்த்திப் பாடியிருக்கிறார்.

மேற்காணும் இரு நூல்களும் இந்நூலாசிரியருக்குக் கிடைக்கப் பெறவில்லை. கிடைத்திருப்பின் மேலும் பல செய்தி களைத் தந்திருக்க முடியும்.

ஏழாயிரம் பண்ணை ஜமீன் கைபீதில் சிவகிரி வன்னிய பாளையக்காரர் பற்றி ஓரிடத்தில் குறிக்கப்படுகிறது.

ஏழாயிரம் பண்ணை ஜமீனில் முத்துசுவாமி ஆண்டு கொண்டார் ஆட்சி செய்து வருகையில், சிவகிரி பாளையக்காரருக்கும் அவரது மகனுக்கும் தகராறு ஏற்பட்டு, ஏழாயிரம் பண்ணையில் சிவகிரி ஜமீன்தார் மகனும் அவரது மைத்துனர் கறுப்பு வன்னியனும் அடைக்கலம் பெற்றிருந்தனர் என்ற விபரம் மேற்காணும் கைபீதில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சி மேற்படி ஜமீன்கள் கும்பெனியாருக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்து வந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சியாகத் தெரிகிறது.

## இயல் – பதினைந்து

# வன்னியர் காந்தவராயர் சிற்றரசு

## (திருவிடைச்சுரம்)

தற்போதுள்ள காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டி லிருந்து கிழக்கே செங்கற்பட்டு-திருப்போரூர் சாலையில் வல்லத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் 'திருவடி சூலம்' என்னும் சிற்றூர் அமைந்தள்ளது. இவ்வூரின் பழைய பெயர் 'திருவிடைச்சுரம்' ஆகும்.

இவ்வூர் இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிவத்தலங்களுள் ஒன்றாகச் சிறந்து விளங்கியிருக்கிறது. தொண்டை நாட்டுப் பயணம் மேற்கொண்ட சமயக் குரவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் இவ்வூர் இறைவனைத் தம் தேவாரத் திருப்பாடல்களால் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இவ்வூர் சிவன்கோயிலில் உள்ள இறைவனைத் 'திருவிடைச்சுரம் உடையார்' என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. தற்பொழுது 'ஞான புரீஸ்வரர்' என்று அழைக்கப்படுகிறார். இறைவி 'கோவர்த்தனாம்பிகை' என்று வழங்கப்படுகிறார்.

இக்கோயிலிலிருந்து பதின்மூன்று கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் மிகவும் பழமை யானது முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070–1120) காலத்திய தாகும். சோழர், காடவராயர், தெலுங்குச் சோழர், விசய நகர அரசர் ஆகியோர் காலத்தியக் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆதலால் இப்பகுதி மேற்காணும் மன்னர்களின் ஆட்சிப் பகுதியாக அவர்களது காலத்தில் விளங்கியிருந்திருக்கிறது.

விசய நகர வேந்தன் கிருஷ்ணதேவராயர் காலத்தில் அதாவது கி.பி.16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவிடைச்

சுரத்தைக் 'காந்தவராயன்' என்னும் சிற்றரசன் ஆண்டு வந்திருக்கிறான் என்பது மெக்கன்சியின் குறிப்பினாலும்[1], நாடகம்[2] இலக்கியம்[3] ஆகியவற்றாலும், கல்வெட்டுச்[4] சான்றாலும் புலனாகிறது. இச்சிற்றரசனுக்குச் சேந்தவராயன் என்றொரு இளவல் இருந்திருக்கிறார். இவர்கள் இருவரும் பாஞ்சாலங் குறிச்சி வீர பாண்டிய கட்ட பொம்மு, அவர் இளவல் ஊமைத்துரை போன்றும், சிவகங்கை பெரியமருது மற்றும் அவரது தம்பி சிறிய மருது போன்றும், இணைபிரியா உடன் பிறப்பாளர்களாக விளங்கி, தங்கள் ஆட்சிப் பகுதியான திருவிடைச்சுரப் பகுதியைச் சிறப்பாக ஆண்டு வந்திருக்கின்றனர்.

தொடக்கத்தில் இவர்கள் விசயநகர சாம்ராஜ்யத்துக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்து கொண்டு உரிய காணிக்கையைச் செலுத்தி வந்தனர். பிறகு விசய நகர அரசுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்த மறுத்திருக்கின்றனர்.

இதனைக் கேள்வியுற்ற விஜயநகர வேந்தன் கிருஷ்ண தேவராயர் அடங்காச் சினம் கொண்டு தம் படைவீரருள் ஒருவரான இராமராயரை அனுப்பிக் காந்தவராயர், சேந்தவராயர்களை வென்று கப்பம் பெற்று வருமாறு ஆணை பிறப்பித்திருக்கிறார்.

இராமராயர் திருவிடைச்சுரம் அடைந்து காந்தவராயன் கோட்டையைக் கண்டு கீழ்வருமாறு கூறியதாகக் 'கிருஷ்ண தேவராயன் சேந்தவராயன் சண்டை' என்னும் ஒரு நாடக நூலில் காணப்படுகிறது.

"வாருங்கள் மந்திரிமார்களே! நாம் இப்போது திருவிடைச் சூரிலே வந்து காந்தவராயன், சேந்தவராயன் வாழும்படியான கோட்டையைக் கண்டோம். இக்கோட்டைக்கு உள்ளே போக வழிவாசல் ஒன்றும் தெரியவில்லை. அது தவிரவும் இக்கோட்டையைச் சுற்றி அகழி இருக்கிறது. இந்த அகழியைக் கணக்கிட்டுப் பார்த்தால் தெற்கு வடக்கில் சுமார் 1149 அடி நீளமும், கிழக்கு மேற்கில் சுமார் 2000 அடியும், இதன் ஆழமோ 50 அடியும் இருக்கும்போல் இருக்கிறது. இந்த அகழியோ கோட்டையைச் சுற்றி நாற்புறமும் சூழ்ந்திருக்கிறது. இதற்கப்பால் கோட்டை மதில் இருக்கிறது. அதற்கப்புறம் கோட்டை இருக்கிறது. இவ்வளவு காபந்தில் இருக்கும் கோட்டைக்குள் நாம்

எப்படிச் செல்ல முடியும்? இது முடியாத காரியமாகத் தெரிகிறது.'

இராமராயரால் அவர்களை வெல்ல முடியவில்லை. மாறாக இராமராயரையும் அவருடன் வந்த படைகளையும் சேந்தவராயன் வென்று இராமராயரைப் பிடித்து மொட்டை யடித்து, தலைமுடியை மூன்றாகப் பிரித்து, அதில் கரும் புள்ளி, செம்புள்ளி இட்டுக் கழுதைமீது முகத்தைப் பின்புறமாக வைத்து அமரச் செய்து கட்டி விரட்டினான் என்று அந்நாடகம் மேலும் கூறுகிறது.

## சூழ்ச்சி

அவர்களை வெல்லும் உபாயம் அறியாமல் கிருஷ்ண தேவராயர் திகைத்தபோது பட்டத்தரசி ஒரு தந்திரம் கூற, அதன்படி விஜயநகரத்துத் தாசி மோகனவல்லியிடம் காந்தவராயர், சேந்தவராயர் தலைகளை வெட்டிக் கொண்டு வந்தால் இரண்டு லட்சம் பொன் சன்மானம் கொடுப்பதாக 9.7.1520இல் பத்திரம் எழுதிக்கொடுத்துத் திருவிடைச்சுருக்கு அனுப்பி வைத்தார். அவளும் திருவிடைச்சூர் சென்று தம் பேரழகைக் காட்டி காந்தவராயனை மயக்கி, உணவில் நஞ்சு கலந்து கொடுத்துக் காந்தவராயனைச் சாகடித்தாள். பினனர் விஜயநகரம் சென்று விட்டாள்.

இதனையறிந்து காந்தவராயன் தம்பி சேந்தவராயன் தம் படைகளுடன் விஜயநகரப் பட்டணம் சென்று தாசி மோகனவல்லியான குப்பிச்சி மற்றும் அவள் இனத்தார் அனைவரையும் சிரச்சேதம் செய்து தலைகளை ஏரியில் வீசி எறிந்து விட்டான். பிறகு கிருஷ்ணதேவராயரோடு போர் புரிந்து அதிலும் வெற்றி பெற்று நாடு திரும்பினான். இத்துடன் நாடகம் முடிவுறுகிறது. இந்நாடக நூல் 1968இல் வெளியிடப் பட்டிருக்கிறது.

## மெக்கன்ஸி குறிப்பு

இந்நாடகத்துக்கு மூல ஆதாரமாக எது இருந்திருக்கக்கூடும் என்று ஆராய்ந்ததில், மெக்கன்ஸி கையெழுத்துப் பிரதிகள் தொகுப்பு, இரண்டாம் தொகுதியில் காணப்பெறும் 'திருவிடைச்சுரம் கோட்டையாண்ட காந்தவராயன், சேந்தவராயன்' பற்றிய குறிப்புகள் தாம் என்பது தெரிய

வருகிறது. இருப்பினும் அதில் கூறப்பட்டுள்ள செய்தி, சில கருத்துக்களில் மாறுபடுகிறது.

காந்தவராயன் சேந்தவராயன் திருவிடைச்சூரில் கோட்டை கட்டிக் கொண்டு ஆட்சி செய்த போது விஜயநகர வேந்தனுக்குக் கப்பம் கட்டாததால் மட்டும் இவர்கள் மீது விஜயநகர வேந்தன் போர் தொடுக்கவில்லை. தொண்டமான் சக்ரவர்த்தியாலே குறும்பருக்குப் பதிலாக இப்பகுதியில் வைத்திருந்த வெள்ளாளப் பிரபுக்களைக் காந்தவராயன், சேந்தவராயன் அதிகமாய்க் கொடுமைப்படுத்தியதாலும் ஆகும் என்று மெக்கன்ஸி குறிப்பால் தெரிகிறது.

நாடகத்தில் காணப்படுவது போன்று கிருஷ்ணதேவ ராயரின் போர்வீரன் இராமராயர் மட்டும் இவர்களோடு போர் தொடுத்துத் தோல்வியுறவில்லை. உய்யாள்வார் பாளையக்காரர் என்பாரும் இவர்களோடு போர் தொடுத்து இவர்களை வெல்ல முடியாது திரும்பிவிட்டார் என்றும் மெக்கன்ஸி குறிப்பால் அறியமுடிகிறது.

அதுமட்டுமல்லாமல், நாடக நூலில் கிருஷ்ணதேவ ராயர்தான் தாசியை அனுப்பி வைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மெக்கன்ஸி குறிப்பில் உய்யாள்வார் பளையக்காரரும் வெள்ளாளப்பிரபுக்களும் சேர்ந்து திருவிடைச்சூரில் இருந்த தாசி குப்பிச்சியைக் காந்தவராயனைக் கொல்வதற்குப் பயன்படுத்தினார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் நாடக நூலில், கார்ந்தவராயன் தம்பி சேந்தவராயன் தாசியையும், அவளைச் சேர்ந்தவர்களையும் விஜய நகரத்தில் சிரச்சேதம் செய்து ஏரியில் போட்டதாகக் கூறப் பெற்றிருக்கிறது. ஆனால் மெக்கன்ஸி குறிப்பில் சேந்தவராயன் தாசியையும் அவளது கட்டுப்பாட்டில் இருந்த மற்ற தாசிகளையும் திருவிடைச்சூரிலேயே •கொன்றதாகக் காணப்படுகிறது.

இறுதியில், காந்தவராயன் கிருஷ்ணதேவராயரையும் தோற்கடித்துத் தமக்குச் சேவகம் செய்யும்படி ஆணையிட்டான் என்று நாடக நூல் கூற, மெக்கன்ஸி குறிப்பில் காந்தவராயன் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டு அவனது அரண்மனை யெல்லாம் இடிக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. மெக்கன்ஸி குறிப்பு கி.பி.1815 வாக்கில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

நாடக நூல், மெக்கன்ஸி குறிப்பு ஆகிய இரண்டில் காலத்தால் முந்தைய மெக்கன்ஸி குறிப்பு சொல்வது தான் சரியாக இருக்கும் போன்று தெரிகிறது. ஏனெனில் இன்று அவ்வூரில் கோட்டை இருந்ததற்கான தடயங்கள் மிகவும் அருகிய நிலையிலேயே காணப்படுகின்றன.

## கோட்டைக்குன்று, குப்பிச்சி குன்று

திருவடிசூலத்துக்குச் செல்லும் சாலையின் வலப்புறத்தில் ஒரு சிறு குன்று (மண் குன்று போன்று) காணப்படுகிறது. இக்குன்றைக் 'கோட்டைக்குன்று' என்று அவ்வூரார் அழைக்கின்றனர். இக்குன்றை ஆய்ந்தபோது அங்குக் கோட்டை அமைக்கப்பட்டிருந்ததற்கான ஆதாரம் எங்கும் தென்படவில்லை. ஆனால் அக்குன்றைச் சுற்றித் தாழ்வான பகுதியும், ஒரு பெரும் சுவர் போன்ற மேட்டுப் பகுதியும் காணப்படுகின்றன. தாழ்வான பகுதி அகழியென்றும், சுவர் போன்று காணப் பெறுவது அகழிக்கரை என்றும் மக்கள் கூறுகின்றனர். இப்பகுதியிலும் குன்றையொட்டிய பகுதியிலும் பெரும் அளவுடைய செங்கற்களும், அம்மி, குழவி போன்ற பொருள் களும், மட்பாண்டங்களும் சில சமயங்களில் மண்ணைத் தோண்டும் போது கிடைத்து வருகின்றன என்றும் கூறுகின்றனர். அண்மையில் மூக்குக் கெண்டி போன்ற அமைப்புடைய பானை (Spouted pot) கிடைத்திருக்கிறது.

இக்குன்றிலிருந்து வடக்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் ஒரு சிறு குன்று காணப்படுகிறது. இக்குன்றைக் 'குப்பிச்சி குன்று' என்று இவ்வூர் மக்கள் குறிப்பிடுகின்றனர். இது திருவிடைச்சுரர் ஆலயத்துக்குக் கிழக்கே சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மெக்கன்ஸி குறிப்பில் குறிக்கப்படுவது போன்று தாசி குப்பிச்சியும் அவளது கட்டுப்பாட்டில் இருந்த மற்ற தாசிகளும் இங்கு வாழ்ந்திருக்கலாம். தாசி குப்பிச்சியின் நினைவாகவே இன்றும் இக்குன்று 'குப்பிச்சி குன்று' என்றே வழங்கப்படுகிறது.

## 'புணை ஏரி'

கோட்டைக் குன்றுக்குக் கீழ்த் திசையில் காணப்படும் ஏரியைத்தான் 'புணை ஏரி' என்று மக்கள் குறிப்பிடுகின்றனர். இந்த ஏரியில்தான் சேந்தவராயன் தன் தலைவனைச் சூழ்ச்சியால் கொன்ற தாசி குப்பிச்சியையும் அவளது

கட்டுப்பாட்டில் இருந்தவர்களையும் தலையைக் கொய்து வீசினான் என்றும் கூறுகிறார்கள்.

மேற்கூறப்பெற்ற எல்லா ஆதாரங்களையும் கருத்திற் கொண்டு ஆராய்கையில் கி.பி.16ஆம் நூற்றாண்டளவில் திருவிடைச்சுரத்தில் காந்தவராயன், சேந்தவராயன் என்ற சகோதரர்கள் குறுநிலத் தலைவர்களாக விளங்கியிருக்கிறார்கள் என்பதும், அவர்கள் ஓரளவுக்குச் செல்வாக்கு பெற்றவர்களாகவும், போர்த்திறன் மிக்கவர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள் என்பதும் உணரமுடிகிறது. திருவிடைச்சுரத்திலுள்ள கோயிலில் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டுகூட இல்லாமல் இருப்பது ஆச்சரியமாக உள்ளது.

கூடல் மாநகர், இருவாட்சிப் புலவர் இயற்றிய 'திருக்கை வளம்' என்னும் நூல்,

> 'காக்கும் காந்தவராயர் கலம்பகம் சொல் பாவலர்க்கு
> ஆக்கம் அளித்தருள் அம்போருகக்கை'

என்கிறது. 'காந்தவராயர் கலம்பகம்' என்று ஒரு நூல் இருந்தது இதன் மூலம் தெரிய வருகிறது. இந்நூல் புகழேந்திப் புலவரால் எழுதப்பட்டிருக்கிறது. அந்நூல் கிடைக்கப்பெற்றால் 'காந்தவராயர், சேந்தவராயர்' பற்றிய முழுவிபரமும் நமக்குக் கிடைக்கக்கூடும்.

## கல்வெட்டுச் சான்று

காந்தவராயன் திருக்கழுக்குன்றத்து மலைமேல் உள்ள வேதகிரீஸ்வரர் கோயிலின் முன்பாக ஒரு மண்டபம் அமைத்தான் என்பது அக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டினால் தெரியவருகிறது.

## அடிக்குறிப்புகள்

1. Mackenzie Manuscripts Vol.II, 'Tiruvidaicchuram Kottaiyanda Kandavarayan, Sendavarayan.
2. M.N. காத்தமுத்து, நாடக ஆசிரியர், 'கிருஷ்ணதேவராயன் சேந்தவராயன் சண்டை' (1968).
3. இருவாட்சிப் புலவர், 'திருக்கைவளம்' மற்றும் புகழேந்திப் புலவர், 'காந்தவராயர் கலம்பகம்'.
4. 193L Chingleput District A Topographical list of the Inscriptions of Madras Presidency Vol I. P.344.

இயல் – பதினாறு

# தொகுப்புரை

வன்னியர் என்னும் இவ்வினம் இன்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மதிப்புள்ள நிலையில் இருந்து வந்திருக்கிறது என்று உறுதியான சான்றுகள் மூலம் தெரிய வருகிறது. சங்க காலத்திலிருந்த அதியர் 'மழவர்கோமான்' என்று வழங்கப் பெறுவதாலும், வன்னியப் பாளையக்காரர்களில் அரியலூர் பாளையக்காரர் மழவராயர் என்று தங்களை அழைத்துக் கொண்டதாலும், சங்ககாலம் தொட்டே 'வன்னியர்' இருந்துள்ளனர் என்ற கருத்தும் உண்டு.

வரலாற்று அறிஞர் சதாசிவ பண்டாரத்தார் தாம் நிகழ்த்திய உரையில்,

"சேர நாட்டு வேந்தர்களின் ஒரு கிளையினரே இந்நாளில் அரியலூரரின்கண் வாழ்ந்து வரும் அரசர் மரபினர் ஆவர். அவர்கள் சேர நாட்டினின்றும் வந்து, மழநாட்டில் தங்கி ஆட்சி புரிந்த காரணம் பற்றி மழவராயர் என்ற பட்டம் உடையவர்களாக இன்றும் வாழ்ந்து வருவது அறியத் தக்கது.

கடைச் சங்க காலத்தில் கொங்கு நாட்டில் தங்கியிருந்த இவர்கள் அதற்குப் பின்னர் மழநாட்டிற்குச் சென்று ஆட்சி புரியத் தொடங்கினர் என்று தெரிகிறது. மழநாட்டு தலங்களுள் ஒன்றாகிய கீழைப் பழுவூரிலும் இவர்கள் சில காலம் வாழ்ந்து வந்தனராதல் வேண்டும் என்பது சைவ சமயாசாரியர்களுள் முதல்வராகிய திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரப் பதிகத்தாலும், அப்பக்கங்களில் காணப்படும் சில கோயிற் கல்வெட்டுக்களாலும் அறியப்படுகின்றது. சேரர் மரபினரான அரியலூர் மழவராய மன்னரின் முன்னோர்களுள் ஒருவரே தேவர்களைப் போற்றி வழிபட்டு விண்ணுலகிலிருந்து கரும்பை இவ்வுலகிற் கொணர்ந்து பயிரிடுவித்தனர் என்றதோர் செய்தி புறநானூற்றில் காணப்படுகிறது. வெளிநாட்டிலிருந்த கரும்பை நம் தமிழகத்திற்கு முதலில் கொண்டு வந்து யாண்டும் பரவச் செய்தவர்கள் சேரர்களுள் ஒரு கிளையினராகிய மழவராயர்

களே என்னும் உண்மை இதனால் விளங்குகின்றதன்றோ" என்று கூறியுள்ளார்.

முற்காலப் பல்லவர், பாண்டியர் காலங்களில் 'பள்ளி' என்றும் 'வன்னியர்' என்றும் அழைக்கப் பெற்றிருக்கின்றனர். சோழர் காலத்தில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திரப் பகுதியிலும் கிடைத்துள்ளன. இக்காலத்தில் 'பண்ணாட்டார்' அல்லது 'பன்னாட்டார்' என்றும் இவர்கள் அழைக்கப் பெற்றிருக்கின்றனர். வன்னியர் களில் ஒரு பிரிவினர் 'மன்றாடி' என்றும், 'இடையன்' என்றும் இக்காலத்தில் பேசப்பட்டுள்ளனர். அவ்வாறு அழைக்கப் பட்டிருப்பது அவர்கள் மேற்கொண்ட தொழில் நிமித்தமாக இருக்கலாம்.

ஆந்திர மாநிலத்தில் 'பள்ளிதேச 300' என்றும், 'பள்ளிராஷ்டிரம்' என்றும் வன்னியர் வாழ்ந்த பகுதி வழங்கப் பெற்றிருக்கிறது. சாளுக்கியர்களின் படைத்தலைவன் ஒருவன் 'வன்னியரேவ' என்று கூறப்பட்டுள்ளான்.

கல்லாடத்தில் பன்னிரு பன்றிகள் மனிதர்களாக உருப்பெற்று, அவர்கள் வன்னியர் என்று அழைக்கப் பெற்றனர் என்றும், நால்வகைப் படையை உடையவர் என்றும் கூறப்பெறுவது, வன்னியர்கள் சாளுக்கியரோடு உறவுடையவர் என்பதைப் புலப்படுத்துவதாகக் கொள்ளப்படுகிறது.

முதலாம் குலோத்துங்கனின் கலிங்கப் படையெடுப்பின் போது கலிங்கப் பகுதியின் ஒரு சிறு பகுதியைச் 'சம்புச் சோழன்' ஆட்சி செய்து வந்திருக்கிறான். அம் மன்னனின் இராட்டிர கூடப் பிரமுகர்கள் இருவர் 'பெரிய சம்புவராயன்' என்றும் 'சிறிய சம்புவராயன்' என்றும் அழைக்கப் பெற்றிருக்கின்றனர். அவர்கள் சம்புவராயர்களைச் சார்ந்தவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதியிருக்கின்றனர். சென்ற நூற்றாண்டில் வட ஆந்திரப் பகுதியில் வன்னியர்கள் பல்லிலு அல்லது பல்லே, பல்லேகாபுலு என்னும் பெயர்களில் மீனவர்களாகவும், தச்சர்களாகவும், விவசாயிகளாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

மேலும் இன்றும் கூட வன்னியர்களில் பெரும்பகுதியினர் ஆந்திர கருநாடக மாநிலங்களை ஒட்டிய வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், சேலம், தருமபுரி, நாமக்கல் ஆகிய பகுதிகளில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

பல்லவர் ஆந்திரப் பகுதியிலிருந்து வந்தவர் என்ற கருத்துதான் வரலாற்றாசிரியர்களிடையே மேலோங்கி நிற்கிறது. வன்னியர்கள் சில இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் பல்லவர்களோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றனர். குறிப்பாகச் சம்புவராய மன்னர்களில் சிலர் 'பல்லவாண்டான்' என்ற பட்டம் புனைந்திருக்கின்றனர். இன்றைக்கும் வன்னியர்களில் சிலர் தங்கள் பெயர்களோடு 'பல்லவர்', 'வர்மா' என்ற பட்டங்களைக் கொண்டு விளங்குகின்றனர். ஆதலால் தமிழ்நாட்டின் வடபகுதி மற்றும் ஆந்திரப் பகுதியில் வாழ்ந்த வன்னியர்கள் பல்லவர் வழி வந்தவர்களாக இருக்கலாம்.

அறிஞர் சதாசிவ பண்டாரத்தாரும், "பல்லவர்களுள் ஒரு கிளையினரே சம்புவராய மன்னர் என்போர். இவர்கள் தொண்டை மண்டலத்தில் படைவீட்டு ராச்சியத்துக்குத் தலைவர்களாக இருந்து 13, 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த செய்தி கல்வெட்டுகளால் அறியப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார்.

இவர்கள் தங்களுக்கென ஒரு புராணத்தை ஏற்படுத்திக் கொண்டு 'சம்பு முனிவர் வழி வந்தவர் என்று புலப்படுத்தும் வண்ணம் 'சம்புவரையர்' என்று அழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

சோழர் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு சம்புவராயர் தமிழகத்தின் வட பகுதியை, குறிப்பாக வன்னியர்கள் அதிகமாக இன்றும் வாழ்கின்ற பகுதியைச் சம்புவராயர் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர்.

பாண்டியர் ஆட்சியின் போது வன்னியர்கள் பாண்டிய நாட்டுப் பகுதியில் குடியேற்றப்பட்டு படைகளில் முக்கிய அங்கம் வகித்திருக்கின்றனர். பின்னர் பாண்டியர் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றபோது வன்னியத் தளபதிகளும் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பெற்று, அங்கேயே சிலர் குடியமர்த்தப் பட்டிருக்கின்றனர். இலங்கையில் 'வன்னி நாடு' என்று ஒரு நாட்டுப் பகுதியை ஏற்படுத்திக் கொண்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் இலங்கை அரசுக்குக் கட்டுப்பட்டும், பின்பு, தனியாட்சி செலுத்தியும் வந்திருக்கின்றனர்.

தமிழகத்தில் விஜய நகர, நாயக்கர் ஆட்சிக் காலங்களில் வன்னியர் பல பாளையக்காரர்களாக இருந்து சிறு சிறு

நிலப்பகுதிகளை நிர்வகித்து வந்திருக்கின்றனர். அவ்வாறான பாளையங்களில் முக்கியமானவை முகாசாபரூர், உடையார் பாளையம், அரியலூர், பிச்சாவரம், வடகால், ஏழாயிரம் பண்ணை, அளகாபுரி, சிவகிரி ஆகியவைகளாகும்.

தொண்டை மண்டலத்தில் செங்கற்பட்டுக்கு அருகே காந்தவராயன் என்ற வன்னியச் சிற்றரசர் விஜய நகர வேந்தன் கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் சிறுபகுதியை ஆண்டு வந்திருக்கிறார்.

இப்பகுதியில் வன்னியர்களுக்கு 'மன்னவேடு' என்று நிலக்கொடை வழங்கப் பெற்றிருக்கிறது. 'மன்னர் பேறு' என்பது மன்னர் பேடு என்று ஆகி, பின்பு 'மன்னவேடு' என்று மருவி வழங்கப் பெற்றிருக்கிறது. மன்னர்களாக இருந்து ஆட்சிபுரிந்தவர்கள் என்பதை நினைவுறுத்தும் வகையில் அக்கொடை அவர்களுக்கு வழங்கப் பெற்றிருக்கலாம்.

நாளாவட்டத்தில் 'அக்கொடை' பிறரால் கவரப்பட்டு, வன்னியர் மிகவும் வறிய நிலையில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பகுதியில் மட்டுமல்லாமல் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் அந்நிலைதான். வன்னியர்களில் கல்வியறிவு பெற்ற சிலரின் பெரு முயற்சியால் வன்னியர் மீண்டும் பழைய நிலைக்கு உயரத் தொடங்கியுள்ளனர்.

## பின்னிணைப்பு – 1

# வன்னியர் செப்புப் பட்டயங்கள்

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *1* |
| கிடைத்த இடம் | : | *தெரியவில்லை* |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு அரும்பொருட் காட்சியகம், சென்னை.* |
| காலம் | : | *கலி ஆண்டு 4517, சக ஆண்டு, 1349 இரு ஆண்டும் ஒத்துவரவில்லை. கலி ஆண்டின்படி. கி.பி. 1416.* |
| முற்குறிப்பு | : | *தெ. கோ. சா. பாகம் III, பகுதி II சாசனம் எண் 1257 (டி. 2944எ) பக்கம் : 1379 – 81; அரசு அரும்பொருட் காட்சியகச் செப்புப் பட்டய அட்டவணை, (1918), தனிப்பட்டோர் பட்டயம் எண் 4.* |
| அரசர் | : | *வீரசிங்கராயர்.* |
| செய்தி | : | *தொண்டை மண்டலத்துப் பையூர் கோட்டத்து கும்மங்கலத்துக்கு அடுத்த வெள்ளோடையைச் சார்ந்த வன்னியராய கோத்திர ஆண்டியப்ப நாயக்கன் குமாரன் முத்துநாயக்கன் உள்ளிட்டார் வெள்ளோடை பாதி கிராமத்தை, அதே நாட்டில் உப்பளத்தில் உள்ள வைசியர் கோட்டை பெரிய பொம்மு செட்டி உள்ளிட்டாருக்கு விற்று விலை ஆவணம் செய்துத் தந்ததைத் தெரிவிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | |

*சுவஸ்தி ஸ்ரீமன் மகா மண்டலேசுவர அரிறாயல விபாடன் பாஷைக்குத் தப்புவறாய கண்ட னாடு கொண்டு கொண்ட னாடு கொடாதேதான் உத்தர தெக்ஷசன பச்சமி பூறவ சமுத்திறாதிபதி றாச றாச பரமேஸ்பர றாச மார்த்தாண்ட றாச கெம்பீர றாச குல திலக துலுக்க தள விபாடன் துலுக்க மோஹந்தவிர்த்தோன் அசுர தள விபாடன் கட்க சூறகாறன்*

கல்லியான பூறுவறாதீஸ்வரன் ஏகாங்க வீரன் வீரவினோதன் வீர வல்லாளதேவன் தலைகுண்டு கண்டவன் திருபுவன னாறாயன அஷ்ட்ட திக்கு மனோ பயங்கரன் அசுவபதி கெசபதி சத்தாங்க வயிரி பதினெட்டு வன்னியர்கள் தலைக்குண்டு கண்டன் னாகலோக பாலகன் பூலோக புறந்தரன் எம்மண்டலமுங் கொண்ட ராசமாற்த்தாண்டன் வீறலக்ஷ்மி விசையலக்ஷ்மி வரபுத்திரன் ஸ்ரீ வீரசிங்கறாயர் தேவமகாறாயர் பிறிதிவி ராச்சியம் பண்ணி அருளாயி நின்ற கலியுகாத்தம் ௵ 4517 சாலிவாகன சகார்த்தம் ௵ 1349க்கு மேல் செல்லாயி நின்ற ப்லவங்க ௵ மாசி மாசம் 21ம் தேதி புதன் கிழமையும் பூறுவ பக்ஷ பஞ்சமியும் ரோகினி நக்ஷசத்திரமும் பெத்த யித்த னாள் எழுதிய விலையாவண கையி எழுத்து. செயங்கொண்ட சோழ மண்டலமான தொண்ட மண்டலத்தில் சந்திர கிரி றாச்சியத்தில் கீழ்க்கரையான மெய்க்குன்ற வளனாடான பையூர் கோட்டத்தில் ஆரணி ஆத்தின் தென்கரையான திருவேங்கட முடையான் திருவிளையாட்டு கிறாமமான சதுர்வேத மங்கலத்துக்கு பிறிதினாமமான கும்மங்கலத்துக்கு அடுத்த வெள்ளோடையிலிருக்கும் வன்னியறாய கோத்திர ஆண்டியப்ப னாயக்கன் குமாறன் முத்துனாயக்கன் உள்ளிட்டானவரும் ஓம் எங்கள் காணியாட்சி கிறாமமான வெள்ளோடை பாதி கிறாமம் கொள்வாரோ என்று மொரை கூற யிம்மொழி கேட்டு யிதற்கெதிர்மொழி குடுத்தோன் யிம் மண்டலத்தில் யிக் கோணத்தில் யின்னாட்டில் உப்பளகத்திலிருக்கும் வயிசியரில் கோட்டை பெரிய பொம்மு செட்டி உள்ளிட்டார் ஓம் னாங்கள் கொள்வோமென்று பிர்கூற முரை கூறிய முத்து னாயக்கன் உள்ளிட்டாறானவரும் பிர்கூறிய கோட்டை பெரிய பொம்மு செட்டி யிவை யிரு திர்வரும் எம்மிலிசைந்து தம்மில்ப் பொ...ந் திருமங்கலம் மன்ன(ா) மணக்களவர் முன்பாக யி..(வி)லையாக நிற்செற்த்த பாசிப்படாத பழவேர்க்காட்டு புது வறாகன் ளஉயரு யிந்த வறாகன் னூத்து யிருவத்து அஞ்சுக்கும் 32 அடி கோலால் குழி 3850க்கு பாதிக்கி குழி 1925க்கு கரை ஒரு மா காணி அரைக்காணி விலையாக வித்து பொருள் கையிக் கொண்டோம். யிதுவே விலையாவதாகவும். யிதுவே விலை பிறமாணமதாகவும். யிருக்காலாவது முக்காலாவது யிதுவே விலையாவதாகவும். யிந்த காணியாவுஷயே தாங்களே சந்திறாதித்தவரைக்கும் தாங்களே அனுபவித்துக் கொள்ளக் கடவுறாகவும். யிப்பிரமாணத்துக்கு யிந்தகாணி காஷ்ஷக்கி யாதொரு

கலுனுமில்லை. கலனுளதாயி தோத்தப்பட்டால் நாங்களே முன் நின்று கலன் தீர்த்து குடுக்க கடவோமாகாவும். யிப்படிக்கு சம்மதித்து எங்கள் காணிகாஷ்ஷு கிறைய சாதனம் பண்ணி கொடுத்தோம் கோட்டை பெரிய பொம்மு செட்டிக்கும் முத்து னாயக்கன் உள்ளிட்டாருலும் யிவை கை மண்டாங்கலம் முத்துனாயக்கன் கையி எழுத்து.

யிதுக்கு சாஷ்ஷு கும்மங்கலம் முத்தியப்ப னாயக்கன்

சின்ன காமணம் மன்ன செட்டி முதலியார்

பெரிய காமணம் னயிணியப்ப முதலியார்

பொன்னகிரி பல்லவ வெங்கிட்ட முதலியார்

யிவர்கள் சொல்ல எழுதின நன்மைக்கி ஊற் கணக்கு சின்ன நயினாப்பிள்ளை எழுதின சட்டம். யிந்தச் சட்டபடிக்கு சயனபரம் தானப்பாசாரி பொட்ட வெட்டு முத்தியப்ப நாயக்கன் கையி எழுத்து.

மன்ன நெட்டி முதலியார் கையி எழுத்து

தறனியப்ப முதலியார் கயி எழுத்து

பல்லவ வெங்கட்ட முதலியார் கையி எழுத்து

பகயி மனடாங்கம் முத்து னாயக்கன் கையி எழுத்து உ.

செப்புப் பட்டயம் எண் : *2*

கிடைத்த இடம் : *செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து 1858ஆம் ஆண்டு பெறப்பட்டது.*

தற்போது உள்ள இடம் : *அரசு அரும் பொருட்காட்சியகம், சென்னை.*

காலம் : *கலி ஆண்டு, 4519, சக ஆண்டு 1351 மேற்படி இரு ஆண்டும் ஒத்துவர வில்லை. கலி ஆண்டின் படி கி.பி. 1418.*

முற்குறிப்பு : *தெ.கோ.சா. பாகம் III, பகுதி II, சாசனம் எண் 1258 (டி. 2944 - 14) பக்கம் 1382-84; அரசு அரும்பொருட் காட்சியகச் செப்புப்பட்டய அட்ட வணை, (1918), தனிப்பட்டோர், பட்டயம் எண் 5.*

அரசர் : *வீரசிங்கராயர்.*

செய்தி : *தொண்டை மண்டலத்துப் பையூர் கோட்டம் கும்மங்கலத்துக்கு அடுத்த கிருஷ்ணன் ஓடையைச் சேர்ந்த வன்னியராய கோத்திரம் மூக்கா நாயக்கன் குமாரன் முனியப்ப நாயக்கன் கிருஷ்ணன் ஓடைக் கிராமத்தில் பாதியை அதே நாட்டைச் சேர்ந்த காவணமங்கலத் திலிருக்கும் வைசியரில் ஆரணி செட்டியப்ப செட்டி உள்ளிட்டா ருக்கு விற்று விலையாவணம் செய்துத் தந்ததைக் குறிக்கிறது.*

பட்டய வாசகம் :

*சுபஸ்ரீமன் மஹா மண்டலேஸ்வரன் அரியறாயல விபாடன் பாஷக்கு தப்புவறாயர் கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதோன் உத்திர தெஷ்ஷின பச்சமி பூர்வ சற்ற சமுற்றிரறாதிபதி றாசறாச பறமேஸ்பற றாசமாற்த்தாண்ட றாச கெம்பீர றாச குலத் திலக துலுக்க தளவிபாடன் துலுக்க மோகந் தவுத்தோன் அசுர தளவிபாடன் கட்க சூறைக்காரன் கலியாண பூருவறாதீசுவரன் ஏகாங்க வீரன்*

வீறவினோதன் வீற வல்லாள தேவன் தலை குண்டு கண்டவன் னாகலோக பாலகன் பூலோக புரந்திரன் எம்மண்டலமுங் கொண்ட ராசமாற்த்தாண்டன் வீறலஷ்ஷிமி விசைய லஷ்ஷிமி வரபுத்திரன் ஸ்ரீவீறசிங்கறாய றாயர் தேவமகாறாயர் பிறிதிவி றாச்சியம் பண்ணி அருளாய் நின்ற கலியுகாந்தம் ஹு 4519 சாலிவாகன சகார்தம் 1351-கு செல்லாயி நின்ற விகாரி ஹு சித்திரை மாதம் 24ஆம் தேதி சோம வாரமும் பூறுவ பஷ்ஷ பஞ்சமியும் றோகணி நஷ்ஷத்திரமும் பெற்ற யித்தனாள் எழுதிய விலையாவணக் கை எழுத்து. செயங் கொண்ட (சோழ மண்டலமான) தொண்ட மண்டலத்தில் சந்திரகிரி றாச்சியத்தில் கீழ்க்கரையான மெய்க்குன்ற வளனாடான பையூர் கோட்டத்தில் ஆறணி ஆத்தின் தென் கரையான திருவெங்கடமுடையான் திருவிளையாட்டு கிறாமமான சதுர்வேத மங்கலத்துக்கு பிறிதினாமமான கும்மங்கலத்துக்கு அடுத்த கிருஷ்ணன் ஓடையில் யிருக்கும் வன்னயறாய கோத்திரம் மூக்கா னாயக்கன் குமாரன் முன்னியப்ப னாயக்கன் உள்ளிட்டாரநவரும்ஓம் எங்கள் காணிகாஷ்ஷி கிராமமான கிருஷ்ணன் ஓடை கிராமம் பாதி கொள்ளுவாறோவென்று முறை கூர யம்மொழி கேட்டு யிதற்கெதிர்மொழி கொடுத்தோன் யிம்மண்டலத்தில் யிக்கோணத்தில் யின்நாட்டில் சின்ன காவணமங்கலத்திலிருக்கும் வியிசியரில் ஆறணி செட்டியப்ப செட்டி உள்ளிட்டார்ஓம் னாங்கள் கொள்ளுவோமென்று பிற்கூற முறை கூறிய மூக்கா னாயக்கன் குமாரன் முத்தியப்ப னாயக்கன் பிற்கூறிய செட்டியப்ப செட்டியும் யிவை யிருதரவரும் எம்மிலிசைந்து தம்மில் பொரிந்தி கும்மங்கலம் மண்ணாமனக் கற்... ஊர் முன்பாக விலையாக நிர்ச்செய்த யாசி படாத பழவேர்க்காட்டு புது உ (வராகன்) எயரு யிந்த விறாகன் னூத்து பதினஞ்சுக்கும் 32 அடிக் கோலால் (குழி) 4000க்கு பாதி (குழி) 2000க்கு கரை ஒன்றரை மாகாணி முக்காணியும் கீழரையும் விலையாக வித்து பொருள் கைக்கொண்டாம். யிதுவே விலையாவதாகவும். யிதுவே விலைப்பிரமாணமதாகவும் யிருக்காலாவது முக்காலாவது யிதுவே விலையாவதாகவும். யிந்த காணிகாஷ்ஷியை தாங்களே சந்திராத்தித்த வரைக்கும் அனுபவித்துக் கொள்ளக் கடவிறாகவும், யிப்பிரமாணத்துக்கு யிந்த காணிகாஷ்ஷிக்கு யாதொரு கலனுமில்லை. கலனுள்ளதாய் தோத்தப்பட்டால் னாங்களே முன் நின்று கலந்தீத்து குடுக்கக் கடவோமாகாவும். யிப்படிக்கு சம்மதித்து எங்கள் காணிகாஷ்ஷி

கிரைய சாதனம் பண்ணி கொடுத்தோம். ஆரணி செட்டியப்ப செட்டிக்கும் முத்துநாயக்கன் உள்ளிட்டாருக்கும் ஓம். இவை னாகமண்...ரங்கம் முத்து னாயக்கன் குமாரன் முத்தியப்ப னாயக்கன் எழுத்து. உ.

யிதுக்கு சாஷ்ஷீ கும்மங்கலம் வெள்ளை ரெட்டி னாயக்கன்

பொன்னபரி முத்தியப்ப முதலியார்

சின்னகாவனம் மன்ன முத்தியப்ப முதலியார்

பெரிய காமணம் வெங்கட்ட முதலியார்

யிவர்கள் சொல்ல ஊர்க்கணக்கு பெரிய நயினாபிள்ளை யெழுதின சட்டம் ச(ய) னவாம மூர்த்தியாசாரி.

பொட்ட வெட்டு வெள்ளை ரெட்டி னாயக்கன் கையி எழுத்து உ.

பல்லவ முத்தியப்ப முதலியார் கையி எழுத்து உ

பண்ண முத்தியப்ப முதலியார் கையி எழுத்து உ

வெங்கிட்ட முதலியார் கையி எழுத்து. உ.

யிந்த சயிகை மாண்டங்கம் முத்தீயப்ப னாயக்கன் கை எழுத்து உ.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *3* |
| கிடைத்த இடம் | : | *செங்கற்பட்டு நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு அரும்பொருட் காட்சியகம், சென்னை.* |
| காலம் | : | *சக ஆண்டு 1376, கி.பி. 1454, பவ ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | *செ. ப. அ. (செப்புப் பட்டய அட்டவணை) தனிப்பட்டோர் பட்டயம் எண் 6, பக்கம். 69* S.L.I. No. 145, T.S.I. 1886, p. 150 |
| அரசர் | : | *வல்லப மஹாராஜர்* |
| செய்தி | : | *திருவொற்றியூர்க் கோயில் பூசாரிகள் மதரு, ஒண்டியூர், நித்தியூர் ஆகிய ஊர்களின் கோயில்களில் தங்களுக்கிருந்த பூசை உரிமையையும், சில சிறப்புகளையும் மற்றும் சாத்தங்காடு கிராமத்தையும் வன்னிய சின்னபிள்ளை தந்த்ரிக்கு, அவரிடமிருந்து எழுநூற்றைம்பது பகோடாக்கள் (பணம்) பெற்றுக் கொண்டு விற்றுக்கொடுத்த விலை ஆவணம் பற்றித் தெரிவிக்கிறது. இந்த வன்னிய சின்னபிள்ளை தந்த்ரி என்பவர் காஞ்சிபுரம் சங்கராச் சார்ய சுவாமிகளோடு சமயப் பயணங்களில் சென்றவர் என்று குறிப்பிடப்படுகிறது.* |
| பட்டய வாசகம் | : | பெற முடியவில்லை. |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *4* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு ஆவணக் காப்பகம்.* |
| காலம் | : | *கி.பி. 1547* |
| முற்குறிப்பு | : | Ceylon Gazetteer by Casie Chetty, pp. 190-191. |
| அரசர் | : | – |
| செய்தி | : | *இலங்கையிலிருந்த லூணுவிலாவைச் சேர்ந்த நவரத்ன வன்னியனைப் பற்றிக் குறிப்பிடுகிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெறமுடியவில்லை.* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *5* |
| கிடைத்த இடம் | : | |
| தற்போதுள்ள இடம் | : | *இலங்கை கல்வியங்காடு எஸ். சிவகொழுந்து என்பார் வசம் உள்ளது.* |
| காலம் | : | *கி.பி. 1722* |
| முற்குறிப்பு | : | Dr. K.Indrapala, The origin of the Tanil Vanni Chieftancies of Ceylon, (1970), p.1 |
| அரசர் | : | |
| செய்தி | : | *இலங்கையிலிருந்த கயிலாய வன்னியன் மற்றும் சில வன்னியர்கள் ஆகியோர் பற்றித் தெரிவிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெறமுடியவில்லை.* |

செப்புப் பட்டயம் எண் : *6*

கிடைத்த இடம் : –

தற்போதுள்ள இடம் : *பேராசிரியை முனைவர். மண்டோதரி கணேசன், சேலம்.*

காலம் : *சகம், 1517, கி.பி. 1595. துன்முகி ஆண்டு, தை மாதம்.*

முற்குறிப்பு : *தமிழ்நாடன், வி.ஆர். துரைசாமி, எம்.எம். மணி ஆகியோர் ஆய்வு செய்ய, டாக்டர் செ. இராசு படித்தளித்திருக்கிறார்.*

அரசர் : *கிருஷ்ணதேவ மஹாராயர்?*

செய்தி : *பல்வேறு நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த வன்னியர் (பண்ணாட்டார்) ஒன்று சேர்ந்து கும்பகோணம் சீர்காழிச் சீமையிலிருந்த வைத்தீஸ்வரன் கோயிலில் தங்களுக்கென ஒரு பெரிய மடம் அமைத்ததைக் குறிப்பிடுகிறது.*

பட்டய வாசகம் :

**உ**
**ஹரி ஓ**
**ம் நன்**
**றாக கு**
**ருவு வ**
**ாழ்க கு**
**ருவே து**
**ணை.**

1) *வேக மானெறி சேரும் வினைகளும் தாக போகம் விடாத தளர்ச்சியும் சோக வாரினை*

2) *நால்வரு துன்ம்பமும் போக வானை முகத்தனை போத்துவாம்[1] உ தய்யல்னாயகி துணை*

3) *புள்ளிக்கும் வேளூரில் வன்னியார் மடம் தத்தனூர் காணி சிவந்தபாத பண்டாரம், திருமே*

4) *னி வாண்டரய பண்டாரம், பூசாரி வாண்டரய பண்டாரம், நந்தாவன வாண்டரய பண்டாரம், வயித்திலி*

5) ங்க பண்டாரம், சாந்த பண்டாரம் யிவர்களுக்கு றாசாதிகள் பண்ணாட்டார் அனவோரும் குடு

6) த்த தாம்பூர சாசாண பட்டயம். நெட்டெழுத்து காஞ்சிபுரம் சீமையில்[2] கணக்கு அயிறா

7) பதத்தா பிள்ளை. சுபஸ்ரீ மகாமண்டலேசுபரன் அரியராய தள வீரபாடன், பாழைக்கி[3]

8) தப்பு வராத கண்டன், மூவராய கண்டன், தேவராய கண்டன், கண்டனர்டு கொண்டு கொ

9) ண்டனாடு குடாதான், பதினெட்டு கோட்டத்தில் வன்னியராய கண்டன், அஷ்ட்ட திக்கும் மனோ

10) கர பயங்கரன், ராச மாத்தாண்டன், ராச கெம்பீரன், ராச கோலாகலன், நம் சக்கிரவற்த்திகளில் உ

11) அசுபதி, கெசபதி, நரபதி, நவகோடி நாறாயண பூறுவ தெஷ்சண பஷ்சமி உத்திர சத்த சமுத்திராதி

12) பதி, யீழமும் கெண்பள்ளமுங்[4] கொண்டு கெச வேட்டை அசுவேட்டையும் யெம்மண்டலமுங் (கொன்)

13) கொண்டு யீழந்திறை கண்டருளிய ராசாதிராசன், ராச கெம்பீரன், ராசகுலத்து ராசமணி விளக்கு, ராசபர

14) கேசரி, சோழசிங்க சிரத்தாருணன், யிம்முடிகொண்டு அரசாளுவன், யொட்டிய தள வீரபாடன், ஒட்டியர்

15) மோகந் தவிழ்த்தான், சோழமண்டலம் பிறதிஷ்ட்டாபன சாரியன், பாண்டியார் மண்டலம் பற்

16) ப்பமாசனத்தோன், பாண்டிமோகம் தவிழ்த்தான், கொங்குமண்டலம் குரும்பறுத்து அழியாவிரா

17) ணன் அழித்த விராடன், கெடிமன்னர் முண்டாரனி மன்னிய பாரியான், கோஷ்ட்டத்தில் வன்னியமா

18) ராய கோலாகலன், யிளவரசு மணவாளன், கண்டியப் பிறதாபன், கட்டாரிவல்லபன், சங்கீத சாயுத்தி

19) ய வித்தியா வினோத றணமுக சுத்த வீரன், நகமுக சந்திர உதையன், மத்த கெச வீரன், சுத்த பரிபாலன், மகா

20) காளி கூளி கெணங்கள் கையிகூப்பு மணவாளன், கெம்பீரன், வெருத்தோர் சினமடக்கும் வேங்கெ வரி

21) புலியானோன், தேன்பாயும் வளனாடன், கங்கா குலாதிபன், நித்திய கலியாண வேந்தாதியன், பூலோக தேசாதிபதிக

22) ளில் சூரிய வங்கிச குலபதிகரான, சிவசமைய வளநாடன், கங்காகுலாதிபன், நித்திய கலியாண வேந்தாதிபன்,

23) பூலோக தேசாதிபதிகளில் சூரிய வங்கிச குலபதிகரான, சிவசமைய[5] பரிபாலகரான சிவபூசா துரந்த

24) ரிகரான துஷ்ட நிக்கிர சிஷ்ட்ட பரிபாலகரான வில்லுக்கு அர்ச்சுனன், வீரவாளுக்கு சகாதேவன், மல்லு

25) க்கு வீமன், வயல்பரிக்கு நகுலன், கோபத்துக்கு காலாக்கினி, குளிர்ச்சிக்கி பூரண சந்திரன், ரூபத்தில் காமராசன், குடைக்கிக்

26) கர்ன, ஆக்கினைக்கி சுக்கிறீபன், கேழ்விக்கு முசுகுந்தன் யிப்படி பூலோக தேவேந்திரனான புசபலதேவ மகாறாயர், (பூ)

27) பூபதிதேவ மகாராயர், சதாசி(வ) தேவ்[6] மகாராயர், அச்சுததேவ மகாராயர், கிஷ்டன தேவ மகாராயர் யிவர்கள் பிரிதிவுராஷ்சிய

28) பரிபாலினம் பன்னியருளாய்நின்று கலியுக சகாற்த்தம்[7] 1517 யிதுக்குமேல் செல்லாநின்ற(து) துன்முகி வருஷ

29) மும் தயி மாசமும் தலைச் செவ்வாயி கிழமெ நாள் சங்கர விருஷ்சகமும் மேஷ[8] நாயத்து பூறுவ பஷ்சத்தில் யேகாதெசி

30) யும் திருவோண நஷ்சத்திரமும் பெத்த காற்த்திகை சோம வார் னாள்; சோழமண்டலத்துக்கு தெக்கு வடக்கு ரா்சாதிரா

31) சன் ராசவளநாடு வழுதளம்பட்டுச்சாவடி[9] திருவா்லியனூா்ரமான சடாயுபுரி, வேதா்புரி, கந்தா்புரி, ஆதித்தபுரி ஆ

32) ன திருப்புள்ளிருக்கும் பேளூரில்[10] கலியுக வரதராயி தெயினீக வயித்தியராயி யெழுந்தருளிய தம்பிரான் சன்ன

33) தியில் அந்தந்த சாதிக்கி சிவாலையமும் மடபாலையும்[11] உண்டானபடியினாலே பன்னாட்டார் தங்கள் மரபிலே பேரும்

34) *பிறதாபமாகவேணுமென்று தொண்டமண்டலமான சோழகனார், காலாக்கள் தோளுடையார், மழவராய நயினார்,*

35) பருவூர் கச்சிராய நயினார், ராவுத்தமுண்ட நயிநார், வூத்தங்கால் வன்னிய நயினார், சம்முட்டியார், பாஞ்சாலி நயினார், வான்

36) டையார், (ெ)கொங்குடையார், பென்னைகரை கச்சிராயர் வாண்டையார், அஞ்சாத சிங்கம் நிலங்கரை குலையா படை

37) யாச்சி காலிங்கராயர், கருப்புடையார், சென்னியார் கவுண்டர், சிறாம கவுண்டர், செங்கழநீர் கவுண்டர், வேடிச்சி

38) கவுண்டர், நமனான்டி கவுண்டர், நாரீசர் கவுண்டர், அம்பாயிர கவுண்டர் யிவர்கள் அனவரும் ராசாதிகளும் கூடி வயித்தி

39) யிசுபரர் சன்னதியிலியும், மேலதெரு வீதியில் தென்சிறகில் நந்த கோபால மடத்துக்கு கெழக்கு, மலையமா மடத்துக்கு மேற்

40) க்கு, கிழக்குமேற்கடி 350, தெற்க்கு வடக்கடி 225 ஆக அடி 575. அடி ஒருபணமாக அன்பத்தேழு பொன்

41) அஞ்சு பணமுமாயி[12] தலத்து வேலாபிள்ளெ கய்யிலே கொள் கிறெயமா வாங்கி சுத்தகிறெயமாக கொண்டு கல்வெ

42) டி போட்டுவைத்து, கிணறுங் கட்டிவயித்து, சிவந்தபாத பண்டாரத்துக்கு திருமேனி வாண்டரய பண்டாரம், பூசாலி[13]

43) வாண்டரய பண்டாரம், நந்தவன வாண்டரய பண்டாரம், வயித்திலிங்க பண்டாரம், சாந்த பண்டாரம் யிவ

44) ர்களுக்கு தாம்புர சாசாண பட்டையம் பன்னிகொடுத்து நாலு தேசத்துக்கும் கொண்(டா)டாடச் சொல்லி மகாமடமும்,

45) தெயிவாலையமும், திருவிளக்கும், திரு(ந்த)நந்தர்வான பணிவிடையும், திருமாலை உபயமும், மயேசுரபூசையும், பன்

46) னிவரச்சொல்லி நம்முடைய சாதியான நாலுமண்டலம் அன்பத்தாரு தேசத்தில் உள்ள உறமுறையார் யெல்லோ

47) ர்க்கும் கிற்த்தியும் பலனும் உண்டாக வேணுமென்று, டால், டமாரம், சுறுட்டி, சூரியபான், சுக்குமாற்த்தடி, செலம்பு, திரு

48) சாந்தா ஹண்டெயும், திறுனூறும், பாகுபச்சவடமும், ஆலவட்டம், அன்னகொடி, கெருடகொடி, சிங்ககொடி, காவிவேஷ்

49) ட்டியும், கவுஷகுண்டலமும், திருமேனியும், உத்திறாஷ்சமும், பாதகுரடும், பதிநெட்டு விருதும் குடுத்துயிறுக்குறோம். ஆ

50) கையால் அவர்களுக்கு சுங்கம், சோதினை, அமிஞ்சி, ஆக்காடு, வரிவட்டம் முதலானதும் யில்லெயென்று

51) கட்டளையிட்டு யெழிதிகுடுத்த தாம்புர சாசாண பட்டையம். காணிப் பொன்பறப்பி, பெண்ணாடகம், சாத்துமகல், செ

52) யம்கொண்ட சோழபுரம், சென்னியநாட்டார் கோயில், குழுமுற் சூழ்ந்த பதிநேழுபத்து, பருவூரு சூழ்ந்த பனிரெ

53) ண்டுபத்து வன்னியரும், ஆத்திநாட்டு பண்ணாட்டாரும், சேலநாட்டு பன்னாட்டாறும், ஓமலூர் சீமெ பன்னாட்டாரும்,

54) வாஞ்சிநாட்டு பன்னாட்டாரும், சாமளிசீமை பன்னாட்டாரும், பூவானிநாட்டு பன்னாட்டாரும் மூலக்காட்டு சீமெ

55) பன்னாட்டாரு, பொன்னாகரநாட்டு பன்னாட்டாரும், அந்தந்த சீமெ பன்னாட்டாரனைவரும் மடத்துக்கு வருஷம் வற்

56) த்தனையாக கட்டளையிட்டது யென்னவென்றால், சேலம் சில்லா ஓமலூர் தாலுக்கா சேந்த வகையறா மடம், மே

57) ல்ப்படிவூர் அம்சத்து மடம், மேல்ப்படி அரங்கனூர் கிறாம மதுரா பெம்மையன்பட்டி தயிலாக் கவுண்டன்மடம்,

58) ஸ்ரீ திறி வயித்தியனாத சுவாமிக்கி வர்த்தனெ தலைக்கட்டுக்கு அஞ்சி பனமும், முடிகாணிக்கெகளும் வாங்கி வ

59) ரச்சொல்லி நாநு மண்டலமும் அன்பத்தாறு தேசத்திலேயும் உண்டான பன்னாட்டார்கள் கட்டளையிட்ட காசா

60) னம். வயித்தினாத சுவாமிக்கி பயந்து வூழியும் செய்யபட்ட வகையறா, முத்துக்கவுண்டனோட வகையறா, யிளையா கவு

61) ண்டனோட வகையறா, சின்னதயிலா கவுண்டனோட வகையறா, அழகா கவுண்டனோட வகையறா, எ...சவி கவுண்டன்

62) வகெயறா தயிலா கவுண்டன் மடம். வயித்தினாத சுவாமிக்கி வூழியம் செய்யப்பட்ட ஆள் 30. யிந்த ஆள் 30 வ

63) யித்தினாதசுவாமி காரியம் தாஷ்சியில்லாமல் நடப்பிக்கவும். அந்த சுவாமி சொத்து ஒரு தம்மடியில்லாமல்

64) சரூறாயி நடப்பிக்கவும். வயித்திலிங்கத்துக்கும் தயிலம்மாளுக்கும் முத்துகுமாரசுவாமிக்கு யொத்து செம்மையாயி நட

65) ந்தால் அவர்களுக்கு அஷ்ட்ட ஆயிஷ்பரியமும் பெத்து வாள்வார்கள். மாதாபிதாவை லெஷ்சித்த பலனை பெறுவா

66) ர்கள். தேவாலையம் விறுமாலையம் கட்டிவைத்த பலனெ பெறுவார்கள். தயிழத்தாலை செவ்வாயிகிழமெயி

67) ல் சிதம்பரத்தில் தானம் பன்னி வயித்திலிங்கத்தெயும் தய்யலம்மனெயும் முத்துக்குமாரசுவாமியும் சேவி

68) த்த பலனெ பெறுவார்கள். மார்களி மீ திருமஞ்சணத்தில் சிதம்பரம் சவாபதியும் சிவகாமி அம்மனெயும் சேவி

69) த்த பலனெ பெறுவார்கள். வயித்தியனாதசுவாமி உடைய சொத்துக்கு தற்மத்துக்கு கெடுதலெ நினெக்கபடா

70) நின்ற பேர்களுக்கு காசியிலே கெங்கையிலே குருக்கள் சன்னாசியும் தன் மாதா பிதாவெயும் பூசித்த பலனெ

71) பெறுவார்கள். யிதுக்கு யாதாமொருவர் யிந்த தற்மத்துக்கு கெடுதலெ செய்த பேர்களுக்கு குருக்கள் சன்

72) னாசியும் தன் மாதா பிதாவையும் கொன்ன தோசத்திலே போககடவது. காறாம்பசுவை கொன்ன தோச

73) த்திலே போவார்கள். யின்னம் தேவாலெயம் பிரம்மாலையம் யிடித்த பாவத்திலே போவார்கள். னரகத்தி

74) ல் போககடவது. தஞ்சாவூர் சீமை கும்பகோணம் சீகாழிக்கி சேந்த வயித்தியீசுபரன் கோவில் உ

1. விநாயகர் வணக்கப்பாடல்
2. சீர்மையில் என்றும் படிக்கலாம்
3. பாஷை—பாழை என எழுதப்படும்; ஷகரம் ழகரம் ஆவதுபோல் ழகரமும் ஷகரமாகும்; விழா—விஷா.
4. கம்பளமும் ஆக இருக்கலாம்
5. 21–23 வரிகளில் சில தொடர்கள் மீண்டும் எழுதப்பட்டுள்ளன.
6. சதாசிவ தேவர்
7. சாலிவாகன சகாப்தம் இவ்வாறு தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது.
8. மேஷ என்பதில் ஷ—வு போன்று தோற்றமளிக்கிறது.
9. வழுதலம்பட்டு என்று பிற இடங்கில் வருகிறது.
10. வேளூரில் என்றிருக்க வேண்டும்.
11. மடவாலையம்
12. 10 பணம்—1 பொன்.
13. பூசாரி என்றிருக்க வேண்டும்.

செப்புப் பட்டயம் எண் : *7*

கிடைத்த இடம் :

தற்போதுள்ள இடம் : *நெய்வேலியில் உள்ள என்.எஸ் பெரியசாமி அவர்களிடம் உள்ளது.*

காலம் : *சகம் 1555, கலி 4734, ஸ்ரீமுக ஆண்டு. கி.பி. 1633*

முற்குறிப்பு : *கல்வெட்டு (காலாண்டிதழ்) எண் 22, பக்கங்கள் 25-46.*

அரசர் : *வெங்கடபதி நாயக்கர்*

செய்தி : *வலங்கை இடங்கைச் சமூகத்தாருக்கு ஏற்பட்ட பிணக்கை வெங்கடபதி நாயக்கர் விசாரித்து இடங்கைக்குச் சார்பாக நீதி வழங்கியதையும், இடங்கையாருக்கு வெற்றி கிட்டிட உதவிய இராச நாராயணய்யர் என்பவருக்குப் பண்ணாட்டார் ஆகிய வன்னியர் கொடை அளித்தது பற்றியும் தெரிவிக்கிறது.*

பட்டய வாசகம் :

## முன் பக்கம்

1 *ஸ்வஸ்தி ஸ்ரீ மன் மகா விஷ்ணுவானவர் தம்முட பாதார விந்தத்தினாலே அளக்கப்படானி(ன்ற)*

2 *பூலோகமெங்கும் அசையாமல் காத்து செயஸ்தம்பம் னாட்டி வைக்கும் வண்ணிய குல மகா மண்ட*

3 *லாதீஸ்வரன் கண்டரில் கண்டன் மிண்டரில் மிண்டன் வண்டராவுத்தன் உத்தண்ட கோலாகலன் யிடங்*

4 *கைச் சமய குலதீரன் மதியாத வன்னியப் பெருமாள் மணிமகுட முடி மாலை சூடும் மனோபயங்க*

5 *ரன் யீழ மிலங்கையுந் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேஸ்வரன் நவகண்ட சக்கி*

6 *றவர்த்தி மலை கலங்கிலும் மனங்கலங்காதவன் ஒரு கொடைக் கீழ் உலக முழுவதும் ஆண்(ட) ராசகோலா*

7 கலன் சுவாமி கயிலாசகிரிக்கு பிறதானிக்கராகவும் சதகோடிச் சத வருஷமான அக்கினி பாண

8 ம் பெத்தவர் சங்குநிதி பற்பநிதிக்குடையவரான குபேரனைப் பொக்கிஷமாகப் படைத்தவர் கண்ட

9 னாடு கொண்டு கொண்ட னாடு விடாத மகமேரு சமான வங்ஷ னாராயணன் வங்கிஷ பரிபாலகர்

10 வங்கிஷ சிந்தாமணிகர் செங்கழுநீர் புஷ்பம் வாடாத மாலை வற்ணத்தடுக்கு(யி) வலம்புரிசங்கும் பஞ்ச

11 வற்ணப்பாவாடை உடனே காமாட்சி அம்மன் கையி முத்து மாலிகையும் மோகனப் பதக்கமும் அழிவி

12 லாச் செல்வமும் அதிகவரம் பெத்தவர் அக்கினியில் பிறந்து அம்பிணுரங் கண்டவர் கெங்கை கொ

13 ண்டான் சோழந் திருமுடி காத்தவர் யீயானாட்டுக் கிறவனாகிய யிலவலன் வாதாவியைச் செயித்துக் கா

14 கமாரிஷி கன்னி அபிமானங் காத்தும் சோழநாடு விளங்காத்து[1] துஷ்ட ராட்சதாளைக் கொன்றும் அறுபத்துனா

15 லடிக் கம்பத்திலேறி` நமனைப் பசாரித்த வன்னிய குலராசன் முன்னூல் பின் குடிமி[2] புலிக்கொடிப்[3] பதா

16 கையும் அஞ்சபஞ்ச விருத்தும் பெத்த யிடங்கைச் சமைத்துக் கதிபதியானவர் கல கண்டிகைத் தேரு

17 ம் அக்கினிப்புரவியும் சாமித்துரோக வெண்டையந் தவள சங்கமும் செகசம்புக் குடையும் பஞ்சமு

18 கத் தீவட்டியும் முடைத்தான் கலை சாம்மிறாச்சி[4] லக்ஷ˜மி னிவாசன் சிவசமைய விஷ்ணு சமைய

19 தேவப் பிறாமண காரிய துரந்தரர் ஆயின்ரொக்கி அஷ்ட ஐஸ்வரிய வில்விசைய பராக்கிறமர் எழுகரை

20 ர நாட்டுக் கதிபதியான சறுவாம்மானி யாபிமானங் காத்தவர் விபூதி ருத்திராக்ஷ மாலிகாபரணர் அன்

21 னதான வினோதர் சகல திறம் பரிபாலகர் குமாரசுவாமியையும் துர்கையும் படைத்தலவராகப் ப

22 டைத்த பண்ணாட்டாரிட கீற்தி வற்கப் பிறப்பு வழி விளங்கு விபரம் தேவி அனுக்கிறகத்தினாலே

23 வேத மோதி விளங்கிய சறுவ சிவ தயாபரனான வில் வீர பராக்கிறமரான **ருத்திரப்பள்ளிய**

24 **ஈர் குமாரராகிய நீலகங்கன் வச்சிரபாகன் கங்கை பரிபாலன் சம்புகுல வேந்தன் பரசுராமன்** யி

25 வர்களாகம் கதை பூறுவம் னாலு வேதத்துக் கஞ்சாம் வேதமென்றும் மகாபாரதம் விளங்கின

26 து அந்த சொச்சம் நின்றது வாதாவியைச் செயித்து ருத்திரப் பள்ளியார் ஆண்டது வாதாவி ரத்தி

27 ணாகிரிப்பட்டன மீழ மிலங்கை யிமையோற் பற்வத மெட்டுத் திக்கு மஷ்டதிக்கு பாலகர் கா(வ)

28 லாகிய செம்பூத்தீபம் ஆதிசேஷன் ஸஹஸ்ர பணா பணிய பரிசத்து த்வ தஸபுவன மத்யலோக ஜம்பு

29 ற்தீப மகாமேரு தெக்ஷண பார சம்பரதஹ கண்ட பிறபஞ்சயம் அங்கதேம்[5] முதல் ரெவண தேசபரியந்

30 தம் யிப்படி விளங்கா நின்ற அபத்தாறு[6] தேசாதி தேச மீழ மிலங்கையும் திறை கொண்டருளிய ராச

31 ராசேஸ்வரன் நவகண்ட சக்கிறவற்த்தி மலை கலங்கினு மனங் கலங்காத வில்வீர பராக்கிறம ருத்

32 திரப் பள்ளியார் வரத்தில் வந்த நீலகங்கன் கெங்கை பரிபாலன் வச்சிரபாகன் பரசுராமன் சம்புகு

33 ல வேந்தன் யிந்த அயிவர் மரபில் வந்த **பார்ப்பள்ளி யென்றும் துட்டப்பள்ளி யென்றும் சிஷ்டப்பள்ளி யெ**

34 **ன்றும் வன்னியப் பள்ளி யென்றும், அரசப் பள்ளி யென்றும் யிப்படி அஞ்சு சாதிப் பள்ளியும்** தேச தேச மெ

35 ல்லாம் பரவி நிற்கும் பண்ணாட்டார் சங்கோகிகையில் விருது பஞ்சவர்ணப் பாவாடையை வலக்கைய்

36 யார் பிடுங்கும்போது சங்கொ(ற்)தி சேலம் அழகாபுரம் பண்ணாட்டாருடன் முறைசெய்யும்போது யிட

37 ங்கைச் சமையம் பண்ணாட்டார் கூட்டம் சேலஞ் சீமை எழுபத்தாறு நத்தத்திலுள்ள பண்ணாட்டார்க

38 ளும் வெளியூர் னாடு முப்பத்திரெண்டு கிறாமத்திலுள்ள பண்ணாட்டார்களும் ஆதினாடு அறுபத்தி னாலு நத்

39 தத்திலுள்ள பண்ணாட்டார்களும் தம்மம்பட்டி மங்கல
புரத்திலு ள்ளோர்களும் ராசிபுரனாடு சேந்தமங்கல

40 ம் ஏழூர்னாடு பரமத்தி பரித்திப்பள்ளி னாடு மணலி
னாடு தகடப்பாடி னாடு பூந்துறை னாடு பூவாணி னாடு
சா

41 ம்பள்ளி னாடு ஓமலூர் அஞ்சுகரை னாட்டிலுள்
ளோர்களும் தளம்புச்சீமையிலுள்ள வன்னியரும் தென்க

42 ரைக் கோட்டை யிது முதலாகிய தேச தேசத்துப்
பண்ணாட்டார் களும் யிடங்கைக்குள்ளாகிய சற்வ சென

43 ங்களும் திக்குத் திக்குக் கூட்டங் கூடி நியாயந்
தீராதபடியினாலே சேரமண்டலம் சேரனாட்டில்
திருவணி

44 முத்தாநதி சூந்த[7] சேலமாநகரம் கருப்பூர் தாபரமாக
யிடங்கையார் வந்திரங்கும்போது வலங்கை

45 ய்யார்கு மிடங்கைய்யாற்கும் கை கலந்து
சண்டையாமெங்குற தறிந்து சேரமண்டலம் சேலமாந

46 கரம் மூன்றாம் வீட்டிக்கு னாலாம் வீடாய்ச் செங்கோல்
செல்லுத்திய கம்பளராச ராசேசுரன் தினை புவனாதி

47 பன் செவுகுலதீபகன் முல்லையந் தார் மார்பகன்
பதினெட்டு மன்னிய மிண்டன் நரலோகர் கண்டன் வ

48 ங்கிஷ மாற்தாண்டன் சேர சோள பாண்டிய
வல்லாளராய மனோபயங்கரன் மண்டல மதிக்கு ம

49 திமுகவதனன் பனிரெண்டு கட்க மதகெசம் படைத்த
பரி(தி) குலதீரன் சதுர்வேத பார(ா)யண தாதாச

50 ாரிய சிஷ்னாகிய[8] பட்டாபி மேக பரிபூறண
தயாபரனாகிய **வெங்கிடபதி னாயக்கரும் தளவாய் பெத்த**

51 **ளனாயக்கரும்** மத்திய ஸ்தானத்திலே யிருந்து கொண்டு
வலங்கைச் சமயக் காரியக்காறரை அழை

52 த்து வுங்கள் வலங்கை யாகம் புராண கதையுண்டா
னத்தை ஓதச் சொல்லிக் கேட்டதன் பின் யிடங்கைச்

53 சமயத்துக் காரிக்காறரை[9] அழைத்து யிடங்கை யாகம்
புராணமும் ஓங்கள் பிறப்பு வளப்பு உண்டான

54 புராணங்களை அழைப்பிக்கச் சொல்ல ஆதினாட்டுக் கதிபதியான னாடு சேவர்க் கவுண்டரும் பாண்டிய
55 ல சீர்மையி லாறூரிலிருக்கும் பிறுஹ்ம வங்கிழத்தில் மனு விக்ஞான சாஸ்த்ர வேதாகம புராணம் யி
56 டங்கை வலங்கைச் (சமயார்த்தம்மும்) யிடங்கைய்யார் பிறப்பு வ(ள)ர்ப்பும் வன்னிய புராணமு மறிந்த யக்ஞ
57 நாராயண தீக்ஷத குமாரன் ராசனாராயண அய்யரவர்களை அழைச்சுவந்து விடக் கம்பளரா
58 யருடன் பிறசங்கம் பண்ணுகுறார் ஸ்வாமி ஆதிகாலத்திலே யிடங்கை வலங்கை யெங்குற பேதமும் ப
59 ரமேஸ்வரன் பாறவதாதேவி அம்மனைத் தொட்டு வந்தது. அந்த ஆகமமோதிய பின் ரெண்டாவுது சிவ
60 னாரிடத்து பாகம் பிறவேணுமென்று அம்மன் பாதாள கம்பா நதியில் அரிய தபசு பண்ணி பரமேஸ்வ
61 ரருட வாமபாகம் பெத்தது, மூன்றாவது யிந்த யிடங்கைக் குடை யவர் வர சிவனும் தேவேந்திரனும
62 ாம்: வலங்கைக்டையவர் விறும தெவனும் பிறுங்குமகா ரிஷியு மாம்; சரீரக்கூறில் ரெத்தம் மாங்
63 கிஷம் சற்மம் நேத்திரம் கருமுழியு மிடங்கைக் கூறுமாம்; எலும்பு நரம்பு மூளை நிணம் யிது வலங்கை
64 க்கு சேந்தது; வலங்கைச் சாதி பத்து, யிடங்கைச் சாதி எட்டு, ஆக பதிநெட்டுச் சாதிப் பிறப்பு வளப்பு மே
65 ாதியபின் **யிடங்கைப் பெரியோனாகிய பண்ணாட்டார்** பிறப்பு வளப்பு எப்படி யென்றால் வன்னிய புர
66 ாணம் பூறவகாலத்தில் பரமேஸ்வரர் துவாரபாலகருக்கு மூன்று பிறப்பு சத்துருவாக வாவென்று சாபங்
67 கொடுக்க அவிதாரத்தில் யிரணிய நிரணியகசிபு வென்றுரு பிறப்பு, ராவண கும்பகற்ண நென்றொ
68 ரு பிறப்பு, சிசுபாலன் தென்றவக்கிற நென்(ெ)றாரு பிறப்பு யிப்படி மூன்று பிறப்பு மித்துரு சத்துருவாக
69 வந்தனாள் சொச்சம் நின்றது வில்வலன் வாதாவி யென்றும் ராக்ஷதனாகப் பிறந்து சொற்க மத்திய ப

70 ஈதாள லோகம் மூன்றுங் கொள்ளையிடும்போது சகலமான தேவரிஷி கெணங்களெல்லாரும்

71 கைலாசகிரியில் பரமெஸ்வரருடன் முறையிடும்போது சுவாமியா ரந்த க்ஷணம் செம்பு மாமு

72 னீஸ்வரனை வரவழைத்து உம்முட வரப்பிறகாத அக்கினி குமார வன்னியனை அழைப்பிக்க வே

73 ணுமென்ன அப்போ விஸ்வகர்மன் யாகசாலை யுண்டுபண்ணப் பாற்வதா தேவியம்மனிடத்து

## பின் பக்கம்

1 வுள்ளங்கை ஓம குண்டமாக பரமசிவன் நெத்திக் கண ணக்கிநியாகச் சிவன்(ந்) திருமார்பிலணிந்த செங்க

2 மூனீர் மாலையைச் செம்பு மாமுனிவர் வாங்கி பிறம்மா வேதமோத செம்பு மாமுனிவர் ஆகருஷ்ண மந்

3 திரத் தியானம் பண்ணி திருப்பாற்கடலில் அமுற்தத்தி லுதையஞ் செய்த நாராயண மூற்தியே நீர் வ

4 ன்னிய குமாரனாய் யிடங்கைக் காத்தனாய்த் தேவ தேவாதிகள் சிறை மீள்க வரவேனுமென்று ஓமாக்

5 கினியிற் போடக் கறுகறுத்த மேனியும் கறுப்புச் சடையுங் கட்டிய கச்சையுங் கைவில்லும் முதுகில

6 ம்புறாத் தோணியுந் தோளில் முன்னூலும் மார்பிலணிந்த பஞ்சவர்ணத் தார் வட முத்து மாலிகை வண்ணத்த

7 டுக்குஞ் செங்கழுநீர் வாடாத மாலையும் பூசிய சந்தனமு மரையில் வீரகிங்கினி வீரிட்டலறக் கை

8 யில் வீர வாளும் பஞ்சவற்ணப் பாவாடை வீசப் புலிக்கொடிமேல் நோக்கி வரச் செக சம்புக் குடை நிழற்

9 அகோர கோபத்துடன் வில் வீரன் பிறந்து நிற்கச் சிவன் மந்திர உபதேசம் பண்ண மகாயரம்10 பெத்து வாதாவிய்

10 யைச் செயித்து வன்னிய குமாரனாகிய ருத்திரப்பள்ளி யார் பிறப்பு வளப்பு ஆகையினாலே பஞ்சவன்னப் பா

11 வாடையு மறுகால் புணரிகாசனமுஞ் செக சம்புக் குடையும் பஞ்சமுகத் தீவட்டியும் படைத்த யிடங்கைப் செ

12 பரியோனாகிய பண்ணாட்டாரென்று கம்பளராசனுடன் ராச னாரண அய்யன் சொல்ல வலங்கையார் வி

13 யாக்கிறம் போலெ சீறியெழுந்து வித்துவான் கட்டின கட்டு யெங்களுக்குச் சம்மதியோ காஞ்சிபுரத்திலே

14 பிறமாணத்திலே ஒப்பிக்கச் சொல்லு மென்று கம்பளராயனைக் கேட்க கம்பளராயனு மவர்கள் சொன்ன

15 பிறகாரம் ஒப்பிய்யு மென்ன ராசனாறண அய்யனும் சம்மதித்து யிந்த ஸ்தலமே காஞ்சிபுரமென்று பொ

16 ன்னம்மன் சன்னதியில் யிடங்கை வலங்கை திருவெழுத்து ரெண்டு மெழுதி அக்கினி பிறவேசம் பண்ண வல

17 ங்கைத் திருவெழுத்து வெந்து போச்சு யிடங்கை திருவெழுத்து வேகாதபடியினாலே கம்பளராயனு மதி

18 க சந்தோஷமாகி ராசனாறணய்யனுக்கும் பண்ணாட்டா ருக்கும் வெகுமானமுதவி எடங்கைப் பெரியோ

19 நென்றும் விருதுடைய பண்ணாட்டாரைப் பட்டணப் பிறவேசம் பண்ணி வச்சு அனுப்பி விட்டார் வெகு சந்

20 தோஷத்துடன் தேசதேசத்துப் பண்ணாட்டாரெல் லோரும் ஏகஸ்தராய் நம்முட தகப்பன் செம்புமா முனிவரா

21 மே செம்பு மாமுனிவர் ஓமாக்கினியிதிற் பண்ணாட் டாரை வங்கிஷோத்தாரணம் பண்ணப்பட்ட செம்பு

22 மாமுனிவராம் ப்ரம்ம வங்கிஷ சதுற்வேத பாரயண தர்ம சாஸ்த்ர நிருக்த சகலாகம புராண சாஸ்த்ர வயித்திய

23 சாஸ்த்ர (ரி) வாக்ய சித்தாந்த கணிதஹ ப்ரவீணரான (அநேத் வச) அன்ன வ(ா)ஹந யக்ஞோபவீதாலங்கிருத

24 காயத்ரி கவச சாவித்திரி த்யான சரஸ்வதி வாத்யாதி காரரான பூர்வ சிகாப்பிராமண ஹோமகுண்ட ஸ்தா

25 பநாச்சார்ய ப்ரதிக்ஞாகுண ருக்வேதா(சார்)யான ஹரித கோத்ர ஆஸ்வலாயன சூத்ராதிகாரரான யிறவா

26 ச நல்லூராதிபன் க்ராமாத்பநாதர் ராசநாராயணப் பெருமாள் பாத மறவாத ராசனாறணய்யரவர்கள்

27 செம்புமா முனிவரே யிவராகியும் நம்முட பண்ணாட்டார் குல குருவாகியும் நம்முட வன்னிய புரொகிதராகி

28 யும் நம்முட பண்ணாட்டார் குலவங்கிசாபிவிற்தி பண்ணின தகப்பனாகிய ராசனாறணைய்யநவர்க

29 ளுக்கு தேச தேசத்துப் பண்ணாட்டார் ரெல்லோருங்கூடி ஏகஸ்தராய் நிசவற்தனை எழுதிக்குடுத்த னாள்

30 ஸ்ரீமன் ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சுகாப்தம் 1555 சுகேத கலியுகமானது 4734 இதி

31 ன் மேல் செல்லாய் நின்ற ஸ்ரீமுக னாம சம்வச்சரம் தெக்ஷணாயனம் காற்திகை மாசம் சாரிது கிஷ்ண பக்ஷ

32 ம் புதவாரம் பஞ்சமியும் பூச நக்ஷத்ரம் சுப்பிறனாம யோகம் தை துலவா கரணம் யின்னாள் யிருபத

33 ரை னாழிகைக்கு மேல் சுபக்கிறகங்கள் நோக்குண்டான மீன லக்கினத்தில் சந்திர ஓரையில் ராசச வே

34 வளையிலு நிசவற்தனை சாசனப் பட்டயம் எழுதின தாவரம் சேரமாமலை சேரனாட்டில் திருவணிமு

35 த்தாநதி சூழ்ந்த சேலமாநகரில் கிளிவன்னனாதர்[13] சன்னதியில் அழகிய பொன்னம்மன் சாட்சியாய்

36 வருஷம் பிறுதியும் குருகாணிக்கை பெரிய குடிக்கு ரெண்டு பணமும் சின்ன குடிக்கு ஒரு பணமும்

37 கலியாணத்தில் தாரை வாற்குற யிட்ட னீர் பணமும் கட்டின யேரொன்னுக்கு நாலு வள்ளந் தா

38 னியமும் ஆசந்தாற்கமாகக் குடுத்து வருகுறோமென்று எழுதிக் குடுத்த ஸாஸநப் பட்டையம் **நீல**

39 **கங்கன் வச்சிர பாகன் கங்கை பரிபாலன் சம்புகுல வேந்தன் பரசுராமன்** இவர்கள் சந்ததி

40 யாகிய அழகாபுரம் மெய் பொகராயக்கவுண்டர், குமாரசுவாமிக் கவுண்டர், எறபகவுண்டர்,

41 சேலம் முதலிக் கவுண்டர், பிரமிச்சி கவுண்டர், செவி கவுண்டர், அனதாரிபட்டி அனதாரி கவுண்ட

42 ர், பருவத கவுண்டர், அய்யம் பெருமாக் கவுண்டர், அயோத்தியா பட்டணம் தெய்வராயக் கவுண்ட

43 ர், செல்லப்ப கவுண்டர், ளாழிக்கலமங்காக் கவுண்டர், ஓலைப் புடையார் காங்கய குருக்கவுண்டர், கந்த

44 ப்பம் பட்டி கந்தப்ப கவுண்டர், கடத்தூர் வாத்தியாக் கவுண்டர், சின்னாக்கவுண்டர், சீரகப்பாடி நல்லிரிசாக் கவுண்டர்,

45 புத்திரி கவுண்டர், சென்னகிரி ஒட்டைனாழி யிரிசாக் கவுண்டர், வெள்ளைய கவுண்டர், வீரபாண்டி மந்திச் சின்னா

46 க் கவுண்டர், பாலம்பட்டி வடமலை கவுண்டர், கோட்டைக் கவுண்டர் வயிருசி வெத்திலைப் பிரமிச்சி கவுண்டர் தேவ

47 த்தாக் கவுண்டர், பிச்சபிள்ளை பிச்ச கவுண்டர், மல்லூர் மாணிக்க கவுண்டர், கூத்த கவுண்டர், அண்ணாமலை பட்

48 டி சேர்வை முத்தாக் கவுண்டர், பொன்பரப்பி பெரிய குப்ப கவுண்டர், ஆண்டி கவுண்டர், அம்மாபாளையம்

49 ஆட்டையாம்பட்டி ராய கவுண்டர், பிச்ச கவுண்டர், வெங்காப் பட்டி குழந்தைக் கவுண்டர் செந்தலைக் கவுண்டர்

50 மூக்குத்திதாசன், வாழைக் குட்டைப் பட்டிப் புத்திரி கவுண்டர், சின்னாக் கவுண்டர்; அம்பு கட்டி பாளையம் குட்

51 டையாக் கவுண்டர், பெத்தாக் கவுண்டர், மின்னக்கால் கோரை யிரிசாக்கவுண்டர், சின்னாக் கவுண்டர், வெம்படித

52 ாளம் ஆணைக்குட்டி கவுண்டர், கல்பறை சின்னப்பாலிக் கவுண்டர், சேவாக் கவுண்டர் யிளம்பிள்ளை யிளமைக

53 வுண்டர், மொந்தைக் குட்டி கவுண்டர், நயினாம்பட்டிச் சேர்வை நயினாக்கவுண்டர், தொக்காதுக் கவுண்டர், வெ

54 ள்ளையாக் கவுண்டர், அய்யம் பெருமாக் கவுண்டர், வட்டமலைக் கவுண்டர், நயினாக் கவுண்டர், செவாக் கவுண்ட

55 ர், நல்லரையன் பட்டி பூவாக் கவுண்டர், குப்ப கவுண்டர், வடக்கு முகம் பிரமிச்சி கவுண்டர் கரியபெருமாள் க(ப)

56 ம்பை கவுண்டர், அரியாகவுண்டர், நயினாக் கவுண்டர், வெள்ளைய கவுண்டர், வெடிச்சி கவுண்டர், மொண்ணைய கவு

57 ண்டர், நல்லாக் கவுண்டர், வடமலை கவுண்டர் மற்று முண்டாந உறவின் முறையாகும், வெளியூர் னாடு பச்சையாக்

58 கவுண்டர், புளி வாண்டை யிரிசாக் கவுண்டர், நயினாக் கவுண்டர் சின்னாக் கவுண்டர், மூற்தி கவுண்டர், மன்னாக் கவுண்ட

59 ர். தேவராடிக்கவுண்டர், மத்துமுண்டாந உறவின் முறையாகும்: ஆத்தினாடு சேவாக் கவுண்டர், அம்பாயிரக் கவுண்ட

60 ர், வரதன் கவுண்டர், கறுப்புடையார் கூத்த மூப்பன், மத்து முண்டாந உறவின் முறையாகும், ராயப்பநல்லூர் காங்க

61 ய வுடையார், வெங்கிடாத்திரி உடையார், மத்தும் பனிரெண்டு பத்திலுள்ள உறவின் முறையாரும்; மங்கலபுரம் குரு

62 னாதபிள்ளை, மத்து முண்டான உறவின் முறையாறும்; ராசிபுரம் பிரமிச்சி கவுண்டர், உடையாக் கவுண்டர், மத்துமுண்

63 டான உறவின் முறையாரும்; சேந்தமங்கலம் குள்ளச்சேருவை காறன் குள்ளத் தாண்டவ கவுண்டர், ஏமூர் மாணி

64 க்கவுண்டர், பரமத்திச் சீமை வேலாயுதம் பாளையம் அனந்த கவுண்டர், மத்து முடதனாடு, பாண்டிய தேசத்திலுண்

65 டான உறவின் முறையாரும்; துற்கம் வெங்கிடாத்திரி கவுண்டர் பரித்திபள்ளிப் பாலாண்டிடைக்கவுண்டர்,

66 தாழையூர் நொறுக் கிரிசாக் கவுண்டர், வைகுந்தம் அய்யம் பெருமாக் கவுண்டர், வேல்நத்தம் வடமலை கவுண்டர், ஆட்டை

67 யாம்பட்டி செங்கோட கவுண்டர், திருமலை கவுண்டர், கண்டக மாணிக்கம் செவிகவுண்டர், தாண்டி கவுண்டர், மிமாப்பட்

68 டி வெங்காக் கவுண்டர், வேலப்ப கோவில் பரித்திப் பள்ளி னாடு முப்பத்திரெண்டு கிறாமத்திலுள்ள உறவின் முறையாரும்;

69 யிரனாபுரம் பூவனி னாடு அரசிராமணி ஆனைக் கவுண்டர், கன்னியாக் கவுண்டர் ராம கவுண்டர், கள்ள குளம் வாத்தியாக் க

70 வுண்டர், யிடப்பாடி பிச்சி கவுண்டர், ஆடையூர் நயினாக் கவுண்டர், பூவாணி னாட்டு அரியாக் கொத்தன் சிவந்தாக் க

71 வுண்டர், சித்தார் ஆவணி வேலுயிருப்பளி சமுத்திரம் கச்சுவளி யிளம் கவுண்டர் முன்னுள்ள உறவின் முறையாரு

72 ம்; ஓமலூர் அமரகுன்றி தாண்டவராய கவுண்டர், அத்திக் குட்டை பிரம கவுண்டர், அழகப்ப கவுண்டர், மேச்சேரி கு

73 ட்டையாக் கவுண்டர், தலைக்காவல் யிரிசாக் கவுண்டர், தீவட்டி கவுண்டர், யின்னம் ஓமலூர் சீமையிலுள்ள

74 உறவின் முறையாரும்; சாம்பளி உத்தண்டிச் சேருவை காறன்: புத்திரிச் சேருவை காறன் குளத்தூர்

75 நல்லா கவுண்டர், மத்து சாம்பள்ளி னாட்டிலுள்ள உறவின் முறையாரும்; அந்தியூர் மந்திக் கவுண்டர், யிரச

76 ாக் கவுண்டர், அரிச்சிக் கவுண்டர், அங்கிலுள்ள உறவின் முறையாரும் தெங்கரைக் கோட்டை வடமலைக்க

77 வுண்டர், கோணப்ப கவுண்டர், அந்தச் சீமையிலுள்ள உறவின் முறையாகும்; தர்மபுரிக் கோநேரிக் கவுண்டர், க

78 டகத்தூர் பச்சையா கவுண்டர், மத்துமந்தச் சீமையிலுள்ள உறவின்முறையாரும்; காவேரிப்பட்டணம்

79 அணிச்சியாக் கவுண்டர், தட்டைக்கல் கோனேரி கவுண்டர், நெங்கல் குப்பக் கவுண்டர், திருப்பத்தூர் மாணிக்க

80 கவுண்டர், அணிச்சி கவுண்டர், பின்னும் உத்த தேசத்திலுண்டான உறவின் முறையாகும்; கீழ் தேசத்துறவி

81 ன் முறையாகும்; தெற்கு மேற்கு தேசம் யிது னாங் கெல்லைக் குள்ளாமயிம்14 சேது முதலான பஞ்சாஷ்ட

82 கோடிவிஸ்திற பூமண்டலத்தில் உண்டான உறவின் முறையா ரெல்லோற்கும் செம்பு மா முனிவ

83 ரல்லோர் தகப்பன் யிந்த யுகத்தில் நம்முட பண்ணாட் டார் வங்கிஷம் அபிவிற்தியாக்கிவிக்கும் ரெண்டா

84 ஞ் செம்பு மாமுனிவர்ராகிய யெக்ஞ நாராயணதீக்ஷதர் ராச னாராயண அய்யநவாளுக்கு நிசவற்தனைச் சாச

85 னப் பட்டையம் யெழுதிகுடுத்து வருஷம் பிறிதியும் பெரியகுடிக்கு ரெண்டு பணமும் சின்னகுடிக்கு ஒ

86 ரு பணமுங் கலியாணத்தில் தாரைவாக்குற யிட்டு நீர் பணமுங் கட்டின யேரொண்ணுக்கு னாலுவள்ள

87 தானியமும் ஆசந்திராற்கமாக புத்திர பவுத்திர பாரம்பரிய மாய்க் குடுத்து வருகுறொம் யிதில் தமுக்கமானா

88 ம் அந்தந்தவூர்க் கவுண்டன் வாங்கிக் குடுக்கத்தக்கவன் கல்லும் முள்ளும் பத்தரத்தாலுமப்பள்ளி புத்தறாதவன் ஆகை

89 யினலெ கல்லுங் காவேரியுள்ளனவும் ஆசந்திராற்கமாக புத்திர பவுத்திர பரம்பரியமாய் குடுத்து வருகுறோ

90 மென்று நிசவற்தனை எழுதிகுடுத்தோம் தாநாயவிநிவிக்கிற யோக்கியமாக ஆசந்திராற்கம் புத்திர பவுத்தி

91 ர பாரம்பரியமாய நீங்கள் அனுபவிக்கக் கடவராகவும் யிந்த கீற்தி பிறதிஷ்டை பண்ணாட்டார் சகலம

92 ான பேருக்குமுண்டு யிந்த தற்மபரிபாலனம் பண்ணிந பேருக் காசி ராமேசுரத்திலே கோடி சிவலிங்க பிற

93 திட்டையும் பிறதிட்டைப் பண்ணிந பலனை யடைவார்கள் யிந்த தர்மத்தை யாதொமொருவன் விகாதம் பண்ணுகு

94 ற நினைகுற சொல்லுகுற யிந்த முணுபேருக்கும் தோஷமென்னா வின்றால் கெங்கை கரையில் ஏழு காராம் ப

95 சுவைக் கொன்ற தோழமும் அஸ்வஹத்தி பிறமஹத்தி ஸ்ரீஹத்தி சிசு ஹத்தி அஞ்சுமகா பாதகங்கள் பண்ணி

96 னன் தோழத்தை அனுபவிக்க கடவர் யின்னம் ஏழா நரகத்தில் கிழா நரகத்திலே போகக் கடவராகவும்

97 காமாட்சி யம்மன் துணை

சுபமஸ்து

கைப்பிடியில் எழுதப்பட்டுள்ளது. வளையத்திலோ அல்லது கயிற்றிலோ கோர்த்துக் கட்டுவதற்குத் துவாரம் உள்ளது.

*பிடியின் முன்பக்கத்தில்*

ராசணாறாயணய்ய
னவர்களுக்கு எழு
கரைணாட்டுப் ப
ண்ணாட்டா ரெழுதி
க்குடுத்த சாதனப்ப
ட்டையம் உ சுபம
ஸ்து

*பிடியின் பின்பக்கத்தில்*

1) யிடங்கை வாத்தியம்
2) மேள முதலான தா
3) ரை கொம்பு துடுப்பு
4) தப்பட்டை வாத்திய வுள்
5) பட

1. வளங்காத்து என்று படிக்கவும்.
2. பின்குடுமி என்று படிக்கவும்.
3. வரிக்குக் கீழ் எழுதப்பட்டுள்ளது.
4. சாம்ராச்சிய என்று படிக்கவும்.
5. அங்கதேயம்.
6. அய்ம்பத்தாறு.
7. சூழ்ந்த
8. சிஷ்யனாகிய
9. காரியக்காரரை
10. மகாவரம்
11. தமிழ் எண்ணில் உள்ளது.
12. தமிழ் எண்ணில் உள்ளது.
13. கிளிவண்ணநாதர்
14. குள்ளோமும் என்று படிக்கவும்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *8* |
| கிடைத்த இடம் | : | |
| தற்போதுள்ள இடம் | : | *சித்தாண்டபுரம் நாட்டுக் கவுண்டர் ஏகாம்பரக் கவுண்டரிடம் உள்ளது.* |
| காலம் | : | *ஜய ஆண்டு, வைகாசித் திங்கள் 15 - ஆம் நாள்.* |
| முற்குறிப்பு | : | *தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொல்பொருள் அலுவலர் கிருஷ்ண மூர்த்தி இது பற்றி ஒரு கட்டுரை எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அக்கட்டுரை எதில் வெளியாகி உள்ளது என்பது தெரியவில்லை.* |
| அரசர் | : | *செகதேவராயர்.* |
| செய்தி | : | *சிறுதலைப் பூண்டியைச் சேர்ந்த உலகளந்த கவுண்டனும் ஏகாம்பர கவுண்டனும் மேற்குத் திசை சென்று இறுப்பாளி நாயக்கனுடன் நட்பு பூண்டு வாழ்ந்து வந்தனர். இறுப்பாளி நாயக்கன் கானுகாம் பள்ளிக்குச் சென்றபோது ம்ரியண்ண கவுண்டனும் அவரது ஆட்களும் போருக்கு வந்தனர். அவர்களோடு மேற்காணும் இருவரும் போரிட்டு புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். தமக்கு வெற்றி தேடித்தந்த கவுண்டர்களுக்கு, இறுப்பாளி நாயக்கன் நாட்டாண்மை பட்டம் வழங்கிச் சிறப்பு செய்ததும் மைசூர் அரசர் சிறப்பு செய்ததும் கூறப்பட்டுள்ளன.* |
| பட்டய வாசகம் | : | |

## சிவமயம்

1. *சிறுதலை பூண்டியிலிருந்து ஒலகளந்த கவுண் டனும் யேகாம்பிறி கவண்ட*

2. னும் ரண்டு பேறும் மேர்க்கே யேரி வறச்சே
சிங்கிரி பட்டி கணவாயிலே நூரு வேடராகிறவர்

3. கள் வந்து மரிச்சிக் கொண்டபோது உலகளந்தா
கவுண்டனும் யேகாம்பிரி கவுண்டனும் யிவர்கள் றன்டு

4. பேறும் அவர்கள் மேல் சண்டைகள் செய்து அவர்
களில் நாலுபேரை வெட்டித் துறத்தி விட்டு அப்போ ஆ

5. லாம் பாடி வந்து சேந்து அந்த கோட்டையில் வீட
கட்டிக் கொண்டு நிலையா யிறுந்தார்கள் அப்போ ஆலாம்

6. பாடி கோட்டையிலிறுக்கப்பட்ட யிறுப்பாளி நாய்க்கன்
நீங்களாரென்று கேட்டான் நாங்கள் படையாச்சிகளென்

7. று சொன்னார்கள் ஆனால் நம்பள் பக்கத்திலே யிறுங்
கோளென்று சேத்திக் கொண்டான் யிப்படி அனகே நா

8. ளாயிருந்தார்கள் யிறுப்பாளி நாய்க்கனுக்கும் பென்னா
கரம் தரப்புக்குச் சேர்ந்த கோடாக வண்டனிப

9. டி மரியண்ண கவண்டனுக்கும் யிவர்கள் ரண்டு பேறுக்
கும் சச்சரவுகளாயிறுக்கும் அப்படியி

10. றுக்குர நாளையிலே ஒரு நாள் யிறுப்பாளி நாய்க்
கன் கானுகாம் பள்ளிக்கி பயணமாகி

11. போரபோது அந்த சமாசாரமரிந்து மரியண்ண கவண்
டன் யிவனை யிந்த வேளையிலே கொ

12. ல்ல வேணுமென்று தன்னுடைய ஆள்களைக் கூட்
டிக்கொண்டு முத்தூறு மலைச் சந்துலே வளைச்சி கொ

13. ண்டு யிவனுக்கும் அவனுக்கும் சண்டைகளானதை
யேகாம்பிரி கவண்டன் கேட்டு நம்மதுரையாகி யி

14. றுப்பாளி நாய்க்கனுக்கு அகடு வத்ததென்று ஓடி
போய் கொம்பு தப்பட்டை கத்தி ஆயுதத்துடனே வந்த ம

15. ரியண்ண கவுண்டனுடைய ஆள்களை பன்னிரண்டு
பேரை வெட்டினவுடனே மரியண்ண கவண்டனுடை

16. ய ஆள்கள் சேதமானதே ஓடிப் போனான் அப்போ
யிறுப்பாளி நாய்க்கன் பார்த்து நம்ம உயிர் காப்பாத்தினா

17. னென்று யிவனுக்கு என்னா குடுப்போம் நாம்பளென்று
மனதிலெண்ணி யேகாம்பிரி கவண்டனையும் அழைத்து

18. உனக்கு என்னா வெகுமானம் வேணுமென்று கேட்டான் அப்போ ஏகாம்பரி கவண்டன் எங்களுக்கு சாதி நா

19. ட்டாமை அதிகாரம் வேணுமென்று கேட்டான் அப்போ யிறுப்பாளி நாய்க்கன் உங்கள் பந்து சனங்களை அளைத்துக்

20. கொள்ளுமென்றான் அப்போ ஏகாம்பரி கவண்டன் பந்து சனங்களை அளைப்பித்தான் ஆலாம்பாடி மா

21. ணிக்க கவண்டன் கவுதள்ளி முத்து வவுண்டன் காணுகாம்பள்ளி சென்றாய கவண்டன் மத்தூறு கா

22. ளி கவண்டன் சென்னப்பட்டினம் கோவிந்த கவண்டன் காணுகாம்பள்ளி தொண்ணையக் கவண்டன் பா

23. ளையம் தாத கவண்டன் ஆனை கல்லு கரிராம கவண்டன் ஆரவல்லி தம்பராய கவண்டன் சவுளி கரை வெ

24. ங்கட்ராம கவண்டன் தனி ஆரிமுத்து கவண்டன் டெங்கினி கோட்டை திம்பராய கவண்டன் தெல்லமங்கலம் வே

25. டப்ப கவண்டன் பஞ்சப்பட்டி பச்சா கவண்டன் தல்லி முல்லு அக்கிராம முதலி கவண்டன் முத்தூரு ராம கவண்ட

26. ன் பவழத்தூரு பரசுராம கவண்டன் கொடை மங்கலம் லட்சுமண கவண்டன் தாசம் பட்டி சந்த கவண்டன் மலைவூறு

27. ஒலகளந்தா கவண்டன் நாட்ராம பாளையம் பெரி யண்ண கவண்டன் அனுசெட்டி ராசாமிகவண்டன் எரிகம் மீன

28. கவண்டன் கோடள்ளி வையாபுரி கவண்டன் லட்சு மன கவண்டன் அந்தானள்ளி அல்லிராசி கவண்டன் காணு மாரம் ப

29. ட்டி நஞ்சப்ப கவண்டன் இத்தடை பேணும் மகாநாட்டாருக்கும் காய்கரி பதார்த்தத்துடனே பதினைஞ்சு நாள் வரைக்கும்

30. சாப்பாடு விசாரித்து தாம்பூலமும் குடுத்து சமதாச் சானென்று மகா நாட்டாரும் யிறுப்பாளி நாய்க்கனும் சம்மதித்து யிவ

31. னுக்கு என்ன குடுத்தாலும் நிலை நிர்க்காதென் றா லோசித்து இந்த கவண்டர்கள் சம்மதியால் அந்த ஆலாம்பாடிக்கி சேந்

32. த சென்னபட்டண வரைக்கும் நஞ்சன் கோடு வரைக்கும் ஓசூறு வரைக்கும் மகா நாட்டாணை பட்டகாரனென்றும் உரம்பரை

33. யார் முன்பாக யிறுப்பாளி நாய்க்கன் **சர்வாதாரி வறுஷம் சித்திரையீ 13 தேதியில்** எழுதி குடுத்த பட்டயம் என்ன

34. மென்றால் உன்னுட சாதி தெண்டனை அடிக்கோலும் கட்டக்
கயறும் கூடைக்கல்லும் பிளியமிறாலும் உன் சாதியிலுண்

35. டான தப்பும் வாங்கி கொள்ளுமென்று சாதி நாட்டாண்மை உன்னுதென்று யித்தினை கவண்டர்களும் துரையும் வெகு

36. மானத் தோடே பாலித்தார்கள் யிப்படிக்கி உங்கள் வம்முஷமுள்ள வரைக்கும் மகாநாடு நடத்தி வறுகிறது யினிமே

37. ல் நானுமுங்கள் கோத்திர முள்வரைக்கும் மனவர்த்தி விட்டு விட்டேன் நாட்டானும் மெச்சி யிவனுக்கு சாதிவ ரியும் த

38. டை எண்ணை கடைபாக்கு மகா நாட்டார் விட்ட மானிய மிதுகள் உன்னுதென்று சங்கத்தி வரிமானியம் விட்டார்க

39. ள் இந்த நாடு பூமி ஆகாசம் சந்திர சூரியருள்ள வரைக் கும் சாஷியா ரென்றால் நஞ்சன்கோ

40. டு நஞ்சுண்டேஸ்வரர் மலை மாதேஸ்வரர் ஆலாம்பாடி ரங்க நாயகர் டெங்கினி கோட்டை வெட்ராய சுவாமி ஓசூர்

41. சூட லிங்கேஸ்பரார் மேல் கோட்டை செல்லப் பிள்ளைராயர் திருப்பதி வெங்கட்ட ரமணர் திருவணாமலை அரு

42. ணாசரேஸ்வரர் சீரங்கத்து ரங்க நாயகர் யிந்த நாட்டா மையை யாதா மொருவ னபகரித்தால் அவர்கள் காசியிலே

43. காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போவார்கள் பிராமணரைக்கொன்ற பாவத்திலே போவார்கள்

44. கோவிலை யிடித்த பாவத்திலே போவார்கள் குறுத்துரோகம் பண்ணினவர்க ளெந்தப் பாவத்தில் போவார்களே அந்தப் பாவத்தில் போவார்கள் இப்படி இறுப்பாளி நாய்க்கன் ஏகாம்பிரி கவண்ட

45. னுக்கு எழுதிக் குடுத்த பட்டையம் சயி சிவமயம் யிந்தபடிக்கி உலகளந்தா கவண்டனும் ஏகாம்

46. பிரி கவண்டனும் ஆலம்பாடி நாட்டை யர்ண்டு கொண்டிருக்கும் காலத்தில் பெரியப்ப நாயக்கன் சி

47. ன்னப்ப நாய்க்கன் பாலப்ப நாயக்கன் யிவர்கள்வந்து எங்களுக்கு நீங்கள் வர்த்தனை உங்கள்

48. வீட்டுக்கு ரண்டு பணம் குடுக்கவேணுமென்று கேட்டார்கள் அதுக்கவர்கள் நாங்கள் குடுக்கரதி

49. ல்லை யென்றார்கள். நாங்கள் விடுகுறதில்லையென் றார்கள் யிவர்களுக்கும் அவர்களுக்கும் சச்ச

50. றவு பட்டு ஆடு மாட்டை கொள்ளை ஓட்டினார்கள் அவர்களில் பத்து வேடரை வெட்டிக் கொள்

51. ளையே திருப்பிக்கொண்டார்கள் யிவர்களும் அவர் களும் கூடிக் கொண்டு செகதேவராயரண்டைக்

52. கி போனார்கள் ராயர் பாத்து நீங்கள் வந்த விபறமென்ன வென்று விசாரிக்கும்போ திவர்கள் எங்

53. கள் ஸ்தளத்துக்கு வந்து சேந்தபடியால் நாங்கள் எங்கள் வர்த்தனையே கேட்டோமென்று பெரி

54. யப்ப நாய்க்கன் சொன்னான். அதுக்கு எகாம்பிரி கவண்டன் செகதேவிராயரைக் கும்பிட்டு சொல்லுகி

55. றான் நாங்கள் வன்னிய வம்முஷம் அப்படி கொடோ மேன்றோம். நாங்கள் விடுகுறதில்லையென்று

## பின்பக்கம்

56. இவர்கள் எங்கள் ஆடுமாடெல்லாம் கொள்ளை யிட்டார்கள் நாங்கள் அவர்களை பத்

57. துப்பேரை வெட்டி கொள்ளையத் திருப்பிக் கொண்டோ மென்று யேகாம்பிறி கவண்டனும் ஒ

58. லுகளந்தா கவண்டனும் சொன்னார்கள் அப்போ செக தேவராயர் மெச்சிக்கொண்டு வேடர்

59. கையில் 100 பொன் அபுறாதமாக வாங்கிக் கொண் டா ரப்போ நீங்கள் சவுரியவான்களென்

60. றுமெச்சி உங்களுக் கென்னா வெகுமானம் வேணுமென்றார் அப்போ ஏகாம்பிரி கவ

61. ண்ட னெங்களுக் கின்னம் சாதி அதிகாரம் வேணுமென்று கேட்டார்கள். அப்போ செகதேவ

62. ராயர் உங்கள் பந்து ஜனங்களைக் கூட்டிக் கொள்ளு மென்றார். ஆலாம்பாடி வரைக்கும் சென்ன

63. பட்டணவரைக்கும் காணுகா நள்ளி வரைக்கும் ஓசூர் வரைக்கும் மாடெள்ளி வரைக்கும் ஆ

64. னை கல்லுவரைக்கும் பிக்கிலி பவளத்தூர் வரைக்கும் ஆலாம்பாடி மாணிக் கவண்டன்

65. கவுதள்ளி மூர்த்தி கவண்டன், ஆரவள்ளி தொண்ணையக் கவண்டன், நஞ்சன்னோடு ந

66. ஞ்சுண்ட கவண்டன், கோடள்ளி பெரியாகவண்டன் யின்ன மத்து முண்டான உறவி

67. ன் முறையா ரனைவரும் கிழக்குச் சீமைக்கி கூடி போகும் போது தாரை தப்பட்டை கொம்பு சல்லி

68. கொண்ட சாரைத்துடும்பு பதினெட்டு ஆயுதத்துடனே காஞ்சிபுரம் நாட்டுக்கு போய் காமாஷிய

69. ம்மன் கொவிலிறங்கினார்கள் அந்த ஒபளியிலி ருக்கப்பட்ட கவண்டர்கள் சிரை மீட்டர் கவண்

70. டன், ஐயம்பேட்டை சுப்பராய கவண்டன், ஆரணி பெறுமாகவண்டன் கீழ்குப்பம் பா

71. ணி கவண்டன், உடையான் பாளையம் ரங்க கவண்டன் திருவண்ணாமலை அருணகிரி க
72. வண்டன், தீர்த்தமலை மூர்த்தி கவண்டன் இன்னமத்து முண்டான உறவின் முரையா ர
73. ணவரும் கூடி பதினஞ்சு நாள் வரைக்குமிருந்து ஆலோசனை செயிது ஏகாம்பிரி கவண்டன் எங்
74. கள் வன்னிய வம்முஷத்துக்கு குல குருவாயிருக்க வேணுமென்று துரையே கேட்டார்கள் அப்ப
75. டியே அந்த கவண்டர்கள் சம்மதியினாலே செய வருஷம் வையாசி மீ 15 வெள்ளிக் கிழமை
76. திசமி கூடின சுபதினத்தில் செகதேவராயர் ஏகாம் பிரி கவண்டனுக்கு எழுதி குடுத்த செப்
77. பேடு பட்டையம் என்னவென்றால் துரை பாகு பச்ச வடம் சகலாத்தியும் குடுத்து உங்கள் சாதி
78. யில் அடிக்க கோலும் கட்ட கயறும் குடுத்து உன் வம்முசமுள்ள வரைக்கும் நாடு செலுத்தி வருகு
79. றது சுளி செத்த புளப்பு உன்னுதே யிதுக்காறாகி லும் அபகரித்து அட்டி செய்தோர்களுக்கு 100
80. பொன் அபுறாதம் குடுக்கப்படும் அதுந்தவிர அவன் வீட்டுக்கு மாட்டெலும்பும் வேப்பிலையும் சொறுகு
81. குறது யிதுக்கு சாஷியாரென்றால் காஞ்சிபுரம் ஏகாம் பர நாதர், திருவண்ணாமலை அருணாச
82. லீஸ்பரர், திருப்பதி வெங்கட்ரமணன், சீரங்கத்து ரங்க நாயகர், திருச்செங்கோடு அர்த்தனா
83. ரீஸ்பரர், நஞ்சன்கோடு நஞ்சுண்டேஸ்பரர் மேல் கோட்டை செல் பிள்ளைராயர், யிதுக்கு மேல் யா
84. தாமொறுவன் யிந்த நாட்டை அபகரித்தவன் யித்தினை கோவிலை யிடித்த பாவத்திலே போவார்கள் கா
85. ராம் பசுவை கொன்ற பாவத்திலே போவார்கள் யிந்த படிக்கி செகதேவிராயர் ஏகாம்பிரி கவண்ட
86. னுக்கு எளுதி குடுத்த செப்போடு பட்டையம் சயி ஸ்ரீராம செயம் யிந்த படிக்கி ஆலாம்பாடி மகாநாடும் கா

87. வேரி தேஸேஸ்வர்ர் தேரும் பிரமிச்சி கவண்டன் உப யம் நடத்தி வருங்காலத்தில் வலங்கையானுக்கும் யி

88. டங்கையானுக்கும் சச்சறவு பட்டு உங்கள் விருது வரக் கூடாதென்று பிரமிச்சி கவண்டன் தடுத்தார்கள் அப்

89. போ ஆலாம்பாடி நாட்டிலிறுந்த கவண்டர்களை கூட்டி அந்த வலங்கைய்யாரே அடித்து துறத்தி விட்டு தேஸேஸ்பரர்

90. சாத்திரையே முப்பத்திரண்டு மேள வாத்தியத்துடனே தேரை நடப்பித்தான் வலங்கைய்யார் மய்சூர் கர்த்தரி

91. டத்தில் போய் பிறாது செய்தார்கள் அப்போ கர்த் தர் பிறமிச்சி கவண்டனை அளைத்து விசாரிக்கும் போது பிறமிச்

92. சி கவண்டன் எங்களுக்கு முப்பத்திரண்டு மேளவாத்திய முண்டு அந்த வாத்தியமில்லாமல் தேரை நடப்பிக்கக்

93. சொன்னார்கள். அப்படி நடப்பிக்க மாட்டோமென் றோம். அதனாலே எங்களுக்கும் அவர்களுக்கும் சச்ச ரவு வந்த

94. தென்றான். அப்போது துரை ஆலோசனை செய்து அந்த காவேரி நதியில் வாத்தியத்தை யாறுந் தடுக் கக் கூடாதென்

95. று வலங்கையார் கையில் 100 பொன்அபுறாதம் வாங்கி வைத்து பிரமிச்சி கவண்டனையும் மெச்சி உங்களுக்கு மு

96. ப்பத்திரண்டு மேள வாத்தியம் செல்லுமென்று தீர் மானித்து விட்டு உனக் கென்னா வெகுமானம் வேணு

97. மென்று கேட்டார். அப்போ பிரமிச்சி கவண்டன் எங்கள் சாதி நாட்டாமை அதிகாரம் வேணு மென்று கேட்டான்

98. பிரமிச்சி கவண்டன் கூட வந்த கவண்டர்கள் சம்ம தியினாலே கர்த்தர் மிரமிச்சி கவண்டனுக்கு பாகு பச்சவடம் சகலாத்

99. தியும் வெகுமானங் குடுத்து உன் சாதியில் கலியா ணத்துக்கு பணம் 5 பாக்கு வெத்திலை கட்டு 5 தப்பு ம்ப்பு நீ வாங்

100. கிக் கொண்டு உன் னாட்டை சுகமா நடத்தி வறுகுரது யிதை யாதாமொறுவன் அபரித்தா லெவன் வீட்டுக்கு மாட்டெலும்பும்

101. வேப்பிலையும் சொறுகுறது யிதுக்கு சாஷியாரென் றால் நஞ்சன்கோடு நஞ்சுண்டேஸ்வரர் மலை மாதேஸ்பரர், மேல் கோட்டை

102. செல்பிள்ளைராயர், ஒசூர் சூடலிங்கேஸ்பரர், காவேரி தேஸேஸ்பரர் திருப்பதி வெங்கட்ரமணர், சீரங்கத்து ரங்கசா

103. மி **யிந்த பட்டையம் மய்சூர் கர்த்தர் பிரசித்தி கவண்டனுக்கு எழுதிகுடுத்த பட்டையம்** நலமாயிறுக்கவும் ரா

104. ம செயம் டெங்கிணி கோட்டை யிபுறாம் சாய்பு அதிகாரத்தில் கொளத்தை கவண்டனுக்கு எழுதிக் குடுத்த பட்டையம்

105. என்னவென்றால் உங்கள் சாதியிலுண்டான தப்பு முப்பும் கலியாணத்துக்கு பணம் 5 பாக்கு படி வெத்திலை கட்டு

106. 5 யிந்த படிக்கி யிபுறாம் சாய்பு தீர்மானித்து கொளந்தை கவண்டனுக்கு பாகு பச்ச வடமும் குடுத்து உங்கள் நா

107. ட்டை நீக்கமா ஆண்டுக் கொண்டிருக்கிறது யிந்த நாட்டை யாதா மொறுவன் அடுபோகம் செய்து யிந்த நாடு ஆதிய.

108. ல்லா வென்று யிறுந்தால் காணுகான் பள்ளி தெருவீதி யில் சாசனக் கல்லு பார்க்கவும். உபையன் கல்லு பார்க்

109. கவும். காவேரி தேஸேஸ்பரர் கோவில் முன்பாக யிபுறாம் சாய்பு கொளந்தை கவண்டனுக்கு எளுதி குடுத்த பட்டை

110. யம் சயி சிவமயம் இந்தப் பட்டையம் கீதா சாரியாரவர்களால் எழுதப்பட்டது.

**விநாயகர் துணை**

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *9* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *அகோர சிவந்தபாதமுருடைய ஆதீனம், தென்காசி வட்டம்.* |
| காலம் | : | *சகம் 1382, கி.பி. 1460* |
| முற்குறிப்பு | : | *வன்னிகுலாதிக்கம் (1966), பக்கங்கள், 97-98.* |
| அரசர் | : | *வன்னிய வரகுண பாண்டியன்.* |
| செய்தி | : | *அக்கினி கோத்திறத்தான் வன்னிய வரகுணபாண்டியன் தாம்பிரபரணி ஆற்றுக்கு வடக்கிலிருந்த பழைய ஆழ்வார் கோயிலுக்கும், ஆழ்வார்க் குறிச்சி ஆழ்வார் கோயிலுக்கும் பூசை முதலிய நைவேத்தியங்களுக்கு நிலக்கொடை அளித்த செய்தியும்; காஞ்சிபுரம் அகோரம் சிவந்த பாதமுருடைய தேசிகரவர்களைத் தரிசனம் செய்து திருநீறு பெற்று அவருக்குச் சில காணிக்கைகள் வழங்கிய செய்தியும் இதில் காணப்படுகின்றன.* |

பட்டய வாசகம் :

*கரபுநிலமைகரந்த தேவர்குல வங்கிஷத்தான் எதிர்த்தாரை இமைப்போதில் கண்டனம் செய்ய கயிலாசபதி கருணைபெற்றோன் வீரலட்சுமி விளையாட நின்ற புயவலிமை யுடையோன் தேவர் கொண்டாட திக்கு விசையம் செய்தோன் அரக்கர்குல காலன் பொர்ப்பூண் நூலும் கண்டசரமும் வீறகண்டா மணியும் கஸ்தகடையமும் இது முதலாகிய சர்வாபரணமும் உடையோன் இராஜாக்கள் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் மந்திரிகள் பிரபுக்கள் தளகர்த்தர் குந்தளக்காரர் முதலியவர்கள் இருபுறமும் நிறைந்த கொலுமுகத்தை யுடையோன் வன்னிக்கொடியும் மீனக்கொடியும் புலிக்கொடியும் பஞ்சவர்ணபாவாடையும் சகல விருதுகளுடையோன் சந்திரபதி அரசுபதி வில்லி வன்னியகுலாதிபதி அக்கினி கோத்திரத்தான் முப்பத்திரண்டாயுத முடையோன் நவமணி*

மாலையுடையோன் செப்புபரியான அக்கினி குதிரை நடாத்தி சத்துருவை செயம் பண்ணி அழியாத கீர்த்தியையுடையோன் தேவ சம்பந்த முடையோன் தேவலோகம் விட்டு பூலோகம் வந்தோன் காஞ்சிபுரம் சிலாசாதனத்துக்கு உடையவனாயும் சங்கநிதி பதுமைநிதி நவநிதிக்கும் உடையோன் திக்குகள் தோறும் தேவாலயம் பிற்மாலயம் நிர்மாணித்தோன் தாம்பிரநதிக்கும் வடக்கு பழய ஆழ்வார் கோவிலுக்கு 6-காணி விரைப்பாடும் ஆழ்வார் குறிச்சியில் ஆள்வார் கோவிலும் அதற்கு பூசை முதலியவைக்கு 4-காணி நிலமும் தர்மசாசுபதமாக விட்டுக்கொடுத்து பதினாரு கோட்டைக்கு தலைவன் அவுகுதேவன் இவர்களில் முதன்மைபெற்ற அக்கினிக் கோத்திரத்தான் **வன்னிய வறகுண பாண்டியன்** காஞ்சிபுரம் பிரமகுல அகோர சிவந்தபாதமூருடைய தேசிகரவர்களை தெரிசனை செய்து விபூதி பிரசாரம் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் யெங்கள் குலகுருவாகிய அகோர சிவந்தபாத மூருடைய தேசிகரவர்கள் தென்காசியில் விஸ்வநாத சுவாமி சன்னதியில் சன்னதி மடத்ததிபறாய் வந்திருப்பது தெரிந்துவந்து தெரிசனைசெய்து திருநீரு ஆசீர்பாதம் பெற்று தீச்சைசெய்து உபதேசம்பெற்று குருமொழிப் படியிருக்க சாலிவாகன சகாப்தம் 1382-மேல் விஸ்வேசுரர் சன்னதியில் யெழுதிக்கொடுத்த பட்டய சாதனமாவது யெங்கள் வம்ஸத்தார் பாரம்பரை குரு சன்னிதானத்துக்கு வருஷ காணிக்கை தலைக்கட்டு 1-க்கு பணம் 2-ம் தீச்சைக்கு பணம் 10-ம் யெங்களில் வரம்பு தப்பினவர்களுக்கு வாங்கும் கடமையும் சுபமுதலாகிய காரியத்திர்க்கு பணமும் வழக்கப்படி வீதமும் கொடுத்து போதுவோமாகவும் இதை தடை செய்தவர்கள் கோவஸ்தி சிசுவஸ்தி செய்தவர்கள் போகிற கெதியில் போவார்களாகவும். இதை விர்த்தி செய்தவர்களும் இந்தப்படி நடந்தவர்களும் அஷ்ட ஐஸ்வரியமும் சகல சம்பத்தும் பெற்று வாழ்ந்துகொண்டிருப்பார்களாகவும்.

இந்தப்படிக்கு,

வறகுணபாண்டியன்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *10* |
| கிடைத்த இடம் | : | |
| தற்போதுள்ள இடம் | : | *வில்லவ நல்லூரில் உள்ள அக்கினி வம்ச க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலயத்தில் உள்ளதாகத் தெரிகிறது.* |
| காலம் | : | *சகம் 1563, கி.பி. 1641. ஆங்கிரச ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | *வன்னி குலாதிக்கம் (1966), பக்கங்கள் 40–45.* |
| அரசர் | : | *மல்லிகார்சுன தேவமகாராயர்.* |
| செய்தி | : | *பல இடத்து வன்னியர்கள் ஒன்று சேர்ந்து, வில்லவ நல்லூரில் மடம் கட்டுவதற்காக இராஜவன்னிய இராஜ மல்லிகார்ச்சுன தேவ மகாராயரிடம் அனுமதி பெற்று வந்ததையும், மடம் கட்டும் பொருட்டு ஒவ்வொருவரும் எவ்வளவு பொருள் தரவேண்டும் என்று முடிவு செய்ததையும் விளக்கு கிறது. மேலும் பல்வேறு விதமான திருமணமுறை அக்காலத்தில் நடைமுறையில் இருந்ததையும்,* **மன்னவேடு** *கிராமத்தார் எந்தெந்த வகையில் வரி எவ்வளவு செலுத்த வேண்டும் என்று நிர்ணயம் செய்யப் பெற்றிருந்ததையும் குறிப்பிடுகிறது.* |

பட்டய வாசகம்

*சுபஸ்ரீ மஹாமண்டலத்தில் சுவர்ன அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் மூவராய கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், துடுக்கர் தளவிபாடன் துடுக்கர் மோகந்தவிர்த்தோன், ஒட்டியர் தளவிபாடன், ஒட்டியர் கொட்டந் தவிர்த்தோன், பின் மண்டலமுங்கொண்ட இராஜாதி ராஜன், இராஜபரமேஸ்வரன், இராஜமார்த்தாண்டன், இராஜேஸ்வரன், புயங்கன், இராஜகம்பீரன், இராக்கன்த்தம்பிரான், இந்திரதுரந்த(ர)ன்,*

அஸ்வபதி, கஜபதி துரந்தரன், அஷ்ட மனோகர இராயன் அசுராணவிருது நரபாலன், கோதண்ட இராமன், கலியுக இராயன், கண்ணன், வாளுக்கு வீமன், தோளுக்கு அபிமன்னன், குணத்திற்குத் தருமன், அழகுக்கு அநங்கன், அமர்ந்ததற்கு அரிச்சந்திரன், ஆண்மைக்கு அனுமான், ஆக்கினைக்குச் சுக்ரீபன், கொடைக்குக் கர்ணன், செல்வத்திற்கு அளகேசுவரன், பலத்திற்கு வாயுபகவான், உலகுக்குக் கதிரோன் உலாவும் உலகமெல்லாம் படைக்க நினைத்தருளிய வீராதிவீர வன்னியப் பிரதாபன், கிருஷ்ணதேவ மஹா இராயர், திருமலைத்தேவ மஹா இராயர், நரசிங்கதேவ மஹா இராயர், இராமதேவ மஹா இராயர், பிரவிடதேவ மஹதேவர், மல்லிகார்ச்சுன தேவ மஹா இராயர் பிரிதிவி இராச்சிய பரிபாலனம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1563 இதற்கு மேல் நின்ற ஆங்கீரச வருஷத்து மிதுன மாசத்து பூர்வபட்சத்து அஷ்டமியும் பூரட்டாதி நட்சத்திரமும் பெற்ற சோமவார நாள், வடகரை விருதப்பசங்கன் வளநாட்டுக்கு மேற்கு நாடு இருங்கோள பாண்டி வளநாடு, தொண்டமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்டலம் கொங்குமண்டலம் இந்த நாலு மண்டலத்திற்கு அழகான தொண்டவளநாட்டுக் கழகான வில்லவனல்லூர் திருக்காமேஸ்வரர் குயிலாரம்மை அவர்கள் சந்நிதியாகிய வில்லவனல்லூரிலே அந்தந்த ஜாதிக்கு மடாலயங்கள் உண்டாகின்றன. நமக்கு சிவாலய பூசைமாத்திர மிருக்கின்றது. தென் தேசத்தில் நமது வம்ஸ **பண்ணாடர்** தங்கள் பேரும் பிரதாபமும் உண்டாகவேண்டுமென்று மடங்கள் கட்டியிருக்கிறார்கள். நாம் இராயரைப்போய்க் கண்டு மடங்கட்ட உத்தரவுபெற்று வருவோமென்று திருவக்கரை வல்லவநாட்டு மழவராய பண்டாரத்தார் கருத்தநாயனார் பண்டாரத்தார் சின்னகுமார நாயனார் பண்டாரத்தார் சிதம்பரம் மழவராய பண்டாரத்தார் கச்சி இராயர் பெரியண்ண நாயனார் சிற்றம்பல நாயனார் தாண்டவ நாயனார் சடையப்ப நாயனார் அழகுசிங்க நாயனார் மெய்யோக நாயனார் பண்டாரத்தார் இவர்களும்.

கண்டன்மார் தந்திரியார் படையாக்ஷியார் என்னும் பல பட்டப் பெயர் பெற்ற சோம சூரிய அக்கினி வம்ச பண்ணாடரான உறவின் முறையார் அனைவரும் போய் **இராஜ வன்னிய இராஜஸ்ரீ மல்லிகார்ச்சுனதேவ மஹா இராயரைக்** கண்டு

பேச அப்போது இராயரும் சிம்மாசனம் விட்டு இறங்கி நமது வம்சத்தாரென்று தெரிந்து தேவாலய பூஜையிருக்க மடத்துத்தருமம் நமக்கேனென்று இராயரும் கேட்க அப்போது நாயனார் பண்டாரத்தார் பாண்டிய மண்டலம் சோழ மண்டலம் * முதலிய மற்ற மண்டலங்களில் குரு மடங்கட்டியிருக்க தொண்டமண்டலத்திலேயும் இருக்க வேண்டுமென்றார். இராயரும் சந்தோஷித்து உங்களுக்கு இடமில்லாமற் போமோவென்று தானத்தாரையழைத்து நாயனார் பண்டாரத்தார் அவர்களுக்கு இடம் விடப்போமென்று சொல்ல அப்போது தானத்தார் மூத்த முதலியார் திருநாகத்தொண்ட முதலியார் நம்பித் திருஞானப் பண்டிதர் மற்றும் முற்றாற்றுடையார் நம்பிக்குருக்கள் வயித்தியநாத குருக்கள் கோவில் கணக்கு க்ஷேமக்கணக்கு மற்று முண்டான தானத்தார் தலத்தாருங்கூடி கெவிசித்திலிங்க தேவர் முளைய தேவர் தம்பிரானார் திருநாமத்தில் காணியான தெற்குத் தெருவில் தேரோடும் வீதியில் தென் சரகில் பாலையர் மடத்திற்குக் கிழக்கு அம்பலத்தாடும் ஐயர் மடத்திற்கு மேற்கு சட்டையர் மடத்திற்கு வடக்கு அடி கிழக்கு மேற்கு 75 தெற்கு வடக்கு அடி 15 அடி ஒன்றுக்குப் பொன் ஒன்றாக 75 பொன்னுக்குக் கிரையங் கொண்டு கல்லில் பேர்வெட்டி நட்டு கிணறுகட்டி மடங்கட்டி தாம்பர சாஸனமாக பட்டயமெழுதி நாலு மண்டலம் 54 தேசமுங் குருமூர்த்தமாய்க் கொண்டாடச்சொல்லி மஹா மட பிச்சை முட்டியும் திருவிளக்கும் திருநந்தவனப் பணிவிடையும் திருமாலையும் உபயமும் மகேஸ்வர பூஜையும் பண்ணி நடத்தி வர சிலாநதி சக்கரவர்த்தி யோகீஸ்வர குருவை மடத்தில் வைத்து அந்தந்தச் சீர்மைப் பண்ணாடரும் நாயினார் பண்டாரத்தார் அனைவரும் வம்சதருமக் கீர்த்திக்காக மடத்திற்குக் கட்டளையிட்டது உபநய முகூர்த்தத்திற்குப் பணம் ஒன்றும், சுயம்வரம் நாட்டி மாலைசூடுங் கலியாணத்திற்குப் பொன் பத்தும், கத்தி நாட்டிக் கலியாணஞ் செய்பவருக்குப் பணம் பத்தும், மற்ற முகூர்த்தங்களுக்கெல்லாம் மாப்பிள்ளை வீட்டார் பணம் ஒன்றும், பெண் வீட்டார் பணம் ஒன்றும், பெண் தந்த பணம் ஒன்றும், மாதாபிதா குரு பாத பூஜை வரும்படிகளும் மடத்தில் சேரவேண்டியது. தண்டிகை துரைகள் பத்து பணமும், குதிரைமேற் குடைபெற்ற அஸ்வபதிகள் அஞ்சுபணமும், ஜாதியில் குற்றாகுற்றஞ் செய்பவர் அபராதபணமும்,

முன்னவேடு கிராமத்தார் அரிவாளுக்கு ஆறுபடி தானியமும், களைவெட்டுக்குப் பதக்கு தானியமும், ஏருக்கு முக்குறுணி தானியமும், பேருருக்குப் பத்து பணமும், சிற்றூருக்கு அஞ்சு பணமுங் கொடுக்க வேண்டியது. ஆதுபாது அற்றவர் சொத்தை மடத்தில் சேர்த்து மடத்தாரால் சவரட்சணை பெற வேண்டியது. இவ்வரும்படிகள் மடத்திற்குச் சேருகிற படியால் செந்தூரத் திலர்தம் கோபி திருமணி திருநீறிட்ட பேர்களும் சந்திர சூரியருள்ள நாள்வரைக்கும் நடத்தி வருவீர்களாகவும்; இந்த மடாலய தருமத்தை தங்காமல் கொடுத்தபேர்கள் மாதாப்பிதாக்களை இரட்சித்து சிவாலயம் பிர்மாலயம் பூதானம் கோதானம் கன்னிகாதானம் செய்த பலனைப்பெறுவார்கள். ஸ்ரீமது வில்லவனல்லூரிலே திருக்காமேஸ்வரர் குயிலாரம்மை குமாரசாமி சந்நிதானம் விளங்குவதுபோல் விளங்குவார்கள். மடத்திற்கு அனுப்பக் கட்டளையிட்டதை அனுப்பாவிடில் மடத்து சுவாமியாரால் அனுப்பப்பட்ட பணிவிடை சிஷியாள் எழுந்தருளின உடனே கூடி முன்னேபோய் காண்பித்துக்கொண்டு வந்தவர்களக்கு விடுதிவிட்டு சாப்பாடு போஜனம் அமைத்து தருமத்திற்குண்டான வரும்படிகளைக் கொடுத்தனுப்பிவைக்க வேண்டியது. தருமபரிபாலரான செளபாக்கிய பிரமாணிக்கரான வேள்வியிற் பிறந்தோர்களான ஸம்பு குலத்தவரான குமாரசாமியார் படைத்தலைவரான அசுரர்கள் மார்பரான ஆஸ்தான பந்துஜன சிந்தாமணியரான சாந்த மாரியுடைய கந்நிகையை மணஞ்செய்தவரான வாடாமாலையும் வன்னத்தடுக்கும் மாலையும் தரித்தவரான வாசமிகுந்த குவளைமாலையும் மிடக்கொடியும் முப்பத்திரண்டு விருதும் பெற்றவர்களான முன்னூல் மார்பும் புலிக்கொடியும் பெற்றவரான நையாதநாட்டுக்குச் சப்தபதிகளான சோணாடு காத்தவரான மறையோர் மகனுக்கு உயிர் கொடுத்தவரான வல்லானுடைய மகுடந் துணித்தவரான வாதாபியை வென்ற வன்னிய குலாதிபரான செங்கையில் வில்லும் சிலீமுகமும் எடுத்தவரான ஏரடி வாழும் வீரப்பரி நகுல துஷ்ட நிர்த்தண்ட விர்ப்பன்ன உத்தண்ட கோதண்ட விக்கிரமார்த்தாண்டரான அனைவோரும் மனமொத்து இந்த காரியம் தட்டுதலை பண்ணுவ தல்லவென்று மடத்து தருமம் விளங்கத்தக்கதாக பார்க்கவும் யாதாமொருவர் அகடவிகடம் பண்ணினால் கங்கைக்கரையில் காராம்பசுவை கொன்ற பாவத்தில்

போகக்கடவர். தங்களுடைய மாதாபிதாக்களைக் கொன்ற தோஷத்திலேயும் தெய்வ பிராமணரைக் கொன்ற பாவத்திலேயும் போகக்கடவர். தருமம் விளங்கக் குலம் விளங்கும்; குலம் விளங்கப் பெருமையும் செல்வமும் பதவியும் அடைவார்கள்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *11* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *வைத்தீஸ்வரன் கோயில் வன்னியர் மடாலயத்தில் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1517, கி.பி. 1595, துர்முகி ஆண்டு, தை மாதம்* |
| முற்குறிப்பு | : | *வன்னிகுலாதிக்கம் (1966) பக்கங்கள் 45–48.* |
| அரசர் | : | *கிருஷ்ணதேவராயர்?* |
| செய்தி | : | *இதில் கூறப்பட்டுள்ள செய்தி சேலம் மாவட்டம் அளகாபுரம் செப்புப் பட்டயத்தில் (செப்புப்பட்டயம் எண் 6) கூறப்பட்டுள்ளவாறே உள்ளது. ஆதலால் இது அதன் நகலாக இருக்கக் கூடும். ஆயினும் அளகாபுரம் செப்பேட்டில் காணப் பெறும் சில வரிகள் இதில் காணப் பெறவில்லை. மற்றபடி பண்ணாட்டார் ஒன்று கூடி வைத்தீஸ்வரன் கோயிலில் தங்களுக்கென ஒரு மடம் கட்டுவித்ததையும், அதை நிர்வகித்து வரும்படி தாண்டவராய பண்டாரத் தாருக்குச் செப்புப்பட்டயம் எழுதித் தந்ததையும் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம்

*சுபஸ்ரீ மன் மஹாமண்டலேஸ்வரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பதினெட்டுக் கோட்டத்து வன்னிய ராய கண்டன் அஷ்ட திக்கு மனோகர பயங்கரன் சமரில் மார்த்தாண்டன் இராஜ கெம்பீரன் நவசக்கரவர்த்தி களில் அசுவபதி கெஜபதி நரபதி நவகோடி நாராயணன் பூர்வ தக்ஷண பக்ஷ்ம உத்திர சப்த சமுத்திராதிபதி ஈழமும் குணபள்ளமும் கொண்டு கெஜ வேட்டையும் அசுவ வேட்டையும் எம்மண்டலமுங் கொண்டு ஈழந்துறை கண்டருளிய இராஜாதிராஜன் ராஜகெம்பீரன் ராஜகுலத்துக்கு ராஜ மணிவிளக்கு இராஜபரிகேசரி சோழசிங்க சித்தாருணன்*

இனமுடிகொண் டெதிர்த் தரசாளுவான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டிய மோகந்தவிழ்(த்த)ான் கொங்குமண்டலம் குறும்பறுத்து அழியா விராணமழித்த விராடகெடி வன்னிய மிண்டன் ரணமன்னியப்பிரியன் கோஷ்டத்து வன்னியராய கோலாகலன் இளவரசு மணவாளன் கண்டியபிரதாபன் கட்டாரி வல்லவன் சங்கீத சாஹித்ய வித்யாவினோதன் ரணிமுக சுத்தவீரன் நகைமுகச் சந்திரோதயன் மத்தகஜவீரன் சுத்தபரிபாலன் மகாகாளி கூளி கணங்கள் கைக்கூப்பும் மணவாள கெம்பீரன் எதிர்த்தோரை சினமடக்கும் வேங்கை வரிப்புலி யானோன் தேன்பாயும் வளநாடன் கொங்கர் குலாதிபன் நித்திய கல்யாண வேந்தாதிபன் பூலோக தேசாதிபதிகளில் சூரியவம்ச குலதீப காரணன் சிவசமயபரிபாலன் சிவபூசாதுரந்தர தீப காருணன் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகரான வில்லுக்கு அருச்சுனன் வீரவாளுக்குச் சகாதேவன் மல்லுக்குப் பீமன் வல்லபற்கு நகுலன் கோபத்திற்கு காலாக்கினி குளிர்ச்சிக்குப் பூரண சந்திரன் ரூபத்திற்கு காமராஜன் கொடைக்குக் கர்ணன் ஆக்கினைக்குச் சுக்ரீபன் கேள்விக்கு முசுகுந்தன் இப்படி பூலோக தேவேந்திரனான புஜபலதேவ மகாராயர், அச்சுதேவ மகாராயர், கிருஷ்ணதேவ மகாராயர் இவர்கள் பிருதிவி ராச்சியபரிபாலனம் பண்ணி யருளிநின்ற சகாப்தம் 1517 இதன்மேற் செல்லாநின்ற துர்முகிஷு தைமீ தலை செவ்வாய்க்கிழமை நாள் சங்க விருச்சிகமும், மேஷ ஞாயிற்றுப் பூர்வபட்சத்தில் ஏகாதசியும் திருவோண நட்சத்திரமும் சேர்ந்த கார்த்திகை சோமவார நாளில் சோழ மண்டலத்திற்குத் தெற்கு வடக்கு இராஜாதிராஜன் ராஜவளநாடு வழுதலம்பட்டுச் சாவடி திருவாலியவதாரமான சடாயுபுரி வேதபுரி கந்தபுரி ஆதித்தபுரி ஆகியான திருப்புள்ளிருக்கும் வேளூரில் கலியுகவந்தராய்த் தெய்வீக வயித்தியரா யெழுந்தருளிய தம்பிரானார் சன்னிதியில், அந்த அந்த சாதிக்குச் சிவாலயமும் மடாலயமும் உண்டானபடியினாலே பண்ணாட்டார் தங்கள் மரபிற் பேரும் பிரதாபமு மாகவேண்டுமென தொண்ட மண்டலம் சோழகனார் காலக்கத் தோழவுடையார், மழவராய நாயகர், பருவூர் கச்சிராயனார், இராவுத்தமிண்ட நாயனார், ஊத்தங்கால் வன்னிய நாயனார், சமுஷ்டியார், பாஞ்சாலநாயனார், வாண்டையார், கொங்குடையார், பெண்ணைக்கரை சீராயநாயனார், சென்னிராய கவுண்டர், சீராமக்கவுண்டர், செங்கழுநீர்க்கவுண்டர், வெட்சிக் கவுண்டர்,

நமனாண்டிக் கவுண்டர், நரசிம்மக்கவுண்டர், அனகராயக் கவுண்டர் இவர்களனைவருங் கூடிச் சன்னிதியின் மேலத்தெரு வீதியில் தென்சருகில் நந்தகோபாலன் மடத்துக்கு கிழக்கு மலை(ய)மான் மடத்துக்கு மேற்கு கிழக்கு மேற்கு அடி 35 தெற்கு வடக்கு அடி 22.5 ஆக அடி 57.5 அடி ஒன்றுக்குப் பொன் க ஆக 57 பொன்னு 5 பணம் ஸ்தலத்துக்கு வேல்பிள்ளை கையிற் சுத்தகிரையமாய்க் கொண்டு கல்லுவெட்டி பேர்வைத்து கிணறு கட்டிவைத்துத் தாண்டவராய பண்டாரத்துக்குத் தாம்பிர சாஸனமாகப் பட்டயம் பண்ணிக்கொடுத்து நாலு மண்டலம் தாம் ஐம்பத்தாறு தேசத்திலும் கொண்டாடச்சொல்லி மகாமடதர்மம் பிச்சைமுட்டியும் திருவிளக்கும் திருநந்தவனப் பணிவிடையும் திருமாலை யுபயமும் மயேஸ்வர பூசையும் பண்ணிவரச் சொல்லி நம்முடைய சந்ததியார் நாலுமண்டலம் ஐம்பத்தாறு தேசத்திலுள்ள உறவின்முறையா ரெல்லோருக்கும் கீர்த்திக்கும் பலனுமுண்டாக வேண்டுமென்று வாண்டையார், அஞ்சாதசிங்கம், நீல(க)ங்கராயர், குலைபடையாட்சி, காளிங்கராயர், கருப்புடையார் இவர்களனைவோரும் மற்றுமுண்டான பண்ணாட்டாரும் கட்டளையிட்ட தருமம் காணிபரப்பி பெண்ணாடகம் சாத்துக்குழல் ஜெயங்கொண்ட சோழபுரம் சென்னியாண்டார் கோவில் குழுமுறைச் சூழ்ந்த பதினேழுபத்து, பருவூரைச் சூழ்ந்த பன்னிரண்டுபத்து வன்னியரும் ஆத்தி நாடு சேலநாடு ஓமளியுள் சீமை வஞ்சி நாடு சீமளி சீமை பூவாளிநாடு மூலக்காடு சீமை அந்தந்த சீமை பண்ணாட்டா ரனைவருங் கூடி மடத்துக்கு வருஷ வர்த்தனை யாகக் கட்டளையிட்டது தலைகட்டுக்கு ஒரு கலியாணத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரர் ஒரு பணம், பெண் வீட்டுக்காரர் ஒரு பணம், தண்டிகை துரைகள் பத்து பணம், குதிரைக் குடைபெற்ற அசுவபதிகள் ஐந்துபணம், சாதியிற் குற்றாகுற்றஞ் செய்தவர் அபராத பணமும் மடத்துக்குச் சேறுகிறபடியால் திருநீறு திருநாமம் இடப்பட்ட பேர்கள் சந்திராதி சூரியருள்ள நாள் வரைக்கும் நடத்திவருவார்களாகவும். இந்த மடாலய தருமத்தை விசாரித்து பண்டாரமவர்களுக்கு இருந்த நாளளவும் படி செலவுங் கொடுத்து உபசாரமாய் வருஷவர்த்தனை தங்காமற் கொடுத்த பேர்கள் மாதாபிதாக்களை இரட்சித்து சிவாலயம் பிரம்மாலயம் பூதானம் கோதானம் கன்னியாதானம் செய்த பலனைப் பெறுவார்கள். மேற்படி தைமீ தலைச் செவ்வாய்க்கிழமை உதயத்துக்குத் தீராவினை தீர்த்த

சுவாமியையும் தைலம்மையையும் முத்துக்குமார சாமியையும் சேவித்த பலனைப் பெறுவார்கள். தரும வர்த்தனையைக் கொடாதவர் பாவப்பலனைப் பெறுவார்கள்.

செப்புப் பட்டயம் எண் : *12*

கிடைத்த இடம் :

தற்போதுள்ள இடம் : *காஞ்சிபுரம் அனவரத சவுந்திரியப் பட்ட முத்துகச்சேஸ்வர குருசுவாமி யாரவர்கள் மடத்திலுள்ளது.*

காலம் : *கலி ஆண்டு 3882, சகம் ஆண்டு 703, இந்த இரண்டு ஆண்டுகளும் ஒத்து வந்தாலும் பட்டய வாசகங்களைக் கருத்தில் கொள்கையில் மேற் காணும் இருவகை ஆண்டுகளிலும் 1000 ஆண்டுகள் விடுபட்டு விட்டதாகத் தெரிகிறது. ஆதலால் பட்டயத்தின் சரியான ஆண்டு கி.பி.1781-ஆக இருக்கலாம்.*

முற்குறிப்பு : *வன்னிகுலாதிக்கம் (1966), பக்கங்கள் 49–50*

அரசர் : *கவிராஜேந்திரசோழன்*

செய்தி : *காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரரைப் பூசிக்கும் மாழாங்கராக்களில் சிம்ம ஆசனாதிகாரராய் திரிவர்ண குருவாயிருக்கிற அனவரத சவுந்திரியப்பட்ட முத்துகச்சேஸ்வர குரு சுவாமியாரவர்கள் மடத்துக்கு மதகிரி வன்னியர், மகுடந்தரித்த வன்னியர், வீரமார்த்தாண்ட வன்னியர், வீரப்பிரதாப வன்னியர், வீரதீர வன்னியர் ஆகிய அரசர்கள், அவர்களது குடிகள், தங்களது திருமணம் முதலிய சுபகாரியங் களுக்கு எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்பதை விளக்குகிறது.*

பட்டய வாசகம் :

*கலியுகஞ்ஹ 3882க்கு மேல் சாலிவாகன சகாப்தம் 703 பிரபவாதி 42க்குமேல் செல்லாநின்ற வர்த்தமான சௌமிய ஞூ பங்குனிமீ 17 தேதி உத்திர நட்சத்திரத்தில் அநேக ராசராச தேவேந்திர அனேக வீரப்பிரதாப வரசைன்ய வினாசகா*

மாதுர்ய தைரிய காம்பீரிய வீரிய பராக்கிரமசாலியா யிருக்கிற கலிராஜேந்திர சோழன் அரசுசெய்யும் நாளில் ஸ்ரீமத் கைலாஸ துல்யமகா ஸ்தலம் காஞ்சீ நகரத்திலிருக்கும் திருவேகம்பமுடைய நாயனாரைப் பூசிக்கும் மாழாங்கராக்களில் சிம்மாசனாதிகார ராய் திரிவர்ன குருவாயிருக்கிற அனவரத சவுந்திரியப்பட்ட முத்துகச்சேஸ்வர குருசுவாமியாரவர்கள் மடத்துக்குச் சம்பு மகாமுனி வேள்வியிற் பிறந்து ஆதிக்கராகி வாதாவி இனதாவி இரத்தினகிரி முதலாயுள்ள அகில சத்துரு நிவாரணம் பண்ண வீரசட்டை கட்டி அக்கினிக்கொடி புலிக்கொடி சிங்கக்கொடி அநுமக்கொடி பஞ்சவர்ண விருதுபடைத்த மதகிரி வன்னியர் மகுடந்தரித்த வன்னியர் வீரமார்த்தாண்ட வன்னியர் வீரப்பிரதாப வன்னியர் வீரதீர வன்னியர் இந்த அரசர்கள் மேற்படி காஞ்சீபுர முதல் கிழக்கு, அங்கிக்கோட்டத்துக்கு மேற்கு, தேவப்புரயாகைக்கு வடக்கு, இராமனாதபுரத்துக்கு தெற்கு இதற்குட்பட்ட வன்னிய அரசர்களும் மேற்படிவன்னிய அரசர்களுக்குப் படைத் துணைவர்களாகிய விராசாங்கத்துக் குரிய குடிகளும் மேற்படி யாசாரியாருக்குக் கலியாண முதலான சுப காரியங்களுக்குக் கட்டணம் கொடுக்கவேண்டுமென்று அந்தச் செப்பேட்டில் எழுதப்பட்டிருக்கிறதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *13* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *சேலம் மாவட்டம், மல்லிகுந்தம் இராம கவுண்டன் என்பாரிடம் உள்ளது.* |
| காலம் | : | *கி.பி. 1708. (பட்டயத்தில் குறிக்கப் பட்டுள்ள ஆண்டு சக ஆண்டாக இருக்க முடியாதென்றும், அது கலியாண்டாக இருக்கலாம் என்றும் இச்செப்பேட்டை முன்பு பதிப் பித்தவர் எழுதியிருக்கிறார். அது சரியெனத் தோன்றுகிறது. சர்வதாரி ஆண்டு கி.பி. 1708ல் வருவதாகவும் கூறியுள்ளார்.* |
| முற்குறிப்பு | : | *தேனோலை எண் 6, அக்டோபர், 1975, பக்கங்கள் 37–42.* |
| அரசர் | : | *உடையார் பாளையம் பண்டாரத் தார்.* |
| செய்தி | : | *காஞ்சிபுரம் காமாட்சியம்மனுக்கு இடங்கைச் சமூகத்தார் இரதம் செய்து ஓடவிட்டதை வலங்கைச் சமூகத்தைச் சேர்ந்த சிம்மபுலி என்பவன் தம் மந்திர சக்தியால் ஓடவிடாமல் செய்துவிட, இடங்கை யார் கொச்சி மளையாளத்தைச் சேர்ந்த சிம்ம அனுமந்தனை வரவழைத்து ஓடச்செய்கின்றனர். சிம்ம அனுமந்தனை இடங்கைச் சமூகத்தார் தங்கள் சாதிப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டு ஆண்டுதோறும் தாங்கள் சில பொருட்களை அவருக்குக் கொடை அளிப்பதாக எழுதித் தந்ததைத் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம்

## முன்பக்கம்

1. *உசோசிய விசய சாலிபவாகனம் சகாற்தி 4802*
2. *ஷு சருவதாரி ஷு செல்லா நின்ற வைகாசி மீ, (15 தேதி) சுக்குரவாரம் அவுட்ட நஷித்திரம் அமிர்த யோகம் சகல குண சம்*
3. *பன்னறன அகண்டி தனலட்சுமி பிரசன்னறான அ*
4. *ண்டினவறை ஆதரிக்க வல்லவ்றான குருபூசை சி*
5. *வபூசை மரவாதவறான காமாட்சியம்மன்*
6. *அருளுடையவரான வாடாதமாலை யுடை*
7. *யவறான வெத்தி மநசு சிவமநசு வன்*
8. *னத் தடுக்கு யுடையவறான பந்துசன*
9. *போசகறான வீரகண்டாமணி வீரவெண்*
10. *டயம் உடையவறான நகபத்து உடையவறான*
11. *சிங்கக்கொடி ஆளிக்கொடி ஆண்புலிக்கொடி அனு*
12. *மக்கெ(ா)டி கெருடக்கெ(ா)டி பூச்சக்கரக்கொடை அக்கினிக்*
13. *குதிறை வெட்டுப்பாவாடை வெண்சாமறம் உடையவறான கா*
14. *ஞ்சிபுர தள(ல)த்தில் பெரிய சோழனார் சின்ன சோழனார் பெரிய ந*
15. *ல்ல பண்டாரத்தார் சின்ன நல்ல பண்டாரத்தார் உடையா*
16. *ர் பாளையம் பிச்சிவரத்து பண்டாரத்தார் அவர்க(ா)ளைச் சே*
17. *ந்த, 9 சாதியார் சேர்ந்து காஞ்சிபுர தளத்தில் அவர்கள் சமூ*
18. *கத்தில் காமாட்சியம்மனுக்கு ரதம் உண்டு பண்ணி நாலு வீதி*
19. *யும் ரதப் பிரதட்சணம் வரும்போது சேணிய சிம்மப்புலி எங்கு*

20. ரவன் அந்தத்தேறை மந்திரத்தினால் அந்தத் தேரை யிழுக்க
21. வொட்டால் நிறுத்தினான் யிவன் வலக்கை யானவன்
22. யிடக்கை பாணத்தார் தேரை நிரித்தினபடியால் யிதற்கு
23. கொச்சி மலையாளத்தி லிருக்குர யிடக்கை சிம்ம அனும
24. ந்தனை அழைப்பித்து தேறை ஒட்டவேணு மென்று யோ
25. சித்து அவனுக்கு காயிதம் யெழுதி அனுப்பிவித்து அவனை வரவழை
26. த்து இந்த சங்கிதிகளைச் சொன்னார்கள் அவன் அதற்கு அஞ்சனம்
27. போட்டு பார்வையிட்டு சொல்லுகுறே னென்று சொன்னான் அப்படிக்
28. கி செய்யென்று சொன்னார்கள் அவன் பார்வையிட்டு, 12000 பூதப்
29. பிசாசுகளை யேவல் செய்து தேரை நிறுத்தி யிருக்குறானென்று சொ
30. ன்னான் அதற்கு யென்ன செய்குரதென்று கேட்டார்கள் அதற்கு
31. நரபொலி கொடுத்தால் தேறை யிழுக்கலா மென்று சொன்னா
32. ன். அதற்குஅவர்கள் ஆனை குதிறை ஒட்ட யிதுகள் காவு குடக்
33. குறேம் நரபொலி யெப்படி கொடுக்குரதென்று சொன்னார்கள். நீங்
34. கள் யிதற்காக ஆயாசப்படவேண்டாம் யென் பெண்சாதி ஆவல்
35. தித்தம்மாளை வெட்டி பொலி குடுத்து தேறை யிழுக்குறேனென

## பின்பக்கம்

36. சொல்லி அப்படியே பொலி குடுத்து 12000 பூதப் பிசாசுகளை

37. விடுதல் செய்து 12000 ஆனை யிழுக்குர தேரை யிருப்பு சங்கிலி

38. போட்டு தானொருவன் தன்னுடைய மூக்குனாலே நாலு வீதியு

39. ம் யிழுத்து வந்து நிலையிலே விட்டு யிடக்கை பாணத்தாருக்கு

40. சரணாகதி செய்து கொண்டான். அப்போது அவர்களுக்கு சந்

41. தோஷம் வந்து நம்முடைய தலை போகுரத்தை நம்முடைய சாதி

42. பிள்ளை தன்னு தலையை குடுத்து திருப்பினபடியால் யிவ

43. னுக்கு யென்ன குடுத்தாலும் நிலைநிற்காதே சந்தருள் சூரியாள்

44. ஆகாஷவாணி பூமதேவி கல்லும் காவேரி புல்லும் பூண்டும்

45. உள்ள வறைக்கும் சாதனகற்பனமா செப்பு பட்டயம் செய்து

46. கொடுத்தார்கள் அது யென்னவென்றால் யிடங்கை பாணத்தார்

47. கள் வன்னிய சாதியார் தலைக்கட்டு, க-னுலை(யு)ம் முக்கு-

48. ருணி (3 குருணி) அரிசியும் குடுக்க வேண்டியது மனோவிசுவ பிற்மா ஆசாரி

49. நகா சிந்தாமணி காவேரி கறை கண்டவர் முடக்கு மாணிக்கத்

50. தை முச்சரட்டால் கோத்தவர் காஞ்சி நகர் அயோத்தியா நகர் தெ

51. ண்ட காவேரி நகர் கெருடக் கொடியுடைய நகரத்தார், செங்குத்திய

52. ார் மஞ்சப் பாவாடை யுடையவர், தேவேந்திரப் பள்ளன் வெள்ளைகொ

53. டை வெள்ளை வெண்சாமரயடையவர் (உடையவர்) விருது கோங்கி பூதக்

54. கொடியுடையவர் யிவர்களுக்கெல்லாம் தலைகட்டு. க-னுலை

55. ம் முக்குருணி அரிசியும் கொடுக்க வேண்டியது யிதுகள் குருத்து உ

56. ஊருக்கொரு (ஊருக்கொரு) ஆடும் பண்ணியும் குடுக்க வேண்டியது யிந்தப்பிர

57. காரம் யிடங்கை பாணத்தார் ஆகாசவாணி பூமதேவி சாட்

58. சியாக கொடுத்து யிருக்கிறோம் யிந்த பட்டயமும், 18 விரு

59. தும் கொண்டுவரப்பட்ட சாதிப்பிள்ளைக்கி தடையில்லாமல்

60. குடுக்க வேண்டியது அப்படிக்கி குடாமல் யாதாமொரு

61. வர் தடை செய்தவர்கள் கெங்கைக் கறையிலே காறாம்

62. பசுவை கொன்ண தோஷத்தில் போவார்கள் பிறாமண

63. ளைக் கொன்ண கோ(தோ)ஷத்தில் போவார்கள் உடையார்

64. பாளையம் பண்டாரத்தார் திருமுகம் உ

## பிற்சேர்க்கை

65. பொம்மலனாகான விருது கொசங்கிச்சாளி சாதி: (18) அ

66. வனுக்கு வரி தலைகட்டு ஒண்ணுக்கு 15 பனம் கொ

67. டுத்து; ரு; நெள்ளு வள்ளம் தடையிள்ளமள் குடுகிறது

68 படாய் கலியாணத்துக்கு... சாவுக்கு...ரு...மாடு...க குடுக்கவும்

69. ச்சி உறா அரிவள்ளம் குடுக்கவும்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *14* |
| கிடைத்த இடம் | : | *தெரியவில்லை* |
| தற்போதுள்ள இடம் | : | *விருத்தாசலம் கலைக்கலுலூரி வரலாற்றுத்துறை பேராசிரியரிடம் உள்ளது (அவரது பெயர் குறிக்கப் பெறவில்லை)* |
| காலம் | : | *சகஆண்டு 1445, கி.பி. 1523, ஸ்ரீமுக ஆண்டு பங்குனி மாதம், 16–ஆம் நாள்* |
| முன்குறிப்பு | : | *ச. செல்வராஜ், ஆவணம் இதழ் 12, சூலை 2001ல் பக்கம் 90–91ல் வெளியிட்டிருக்கிறார்.* |
| அரசர் | : | *சின்ன நல்ல காலாக்க தோழ உடையார் (பள்ளி கொண்ட காலாக்க தோழ உடையார் குமாரர்)* |
| செய்தி | : | *செப்புத்தகட்டின் மேல் பகுதியில் நடராசர், காலாக்க தோழர், குருநமசிவாயர் ஆகியோர் உருவங்கள் கோட்டுருவங்களாக வரையப்பட்டிருக்கின்றன.*<br>*நடராசப் பொருமான் வழிபாட்டுச் செலவுக்காக அரசூர் பற்றில் மேல்கம்பூர் என்னும் கிராமம் நிலம் முழுமையும் கொடையளித்து, அத்தர்மத்தைச் சோணாசலத் தம்பிறான் சந்ததியில் வந்த குருநமசிவாய மூர்த்தி நடத்திவர ஏற்பாடு செய்ததைத் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம்:

முன்பக்கம்

1 *ஸ்ரீ பூலோக கயிலாசமாகிய சிதம்பரம் ஸ்ரீ சப*

2 *ா நடேசர் சன்னதானமாகிய சறுவ கட்டளைக்*

3 *கி சோழபுறத்து பள்ளி கொண்ட காலக்க தோழ*

4 *ஒடையார் குமாறர் சின்ன நல்ல காலக்க தோ*

5 *ழ உடையார் சோணாசல தம்பிரான் சந்ததியா*

6 ன குறுநமசிவாயர்க்கு யெழிதிகுடுத்த தாமர
7 சாதன பட்டயம் சொஸ்திஸ்ரீ சாலிய வாகன சகா
8 ப்தம் 1445 மேல் செல்லா நின்ட ஸ்ரீமுக வருடம்
9 பங்குனி மாதம் 16 தேதி சோம வாரமும் உத்திர நஷ்சத்திற
10 மும் சுக்குல பஷசமும் சுகுற்த நாமயோகமும் பால
11 வா கறணமும் கூடின சுபதினத்தில் பயறணிப்பரவி
12 யமறுத்திரபுறி யீற்பற சுவாமி சன்னதானத்தில்
13 லிருந்து யெழுதின கோடி சூரியபிரகாச மாகிய
14 கயிலாச வாசகறாகிய நிர்மல நிர்க்குன நிரஞ்சன
15 நிறுமயலான சச்சிதாந்த சொருபமான அகில
16 ம் அண்டம் கோடி பிறமாண்டனாயகறான அனேக
17 சிங்கார மகிமையுள்ள ஸ்ரீ சபா நடேசெர் கோ
18 வில் சறுவ கட்டளை பூசை நெவேத்தியத்துக்கு
19 அரசூர் பத்து மேல்கம்பூர் கிராமம் நார்பாங்கி
20 லுள்ள நிலம் முழுமையும் சபாநடேசெர்க்கு வு
21 ட்டு சிலாசாசன சகிதமாயிறுக்கிற அந்த தற்ம
22 த்தை நடத்திக் கொண்டு வற யிந்த தற்மத்தை சே
23 ாணாசல தம்பிறான் சந்ததியில் குருநமசிவாய
24 மூர்த்தி வரையில் யிந்த தருமத்தை சிஷ்ய
25 சிஷ்ய பாறம்பறியாயி சந்திராதித்திலுள்ள வறை
26 யில் தற்மத்தை நடத்திக் கொண்டு வரவும்

### பின்பக்கம்

27 யித்த தற்மத்தை யாதாமொறுவர் யிந்த தர்ம
28 த்துக்கு விகாதம் செயிதால் காசியிலே கெங்
29 கைக்கரையிலே காறாம்பசுவு கொன்ன தோஷத்தி
30 ற் போவார்களா லிந்த தந்மத்தை பறிபாளனம்
31 செயிதவர்கள் நீடூழி காலமும் குபேறசன்ம்ப
32 தத்தும் மாற்கண்ட ஆயிசா யிறுத்து சிதம்பற
33 த்தில் அற்ந்த சாமத்து தெறிசனம் பண்ணி
34 ன பலன் கிடைக்கும்.
35. ...

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *15* |
| கிடைத்த இடம் | : | *1912-13ல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு அரும்பொருள் அருங்காட்சியகம், சென்னை* |
| காலம் | : | *சகம் 1600, கலி 4779, கி.பி.1678, காளயுக்தி ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | Catalogue of copper - plate grants, Petty Chiefs and Zamindars, No. 14, page 62 · |
| அரசர் | : | *கச்சிக் கல்யாண ரங்கப்ப காலாக்க தோள உடையார்.* |
| செய்தி | : | *கச்சிக் கல்யாண ரங்கப்ப காலாக்க தோள (காலாட்கள் தோழ) உடையார் திருப்பூப்பனேந்தல் அருணாஜடேஸ்வரர் கோயிலுக்கு அமுத்தராங்கோட்டை என்னும் ஊரை, சில கட்டளைகளையும் உச்சிக்கால பூசையையும் நடத்துவதற்காகக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெற முடியவில்லை.* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *16* |
| கிடைத்த இடம் | : | *1912-13ல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு அரும்பொருள் அருங்காட்சியகம், சென்னை.* |
| காலம் | : | *சகம் 1706, கலி 4885. கி.பி. 1784, குரோதி ஆண்டு* |
| முற்குறிப்பு | : | Catalogue of copper - plate grants, Petty Chiefs and Zamindars No. 20, page. 63. |
| அரசர் | : | *முத்து விஜயரங்கப்ப காலாக்க தோள உடையார்* |
| செய்தி | : | *சிதம்பரம் சபாநாயகர் கோயிலில் நாள்தோறும் உச்சிக்காலப் பூசை செய்வதற்காகச் செந்தொரை (சேந்திரகடை?) என்னும் ஊரின் பகுதியை உடையார் கொடையளித்தது பற்றி புலப்படுத்துகிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெறமுடியவில்லை.* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *17* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | – |
| காலம் | : | *கி.பி. 1784* |
| முற்குறிப்பு | : | A book entitled M.R. Ry Sri Kachi Chinna Nallappa Kalakka Thola Udaiyar Avergal, p. 22 |
| அரசர் | : | *முத்து விஜய ரங்கப்ப காலாக்க தோளர் உடையார்.* |
| செய்தி | : | *பாளையம் சீர்மை, பாலார் மாகாணம், காரைக்குறிச்சி என்னும் ஊரைச் சேர்ந்த நாற்பது காணி நஞ்சை, புஞ்சை நிலங்களைக் காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் பூசை நைவேத்தியத்துக் காகக் கொடை வழங்கிய செய்தி காணப்பெறுகிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெறமுடியவில்லை* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *18* |
| கிடைத்த இடம் | : | *திருச்சி மாவட்ட நீதிபதி அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *1912-13ல் சென்னை அரசு அரும்பொருட்காட்சியகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.* |
| காலம் | : | *சகம் 1272 என்று உள்ளது. இவ்வாண்டு சரியான ஆண்டாக இருக்க முடியாது. எழுத்தமைதி பிற்காலத்ததாகத் தெரிகிறது. ஒரு செய்தியில் தமிழாண்டுகள் பவ மற்றும் விக்ரம ஆண்டுகள் குறிக்கப் பட்டுள்ளன.* |
| முற்குறிப்பு | : | Catalogue of Copper - plate grants in the Govt Museum, Madras, Petty Chiefs and Zamindars (1966), No.28, p.66. |
| அரசர் | : | *நல்லப்ப காலாட்கள் தோழர்* |
| செய்தி | : | *இச்செப்பேட்டில் முன் பக்கம் ஒரு செய்தியும், பின்பக்கம் வேறொரு செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆயிபாளையம் சுப்ரமண்யசுவாமி கோயிலுக்கு நல்லப்ப காலாட்கள் தோழரின் ஏஜெண்ட் முத்து வைத்தியநாதப் பிள்ளை இரு காளைகளைக் கொடையளித்த செய்தி முன் பக்கத்தில் உள்ளது.*<br>*பின் பக்கத்தில் அதே கோயிலுக்கு வடுகநாதபிள்ளை என்பார் விளக்கு எரிப்பதற்காகப் பசு ஒன்றைத் தானமளித்த செய்தி காணப் பெறுகிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெற முடியவில்லை* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *19* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *(சிதம்பரம்?) குருநமசிவாய மடத்தில் உள்ளது.* |
| காலம் | : | *கி.பி. 1804* |
| முற்குறிப்பு | : | A book entitled M.R. Ry Sri Kachi Chinna Nallappa Kalakka Thola Udaiyar Avergal, pp. 29-30 |
| அரசர் | : | *ரங்கப்ப உடையார்* |
| செய்தி | : | *ரங்கப்ப உடையார், வன்னியூர் மற்றும் விச்சியூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 15 காணி நிலத்தைக் குருநமசிவாய மடத்தின் பூசைகளுக்காகக் கொடையாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.* |
| பட்டய வாசகம் | : | *பெறமுடியவில்லை* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டய எண் | : | *20* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *(சிதம்பரம் ?) குரு நமசிவாய மடத்திலுள்ளது.* |
| காலம் | : | *சகம் 1728, கலி 4907, கி.பி.1806* |
| முற்குறிப்பு | : | *செ.ப.எண். 19ல் குறிப்பிட்டுள்ள நூல், பக்கம் 30* |
| அரசர் | : | *ரங்கப்ப உடையார்* |
| செய்தி | : | *ரங்கப்ப உடையார் தம் பாளையத்தின் மொத்த வருவாயில் பதினாறில் ஒரு பங்கை ஆண்டுதோறும் குரு நமசிவாயர் மடத்துக்கு வழங்குவதாக எழுதித் தந்ததைக் குறிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | *பெறமுடியவில்லை* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *21* |
| கிடைத்த இடம் | : | *தென்காசி திரு. முனுசாமி நாயுடு என்பாரிடமிருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, குற்றாலம் அகழ்வைப்பகத்தில் பாதுகாப்பாக உள்ளது.* |
| காலம் | : | *சுமார் கி.பி. 18ஆம் நூற்றாண்டு* |
| முற்குறிப்பு | : | Collected Papers (Studies in Tamil Culture), (1994), pp 80-97 |
| அரசர் | : | |
| செய்தி | : | *காஞ்சிபுரம் சன்னதி மடம் சிவந்தபாதம் ஊருடைய முதலியார் சன்னிதானத்தில் பணிந்து தீட்சைபெற்ற வன்னியர் திருநீறும் அருள்வாக்கும் பெற்ற காரணத்தால், தாம் பல வெற்றிகளை அடைய முடிந்தது என்று கருதினார். ஆதலால் காஞ்சிபுரம் குருவுக்கு வன்னியர் கொடை வழங்கிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.* |
| பட்டய வாசகம் | : | |

**முன் பக்கம்**

1. *இதநாவதனா செவ்வா நஸ்ய ரூப வித்தத்தம் வச*
2. *னந் துவாபர யுகத்தில் கலியுகப் பிறப்பில் திருவு*
3. *லகத்துள் மகாசிறப்பு பொருந்திய பதிநாறாயிரங்*
4. *கொடுமுடி கூடிய கயிலாச கிரியிலே அரசிருக்கு*
5. *மண்டபத்தில் முப்பத்து முக்கோடி தேவற் நாற்ப*
6. *த்தெண்ணாயிர முனிவர் கின்னரர் கிம்புருடர் கெரு*
7. *டர் காந்தருவர் சித்தர் வித்தியாதரர் முதலான*
8. *வர்கள் வணங்கி சூளும்படி பார்வதி சமேதராய்*
9. *பரமசிவன் திருவோலக்கமாக யெழுந்தருளி*
10. *யிருந்தா ரப்போது நாரதரை பாற்து லோகாதி*
11. *சய முண்டாவென்று கேள்க நாரதர் வணங்கி நி*

12. ன்று சுவாமி பூலோகத்தில் வல்லான் வலியானெ

13. ன்று ரெண்டு ராச்சதர் மானிட பக்ஷணஞ் செய

14. ரார்கள் அவர்களை சம்மாரம் பண்ண கிருபைெ

15. சய்ய வேணுமென்று விண்ணபஞ் செய்ய அ

16. தற்கு அப்படியே திரு உளம் பற்றின உடனே (த)

17. ன் மழுவை யேரிட்டுப் பாறகப் பிறந்த னம்படையுடன் அம்பு

18. வில் வாழு பரிச்சு சிறு சவளம் பெருஞ்சவள மஞ்சுமணி கட்டி

19. ய வல்லயத்துடன் வந்து பணி ஐவற்கும் பார்வதி திரு நீற

20. ளித்து **திருப்பள்ளித்தாம ஆரங் கொடுத்துத் தரித்த மகி**

21. **மையால்ப் பள்ளியென்று யிந்தப் படைக்குத் தலைவனானதா**

22. **ல்ப் படையாச்சி யென்று** அப் பரமசிவன் திருவாக்கால் பள்

23. ளி படையாச்சி யென்று நாமகரணஞ் செய்து அளைக்க

24. சமீபமாய்ப் போய்ப் பணிந்து வாய் பொத்தி நிற்க அப்

25. போது பூலோகத்தில் வல்லான் வலியான் யெ

26. ன்று யிரண்டு ராட்சதர் மானிடப் பட்சனஞ் செ

27. ய்கிறார்கள் அவர்களை அஞ்சு பேரும் போய் சம்மா

28. ரஞ் செய்து வாவென்று திருவுளம் பற்ற உடனே பூே

29. லாகத்தில் சென்று அவர்கள ர(க்க)னைப் பாற்க காந்தக்

30. கலக் கோட்டை பழிக்குக் கலக் கோட்டையாக யிரு

31. ந்(த)தால் அதற்குத் தொடைச் சதையை அறுத்து மு

32. ளத்துக் கொரு துணுக்காக யெறிந்து படியாக பற்றை

33. வத்து யேறித் தாவி அதட்டி உலுக்கி அவற்களை சீற அவ

34. நகளெதிற்த்து யுத்தஞ் செய்கையில் யிருப ருயிறை இமை

35. ப் பொளுதில் வாங்கி மும்முர சறைந்து கையிலையில் வந்து பா

36. ற்பதி சமேதரிடத்தில் விண்ணபஞ் செய்ய மகா சந்தே

37. ாசப்பட்டு நீங்கள் பூலோகத்துக்குப் போங்களென்று

38. திருவுளம் பற்ற அப்போது யெங்களுக்கு பிரமத்தி தோஷம் நீங்

39. கும்படி அனுக்கிரஞ் செய்ய வேணுமென்று விண்ணப்பஞ் செ

40. சய்ய சுவாமி திருவாய் மலர்ந்து காஞ்சீபுரஞ் சன்னதி மடம்

41. ஞ் செவந்தபாத ஊருடை முதலியாரிடத்தில் தீட்சை

பின்பக்கம்

42. செய்து பாவம் நீங்க வாள்ந்து கொண்டிருங்கோளெ

43. ன்று திருவுளம் பற்ற அந்தப்படி பூலோகத்தில் வந்து காஞ்சீ

44. புரம் சன்னதி மடம் செவந்த பாத ஊருடைய முதலியார் ச

45. ன்னிதானத்தில் அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து சுவா

46. மி திருவுளம் பற்றினதை விண்ணப்பஞ் செய்து தீட்சை செ

47. ய்த உடனே பாவம் நீங்க குருமகா சன்னிதானத்தில் திருக்கர

48. த்தால் திருநீறுடனே ஜெயஸ்ரீ மங்கள வாக்கு அனுக்கிர

49. கித்ததால் சிங்கள தேசத்தரசனை செயித்து அவன் கன்

50. னிகைகள் அஞ்சுபேரையும் யிவர்கள் அஞ்சுபேரும் கலியா

51. ணம் செய்து வரிசைகள் பெற்றனம் உடனே வன்னி நாட்

52. டில் வந்திருக்கும் போது காஞ்சி ராசாவுக்கு யெதிரிகளான கு

53. ச்சிலி ராசன் சதாதேவசங்கு ராசன் நாரோசிர ராசன் அப்போ

54. த்து மீரான் யிவர்களை செயிக்கலாமா வென்று காஞ்சி ராசா கேள்

55. க்க அது யெவ்வளவென்று போய் சம்மாறஞ் செய்து வந்த

56. தில் ராசா சந்தோஷமாய் வெகுமதி குடுக்கப் பெற்றனம்

57. பின்னெங்கள் பெண் கற்பின் மகளென்றறிந்து ராசா ஒரு

58. பெண் வேணுமென்று கேள்க்க அதற்கு நாங்கள் அக்கினி கு

59. ல மல்லவா வென்க, அக்கினி குலமானால் செப்புக் குதிரையை

60. மழுவாக காச்சி முன்பின் பதினாறடி பாய யேறி நடத்தினால்

61. அக்கினி குலந்தானெனற் அதற்கு அப்படியே யேறி நட

62. த்திக் காட்டினம் அதின் பேரில் நிசமென் றறிந்து வெகு ச

63. ந்தோஷமாய் ஐந்து பேருக்கும் பிறதி நாமம் வன்னியராய

64. னென்றும் பெருமை பெற்றனம் யிதை மதுரை பாண்டிய ரா

65. சாக் கேட்டு இவற்களை அளைத்து சந்தோஷமாக அஞ்சுபே

66. ருக்கும் வெகுமதி கொடுத்தன ரிந்த ரெண்டு ராசாக்களிடத்

67. திலும் ஐந்து யெடமும் புலிக்கொடி மகரக்கொடி பல்லக்கு

68. சாம்றம் பஞ்ச வற்ன பாவாடை மீனக்கொடி முதலாகிய விரு

69. துங் குருகடாக்ஷ விக்ஷனத்தால் நாங்கள் சகலரிடத்தி

70. லும் வுயர்வு பெற்றதால் குருவான பாரம்பரையாகவும் யெங்களதி

71. ல் முரைவழியாய் தலைக்கட்டொன்றுக்கு வருஷக் காணிக்கை

72. ஒரு பணமும் விவாகத்துக்கு ஒரு பணமும் தீட்சை யேழு பண

73. மும் யெங்களில் குற்றம் செய்தவற்களிடத்தில் வாங்குங் கட

74. மையுஞ் சேற்து குடுத்தும் மடத்தில் திருமணச் சிலவு ம

75. ற்ற சிலவுகளுஞ் செய்து கொண்டு வருவோமாகவும் இது தவறி நட

76. ந்தால் காசியில் கங்கைக் கரையில் பசு பெண்ங்களைக் கொலை செய்த

77. பாபத்தில் போவோமாகவு யிந்தப்படிக்கு கறம் வீரப் பள்ளிப் படை

78. யாச்சியாகிய வன்னிய ராய ரைந்து பேருடைய கையெழுத்து

79. உ பாலி நதி வ(ட)கரை வரை கிருஷ்ண வன்னியன்

80. உ பெண்ணை வரை செம்பு வன்னியன்

81. உ காவேரி வரை வீறு வன்னியன்

82. உ சேது வரை கங்கை வன்னியன்

83. உ தில்லைக் கீள்பால் காளத்தி வரை இந்திர வன்னியன்

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *22* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *யாழ்ப்பாணம் தொல்லியல் கழகத் தலைவர் கலாநிதி பத்மநாபனிடம் இருப்பதாகத் தெரிகிறது.* |
| காலம் | : | *சக ஆண்டு 944 என்று தரப் பட்டிருப்பது சரியாக இருக்காது.* |
| முற்குறிப்பு | : | *தேனோலை எண் 8, ஏப்ரல் 1974, பக்கங்கள் 12–14* |
| அரசர் | : | *வேங்கடபதி தேவமகாராயர்* |
| செய்தி | : | *யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த பரராசசேகர மஹாராசர், சிதம்பரம் வந்து நடராசரைத் தரிசித்து விட்டு இறைவனுக்குப் பலகொடைகள் வழங்கியதோடு பல கட்டளைகளை ஏற்படுத்தினார். அக்கட்டளைகளை நிர்வகிப்பதற்கு இராசனுக்கு மந்திரியாகவும், ராசவம்சமாகவும் இருந்த தில்லியூர் சேனாபதியார், சிங்கையூர் படையாண்டவர், தில்லியூர் குலத்துங்கர், பரநிருப சிங்கள குல நிருவாங்கப் படையா ராட்சியார் ஆகியோர் தங்கள் இனத்தார் ஒருவரைக் காவி வேட்டித் தம்பிரானாக நியமித்து 'இராசாக்கள் தம்பிரானார் திருச்சிற்றம்பலம்' என்று பட்டம் கட்டி வைத்ததைத் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம்

1. *ஸ்வஸ்தி சிரி மந் மஹா மண்டலேசுவரன் ஹரிஹராய விபாடண் பாஷைக்*

2. *குத்தப்பு வராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்டனாடு கொண்டு*

3. *கொண்டனாடு குடாதான் பூறுவ தக்ஷணை பஸ்சி மோத்தர*

4. சதுஸ் ஸமுத்திராதிபதி கஜவேட்டை கண்டருளிய பதி வேங்கடபதி தே
5. வ மஹாராயர் ப்ருதிவி ராஜ்யம் பண்ணியருளா நின்ற சாலிவா
6. கன சகார்த்தம் தொளாயிரத்து 404[1]ன் மேற்செல்லாநின்ற சுபகி
7. றுது வருஷம் தை மாதம் குரு வாரமும் சுவாதி நச்செந்திரமும்
8. பூறுவமும் கூடின சுபதினத்திலே யாட்பாணம் இராச்சிய
9. ம் பண்ணியிருந்த பரராசசேகர மகாராசா அவர்கள் சிதம்ப
10. ரத்துக்கு வந்து சிதம்பரேசரர் தெரிசனம் பண்ணி சபாப
11. திக்கு குண்டலமும் பதக்கமும் சாத்தி தில்லை மூவாயிர வருக்கும் கு
12. ண்டலம் போட்டு சுவாமிக்கு என்றும் கட்டளை நடக்கும் படி நி
13. த்திய மொரு வராகனுக்குப் படிக்கட்டளையும் தினமொன்று
14. க்கு ஐங்கல அரிசி நெய்வேத்தியமும் மடத்திலே பிட்
15. ச்சைக் கல அரிசியும் சுவாமிக்கு பரி வட்டமும் இப்படி எ
16. ந்த வேளை தறுமம் நடக்கும் படிக்கு முதலு வைச்சு வாகனம்
17. வைக்கிறதற்கு அங்கண ஒத்தியும் வாங்கி ஒரு நாளை
18. யிற் திருவிளாவும் நடப்பிச்சு வந்த பரதேசிகள் வந்த
19. வேலை யிருக்கிறதற்கு இராசாக்கள் தம்பிரான் தெரு வீ
20. தி என்று முன்னூற்றறுவது மனையும் வாங்கி வீடு கட்டி
21. நந்தாவனம் போடுகிறதற்கு நல்ல தண்ணிக் கிணத்து
22. க்கு கிளக்கும் தெற்கும் முப்பதினாயிரம் குளி நிலமும்
23. வாங்கி இ(ரா)சாக்கள் தம்பிரான் வெளியென்று கொத்தங்
24. குடியிலை பாதி ஊரும் வாங்கி யாட்பாணத்திலை தனது

25. இராச்சியத்துக்குள்ளை அச்சுவேலி, புத்தூர், அளவெட்
26. டி இந்த மூன்று ஊரும் சறுவமான்யமாக சிதம்பர தறும
27. த்துக்கு(க்) கொடுத்து இந்தக் கட்டளை என என்றும் தறுமம்
28. விசாரிக்கும்படிக்கு இராசாவாசலுக்கு மந்திரிமாராகவும்
29. இராசவங்கிஷமாகவும் இருக்கிறவர்கள் தில்லியூர்
30. சேனாப(தி)யார், சிங்கையூர்ப் படை ஆண்டவர், தில்லியூர்
31. குலுத்துங்கர், பரநிருப சிங்கள குல நிருவாங்கப் படையா
32. ராச்சியா ரிவர்கள் வங்கிஷத்திலே நாலுபேரும் சம்ம
33. திச்சு தங்களினத்துக்குள்றே ஒருதரைக் காவி வே
34. ட்டித் தம்பிரானாராக வைத்து இராசாக்கள் தம்பிரானா
35. ர் திருச்சிற்றம்பல மென்றவருக்கு பட்டமுங்கட்டி வைத்
36. து என்றைக்கு(ம்) இந்தத் தறுமம் விசாரிச்சுக் கொள்ளும்

**பின்பக்கம்**

37. படிக்கு இந்த நாலு பேரையும் பரராசசேகர மக
38. ராசா இதப்படி கட்டளை பண்ணி தறுமம் நடக்கு
39. ம்படிக்கு கல்லு காவேரியும் புல்லு பூமியும் முள்
40. ள மட்டுக்கும் இவர்களே இது விசாரிச்சுக் கொளு
41. ம் படிக்கு கட்டளை பண்ணி எளுதிப் போட்டது இ
42. ப்படிக்கு பரராசசேகர மகாராசா அந்தத் தறுமத்து
43. க்கு யாதொரு சகாயம் பண்ணினவர்கள் அந்தச் சிதம்பரத்துறுமத்து
44. திலே அத்தசாமவேளை சபாபதி தெரிசனம் பண்
45. ணின பலன் பெறுவார்கள் இந்த(த்) தறுமத்து
46. க்கு யாதொரு அகிதம் பண்ணினவர்கள் சிதம்பரத்திலே தீயிட்
47. டவர்கள் போற தோஷத்திலே போவார்கள் இப்படிச்
48. சம்மதிச்சு இந்தப் பட்டயமெளுதினது பரர
49. ாசசேகர மகாராசா அவர்கள் தில்லியூர் சேனாபதி
50. யார், சிங்கையூர்ப் படை ஆண்டவர், தில்லியூர் குலத்

51. துங்கர், பரநிருப சிங்க(ள) குல நிருவாங்கப் படையாரா
52. ட்சியார். அரிய நல்லறம் முற்றினோன் நன்றினு மத
53. னை(ப்) புரிதி யென்பவன் காப்பவன் புகலிருவற்கும் பெரு
54. குமப்பயன் பதின்மடங்கென்றனர் பெருநூல் கூறி
55. ய மாந்தர்கள் தீவினை வனிக்கு மீதொக்கும் இந்தப் ப
56. ட்டையம் எளுதினது பரநிருபசிங்கப் படையாண்டவர்.

1. நான்கு, பத்து, நான்கு என்பதை மேற்காணுமாறு எழுதியிருக்கலாம்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *23* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *விருத்தாசலம், விருத்தாசல ஈஸ்வரர் உச்சிகாலக் கட்டளை பெரிய மடத்திலுள்ளது.* |
| காலம் | : | *சுமார் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் தொடக்கம்.* |
| முற்குறிப்பு | : | *வன்னிகுலாதிக்கம், பக்கங்கள் 53–54* |
| அரசர் | : | *அரசுநிலையிட்ட ரங்கப்ப மழவராய நயினார் பண்டாரத்தார்.* |
| செய்தி | : | *விருத்தாசல ஈஸ்வரர்க்குத் தம் முடைய புண்ணியமாக அவடுழக் (அவல் உழக்கு ?) கட்டளை ஏற்படுத்தி, அரியலூரின் குசந்தப் பேட்டை கடைகளிலிருந்தும், ஆடுதுறை ஓடத்துறையிலிருந்தும் கிடைக்கும் வருவாயைக் கொடையாக நந்தீசுவற ஊத்துவா பண்டாரத்திடம் அளித்து, அக்கட்டளையை முட்டாமல் நடத்தி வரும்படி செய்ததைத் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம் :

*பிலவங்க ஷு மார்கழி மாச முதல் முதலான திதி வ்வார நட்சத்திரங்களும் பெத்த னாளில் ஸ்ரீமது விற்தாசல யீசுவறர் சுவாமியாருக்கு சகல புண்ணியனாதி சம்பன்னரான அரசு நிலையிட்ட றங்கப்ப மளவறாய நயினார் பண்டாரத்தாரவர்கள் விற்த்த காசியில் யீஸ்வர சுவாமியாருக்கு நம்முடைய புண்ணியமாக அவடுழக் கட்டளைக்கு நந்தீசுவற ஊத்துவா பண்டாரத்தின் பாரிசமாக தாம்பற சாசனம் கட்டளையிட்டபடி நம்முடைய அரியலுரில் குசந்தப்பேட்டையில் பலரும் பெரிய கடையாரும் மத்து நம் தான ஆடுதொறை கெங்குகுண்டான ஓடத்தொறையும் பெரியமுறையும் கொளத்தூருமாமுடைய பட்டணத்துக்கு வருகிற பலரும் யிந்த மகமை புண்ணியத்தை வகிச்சி புத்தர, பவுத்திர பாரம்பரியமாக சந்தறாதித்த வரையும் பொதிக்கி மாப்*

பணமும், சந்தை வட்டம் கடைக்கி ஒரு காசும், அரிசி சொமைக்கி அள்ளும், யிந்தப்படிக்கி மகமை புண்ணியம் நடக்க வேணுமென்று தங்களுக்கு சொல்லி கட்டளையிட்ட தானத்தை யாதாமொருவறாகிலும் யெடையூறு சொன்ன பேற்கள் கங்கைக் கறையிலே காறாம்பசுவை கொன்ன தோஷத்தில் போகக் கடவறாகவும் யிந்த புண்ணியம் நடத்தின பேர்கள் அசுவமேத யாக பலன் பெறக் கடவறாகவும்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டய எண் | : | *24* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *அரியலூர் சுப்ரமண்யர் கோயில் பண்டாரம் மடத்தில் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1625, கி.பி.1703, சுபானு ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | S.I.T.I. Vol. III, part 1, No. 1226, p. 1242 |
| அரசர் | : | *அரசு நிலையிட்ட மழவரா யர் ரங்கப்ப மழவராயர்.* |
| செய்தி | : | *சிதம்பரம் அம்பலத்தாடும் ஐயன் பூசைக்காகச், சந்தையில் வாரத்துக்கு ஒரு காசு வீதமும், விற்பனையாகும் சாமான்களுக்கு மூட்டைக்கு ஒரு காசு வீதமும், மகமை கொடுப்பதாக ஒப்புக் கொண்டு எழுதித் தந்ததைத் தெரிவிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | *சாசனப் பிரதி கிடைக்க வில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மடத்தில் செப்புப் பட்டயத்தின் பிரதி இருந்ததாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *25* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *அரியலூர் கோதண்டராம் சுவாமி கோயிலில் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1651, கி.பி.1729, சாதாரண ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | S.I.T.I. Vol. III, part 1, No. 1231, pp. 1245-1246 |
| அரசர் | : | *அரசு நிலையிட்ட ரங்க மழவராயர்* |
| செய்தி | : | *அரசு நிலையிட்ட ரங்க மழவராயர் காலத்தில் கோதண்டராம சுவாமிக்காக, ஆயப்பாடி கோபால வம்சத்தார் ஒவ்வொரு கல்யாணத்துக்கும் பிள்ளை விட்டாரும் பெண் வீட்டாரும் தலைக்கு ஒரு பணம் வீதமும், ஆண்டுதோறும் வீட்டு வாசற்படி ஒன்றுக்கு ஒரு பணம் வீதமும், மகமை அளிப்பதாக எழுதித் தந்திருப்பதைத் தெரிவிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | *பிரதி கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கோயிலில் இப்பட்டயத்தின் பிரதி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *26* |
| கிடைத்த இடம் | : | |
| தற்போதுள்ள இடம் | : | *அரியலூர். கங்காதரேசுவரர் கோயிலில் பூசை செய்யும் சுப்பராய குருக்களிடம் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1674 ஆக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. கி.பி.1752.* |
| முற்குறிப்பு | : | S.I.T.I. Vol. III, part 1, No. 1230, pp. 1244 - 45 |
| அரசர் | : | *வெங்கப்ப மழவராயர்* |
| செய்தி | : | *அரியலூர் கங்காதரேஸ்வரர் சுவாமிக்கும் சுவர்ண மௌக்திகாம்பாள் அம்மனுக்கும் வெங்கப்ப மழவராயர் தாயார் துங்க முத்தாயி என்பார் உக்கலூர் கிராமத்தில் 15 குழி நிலமும், வயல்பாடு கிராமத்தில் 20 குழி புஞ்சை நிலமும் அளித்ததைக் குறிப்பிடுகிறது.* |
| பட்டய வாசகம் | : | *சாசனப் பிரதி கிடைக்கவில்லை எனக் குறிக்கப்பட்டுள்ளது.* |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *27* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *உடையார் பாளையம் வர்தராஜப் பெருமாள் கோயில் பெருமான் அய்யங்காரிடம் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1685, கலி 4864, கி.பி.1763, சுபானு ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | S.I.T.I. Vol. II. *சாசன எண்.668, பக்கங்கள் 638–639 வன்னி குலாதிக்கம், பக்கங்கள் 55-56.* |
| அரசர் | : | *அரசு நிலையிட்ட குமார விசைய ஒப்பிலா மழவராயர்.* |
| செய்தி | : | *உடையார் பாளைய்ம் ஸ்ரீவரதராசப் பெருமாள் சன்னிதி உச்சிக் காலக் கட்டளைக்கு, முத்து வெங்கிடப்ப மழவராயர் பெயரனும் விஜய ஒப்பிலாத மழவராயர் மகனுமான அரசு நிலையிட்ட குமார விசைய ஒப்பிலா மழவராயர் தம் ஆட்சிப் பகுதியிலிருந்து சில நிலங்களைத் தானமாக வழங்கியது கூறப்பட்டிருக் கிறது.* |

பட்டய வாசகம் :

*ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம் 1685 கல்யாப்யுதயம் 4864 யிதின் மேல் செல்லா நின்றா ஸ்வபானு நாம ஸம்வத்ஸறம் தெஷ்சிணாயநம் – வறுஷ ருது ஆவணி மீ 24ம் தேதி கிருஷ்ண பக்ஷத்து த்ரயோதசி சோம வாறமும் புஷிய நஷ்சத்திறமும் சுபயோக சுபகறணமும் கூடின புண்ணிய காலத்தில் பயறணீசுவற புறத்துக்கு பிரிதி னாமமான உடையாற்பாளையத்தில் கீழத் தெருவில் யெழுந்தருளியிருக்குற அகிலாண்ட கோடி ப்ரமாண்ட நாயகறான ஸ்ரீ வறதராஜப் பெருமாள் சன்னதி உச்சிக் காலக் கட்டளைக்கி வீதி ஹோத்ர கோத்ரம் முத்து வெங்கிடப்ப மழவறாயற் பவுத்திற, விஜய ஒப்புலா மழவறாயற் புத்ரர் அறசு நிலையிட்ட குமாற விசய ஒப்புலா மழவறாயற் தாம்பூற சாஸநப் பட்டயம் பண்ணி குடுத்தபடி: யித்தின்னாள் திருச்சினாப்பள்ளிச் சாவுடிக்கி*

கிழக்கு ஸ்ரீ சோழமண்டலம் கொள்ளடம் காவேரிக்கி வடக்கு நம்முதான சீற்மை பழவூற்ப்பத்து விக்குறமம் வளனாடு கட்டிளை னாட்டில்ச் சேந்த யெடயாத்தம்குடியில் வறதராசப் பெறுமாள் கோவில் உச்சிக் காலக் கட்டளைக்கி பொன் 36. பு-க்கு நிலமானியம் அய்யனாற் தளத்துக்கு தெற்க்கு பஞ்சாங்க மானியத்துக்கு மேற்க்கு கொண்டி அத்தி அடிக்கி வடக்கு பழணி முத்தாயி மானியத்துக்கு கிழக்கு விஜயலெஷ்சிமி அம்மாள் மானியத்தில் குழி 60 அறமனை நிலத்தில் குழி 30 ஆக தொண்ணூறு குழி ஸஹிரண்யோதக தாரா பூறுவமாக தத்தம் பண்ணிக் குடுத்த படியினாலே யிந்த முப்பத்தி ஆறு பொன்னுக்கும் உண்டான நிலத்திலுள்ள நிதி நிக்ஷேப ஜல தரு பாஷாணாக்ஷிண்யாகாம்ய யெங்குற அஷ்டபோக தேஜஸ்வாமியங்களுடனே ஆசந்த்ரார்க்கஸ்தாயியாக அனுபவித்துக் கொண்டு உச்சிக் காலக் கட்டளை நன்றாயி நடப்பிவிக்கக் கொண்டு வறுகுறது.

தாநபாலந யோர்ம்மட்யெ தாநாஸ்ரசெயோநு பாலநம்: தாநாத் ஸவர்க மவாந்பொதி பாலநாத ச்யுதம் பதம்:

யிந்த தாம்பூற சாஸனம் யெழுதிவிச்ச நன்மைக்கு றாயசம் வயித்திலிங்கய்யன் (*)

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டய எண் | : | *28* |
| கிடைத்த இடம் | : | - |
| தற்போதுள்ள இடம் | : | *திருமழுவாடி வைத்தியநாத சுவாமி எனப்பெறும் சிவன் கோயிலில் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1662, கி.பி.1740, ருத்ரோத்காரி ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | S.I.T.I. Vol. II, No. 693 (D. 3641), pp. 652 - 653 |
| அரசர் | : | *விஜய ஒப்பிலா மழவராயர்* |
| செய்தி | : | *திருமழுபாடி உடைய நாயனார் பொன்னார் மேனியாருக்குக் காலைச் சந்தி, அர்த்தசாம பூசை ஆகியவற்றுக்காக விசைய ஒப்பிலா மழவராயர் நிலக்கொடை யளித்ததைத் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம் :

*ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகந சஹாப்த்தம் 1662 யிதின்மேல் செல்லா நின்ற ருத்றோத்காரி ஸ்ரீ மார்கழி மீ உயரு ம் தேதி தெட்சனாயனத்தில் அபற பட்சத்தில் சஷ்டியும் ஆதி வாரமும் சுபயோகமும் சுபகறணமும் கூடின சுபதினத்திலே*

*வையி நீடுக மாமழவை மண்ணுக*

*குல வியமாபிய*

*சைய்வ நின்றான் தழைத்தோங்கிய:*[1]

*ஆதி சண்டேசுவறன் அருளிப் பாடல்*

*கண்டீசன் கரும மாதலால்-பண்டே*

*அறன் செயிதான் செயிதான் அறங்காத்தா பாதம்*

*திறம்பாமல் நன் சென்னி முடிமேல் வைய்த்த:*[2]

*அழகிய திருமழுபாடி வுடைய(ர) னாயனார்-பொய்(கை) வளனாட்டில் தால வனந்தன்னில் மருவிய அறனாரான நம் தம்பிறா(னா)_ரான (பொன்)னாற் மேனியார்க்கு கால சந்தி அற்த்தசாமம் (அலையாரு) திருப்பணிக்கி ராரா விசைய ஒப்பிலாத மழவறாயற் அவற்கள் சாஸனப் பட்டயம் யெழுதிவிச்சு குடுத்தபடி, னந்தன் மோட்டுக்கு கிழக்கு*

திருமானல்லூருக்கு மேற்க்கு ஆத்திலே ன ாணல்ப் பொட்டு படுகை சேந்த நிலமெல்லாம் குமற சுவாமி பண்டாரம் வசமாக கட்டளையிட்டோம், றாமபத்திற அய்யன், மீனாட்சி அய்யன், றாமலிங்கப் பிள்ளை யிவற்கள் அனவரும் கூடி முன் ராரா திருமலை மழறாயற் ஆவற்கள் சாஸன பட்டையப் படிக்கி சாஸனம் யெழுதிவிச்சுக் குடுத்தொம். ஒப்பாயி அவற்கள் வாசல் அழகப்பிள்ளை கையயெழுத்து.

1. பின்வரும் செய்யுளே மேற்காணுமாறு எழுதப்பட்டது போலும்.

வையக நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத் தோங்குக
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே

2. சாசனங்களிலே சகஜமாகக் காணப்படும் பின்வரும் வெண்பாவையே அடுத்தபாடல் குறிப்பதாகும்.

தண்டீச் வரன்ஓலை சாகரஞ்சூழ் வையகத்துக்
கண்டீச் வரன் கரும மாராய்க-பண்டே
அறஞ் செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *29* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *திருச்சி மாவட்டம் திருமானூர் தருமகர்த்தா திரு. டி. சம்பந்தம் பிள்ளை என்பாரிடம் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1712, கலி 4891, கி.பி.1790* |
| முற்குறிப்பு | : | *த.அ.தொ.துறை காலாண்டு இதழ் 'கல்வெட்டு' எண் 19, பக்கங்கள் 19–22.* |
| அரசர் | : | *ஸ்ரீவிசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீகுமார ஒப்பிலாத மழவராயர்* |
| செய்தி | : | *ஸ்ரீகுமார ஒப்பிலாத மழவராயர் திருமானூர் தலத்தில் ஸ்ரீ காமாட்சி யம்மன் சமேதரராய் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானுக்கு அபிஷேக, நெய்வேதனம், திருவிளக்கு, திருமாலை, திருப்பள்ளி ஆகிய செலவினங்களுக்குத் தம் இராச்சியத்தில் தமக்குக் கிடைக்கக்கூடிய வருவாயில் ஒரு பகுதியை அனுபவித்துக் கொள்ளும்படி எழுதித் தந்ததைக் குறிப்பிடுகிறது.* |

பட்டய வாசகம் :

1. *உ சுபமஸ்து ஸொஸ்துணை மன் மகா மண்டலேசுபரன் பர*
2. *தளவிபாடன் பாழைக்குத் தப்புவராத ராயர் கண்டன் கண்ட*
3. *னாடு கொண்டு கொண்ட னாடு கொடாதான் ஆரியர் தள விபாடன் ஆ*
4. *ரியர் வீரம் அழித்தான் ஒட்டியர் தள விபாடன் ஒட்டியர் கொட்டந் தவிழ்த்*
5. *தான் துலுக்கர் தள விபாடன் துலுக்கர் மெலுக்கை யழித்தான் பூறுவ தெட்*

6. சண பச்சிம உத்தர சதுறு சாகர கண்டனல்வன் யீட்கு(சு)ற தெற் பீ தெதித்பீ

7. ரொசுரசுத்தொத கசந்த[1] சமுத்திராதிபதி சுவாயம்பூ மனுச் சக்கிறவற்த்தி

8. நிறுமித அகண்ட நவகண்டப் பிறுதிவு மண்டலாதிபதி அங்க வங்க கலி

9. ங்க காஷ்மீர கொங்க ணடங்க குடுத குச்சர மாளுவ துளுவ மாதே காம போ

10. ச மண்டலீகர் திறை யளக்க வந்த ரெகுராமன் அரிசுர பஸ்சல பரிசக்கிறவாக

11. மொடு கெசவேட்டையாடும் புசபெல பராக்கிறமன் ஆடுமணி நா வசையா

12. து கட்டி நாடு புரக்கும் நராதிபர் சிங்கம், சேரமண்டல ஸ்தாபனா சாரியன் சேர

13. ழமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன் பாண்டிமண்டல துரந்தரீகன் எ

14. ம் மண்டலமுந் திரைகொண்டு ஈழமுந் திறை கொண்டருளிய ராசாதிரா

15. சன் ராசபரமேசுபரன் ராசமாற்தாண்டன் நாற்பத்து முக்கோண மேற் ச

16. க்கிறமாக மாட மாளிகையுங் கூட கோபுரமுங் கோட்டை மதிளுங்

17. குறைவற வமைத்த விசைய நகரத்திலும் வேலுர்தனிலு முத்திறை ப

18. ந்த லச்சுத் தேரெல்லாம் பொலிய ஆஸ்தான மண்டபத் தாறுகாற் பீடத்தே

19. றி யினிதமர்ந்து தேவேந்திரன் ஒலக்கம் போலிருந்து மனு விக்கியா

20. ளம்துர்ம[2] பாராட்டித் திக்கெல்லாம் புகழ்ச் செங்கோல் செலுத்தும் இம

21. ல்லி ஈற்சுன தேவமகாராயர் மூ ஸ்ரீ செயரங்கராயர் அவர் களிற்பின் அ

22. ரியலூர்ச் சமஸ்தானம் ஸ்ரீ மழவராய துரையவர்கள் பிறுதிவு ராச்சிய பரி

23. பாலனம் பண்ணியருளாநின்ற சாலிய வாகனச் சகாப்புதம் ௵ 1712

24. கலி சகாப்புதம் ௵ 4891 இதின்மேற் செல்லா நின்ற சாதாருண

25. ௵ வைய்யாசி மீ உயரு உ சுக்குற வாரமும் சப்தமியும் சதைய நஸ்சத்திரமு

26. ம் கூடின இந்த சுபதினத்தில் திருமழபாடிக்கு கிழக்கு கொவிந்தபுதூருக்கு

27. மேற்கு பழுவூருக்குத் தெற்கு திருவையாறு காவேரி கொள்ளடத்து

28. க்கு வடக்கு யித்த நான்கெல்லைக்குள்ளாய சமஸ்த தேவ ராசதானி

29. யாய் விளங்காநின்ற ஸ்ரீ திருமானல்லூர் க்ஷேத்திரத்தில் அகிலாண்

30. டகோடி பிறுமாண்ட னாயகராய் அரி யயன் தேடுதற்கரிய பொருளாய்

31. மான் மழு சூல கபாலங் காளகண்டஞ் சதுற்புசம் திரி நே(த்தி)ர தாரராய்

32. ஸ்ரீ காமாக்ஷியம்பாள் சமீதரா யெழுந்தருளியிருக்கா நின்ற ஸ்ரீ கயிலாச

33. னாத சுவாமிக்கு அரியலூர் விருதுமத்தர் வலியுடைய துரை சிகாமணி

34. யாகிய ஸ்ரீ விசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீ குமார ஒப்பி

35. ல்லாத மழவராயர் க்ஷோத்திரியதான[3] சாதனம் பண்ணிக் குடுத்தபடி

36. க்ஷோ:திரியதானமாவது மஞ்சமோட்டுக்கு கிழக்கு திருவெங்கணூருக்கு

37. மெற்கு பாவட்டங்குறிச்சி ஓடைக்குத் தெற்கு கொள்ளிடத்துக்கு வடக்கு

38. யிந்த நான்கெல்லைக் குள்ளாகிய திருமானல்லூர் பிஞ்சை நிலம் திட்

39. டு திடல் மாவடை மரவடை எப்பேர்பட்டதும் பயிர் வெகிமை கிந்

40. திரசிப்பந்தி சாதிலவார் அரசு மானியம் உள்பட க்ஷேத்திரியம் பூ

41. உ 100 இந்தப் பூவீ உ ராகன்[4] நூறும் சருக்காருக்கு செலுத்தி வைச்சுக் கெ

42. காண்டு மேல் அதிகம் உண்டாகிய பலனை சுவாமிக்கு அபிஷே

43. க நெய்வேதனம் திருவிளக்கு திருமாலை திருப்பள்ளிக்கி அனுபவித்து

## பின்பக்கம்

44. க் கொள்ளுகிறது இந்தப்படி சந்திராதி நாள் உள்ள வரைக்கும் கல்லுங்

45. காவேரியும் புல்லும் பூமியு முள்ளவரைக்கும் ஸ்ரீ கயிலாசனாத சுவ

46. ாமியே க்ஷேத்திரியதானமாய் அனுபவிச்சுக்கிறது யித்தபடி சம்

47. மதிச்சு ஸ்ரீ குமார ஒப்பில்லாத மழவராயர் பண்ணிக்குடுத்த தற்மத்துக்கு யா

48. தொரு கலனுமில்லை தற்மத்தை மேன்மேலும் பரிபாலனம் பண்ணி

49. ன பேர்களுக்கு ஸ்ரீ கயிலாசனாத சுவாமியும் காமாட்சி யம்மனும் அருளு

50. ம் பிறசாதமுங் கொடுத்து ரெக்ஷிப்பர்கள் யிதுக்கு யாதாமொருவர் விறகி

51. த்தி நினைந்தால் ஸ்ரீகத்தி கோவத்தி பிறும்மத்தி அசுவத்தி சிசுவத்தி கெசவத்தி

52. பண்ணின தோக்ஷத்தை அனுபவிப்பார்கள் ஶ்ரீராமசெயம் உ

1. ஆறாவது வரியின் இறுதிப் பகுதியும் ஏழாவது வரியின் தொடக்கப் பகுதியும் சரியாக விளங்கவில்லை.
2. வியாக்கியானம் தர்மம் என்று படிக்கவும்.
3. ஸ்ரோத்திரியதானம்
4. வராகனாக இருக்கலாம்

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *30* |
| கிடைத்த இடம் | : | *சென்னை உயர்நீதி மன்றம்* |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு அரும்பொருட்காட்சியகம், எழும்பூர், சென்னை.* |
| காலம் | : | - |
| முற்குறிப்பு | : | Catalogue of Copper - plate Grants in the Government Museum, Madras, (1918), Private Grant 23, p. 74 |
| அரசர் | : | - |
| செய்தி | : | *திருமலை ஸ்ரீ விஜய ஒப்பிலாத மழவராயர் முன்பு வழங்கிய பட்டயப்படியே ராமபத்ர ஐயா, மீனாக்ஷி அய்யர் மற்றும் ராமலிங்கம் பிள்ளை ஆகியோர் திருமழபாடி பொன்னார் மேனியனார் கோயிலில் பூசை செய்வதற்காகத் திருமானல்லூருக்கு மேற்கில் ஆற்றங்கரையில் அமைந்துள்ள பொய்கவளநாட்டில் சிறு நிலப்பகுதியைக் குமாரசுவாமி பண்டாரம் என்பாரிடம் அளித்ததைக் குறிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | பெறமுடியவில்லை |

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டய எண் | : | *31* |
| கிடைத்த இடம் | : | *வடகால் துரை திரு. வி.எஸ். செல்வம் இராவுத்த மிண்ட நயினாரிடம் இருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், கல்வெட்டியல் துறையில் பாதுகாப்பாக உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1623, கலி 4802, கி.பி.1701, விஷு ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | *தேனோலை (காலாண்டு இதழ்) எண் 36, ஏப்ரல், 1983.* |
| அரசர் | : | *மராட்டிய மன்னன் இரண்டாம் சகாசி* |
| செய்தி | : | *சீகாழிச்சீமை பாளையக்காரர் அழகப்ப ராவுத்தமிண்ட நயினார் பெயரனும் ராயராஜஸ்ரீ நல்லப்ப ராவுத்தமிண்ட நயினார் மகனுமான ராஜஸ்ரீ அழகிய சிதம்பர ராவுத்த மிண்ட நயினார், அதே சீமை பச்ச மாகாணத்தில் பிளியஞ் சோழகனிருப்பு என்னும் நல்லநாயகபுரத்தில் இருக்கும் பிராமணர்களுக்கு, தம்முடைய வரிசைப் பத்து கிராமத்தில் நிலக்கொடை யளித்தது பற்றி கூறுகிறது.* |

பட்டய வாசகம் :

1. *உ. சுபமஸ்து//சிதம்பரம்//ஸ்வஸ்தஸ்ரீ/உ*
2. *வ ஸ்ரீமத் மகா மண்டலேஸ்வரந் அரியதளவிபாடன் பாஷைக்கி தப்பு வ*
3. *ராத கண்டந் மூவராய கண்டன் கண்ட னாடு கொண்டு கொண்ட னாடு குடாத*
4. *ான் இம்மண்டலங் கொண்டு யீழந்துரை கொண்டான் ராஜாதி ராஜந்*
5. *ராஜ பரமேஸ்வரன் ராஜ மார்த்தாண்டன் ராச கம்பீரன் ஒட்டிய தளவிப*

6. ரடன் துலுக்கர் மனோகரந் தவுழ்த்தான் ஸ்ரீ வீரப்பிரதாமன் பூருவ தக்ஷி
7. ண பச்சிம உத்தர சதுஸ் ஸமுத்திராதிபதி பிரௌ(ட) தேவ மகாராயர்
8. பிருத்வி ராஜ்யத்தில் போசல வம்சம் மகா ராஜ ராசஸ்ரீ எகோஜி மஹ
9. ரராஜ ஸாஹெபு அவர்கள் புத்ரன் ராஜஸ்ரீ ஸஹஜி மகாராஜா ஸ
10. ரஹெபு அவர்கள் ஸ்ரீசோள மண்டல ராஜ்ஜிய பரிபாலநம் பண்ணுகியி
11. ல் சாலிவாஹந சகாப்தம் வருஷம் 1623 கலியுகாப்தம் வ
12. ருஷம் 4802 இதின் மேல் செல்லா நிண்ட விஷு ஷு, அல்பிசி
13. மீ 1 தீ சுக்ல பக்ஷம் சோம வாரம் சப்தமி திருவே(ா)ண நக்ஷ
14. த்திரமும் சௌபாக்ய நாமயோகமும் கூடின சுபதினத் தில் ராஜாதி ராஜ
15. வளநாடு வெண்ணயூர் வழுதலம் பட்டு சாவடிக்கி தெற்கு கொள்ளடத்து
16. க்கு தெற்கு காவேரிக்கி வடக்கு உபய காவேரி மத்தியான சீகாழிச் சீ
17. ம பாளையக்காரர் நீலகட்க த்வஜ ராஜஸ்ரீதரங்கரான குதிரை
18. யேறி அநேகம் வரிசை பெத்த ராய ராவுத்த மிண்ட னயிநாற் அவர்க
19. ள் அழகப்ப றாவுத்த மிண்ட நயினார் அவர்கள் பௌத்திர ராயராஜஸ்ரீ நல்ல
20. ப்ப ராவுத்த மிண்ட நயினார் அவர்கள் புத்ர ராஜஸ்ரீ அழகிய சிதம்பர ரா
21. வுத்த மீண்ட நயினார் அவர்கள் பூமி தான சாசனம் பண்ணி குடுத்தபடி சீ

22. காழிச் சீமை பச்ச மாகானத்தில் பிளியஞ்
சோழகனிருப்புக்கு பிரதி

23. னாமமான நல்ல னாயகபுரத்தில் இருக்கும்
அஷேஷ வித்வத் மகாஜந

24. ங்கள், குரு ஸ்வாமியள், ராய தீக்ஷிதர்,
புரோகித ராமய்யர், ஶ்ரீநி

25. வாச தீக்ஷிதர், பெரிய திருக்காம சாஸ்திரியள்,
சின்ன திருக்காம சாஸ்திரி

26. யள், அநந்தநாராயண, மகாதேவ, சிவந்நாரா
யண சாஸ்திரிய

27. ள், திம்மண்ணா பாகவதர், அய்யவாரு பண்டிதர்,
வேங்கடய்யன் இந்த பணி

28. ரெண்டுபேர் மகாஜனங்களுக்கு பூமி தான சாசனம்
பண்ணிக் குடுத்தபடி நம்

29. முதாகிய வரிசபத்து சர்வ மானியத்தில் வேட்டங்
குடி தென்னமரத்துவெளி

30. சின்ன காடுவெட்டிக்கி கிழக்கு காட்டுக்கு
வடக்கு கொட்டாபிளி தெடலு

31. க்கு மேற்கு தில்லயோடை புதுக்கரைக்கி
தெற்கு இந்த னால் சதுரத்து

32. க்கு உள்பட்ட நஞ்சை நிலம் பிஞ்சை நிலம்
காடு கரம்பு கொளம் கு

33. ட்டை னீரோடும் வாக்கால் சகல சமுதாய
மும் தங்களுக்கு ஸ

34. கிரோண்யாதக தாராபூர்வமாக தாந சாசனம்
பண்ணிக் குடுத்தப

35. டியினாலே இதில் உள்பட்ட நிதி நிக்ஷேப
ஜல தரு பாஷா ணாக்ஷி

36. ணாகாமி சித்த சாத்ய மென்னப்பட்ட அஷ்டபோக
தேஜஸ் ஸ்வாமியங்களுட

37. னே தானாதி விநிம்ய விக்ரயங்களுக்கு யோக்ய
மாக ஆசந்திரார்க்க

38. மாதியாக புத்ர பௌத்ர பாரம்பரியமாக சர்வ மான்யம் ஆண்டனுப

39. வித்து கொண்டு சுகத்திலே யிருப்பீர்கள் ஆகவும் இந்தபடி சம்மதி

40. ச்சு நல்ல னாயகபுரம் அசேஷ வித்வத் மகாஜனங்கள் பனிரெண்டு

41. பேருக்கும் ராஸ்ரீ அழகிய சிதரம்பர ராவுத்த மிண்ட நயினார் அவர்கள் பூமிதான சாசனம் பண்ணிக் குடுத்தோம்

42. அழகிய சிதம்பர ராவுத்த மிண்டர் சவிதானந்த

43. ராவுத்த மிண்டர் ஸ்வயம்பிரகாச ராவுத்த மிண்டர் பரப்பிரம்ம ராவுத்த மிண்ண

44. டர்

1. தான பாலனயோர் மதீ3யே
த3ானாத் ஸ்ரேயோனாபாலனம்!
த3ானாத் ஸ்வர்க2 மவாப்னோதி
பாலனாத2 ச்யுதம் பித2ம்

2. ஸ்வத2த்த2 ரத்விகு2ணம் பு2ண்யம்
ப2ரத2த்திரனு பாலனம்!
பிரத2த்திரபஹாரேண
ஸ்வத2த்திம் நிஷ்பலம் ப4வேத்2

3. ஏனாிசுவ ப2கி2னீ லோகே
ஸர்வேஷாமேவ பூ2பு2ஜாம்
நபே2ரஜ்யா ந கா் ரக்2 ராஷ்யா
விஷ்ணு த2த்திச வசுந்த2ரா

4. ஸ்வத2த்திர து2ஹித2ா பிரோக்திா
ப2ரத2த்திர ஸஹோத2ரீ
பி2த்ர த2த்திாது மாத2 ாஸ்யாத்
தித2த்ர2 யம் த்யிஜேத்

5. ஸ்வத2த்திாம் பிரத2த்திாம் வா
யோ ஹாரத் வசுந்த2ரா
ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணீ
விஷ்டாயாம் ஜாயதே க்ருமி:

## மொழி பெயர்ப்பு

1. தானம் செய்தல் பிறர்செய்த அறத்தைப் பேணல் ஆகிய இவ்விரண்டில் பிறர் அறத்தைக் காத்தலே சிறந்தது. (ஏன் எனில்) தானம் செய்வதால் ஸ்வர்க்கம் (மட்டும்) கிட்டுகிறது (ஆனால்) அறத்தைப் பாதுகாப்பதால் திரும்பி வருதல் இல்லாத வீட்டின்பம் கிடைக்கிறது.

2. தானே தானம் செய்வதைவிட மற்றவர் கொடுத்ததைக் காத்தல் இருமடங்கு சிறந்த நல்வினையாகும். பிறர் அளித்தவைகளைக் கவர்ந்து கொண்டால் தான் கொடுக்கும் கொடையும் பயனற்றதாக ஆகிவிடும்.

3. உலகமன்னர் அனைவருக்கும் நிலமகள் சகோதரியாக விளங்குகிறாள். அதனால் திருமாலுக்காக அளிக்கப்பட்ட இந்த நிலம் மற்றவர்களால் கைப்பற்றப் படுவதற்கும் துய்க்கப்படுவதற்கும் உரியதாகாது.

4. ஒருவருக்குத் தன்னால் கொடுக்கப்பட்ட தானம் மகளைப் போன்றது; பிறர் அளித்தது உடன்பிறந்தாரை யொத்தது; தகப்பனாரால் தரப்பட்டது தாயை அனையது. எனவே இம்மூன்று வகையான அறப்பொருள்களையும் (தான் கைக் கொள்ளாமல்) நீக்கிவிட வேண்டும்.

5. தான் அளித்ததோ அன்றிப் பிறர் கொடுத்ததோ எதுவாயினும் தரப்பட்ட கொடையை அபகரிப்பவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் புழுவாகப் பிறந்து துன்புறுவான்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *32* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *தருமபுரம் ஆதீனத்தின் பாதுகாப்பில் உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1685, கலி 4864 கி.பி.1763, பார்த்திப ஆண்டு.* |
| முற்குறிப்பு | : | *தருமை ஆதீனச் செப்பேடுகள், (1988), பட்டயம் எண் 7, பக்கங்கள் 54–56* |
| அரசர் | : | *மராத்திய மன்னன் பிரதாப சிங் மகாராசா* |
| செய்தி | : | *பாளையக்காரர் நல்லிப்ப ராவுத்த மிண்ட நயினார் பண்டாரத்தார் காரியத்துக்குக் கர்த்தரான அருணாசலம்பிள்ளை தென்திரு முல்லை வாயல், முல்லைவனனாத ஈஸ்வரர், அணிகொண்ட கோதை அம்மன் ஆகியோருக்குப் பிரதோஷக் கட்டளை, சுக்கிர வாரக்கட்டளை ஆகியவை நடத்துவதற்கு மகமை தர்மசாதனப் பட்டயம் எழுதித் தந்ததைத் தெரிவிக்கிறது.* |
| பட்டய வாசகம் | : | |

முன்பக்கம்

1. *உ ஸ்வஸ்ரீ மன் சகல விசைய மஹா மண்டலேஸ்ப*
2. *ரன் அரியராயிர தள விபாடன் பாஷைக்கு தப்பு*
3. *வராயிரக் கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட*
4. *நாடு கொடாதான் தொண்ட மண்டலச் சோழமண்டல*
5. *தாபனாசாரியன் எம்மண்டலமும் கொண்டு யீழந் து*
6. *ரை கொண்ட ராசாதிராச ராசபரமேஸ்வரன் ராசமாற்*
7. *த்தாண்டன் ராசாக்கன் தம்பிறான் விசைய நகர் வீ*
8. *ர சிங்காசனத்திலும் எழுந்தருளியிருக்கிண்ட கிழ்*
9. *ணதேவ மகாராயர்க்கு பின் தஞ்ச நகராதிபதியாகிய*
10. *ராயமானிய ராஸ்ரீ பிறதாபசிங்கு மகார்ாசா அவகர் பிறு*

11. திவு ராச்சிய பரிபாலனம் பண்ணியருளா நின்ற
12. னாளாவன சகாற்த்தம் ௵ 1685 கலி
13. யாத்தம் 4864க்கு மேல் செல்லா
14. நின்ற பாற்த்திப வருஷம் அற்பதி மீ வெள்ளிக்கிழமை ச
15. துற்தெசியு(ம்) கேட்டை நக்ஷத்திரமே சுப நக்ஷத்தி
16. ர சுபயோகமும் பெத்த சுபதினத்தில் தேவ தே
17. வ மகா தேவரான மூவர் பாடலும் மும்மூற்த்
18. தி பூசித்துப் பணிந்த தீற்த்தமும் பகர் மணலால்
19. லொரு சிவலிங்கமுமாக மகத்துவம் பெத்த தல
20. மாகிய தென் திருமுல்லை வாயல் முல்லை வ
21. னனாத ஈசுரர் அணிகொண்ட கோதை அம்மன்
22. பாதார விந்தங்களுக்கு நித்தியற்சுனை அபி
23. ஷேக நெயிவேதனம் முதலாகிய பணிவிடைக்கு
24. பிள்ளை அவர்கள் அருணாசலபிள்ளை அவர்க
25. ள் கட்டளை பிறதோஷம் சுக்கிறவாரக் கட்டளை
26. க்கு ராரா குசாயிபு அவர்கள் முகாசில் ராமு
27. த்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்கள் மத்
28. திக்ஷத்தில் ரா சாதாதுகான் பருக்கி செமேயி
29. தார் அவர்கள் குத்தகையில் பாளையக்காரர் ரா
30. நல்லப்பராவித்தமிண்ட நயினார் பண்டாரத்தார்
31. அவர்கள் காரியத்துக்கு கற்த்தரான அருணாசல
32. பிள்ளை அவகள் பெரிய தினத்தில் திருமுல்லை
33. வாயல்லிருக்கும் வரிசைபற்று ராதாநல்லூர்
34. கிறாமத்தார் ஷ பிள்ளை அவர்கள் உள்பட்டா
35. ரும் தரகர் தாண்டவராய முதலி 84 நல்லி கூட்
36. டை பிடி 800 குட்டையன் நயினான பட்டண
37. ச்சேரி அறுகாடி குழந்தை கொடுக்கன் மு
38. த்துக்குமரன் முட்டைகாறர் னாட்டாமை

## பின்பக்கம்

1. குருனாதன் மத்த அனைவரும் சம்மதித்து பின்
2. னை அவர்கள் கட்டளைக்கு மகமை தற்ம சாத
3. ன பட்டயம் எழுதி குடுத்தோம் கட்டளைக்கு
4. ராதாநல்லூர் குடியானவர்கள் நஞ்சைக்
5. கு பேர் வழிக்கு குடிக் குறுணியும் செ
6. றுவாடு கோவில் மானியத்தில் சேந்
7. த்து நிலம் 21 அடிக்கோலால் குழி 200
8. தர்கா பொதுவில் னாள் 1க்கு நெல் 38 க் கூடை
9. பிடி 800 சன பங்கில் ஒரு பங்கு அகமு(ம்)
10. டைக்காறர் சன பங்கில்_க ஆக பட்டண
11. ச் சேரியர் மாசம் 1க்கு படகு 3க்கு பணம் 3ஆக
12. பின்னையும் வரபட்ட ஆதாயம் கட்டளைக்
13. கு குடுத்து வருவோமாகவும் யிந்தப் படி அ
14. னைவரும் சம்மதித்து பின்ளை அவர்கள் கட்ட(ளை)
15. க்கு மகமை தற்ம சாதனப் பட்டயம் எழுதி
16. குடுத்தோம் சத்திராதி(த்)ய வரைக்கும் புதிர
17. பத்திர பாரம்பரைக்கும் மகமை குத்து வரு
18. வோமாாகவும் யிந்த தற்மத்துக்கு யாதா மெ
19. ாருவர் மனோ வாக்கு காயங்களினாலே தற்
20. ம பரிபாலனம் பண்ணினவர்கள் அனே
21. கங்கோடி கெங்காஸ்நானம் பண்ணி
22. ன பலனடைவார்கள் யிதற்க்கு யாதொ
23. ரு சாதிக்காறர் மனோ வாக்கு காயங்களினா
24. லே தற்மத்துக்கு விகாதம் பண்ணனவர்க
25. ள் அவரவர் மத்துரு பிதுரு அத்தி பண்ணின
26. வான் போன தோஷத்திலடைவார்கள் யி
27. து அறிந்து தந்ம பரிபாலனம் பண்ணின
28. வான் முல்லைவனனாதீற்பரர் அணிகொ

29. ண்ட கோதை அம்மன் கிடாக்ஷத்தினாலே பு

30. த்திர மித்திர களத்திராதிகள்ளோடே சுகத்தி

31. லே யிருப்பார்களாகவும் சுபமஸ்து உ

செப்புப் பட்டயம் எண் : *33*

கிடைத்த இடம் : –

தற்போதுள்ள இடம் : *தருமபுரம் ஆதீனத்தின் பாதுகாப்பில் உள்ளது.*

காலம் : *சகம் 1685, கி.பி.1763, சுபானு ஆண்டு*

முற்குறிப்பு : *தருமை ஆதீனச் செப்பேடுகள். (1988), பட்டயம் எண் 8, பக்கங்கள் 63–65*

அரசர் : *மராத்திய மன்னன் பிரதாப்சிங் மகாராசர்*

செய்தி : *கொள்ளிடம் காவேரி மத்தியில் இருக்கும் தென்திருமுல்லை வாயல் முல்லைவனனாத உடைய தம்பிரானார் நித்திய அர்ச்சனை அபிஷேக நெயிவேதினங்களுக்குச் சோழர் காவலன், ராயர் மெச்சிய ராவுத்த மிண்டன், எக்கோசி ராசாவால் பாராட்டப்பெற்றவர், கனவிருது பெற்று அக்கினிப் பரியேறிய நல்லப்ப ராவுத்த மிண்ட நயினார் தம் சீகாழிச் சீமை வரிசைப் பற்று ராதாநல்லூரில் ஆயிரங்குழி நிலம் கொடையளித்தது குறிப்பிடப் படுகிறது.*

பட்டய வாசகம் :

முன் பக்கம்

1. *உ ஸ்ரீ கணாதிபதயே நம முல்லைவன ன்ாதீஸ்வரர் அணி*
2. *கொண்ட கோதையம்மன் பாதாரவிந்தமே நம சிதம்பரம்*
3. *இந்த ஒப்பம் நல்லப்ப ராவுத்த மிண்ட நயினார் கை ஒப்பம்*
4. *ஸ்வஸ்த ஸ்ரீ மன் மஹாமண்டலேசுபரன் அரியராயிர*
5. *தளவிபாடன் பாஷக்குத் தப்புவராயிர கண்டன் கண்*
6. *ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் சோழ*
7. *மண்டல தாபனாச்சாரியன் பூர்வ தெட்சண பச்சம உத்த*
8. *ர சத்த சமுத்திரமும் எம்மண்டலமும் கொண்டு யீழந் து*

9. ரை கொண்ட ராசாதிராச ராச பரமேஸ்பர ராசாக்கள்

10. தம்பிரான் விசைய நகர வீரசிங்காசனத்திலேயும் எழு

11. ந்தருளியிருக்கின்ற ஸ்ரீகிறஷ்ண தேவ மஹாராயர்க்கு பிந்

12. தஞ்சை நகராதிபதியாகிய ராயமானியர் ரா பிரதாபசி

13. ங்கு மகாராசா ராச்சிய பரிபாலனம் பண்ணியருள

14. ர நின்ற சகாத்தம் ௵ 1685 க்கு மேல் செல்லா

15. நின்ற சுபானு ௵ அற்பசி ௴ 30 ௳ சுக்கிர வாரம் யேகாதெ

16. சியும் அஸ்த்தமும் பெத்த சுபதினத்தில் துலாக் காவேரித் தானம்

17. ரிஷப தீத்தக் கரையில் மூவர் பாடல் மகா மூற்தி பூசித பதி

18. னொரு தீர்த்தமும் பகர் மணலா ஒரு சிவலிங்கமுமாக மகத்து

19. வம் பெத்த கொள்ளடங் காவேரி மத்தியஸ்தலமாகி

20. ய தென் திருமுல்லை வாயல் முல்லைவனனாத உடைய தம்

21. பிரானார் ஸ்ரீமன் பாதாரவிந்த நிற்தியாற்சுனை அபிஷே

22. க நெயிவேதினங்களுக்கு சொ(உ)ளக(ர)வலன் ராயர் வெ

23. மச்சிய ராவுத்த மிண்டன் எகோசிராச மெச்சியிருந்தி

24. டு கொலுவு காவிநிசானுங் கனவிருது பெத்து அகினி

25. ப் பரி யேறிய நல்லப்ப ராவித்த மிண்ட நயினாரவர்கள்

26. பூமி தானச் சறுவ மானியத்துக்கு தாம்பூர சாதனப்பட்டய

27. மெழிதிக்குடுத்தபடி நம்மு சீகாழிச் சீமை வரிசைப் ப

28. ற்று ராதாநல்லூரில் பெருவாய்க்காலுக்கு கிழக்கு க

29. ாடு வெட்டிக்கு மேற்கு மொறுடுக் கோட்டத்துக்கு

30. தெற்கு ஆத்தங்கரைக்கு வடக்கு னான்குள்பட்ட நஞ்சை

31. மானிய நிலம் 21 அடிக் கோலால் குழி 1000

32. இந்த ஆயிரங்குழி நிலமும் செல தரு பாஷாண நிதி நி

33. ஷேப ஆட்போக சித்தேச் சுவாமியங்குளோ

34. டே கிரய விக்கிரய சாதனமாக சந்திராதித்யவரை

35. க்கும் அனுபவித்துக் கொள்வாராகவும் இந்த உத்தரபடி
36. பெரிய தினு அருணாசல பிள்ளையவர்கள் தம் பிறு

### பின் பக்கம்

1. தி வயித்திலிங்க முதலியார் ரெத்னம் பிளையும் நிலம் அளந்து கோவில்
2. காறுபாரி சேழப்பையன் நல்லதம்பியா பிள்ளை தா
3. னீகம் சுப்பிரமணிய பிளையும் நிலம் முட்டு கட்டி ஒப்பு
4. கொண்ட படியினாலே சுகத்திலே அனுபவித்துக்
5. கொள்வாராகவும் இந்த தர்மத்துக்கு யாதொருவர் அயிதம்
6. பண்ணினாள் அவாள் கெங்கைக் கரையில்
7. கோ கஸ்த்தியும் கோப் பி(ரா)மணரையும் கொ
8. ண்ண தோஷத்தி லடைவார்கள் மத்தச் சா
9. திக்காரர் விக்கதம் பண்ணினால் அவரவர்
10. வேதங்களை அழித்த தோஷத்திலடைவர்கள்
11. இதறிந்து மனோ வாக்கு காயங்களினாலே தர்
12. ம பரிபாலனம் பண்ணினவர்களும் தர்ம
13. ம் பண்ணினோர்களும் கெங்கையில் மகாத
14. ானம் பண்ணின பலனும் முலைவனனாதர்
15. சன்னிதியில் கிள்ளிச் சோழராசா பேறு பெ
16. த்த முத்தியும் பெறுவார்கள் சுபமஸ்து உ

செப்புப் பட்டயம் எண் : *34*

கிடைத்த இடம் : –

தற்போதுள்ள இடம் : *தருமபுரம் ஆதீனத்தின் பாதுகாப்பில் உள்ளது.*

காலம் : *சகம் 1689 கி.பி.1767, சர்வ சித்து ஆண்டு; சகம் 1692–கி.பி. 1770, விக்ருதி ஆண்டு.*

முற்குறிப்பு : *தருமை ஆதீனச் செப்பேடுகள், (1988), பட்டயம் எண் 9, பக்கங்கள் 70–71*

அரசர் : *மராத்திய மன்னர் துளசி மகாராசர், பெரிய வகுப்பு முத்து குமார ராவுத்த மிண்ட நயினார்.*

செய்தி : *தஞ்சையை ஆட்சிபுரிந்த துளசி மகாராசர் காலத்தில் திருமுல்லை வாயில் முல்லைவனனாத சுவாமி திருப்பணி தர்மத்துக்கு பெரிய வகுப்பு முத்து குமார ராவுத்த மிண்ட நயினார் நாளில் கி.பி.1767 ஆம் ஆண்டிலும் கி.பி.1770ஆம் ஆண்டிலும் குடிமக்களும், அரசரும் முறையே நிலக்கொடை அளித்தது பற்றி தெரிய வருகிறது.*

பட்டய வாசகம் :

**முன்பக்கம்**

1. *உ ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுபரன் சகல விசைய*
2. *மகா ராசாதிராசன் ராசராச ஸ்ரீமன் தஞ்சந(க)ராதி பதியாகிய ராயமானிய*
3. *ராய ஸ்ரீ துளஜா மகாராசா சாயிபு அவர்கள் பிறுதிவிராச்சிய பரிபா*
4. *லனம் பண்ணி யருளாநின்ற நாளாவன சாலிவாகன சகாற்த்தம்*
5. *௵ 1689க்கு மேல் செல்லாநின்ற சறுவசித்து ௵ ஆவனி*
6. *மீ 7 உ திருமுல்லைவாயில் முல்லைவனனாத சுவாமி திருப்பணி*

7. தர்மத்துக்கு ராய தாருகான் பருக்கு செமெயிதா அவர்கள்க் குத்தகைல் செ
8. பரிய வகருப்பு அருணாசல பிள்ளையவர்கள் பெரிய தனத்தில் வற்த்தகா
9. ள் சுலுத்தா மரைக்காயர் அருணாசலப்பிள்ளை கொண்டு செட்டி
10. யா கவி செட்டியார் பிற்றார் னாசூர் சிவந்த லிங்க செட்டியார் னா
11. கப்பட்டனம் திருமேனி செட்டியார் புதுச்சேரி வில்லப்ப செ
12. ட்டியார் சென்னைப் பட்டணம் முத்து முதலியார் மத்தும் உள்ளப
13. ட்ட உள்ளூர் பிறதேசத்தார் அனவரும் சம்மதிச்சு திருப்பணி
14. தர்ம சாதனப்பட்டயம் எழுதிக் குடுத்த வயனம் வந்தா துதுரை
15. முகந்தி லளக்கப்பட்ட நெல் கண்டி 100க்கு மகமை வராகன் 1. ஆக
16. றாசி காய் தானியங்களுக்கு கஷ்ரா கூடுதல் வராகன் 28 பேர் உ
17. ருகளுக்கு வராகன் 1/2 ஆக பிறலாவணத்தில் கொள்ளவிக்க
18. பட்டாலும் யிந்தப்படி யிசுலாமானபேர் மேல பள்ளி
19. க்குக் குடுத்து போக, தமிழ் பிறத்யார் மத்த சாதிக்காறர், ஈசுவர
20. ன் கோவில் திருப்பணி தற்மத்துக்குக் குடுத்து சந்திராதித்ய
21. வரைக்கும் புத்திர பவித்திர பரம்பரையாய் நடபிச்சு
22. வருவோமாகவும் யிதர்க்கு யாதொரு சாதிக்காரர் விகா
23. தம் பண்ணினால் அவரவர் மாது பிதுர் கோகஸ்தி பண்
24. ணின தோழத்தை அடைவார்களாகவும், தர்ம பரிபாலனம் பன்

25. ணின பேர்கள் புத்திர பவித்திர களத்திறாதியுளுடனே சுகத்திலே

26. யிருப்பாராகவும்/திருமுல்லைவாயல் முல்லைவனனாத சுவ

27. ாமி சறுவமானிய பட்டயம் உ இதர்க்குபின் சகார்த்தம் ஷு 16

28. 92க்கு மேல் விகுறாதி ஷு அற்பசி மீ 12உ ஸ்வஸ்தி ஸ்ரீ சகல

29. விசைய மகாராசாதிராச ராசபரமேசுபர மகா மண்டலே சுபரன்

30. தஞ்ச நகராதிபதியாகிய ராயமானிய ராய ஸ்ரீ துளசி மகாராச சா

31. யிபு அவர்கள் தர்(ம)மாக விட்டது முல்லைவனனாத சுவாமி மகா பூ

32. சைக்கி சறுவமானியம் பூறுவமாக நடந்த நிலத்தில் னாளது

33. முத்துகுமார சுவாமி தம்பிரானவர்கள் அதிகாரத்தில் பெரி

34. ய வகுப்பு முத்துகுமார ராவுத்தமிண்ட நயினார் அவர்கள்

35. ணாளில் திருமுல்லை வா(ய)ல் பற்று உள்ளூர் ஊருக்கு மேற்க்கு க

36. லிவாய் நஞ்சை நிலத்தில் நிலம் 1/2 தாழ்ந்தொண்டிபி

37. ச்சி வட்டம் கொட்டாரத்தடியில் நஞ்சை செயிகால் நிலம் 2¼

38. ஆக நிலம் 2, 3/4-ம் அளந்துவிட்டபடியினாலே சில தரு பாஷ

39. ாண நிதி திஷேப த்திரைய விக்கிறைய சாதனமாக சந்தி

40. ராதித்யவரையும் ஆண்டு அனுபவித்து கொள்வராகவும் யிதற்

41. க்கு யாதொருவர் விகாதம் பண்ணினால் கோகஸ்தி பன்

42. ணின தோழத்தை அடைவாராவும் தர்ம பரிபாலனம் ப

43. ண்ணின பேர்கள் சிரஞ்சீவியா யிருப்பாராகவும் சுபமஸ்து

44. தேவி ஸகாயம் உ மஹாதேவ ஸ்தபதி ஹஸ்த

45. லிகிதம்.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *35* |
| கிடைத்த இடம் | : | – |
| தற்போதுள்ள இடம் | : | *காஞ்சிபுரம் மாவட்டம் சதுரங்கப் பட்டினத்துக்கு அருகில் உள்ள நல்லூர் நாட்டாரிடம் குடும்பச் சொத்தாக உள்ளது.* |
| காலம் | : | *சகம் 1222, கலி 4422, சருவதாரி ஆண்டு. செப்பேட்டின் எழுத்தமைதி படி பார்த்தால் மேற்காணும் ஆண்டுகள் சரியானதாகப் படவில்லை.* |
| முற்குறிப்பு | : | *தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவன அரையாண்டு பருவ இதழ் 'தடயம்', காத்தல் 2, காணல் 1, 1.4.2001* |
| அரசர் | : | – |
| செய்தி | : | *காஞ்சிபுரம் காமாட்சியம்மனுக்கு இடங்கைச் சாதியார் தேர் செய்து வீதியுலா விட்டபொழுது, வலங்கைச் சாதியரைச் சேர்ந்த 'சேணியன் சிம்மபுலி' தம் மந்திர வலிமையால் தேரை ஓடவிடாமல் செய்து விடுகிறான். இடங்கைச் சாதியார் மலையாள நாட்டிலிருந்து 'ஒண்டிப்புலி அனுமந்தன்' என்னும் மாந்திரிகனை வரவழைத்துத் தேரை ஓடச் செய்யும்படி கேட்டுக் கொள்கின்றனர். அம்மாந்திரீகன் தம் மகனையே பலிகொடுத்துத் தேரை ஓடச்செய்கிறான். அதற்குக் கைம்மாறாக அம்மாந்திரீகனுக்கு இடங்கைச் சாதியார் சில கொடைகள் அளித்துச் சிறப்பித்ததைத் தெரிவிக்கிறது.* |

பட்டய வாசகம் :

1. *சொஸ்த்தஸ்ரீ விசைய சாலிவாகன சிகாப்த (ச)தஉளஉயஉ (1222) கலியப்த சதசள்உயஉ (4422)*

2. க்கு மேல்ச் செல்லாநின்ற சருவதாரி சம்மஸ்த்தரம் வைய்யாசி மீ யகஉ யிந்த சுக்கு

3. ற வாரம் அஸ்த்த நஷ்ஷெத்திரம் சுபனாக யோகம் யிந்த சுபதினத்தில் சாதனம் பத்திரம்

4. எழுதிக்குடுத்த விபறம் கயிலாச பிருதி னாமமான காஞ்சி ஸ்தளம் எயஉ னாடு 63

5. கோஷ்ட்டம் மரதஷ்சிபட்டு வடுதேசத்து யிடங்கை பாணத்தார் எழுதிக் குடுத்த சாதன

6. ம் ஸ்ரீ பராபர வஸ்த்துவான ஸ்ரீமது சகலகுண சம்பன்னரான பதவாக்கிய பிறமா

7. ணிக்கரான சத்திய பாஷை அரிசந்திரரான அன்னதான சொற்ன்னதான வஸ்

8. த்திரதானம் அரிபூசை சிவபூசை குருபூசை மாரவதாரான அனேக சாம கஜஷ்சி

9. ய லஷ்சுமிகரான அக்கினியில் செம்மாவுதாரான ஆனம புலிக்கொடிக்குடையவரா

10. ன சம்புமாரிஷ்சி வேழ்வியி லுத்தித்தவரான பஞ்சவர்ன்னம் விருது படைத்தவரான கா

11. விசூ கச்சை உடையவரான வேத முப்புரினூல் தரித்தவரான வதாவியை வெண்ணவ

12. ரான யிடங்கை சிம்மாசனத்துக்கு கற்த்தவியரான ரிணவெர்பாலிகரான ரிண

13. களத்தில் பிறமுதுவு காட்டாதவரான வன்னிய புசங்கரான வ[ா]டாமாலை செங்க

14. முனீர்மாலை வெத்திமாலை தரித்தவரான வீர முரசு வெத்திமுரசு கலியாணமுரசு

15. படைத்தவரான வீரவெண்டயம் வீரகண்டாணி தரித்தவரான **சிலைஎழுபது** ப

16. டைத்தவரான சிம்மக்கொடி யுடையவரான திடதிடயெனவே பேரிகை ட

17. மாரம் சத்த செய்யாத தேசத்தில் வசைபங்கம் பண்ணினவரான கும் கும் எனவே

18. வெடிபடை கொக்கரிக்க சம்மாத்திய முடையு
மத்திவரான கூட்டமுரும் வீரபந்த னா

19. ட்டில் அளித்தவரான வீர சூர விக்கிரமார்க்கம்
பெருமை பேர் பெத்தவரான ஆடாத

20. புரவியைத் தட்டி வையாளிவிட்டான் அஞ்சாதெ
சிங்க மதவானைக்குட்டியைப் போ

21. ல் கஜகிறமம் முடைத்தவரான வந்தவரை ஆதரிக்க
வல்லவரான பாலொடு பழம்மு

22. ண்ட பன்னாடுமுடையவரான கரிமுரசும்
கங்காநதியும் மகமேரு முடைவரான

23. பந்துசென போஷகரான காளிக்காதேவி அம்மனிட
அருளும் பிறசாதமு பெத்த

24. வரான அஞ்சாதி பஞ்சாளத்தார் அனுமக் கொடி
விருது படைத்தவரான அனந்த வே

25. வத சிப்பிய சாஸ்த்திர வேத பராயண அகிலாண்ட
கோடி பிறம்மாண்டவரான

26. சிவபூயை துரந்திரிகரான ருத்திராஷ்ச
மாலிகாபரணரான மகாமேரு ச்மானதிரா

27. (ா)ன அஞ்சு சாதி பஞ்சாளத்ததார் சாஸ்த்திர ருசி
கோத்திர புத்திரரான வசிய நகர

28. த்தார் ஆயிரம் கோத்திரத்தாரும் உபநகர் பிற்ம்ம
நகர் காஞ்சி நகர் காசி நகர் அ

29. ய்யோத்தியா நகர் பிறவென்றான மாணிக்க
சிம்மாசனம் படைத்தவரான ஆ

30. யிரங் கோத்திரத்தாருகளும் தற்ம சிவாச்சாரியார்
முன்பாகக் குடுத்த கெருடக்கொடி

31. விருதுகுடு யிவர்கள் ஸ்ரீமது சகலகுண
சம்பன்னரான சகல தற்ம பரிபாலகரான

32. அகண்டித லஷ்சுமி பிறசன்னரான அன்னதான
விநோதகரான அவியாச பற்றோப

33. கார ஜனசங்கித கோலாக(ா)லரான பிறியரான
கொண்டு கொண்ட னாடு கோதண(ட)

34. ரான அன்னக்கொடி மயில்க்கொடி பெத்த
பெரியோர்களான யாளிக்கொடி பெத்தவ

35. ரான யிருதலை பச்சிக்கொடி கோழிக்கொடி
பெத்தவரான் வல்லானுட தேவிக்கி பெ

36. ரயித்தலைக்கி மெயித்தலைக் குடுத்த காளியைக்
கயிய்யால் பிடித்தவரான கா

37. மாஷிசியம்மன் துணையுண்டானவரான பச்சை டால்
வெள்ளை டால் பகல் தீவுடி

38. மகர தோறணம் படைத்தவரான குதிரை குஞ்சனம
காளஞ் சினகனக்கப்பட்டை புல்

39. லாகுழல் அலகுமாலை மஞ்ச பாவாடை
படைத்தவரான வீரகாசி படைத்தவரான வீரகண்

40. டாமணி படைத்தவரான பகல் பாசியம்
படைத்தவரான அருணாசல முதலியாரும் சின்ன

41. ப்ப முதலியாரும் முல்லப்ப முதலியாரும் கிஷ்ணப்ப
முதலியாரும் வன்னியர் பஞ்சா

42. ளத்தாரும் ஆயிரங்கோத்திரம் வசிகுல நகரத்தார்
செட்டியள் எழுதிகுடு சாசன பத்திரம் யி

43. ந்த கஞ்சி நகரத்திலே யிடைங்கையாருக்குங்
காமாஷிசி தேவிக்கி ரதம் நடப்பிச்சார்

44. கள் பன்னீராயிரம் யிழுக்குர ரதம் பண்ணி
ஓட்டிவிக்கிற வேளையிலே வலை

45. யன் கைகுள்ளே யிருக்கிற சேனியன் சிம்மப்புலி
அவனுடைய வித்தையாகிய

46. கிருவத்தினாலே தடைக்கட்டி ரதம் ஓடால்ப்படி
நிறித்திப் போட்டான் அப்போ தம்முட

47. யிடங்கைப் பாணத்தாருக்கு மனஸ்த்தாபட்டு யிதுக்கு
யிந்த ரதம் நடப்பிக்கப்பட்ட

48. வன் நம்முட் பாணதிலே எங்கேயிருக்குதோ என்று
தேசா தேசங்களுக்கு பத்திரம் எழுதி

49. அனுப்பிச்சார்கள் அப்போ கொச்சி மலையாளம்
யிடங்கையார் பாத்து அப்பால்

50. கொச்சி மலையாளத்திலே யிருக்குற சிற்ம
ஒண்டிப்பிலி அனுமந்தனை அழச்சு அப்பெ

51. பா வந்து யிடங்கையாருக்கு சருணாற்த்தினா
பண்ணிக் கொண்டான் தேர் நிண்ணு

52. போயிருக்குது அத்தைப் போயி அந்த தேரை ஓட்டி
விக்க வேணுமெண்ணு சொ

53. ன்னார்கள் அப்படியே நான் ஓட்டிவிக்குரோம்
மெண்ணு அவற்களுக்குச் சொல்லி

54. க்கொண்டு அவர்கள் குடுத்த வெகுமானங்களும் வாங்கிக்
கொண்டு காஞ்சிநக

55. ர்ப் பட்டணம் வந்து சேந்து தேரை பாத்தான் அப்போ
யிந்த தேரை னான் ஓட்டிவிக்குறே

56. ன்நென்று அவர்களுக்குச் சொல்லிக் கொண்டு
அவர்கள் கொடுத்த வெகுமான்ங்க

57. ளையம் வாங்கிக் கட்டிக் கொண்டு காஞ்சி நகர்ப் பட்
டணம் வந்து சேந்து தேரைப் ப

58. ாத்தான் அப்போ யிந்ததேரை நான் ஓட்டிவிக்குறே
நென்று யிடங்கையாருக்கு ச

59. ருணார்த்திரை பண்ணிக் கொண்டு அப்போ
தேவிக்கி ப்ராத்தினை பண்ணிக் கொண்டு த

60. ன் மகனை அழப்பிச்சு அவன் தலையை வெட்டி
தேரிலே கட்டி மந்திரப் பெலலெலாம்

61. விடுவிச்சு பன்னீராயிரம்பேர் யிழுக்குற தேரை
ஒண்டிப்பிலி ஒருனும் யிருப்பு

62. ச் சங்கிலி போட்டு மூக்கி மாட்டிக்கொண்டு தேரை
நாலு தெருவும் ஓட்டிவிச்சு நிலையி

63. லே கொண்டு தேரை நிரித்தினான் யிடங்கைப்
பாணத்தாருக்குஞ் சருணார்த்தி பண்ணிக்

64. கொண்டான் அப்போ யிடங்கைய்யார்
சந்தோஷப்பட்டு னாமும் என்னா குடுத்தாலும் நி

65. ல்லாது சந்திர சூரிய ருள்ளமட்டுக்கும்

## பின்பக்கம்

66. ஸ்வஸ்திஸ்ரீ ராயராயஸ்ரீ மகா மண்டலேசுரரான மேதிநி மகாராய கண்ட

67. பிறம்ம கற்ப்பினையாயிருக்க வேணுமென்று வெகுமானங்களையுங் குடுத்து தேசம் அன்பத்தா

68. ரு தேசத்திலுண்டான யிடங்கை பாணத்தார்கள் பேரில் சாதன பத்திரம் எழுதி குடுத்தார்கள். அது

69. க்கு வயனம் ll வன்னியருக்குத் தலைகட்டுக்கு உஉவ (வராகன் கால்?)
ஆட்டுக்கிடாயி க பஞ்சாளத்தாருக்குத் த

70. லைகட்டுக்கு உஉவ வசியன் ஆயிரங்கோத்திர நகரத்தாருக்கும் தலைக்கு உஉவ யிந்தப் பிற

71. காரம் சாதனபத்திரம் எழிதிக்குடுத்தது மழவராய முதலியார்க்கு தலைகட்டுக்கு உஉவ பண்

72. டாரத்தார் உடையார் பண்டாரத்தார் எழுதி குடுத்த சாதன பட்டையம் வீர ஆசாரி பத்திர ஆ

73. சாரி மாணிக்க ஆசாரி ராமலிங்க பந்தர் குமரசாமி பத்தர் மாந்தாளி செட்டியார்

74. ஏகாம்பர செட்டியார் புத்திர மல்லா செட்டியார் யிவர்கள் சாதனமெழுதி குடுத்த

75. து விருது விபரம் ll அன்னக் கொடி கெருடக் கொடி பஞ்சவர்ன்ன விருது அலுமக்கொடி

76. ஆன் பிலிக்கொடி அக்கினி கொடி சிங்ககொடி யிந்த விருதுகளும் டால் டமாயி வெ(ட்)

77. டுப்பாவாடை வெண்ஞ்சாமரம் பகல்தீவட்டி சிம்ம தலாடம் பூச்சக்கிற குடை ம

78. கற தோறணம் அஞ்சுவற்ன்ன விருது யிப்ப டிக்கொத்த விருதுகள் குடுத்து அன்பத்தாறு

79. தேசத்திலிருக்குற யிடங்கை பாணத்ததார் யிது பாத்துக்கொண்டு நம்முட பின்ளை பிற(ந்)

80. தா வெளிக்கிச் சாமாற்த்தியம் பண்ணி வந்த பிள்ளை என்று பாத்து யிந்த சாதன கற்ப்

81. பிதமாயி குடுத்து நடப்பிக்கொண்டு வரவும் சந்திர
சூரியர்ருள்ள மட்டுக்கும் காப்பான்

82. சாதன எழிதிக் குடுத்தது நம்மமுட பிள்ளை விருதா
வெளிக்கிப் பிறப்பட்டு ரதமும் ஒட்டிவிச்சு

83. நம்முட பேர் வெளியிலே கொண்டு வந்த பிள்ளைக்கி
யிந்தக் கட்டளைக்கிக் குடுத்து

84. நடப்பிவிச்சுக் கொண்டு வரவும் யிது குடாமல்
யாதாமொருத்தன் விகாதம் பண்ணி

85. னவனுக்கும் ஓடி ஒளிச்சுப் போனவனுக்கும் ஆயிரம்
கோவதையுங் கொண்ண

86. தோஷம் வரும் ஆயிர சிவ ஸ்தலத்துக்கு பூசை
நடப்பியாமல் பண்ணினவன் ஆயிர

87. ம் பிறாமணரை அடித்தவன் குருதேவியைச்
சேந்தவன் யிதுக்கு சாஷ்சி ஆகாசவாணி

88. பூமிதேவி காளிகாதேவி காமாஷ்வசி அம்மன்
லெஷ்சிக்கவும் சரசுப

89. தி அம்மன் துணை உண்டாகவும் ஈதேசா
லிங்கதுணை உண்டாகவும் வ

90. தேவேந்திர பள்ளன் வெள்ளை பூ சக்கரை குடை
வெள்ளை யானை படைத்தவ்ரான

91. தலைகட்டுக்கு உஉவ கோசங்கிகுட்டத்து ரூபாயிக்
கா்மாஷ்சி அம்மன் சாஷ்சி க்ள

92. ர் மரவர் துளுக்கர் தெலுங்கர் சாஷ்சி குபரா
தேவர்கள் சாஷ்சி ஒட்டி புலி

93. சிக்கணா

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *36* |
| கிடைத்த இடம் | : | *ஈரோடு மாவட்டம், காஞ்சிக் கோயில் ஒண்டிப்புலியிடமிருந்து பெறப்பட்டது.* |
| தற்போதுள்ள இடம் | : | *பெருந்துறை வட்டம், சீனாபுரம் வன்னியக்குடும்பனார், இப்பட்டயத்தைப் பரமசிவத்திட மிருந்து பெற்று மருத்துவர் ச. இராமதாசு அவர்களிடம் கொடுத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.* |
| காலம் | : | *சகம் 1223, கலி 4401, சருவதாரி ஆண்டு. இந்த இரண்டு ஆண்டுகளும் உண்மையான ஆண்டுகளாகத் தெரியவில்லை.* |
| முற்குறிப்பு | : | *மள்ளர் மலர், பிப்பரவரி, 2001, ஆசிரியர் டாக்டர் குருசாமி சித்தர், பக்கங்கள் 4–10* |
| அரசர் | : | – |
| செய்தி | : | *இச்செப்புப் பட்டயத்தின் மையச் செய்தியும் எண் 35 ஆம் செப்புப் பட்டயத்தில் உள்ளபடியே காணப் படுகிறது. ஆனால் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இடங்கைச் சாதியாரின் மெய்க்கீர்த்திகள், விருதுகள், தருமசாதனப் பட்ட யத்தில் கையொப்ப மிட்டவர்களின் பெயர்கள் ஆகியவை விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன* |

பட்டய வாசகம் :

*காமாட்சியம்மன் துணை. திருவருள் பெருகிச் செழித்த நல்லோர்கள் குருபரன் அருளால் குவலயமதனில் பரிதியும், மதியும், பாரும், கடலும் மருவிய புவியில் வாழ் அருளான ஆதிசிவஞான யோகிக்கு திருவாய் மலர்ந்தருளிய செப்பிய வாசகம். மூவர்க்கு முதல்வன் மூதறிவாளர் முக்கண்ணன் தேசிகன் கங்கைவேணியன் காலண்டன் காலகாலன் கைலையாளி நந்திவாகனன் நான்மறை நாயகன் வெண்ணீரணிவோன் மான் மழு தரித்தோன் மலர்க்கையாளி*

பஞ்சபரிபூரணன் பார்வதிநாயகன் ஆதிபரமேஸ்வரன் அறுபத்தி நான்கு சதுரயுகம் அழிவில்லாமல் மாமரத்தின் கீழே மகாபூசை கொண்டருளிய ஏகாம்பரநாதர் கம்பையாற்றில் தவஞ்செய்யும் காரணியாகிய குறுமாரி பாய்ச்சல் கண்டருளிய காமாட்சியம்மையும் மேன்மையான ஆலயமும் தரித்து அனேக யுகந்தழைக்கும் அழிவில்லாத மாநகரமாகிய காஞ்சி மாநகரத்தில் அழியாப் பதவியாய் தன்னுயிர் போல் மன்னுயிர் காத்து கறந்த பாலை காகம் தொடாமல் துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் செய்து அசையா மணிகட்டி ஆறில் ஒரு கடமை கொண்டு மனு நீதியாக இராச்சிய பரிபாலனம் செய்கின்ற இராஜாதி ராஜன் ராஜ பரமேஸ்வரன் இராஜ மார்த்தாண்டன், ராஜ கம்பீரன், செந்தமிழ் குமரன், ஜெகதல ராஜேந்திரன், பொன் நாடாதிபன், புலிக்கொடிதோழன், பொன்னி மாநதியாம் மன்னருக்கு மன்னன், கோழி வேந்தன் அகோர நகுலன், சூரிய குலாதிபன், ஆத்திமாலையன், அலங்கார ராயனென்கிற சோழ ராஜ ராஜாக்களின் வீர விக்கிரம சோழன், வரமிகு சோம சோழன், ராஜேந்திர சோழன், மனுநீதி கண்ட சோழன், பெருவீர சோழன், காவேரி கரை கண்ட குலோத்துங்க சோழன், மருதிங்க சோழன், ராஜனுடன் ஆள்கையிலே

ராஜஸ்திரி மகாமண்டலீசுரன் அறிய தள விபாடன் பாஷைக்கு தப்புவராய கண்டன், துலுக்க மோக்ஷி மோகந் தவிழ்ந்தான். துலுக்க தள விபாடன் ஒட்டிய மோகந் தவிழ்ந்தான், ஒட்டிய தள விபாடன், கண்ட நாடு கொண்ட நாடு கொடாதவரான, சமுத்திரமான நாலு கடலும் சூழ்ந்த நாவலம் பெருந்தீவில், இப்பரத கண்டத்தில், விஜய நகர பட்டணத்தில், திவ்விய ரத்தின சிம்மாசன புருடராகிய, பிரிதி ராஜ்ஜிய பரிபாலனம் செய்கின்ற கிரீடாதிபதியான, பாண்டிய மண்டலமும், சோழ மண்டலமும், கொங்கு சேர மண்டலமும், மலையாள தேசமும், மகுட தேசமும், 24 கோட்டமும் 79 வளநாடும் பெற்ற தொண்டை மண்டல நாடும், **நடு நாட்டரசு படைவிடு மகாநாடாகிய காஞ்சிபுர நாட்டிற்கு சேர்ந்த 56 தேசமும்,** வங்க தேசமும், கலிங்க தேசம், கலியாணதேசம், ஒட்டிய தேசம், மராடதேசம், கங்கை தேசம், கிராட தேசம், துளுவ தேசம், கோசல தேசம், கொங்கணி தேசம், குருத்த தேசம், கர்னாட தேசம், சீனகதேசம், ப்பரதேசம், குச்சரதேசம், மிச்சதேசம், மாளுவதேசம், சாளுவ தேசம், கலிங்க தேசம், சிந்து தேசம்,

காந்தாரதேசம், கொளட்டதேசம், நிடத தேசம், விதர்ப்பதேசம், தெலுங்குதேசம், ஆரிய தேசம், மல்லி தேசம், காம்போதி தேசம், காம்பீலி, நேபாளம், பல்லவதேசம், சேதுராஜ்ஜியம், மாயாபுரி, விருத்தப்புரி, கச்சி உத்ராங்கிரதம், கவுசலம், அவந்தி, துவாரகை, அங்கம், வங்காளம், உச்சினம், இந்துஸ்தானி, சிங்களம், யேபாணம், ஈழம், பாதாளம், முதலாகிய அன்பத்து ஆறு தேசமும் மண்டலமும், திரை கொண்டருளிய ராசாதிராசன், ராஜபரமேஸ்பரனாகிய, ராசமார்த்தாண்டன், ராகெம்பீரன் மகுடம், மன்னியர் பணியாத சேகரரா ஸ்ரீரங்கராயர் சதாசிவராயர், வீரசுந்தரராயர், அச்சுதராயர், அனந்தராயர், கோவிந்தராயர், மனுநீதிராயர், விஜயராயர், விருப்பாச்சிராயர், ஆனைகுத்திராயர், கிருஷ்ணராயர் இவர்கள் ராஜ்ஜிய பரிபாலம் செய்கின்ற நாளில் காஞ்சிமாநகரில் **மழவராயருடன் சேர்ந்த ஒன்பது பாணத்தாரும்** ஒருகோணத்தில் கூடி ஒண்டிப்புலிக்கு உதாரணப்பத்திரம் செப்பேடு பட்டயம் எழுதிக் கொடுத்த விபரம்.

சுபத்திதி விசய சாலிவாகன சகாப்தம் 1223 கலியுக சகாப்தம் 4401 பிரவ ஜென்மஷரம் இதற்கு மேல் செல்லா நின்ற சருவதாரி வருசம் வைகாசி யக (11) தேதி சுக்கிரவாரமும், பூர்வபட்சத்து பஞ்சமியும், பூச நட்சித்திரமும் சுபநாமயோகமும் பாலவாகருணமும் பெற்ற சுபதினத்தில் செப்பேடு பட்டயம் எழுதிக் கொடுத்த விவரம்.

படை பத்து வன்னிய கோத்திரம் படையாச்சிகள், ஸ்ரீமது சகல சம்பன்னரான சகல தாம்பிரிதி பாலகரான அன்னதான விநோதரான அகண்ட லட்சுமி ஆஷ்பரிய சம்பன்னரான அருபூசை, குருபுசை மறவாத பெரியோர்களான சிந்தாமணியரான, பதுபாக்கிய பிரமாணிக்கரான, தெய்வவாக்கிய பிரமாணிக்கரான, சம்புமாரிசி வீரபுத்திரரான குமாரசாமி படைத்தலைவரான, அளவில் பிறந்து அம்போதரங் கண்ட வன்னியரான, அசுர சங்கரரான அவ்விய குண விற்பனரான, சிந்தாமாணிக்கரான காந்த மகரிஷி கன்னியை மணஞ் செய்தவரான வாடாத மாலையும், வர்னத் தடுக்கும் பெற்றவரான பூனூல் மார்பும் புலிக்கொடிப் பதாகையும் பெற்ற பெரியோர்களான, சேர நாட்டுக்கதிபதியான, பயனாட்டுக் கதிபதியான மகுடம் துணித்தவரான, ஆகாசத்திலுதித்து, அக்கினிப்புரவி உதித்தவரான வீரபரி நகுலரான, துஷ்ட

கோதண்டவரான சண்ட பிரசண்ட வீரமார்த்தாண்டவரான உடையார் படையாச்சியாய் அவதரித்த பேர் பெற்ற மழுவராயர் கோத்திரத்தில் பெரியோர்களும், பாலநதி வடதிசையில் ருத்திர வன்னியன் பார்பு(க)மும் பொன்னை மட்டும் கிருஷ்ண வன்னியன் சீலமது, காவேரி பிரம்ம வன்னியன், டில்லிக்குக் கீழ் பாரிசம் ஜம்புவன்னியன், ஜெகதலம் காளேஷ்திரி கெங்கை வன்னியன் ஆலம்போல் கொம்புதுத்து அரக்கருக் கடுமையான அக்கினியில் பிறந்தவர்கள் அய்வர் தாமே. மழவராய கோத்திரத்தில் பெரியோர்களும்.

வீர செங்குந்தரில் சிவஞானமைந்தன் திருமேனி காவலரான கந்தன் சகோதரரான காமாட்சி வரபுத்திரரான வீரபாகுதேவன், வீரதாரணன், வீரமார்த்தாண்டன், வீர கெம்பீரன், வீர மாயேஷ்வரன், வீர பராக்கிரமன் ஒன்பது நவவீர துரேந்திரனென்றும் எட்டுத்திக்கும் இடங்கை வல்லவரான வல்லானை வென்றவரான, பஞ்சவர்ண விருதும், பாவாடையும் பெற்றவரான மேல் மீசையுடையவரான புலிக்கொடியும், மயில் கொடியும், செங்கடப்ப மாலையும் சேவல் கொடியும் பெற்றவரான வீர செங்குந்தரில் பெரியோர்களும்.

விஷ்வகண்ணாளரில் ஸ்ரீமது மண்டலீஷ்பரன் சங்கராசங்கரன் சதாசிவ மூர்த்தி சர்வரோகேஷ்வரன் சகலாத்மாக்களையும் பேதாதி பேதமாக் உண்டாக்கும் பொருட்டாய் திருவுளத்தை எண்ணி திருநெத்திக் கண்ணில் திருவவதாரஞ்செய்த சிவப்பரமாச்சாரி சிறப்பினை உடைய பரமதிருவோரும் பாகனாகிய பரமானந்தாண்டவமாடிய சிவன் யேகாந்த சித்தனாகி இருக்கும் நாளில் விண்ணும். மண்ணும் இல்லாத காலத்தில் பராபரமாகிய பரமேஸ்வரன் பரனாகிய பரனில் சிவனாகி, சிவனில் நாதமாகிய நாதத்தில் விந்துவாகி, விந்துவில் தானாகிய தரப்பர மூர்த்தி தன்னைத்தானே தோன்று பரமயோத்தி சித்தாந்தமாகிய காலத்தில் பரமயோகம் புகழ்தற்கிடமாகிய சிருஷ்டிஷ்திதி சங்கார மதிரோற்பவம் அனுக்கிரக மென்கிற பஞ்ச கீர்த்தியம் நடத்த வேண்டியதாக புகழ் கீதம் பெற்ற பரமயோகத்திலே நெத்திக் கண்ணில் அக்கினி தோன்றி விழைந்துருகி சிவனால் விஷ்வ பிரம்மாசாரியார் பஞ்சமுகமும், பதினைந்து கண்ணும், பத்துக் கரமும், பத்மாசனமும் சிவயோகமும் தண்டு கமண்டலமுமாக சிவனை வணங்கி அடியேனைப் பிறப்பித்தவாரேதுவென்று கேட்க,

வாரும் விஷ்வ பிரம்மாவே ஈரெழு பதினாறு லோகமும் திருஷ்டிக்க வேண்டுமென்று திருவுளம்பற்றி அருளச் செய்ய சகல சாஸ்திரமும், சதுர் வேதமும் ஆரியநாடும் அழகாகப் பெற்று சகலலோகமும் பிரதிஷ்டை ஆஷிஷிய ஆசாரியார் மாந்தை நகரும் வல்லிமாலையும் அகில் முகில் பரியும் அயராபதமும் அனுமக்கொடியும், சேவல்கொடியும், சேவடி முரசும் பெற்றவரான பஞ்சலோகத்துக் கதிபதியான பஞ்சபிர்மசமய கோளரி காளிகாதேவி வரப்பிரசாதம் பெற்றவரான நகரம் சமைத்தவரான பரலோகம் வகுத்தவரான மாந்தை நகரதிபதியான கடலை அடைக்க வகையிட்ட கண்ணாளரும், கதிரோனை அச்சிலொட்டிக் கடைந்த கண்ணாளரும் உலையிருக்க வகையிட்ட கண்ணாளரும் உலகமெல்லாம் கல்பந்தல் போட்டு வென்ற கண்ணாளரும் மணமன்னருக்கு முடிவைத்த மாந்தைக் கண்ணாளரும் வாகன மேகத்தை வளைக்கும் கண்ணாளரும் தென்னவர்க்கு தேர் கொடுத்த தெய்வக் கண்ணாளரும், செந்தமிழ் புலவர்க்கு மகுடம் சமைத்தவரான நகரம் சமைத்தவரான பூலோகம் வகுத்தவரான மாந்தை நகராதிபதியான இவர்களில் பெரியோருக்கும்.

ஆயிரவரில் மக்குல மகாமுனியை வமுச்சாதிபதியான ஆயிரங்கோத்திரரான தர்மதான பிரதாபரான ஆதித் திருவாலங்காடு அகஹோர வெண்முடி தரித்த தர்ம சிவாச்சாரியார் பாதாரவிந்தத்துக்கு நேயரான தட்டைநாத சாமியார் பாதாரவிந்தத்துக்கு கற்பூர தீபரான வைசிய குலதீபரான மூன்றாம் குடித்தலைவரான முச்சகம் யேறியவரான கிஷ்கிந்தா வெற்பும், பம்பையாறும் வைகுந்த வளநாடும், கெருடக்கொடியம், தோன்றி மாலையும், பங்சாங்கமுரசும், மாணிக்கச் சிம்மாசனமும் பெற்று மாணிக்கம் பிச்சையிட்டவரான பொற்கிரீடம் படைத்தவரான நாகமணி கொண்டவரான பாண்டியன் துலாபரம் ஏற்றி வைத்தவரான பாண்டியனுடன் பந்தாடி வென்றவரான பந்தல்காலுக்கு பவழக்கால் கொடுத்தவரான சோழராஜன் வந்து பெண் கேட்க ஆண் நாயைப் பந்தக் காலில் கட்டி வைத்தவரான ஒன்பது முடக்கு மாணிக்கத்தை முச்சரட்டில் கோர்த்தவரான கற்பூரதீபம் இட்டவரான கம்பனார் கோயிலை செம்பொன்னால் மேய்ந்தவரான அண்ணாமலையாருக்கு

நீரும், நிழலும் கொடுத்தவரான மாறாப்புரவியும் அயோத்தி மாநகரமும் கண்ட காத வைசியரான நகராதிபதியரான காவேரியைக் கையினால் தடுத்தவரான மகாமேருவை நிறைக்கண்டவரான வைசிய குலத்துங்கரான இவர்களில் பெரியோர்களும்

முன்னமே ஒரு கதை. படையாச்சி கோத்திரம் விஷ்வ கண்ணாளரும், செங்குந்தரும் கொண்டு விருது பெற்றது எப்படி என்றால் ஆதிகாலத்தில் தெற்கு சமுத்திரத்தில் புலிபுதைத்த தீவில் காளேஷ்திரி கண்டன் என்கிறவன் கப்பலேறி வந்து சேரனாட்டை அழித்து கொள்ளை, சூறை பிடித்து வெகு உபத்திரவம் பண்ணிக் கொண்டிருந்த படியினாலே சோழ ராசாவானவர் படையாச்சிகளையும் செங்குத்த முதலிமாரையும் அழைத்து நீங்கள் வல்லாளனை வென்றவரல்லவோ இந்தச் சோரனைக் கொல்லாமல் உயிருடன் பிடித்துக் கொள்வீரானால் அனேக விருதுகளும், வெகுமதியும் தருகிறோமென்று ராசா சொன்னபடியினாலே இவர்கள் நல்லதென்று சம்மதித்து மூன்று மாதத்தில் கொண்டுவந்து கொடுகிறோமென்று சொன்னார்கள். அப்போது மருதூர் வன்னிக் கொடியானுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து அனுப்பின பிறகு மருதூர் வன்னிக்கொடியான் வந்து தேசா தேசங்களுக்குண்டான படையாச்சிகளுக்கும் செங்குந்தருக்கும் ஓலை எழுதி அனுப்பினார்கள். அங்கங்கு ஓலை வந்தவுடன் சகலமான படையாச்சிகளும் செங்குத்தரும் வந்துகூடி என்னவென்று கேட்க இக்காரியத்தை ராசாவுக்கு சாதித்துக் கொடுத்தோமானால் நமக்கு கீர்த்தியும், வெகுமானமும் உண்டு இல்லாவிட்டால் நம்ம விருது எடுபட்டுப் போகும்.

இதற்கு என்ன செய்யலாம் என்று வன்னிக் கொடியான் படையாச்சியைக் கேட்டான். அப்போது சகலருங்கூடி காரியத்தை சாதிப்போம் என்று சம்மதித்து காவேரிப் பட்டினத்துக்கு வந்து அதிலே காஞ்சி மாமேடையானென்கிற நகரத்துச் செட்டியார் அவருக்கு 108 கப்பல் நடக்கும் அவன் விட்டுக்கு படையாச்சிகளிலே முதல்வராகிய 4 பேர் வந்து வாருமையா நகரத்து செட்டியாரே நம் இடங்கையில் சேர்ந்தவரல்லோ எங்களக்கு மரணம் வந்தாலும் வெகுமானம் வந்தாலும் உம்முடையதல்லோ, சோழராசாவானவர் காளேஷ்திரி கண்டனென்கிற சோரனைப் பிடித்துவரச்

சொன்னார். 3 மாதத்தில் பிடித்துத் தருகிறோம் என்று பாக்கு வெத்தலை வாங்கி வந்தோம். அந்தக் கெடு தப்பாதபடி ஒப்பித்தோமாகில் விருதும், வெகுமதியும் கிடைக்கும் இதற்கு என்ன யோசனை என்று கேட்க அப்போது செட்டியார் 108 கப்பலுக்கும் அந்தத் தீவுக்குப் போய் வருகிறதற்கு 3 மாசம் படி சாப்பாடு செலவுக்கு 5 கோடி திரவியமும் கொடுத்தார். அப்போது செட்டியார் 108 கப்பலும் பீரங்கி முஸ்தீபுகளும் சகலமும் நிறைத்து 5 கோடி திரவியமும் கொடுத்தார்.

அப்போது 5 லட்சம் பேர் படையாச்சிகளையும் முதலிமார்களையும் கூட்டிக்கொண்டு அந்தப் புலி புதைத்த தீவுக்குப் போனார்கள். அந்தத் தீவுக்கு மேற்கு 56 காத வட்டமும் தெற்கு வடக்கு 64 காத வட்டமும் விசாலமாக இருக்கும் அந்தத் தீவுக்கு நடுவே செம்பாலே கோட்டையிட்டு அதிலே 36000 சேரர்களுடனே இருக்கின்றான். அந்தக் கோட்டையைச் சுற்றி முக்காதவழிக்கு ஆலங்காடு சோங்கு ஆரணியம் வந்து ஒருவரும் போகக்கூடாது. அந்தக் காட்டிலே வந்தவன் அந்தக் காளிகாதேவியும், பூதகணங்களும், பேய்களும் கொன்று தின்று விடும். அந்தக் காளிகாதேவியை அந்தக் காட்டிலே ஒரு துர்க்கையும், கோதமோகினையென்று காளிகாதேவி இருந்து கொண்டு மாற்றானை வரவொட்டாமல் காவலாக இருக்கும். அந்த காளிகாதேவியை நிக்கிரகம் செய்தால் காளேஷ்திரி கண்டனை பிடிக்க வேண்டும்.

அந்த காளிகாதேவியை நிக்கிரகம் செய்யாமல் தீராது. செங்குத்த முதலிமாராலே ஆக வேண்டுமென்று படையாச்சிகளை நியமித்த செங்குத்த முதலியாருக்கு காளி காளி காளி காளிகாதேவியை நிக்கிரகம் பண்ணுகிறதற்கு ஆள் அனுப்பித்தபோது அதிலே வள்ளாளனை மனந்துணிந்து தெய்வீக செங்குந்த முதலிமாருக்கும் காளிகாதேவியை கைதொழுது காலனுக்கு ஓலையீட்டு செஞ்சவரம் பெற்ற செங்குத்த முதலிமாரு இவர்கள் முதலான 40,000 பேர் அனேக சேனைக் கூட்டத்துடனே அனேக விருதுகளுடன் புலிக்கொடி பிடித்துக்கொண்டு சேகண்டி லவண்டை மல்லாரி, ரட்டை நாகசரம், ரட்டை சங்கு மற்று முண்டான விருதுகளுடனே செங்குத்த முதலியார் வந்தபோது படையாச்சிகளும் கண்ணாளரும் எதிர்கொண்டு அழைத்து வரிசைகளுடனே ஏகாசனத்திலே வைத்துக்கொண்டு முன்நடந்தத காரியங்களைச்

சொல்லி இந்த காளிகாதேவியை நிக்கிரகம் செய்து கொடுப்பீர்களானால் ராசா கொடுக்கும் விருது உங்களுக்கே பெருமை என்றும் படையாச்சிகள் சொல்ல, நல்லது என்று அந்தக் காளிகாதேவியை நாங்கள் நிக்கிரகம் செய்கிறோம். நீங்கள் சோரனைப் பிடியுங்கள் என்று சொல்லி அந்த செங்குத்த முதலிமார் சேனைகளுடனே பயணப்பட்டு அந்த காளிகாதேவியை சுத்திக் கொண்டு உயித்தியம் செய்தார்கள்.

அந்த செங்குந்தரில் சரவணப் பொய்கையான் என்றொருவன், அந்த வேளையில் சுனையில் முழுகி நேம நிஷ்டையுடன் சுப்பிரமணியவிஞ்ஞை மந்திரத்தை உருவேத்தினார். அப்போது சுப்பிரமணியர் பிரச்சன்னமாக வந்து வீரபாகு தலைவரை அனுப்பினார். அந்த வீரபாகு தலைவரும், சிவகணங்களும் இந்த செங்குத்த முதலியாரும் கூடி உயித்தியம் செய்து அந்த பூதகணங்களையும் பேய்க் கூட்டங்களையும் முடுக்கி அடிக்கிறபோது சில பூதம், சில பேய்களும் இறந்து போயிற்று, மற்ற பேய்களும் பூதங்களும் ஓடிபோய்விட்டது. அப்போது காளிகாதேவி கோபங்கொண்டு கையில் இருப்புலக்கை எடுத்துக் கொண்டு எல்லோரையும் கொன்று போடுகிறேனென்று அலறிக் கொண்டு வந்தாள். அப்போது சரவணப் பொய்கையானென்பான் வேலாயுத மந்திரத்தைத உருவேத்தினான். அந்த வேலாயுதம் வந்து அந்த காளிகாதேவியை துரத்தி ஆயுதவதித்தங்களையெல்லாம் அதம் செய்ததாலே அந்த காளிகாதேவியே வந்து நீங்கள் செங்குத்தரைப் பார்த்து வெகு சந்தோசமாகி நீங்கள் கெட்டிக்காரத்தனம் படைத்தவர் என்று சொல்லுகிறது. உங்களுக்கே செல்லும் உங்களுக்கு என்ன வரம் வேண்டுமோ அந்த வரத்தைக் கேளுங்கள் என்று சொல்ல உங்கள் படையாச்சிகளுக்கு இந்தத்தீவும் நம்முடைய கைக்கு வசமாக வேணும் இந்த சோரனையும் அவன் எங்கள் கையில் பிடிபட வேணும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியே அம்மன் வரங்கொடுத்து சில பூதங்களையும் அனுப்பினாள்.

அப்போது படையாச்சிகளுடனே இப்படி அம்மன் வரங்கொடுத்திருக்கிறார். அந்தச் சோரன் உங்கள் கையில் அகப்படுவானென்று சொன்ன போது வெகு சந்தோசத்துடன் படையாச்சிகள் அந்தக் காளிகாதேவியை வணங்கி அந்தக் காடுகளெல்லாம் கடந்து அந்தக் கோட்டையைச் சுற்றிலும்

படையாச்சிகளும் பேய்க் கூட்டங்களும், சிவகணங்களும் காவலாய் இருந்து 4 திக்கிலும் இருந்தார்கள். அப்போது நீலனென்றும் வாதாபியென்று இரண்டு பேர்கள் அந்தக் காட்டிலே புகுந்து சோதித்து கள்ளத் தடாகங்கள் எங்கே இருக்கின்றதென்று தேடிப்பார்த்து வருகிறோம் என்று போனார்கள். அப்போது 2 அக காதவாடி போட்டுக்கொண்டு இருந்தார்கள். நீலனும், வாதாபியும் இரண்டு பேரும் அவ்விடத்திலிருக்க அங்குள்ள சோரர்கள் இது யாரோ மாந்தனாயிருக்கிறானென்று பிடித்து இழுத்து இரண்டு பேருக்கும் விலங்கு போட்டு ஒரு வீட்டில் அடைத்துவிட்டு தன் நாட்டுக்கு ஆள் அனுப்பினார்கள். இவர்கள் மந்திரத்தினாலே ராத்திரி நேரத்தில் விலங்கை தரித்து நாலுபேர் தலைஎ்யயும் வெட்டிக்கொண்டு படையாச்சியினண்டையில் வந்து சேர்ந்தார்கள்.

அந்த படையாச்சிகளெல்லாம் ஒன்றாய்க் கூடி சூரிய உதயத்திற்கு முன்னே படையெடுத்துப் போய் அந்தக் கோட்டையைச் சுற்றி வளைத்து 1200 சோரரையும் கையில் பிடித்துக் கொண்டு அந்தக் காட்டை வெட்டி வழி பண்ணி முக்காத வழிக்கோட்டையைச் சுற்றி பாளையம் இறங்கி படையெடுத்து உயித்தியம் செய்து கோட்டையை இடித்துத் தள்ளி அதிலே இருந்த சோரரையெல்லாம் வெட்டி காளேஷ்திரி கண்டனைக் கைப்பிடியாப் பிடித்து அவன் பெண்சாதி, பிள்ளைகளையும் பிடித்துக் கொண்டு அந்தத் தீவையெல்லாம் கொள்ளையிட்டார்கள். அதிலே 36 கோடி பசும்பொன் திரவியமும், மாணிக்கம் முத்துப் பவளம் புஸ்பராகம், கோமேதகம், மரகதம், வச்சிரம், வைடூரியம், நீலம் முதலான நவரத்தினங்களும் அனேகம் கோதேதங்களும், சீனி சீனாம்பரமும் சிக்கினதெல்லாம் கப்பலேற்றி இந்துக்களுக்கு அனுப்பினார்கள்.

அந்த தீவில் வெற்றி தோரணங்கள் கட்டி அந்தக் கோட்டையைச் சுற்றி செங்குந்தரைக் காவல் வைத்து இந்த கொள்ளை முதலையும் அனேகம் ஆனை மேலேற்றிக் கொண்டு ராசாவுடனே சொன்னபடி 29 நாளிலே காளேஸ்திரி கண்டன் கையிலே விலங்கு போட்டு ராசாமுன்னே கொண்டு ஒப்பித்தார்கள். மறுபடி சிக்கின திரவியங்கள், நவரத்தினங்கள், ஆடை ஆபரணங்கள் சீனி, சீனாம்பரமெல்லாம்

கொண்டுபோய், மலைபோலே குவித்தார்கள். அப்போது ராசாவுக்கு அளவற்ற சந்தோசமாகி இந்த படையாச்சிகளுக்கும் செங்குத்த முதலிமாருக்கும் என்ன கொடுத்தாலும் ஒப்பல்லவென்று அனேகம் விருதுகளும், அனேகம் விகளாயம் செய்து 'சேரநாட்டுக் காவலர்' என்கிறபேரும் கொடுத்து கந்தன் படைத்தலைவன் என்கிற கெட்டிக்காரப் பட்டம் உங்களுக்கே செல்லும் என்று அக்கினியில் பிறந்த மழுவராய கூட்டமென்று 32 விருதும் உங்களுக்கே செல்லும், காஞ்சி மாமேடையான் என்கிற செட்டியாருக்கு படையாச்சிகள் கடனாக வாங்கி திரவியமும், வட்டியும் சேர்த்து ராசா கொடுத்து, உருகரையும் கொடுத்து அனுப்பித்தார். இவர்களோடு வந்த சேனைகளுக்கு வெகுமதியும் கொடுத்து அனுப்பித்தார்.

அப்போது சேரன், சோழன், பாண்டியன் மூன்று ராசாக்களாலே விருது பெற்றவன் ஆரூர் அம்மநாத படையாச்சி, அரியலூர், அதியனூர் மழவராய படையாச்சி, செஞ்சி நகரம் சிங்கப்படையாச்சி, மதுரை வசந்தராயப் படையாச்சி, சீரங்கம் சென்றாயப்படையாச்சி, காஞ்சிபுரம் காளேஷ்திரிப் படையாச்சி.

வீர செங்குந்தரில் சோழனண்டை விருதுபெற்றவர். மதுரை காமாட்சி முதலியார், ஸ்ரீவில்லிபுத்தூர் அண்ணாமலை முதலியார், திருவண்ணாமலை வெங்காடசல முதலியார்.

சோழனண்டை விருது பெற்ற கண்ணாளரில் காஞ்சிபுரம் காமாட்சி ஆசாரியார், வேலூர் விஸ்வநாத ஆசாரியார், திருச்சிராப்பள்ளி திருவேங்கட ஆசாரியார், தஞ்சாவூர், சொக்கநாத ஆசாரியார், திருநெல்வேலி வடிவேல் ஆசாரியார்.

வைசிய குலத்தவரில் விருதுபெற்றவர்கள் பரமசபாபதி செட்டியார், தஞ்சாவூர் தனகோடி செட்டியார், திருநெல்வேலி பரஞ்சோதி செட்டியார், மதுரை கோபால செட்டியார், காளேஸ்திரி அண்ணாமலை செட்டியார், கொங்கு தாராபுரம் வீரபத்திர செட்டியார் முதலானவர்களும்

தேவேந்திரப் பள்ளரில் வெள்ளானை வேந்தன் மிக விருது பெற்றவன் சேத்துக்கால் செனனன், சென்னல் முடிக் காவலன், தேவேந்திர வரபுத்திரன், மண்வெட்டி கொண்டு மலையைக் கடைந்த கண்ணன், வொள்ள(ா)னைக் கொடி படைத்தவன், வெள்ளைக் குடை, முத்துக்குடை, பவளக்குடை, பஞ்சவர்ணக்குடை, முகில் கொடி, புலிக்கொடி, அலகுக்கொடி

படைத்தவன், தெய்வப்பொன்முடி தேவேந்திரனுக்கு கொடுத்து இருகால்சிலம்பு வெகுவிருது பெற்றவன், குருணிகுர தேவேந்திரப்பள்ளன்.

காஞ்சிபுரத்துப் பண்ணாடி, சின்னக் காஞ்சிபுரம் நாகப்பண்ணாடி, சர்வதீரத்து வீதி முத்துப் பண்ணாடியும், செஞ்சி நகரம் அரசப் பண்ணாடியும், தஞ்சாபூர் சீரங்க மூப்பன், திருச்சிராப்பள்ளி மூச்சு முப்பன், திருவெங்கிமலை நயினார்க் குடும்பன், மதுரை நாராயணக் குடும்பன், ஸ்ரீவில்லிப்புத்தூர் காந்திமதி காலாடி, திருச்செங்கோடு பழனிப் பண்ணாடியும், தேவேந்திரக் கூட்டத்தின் பெரியோர்களும்.

விருது கோசங்கிகளில் தெய்வச் சம்மாளி பெற்றவன், சீர்பாதங்கொண்டு செய்தவன், மாதங்கி வரங்கொண்டவன், தென்னை மரத்தில் பிறந்த செய்வீர செனனன், நன்மையாய் பிறந்த நல்ல கோசங்கி அர்த்தநாரிசல்லி புலித்தோலும், நரசல்லி விருதுக்குடையவன், வச்சிரகாயம் பெற்றவன், மாதாரி செனனன் வங்கிசத்தான், திருமேனி பெற்றவன் கையிலாத காந்தித்தான் ஆசானை பிள்ளைக்கு சம்பந்தியானவன், அதிகபலம் பெற்றவன், விருது கோசங்கிகளில் இலுப்பூர் வீரப்பகடையும், வேலூர் நாகப்பகடையும் காஞ்சிபுரம் சித்ரக்கல் ஓவன், கொங்கு தாராபுரம் திம்மப் பகடை, அரியலூர் மணிப் பகடை.

முதலானவர்களும் கூடி காஞ்சிபுரத்திலே தங்கைகொண்டான் வீதியிலே மண்டபத்தில் வந்து கூடினார்கள். அது எது காரணத்தினாலே கூடினதென்றால் காஞ்சிபுரத்திலே ஏகாம்பர நாதருக்கும் காமாட்சி அம்மனுக்கும், காளிகாதேவிக்கும் திருவிழா உண்டுபண்ணி தேர் நடத்தி வரும்போது

காஞ்சிபுரத்திலே 'சிம்மப்புலி' என்றொருவன் மகாவித்தையில் வல்லவன், இந்திரசாலம் மகேந்திர சாலம் கற்றவன், மோடிவித்தை அனேகம் சாஸ்திரம் கற்றவன், பூதபிசாசுகள் பணிவுடை செய்யும்படி காலை மாலை மந்திர உபதேசம் செய்து கொண்டு இருப்பான். அவ்வல்லவனாகிய சிங்கப்புலி, உலகத்திலே மகாராசாக்களிடம் அனேக வெகுமதிகள் பெற்று வெகுபராக்கிரமத்துடன் எனக்கு இந்த உலகத்திலே எதிரிகள் ஒருவரும் எதிரில்லை என்று கற்றும் கொண்டு இருப்பான். அவனுடைய அகங்காரத்தினாலே

காஞ்சிபுரத்திலே ஏகாம்பர நாதருக்கும், காமாட்சியம்மன் காளிகாதேவிக்கும் இன்னும் மற்றுமுண்டான தெய்வங்களுக்கும், திருவிழா உண்டுபண்ணி தேர் நடத்தினபடியால் இடங்கையில் சேர்ந்த வலங்கையில் சேவிக்கவும் பெரியோர்கள் பொதுவாக நடத்தினரார்கள். விருது கோசங்கி 9 பாணத்தாருக்கும் சொந்தப்பிள்ளை. சகலத்துக்கும் பாத்தியப்பட்டவன். தெய்வத்தைச் சுற்றி வந்து சமாளிக்கக் கூடியவன். இடக்கையில் சேவிக்கப்பட்டவன். இடங்கை தோரணங்கட்டக் கூடியவன். எல்லாம் பொது ஸ்தானத்திலே பாத்தியப்பட்டவன் தேர் நடத்தினபடியினாலே சிங்கப்புலி யானவன் தேரை அசையாமல் நிறுத்திப் போட்டான்.

அப்போது மகாராசா கிருஷ்ணராயவர்கள் பார்த்துக் கோபித்துக் கொண்டு 9 பாணத்தாரையும் சாமிக்கு துரோகம் செய்தீர்களென்று சிறையிலே அடைத்துவிட்டார்கள். எது காரணத்தினாலேயே நடந்ததென்று சாஸ்திரிகளை அழைத்துக் கேட்டார்கள். அதற்கு சாஸ்திரிகள் ஒரு மனிதனாலே வந்திருக்கிறதென்று ஓசை சொன்னார்கள். அது இன்ன மனிதனென்று தெரியவில்லை. அப்போது ராயர் பார்த்து தேரை 3 மாதத்தில் ஓட்டிக் கொடுத்தலாச்சுது, இல்லாவிட்டால் உங்களத்தனை பேரையும் சிரசாக்கினை செய்வேனென்று ராசா சொன்னபடியினாலே, காஞ்சிபுரத்தில் கங்கை கொண்டான் மண்டபத்தில் இந்த 9 பாணத்தாரும் கூடி இந்தத் தேரை நடத்த வள்ளாள கண்டன் யாரு என்று விசாரிக்குமிடத்தில் தேசங்களுக்கு ஆளும், ஓலையும் அனுப்பினார்கள்.

அந்த மலையாள தேசத்திற்கு ஓலை போனபோது அதிலே கொல்ல ராசா சபையில் விருதுப்பிள்ளை என்று ஒருவன் இருந்தான். அவனுக்கும், அவன் பெண்சாதிக்கும், மகாவித்தைகளும் தெரியும் அவனிடத்தில் ஓலை போனது. அப்போது ராசாவானவர் விருதுப்பிள்ளை என்கிற கொல்ல கிருஷ்ண நாயக்கனை அழைத்து நீ போய் அந்தத்தேரை ஓட்டிக் கொடுத்தாயானால் காலவிருதும் வெகுமதியும் கிடைக்குமென்று சொன்னார். அவனும் போகிறேனென்று சொன்னான். அப்போது ராசாவுக்கு சந்தோசமாகி பாக்கு வெத்திலை கொடுத்து அவனையும், அவன் பெஞ்சாதியையும், பிள்ளைகளையும் கூட்டி அனுப்பினார்.

அவர்கள் எல்லோரும் காஞ்சிபுரம் கெங்கைகொண்டான் மைதானம் வந்து கூடினார்கள். அப்போது இந்த விருதப் பிள்ளையை இந்த தேரை நடத்த உன்னாலே திறம் உண்டோவெனக் கேட்டார்கள். இந்தத்தேரை நானே போய் ஓட்டுகிறேன் என்று சொன்னான். இந்தத்தேரை ஓடவிடுவேயானால் எங்கள் இடங்கைக்குண்டான விருதுகளெல்லாம் கொடுக்கிறோமென்று பாக்கு, வெத்தலை கொடுத்தார்கள். மறுபடியும் எங்கள் உறவுமுறை சாதியாரெல்லாம் செப்பேடு பட்டயம் எழுதிக் கொடுக்கிறோமென்று சொன்னார்கள். அப்படியே பட்டயம் பண்ணிக் கொடுத்தால் நானே தேரை ஓட்டுகிறேன் என்று சொன்னான். அப்படியே நல்லதென்று 9 பாணத்தாரும், விருது பிள்ளையும் ராசாவண்டைக்குப் போனார்கள். 3 மாதம் ஓடாத தேரை நான் 3 நாளையில் ஓட்டி வைக்கிறேன் என்று சபதம் சொன்னான். அப்படியே ஓட்டிவையுங்கள் என்று பாக்கு வெத்தலை கொடுத்தார் எங்கள் இடங்கயைில் சேர்ந்தவரெல்லாம் சிறைச்சாலையில் அடைப் பட்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது சந்தோசமாகி அவர்களை நீக்கிவிட்டார்.

அப்போது 9 பாணத்தாரும் பாலாற்றில் தலைமுழுகி பெருமாள் கோயில் வந்து விளக்கு முகம்பார்த்து ராயரண்டைக்கு வந்தார்கள். அப்போது ராயர் விருதுப் பிள்ளையைப் பார்த்து இந்தத் தேரைக் கட்டின மந்திரவாதியைத் தருவிக்க வேணுமென்று சொன்னார். அப்படியே சாமி தருவிக்கிறேனென்று சொன்னான். புருசனும், பெஞ்சாதியும் மந்திரம் செபித்தார்கள். அப்போது எதிராளி சிம்மப்புலி கண்டு நமக்கு விரோதி வந்திருக்கிறானென்று அவனிடம் மந்திரத்தை உருவேத்தினான். இவன் மேலே விட்டான் இவனிடம் மந்திரத்தினாலேயும் காளிகாதேவி கிருபாகடாட்சத்தினாலேயும் சிம்மப்புலி என்பவனை பின் கட்டாகக் கட்டிக் கொண்டு வந்துவிட்டது. இவன் கொண்டு போய் ராசாவண்டையில் விட்டான். இவன் நம் ஊரிலே இருந்து கொண்டு அம்மனுக்கு துரோகம் செய்தானென்று சொன்னார். அப்போது ராசாவுக்கு மகாக் கோபங்கொண்டு இவனைக் கொண்டு போய் ஊருக்கப்பாலே மூக்கறுத்து,

முன்கழுத்துக் காதறுத்து, முன்பல்லை தட்டித் துரத்தி விட்டார்கள்.

அப்போது கிருஷ்ணராயரும் 9 பாணத்தரும், விருதபிள்ளையும் புறப்பட்டு தேரடியில் வந்தார்கள். அந்தத் தேருக்குள்ளே பூதம் இருந்து கொண்டு பலி கேட்டது. அப்போது ராயரும் 9 பாணத்தாரும் ஆலோசனை பண்ணினார்கள். அப்போது விருதுப்பிள்ளை என்கிறவன் நானே பலி கொடுக்கிறேனென்று சபதம் சொன்னான். அந்தப் பிரகாரம் பெண்சாதியை வந்து கேட்டான். அவள் தேரு நடக்க வேண்டுமென்று தன்னுடைய 5 பிள்ளைகளையும் வெட்டுங்கள் என்று சொன்னாள். அந்த பிரகாரம் தேரடியில் வந்து 5 பிள்ளைகளையும் கொண்டு வந்து அந்த ரதத்திற்கு பலியிட்டான். தேரிலே இருந்த பூதம் இறங்கி வந்து காவு கொண்டது. இவனும் அந்தப் பூதத்தைப் பிடித்துக் கட்டிக் கொண்டான்.

பிறகு காமாட்சி அம்மனையும் காளிகாதேவியையும் எழுந்தருளப் பண்ணி அம்மன் திறவுகோல் கொண்டு மூக்கிலே விட்டு வாயிலே வாங்கி தேர் வடத்தில் கட்டி ரதத்தை இழுத்தான். அப்போது அனேகம் பூதம் பின்னாலே தள்ளிக் கொண்டு மேள வாத்தியத்துடன் 4 வீதியும் சுத்தி நிலை கொண்டு வந்து நிறுத்தினான்.

அப்போ ராயர் பார்த்து சந்தோசமாகி மனமகிழ்ச்சி அடைந்து பதினாயிரம் பேர் கூடி இழுத்தாலும் இழுக்க முடியாத தேரை இவன் ஒருவனே கொண்டு வந்து நிலை சேர்த்தானே இவனுக்கு என்ன கொடுத்தாலும் ஒப்பல்லவோ, அதற்கு உங்கள் சகல விருதும் என் முன்னிலையில் கொடுக்க வேண்டுமென்று சொல்ல அப்போது ஒன்பது பாணத்தாரும் சந்தோசமாகி சகல விருதும் கொடுத்து நமக்கு மூக்குமுனை கொடுத்த விருதுப்பிள்ளைக்கு என்ன பேரிடுவோமென்று ஆலோசித்து **சிம்மப்புலியை வென்ற ஒண்டிப்புலி** என்று பட்டங்கொடுத்து நம்ம விருது நீடுழி காலம் நடந்து வரவேண்டுமென்று 9 பாணத்தாரும் கூடி ராசா முன்னிலையில் சொல்ல அப்போது ராசா அவ்வாறே சம்மதித்து சகல வெகுமதியும் கொடுத்து பல்லக்கின் மேல் 4 வீதியும் மேள வாத்தியத்துடன் மெரமணை செய்து 9 பாணத்ததாரையும் கூப்பிட்டு இவ்விருதுப் பிள்ளைக்கு சொன்னபடிக்கு செப்பேடுப்

பட்டயம் எழுதிக்கொடுங்களென தன் அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது ஒன்பது பாணத்தாரும் விருது பிள்ளையைக் கூட்டி வந்து காமாட்சி அம்மன் சன்னிதானத்தில், செப்பேடு பட்டயம் எழுதினார்கள். படையாச்சிகள் தலைக்கட்டு ஒன்றுக்கு விராகன் கால், அரிசி பதக்கு, ஊர்பொதுவில் கிடாய் ஒன்று, வீர செங்குத்தாரில் தலைக்கட்டு தலைக்கட்டு ஒன்றுக்கு விராகன் கால், அரிசி பதக்கு, மஞ்சள் பாவாடை ஒன்று, ஊர்பொதுவில் கிடாய் ஒன்று, செங்குத்தாரைச் சேர்ந்த நாகபாச மாணிக்கத்தால் தலைகட்டு ஒன்றுக்கு வராகன் கால், அரிசி பதக்கு, வேட்டி ஒன்று, நகரத்தார் தலைக்கட்டு ஒன்று வராகன் கால், அரிசி பதக்கு, வேட்டி ஒன்று, ஒத்தைச் செக்கான் தலைக்கட்டு ஒன்றுக்கு வராகன் கால், அரிசி பதக்கு, வேட்டி ஒன்று, தொரைய நாயக்கன் தலைகட்டு ஒன்றுக்கு வராகன் கால், அரி(சி)பதக்கு ஊர் பொதுவில் பன்றி ஒன்று, தேவேந்திரன் தலைக்கு ஒன்றுக்கு வாரகன் கால், அரிசி பதக்கு, ஊர் பொதுவில் பன்றி ஒன்று, விருத கோசங்கி தலைக்கட்டு ஒன்றுக்கு விராகன் கால், பட்டறைக்கு அஞ்சுபணம், 5 கோழி, 5 வள்ளத் தானியம், அஞ்சு கட்டுப்புல், 5 கட்டு விறகு, 5 ஆள் ஊழியம், 9 பாணத்தாரில் கல்யாணப் பணம் 5 என்று 9 பாணத்தாரும் காமாட்சியம்மன் சன்னிதானத்தில் செப்பேடு பட்டயத்தில் கையொப்பமிட்டார்கள்.

அருள் அம்மனாத படையாச்சி ஒப்பிதம், அரியலூர் மழவராய படையாச்சி ஒப்பிதம், செஞ்சி நகரம், சீரங்கம் படையாச்சி ஒப்பிதம், திருவண்ணாம்லை வெங்கிடாசல முதலியார் ருசுவும், காஞ்சிபுரம் காமாட்சி ஆசாரி மதுரை வசந்தராயப் படையாச்சி ருசுவும், சீரங்கம் சென்றாயப் படையாச்சி ருசுவும், மதுரை காமாட்சி முதலியார் ஒப்பிதம், ஸ்ரீவில்லிபுத்தூர் அண்ணாமலை முதலியார், திருவண்ணாமலை வெங்கிடாசல முதலியார் ருகவு, காஞ்சிபுரம் காமாட்சி ஆசாரி மதுரை வசந்தராயப் படையாச்சி ருசுவு, சீரங்கம் சென்றாயப்படையாச்சி ருசுவும், மதுரை காமாட்சி முதலியார் ஒப்பிதம், ஸ்ரீவில்லிபுத்தூர் அண்ணாமலை முதலியார், திருவண்ணாமலை வெங்கிடாசல முதலியார் ருசுவும், காமாட்சி ஆச்சாரியார் ஒப்பிதம், ஆர்க்காடு குமாரசாமி ஆசாரி ருசுவு, துரை சொக்கனாத ஆசாரியார் ருசுவும், வேலூர்

விஷ்ணாதி ஆசாரி ருசுவு, காஞ்சிபுரம் பரமசபாபதி செட்டியார் ஒப்பிதம், தஞ்சாவூர் தனக்கோடி செட்டியார் ருசுவு, திருநெல்வேலி பரஞ்சோதி செட்டியார் ருசுவு, பெங்களூர் அனுமந்த நாயக்கன் ருசுவு, காஞ்சிபுரம் பரம நாகப் பண்ணாடி ஒப்பிதம், ஸ்ரீவதிரத்து முத்துப்பண்ணாடி ருசுவு, மதுரை நாராயணக் குடும்பன் ஒப்பிதம், ஸ்ரீவில்லியுத்தூர் காந்திமதி காலாடி ருசுவு, இலுப்பூர் வீரப்பகடை ஒப்பிதம், இத்யாதி பேர்களும் செப்புப் பட்டயத்தில் கையொப்பம் இட்டுக் கொடுத்தார்கள்.

இந்த செப்புப் பட்டயத்தை 9 பானத்தாரும் வளந்தேறச் செய்வார்களே ஆனால் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி, மூங்கில் போல் தழைத்து முசியாமல் வாழ்வீர்கள். மேலும் காஞ்சி, அவினாசி, சருக்க முக்குன்றம், பாவனாசம் இப்பேர்க் கொத்த சிவஸ்தலங்களில் கோதான பூதானம் வாழ்ந்திருப்பீர்கள். பட்டயத்தைக் கெடுப்பாரே ஆனால் சிசுவதத்திற்கு ஆளாவார்கள்.

சுபம் சுபம்

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *37* |
| கிடைத்த இடம் | : | *கி.பி.1858 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரால் அனுப்பப்பெற்றது.* |
| தற்போதுள்ள இடம் | : | *அரசு அரும்பொருட்காட்சியகம், எழும்பூர், சென்னை.* |
| காலம் | : | *கலி 4190, சகம் 1011, மன்மத ஆண்டு என்று குறிக்கப்பட்டுள்ளன. எழுத்தமைதியைப் பார்க்கையில் இது தவறானதாகத் தோன்றுகிறது. சுமார் கி.பி.17–18ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.* |
| முற்குறிப்பு . | : | *தெ.இ.கோ. சாசனம், தொகுதி III, பகுதி II (1957), சாசனம் 1274, (D 2944–8), பக்கங்கள் 1326 – 1328.* |
| செய்தி | : | *வீராதிவீரன் வீரசங்குடையான் சோழராஜன் தொண்டை மண்டலத்தில் கோறை கோட்டம் பஞ்சநதி தலத்தில் அழகய்யர் என்பாருக்கு அக்ரஹாரம் அமைத்துத் தந்தார். ரத, கஜ, துரக, பதாதி படைகளைக் கொண்ட ராயர் அந்த அக்ரஹாரத்தை அழித்து, குளம் ஏற்படுத்தியதோடு பஞ்சவர்ண நாடு என்று நான்கு கூறாக்கி,* **மன்னவேடு** *பகுதியாக மாற்றினார். குளம் நீங்கலாக மன்னவேடு பகுதி 64 அடி கோலால் குழி 1050 கொண்டது. இதற்கு ஈடாகக் கோட்டையான் என்பவன் கொடுத்த பொன் 150 ஆகும்.* |

பட்டய வாசகம் :

*கலியுகாந்தம் ௵ 4190 சாலீவாஹந சகாப்தம் 1011 செல் மந்மத ௵ சைத்ர மாஸ உயஉ தி, காஞ்சி மண்டலத்துக்கு கிழக்கு தொண்ட மண்டல சதுர்வேத பூமவ வனத்தில் திக்கு–அ, கோணம்–16 கழிவு கோணம்–க, ஆரண்ய நதிக்கு மேற்கு அ(த்ர)ருண்ய பு(த்ர) ர்வ ஸ்தலத்துக்கு வடக்கு கோறை கோட்டம்*

*பஞ்ச நதி ஸ்(த*)லத்தில் வீராதிவீரன் வீரசங்குடையான் சோழராஜா அழகய்யருக்கு அக்ர(ஹ*)ராம் பண்ணார். ரத கஜ துரக பதாதியுடைய ராயர் அழகய்யர் அக்ர(ஹ*)ாரத்தை அழிச்சு கொளம் பறிச்சு பஞ்சவர்ண நாடு நாலாக்கி* **மன்னவேட்டாக்கினெள்** *பிரதிநாம வடக்கு நிருதி திக்கு கொள கோநேரி மத்தவராய கோத்திரம் கழிவு கோணம்-வ 64 லடி கோலால் குழி 1050* **மன்னவேட்டுக்கு** *செல்லு. கொள கோனெரி முத்திரை கல்லு யிருக்குது. அக்ரார முத்திரை (யி*) ருக்குது. தாம்ர சாசன படிக்கு சூர்ய சந்த்ராதி வரைக்கும் பூமியும் புல்லுமுள்ளமட்டுக்கும் அனுபவித்துக் கொள்ளவும். யிதுக்கு கோட்டையான் குடுத்த பொன் 150 யிது முதல(ண) (ணி) நரஸிம்ஹாசாரி சொஸ்த லிகிதம்*[1]

1. செ.ச.பொ.சா.செ.சா. அட்டவணை சோழர் எண்.6 ஆகக் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *38* |
| கிடைத்த இடம் | : | *செ.ப.எண் 37ல் குறிக்கப் பட்டுள்ளவாறு* |
| தற்போதுள்ள இடம் | : | *எண் 37ல் குறிக்கப்பட்டுள்ளவாறு* |
| காலம் | : | *கலி 4190, சகம் 1011, மன்மத ஆண்டு. இதுவும் சரியான ஆண்டாகப் படவில்லை. சுமார் கி.பி.17-18 ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.* |
| முற்குறிப்பு | : | *தெ.இ.கோ. சாசனம் தொகுதி* III, *பகுதி* II, *(1957), சாசனம் 1275, (*D *2944–9) பக்கங்கள் 1328-1331.* |
| செய்தி | : | *வீராதிவீரன் வீரசங்குடையான் சோழராஜன் தொண்டை மண்டலத்தில் கோறை கோட்டம் பஞ்சநதி தலத்தில் அழகய்யர் என்பாருக்கு அக்ரஹாரம் ஏற்படுத்தினார். நான்கு வகைப்படைகளையும் கொண்ட வன்ராயர் (வன்னியராயர்?) அந்த அக்ரஹாரத்தை அழித்து, குளம் ஏற்படுத்தியதோடு பஞ்சவர்ண நாடு என்று நான்கு கூறாக்கி* **மன்னவேடு** *பகுதியாக மாற்றி விட்டார்.*<br><br>*மன்னவேட்டின் ஒரு பகுதியை கும்பன் வன்னியராயனுக்குக் கொடுத்தார். இப்பகுதி 64 அடி கோலால் 7500 குழி கொண்டது. இதுக்கு நிருதி திக்கில் (தென் மேற்கில்) வன்னியராய கோத்திரத்தைச் சேர்ந்த வெள்ளுடையானுக்கு 64 அடிகோலால் குழி 1625 கொடுக்கப்பட்டது. இதற்குக் கிழக்கில் கிருஷ்ணவேடு வன்னியராய கோத்திரனுக்கு 64 அடி கோலால் குழி 3200 வழங்கப்பட்டது. இதற்குக் கிழக்கில் திருவேங்குடையான் வன்னியராய கோத்திரனுக்கு* |

64 அடி கோலால் குழி 25 விடப்பட்டது. மிகுதியான பகுதியில், பொன்னகிரி அக்ரஹாரம் இருந்து வருகிறது. பஞ்சவர்ண நாடு நான்குக்கும் கோட்டையான் கொடுத்த பொன் 1000 என்று எழுதப்பட்டிருக்கிறது.

பட்டய வாசகம் :

கலியுகாத்தம் ஹு 4190 சாலிவாஹந சகாப்த 1011 ஹு செல் மன்மத ஹு சித்திரை மாஸம் 22ந் தேதி காஞ்சி மண்டலத்துக்கு கிழக்கு தொண்(டை*)ட மண்டலம் சதுர்வேத பூமி பவநத்தில் திக்கு-அ க்கு கோணம் 6 கழிவு கோணம்.... ஆருண்ய நதிக்கு மேற்க்கு ஹருண்யபுர ஸ்தல(த்து*)க்கு வடக்கு கோனை கோட்டம் பஞ்சநதி ஸ்தலத்திலே வீராதி வீரன் வீரசங்கு(டை*)டயான் சோழ ராஜா அழகய்யருக்கு அக்ர(ஹ*)ாரம் பண்ணார். ரத கஜ துரக பதாதி யு(டை*)டய வன்ராய(ர்*) அழகய்யர் அக்ர(ஹ*)ாரத்தை அழிச்சு கொளம் பரிச்சு பச்சவர்ணா நாடு நாலாக்கி **மன்னவேட்டாக்கினென். மன்னவேட்டுக்கு** உடையான் கும்பன் வன்னியராயநென்று பெர் குடுத்தேன். கழிவு கோணம்-வ 64லடி கோலால் குழி 7500 **மன்னவேட்டுக்கு** செல், யிதுக்கு நிருதி திக்கு வெள்ளுடையான் வன்னியராய கொத்திரன் குழி 64லடி கோலால் குழி 1625 யிதுக்கு கிழக்கு கிருஷ்ணவேடு வன்னியராய கோத்திரன் குழி 64 லடி கோலால் குழி 2000 யிதுக்கு கிழக்கு கெபுடீ வன்னியராய கோத்திரன் குழி 64 கோலால் குழி 3200 யிதுக்கு கிழக்கு திருவேங்குடையான் வன்னராய கோத்திரன் குழி 64 லடி கோலால் 2500 மன்னவேட்டுக்கு செல்லுபடி அளவு. மீதி பொன்னகிரி அக்ர(ஹ*)ார முத்திரைக்கல் யிருக்குது. தரம்பர சாசன படிக்கு சூர்ய சந்திராதி வரைக்கும் பூமியும் புல்லும் உள்ள மட்டுக்கும் அனுபவிக்கவும். பஞ்சவர்ண நாட்டு நாலுக்கும் கோட்(டை*)டயான் குடுத்த பொன் 1000 மூணாவது அணி நரஸிம்ஹாசாரி ஸ்வஹஸ்த லிகிதம்.[1]

1. செ.ச.பொ.சா.செ.சா. அட்டவணை சோழர் எண்.11 ஆகக் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *39* |
| கிடைத்த இடம் | : | *செ.ப.எண் 37ல் குறிக்கப்பட்டுள்ள வாறு.* |
| தற்போதுள்ள இடம் | : | *எண் 37ல் குறிக்கப்பட்டுள்ளவாறு* |
| காலம் | : | *எண் 37ல் கண்டுள்ளவாறு* |
| முற்குறிப்பு | : | *தெ.இ.கோ. சாசனம், தொகுதி* III, *பகுதி* II, *(1957), சாசனம் 1276 (*D *2944 –10), பக்கங்கள் 1331–1333.* |
| செய்தி | : | *வீராதிவீரன் வீரசங்குடையான் சோழராஜன், தொண்டைமண்டலம் சதுர்வேத பூமி பவநத்தில் அருண்ய (ஆரண்ய?) நதிக்கு மேற்கு ஆரண்ய புரஸ்தலத்துக்கு வடக்கு கோனை கோட்டம் பஞ்சநதி ஸ்தலத்தில் அழகய்யருக்கு அக்ரஹாரம் ஏற்படுத்தினார்.* |

*நான்குவகை படையையுடைய வன்ராயர் (வன்னியராயர்?) அந்த அக்ரஹாரத்தை அழித்து குளம் வெட்டியதோடு பஞ்சவர்ண நாடு என்று பெயரிட்டு அதனை நான்கு பகுதிகளாகப் பிரித்து* **மன்னவேடாக** *ஆக்கினார். அம் மன்னவேட்டுக்கு துளுவ பொன்னகிரி பல்லவராய னென்று பெயர் தந்து 64 அடிகோலால் 4750 குழி நிலம் கொடுத்தார். இதுக்கும் அக்நி திசையில் வெம்புரத்தான் வெளிகராய கோத்திரனுக்கு 64 அடிகோலால் 3050 குழி நிலம் கொடுத்தார். இதற்கு ஈசான்ய திசையில் சிய்யால புரத்தான் சிவராயகோத்ரனுக்கு 64 அடிகோலால் 6000 குழி நிலம் கொடுத்தார். பஞ்சவர்ண நாட்டு நான்கு பகுதிக்கும் கோட்டையான்*

கொடுத்த பொன் 1000 என்று கூறுகிறது.

பட்டய வாசகம் :

*கலியுகாந்தம் ஞ 4190 சாலிவாஹக சகாப்த: ஞ 1011 செல் மன்மத ஞ சித்திரை மீ உயஉ. உ. தி. க(ா*)ஞ்சி மண்டல(ம்)த்துக்கு கிழக்கு தொண்(டை*)ட மண்டலம் சது(ர்*) வேத பூமி பவ(ந*)த்தில் திக்கு அ-க்கு கோணம் 16 கழிவு கோணம் க. ஆருண்ய நதிக்கு மேற்கு ஹருண்ய புர ஸ்தளத்துக்கு வடக்கு கோநை கோட்டம் பஞ்சநதி ஸ்தளத்திலே வீராதி வீரன் வீர சங்கு(டை*) டயவன் சோழராஜா அழகய்யருக்கு அக்ர (ஹ*) ாரம் பண்ணார். ரத கஜ துரக பதாதியு(டை*)டய வன்ராயர் அக்ர (ஹ*)ாரத்தை அழிச்சு கொளம்பரிச்சு பஞ்ச வர்ண நாட்டு நாலாக்கி* **மன்ன வேட்டாக்கிநென்.** மன்னவேட்டுக்கு துளுவ பொன்னகிரி பல்லவராய னென்று பெர் குடுத்தேன். கழிவு கோணம்-வ. 64-லடி கோலால் குழி 4750 மன்னவேட்டுக்கு செல்பாதுக்கு அக்நி திக்கு வெம்புரத்தான் வெளிகராய கோத்ரன் குழி 64-லடி கோலால் குழி 3050 யிதுக்கு யீசான்ய திக்கு சிய்யாலபுரத்தான் (சி)வராய கோத்ரன் குழி 64-லடி கோலால் குழி 6000 மன்ன வேட்டுக்கு செல்லும்படி அக்ர(ஹ*)ார முத்தி(டை*)ர க(ல்) யிருக்குது. தாம்ரசாசனபடிக்கி ஸூர்ய சந்த்ராதி வரைக்கும் பூமியும் பில்லும் உள்ள மட்டுக்கும் அனுபவிக்கவும். பஞ்சவர்ணா நாட்டு நாலுக்கும் கோட்டையான் குடுத்த பொன் 1000. நாலாவது அணி நரஸிம்ஹாசாரி ஸ்வஹஸ்த லிகிதம்.[1]

1. செ.ச.பொ.சா.செ.சா. அட்டவணை சோழர் எண்.8? ஆகக் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *40* |
| கிடைத்த இடம் | : | *செ.ப.எண். 37ல் குறிக்கப்பட்டுள்ள வாறு* |
| தற்போதுள்ள இடம் | : | *37ல் குறிக்கப்பட்டுள்ளவாறு* |
| காலம் | : | *எண் 37ல் கண்டுள்ளவாறு* |
| முற்குறிப்பு | : | *தெ.இ.கோ.சாசனம் தொகுதி III, பகுதி II, (1957), சாசனம் 1277 (D 2944–II), பக்கங்கள் 1333–1337.* |
| செய்தி | : | *காஞ்சி மண்டலத்துக் கிழக்கில். தொண்டை மண்டலம் சதுர்வேத பூமி பவனத்தில், வீராதி வீரன் வீரசங்குடையவன் சோழராஜா அழகய்யருக்கு ஒரு அக்ரஹாரம் ஏற்படுத்தினார்.*<br><br>*நான்கு வகைப் படையைக் கொண்டிருந்த வன்ராயர் (வன்னியராயர்) அவ்வக்ரஹாரத்தை அழித்து, குளம் வெட்டியதோடு பஞ்சவர்ணநாடு என்று நான்கு பிரிவுகளாக்கி* **மன்னவேடு** *பகுதியாக மாற்றினார்.*<br><br>*அம்மன்னவேட்டுப் பகுதிக்கு துளுவையெனும் பெரியணியான் பெரிய காமணி பூமி பாலகன் பெருமலையான் பெரியவராய கோத்ரமென்று பெயர் இட்டார். இதன் நிலப்பகுதி 64 அடிகோலால் 6000 குழி.*<br><br>*அதுபோக அக்ரஹாரம் மாடவீதி நான்குக்குக் கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆக திக்கு 8க்கு நவகோணம் 4. கெடி 24க்கு குழி 250. இதன் தொடர்ச்சியாக ஒரு எண்கோணப் படம் வரையப் பட்டுள்ளது. அதில் நடுவில் இலிங்க உருவமும், எட்டுத்திக்கிலும் எட்டுத்* |

திக்குகளின் திசைக் காவலர்களின் பெயர்களும் எழுதப் பெற்றுள்ளன. மேல் பகுதியில் 'கொழக்கு மன்ன மணங்கன் மன்னவேடு' என்று எழுதப்பட்டிருக்கிறது இப்படத்துக்குக் கீழ் நீள் சதுரபடம் வரையப்பெற்று படுக்கை வாக்கில் மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. இதுக்கு மேல் பகுதியில் கிழக்கு கெடி 6க்குக் குழி 1500 என்றும், இடப் பக்கத்தில் 3 நதிக்கு தெற்கு கெடி 6க்குக் குழி 1500 என்றும், கீழ்ப் பகுதியில் மேற்கு கெடி 6க்குக் குழி 1500 என்றும், வலப்பக்கத்தில் வடக்கு கெடி 6க்குக் குழி 1500 என்றும் எழுதப் பெற்றிருக்கின்றன.

நீள் சதுரப் படத்துக்கு இடப் பக்கத்தில் கிழக்கு மேற்காக, 'தெற்கு வோடையான் கும்பன் வன்னியான் மன்னவேடு' என்றும், அதனை யடுத்து, 'யீதுக்கு தென்மேற்கு வேளுடையான் வன்னியன் மன்னவேடு' என்றும்; கீழ்ப்பகுதியில் வடக்குத் தெற்காக 'மன்ன வேட்டுக்கு செல்லுபடி தாம்பர சாசனபடிக்கி சூர்ய சந்த்ராதித்ய வரைக்கும் பூமியும் புல்லும் உள்ள மட்டுக்கும் அனுபவிக்க. நரஸிம்ஹாசாரிலிகிதம். யிதுக்கு கோட்டையான் கொடுத்த பொன் 250 ஆக பொன் 500 என்றும், அதற்கும் கீழே, 'மேற்கு யெலுப்பொடு அக்ரஹாரம்' என்றும், வலப்பக்கத்தில் மேற்குக் கிழக்காக 'வடக்கு பெரிய கோநேரி மன்னவேடும் ப்ரதவாரே' என்றும் எழுதப் பெற்றிருக்கின்றன.

பட்டய வாசகம்

*கலியுகாந்தம் வருஷம் 4190 சாலிவாஹன சகாப்த ௵ 1011க்கு செல்லு மன்மத ௵ சித்திரை மாஸம் உயஉ ௳ தெதி. காஞ்சி மண்டலம் சதுர்வேத பூமி பவநத்தில் திக்கு அ கோணம் 16. கழிவு கோண(ம்*)உ ஆரண்யபுர ஸ்தளத்திக்கு மேற்க்கு ஆரண்யபு(ர*) ஸ்தலத்துக்கு வடக்கு கோறை கோட்டம் பஞ்சநதி ஸ்தலத்திலே வீராதி வீர(ன் வீர*) ச(ங்*)கு(லை*, யவன் சோழராஜா அழகய்யர்(க்*)கு அக்ராரம் பண்ணார். ரத கஜ துரக பதாதி யளுடைய வர்(ராயர்*) அக்ராரத்தை அழிச்சு கொளம் பரிச்சு பஞ்சவர்ண நாட்டு நாலாக்கி* **மன்னவேட்டு** *ஆக்குநென். மன்னவேட்டுக்கு துளுவை யெணாம் பெரியணியான் பெரிய காமணி பூமி பாலகன் பெருமலையான் பெரியவராய கே(ரத்*)திர மெணாம்* பேர் குடுத்தேன். கழுவு கோணம்-வ, 64லடி கோலால் குழி 6000 மன்னவேட்டுக்கு செல்லும்படி அக்ரஹாரம் மாட வீதி 4க்கு கெழக்கு தென்கெழக்கு தெற்கு தென்-மேர்க்கு மேர்க்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கு ஆக திக்கு அ குநவ கோணம் 4 கெடி 24 கெடிக்கு குழி 250உ*

*(இதன் தொடர்ச்சியான படம் அடுத்தப் பக்கம் பார்க்க.)*

கொழக்கு மன்ன மணக்கன் மன்னவெடு




வடக்கு பெரிய கொமெரி மன்னவெலும் ப்ரதவாரெ

தெற்கு கொண்டயான் ஓம்பன் உன்னியான் மன்னவெடு

கெழக்கு கெடி கூக்கு குழி தூரா

| | | |
|---|---|---|
| வடக்கு கெடி<br>கூக்கு குழி<br>தூரா | | கூ நதிகி தெற்கு<br>கெடி கூக்கு<br>குழி தூரா |

மெற்கு கெடி கூக்கு குழி தூரா

மன்ன வெட்டுக்கு செல்லும்படி தாம்பர சாசனபடிக்கி சூர்ய சந்த்ராதித்ய வரைக்கும் பூமியும் புல்லும் உள்ளமட்டுக்கும் அனுபவிக்க. நரஸிம்ஹாசாரி லிகிதம். யிதுக்கு கொட்டயான் கொடுத்த பொன் உா௱௧. ஆக பொன் ௱ா.

மேற்கு கொண்டயான் உன்னியான் மன்னவெடு

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *41* |
| கிடைத்த இடம் | : | *செப்புப் பட்டயம் எண் 37ல் குறிக்கப்பட்டுள்ளவாறு* |
| தற்போதுள்ள இடம் | : | *எண் 37ல் குறிக்கப்பட்டுள்ளவாறு* |
| காலம் | : | *எண் 37ல் கண்டுள்ளவாறு* |
| முற்குறிப்பு | : | *தெ.இ.கோ.சாசனம் தொகுதி III, பகுதி II, சாசனம் 1278 (D 2944–12), பக்கங்கள் 1338–1339.* |
| செய்தி | : | *காஞ்சி மண்டலத்துக்குக் கிழக்கில் தொண்டைமண்டலத்து சதுர்வேத பூமி பவநத்தில் ஆரண்ய நதிக்கு மேற்கில் ஆரண்ய பூர்வ ஸ்தலத்துக்கு வடக்கு கோனை கோட்டம் பஞ்சநதி ஸ்தலத்தில் வீராதி வீரன் வீரசங்குடையான் சோழராஜா அழகய்யருக்கு அக்ரஹாரம் அமைத்தார்.*<br>*நான்கு வகை படையையுடைய வன்ராயர் (வன்னியராயர்?) அவ்வக்ரஹாரத்தை அழித்துக் குளம் வெட்டியதோடு பஞ்சவர்ண நாடு ஏற்படுத்தி அதை நான்கு கூறாக்கி* **மன்னவேடு** *பகுதியாக மாற்றினார். அதில் மத்தவராய கோத்ரனுக்கு 64 அடி கோலால் 1500 குழி ஒதுக்கினார். அதற்காகக் கோட்டையான் கொடுத்த பொன் 150.* |
| பட்டய வாசகம் | : | |

*கலியுகாந்தம் ஸ்ரீ 4190 சாலிவாஹந சகாப்தம் ஸ்ரீ 1011க்கு மேல் மன்மத ஸ்ரீ சைத்ர மாஸம் உயஉந் தேதி காஞ்சீ மண்டலத்துக்கு கிழக்கு தொண்டமண்டலம் சதுர்வேத பூமி பவநத்தில் திக்கு அ-க்கோணம் 16 கழிவு கோணம் க. அ(று)ருண்ய நதிக்கு மேருக்கு ஆரண்ய பூர்வ ஸ்(த*)லத்துக்கு வடக்கு கோனை கோட்டம் பஞ்சநதி ஸ்தலத்தில் வீராதி வீரன் வீரசங்குடையான் சோழராஜா அழகய்யருக்கு அக்ராரம் பண்ணார். ரத கஜ துரக பதாதியுடைய வன்ராயன் அழகய்யர் அக்ராரத்தை அழிச்சு*

*குளம் பரிச்சு பஞ்சவர்ணா நாடு நாலாக்கி* **மன்னவேட்டாக்கிநென்.** *ப்ரதி நாம யீசாந்யத்துக்கு மேருக்கு செருய்ய கோநை மத்தவராய கோத்திரன் கழிவு கோணம்-வ. குழி 64 அடி கோலால் குழி 1500 அக்ரார முத்திரை கல் யிருக்குது. தாம்ரசாசன படிக்கு(வ) சூர்ய சந்த்ராதி வரைக்கும் பூமியும் புல்லும் முள்ள மட்டக்கும் அநுபவிக்கவும். யிதுக்கு கோட்டையான் குடுத்த பொன் 150 யிதுக்கு முதலாணி நரஸிஹ்மாசாரி ஸொஸ்தலிகிதம்.*[1]

1. செ.ச.பொ.சா.செ.சா. அட்டவணை சோழர் எண்.9 ஆகக் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| செப்புப் பட்டயம் எண் | : | *42* |
| கிடைத்த இடம் | : | *செப்புப்பட்டயம் எண் 37ல் குறிக்கப்பட்டுள்ளவாறு* |
| தற்போதுள்ள இடம் | : | *எண் 37ல் குறிக்கட்டுள்ளவாறு* |
| காலம் | : | *எண் 37ல் கண்டுள்ளவாறு* |
| முற்குறிப்பு | : | *தெ.இ.கோ. சாசனம் தொகுதி III, பகுதி II, சாசனம் 1279 (D 2944–13), பக்கங்கள் 1340–1343* |
| செய்தி | : | *காஞ்சி மண்டலத்துக்குக் கிழக்கு தொண்டை மண்டலம் சதுர்வேத பூமி பவநத்தில் ஆரண்ய நதிக்கு மேற்கு ஆரண்யபுர ஸ்தலத்துக்கு வடக்கு கோதை கோட்டம் பஞ்சநதி ஸ்தலத்தில் வீராதி வீரன் வீரசங்குடையான் சோழராஜ அழகய்யருக்கு அக்ரஹாரம் ஏற்படுத்தினார்.* |

*நான்கு வகை படைகளையுடைய வன்ராயர் (வன்னியராயர் ?) அக்ரஹாரத்தை அழித்து, குளம் வெட்டியதோடு பஞ்சவர்ண நாடு என்ற பெயரில் நான்கு கூறு ஆக்கி* **மன்னவேடு** *பகுதியாக மாற்றினார்.*

*மன்னவேட்டுக்குத் துளுவ சின்னணியான், மன்னவராய கோத்திரத்தான் என்று பெயரிட்டு, அவருக்கு 64 அடி கோலரல் 6100 குழி நிலம் கொடுத்தார்.*

*அக்குளப்பட்டு ராஜாவாருக்கு 64 அடி கோலால் 2750 குழி நிலம் கொடுத்தார்.*

*அந்நிலத்துக்குக் கிழக்கு தேவ கன்னியான், கன்னியராய கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 3500 குழி நிலம் கொடுத்தார்.*

அந்நிலத்துக்கு அக்னி திக்கில் வில்லுடையான், வில்வராய கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 3630 குழி நிலம் கொடுத்தார்.

அந்நிலத்துக்கு வடக்கு மதிரம் வேட்டான், மன்னியராய கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 1800 குழி நிலம் கொடுத்தார்.

அதுக்கு ஈசான்யத் திசையில் அரிபுரந்தரன், ஆதியராயகோத்திரத் தானுக்கு 64 அடி கோலால் 2150 குழி நிலம் கொடுத்தார்.

அதற்கு மேற்குத் திக்கில் யெர்ரகோநேரி, மத்தவராய கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 6100 குழி நிலம் கொடுத்தார்.

அதற்கு வடதிக்கில் வீரமுடையான் வீரராய கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 4000 குழி நிலம் கொடுத்தார்.

அதற்கு நிருதி திக்கில் கோந கோநேரி மத்தவராய கோத்திரத் தானுக்கு 64 அடி கோலால் 6010 குழி நிலம் கொடுத்தார்.

அதற்கு வடதிசையில் பருத்திப் பட்டான், தெத்தவராய கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 4260 குழி நிலம் கொடுத்தார்.

அதற்கு வடக்கில் உப்பூர் பெரியகொடை, புஷ்பரிஷி கோத்திரத்தானுக்கு 64 அடி கோலால் 1250 குழி நிலம் கொடுத்தார்.

பஞ்சவர்ண நாடு நான்கு கூறுக்கும் கோட்டையான் கொடுத்த பொன் 1000.

மேற் கூறப்பெற்ற ஆறு செப்புப் பட்டயங்களின் இறுதியிலும் நரஸிம்ஹாசாரி கைெயழுத்து என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

பட்டய வாசகம்

கலியுகாந்த ஞு 4190 சாலிவாஹந சகாப்த ஞு 1011 செல் மன்மத ஞு சித்திரை மாஸம் உயஉ உதி காஞ்சி மண்டலத்துக்கு கிழக்கு தொண்ட மண்டலம் சதுர்வ்வேத பூமி பவனத்தில் திக்கு அ-க்கு கோணம் 16 கழிவு கோண(ம்) க. ஆருண்ய நதிக்கு மேற்கு ஹரண்யபுர ஸ்தலத்துக்கு வடக்கு கோநை கோட்டம் பஞ்ச நதி ஸ்தலத்திலே வீராதி வீரன் வீரச(ங்*)குடையவன் சோழராஜா அழகய்யர்க்கு அக்ராரம் பண்ணார். ரத கஜ துரக பதாதி யு(டை*) டய வன்ராயர் அழகய்யர் அக்ராரத்தை அழிச்சு கொளம் பரிச்சு பஞ்சவர்ண நாடு நாலாக்கி **மன்னவேட்டாக்கிநென்.** மன்னவேட்டுக்கு துளுவ சின்னணியானுக்கு மன்னவராய கோத்திரம் மென்று பேர் குடுத்தேன். கழுவு கோணம்-வ, 64-லடி கோலால் குழி 6100 மன்னவேட்டுக்கு செல். அக்குளபட்டு ராஜவார் குழி 64-லடி கோலால் குழி 2750 யிதுக்கு கிழக்கு தேவகன்னியான் கன்னியராய கோத்ரம் குழி 64-லடி கோலால் குழி 3500 யிதுக்கு அக்னி திக்கு வில்லுடையான் வில்வயராய கோத்ரம் குழி 64-லடி கோலால் குழி 3630 யிது (க்கு*) வடக்கு மதிரம் வெட்டான் மன்னியராய கோதிரன் 64-லடி கோலால் குழி 1800 யிதுக்கு யீசாந்யம் அரிபுரந்தான் ஆதிய ராய கோத்திரன் குழி 64-லடி கோலால் குழி 2150 யிதுக்கு மோர்க்கு திக்கு யெர்ர கோநேரி...வராய கோத்ரன் குழி 1014-லடி கோலால் குழி 6100 யிதுக்கு வடதிக்கி வீரமு (டை*)டயான் வீரராய கோத்ரின் குழி 1014-லடி கோலால் குழி 4000 யிதுக்கு நிரதி திக்கு கோந கோநெ(ரி) மத்தவராயகோத்ரன் குழி 64-லடி கோலால் குழி 6010 வடக்கு பரித்திப்பட்டான் தெத்தவராய கோத்ரின் குழி 64-லடி கோலால் குழி 4260 யிதுக்கு வடக்கு உப்பூர் பெரியன் கொடை புஷ்பரிஷி கோத்ரின் குழி 64-லடி கோலால் குழி 1250 மன்னவேட்டுக்கு செல்லுபடியொன்_கோநேரி கோந கோநேரி

*முத்தி(ரை*)ர கல்லு ரெண்டு கிழக்கு திக்குலெ யிருக்குது. அக்ராஈர முத்தி(ரை*)ர கல் யிறுக்குது. தாம்பர சாசனப்படிக்கு சூர்ய சந்த்ராதிவரைக்கும் பூமியும் புல்லும் உள்ள மட்டுக்கும் அனுபவிக்கவும், பஞ்சவர்ந்ண நாடு நாலாக்கும் கோட்(டை*)டயான் குடுத்த பொன் 1000 முதலணி நரஸிம்ஹாசாரி ஸ்வஹஸ்த லிகிதம்.*[1]

1. சென்னை சர்க்கார் பொருட்காட்சிச் சாலையின் செப்பேட்டுச் சாசனங்களின் அட்டவணையில் சோழர்கள் எண்.10 ஆகக் காணப்படுகிறது.

## அ. உள்ளுறை தொடர்ச்சி (வரலாறு)

# அ - I. வன்னியப் பாளையக்காரர் - தொடர்ச்சி (அரியலூர்)

*பெரம்பலூர் மாவட்டம், அரியலூரில் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து மழவராய மன்னர்கள் ஆட்சி செய்திருக்கின்றனர்[1]. இவர்களது ஆட்சி கி.பி. 16, 17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் மிகச் சிறந்து விளங்கியிருக்கிறது. மேற்கூறப்பெற்ற காலங்களில் தனியாட்சி புரிந்திருக்கின்றனர். இவர்களது அவையில் தமிழ், தெலுங்கு, வடமொழிப் புலவர்கள் இருந்து பல நூல்களை அரங்கேற்றியிருக்கின்றனர். இம்மன்னர்களைப் பற்றி அந்தகக்கவி வீரராகவ முதலியார், சுப்ரதீபக் கவிராயர் மற்றும் கூடல் இருவாட்சிப் புலவர் ஆகியோர் சிறப்பாகப் பாடியிருக்கின்றனர். வன்னிய மன்னர்களின் புகழ்பாடும் "திருக்கைவளம்" என்னும் நூல் கூடல் இருவாட்சிப் புலவரால், இவர்களது அவையில்தான் கி.பி.18-ஆம் நூற்றாண்டு அரங்கேற்றப் பெற்றது.[2]*

*இம் மழவராய மன்னர்கள் சமயப் பற்று மிக்கவர்களாக, சைவ, வைணவ, கிறித்தவ ஆலயங்களுக்கு எந்தவிதப் பாரபட்சமுமின்றி கொடையளித்து மகிழ்ந்திருக்கின்றனர். இவர்கள் செய்த அறச்செயல்கள் அண்மைக் காலங்களில் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டுக்கள் மற்றும் செப்புப்பட்டயங்கள் வாயிலாகத் தெரிய வந்துள்ளன.*

*இவர்கள் வழி வந்தவர்கள்தான் தமிழ்நாட்டில், குறிப்பாகத் திருநெல்வேலி மாவட்டம், தென்காசியையடுத்த ஆழ்வார்க் குறிச்சியை யொட்டியப் பகுதியில் ஆட்சிபுரிந்த* **பன்னீராயிரம் பண்ணையைச் சேர்ந்த பாளையக்காரர்கள்** *என்பது சில திங்களுக்கு முன்பாகக் (அக்டோபர், 2006) கண்டறியப்பட்ட ஓலைச்சுவடி[3] மூலமும், தமிழ்நாட்டரசு, தொல்லியல்துறை, குற்றாலம் அகழ்வைப்பகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பெறும் செப்பேடு[4] மூலமும் தெரிய வருகிறது. அரியலூர் மழவராயர்கள் வழிவந்தவர்கள் பன்னீராயிரம் பண்ணைப் பளையக்காரர்கள் என்பதால்தான் அப்பாளையத்தைச் சேர்ந்த* **அக்னி வம்ச க்ஷத்திரிய வன்னிய மகாராஜாவாகிய கட்டிய நயினார் வமிசத்தில் அவதரித்த ஆ.வை. தசவீர பூபதி நாயகரவர்களால்,** *அரியலூர் மன்னரவையில் அரங்கேற்றப் பெற்ற, வன்னிய மன்னர்களின் கொடைச் சிறப்பு பற்றி புகழ்பாடும்* **"திருக்கைவளம்"** *என்னும் நூல் கி.பி. 1873-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கிறது.*

மழவராயர்களின் வழிவந்தவர் என்பதால்தான் **கட்டிய நயினார் வமிசத்தில் அவதரித்தவர்** என்று கூறப்பெறுகிறது போலும். இவர்கள் மீது பாடப் பெற்றுள்ள "கட்டியக் கொத்து" என்னும் நூல் கிடைக்கப் பெற்றால் இவர்களைப் பற்றிய பல உண்மைகள் புலப்படும். மேலும், "கட்டிய நயினார்" என்பது **'பட்டம் கட்டிக் கொண்டு ஆட்சி செய்தவர்கள்'** என்பதைக் குறிப்பதாகத் தெரிகிறது.

சென்னை அரசின் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்திலிருக்கும் **"அரியலூர் பாளையக்காரர் கைபீது"** என்னும் சுவடியில், **"மாளவராயர் அரியலூர் பாளையக்காரர், ஸம்ஸ்தானம் மதுரை, திருச்சிராப்பள்ளி வகையறா"** என்று தொடங்கப்பெற்று, ஜாதியில் வன்னிய குலத்தவர்களுடைய வமிசாவளி, **பூர்வத்தில் வன்னிய குலத்தில் நயினார் என்று பெயர் உள்ளவர்கள், பட்டம் கட்டிக்கொண்டு அரசாட்சி செய்தவர்கள் பதினெட்டு பேர்களுக்கு வருஷங்கள் 497"** என்று கூறிச் செல்கிறது.

மேற்குறிப்பிட்ட குறிப்பிலிருந்து அரியலூர் மழவராயப் பாளையக்காரர்கள், மதுரை, திருச்சிராப்பள்ளிப் பகுதியில் ஆட்சி புரிந்தவர்கள் என்பதும், வன்னிய குலத்தவர் என்பதும், பழங்காலத்தில் வன்னிய குலத்தில் "நயினார்" என்ற பெயர் கொண்டு, அரசருக்குரிய தகுதிப் பட்டம் கட்டிக்கொண்டு அரசாட்சி செய்தவர்கள் என்பதும் தெளிவாகிறது.

திருச்சிப் பகுதியில் அரசாட்சி செய்தவர்கள் அரியலூர் மழவராய நயினார்கள். மதுரைப் பகுதியில் ஆட்சி புரிந்தவர்கள் "கட்டிய நயினார்கள்" என்பது தெரிய வருகிறது. இவர்கள் வழியில் வந்தவர்தான் **பன்னீராயிரம் பண்ணை கட்டிய நயினார் ஆ.வை. தசவீர பூபதி நாயகர்** ஆவார். இப்பன்னீராயிரம் பண்ணை தென்காசியை ஒட்டி இருந்திருத்தல் வேண்டும். தென்காசிக்குத் தெற்கே அமைந்துள்ள ஆழ்வர்க்குறிச்சியையொட்டியப் பகுதி பன்னீராயிரம் பண்ணை அமைந்திருந்த இடமாக இருக்கலாம் என்பதைத் திருவனந்தபுரம் **"அரியலூர்ப் பள்ளி வில்லிப் படையாண்டவர் கதை"** ஓலைச்சுவடியும், தென்காசிச் செப்பேடும் புலப்படுத்துவதாக உணர முடிகிறது.

அரியலூர் மழவராய நயினார்கள் அளித்தக் கொடை விவரத்தை இனிக் காணலாம். இவர்கள் செய்த அறச்செயல்கள் பற்றித் தெரிவிக்கும் ஒன்பது கல்வெட்டுக்களும்,[5] ஏழு செப்பேடுகளும்[6] இதுவரை கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் மேலும் சில கட்வெட்டுக்களும், செப்பேடுகளும் தெரியவரலாம். ஒன்பது கல்வெட்டுக்களில் ஏழு கல்வெட்டுக்களை அரியலூர் அரசு

கலைக்கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் இல. தியாகராசன் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார். மற்ற இரண்டு கல்வெட்டுக்கள் தென்னிந்திய கோயிற் சாசன இரண்டாம் தொகுதியில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பெற்ற ஏழு செப்பேடுகளும், தம் "வன்னியர்" என்னும் நூலில், சில செப்பேடுகளின் முழு வாசகமும், சிலவற்றின் சுருக்கமும் மட்டும் இந்நூலாசிரியரால் வெளியிடப்பட்டுள்ளன. அதில் ஒன்றின் முழு வாசகத்தைத் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை தம் "தமிழகச் செப்பேடுகள் -1" என்னும் நூலில் வெளியிட்டிருக்கிறது.

இச்செப்பேடுகள் அனைத்துமே கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சில மன்னர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் கல்வெட்டுக்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தில் சில மன்னர்களால் செய்யப் பெற்ற அறச் செயல்களைத் தெரிவிப்பவைகளாகக் காணப்படு கின்றன. கி.பி.16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேட்டில் மழவராயர் அளித்த கொடை பற்றி பேசப்படுகிறது[6A] முதலில் கல்வெட்டுக்களில் காணப்பெறும் கொடைகளைப் பற்றி காண்போம்.

பன்னீராயிரம் பண்ணை "கட்டிய நயினார்" பற்றித் தெரிவிப்பவை என்று இந்நூலாசிரியரால் கருதப்பெறும் சிவகாசிச் செப்பேடு மற்றும் திருவனந்தபுரம் சுவடி பற்றியும் இறுதியில் எழுதப்படும்.

## கல்வெட்டுக்கள்

பெரம்பலூர் மாவட்டம், **துணிஞ்சிப்பாடி**, புத்தேரி வடக்கீழ் கணபதி விட்டருகே நடப்பட்டுள்ள கற்பலகையில் விசய நகர வேந்தன் முதலாம் ஸ்ரீரங்கன் காலத்தியக் கல்வெட்டு[7] பொறிக்கப்பெற்றிருக்கிறது. இது விஷு ஆண்டு வைய்காசித் திங்களில் எழுதப்பெற்றிருக்கிறது. இதற்குச் சரியான கிறித்தவ ஆண்டு 1581-1582 ஆகும். ஆனால் கல்வெட்டை வெளியிட்டுள்ள முனைவர் தியாகராசன் கி.பி.1586 என்று தந்துள்ளார். அது சரியல்ல. ஏனெனில் முதலாம் ஸ்ரீரங்கர் கி.பி. 1572 முதல் கி.பி. 1585 முடிய மட்டுமே ஆட்சி புரிந்துள்ளார்.

**அரசு நிலையிட்ட கிருஷ்ணப்ப மழவராய நயினார் தனஞ்சிப்பாடி** கிராமத்தைச் சீரங்க தேவரின் காரியகர்த்தாவான **வையப்ப கிருஷ்ணப்பக் கொண்டம நாயக்கர் தன்மமாகவும், பதினேழு பற்று நாட்டார் தன்மமாகவும்**, தென்னாண்ட நாடு **வெண்மனி** ஊரிலுள்ள **மருதாந்த சோளீஸ்வரமுடைய தம்பிரானுக்குக்** கொடையளித் திருக்கிறார் என்ற செய்தி இக் கல்வெட்டால் தெரிய வருகிறது.

கி.பி. 1607-ல் மேற்படி **கிருஷ்ணப்ப மழவராயரின் மனைவி ஏறம்மாள் மூங்கில்பாடி சிதம்பரீஸ்வரனுக்கும், சிவகாமி அம்மைக்கும்** இருகலம் நெல் விதைபாடு அளவு பூதானம் செய்தது பெரம்பலூர் மாவட்டம், மூங்கில்பாடி சிவன் கோயில் முன் நடப்பட்டுள்ள கல்லில் காணப்பெறும் கல்வெட்டால்[8] அறிய முடிகிறது.

கி.பி.1608-ல் மேற்கூறப்பட்ட மன்னனான **அரசு நிலையிட்ட கிருஷ்ணப்ப மழவராயர் மனைவி ஏறம்மாள், ஆடுதுறை** (பெரம்பலூர் மாவட்டம்), **குற்றம் பொறுத்த ஈஸ்வரன் கோயில், ஏலவார் குழலி அம்மை** சன்னதி முன் முப்பது கால் மண்டபத்தையும், சோபான மண்டபத்தையும் கட்டி நிறைவேற்றியதை அக்கோயில் இரண்டாம் கோபுரக் கிழக்குச் சுவர் பீடத்திலுள்ள கல்வெட்டு[9] தெரிவிக்கிறது. புதிதாக அமைக்கப்பெற்றுள்ள ஒரு மண்டபத்து விதானத்தில் இப்பாளையக்காரர் காலத்தில் வரையப் பெற்றுள்ள **அழகிய ஓவியங்கள்** காணப்படுகின்றன.

கி.பி. 1634-ல் மேற்கூறப்பட்ட **கிருஷ்ணப்ப மழவராயர்** சார்பாகப் பெரிய குன்றத்துத் (தற்போதைய குன்னம்) திருவம்பலமுடையார், மேலே சொல்லப்பட்ட **மூங்கில்பாடி சிதம்பரரேசுவரர்க்கும், சிவகாமி அம்மைக்கும்** கொடையாக ஏரியொன்றை வெட்டித் தந்திருக்கிறார். இச்செய்தி மூங்கில்பாடி வெள்ளியாங் குளக்கரையில் உள்ள பலகைக் கல்லில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டினால்[10] புலனாகிறது.

கி.பி.1681-ல் ஆட்சி புரிந்த அரியலூர் பாளையக்காரர் **ஸ்ரீமது அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராய நயினார் பண்டாரத்தார்,** பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், மேல்குளத்தூர் **சௌந்தரேசுவர சுவாமிக்கு** அபிஷேகம், நைவேத்தியம், பரிகலம் மற்றும் திருப்பணிக்காக 500 குழி நிலம் தானம் அளித்திருக்கிறார். இச்செய்தி சௌந்தரேசுவரர் கோயில் வெளிப்புற மதிற்சுவர் ஓரம் நடப்பட்டுள்ள பலகைக் கல்வெட்டால்[11] தெரியவருகிறது.

கி.பி. 1701-1702-இல் ஆட்சி செய்த அரியலூர் பாளையக்காரர் **ஸ்ரீமது சின்ன ரெங்கப்ப மழவராயர்**, பெரம்பலூர் மாவட்டம், **வேப்பூர் அண்ணாமலையார் கோயில் அண்ணாமலையாருக்கு** 27 விளக்குகளைக் கொண்ட நட்சத்திர விளக்கு கட்டளைக்காக 40 குழி நிலம் கொடை அளித்திருக்கிறார் என்பது வேப்பூர், அண்ணாமலையார் கோயில் வளாகத்துள் கிடக்கும் தனிக்கல்லில் காணப்பெறும் கல்வெட்டின்[12] மூலம் உணர முடிகிறது.

பரிதாபி ஆண்டுக்குச் சரியான கி.பி. 1732-33-இல் **அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராயர் பண்டாரத்தார், திருப்பழுவூர்** யோகவனீசுவர சுவாமிக்கு உச்சி காலப் பூசைக்கு திருவிளக்கொன்று எரிக்க, ஏலாக்குறிச்சியல் உள்ள இலுப்பை மற்றும் மாந்தோப்புக் களைக் கொடையளித்திருக்கிறார் என்பது கீழப்பழுவூர் யோகவனீவரர் கோயில் மடப்பள்ளிக்கருகே உள்ள பலகைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டால்[13] புலனாகிறது.

கி.பி. 1739-இல் காளயுக்தி ஆண்டில், ரங்கப்ப **மழவராயரும்,** அவரது அலுவலர் **முத்து** சேருவைக்காரரும், **கீழ்க்காட்டில்** இருந்த 63 குழி நிலத்தை, **நன்னை திருமேநிநாதர்க் கோயிலுக்குக்** கொடையளித்தது, மேற்படி கோயில் மகாமண்டப நுழைவாயில் படி அருகில் வடக்குப்புறம் நடப்பட்டுள்ள பலகைக் கல்வெட்டினால்[14] அறிய முடிகிறது. இக்கல்வெட்டில் சக ஆண்டு 1671 என்றும், தமிழ் ஆண்டு காளயுக்தி என்றும் தரப்பட்டிருக்கிறது. தமிழ் காளயுக்திக்குச் சரியான, சக ஆண்டு 1661 ஆகும். ஆதலால் இக்கல்வெட்டு கி.பி.1739-இல் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும்.

கி.பி. 1742-இல் அரியலூர் பாளையக்காரர் **வீதிஹோத்ர கோத்ரம் விஜய ஒப்பிலாத மழவராயர் பேரரும், ரங்கப்ப மழவராயர் மகனும் ஆகிய விஜய ஒப்பிலாத மழவராயர், அரியலூர் பெருமாள் கோயில் ப்யரணி முத்தாயி தாயாருக்கு** 30 குழி நிலத்தையும், **கிருஷ்ணசுவாமி கோயிலுக்கு 15 குழி நிலத்தையும்** கொடையாக வழங்கிவிட்டு, மீதமிருந்த 75 குழி நிலத்தை நரசப்பய்யனிடம் ஒப்படைத்துப் பெருமாள் கோயிலில் **துவாதசி நாட்களில்** பிராமணர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார். இச்செய்தி பெருமாள் கோயிலுக்குக் கிழக்கே உள்ள கிருஷ்ணசுவாமி கோயில் மஹாமண்டபம் வடக்குப் பக்க மதில் ஓரத்தில் நடப்பட்டுள்ள கல்லில் காணப்பெறும் வாசகங்களால் புலனாகிறது.[15]

அரியலூர் வட்டம், கொத்தவாசல், வைத்தியநாத சுவாமி கோயில் சந்நிதி வாசலுக்குத் தெற்கே நடப்பட்டுள்ள கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, சாதாரண ஆண்டு, சித்திரை மாதம், **ஸ்ரீ ரெங்கப்ப மழவராயர், கொத்தவாசல் வைத்தியநாத சுவாமிக்கு** அபிஷேக நைவேத்தியம், திருவிளக்கு, சுக்கிர வாரம் ஆகியவற்றுக்கு அளித்த நிலக்கொடை பற்றி குறிப்பிடுகிறது.[16]

## செப்பேடுகள்

இப்பாளையக்காரர்கள் காலத்தியச் செப்பேடுகள் இதுவரை ஏழு கிடைத்திருக்கின்றன. அவை அரியலூரிலிருந்து மூன்று செப்பேடுகளும், விருத்தாசலத்திலிருந்து ஒன்றும், திருமழபாடியி விருந்து ஒன்றும், திருமானூரிலிருந்து ஒன்றும், உடையார் பாளையத்திலிருந்து ஒன்றும் ஆகும்.

அரியலூர் முதல் செப்பேடு சக ஆண்டு 1625-க்கும் தமிழ் ஆண்டு சுபானுவுக்கும் சரியான கி.பி. 1703-இல் எழுதப் பெற்றிருக்கிறது.

அரியலூர் அரசு நிலையிட்ட மழவராய கோத்தரத்து ரெங்கப்ப மழவராயர் பெயரன், ஒப்பிலா மழவராயர் குமாரர், விசைய ஒப்பிலா மழவராயர், சிதம்பரத்தில் வீரமாயேச்சுவர சமையத்தைச் சார்ந்தவரும், சிவ ஆசார சம்பன்னருமான பாதபூசை அம்பலத்தாடுமைய்யருக்கு, தமக்கும், தம் வழிப் பரம்பரை யினருக்கும் நன்மை விளைவதற்காகக் கொடை அளித்ததைத் தெரிவிக்கிறது.[17] இப்பட்டயத்தில் மூன்று பாளையக்காரர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

இச்செப்புப் பட்டயத்தின் மற்றொரு சிறப்பம்சம் என்ன வெனில், முன்பக்கத்தில் செப்பேட்டின் பாதி அளவுக்குக் கோட்டுருவங்கள் வரையப்பட்டிருக்கின்றன. நடராஜர் உருவம் முயலகன் மீது நின்று இடக்காலைத் தூக்கி ஆடும் நிலையில், இவரின் இடப்புறம் சிவகாமி அம்மையும், புலிப்பாதரும், பதஞ்சலியும்; வலப்புறம் பாதபூசை அம்பலத்தாடுமைய்யர், விசைய ஒப்பிலா மழவராயர், முத்து வேங்கடப்ப மழவராயர் ஆகியோர் உருவங்களும் காணப்படுகின்றன. இக்கோட்டுருவங்கள் மூலம் அரியலூர் மன்னர் விசைய ஒப்பிலா மழவராயர் உருவமும், இவரது தம்பியாக இருக்கக்கூடிய முத்து வேங்கடப்ப மழவராயர் உருவமும் நமக்குத் தெரிய வந்துள்ளது. இச்செப்பேட்டின் சுருக்கம் இந்நூலாசிரியரின் "வன்னியர்" என்னும் நூலில் 2001-லேயே, செப்பேடு எண் 24 ஆகத் தரப்பெற்றுள்ளது.[18]

சற்றேறக்குறைய இதே காலத்தில். மேற்கூறப்பெற்ற அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராய பண்டாரத்தார் விருத்த காசி (விருத்தாசலம்) ஈசுர சுவாமியாருக்கு அவலுழக்குக் கட்டளைக் காக நந்தீசுவர ஊத்துவா பண்டாரத்திடம் அறக்கொடை வழங்கியது விருத்தாசலம், விருத்தாசலஈசுவரர் உச்சிக்காலம் கட்டளை பெரிய மடத்திலுள்ள செப்பேடு[19] மூலம் தெரிய வருகிறது.

சகம் 1651, தமிழ் ஆண்டு சாதாரண ஆண்டு ஆகியவற்றுக்குச் சரியான கி.பி. 1729-இல், அரச நிலையிட்ட ரங்கப்ப மழவராயர் காலத்தில், அரியலூர் கோதண்டராம சுவாமிக்காக ஆயப்பாடி கோபால வமிசத்தார் ஒவ்வொருவரும் தங்கள் கலியாணத்தின் போது பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் தலைக்கு ஒரு பணமும், ஒவ்வொரு ஆண்டும் வீட்டு வாசற்படி ஒன்றுக்கு ஒரு பணமும், மகமை அளிப்பதாக எழுதித் தந்திருப்பதை அரியலூர் கோதண்டராமசாமிக் கோயிலில் உள்ள செப்பேடு[20] புலப்படுத்து கிறது.

சகம் 1662-க்கும் தமிழ் ஆண்டு ருத்ரோத்காரிக்கும் சரியான கி.பி.1740-ல் ராஜராஜ விஜய ஒப்பிலாத மழவராயர், திருமழுபாடி (திருமழபாடி) உடைய நாயனார் பொன்னார் மேனியாருக்குக் காலைச் சந்தி, அர்த்தசாம பூசை ஆகியவைகளைச் செம்மையாக நடத்துவதற்காகக் குமாரசவாமி பண்டாரத்திடம் நிலக்கொடை வழங்கியிருப்பதைத் திருமழபாடி வைத்தியநாத சுவாமி எனப்பெறும் சிவன் கோயிலில் உள்ள செப்பேடு கூறுகிறது.[21]

சகம் 1674-க்குச் சரியான கி.பி. 1752-இல் எழுதப்பெற்றிருக்கும் அரியலூர் கங்காதரேசுவரர் கோயில் பூசகர் சுப்பராய குருக்களிடம் இருக்கும் செப்பேடு, வெங்கடப்ப மழவராயர் காலத்தில், அரியலூர் கங்காதரேசுவரர் கோயிலுக்கும், சுவர்ண மௌக்தி காம்பாள் அம்மனுக்கும் அவரது தாயார் துங்க முத்தாயி என்பார் உக்கலூரில் 15 குழி நிலமும், வயல்பாட்டில் 20 குழி நிலமும் கொடையளித்ததைத் தெரிவிக்கிறது.[22]

சகம் 1712-க்கும் கலி ஆண்டு 1891-க்கும் சரியான கி.பி. 1790-இல் ஸ்ரீ விசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர், ஸ்ரீ குமார ஒப்பிலாத மழவராயர், திருமானூரில் ஸ்ரீ காமாட்சியம்மன் உடனுறையும் எம்பெருமானுக்கு அபிஷேக, நெய்வேதனம், திருவிளக்கு, திருமாலை, திருப்பள்ளி ஆகியவற்றுக்காகத் தேவைப்பெறும் செலவினங்களுக்குத் தம் ஆட்சிப் பகுதியில், தமக்குக் கிடைக்கக் கூடிய வருவாயில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ளும்படி கோயில் நிர்வாகிகளுக்கு எழுதித் தந்தது, திருச்சி மாவட்டம், திருமானூர் கோயில் தர்மகர்த்தா திரு. டி. சம்பந்தம்பிள்ளை என்பாரிடம் இருக்கும் செப்பேட்டினால் அறிய முடிகிறது.[23]

இச்செப்பேடு சிவபெருமானை, "அகிலாண்டகோடி பிறுமாண்டனாயகராய், அரி யயன் தேடுதற்கரிய பொருளாய், மான், மழு, சூலங், கபாலங், காளகண்டஞ், சதுற்புசம். திரிநேத்திர தாரராய் ஸ்ரீகாமாக்ஷியம்பாள் சமீதரா யெழுந்தருளியிருக்கா நின்ற ஸ்ரீ கயிலாச நாத சுவாமி" என்று அழகுபட வருணித்துள்ளது.

மன்னர் பெயரைக்கூட வித்தியாசமாக "அரியலூர் விருது மத்தர் வலியுடைய துரை சிகாமணியாகிய ஸ்ரீ விசைய ஒப்பிலாத மழவராயர் குமாரர் ஸ்ரீ குமார ஒப்பிலாத மழவராயர்" என்று சிறப்பாகக் கூறியுள்ளது.[24]

அரியலூர் மழவராயர்களைப் பற்றிய ஓலைச்சுவடி, "அரியலூர் பள்ளி வில்லிப் படையாண்டவர் கதை" என்னும் தலைப்பிட்டு எழுதப்பெற்றிருப்பது அண்மையில் தெரிய வந்தது.[25] இச்சுவடியில் கூறப்பெற்றிருக்கும் செய்திகளும் இந்நூலாசிரியரின்

நூலான "வன்னியர்" என்னும் நூலில் இணைக்கப்பெற்றுள்ள சிவகாசிச் செப்புப் பட்டயம் எண் 21-ல் கூறப்பட்டுள்ள செய்திகளும் ஒன்றாகவே உள்ளன. ஆதலால் இந்தச் செப்டு அரியலூர் மழவராயர் மன்னராலோ அல்லது பன்னீராயிரம் பண்ணை பாளையக்காரராலோ வெளியிடப் பெற்றதாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இச்செப்பேடு மற்றும் மேற்கூறப் பெற்ற ஓலைச்சுவடி ஆகிய இரண்டுமே சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப் பெற்றவைகளாகத் தெரிகின்றன.

ஓலைச்சுவடியிலும், செப்புப் பட்டயத்திலும் தொடக்கத்தில் ருத்திர வன்னியர் இரு அரக்கர்களைக் கொல்வதற்காகத் தோற்றுவிக்கப் பெற்றது கூறப்பட்டுள்ளது. இரு அரக்கர்களையும், ருத்திர வன்னியர் வெற்றி பெற்றதும் சிவனும் உமையும் மகிழ்ந்து அவர்களுக்கு மிகுதியான பரிசுகளும், படைகளும், விருதுகளும் அளித்து பூலோகததில் வாழ்ந்து வரும்படி கூறியமை, பின்பு ருத்திர வன்னியரும், அவரது குமாரர்களும் இலங்கை சென்று சிங்கள தேசத்தரசனை வென்று அவன் குமாரிகள் ஐந்து பேரையும், இவ்வைந்து வன்னியர்களும் மணமுடித்து வந்து காஞ்சிபுரத்தில் தங்கியிருந்தது, அப்பொழுது காஞ்சி மன்னனை எதிர்த்து வந்த எதிரிகளை, காஞ்சி மன்னன் வேண்டுகோளின்படி போரிட்டு வென்றது, காஞ்சி மன்னன் இவர்களுக்கு விருதுகளும், சன்மானங்களும் அளித்தது, அதனைத் தொடர்ந்து, காஞ்சி மன்னன் இவர்களது பெண் கற்பின் மகளென்றறிந்து, தமக்கு மணம் முடித்துத் தரும்படி கேட்டது, அதற்குத் தாங்கள் வன்னியர் என்று கூறி மறுத்துவிட்டமை, பின்பு தாங்கள் அக்னி புத்திரர் என்பதைத் தீயில் காய்ச்சிய செப்புக்குதிரை மீது ஊர்ந்து மெய்பித்தது, மன்னன் மகிழ்ந்து அவர்களுக்கு "வன்னியராயரென்று" (ஓலைச்சுவடியில், "சந்திரபதி, பள்ளி, வில்லி, படையாண்டவர்கள், அரியகுல, மழுவெறிய ராயரிவரென) பட்டமளித்தது ஆகியச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

கீழ்க்காண்பவை ஓலைச்சுவடியில் மட்டுமே காணப்படுபவை.

இவர்களது புகழைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் விக்கிரம பாண்டியன் இவர்களையழைத்துத் தம் பாதுகாவலர்களாக இருக்கும்படி ஆணையிடுதல், அந்நாளில் இவர்கள் தங்கள் குருவான சிவந்த பாத ஊருடைய முதலியாரைச் சேவித்து, அவரது தென்காசி நகரத்தில் மடாலயம் ஏற்படுத்தி மகிழ்ந்திருந்போது, இவர்களைப் பாண்டிய மன்னன் அழைத்துத் தேவநல்லூர் மற்றும் கயத்தாறு ஆகிய சீர்மைகளுக்குக் காவலராய் இருந்து வாருங்கள் என்று ஆணையிடுதல், அவ்வாறு

தேவநல்லூரிலும், கயத்தாற்றிலும் ஆட்சி புரிந்தபோது, **வள்ளியூர் குலசேகர பாண்டியன்** ஆணைக்கிணங்க, **மன்னன், மதிப்பன்** என்னும் இருவரை சிரச்சேதம் செய்தல். பிறகு, **ஆழ்வார்க் குறிச்சிக்குச் சென்று, பண்ணையமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தது** ஆகியவை விவரிக்கப்பட்டிருக்கிறது.

மேலே கூறப்பெற்றவைகளைக் கொண்டு பார்க்கையில், அரியலூர் மழவராயர்களில் ஒரு பிரிவினர் பாண்டிய நாட்டிற்குச் சென்று **தென்காசிக்கருகிலுள்ள ஆழ்வார்க் குறிச்சியில்** தங்கியிருந்தனர் என்பதும், அவர்கள்தான் **"பன்னீராயிரம் பண்ணையார்"** என்று பின்னாளில் அழைக்கப்பெற்றவர் என்பதும், அம்மரபில் வந்தவர்கள் **ஆ.வை. தசவீரபூபதி கட்டிய நயினார்** என்பதும், ஊகிக்க முடிகிறது. மேலும் பன்னீராயிரம் பண்ணை கட்டிய நயினார்களுக்கும் அரியலூர் மழவராய நயினார்களுக்கும் மரபு வழித் தொடர்பு இருந்ததால்தான், தசவீரபூபதி நாயகர், கி.பி.18-ஆம் நூற்றாண்டில் அரியலூர் சமஸ்தானத்தில் அரங்கேற்றப் பெற்ற **"திருக்கைவளம்"** என்னும் வன்னியர் கொடைச் சிறப்பைக் கூறும் நூலைக் கண்டெடுத்து 1873-ல் முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார் என்பதும் உரண முடிகிறது.

அரியலூர் மழவராயர் பற்றி இதுவரை நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் மற்றும் செப்புப் பட்டயங்கள் ஆகியவை மூலம் கீழ்க்காணும் மரபு வழிப்பட்டியலும் அம்மன்னர்கள் ஒவ்வொருவரும் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்ற விபரமும் ஓரளவுக்குத் தெரிய வந்திருக்கிறது.

அரசு நிலையிட்ட கிருஷ்ணப்ப மழவராயர் கி.பி. 1581-82ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1634 முடிய ஆட்சி செய்திருக்கிறார் என்று அறிய முடிகிறது. இதன்படி இவர் சுமார் 52 ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்திருக்கிறார். இவரது மனைவி ஏறம்மாள் ஆவார்.

இவருக்கடுத்து அரங்கப்ப மழவராயர் பட்டமேற்றிருக்கிறார். இவரது ஆட்சிக்காலம் கி.பி. 1635-லிருந்து, கி.பி. 1700 முடிய இருந்திருக்கலாம். இவருடைய கல்வெட்டு ஒன்று கி.பி. 1681-இல் எழுதப்பட்டிருக்கிறது.

இவரது இளைய உடன்பிறப்பாகச் சின்னரெங்கப்ப மழவராயர் இருந்திருக்கலாம். இவரது கல்வெட்டு கி.பி. 1701-1702-இல் எழுதப்பெற்றது ஒன்று கிடைத்துள்ளது.

இவரையடுத்து லக்ஷ்மண மழவராயர் ஆட்சி செய்திருப்பார் போன்று தெரிகிறது.

இவருக்குப் பின்பு விசைய ஒப்பிலா மழவராயர் ஆட்சி புரிந்திருக்கிறார். இவர் லெக்ஷ்மண மழவராயரின் மகனாக இருக்கலாம். விசைய ஒப்பிலா மழவராயரது செப்பேடு ஒன்று கி.பி. 1703-இல் எழுதப்பெற்றிருக்கிறது. இவருக்குத் தம்பியாக முத்து வேங்கடப்ப மழவராயர் என்பார் இருந்திருப்பார் என்பது அச்செப்பேட்டில் உள்ள கோட்டுருவத்தால் தெரிய வருகிறது. ஒப்பிலா மழவராயர் கி.பி. 1703-லிருந்து கி.பி. 1711 முடிய அரசாண்டிருக்கலாம்.

முத்து வேங்கடப்ப மழவராயரின் மகன் அரசு நிலையிட்ட ரங்கப்ப மழவராயர் கி.பி. 1711-லிருந்து 1739 முடிய அரசாட்சி செய்திருக்கிறார். விசைய ஒப்பிலா மழவராயரும், முத்து வேங்கடப்ப மழவராயரும் லெக்ஷ்மண மழவராயரின் மகன்கள் என்பது ஆதனூர் - சாத்தனூர் செப்பேட்டாலும், அரியலூர் செப்பேட்டாலும் உணர முடிகிறது.[26]

இவரையடுத்து விசைய ஒப்பிலா மழவராயர் 1739-ல் பட்டமேற்றிருக்கிறார். இவர் ரங்கப்ப மழவராயர் மகன் என்று அரியலூர்க் கல்வெட்டு தெரிவிக்கிறது. இவருக்கு **"ரணஜய ஒப்பிலா மழவராயர்"** என்ற பட்டம் வழங்கப் பெற்றிருக்கிறது. இவரது ஆட்சி கி.பி. 1762 முடிய நீடித்திருக்கிறது. இவரது மனைவி பயணியம்மாளாக இருக்கலாம்.

இரவது ஆட்சிக் காலத்தில் அதாவது கி.பி. 1752-இல் வெங்கடப்ப மழவராயரின் தாயார் துங்க முத்தாயி என்பார், அரியலூர் கங்காதரேசுவரர் சுவாமிக்கும் சுவர்ண மௌக்தி காம்பாளுக்கும் நிலக்கொடை அளித்திருக்கிறார். விசைய ஒப்பிலா மழவராயருக்குப் பிறகு அவரது மகன் அரச நிலையிட்ட குமார ஒப்பிலாத மழவராயர் மூன்று வயதிலேயே பட்டத்துக்கு வந்துவிட்டார். கி.பி. 1763-இல் இவரது ஆட்சி தொடங்கியிருக்கிறது. இவரது கல்வெட்டு ஒன்று கி.பி. 1790-இல் எழுதப் பெற்றிருக்கிறது.

இதற்குப் பிறகு இவரது ஆட்சியில் சில எதிர்பாரா விளைவுகள் ஏற்பட்டதால் இவர் வெளியிடங்களுக்குச் சென்று வாழ வேண்டியச் சூழ்நிலை ஏற்பட்டதாகக் கைபியது சொல்கிறது. பின்பு ஆங்கிலேயர்கள் இவர்பால் இரக்கம் கொண்டு, உரிய கப்பம் பெற்றுக்கொண்டு, கி.பி. 1784 முடிய ஆட்சி செய்ய அனுமதித்திருக்கிறார்கள். இவர் கி.பி. 1800 முடிய ஆட்சி செய்திருக்கிறார் என்பதும், சிலகாலம் அரசாட்சி இழந்து வாழ்ந்திருக்கிறார் என்பதும் 'கைபியதால்' தெரிகிறது.

இவர் கி.பி. 1818-இல் இயற்கை எய்திவிட்டார் என்பது அரியலூர் ஜெமீன் வம்சாவளி என்னும் மரபு வழிப் பட்டியல் மூலம் தெரிய வருகிறது.[27]

இவ்வம்சாவளி மூலம் குமார விசைய ஒப்பிலாத மழவராயர் மகன் விஜய ஒப்பிலாத மழவராயர் கி.பி. 1829-லிருந்து 1859 முடிய ஜெமீன் சன்னதுகள் பெற்று வாழ்ந்திருக்கிறார் என்று அறிய முடிகிறது.

இவரையடுத்து விஜயரெங்க ஒப்பிலா மழவராயர், அவருக்குப் பிறகு விஜய ஒப்பிலா மழவராயர் ஆகியோர் இருந்திருக்கின்றனர். இவர்கள் இருவரும் பட்டமேற்கவில்லை என்று தெரிகிறது. விஜய ஒப்பிலாத மழவராயருக்கு 11 மனைவிகள், 11 மகன்கள்.

இப்பதினொரு மகன்களில் மூத்த வயதுடைய குமார ஒப்பிலாத மழவராய நயினார் அடுத்து பட்டம் ஏற்றிருக்கிறார். இவர் கி.பி.1885 முடிய வாழ்ந்திருக்கிறார்..

இவரது மகன் விஜய ஒப்பிலாத மழவராய நயினார் கி.பி. 1885-இல் உயிர் நீத்திருக்கிறார். இவருக்கு இரண்டு மனைவிகள், மூன்று குமாரர்கள்.

இவருக்கடுத்து முதல் மனைவி மூலம் பிறந்த குமார விஜய ஒப்பிலாத மழவராய நயினார். இவருக்கு இரண்டு மனைவிகள், மூன்று குமாரர்கள்.

இவருக்கடுத்து முதல் மனைவி மூலம் பிறந்த குமார விஜய் ஒப்பிலாத மழவராய நயினார். இவருக்கு மூன்று மகன்கள், இவர்களுள் மூத்தவர் ராம விஜய ஒப்பிலாத மழவராய நயினார்.

**சான்றுகளோடு தெரிய வந்துள்ள மன்னர்களது பெயர்களும், ஆட்சி புரிந்த ஆண்டுகளும் கீழ்வருமாறு:**

| | | |
|---|---|---|
| **1.** | **கிருஷ்ணப்ப மழவராயர்** | **கி.பி. 1582 – 1634** |
| **2.** | **அரங்கப்ப மழவராயர்** | **கி.பி. 1635 – 1700** |
| **3.** | **லெக்ஷ்மண மழவராயர்** | **கி.பி. 1701 – 1703** |
| **4.** | **விசைய ஒப்பிலா மழவராயர், மூன்றாமவரின் மகன்** | **கி.பி. 1703 – 1711** |
| **5.** | **முத்து வேங்கடப்ப மழவராயர், மூன்றாமவரின் இளைய மகன், நான்காமாவரின் தம்பி.** | |
| **6.** | **அரசு நிலையிட்ட ஏங்கப்ப மழவராயர்** | **கி.பி.1711 – 1739** |

| | | |
|---|---|---|
| 7. | முத்து வேங்கிடப்ப மழவராயர் | கி.பி. 1752 |
| 8. | விசைய ஒப்பிலா மழவராயர், ஏழாமவரின் மகன் | கி.பி. 1739 – 1762 |
| 9. | அரச நிலையிட்ட குமார ஒப்பிலாத மழவராயர் | கி.பி. 1763 – 1800 |
| | எட்டாமவரின் மகன், இறப்பு | கி.பி. 1818 |
| 10. | விஜய ஒப்பிலாத மழவராய நயினார் இறப்பு | கி.பி. 1859 |
| 11. | குமார விஜய ஒப்பிலாத மழவராய நயினார் இறப்பு | கி.பி. 1860 |
| 12. | விஜய ஒப்பிலாத மழவராய நயினார் இறப்பு | கி.பி. 1885 |
| 13. | குமார விஜய ஒப்பிலாத மழவராய நயினார் | கிபி. 1946 – 1951 |
| 14. | ராம விஜய ஒப்பிலாத மழவராய நயினார் | |

*உடையார்பாளையம் சமஸ்தானத்தில் இசைக் கலைஞராக விளங்கிய கனம் கிருஷ்ணய்யர் என்பார் உடையார் பாளையம் சமீன்தாரர்கள் மீதும், அரியலூர் சமீன்தார் மீதும் கீர்த்தனைகள் பாடியிருக்கிறார். இவர் உடையார்பாளையம் வட்டம், திருக்குன்றம் என்ற ஊரில் பிறந்தவர். தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையரின் பாட்டிக்கு அம்மான். இவர் அரியலூர் மழவராயர் மீது பாடியுள்ள கீர்த்தனை கீழே தரப்பட்டுள்ளது.*[28]

*இக்கீர்த்தனை விஜய ஒப்பிலாத மழவராயர் மீது பாடப் பெற்றிருக்கிறது. இவர் கி.பி. 1859-ல் இறந்த விஜய ஒப்பிலாத மழவராயராகவோ அல்லது கி.பி. 1885-இல் உயிர் நீத்த விஜய ஒப்பிலாத மழவராயராகவோ இருக்கலாம்.*

*மன்னர் நவராத்திரி கொலுவிருந்த காட்சியைத் தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டுவது போன்று புலவர் வருணித்திருக்கிறார்.*

*மன்னர் அணிந்திருந்த அணிகலன்களின் பட்டியலும், கொலுவிருந்தபோது இசைக்கப்பெற்ற இசைக் கருவிகளின் பட்டியலும், நாட்டிய மங்கையின் நடனமும், மல்யுத்த வீரர்களின் மல்யுத்தக் காட்சியும், கொடிகள் பறந்த விதமும், சாமரங்கள் வீசப் பெற்றதும், பாட்சா சத்திரபதி*[29] *என்ற பட்டமிட்டு அழைத்ததும், அலுவலர்கள் பட்டியலும், படைவீரர்கள் அணிவகுப்பும், வாணவேடிக்கை நிகழ்ச்சி ஆகிய அனைத்தையும் அழகாகப் பாடிச் சிறப்பித்திருக்கிறார் புலவர். இதிலிருந்து அரியலூர் மழவராயர் மன்னர்களின் மேன்மை தெளிவாகப் புலப்படுகிறது.*

**பல்லவி**

*சுந்தர மாகவே நவராத்திரிக் கொலுவிலிருந்த*
*விந்தையை என்ன சொல்வேன் – கொலு*
*விந்தையை என்ன சொல்வேன் (சுந்தர)*

**அனுபல்லவி**

*செந்தமிழ்க் கருள் குமாரன் ஒப்பிலாத*
*தேவேந்திரன் பெற்ற ஸ்ரீதரன் விஜயன்*
*ஒப்பிலாத மழவராயதுரை (சுந்தர)*

**சரணம்**

*தங்கச் சரிகை நிறைந்த கட்டுப்பாகை அங்கி நிஜார்*
*தொட்டுச் சரிகை கடயம் பூட்டிப்*
*பொங்கமாய் மார்பில் பதக்கமணிந்து முத்துப்*
*பூணாய்த் திகழும் பாகை மீதிற் சூட்டி*
*மங்களஞ்சேர் புயத்தில் வைரத்தாயத் துடன் காதில்*
*மருவிய ஒண்டி முத்துக் கடுக்கனு மிட்டு ராஜ*
*சிங்கமெனவே படைத்தலைவர் கத்தியுடனே சிந்தை*
*மகிழ்ந்திடவே கொலு மேடையில் வந்து*
*சந்ததமும் வளர் இந்திரன் போலவே – நல்ல (சுந்தர)*

*எத்திசையும் அதிர் நவபத்துடன் பேரிகைகளும்*
*இசை நாதசுர மேள நாதமும்*
*துத்தி புல்லாங்குழல் ஒத்து மத்தள வாத்தியத்துடன்*
*தோகையர்கள் நாட்டிய மாடும் வினோதமும்*
*வெற்றிபெற்றுச் சிங்கக் கொடி புலிக் கொடியுடன்*
*எழில்மிகுந்த சாமரம் சந்திர காவிப் பாவாடை வீச*
*சுத்த வீரரா மல்லர்கள் ஜோடி கூடி விளையாடும்*
*சொந்தமிருந்து வருபுலவர்க் குயர்ந்தபொன்*
*மாரி வசந்தத் தியாகஞ் செய்யும்– நல்ல (சுந்தர)*

*திக் கயங்களைப் போல துரைமக்கள் சூழவும்*
*பட்டுகள் செய்யுங் கை வரத தொனிமீற*
***பக்கிரிக் காளை கொடுத்த பாட்சா சத்திரபதி***
*யென்று பாடு நன்னாவலர்கள் கூற*
*மிக்க மதிமந்திரி அட்டவணையர் தனகர்த்தரும்*
*மேவு சாமாதிகர் தானாபதி காரியக்காரரும்*
*தக்க சேர்வைகாரருடன் வெகுஜெனங்கள் காணவே*
*தண்டமிழ்க் கருள் போஜனெனப் படிகள்*
*கொண்டு களிப்புடன் மண்டலமதிரவே– நல்ல (சுந்தர)*

*விளங்குந் தீவட்டி சலாத்தி லுபய நாணுக்களும்*
*மெட்டு மெட்டாய்ப் பட்டாணி மார்களும்*
*களங்கமில்லாத யானை மாவுத்தருடன் ஒட்டகைக்*
*காரருங் கண்டு சலாஞ் செய்ய*
*வளம்பெறு கொங்கை மடமாதர்களிருபுறம்*
*வண்மையுடன் ஆரத்தி யேந்தி வாழ்த்தியே சுத்த*
*உளந் தெரிந்து கட்டியங்கார ரெச்சரிக்கை சொல்ல*
*ஒளிவுடன் வாண வித்தைகள் மிகுந்திடவே*
*உட னிடியென வரும் வெடிகளும் போடவே– நல்ல (சுந்தர)*[30]

**அடிக்குறிப்புகள்:**

1. மெக்கன்சி குறிப்புகள்: "அரியலூர் பாளையக்காரர் கைபியது." "இந்தக் கைபியது யாவத்தையும் விஜய உப்புலா மாளவராயர் ருஜுவில் (அங்கீகாரத்தில்) அவருடைய க்ஷுச்ய செயலரான தமிழ் வலம் குடும்பத்து குமாரபிள்ளை எழுதிவித்தது, எழுதிய தேதி 1805 வருஷம், செப்டம்பர் மாதம் 8-ந் தேதி" என்று அக்கைபியதின் இறுதியில் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அரியலூர் மழவராயர் வரலாறு திருச்சி மாவட்ட கஸெட்டியரிலும் உள்ளது.

2. நடன. காசிநாதன், வன்னியர் மாட்சி, (2005), பக்கங்கள் 73-88.

3. "அரியலூர் பள்ளி வில்லி படையாண்டவர் கதை", படித்து வெளியிட்டவர் நடன. காசிநாதன். சேகரித்துத் தந்தவர் திரு. நா. முரளி, "கனல்" திங்களிதழ், செப்டம்பர் 2006, பக்கங்கள் 24-25.

4. நடன. காசிநாதன், வன்னியர் (2001), பின்னிணைப்பு - 1, தென்காசிச் செப்பேடு, செப்புப் பட்டயம் எண். 21, பக்கங்கள் 275-279.

5. இல. தியாகராஜன், அரியலூர், "குன்னம் வட்டாரக் கல்வெட்டுகள்". ஆவணம் இதழ் 17, ஜுலை 2006, பக்கங்கள் 65-93, தென்னிந்திய கோயில் சாசனத் தொகுதி 11, பக்கங்கள் 636-637, மற்றும் கீழப்பழுவூர்க் கல்வெட்டு, வரலாறு இதழ் 2, 1994; பக்கம் 41.

6. நடன. காசிநாதன், வன்னியர் (2001). பின்னிணைப்பு-1, பக்கங்கள் 284-297, தமிழகச் செப்பேடுகள்-1, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை வெளியீடு, 22-ஆம் செப்பேடு, பதிப்பாசிரியர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர் (2005). பக்கங்கள் 127-132.

6A. ஆவணம் இதழ் 17, பக்கங்கள் 108-109.

7. ஆவணம் இதழ் 17, 2006, பக்கம் 87.

8. மே.கூ. நூல், பக்கம் 80

9. மே.கூ. நூல், பக்கங்கள் 87-88

*10. மே.கூ. நூல், பக்கம் 80*

*11. மே.கூ. நூல், பக்கம் 68-69*

*12. மே.கூ. நூல், பக்கம் 91-92*

*13. கீழப்பழுவூர்க் கல்வெட்டு, வரலாறு, இதழ் - 2, பிப்ரவரி - 1994, பக்கம் 41*

*14. ஆவணம், இதழ் 17, 2006, பக்கம் 72*

*15. தென்னிந்திய கோயிற்சாசனத் தொகுதி - 11, அரியலூர், சாசனம் - 666 (D-3674) பக்கங்கள் 636-637*

*16. கொத்தவாசல் கல்வெட்டு தென்னிந்திய கோயிற்சாசனம், தொகுதி II, எண் 690 (D-3652)*

*17. தி.ஸ்ரீ. ஸ்ரீதர், தொகுப்பாசிரியர், தமிழகச் செப்பேடுகள் 1, 22-ஆம் செப்பேடு, பக்கங்கள் 127-132*

*18. நட.ன.காசிநாதன், வன்னியர் (2001), பின்னிணைப்பு 1, பக்கம் 286*

*19. மே.கூ. நூல், பக்கங்கள் 284-285*

*20. மே.கூ. நூல், பக்கம் 287*

*21. மே.கூ. நூல், பக்கம் 291-292*

*22. மே.கூ. நூல், பக்கம் 288*

*23. மே.கூ. நூல், பக்கம் 289-290*

*24. மே.கூ. நூல், பக்கங்கள் 293-297 தமிழ் நாட்டரசு தொல்லியல் துறை காலாண்டு இதழ் கல்வெட்டு, எண். 19, பக்கங்கள் 19-22*

*25. இந்திய விமானப்படை அலுவலகம் (சென்னை) அலுவலர் திரு. நா. முரளியின் முயற்சியால் திருவனந்தபுரம் ஆவணக் காப்பகத்திலிருக்கும் இச்சுவடியின் செராக்ஸ் நகல் பெறப்பட்டது.*

*26. வரலாறு இதழ் 1, ஆகஸ்டு 1993, பக்கங்கள் 57-59; தமிழகச் செப்பேடுகள் - 1, 22ஆம் செப்பேடு, பக்கங்கள் 127-132*

*27. அரியலூர் வன்னிய சேர்வைக்காரர் வழி வந்த திரு. இளஞ்செழியனும், அரியலூர் மழவராயர் பாளையக்காரரின் தற்போதுள்ள வாரிசுகளும் இதனை இந்நூலாசிரியரிடம் வழங்கினர். அவர்களுக்கு இந்நூலாசிரியரின் நன்றி உரித்தாகுக.*

*28. கனம் கிருஷ்ணையர், தமிழ்க் கீர்த்தனைகள், பதிப்பாசிரியர் ஆர். வசந்தகல்யாணி, த.அ.தொ.பொ.ஆ.துறை வெளியீடு, பக்கங்கள் 60-61.*

*29. குறிஞ்சிப் பாடிக் கருகிலுள்ள 'கீழூர்' வன்னியப் பாளையக் காரர்கள் 'பாட்சா நயினார்' என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் அரியலூர் மழவராயர்களின் உறவினர்கள்.*

*30. இக்கட்டுரை, இந்நூலாசிரியரின் 'தமிழகம் அரப்பன் நாகரிகத் தாயகம்' என்னும் நூலில் பக்கங்கள் 145-160 ஆகியவற்றில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.*

## அ - 2. வன்னியப் பாளையக்காரர்-தொடர்ச்சி

### சிவகிரி

சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைப் பேராசிரியராக விளங்கிய டாக்டர் டி.வி. மகாலிங்கம் அவர்கள், 1972-இல் தொகுத்துள்ள 'மக்கென்சி ஆவணங்கள்' (Mackenzie Manuscripts, Vol-I) என்னும் ஆங்கில நூலில் பக்கம் 162-இல், 'ஆவணம்' எண் 26-ஆக உள்ளதில், சில குறிப்புகள் சிவகிரி பாளையக்காரர்களைப் பற்றி ஆங்கிலத்தில் காணப்படுகிறது.

**ஐயதுங்க வரகுணராம பாண்டிய வன்னியாடி** என்பவர் தமது நிலப்பகுதிகளான திருப்பூவனம் மற்றும் பிறரான்மலைப் பகுதிகளை திருப்பூவனத் (புஸ்பவனக் காசி) திலிருந்து ஆட்சி செய்துக் கொண்டிருந்தார். மதுரையை-ஆட்சி பரிந்த பாண்டிய மன்னன் இவருக்கு **"நெல்முடி கொண்டான்"** என்னும் விருதை வழங்கினார்.

ஐயதுங்க வராகுண பாண்டிய வன்னியாடியின் வழிவந்த **புத்ரசம்பத்து வன்னியாடி** என்பவர் தம் பாண்டிய மன்னனுக்காகச் சோழ அரசரைத் தோற்கடித்ததால் 108 கிராமங்களை உள்ளடக்கிய கானாடுகாத்தான் பகுதியின் காவல் உரிமையையும் மற்றும் பல பரிசுகளையும் அவருக்குப் பாண்டிய மன்னனால் கொடுக்கப் பட்டன.

இம்மரபில் வந்த பிற்காலத்தவரான **சத்ரு சம்கார வன்னியாடி**, பழுக்கக் காய்ச்சியச் செப்புக் குதிரைமீது ஊர்ந்து தமது வீரத்தினை நிலைநாட்டியதால், ரத்தினக் கம்பளம் உட்பட பல விலையுயர்ந்த பட்டாடைகளையும், அணிகலன்களையும், மற்றும் **சிம்மக்கொடி, அநுமக்கொடி** ஆகியவற்றையும் பாண்டிய மன்னனால் பரிசளிக்கப்பட்டார். மேலும் இவர் ஆறு கோட்டைகளுக்கதிபர் என்பதால் "ஆறு கோட்டை வன்னியன்தல" என்னும் பட்டத்தைப் பெற்றார்.

இவருக்கு அடுத்து பட்டமேற்றவர் **தாஷ்டிக சௌந்தர பாண்டிய வன்னியாடி** இவர் மதுரையை ஆண்டு வந்த பாண்டிய மன்னன் ஆணையின்படி மலைக் கள்ளனைக் கொன்று விட்டதால், தென்பகுதியை ஆண்டு வரும்படி கௌரவிக்கப்பட்டார். தாஷ்டிக சௌந்தர பாண்டியன் தென்பகுதிக்கு சென்று **"சுண்டன் குளத்தை"த்** தலைமையிடமாகக் கொண்டு ஒரு அரசை நிர்மாணித்தார் என்று அவ்வாவணம் கூறுவதோடு, மேலும்

இப்பரம்பரையினர் வரலாற்றை **"வரகுணராம வன்னியாடி"** முடிய தொகுத்துக் கூறுகிறது என்று டாக்டர் டி.வி. மகாலிங்கம் அவர்கள் எழுதியிருக்கிறார்.

இச்செய்தி சற்றேறக்குறைய அளகாபுரிப் பாளையக்காரர் களின் முன்னோர்களைக் குறிப்பிடுவது போன்றே உள்ளது.

அளகாபுரி வன்னிய பாளையக்காரர்களின் வமிசவழியில் முதன்முதலில் **வரகுணராம பாண்டிய வன்னியர்** குறிக்கப்பட் டுள்ளார். சிவகிரி வன்னியப் பாளைய வமிச வழியிலும் அவரேதான் "ஐயதுங்க" என்ற முன்னொட்டு சேர்க்கப்பட்டு **"ஐயதுங்க வரகுணராம பாண்டிய வன்னியாடி"** என்று சொல்லப்பட் டிருக்கிறார்.

இவருக்கு **"நெல்முடி கொண்டான்"** என்ற பட்டம் வழங்கப் பெற்றது இரு வமிச வழியிலும் தெரிவிக்கப் பெற்றிருக்கிறது.

இந்த வமிச வழியில் வரகுணராம பாண்டிய வன்னியனாரை யடுத்து, **அவரது மகன், புராதக (பராந்தக) வன்னியனார், புனித மாற்கண்ட வன்னியனார், குமார வன்னியனார். அதற்கடுத்து புத்திர சம்பத்து வன்னியனார்** என்று அளகாபுரி வமிச வழியில் பேசப்பட்டுள்ளனர்.

ஆனால் சிவகிரி வமிச வழியில் ஐயதுங்க வரகுணராம பாண்டிய வன்னியரின் வழியில் வந்த ஒருவர் **புத்திர சம்பத்து வன்னியாடி** என்று குறிக்கப்பட்டிருக்கிறார். இரு வமிச வழியிலுமே அவர் சோழ மன்னரை வென்றதும், அதற்காகக் 108 கிராமங்கள் உள்ளடங்கிய **"கானாடு காத்த நாட்டின்"** காவல் உரிமையைப் பாண்டிய மன்னன் அளித்ததும் தெரிவிக்கப் பெற்ருக்கிறது.

இவருக்குப் பிறகு சிலகாலம் கடந்து ஆட்சி புரிந்த **சத்ரு சம்ஹார வன்னியர்** செப்புக் குதிரை மீதேறி ஊர்வலம் வந்து தம் வீரத்தை நிரூபித்தது இருவமிச வழியிலும் விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அளகாபுரி வமிச வழியில் மட்டுத்தான் அப்பொழுது மதுரையை ஆட்சி செய்த பாண்டிய மன்னன் **"தயிரிய வர்மப் பாண்டிய ராசா"** என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும் இவருக்கு வழங்கப்பெற்ற ஆறு கோட்டைகள் ஆணையூர், ஆப்பனூர், பசுமையூர், மங்கையூர், **இளையூர்**, அப்பையூர், (அம்பையூர்?) என்றும்; அவை மதுரைக்குத் தெற்கில் இராமேசுவரம் செல்லும் வழியில் அமைந்திருந்தன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவருக்கு வழங்கப் பெற்ற **"ஆறு கோட்டை வன்னியனார்"** என்ற விருது இரு வமிச வழியிலும் கூறப்பட் டிருக்கிறது.

இவருக்கு அடுத்து பட்டமேற்றவர் **தாஷ்டிக சௌந்தர பாண்டிய வன்னியாடி** என்றும், அவர் மதுரைப் பாண்டியனின் ஆணைக்கிணங்க மலைக்கள்ளன் ஒருவரைக் கொன்றார் என்றும், அதனால் பாண்டியன் அவருக்குத் தென் பகுதிகளின் ஆட்சியை வழங்கினான் என்றும், தாஷ்டிக சௌந்தர பாண்டிய வன்னியனாரும் தென்பகுதிக்குச் சென்று சுண்டன் குளத்தைத் தலைமையிடமாக கொண்டு தம் ஆட்சியை நிறுவினார் என்றும் சிவகிரி வமிச வழியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதே செய்தியை அளகாபுரி வமிச வழிக் குறிப்பு கீழ்வருமாறு தெரிவிக்கிறது.

"அந்நாளில் பாண்டிய அரசர், **தாஷ்டீக சவுந்திர பாண்டிய வன்னியனாரை** அழைத்து, தென்சீமையில், "சுண்டன்" என்றொருவன், சிறு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு தொல்லைகள் தந்து கொண்டிருக்கிறான். அவனை வன்னியனாரும் அவரது பிள்ளைகளும் அங்கு சென்று ஒடுக்கி வரவேண்டும் என்று ஆணையிட்டார். அதன் பிரகாரம் தென்சீமை சென்று சுண்டனை ஒடுக்கிவிட்டு நாட்டில் எந்தவித சச்சரவும் இல்லாமல் செய்துவிட்டு மதுரைக்குத் திரும்பி, அரசனைப் பார்த்து நடந்த விபரத்தைக் கூறினார். மன்னர் மகிழ்ந்து தாஷ்டீக சவுந்திர பாண்டிய வன்னியரின் பராக்கிரமத்தை மெச்சி, தென்சீமைக்கே சென்று ஆட்சி செய்யுங்கள் என்று கூறி பல விருதுகளையும், வெகுமதிகளையும் அளித்துப் பட்டமும் கட்டி அனுப்பினார்." என்பதாக இவ்வமிச வழிக் குறிப்பில் தாஷ்டீக சௌந்திர பாண்டிய வன்னியனாருக்குக் குழந்தைகள் இருந்தன என்று தெரிவிப்பதோடு; பாண்டிய மன்னர் அளித்தத் தென்சீமையில், தம்பிள்ளைகளில்

ஒருவரை அவனியங்கோன் ஏந்தலிலும்
ஒருவரை அச்சந்த விளத்தானிலும்
ஒருவரை புத்தூரிலும்
ஒருவரை தென்மலையிலும்
ஒருவரை திருவேங்கிடத்திலும்

அமர்த்தி ஆட்சி செய்து வரும்படி ஏற்பாடு செய்தார்.

எனவே சிவகிரி வமிசவழிக் குறிப்பும் அளகாபுரி வமிச வழிக் குறிப்பும் ஏறக்குறைய ஒன்று போலவே தோன்றுகிறது. இரு பாளையங்களும் வன்னியப் பாளையங்கள் என்பதால், இரு பாளையங்களும் ஒரே வமிச வழிக் குறிப்பைக் கொண்டிருந்தன போன்று தெரிகிறது. இந்த இரு பாளையங்களும் தற்பொழுது பெண் கொடுத்து பெண் கொள்ளும் உறவு முறையினராக வாழ்ந்து வருகின்றனர்.

அண்மையில் இந்நூலாசிரியரும் (வன்னியர் வரலாறு தொகுப்புக் குழுத் தலைவர்), திருவாளர்கள் புலவர் முத்து எத்திராசன், எம்.ஏ., நா. முரளி பி.ஏ., (வ.வ.கு உறுப்பினர்கள்) ஆகியோரும் நேரில் அங்கு சென்று இராசபாளையம் திரு. வீரபாண்டியன், சிவகிரி செகதீஸ்வர பாண்டியன், தென்மலை திரு. சின்ன தங்கதுரை, சமுசிகாபுரம் திரு. சரவணபாண்டியன் ஆகியோர் மூலம் சேகரிக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க அளவில் உள்ள ஆவணங்கள் **தென்மலை, சிவகிரி, அளகாபுரி, ஏழாயிரம் பண்ணை, பன்னீராயிரம் பண்ணை, சமுசிகாபுரம், வேப்பங்குளம், ஆத்திப்பட்டு** ஆகிய இடங்களில் அமைந்திருந்த வன்னியர் பாளையங்கள் பற்றி ஏராளமான செய்திகளை வெளிப்படுத்துகின்றன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி **"தென் தமிழ்நாட்டில் வன்னியப் பாளையக்காரர்கள்"** என்று ஒரு நூலை இந்நூலாசிரியர் எழுதி வருகிறார்.

# அ - 3. வன்னியப் பாளையக்காரர் (சமுசிகாபுரம்)

தமிழகத்தின் தென்பகுதியில், திருநெல்வேலி மாவட்டத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வன்னியப் பாளையங்கள் கி.பி.18-19ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புற்று விளங்கியிருக்கின்றன. தற்போது நமக்குத் தெரிய வந்துள்ள வன்னியப் பாளையங்கள் (1) சிவகிரி, (2) அளகாபுரி, (3) ஏழாயிரம் பண்ணை, (4) சமுசிகாபுரம் (5) வேப்பங்குளம், (6) ஆத்துப்பட்டு (7) பன்னீராயிரம் பண்ணை ஆகியவை ஆகும்.

இவற்றுள் சிவகிரி பாளையம் முதலில் **"சுண்டன் குளத்தில்"** அமைந்து, பின்பு **"தென்மலையில்"** சிலகாலம் இருந்து, பின்னாளில் **"சிவகிரியில்"** செயல்பட்டது. சிவகிரி பாளையக் காரர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் **சமீன்தாரர் களாகக் கவுரவிக்கப்பட்டார்கள்.**

இச்சிவகிரி சமீனோடு பங்காளிகளாக "வேப்பங்குளம்," "தென்மலை" சமீன்களும், பெண் கொடுத்து, பெண் கொள்ளும் உறவு முறையினராக "சமுசிகாபுரம்," "அளகாபுரி", "ஆத்துப்பட்டி," "ஏழாயிரம் பண்ணை" பாளையங்களும் விளங்கின.

ஒவ்வொன்றும் சிறந்து விளங்கி நாளடைவில் நலிவுற்றன. அவற்றுள் ஒன்றான **சமுசிகாபுரம்** பாளையம் பற்றி அப்பாளையத்தின் தற்போதைய வாரிசுதாரர் **திரு. சரவண பாண்டியன்** அவர்கள் எழுதியனுப்பிய குறிப்புகள் அப்படியே இங்கு தரப்படுகின்றன.

## சமுசிகாபுரம் பாளையக்காரர்கள் வரலாறு (விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம்)

### 1. சங்கர பாண்டிய வன்னியனார்:

இவரது காலம் கி.பி. 1795 முதல் 1845. நவாப் ஆட்சிமுறை இருந்தது. இந்த ஊரைச் சுற்றி இருக்கும் ஏழு குளங்களிலும் இவர்களுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்து வந்தன. இவருக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி **முத்தாத்தாள் நாச்சியார்.** இவருக்கு வாரிசுகள் இல்லை. இரண்டாவது மனைவி **சின்ன முத்தாத்தாள் நாச்சியார்.** இவருக்கு ஒரு ஆண் வாரிசு உண்டு. மூன்றாவது மனைவி **கோதை நாச்சியார்.** இவருக்கு இரண்டு ஆண் வாரிசுகள் உண்டு.

## 2. கருப்ப வன்னியனார்:

*இவரது காலம் 1845 முதல் 1867 முடிய. இவர் சமுசிகாபுரம் கிராமத்தின் கிராம முன்சீப் ஆனார். இவருக்கு ஏழு கிராமங்கள் நவாப் காலத்தில் விடப்பட்டது. இவரது காலத்தில் அரண் மனையில் கால்நடைகள் நிறைய இருந்தன.இவரது காலத்தில்தான் சமுசிகாபுரம் மெயின் ரோட்டில் இருக்கும் **கருப்ப வன்னியனார் ஊரணி** வெட்டப்பட்டது. இவர் திறம்பட பணியாற்றி மக்களுக்குச் சேவை செய்தார். அரண்மனையில் அன்னதானங்களும், சிறு குழந்தைகளுக்குப் பிள்ளைச்சோறும் தினசரி கிடைக்க ஆவன செய்தார்.*

*அதனால்தான் இவருக்கு **"ஏழு குளம் ஆண்ட எஜமான்"** என்ற பட்டம், கிடைத்தது. இன்றும் ஊர்மக்கள் இவரது வழியில் வந்தவாரிசுகளை **'எஜமான்'**, என்றும், 'சாமி' என்றும், **'மகராஜா'** என்றும், **'பாண்டியன்'** என்றும் அழைப்பதுண்டு. இவரது காலத்தில்தான் சமுசிகாபுரம் மெயின்ரோட்டில் அமைந்துள்ள பிள்ளையார் கோயில் கட்டப்பட்டது. இன்றும் அது **"அரண்மனை பிள்ளையார் கோயில்"** எனப் பெயர் பெற்று விளங்குகிறது. இவருக்கு **மாப்பிள்ளைத்துரை** என்ற பட்டமும் உண்டு. சமுசிகாபுரம் அரண்மனையினரின் குலதெய்வமான **'அமச்சியார் அம்மன்'** கோயில் பட்டா இடம் 36 சென்ட் இன்னும் இவர் பெயரில்தான் இருந்து வருகிறது. இவர் காலத்தில்தான் பல ஊர்களில் இருந்து ஒவ்வொரு பிரிவு இன மக்களையும் அவரவர்களின் குலத்தொழிலுக்கு ஏற்ற மாதிரி தொழில்கள் செய்ய குடி அமர்த்தி, அந்த ஊர்களுக்குத் தனது தந்தை, தாய்ப் பெயரை வைத்தார். அதன்படி, தந்தை பெயரில் இன்று 'சங்கரபாண்டிய புரம்' என்னும் ஊரும், தாயார் பெயரில் **'கோதை நாச்சியார்புரம்'** என்ற ஊரும் இருந்து வருகிறது.*

## 3. பெரிய வீரப்ப பாண்டிய வன்னியனார்:

*இவரது தந்தை கருப்ப வன்னியனார் காலத்திற்குப் பின் பரம்பரை கிராம முன்சீப்பாக பதவி ஏற்றார். இவர் கூடப் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள். **(1) பெரிய சங்கர பாண்டிய வன்னியனார். (2) சின்ன சங்கர பாண்டிய வன்னியனார்.** பெரிய சங்கர பாண்டிய வன்னியனார் திருமணம் ஆகாமல் தற்கொலை செய்து கொண்டார். **அவரது முழு உருவச் சிலைதான் அமச்சியார் அம்மன் கோயிலில் 'பெரிய பள்ளிகூடத்து சாமி' என்ற பெயருடன் விளங்கி வருகிறது.** அவரது தம்பி சின்ன சங்கரபாண்டிய வன்னியனார். இவரும் கிராம முன்சீப் ஆக இருந்தவர்தான். இவருக்கு இரண்டு மனைவிகள். (1) சிவகிரி ஜமீன்*

பரம்பரை தாசில்தாரின் தங்கை, (2) தாசில்தாருடைய மகள். இந்த இருவருக்கும் வாரிசுகள் இல்லை. **ஸ்ரீவில்லிபுத்தூர் வைத்தீஸ்வரன் கோவிலில் சமுசிகாபுரம் அரண்மனைக்கு 8-ஆம் திருநாள் மண்டகப்படி நடத்த அந்த கோவிலின் நிர்வாகத்தினரிடம் இருந்து 1940-1941 ஆண்டு வந்த அழைப்புப் பத்திரிகை நகல்** இருக்கிறது.

### 4. சண்முகவேல் பாண்டிய வன்னியனார் என்ற பங்களா சாமி:

இவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி செந்தட்டி வீரம்மாள் நாச்சியார். இவர் சிவகிரி ஜமீன்தார் செந்தட்டிகாளைப் பாண்டிய சின்னத்தம்பியாரின் சகோதரி ஆவார்கள். இவர் 1922-ல் காலம் ஆனார்.

### 5. பெரிய வீரப்ப வன்னியனார் என்ற காசிசாமி:

இவருக்கு, சிவகிரி ஜமீன்தாரின் சகோதரி சங்கிலி விரம்மாள் நாச்சியாரைத் திருமணம் செய்து கொடுத்து இருந்தது. இவருக்கு வாரிசுகள் இல்லை. இவர் காசி சென்று இருக்கும்போது அங்கேயே 1887-ல் மரணம் அடைந்தார். இவரது மனைவியும், இவரது சகோதரர் சண்முகவேல் பாண்டிய வன்னியனாரும் சமுசிகாபுரம் அரண்மனைப் பிள்ளையார் கோயிலுக்கு விளக்கு தீப மானியமாக சமுசிகாபுரம் கிராமம் கீழ இலுப்பைக் குளம், அயன் சர்வே 555-ம் நிர் நசெ 1 ஏக்கர் 23 சென்டு தானமாக எழுதி வைத்திருக்கிறார்கள். தானமாக D.N. 1889 வருடம், 1910. பின்பு சங்கிலி வீரம்மாள் நாச்சியார் 29.12.1952-ல் காலமானார். சண்முகவேல் பாண்டிய வன்னியனாரின் இரண்டாம்தார மனைவி முத்தாத்தாள் அரசியாரின் வாரிசான கோதை நாச்சியார் என்பவரைத்தான் சிவகிரி ஜமீன்தாரர் மகன் சின்ன துரையின் குமாரரும் செந்தட்டி காளைப் பாண்டிய சின்ன தம்பியாரின் சகோதரரும் ஆன செல்லசாமி (எ) பெரிய முத்துசாமி பாண்டியனுக்கு முதல் தராமாக மணம் முடிக்கப்பட்டது. இவருக்கு வாரிசுகள் இல்லை.

சமுசிகாபுரம் அரண்மனைக்கும், சிவகிரி, வேப்பன்குளம், தென்மலை அரண்மனைக்கும் பெண் கொடுத்து பெண் எடுத்து பரம்பரை பரம்பரையாக சம்பந்தம் பண்ணி வைத்துள்ளனர்.

### 6. கருப்பன பாண்டிய வன்னியனார்:

இருவரும் பரம்பரை கிராம முன்சீப் ஆக இருந்தார். இவரது காலம் 1922 முதல் 1943 வரை இருந்தது. இவருக்கு உடன்பிறந்த ஒரு சகோதரர் உண்டு. அவர் பெயர் செல்லச் சாமி (எ) சங்கர பாண்டிய

வன்னியனார். கருப்பண பாண்டிய வன்னியனார்க்கு 5 ஆண் வாரிசுகளும், 5 பெண் வாரிசுகளம் உண்டு. 2 பெண் வாரிசுகளையும், சிவகிரி ஜமீன்தார் செந்தட்டி காளைப் பாண்டிய சின்னத் தம்பியாரின் குமாரர்கள் (1) துரைராஜா (எ) இராமலிங்க வரகுண ராமபாண்டியனுக்கும், (2) சீமைராஜா (எ) முத்துச்சாமி பாண்டியனுக்கும் திருமணம் செய்த வைத்து இருந்தனர். ஆண் வாரிசுகள் 5 பேருக்கு சிவகிரி ஜமீன் வாரிசுகளின் குமாரத்திகளை மணம் புரிந்து உள்ளனர். கருப்பண பாண்டிய வன்னியனார் சிறந்த வீரர். எதற்கும் துணிந்தவர். இவர் காலத்தில் தேவர் இனத்தவரான கணபதி என்பவரைக் கொலை செய்த காரணத்தினால் இவருக்கு ஆங்கிலேய அரசு தூக்குத் தண்டனை கொடுத்தது. இந்த பிரச்சனையில் இருந்துதான் சமுசிகாபுரம் ஜமீன் சொத்துக்கள் பலவகையிலும் அழிக்கப்பட்டு, வாரிசுகள் பல இடங்களுக்குச் சென்று வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. 60 ஆண்டுகள் கழித்து இப்போது அவரவர் அவரவர்க்கு ஏற்ற வேலையை செய்துக் கொண்டு திறம்பட வாழ்ந்து வருகின்றனர்.

**சமுசிகாபுரம் பாளையக் காரர்களின் உறவின் முறையினர்:**

வேப்பன் குளம் ஜமீன்

சிவகிரி ஜமீன்

தென்மலை ஜமீன்

**சமுசிகாபுரம் பாளையக் காரர்களின் பங்காளிகள்:**

அளகாபுரி ஜமீன்

ஆத்துப்பட்டி ஜமீன்

ஏழாயிரம் பண்ணை ஜமீன்



**சமுசிகாபுரம் அரண்மனை வாரிசுகளில் ஒருவரான ச. சரவணப் பாண்டிய வன்னியனார்**

## சமுசிகாபுரம் வன்னிய அரசர் மரபுவழி

**Sankarapandia Vannianar**

- First Wife *Muthathal* Nachiar (No issue)
- Second Wife's son Karuppa Vannianar
  - Periaveerappandia Vannianar
    - Karuppanapandia Vannianar (died on 20.3.1943)
      - Shanmuga Pandia Vannianar
      - Gurusami Pandia Vannianar
      - Peria Sankara pandia Vannianar
      - Sinna Sankara Pandia Vannianar
      - Chellam Raja
    - Chellaswamy Sankarapandia Vannianar (died on 17.6.1970)
  - Peria Sankarapandia Vannianar
  - Sinnasankarapandia *Vannianar*
- Third Wife (Kothai Nachiar)
  - Shanmugavelu Pandia Vannianar alias Bungalow swami (died on 26.1.1922)
    - First wife Senthatti Veerammal Nachiar
      - Periaveerappa Pandia Vannianar
    - Second Wife Muthathal
      - Kothai Nachiar
  - Peria Verrappa Vannianar alias Kasi Swamy (died on 1887) Wife Sangili Veerammal Nachiar (died on 29.12.1952)

## ஆ. செப்பேடுகள்

# ஆ - 1. அரியலூர்ச் செப்பேடு

### முன்பக்கம்

கோட்டுருவங்களின் கீழ் கட்டமிட்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளன.[1]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இவர்முத்து வேங்கட ப்பமழவ ராயர்[2] | இவர் விசைய ஒப் பிலாம ழவரா யர் | இவர்பா தபூசை அம்பல தாடுமை ய்யர் | இவர் அம்பலவாண சாமி ஆனந்த நடனம். சிவ | இவர்சி வகாமி அம்மன் | இவர்வி யாக்கி றபாதர் | இவர் பதஞ் சலி |

### முன் பக்கம்

1. உ ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாற்பித்தம் 1625 இதன் மே
2. ல்ச் செல்லா நின்ற சுபானு ஷு புரட்டாசி மஂ௯ எ உ சுக்கிற வார னாள்
3. ஸ்ரீமது அரியலூர் அரசு நிலையிட்ட மழவராய கோத்திர சம்மன்
4. னரான ரெங்கப்ப மழவராயர் பேரன் ஒப்பிலா மழவராயர் கும
5. ாரர் விசைய ஒப்பிலா மழவராயர் பூலோக-கயிலாசமான சிவக
6. லைகளில் சகஸ்த்ர கலையும் பரிபூரணமான பதஞ்சலி வியா
7. க்றபாதாதி பத்தர்களுக்கு ஆக ஆனந்த நடனஞ் செய்தருளிய கன
8. க சபாபதியாகிய அம்பலவாண சுவாமியே யெவ்வுயிரும் உய்யும்படி
9. எழுந்தருளியிருந்து பொன்மாரி பொழிந்து திருச்சிற்றம் பலமான சி
10. தம்பரம் அதனில் வீரமா[ே]யசுவர சமைய சிவாசார சம்பன்ன
11. ரான சிதம்பரம் பாதபூசை அம்பலத்தாடுமைய்யர் அவர்

12. களுக்கு தற்மசாதனப் பட்டையம் குடுத்தபடி நம்முடைய
13. அரியலூர்ப் பேட்டைமயில் எற்பேர்ப்பட்ட போக்குவரத்து

**பின்பக்கம்**

14. துப் பொதிகளுக்கும் பொதிக்கு ஒரு காசும் கடையளுக்
15. கு எட்டு னாளைக்கு ஒரு காசும் நாம் மகமை அமத்தி
16. விச்சபடியினாலே அதினால் வருகிற பலாபலங்கள் ம
17. டத்தில் குருபூசை மயேசுவர பூசையளுக்கு உதவியாக
18. நடப்பிச்சிக் கொள்ளும்படி பண்ணி அந்தச் சுகுற்த
19. பலம் மழவராய கோத்திரமான நமக்கும் நம்முடை
20. ய மாதா பிதாவுக்கும் மேல்வரை புத்திர புத்திராதி தலை
21. முறையளுக்கும் அந்த அந்தச் சுகுற்தம் உண்டாகத்
22. தக்கதாக நடப்பிக்கும்படி பண்ணவும் யிந்த மகமை
23. த் தறுமம் நாமும் புத்திர பவுத்திர பாரம்பரை உள்ள பேரெ
24. ல்லாம் சந்திர சூரியாதித்தர்கள் உள்ள வரைக்கும் உத்
25. ற ரோத்திரமாய் நடப்பிக் கடவோமாவோம் யிது தப்பித
26. ம் வராமல் நடப்பிக்றத்தினாலே காசி சேது மகாத் தலங்
27. களில் அன்னதானமும் கெங்கையிலே கோ தானங் கு
28. டுத்த பலனும் தனுக்கோடிலே சோடிச மகாதானமும் கு
29. டுத்த பலனும் பெறக்கடவோமாகவும் இதுக்கு சாட்சி அம்
30. பலவாண சு(வா)மியும் சிவகாசியம்மனுமே சாட்சி
31. இது விசைய ஒப்பிலா மழவராயன் கைய் ஒப்ப ஸ்ரீநீவ3
32. யிப்பறங்4 கவிதை உ பற்றலர்கள் பணிந்த குன்றை விசை
33. ய ஒப்பிலான் புரியும் பாத பூசை பெற் றருளம்பலத்தா
34. டுமைய்யற்ர்க் கிவ்வரியலூர்ப் பேட்டைக்குள்ளே உற்ற
35. புகழ் மகமையொன்று கட்டளை யிட்டா னுலக முள்
36. ளமட்டு நற்று சந்திர சூரியர்களுள்ளவுந் தன்மமுற்று
37. நடக்குந்தானே உ சிவ உ நல்லப்பிள்ளை பெருமா

38. பிள்ளை / அண்ணாமலை பத்தர் / இந்தச்செப்பேடு

39. எழுதினவர் அரியலூர்ச் சிதம்பர ஆசாரி குமாரன்

40. குமரப்பன் உ இது அருணகிரித் தம்பிரான் ப

41. ணிவிடை யிந்தச் செப்பேடு திருச்சிற்றம்பலம் உ5

**அடிக்குறிப்பு**

1. இச்செப்பேட்டினைப் படித்தவர் திரு. க. ஈஸ்வரன்

கல்வெட்டு படிப்பவர், தொல்லியல் துறை, சென்னை.

2. 'வீரமுத்து வேங்கடப்ப மழவராயர்' என்று தமிழ் நாட்டரசு தொல்லியல் துறையால் படிக்கப்பட்டிருந்தது. அந்த படிப்பையே இந்நூலாசிரியரால் வெளியிடப் பெற்ற 'வன்னியர் மாட்சி' என்னும் நூலிலும் பதிப்பிடப்பட்டது. தற்பொழுது சரியாக மாற்றிப் படிக்கப்பட்டுள்ளது.

இவர் விசைய ஒப்பிலா மழவராயருக்குப் பிறகு ஆட்சிக் கட்டிலேறி அரசாட்சி புரிந்தவர்.

3. கையொப்பம் தெலுங்கு எழுத்தில் உள்ளது.

4. 'இதற்குப் பிறகு' என்று பொருள்.

5. இச்செப்பேட்டைத் "தமிழகச் செப்பேடுகள் -1" என்னும் நூலில் 22ஆம் செப்பேடாக வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசு தொல்லியல் துறைக்கும், சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்களுக்கும் இந்நூலாசிரியர் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

## ஆ - 2. ஏழாயிரம் பண்ணைப் பட்டயம்

### செப்பேட்டின் வாசகம்

ஏளாயி

ரம் பண்

ணைப் பட்டை

டயம்[1].

1. சுவத்திரி ஸ்ரீமன் நாராயணமூர்த்தி திருநாபிற் கமல
2. த்தில்ச் செனித்த பிரம்மாவுக்குத் தற்பரை 60 கொண்
3. டது வினாடி. வினாடி 60 கொண்டது நாளிகை. நாளிகை
4. 60 கொண்டது நாள். நாள் முப்பது கொண்டது மாதம். மாதம்
5. 12 கொண்டது வருசம். வருசம் 100 கொண்டது புருஷா
6. யுத்து. மனுஷாளுக்கு ஒருபட்சம். பிதிர் தேவதையளுக்
7. கு ஒரு பகல். பட்சம் 2 கொண்டது ரிது. ரிது 3 கொண்டது
8. அயனம். அயனம் 2 கொண்டது தேவதையளுக்கு ஒரு
9. நாள். தேவதையளுக்கு 12000 வருசமும், பிதிர் தே
10. வதையளுக்கு 144000 வருசமும், நாரளுக்கு
11. 4320000 வருசமும் கொண்டது ஒரு சதுர் யுக
12. ம். சதுர் யுகமாவது கிரேதா யுகம் 1728000 தி
13. ரேதா யுகம் 1296000 துவாபர யுகம் 864000
14. கலி யுகம் 43200 ஆகவருசம் 4320000[2]
15. இப்படிச் சதுர் யுகம் 1000 கொண்டது பிரமதேவருக்கு
16. ஒரு பகல். சதுர் யுகம் 2000 கொண்டது ஒரு நாள். நாள்
17. 30 கொண்டது மாதம். மாதம் 12 கொண்டது வருசம்.

18. வருசம் 100 கொண்டது பிரமகற்பம். வருசம் 100ல் வயசு
19. 50ம் சென்று பிறமகல்ப்பமும் கடந்து அபரவயசு 50
20. ல் சுவேதவராகக் கற்பத்தில் முதல் ௵ முதல் மாதம் முதல்
21. நாள்2 சாமம் 3 முகூர்த்தத்தில் பிரமராச்சிய ப-
22. ரிபாலனம் பண்ணுகையில்ப் பகல் மனுக்கள் 14ல்
23. மனு 1க்கு சதிர் யுகம் 71 ஆக மனு 6 க்கு சதுர் யுக
24. ம் 426க்கு ௵ 184 கோடியே 1320000 மனுச
25. சந்தியா கால 7 க்கு சந்தியா காலம் 1க்கு ௵ 1728000
26. ஆகச் சந்தி 7க்கு ௵ கோடியே 12096000 ஆக ௵
27. 185 கோடியே 2419000 அதில் பிரமாவுதையத்தி
28. ல்ச் சிவத்தியான காலம் தேவாண்டு ௵ 47400
29. கோடியே 7064000 [ம்] ௵ நின்ற 183 கோடியே
30. 5352000 இதுவும் யிப்போது இராச்சியபரிபால
31. னம் பண்ணுகிற வைவச்சுத மனுவில்ச் சென்றது சதுர்
32. யுகம் 27க்கு 11 கோடியே 664000 ஆக 195 கோடி
33. யே 1992000 இதுவும் 28 சதிர் யுகத்தில்க்
34. கிரேதா திறேதா துவ்ாபர யுகம் 3538088000
35. ஆக மேற்படி 195 கோடியே 5858000 க்கு திருப்படிப்
36. பாதி சுத்த தினம் சதுர் யுகம் கருகுவாசா 157 கோடியே
37. 7917828 ஆக சதுர் யுகம் 452½
38. துவாபராந்தம் சுத்த தினம் 71440 கோடியே
39. 2296627 க்கு வாராதி நாயித்துக் கிளமை ஆதியாக
40. எண்ணிக் கண்டது. சுக்கிர வாரமும் கலியுக செனனம் ஆ
41. கையால் வாண்ட வார்த்தம் 4881 கலி **4880**
42. விக்கிரம மார்த்த கார்த்தம் 1829 போச ராசார்த்தம்

43. 1749 சகார்த்தம் 1701 கொல்லம் 954 ராம
44. தேவார்த்தம் 56 பிறதாப ருத்திராத்தம் 491 கிட்டின
45. ராயாரார்த்தம் 250க்கு கலியாதி சுத்த தினம் 1782460
46. விகாரி ஹூ சித்திரை மீ 21 சுக்கிரவாரமும் திசமியும் கார்த்தி
47 கை நாம யோகமும் வணித கரணமும் திருவோண நட்செத்திர
48. முங் வடிய சுப தினத்தில் துலா லக்கணமும் இராசவேளை
49. யும் புதவோரையுங் கூடிய சுப முகூர்த்தத்தில் தான சாதன
50. ப் பட்டையம் எளுதிக் குடுத்தபடி தானசாதனப் பட்டை
51. யமாவது குடனாட்டுத் திருச்செந்தூரான திரிபுவன மா
52. தேவி சதுர்வேத மங்கலம் நாயினார் யிளை நயினாரான தி
53. ருஷ்ட்டத் திதி சங்காரத் திரோபா வனுக்கிரக பஞ்சக
54. ந்த வியாரன் சூரர் பயங்கரர் ஆறிரு செங்கரர் செந்தில
55. ம் பதியார் சிந்து நன்னதியார் குக்குடக் கொடியார் மிக்க பொ
56. ன் முடியார் மயில் வாகனத்தர் அயில் சோகனத்ததர் கொஞ்
57. சரி மணாள ரஞ்சித குணாளர் வள்ளி தன் மோகன சுவாமி கப்பிற
58. மணியக் கடவுளார் சன்னிதானத்துக்கு ஆச்சந்திராக்கமாகத்
59. தான சாதனப் பட்டையம் எளுதிக் குடுத்தபடி தான சாதனப்
60. பட்டையமாவது பாண்டி மண்டலத் தாபானாசாரியன் சோள ம

பின்பக்கம்

61. ண்டலப் பிரதிஷ்ட்டாபனாசாரியன் கண்ட நாடு கொண்டு கொண்ட
62. நாடு குடாதான் எம்மண்டலமும் கொண்டு கெசவேட்டை யா
63. டியருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் ராச கெம்பீரன்
64. ராச மார்த்தாண்டன் ராச சார்த்தூலன் துட்டரில்த் துட்டன் துட்

65. ட நெட்டூரன்க் கட்டாரிச் சாளுவன் சொல்லுக் கரிச் சந்திரன்
66. வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் பலத்துக்கு வீமன் பொ
67. றுமைக்கு தருமன் குடைக்கு கற்னன் அறிவுக்குச் சகாதே
68. வன் தமிளுக்கு அகஷ்தியன் புகளில்ப் புலஷ்தியன் ஏக சந்
69. திர புரோவித்த்தியான் உபைய குல திலகன் திறியித சகாயன்
70. சதுர் தள தந்திரன் பஞ்சலட்சண சட்சாத்திரப் பிரசங்கன் சத்த
71. மேகப் பிறதாப யிந்திரன் அஷ்ட்ட ஐசுரியந் வாசலங்கார தச[ர]
72. தராமன் மருவலர் குடோரி[3] தருகாபாரி தரும் விலாசன் யிரவி குலே
73. சன் செந்தமிள்க் குத்தாரன் சுந்தரக் குமாரன் சந்தனப் புயத்தான்
74. விந்தை மின்னயத்தான் செம்பி நாடாண்டவன் நம்பினோர் பாண்ட
75. வன் அம்பையூராள்வோன் சேரம்புளவாள்வோன்[4] செப்புப்பரி
76. யான் நற்ப்புக் குரியான் விற்பன் விபேகன் அற்புத சமோகன சத்
77. திப் பூமாலையன் சத்திரச் சிவாலையன் சுத்தப் பிரதாபன்
78. ஆக்கினா சுக்கிரீபன் யோக்கியர் பற்பனாபன் பாக்கிய ரதி
79. க்க நேமன் தீர்க்கவான உச்சித பூமன் பொதிய மலையா
80. ன் விதுரச் சிலையான் வைகையாற்றினான் செய்மை மீறினான்
81. மங்கையர் மோகன் யிங்கித போகன் வங்காரத் துவசன் சி
82. ங்கார கவசன் தென்னர் சூரன் மன்னர் வசீகரன் இரட்டை
83. க்குடையான் துஷ்டைப் படையான் தண்டுவார் மிண்டன் மி
84. ண்டுவார் கண்டன் வன்னிக் கோத்திரத்தான் மன்னர் நே
85. த்திரத்தான் அன்ன சத்திரத்தான் பொன் விசித்திரத்தான்
86. ஆறு கோட்டையினான் சூர வேட்டையினான் குவளையன் க

87. ண்ணியன் தவமிகும் புண்ணியன் யீளமும் கொங்கும் யாப்
88. பாணமுந் திரை தரக் குரத்த கடற்படை செகவீர ரவி வற்மக்
89. கொழ[5] ராசேந்திர சிங்கம் குலசேகர ஆண்டு கொண்டார்
90. ரோம் தான சாதனப் பட்டையம் யெளுதிக் குடுத்தபடி தான
91. சாதனப் பட்டையமாவது என்னுடைய ஆதிக்கத்தில்ச்
92. சேர்ந்தக் கிராமம் உப்பத்தூர் எல்லைக்கு மேற்கு காளி
93. காத்தான் எல்லைக்கு கிளக்கு உண்ம்பளக் கிராம
94. ம் சீவிதக் கிராமம் சிறுபாட்டுக் கிராமம் அமர்க் கிராமம் முத
95. ல் ஆதியந்தத்துக்கும் சகல சாதிக்கும் கவுளத்திக் கட்டி
96. ன கிரகம் ஒன்றுக்கு வருசாசலம் குறுணித் தவசம் வீத
97. ம் கோவில் திருப்பணி மனுடர் வசம் யீரம் பதர்த் தூத்
98. தி அளந்து கொடுத்து வருவோமாகவும். யிந்த தற்மம்
99. ஆதிக்கத்தில் ஆச்சந்திராக்கம் சந்ததிப் பிறவேசம் உள்ள
100. வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரையாப் பரிபால
101. னம் பண்ணிக் கொணடு வருவோமாகவும்.யிந்த தர்மத்
102. க்கு வாக்குச் சகாயம் சரீரச் சகாயம் அர்த்த சகாயம் ப
103. ண்ணினவர்கள் சாலோக சாமீப சாரூப சாயுட்சிய
104. பதமும் தெய்வேந்திர போக போக்கியமும் பெறுவரா
105. கவும் இந்தப்படிக்குச் சம்மதித்துத் தான சாதன பட்டை
106. யம் சுவாமி சுப்பிரமணியக் கடவுளார் சன்னிதானத் திருக்
107. கோபுரத் திருப்பணி தற்மம் சிவபுண்யித்துக்கு தாம்
108. பிர சாதனம் எளுதித் தானம் பண்ணிக் குடுத்தேன் குலசே
109. சர ஆண்டு கொண்டார்ரோம். இந்தப்படிக்கு நாட்டுக் க
110. ணக்குச் சங்கரலிங்க மகாலிங்கிதம் சுவாமி செந்திலாதி
பதிககு அபரகிடாட்ஷத்தினாலே நயினார் சன்னிதானத் தி

111. ருக்கோபுரத் திருப்பணி தர்மத்துக்குத் தாம்பிர சாதனம் எளுதி வாங்கினேன் **அருணாசலத்தம்பிரான்**. இப்படி

112. க்கு யிந்தத் தானசாதனப் பட்டையத்தை தாம்பிர சாதனப்

113. பட்டையமாக எளுதினேன் **இராச்சிய அய்யப்பெருமாள்**

114. **ஆசாரி குமாரன் புன்னைவனம்**. குமாரகுருபரர் முன்னிற்க்க கடவ.[6]

**அடிக்குறிப்புகள்:**

1. இச்செப்பேட்டைத் 'திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்' என்னும் நூலில் 63ஆம் செப்பேடாக வெளியிட்ட ச. கிருஷ்ணமூர்த்திக்கும், திருவாவடுதுறை ஆதீனத்துக்கும் இந்நூலாசிரியர் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

2. மொத்த ஆண்டு சரியாக இல்லை

3. 'கோடரி'யாக இருக்கலாம்.

4. 'சேரன் புல ஆள்வோன்' என்று இருக்கலாம்.

5. "செகவீர ரவிவர்மக் கொல (குல)" என்று படிக்கவும்.

6. இச்செப்பேடு இந்நூலாசிரியரின் 'வன்னியர் மாட்சி' என்னும் நூலில் 210-214 பக்கங்களிலும் வெளிவந்துள்ளன. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1.12.1799 ஆகும்

# ஆ - 3. விருத்தாசலம் வன்னிய மடாலயச் செப்பேடு

ஸ்ரீ ஸ்ரீமன் மகா மண்டலேசுரன் அரியராயவிபாடன் பாஷைக்கி தப்பவிராயகண்டன் மூலராயகண்டன் கண்டநாடு கொண்டுகொண்டநாடு கொடாதான் இருபத்துநாலு கோஷ்டத்து வன்னியராய கண்டன் கொங்குதேசம் குரும்பறுத்து அழியாப் பிரபுடன் கெடி வன்னியமிண்டன் நவகோஷ்டத்து வன்னியராய கோலாகால பிரபுடன் வடவாசற் காவலன் இளவரசு மணவாளன் கண்டியப்பிரதாபன் கட்டாரி வல்லபன் தானகுல சீலன் காளி கணங்கள் கைகூப்பு மணவாளன் திங்கள் மும்மாரி பெய்து தேன்பாயும் வளநாடன் கங்காகுல தீபன் பூலோக தேவேந்திரன் வேந்தர்குல பஞ்சாக்ஷர தீபன் சிவசமய விஷ்ணு சமய பரிபாலனன் சிவபூஜாரந்தரன் இராஜமான்னிய இராஜஸ்ரீ ஆனகொந்தி திருவேங்கடபதி தேவமகாராயர் இவர்கள் பிரிதிவு ராச்சிய பரிபாலனம் பண்ணியருளானின்ற சாலிவாகன சகாப்தம் 1017 இதில்மேல் செல்லானின்ற பிலவஙு தைமீ இருபதாந்தேதி சோமவாரம் பூசநக்ஷத்திரம் பாலவாகரணம் பூர்வபக்ஷம் கூடிய சுபதினத்தில் இராஜாதிராஜ வளநாடு வெண்ணெயூர்நாடு பருவூர் கூத்தத் தனியூர் காசிக்கு மேலாய் விளங்கும் விருத்தக்காசி விதர்க்கணன் விபரசித்து கலிங்கன் அச்சுவர்ணன் முதலான பேருக்கு திருநடனம் புரிந்தருளிய தேவஸ்தலம் **பூருவகற்ப வன்னிமரத்தில் செங்கழுநீர் புஷ்பித்த திவ்வியக்ஷேத்திரம்** சகல லோகங்களும் வெள்ளங்கொண்டபோது பிரமதேவன் சில மலைகளைப் படைத்தான். அந்த மலைக்கு இடமில்லாமல் எங்கும் பழமலையாகத்தானே நிரம்பி நிற்க நாம் சிருட்டித்த மலைக்கு இடமில்லாமல் போனதேதென்று கோபம் கொண்டான். அந்த கோபாக்கினி அவனையும் சுட்டு அவன் வீட்டையும் சுட்டது. அவன் தேவவருஷத்தில் 1000-வருஷம் விருத்தாசலக் கடவுளை நோக்கித் தவம் பண்ண அவர் பிரசன்னமாகி நீ விஷ்ணுவினுடைய பிள்ளையானபடியினால் பொறுத்தோமென்று பிரமன் அதிகாரத்தைக் கொடுத்தார். ஐந்து லிங்கத்துக்கு முதன்மையான விருத்தகிரிலிங்கம் ஒருநாழிகை விருத்தகாசியில் வாசம் பண்ணின பேர்கள் சதாசிவசொரூபம் அடைவார்களென்று வேதங்கள் முறையிடுகின்றது. இத்தகைய விசேஷம் பொருந்திய க்ஷேத்திரத்தில் சகலமான ஜாதிக்கு மடமும், நந்தவனமும் பல தருமங்களும் விளங்கி வருகிறபடியால் நம்முடைய மரபு **வன்னிய வீரப்பன்னாட்டார்** வம்சம் விளங்க வேண்டுமென்று கொள்காணியாக கோயில் நிலத்தில் கீழ்வீதியில் மேல்சரகில்

ஐயனார் கோயிலுக்குத் தெற்கு, தெற்குவீதிக்கு வடக்கு அடி - 85 கிழக்கு மேற்கு அடி -160 அடி 1-க்கு பணம் ரூபா வீதம் ஷ் 42-பணம் ரூபா கொடுத்து இரண்டு சிலாசாதனம் நிறைத்து தாம்புரசாதனம் உண்டுபண்ணி, சேர்ந்த மங்கலம் - அண்ணாமலை குருக்களுக்கு தத்தம் பண்ணிக் கொடுத்தபடியினாலே, வன்னியர் பிறப்பு வளர்ப்பு எப்படியென்றால், ஆதியில் பிரமாவும் விஷ்ணுவும் 12-ருத்திரனும் தேவர்களும் ரிஷிகளும் கூடி கைலாசத்துக்கு போனயிடத்தில், சுவாமி நீங்கள் நம்மிடத்தில் வந்த காரியம் ஏதென்று கேட்க, சர்வரக்ஷகா! இராக்ஷத உபத்திரவம் பொறுக்க முடியவில்லை யென்று தேவரீர் பாதத்துக்கு விண்ணப்பம் செய்ய வந்தோமென்ன, நல்லது; அவனை ஜெயிக்க வேண்டுமென்று பொதியமாமுனி, சம்புமாமுனி, வசிஷ்டமாமுனி மூன்று பேரையும் அழைப்பித்து விசுவயாகம் பண்ணுமளவில், அதில் பார்வதி கழுத்திலிருந்த செங்கழுநீர் மாலையை வாங்கி அக்கினியில் ஓமம் பண்ணுமளவில், சிலையும் அம்பும் ஏந்தி உக்கிரமான திருமுகமும், உத்தண்ட வார்த்தையும், வாராமரிஷபக் கொடியும், புலிக் கொடியும், பஞ்சவர்ணக் கொடியும், சாம்பிராணிக் கலசமும், பகல் தீவட்டியும், பச்சைப் புரவியும் 18-விருதுடனே சம்புமாமுனி யாகத்தில் உருத்திர வன்னியர் தோன்ற அவர் வயிற்றில் ஐவர் தோன்ற அவருடனே 3, 54,000 வில்லாளிகள் தோன்ற, இவர்களுக்குப் பெயருங் கொடுத்தனர். இராக்ஷதரை சங்கரித்து வந்தவரானபடியினாலே ஏகாம்பர நாட்டுக்குடையவர், பாண்டியன் பரிபிடிக்க பரியேறும் பெருமாளென்றும், வாதாவியை வென்றவர் கோத்திரமாகிய கிருஷ்ண வன்னியர், சம்பு வன்னியர், பிரம வன்னியர், இந்திர வன்னியர், கங்கா வன்னியரென்றும் பெயருங் கொடுத்து, கொன்றை மாலையும் தரித்து புலிக்கொடி வேந்தன் வன்னியமுரசு 3,000-த்தில் ஒருவராக தேவர் ரிஷிகளுக் குரிய சத்துருவை ஜெயம் பண்ணியபடியினாலே, துர்க்கை பாளையம் போட்டபோது பாலமுத மில்லாமல், ஈஸ்வரி பஞ்சலோகத்தையும் ஒரு தாழியாக்கி, பாலமுதம் விருந்துப்பண்ண, சமுத்திராதேவி, இந்திராணி, கோபாலதேவி மூன்றுபேரும் சந்தோஷித்து வீரசிங்காதனங் கொடுத்து, இந்திரன் பெண் மந்திரமாலையை உருத்திர வன்னியருக்கு விவாகம் பண்ணி, பட்டந்தரித்து, மந்திரவாளும் கொடுத்து, இயமனை வென்றவர் தோழன், சிநேகிதர், பார்வதி புத்திரன், சிங்கக் கொடித் தலைவன், ஜனங்களை ரட்சிக்கும் உத்தமதேவர் முதலாய சிறப்புள்ள பட்டயங் கொடுத்தனர். எங்கள் நல்லப்ப காலாக்க தோழனார் உடையார் பண்டாரத்தார், அரியலூர் - மானங்காத்த மழவராய நயினார் அவர்களும், அரசுநிலை பெற்றவர்கள், சேரன் சோழ பாண்டிய தேயத்திலுள்ள வன்னியரானவர்கள், வருஷாந்திரம் மட தருமத்துக்

கட்டளையிட்டது என்னவென்றால், பல்லக்கு குதிரை உடையவர்களுக்கு பணம்-3, தலக்கட்டுக்கு பணம்-1, குரு தக்ஷணை பணம் - 1, கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீடு பணம் -1, பெண்வீடு பணம் - 1, குற்றாகுற்றம் தீர்த்த அபராதபணமும் சுபாசுபங்களுக்கு கொடுத்து வருமோமாகவும்.

இந்த தருமத்துக்கு வாக்குசகாயம், சரீரசகாயம், அர்த்தசகாயம் பண்ணின பேர்கள் குபேர செல்வமும், இந்திர பதவியும், விபசித்து ரிஷி பதவியும் அடைவார்கள். இதற்கு விகாதம் பண்ணின பேர்கள் கங்கைக்கரையில் பஞ்சபாதகமும் காராம்பசுவையும் மாதா பிதா குருவையும் கொன்ற தோஷத்தில் போவார்கள். பழமலையார் பெரிய நாயகிம்மன் துணை.

மேற்படி செப்பேட்டில் எழுதியிருக்கும்

**இராஜசந்ததியாரிகளின் விருது - 32 விபரம் வருமாறு**

பத்திரகாளி, கொடுத்த பத்துகாணித்தேர், தேவேந்திரன் கொடுத்த வெள்ளையானை, கொன்றைமாலை, வாடாதமாலை, அக்கினிக் குதிரை, சாம்பிராணி கலசம், பகல் தீவட்டி, சங்கு சக்கரம், அறுகாற் பீடம், மகர தோரணம், பாத களாஞ்சி, புலிக்கொடி, கருடக்கொடி, அன்னக்கொடி, மகரக்கொடி, மச்சக்கொடி, மயிற்கொடி, சிங்கக்கொடி, தவளசங்கு, புல்லாங்குழல், வர்ணத்தடுக்கு, முத்துக்குடை, வெள்ளைக்குடை, படைவாணக்கழி, சவளக்கழி, சாமரை, ஈயோட்டி, வெள்ளைப் பாவாடை, கத்தி, கேடயம், அம்புப்பட்டா, சமுதாடு, வளைதடி, லாந்தர், அம்புறாத்தூணி, வில், டங்கா, வெங்கலக்கொம்பு, நகார், காகளம் என்று சொல்லப்பட்ட பஞ்சவர்ணத்தாரை 2-ல் வண்டை, ஜயபேரிகை, தடி, முட்டி, வேட்டைநாய் ஆக விருது-32.

இந்த தாம்பிர ஸாஸனத்தைக் குறித்து சந்தேகப்பட்ட பேர்கள் மேற்படி மடாலயத்துக்குப் போய் கண்டால் தங்கள் சந்தேகத்தைப் பெரிதும் நிவர்த்தி செய்துக் கொள்ளலாம்.

இங்ஙனம்

**பொன்னம்பல குருக்கள்**

மடாலயவாசி, விருத்தாசலம்[1]

1. K. இரத்தினம், வன்னியர் புராணம் மூலமும் உரையும், (2005), பக்கங்கள் 3-5.

# ஆ - 4. குண்ணத்தூர் செப்பேடு

ஸ்வஸ்தி ஸ்ரீமந் ராசாதி ராச ராச பரமேஸ்பர ராச மா [ர்*]த்தாண்ட ராச கெம்பீர ஸமஸ்த மண்டலாதிபர் மனோகரன் கெசபதி அசுவபதி நரபதியாகிய பிரபடத் தேவ மகாராயர் மல்லிகார்சுன தேவ மகாராயர் சதாசிவ தேவ மகாராசர் அம்புச தேவ மகாராயர் நரசிங்க தேவ மகாராயர் விருப்பாட்சி தேவமகாராயர் ராட்சியம் பண்ணி யருளா நின்ற கல்லியத்தம் 4613 சாலிவாகன சகார்த்தம் 1433 ராச ராச வளநாட்டு ராசேந்திர சோழ வளநாட்டுள் மிழலை நாட்டுள்ச் சேர்ந்த சோழவளமாகிய தலத்துள் **வன்னியர் குல கிரிலதரில் நாட்டுக் க(த)திபதியராகிய குண்ணத்தூர்க் கட்டியப்ப நாயினார் குமாரர் நாகய மளவாரய நயினாரவர்களும் பென்னாடகம் பிரளையங்காத்த கடந்தையார் கோத்திரத்தில் பொன்னளந்த கடந்தை குமாரன் பெரியனாயக்க நயினாரவர்களும்** நம்முட குண்ணத்தூர் காணிக்கும் பென்னாடக காணிக்கும் **பூறுவாசார்ய்யராகிய குருக்களைய்யர் திசைமுக** தேவரவர்களுக்கு கடந்தையார் கிராமம் நாகையமழவராய நயினாரவர்க்கு சறுவ மானியமாக மாக்குடியில் நனினாரவர்களுங் கடந்தையாரவர்களுங் குருக்களைய்யரவர்களுக்கு தென் சிர்கில் குளத்துக்கு மேற்கு மடத்துக்கு மனைப்பிறமானம் யிருபத்து நாலடிக் கோலால் கிழக்கு மேற்கு யிருபது கோலம் தெற்கு வடக்கு இருபது கோலும் மடத்துக்கு மனையாகச் சேத்து மடமுங் கட்டி வைத்து முன்னுள்ளவர்கள் [இது]க்குச் சவாரியுங் கட்டளையிட்டு மானியங்களுக்கு சாசனமு மெழுதிக் கொடுத்து நடக்கிறபடி யினாலே னாமும் யியன்றமாத்தரங் குருக்களைய்யரவர்களுக்கும் பனியம் நயினாரவர்கள் சறுவ மானியங் கிறாமம் மாக்குடி காரச்சேரி கடம்பங்குடி ங பண்ணைக் கிறாமம் மாறம்பாடி நெடுங் கொல்லை பூந்தோட்டம் கீழ்மாராயம் மேல் மாராயம் நரிக்குடி ராசாக்கள் நல்லூர் யிதுவுஞ் சோழபுரம் நஞ்சை புஞ்சை ஐவேலி நிலமுங் குடியானவர் நல்லபெருமாள் பிள்ளை, மானா பிள்ளை, பெத்தபெருமாள் பிள்ளை, சிதம்பர முத்தரியன், ரெகுநாத முத்திரையன் யிவர்க ளைஞ்சு பெரும் அறமனை விஸட்டுர்ம யிறை யிருக்கமாட்டாதபடியினாலே வடபாதி தென்பாதியாகப் பிரித்து நாகைய மளவராய நயினாரவர்களுக்கு தென் பாதி நஞ்சை புஞ்சை ஐவேலி நிலமும் விலை சகிமை பண்ணிச் சாதனமெழுதிக் கொடு[த்து] னாங்கள[னை*]வரும் பத்தின **ஷ திருவையாற்றுச் சக்கரம்** சளவுருவ (425)ம் னாங்கள் பற்றிக் கொண்டபடியினாலே

புத்திர புத்திர பாரம்பரையும் யிந்தக் கிறாமம் தென்பாதி ஐவேலி நிலமும் நயினாரவர்களே ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவார் களாகவும். இப்படிச் சம்மதித்து நயினாரவர்களுக்கு உள்ளூர்க் குடியானவர் கெளேனாம் நயினார் அவர்களுக்கு சறுவ மானிய கிறாமம் ங பண்ணைக்கிறாமம் ஏழு கொலக் காணி சோழபுரந் தென்பாதி ஆக பதினொரு கிறாமத்திலேயுங் குருக்களய்யரவர் களுக்கு மானியங் கட்டளையிட்டபடி மாக்குடியில் நஞ்சையிற் குழி ந௱ புஞ்சையிற் குழி எருய௰ (150) காரச் சேரியில் நஞ்சையிற் குழி எஞ் கடம்பக் குடியிற் புஞ்சையிற் குழி ள 100 சோழ புரத்தில் நஞ்சையிற் குழி... மாரம்பாடி நங்சையிற் குழி எருய௰ 150 நெடுங்கொலையில் நஞ்சையிற் குழி ள பூந்தோட்டம் நஞ்சையிற் குழி ள மெல் மாராயம் நஞ்சையிற் குழி ள பூந்தோட்டம் நஞ்சையிற் குழி ள மெல் மாராயம் நஞ்சையிற் குழி ள கீழ் மாராயம் நஞ்சையிற் குழி ள நரிக்குடியில் நஞ்சையிற் குழி ள ராசாக்கள் நல்லூரில் நஞ்சையில் குழி ள நயினாரவர்கள் உம்பளக் கிறாமம் திரிபுவனத்தில் பெரிய ஏ[ரி]யில் வேலி நிலக் குருக்களையயருக்கு மானியம் கட்டளையிட்டொம். யிதுவும் திறுபுவனந் தானம் மேயி தாவல் ரெண்டுந் சாதனமாக எழுதிக் கொடுத்து **திருவையாற்றுச் சக்கரம்** சளருய௰உம் (450) னாங்களைவரும் பத்தி கொண்டபடியினாலே நாகய மளவராய நயினார் அவர்கள் புத்திர புத்திர பாரம்பரையுஞ் சந்திராதித் தாளுள்ளவும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவராகவும். யிப்படிச் சம்மதித்து னாங்களைவரும் சாசனமெழுதிக் கொடுத்தொம். பொன்னளந்த கடந்தையார் குமார [ர்*] பெரிய னாயக கடந்தையாரவர்கள் குருக்களய்யரவர்களுக்கு மானியங் கட்டளையிட்டது. வடவளந்தைக் கண்டத்திலிருக்குஞ் சாத்துடை நல்ல த[ம்பி]யா பிள்ளை, சிவராம பிள்ளை னாங்களிருவரும் எங்கள் கிராமம் வடவிளந்தைக் கண்டம் னாங்க ளிரை யிறுத்து [நி]றுவாகம் பண்ணப் படாதபடியினாலே நஞ்சை புஞ்சையு முள்ள ஏழே முக்கால் வேலி நிலமும் பெரிய நாய[க] கடந்தையார் கொள்காணியாகக் கொண்ட **திருவையாற்றுச் சக்கரம் வருளருய௰** (550). யிந்தப் பொன் ருளருய௰-[ம்] னாங்களிரு வுரும் பத்திக்கொண்டபயினாலெ பெரியன்ாயக கடந்தையாரவர்களே யிந்தக் கிராமஞ் சந்திராதித்தாளுள்ளளவும் புத்திர புத்திர பாரம்பரையும் ஆண்டனுபவித்துக்கொள்ளக் கடவாராகவும். யிப்படிச் சம்மதித்து னாங்களிருவருங் சாசன மெழுதிக் கொடுத்தபடி கடந்தையாரவர்களுக்கு நல்ல தம்பியா பிள்ளை, சிவராம பிள்ளைஓம். பெரிய நா[ய]க கடந்தையாரவர்கள் பண்ணைக் கிறாமம் வடவிளந்கைக் கண்டம், தென்விளந்தைக் கண்டம், குமரங்...டி, பந்தப் பிராய' பாதிரிக்குடிரி உத்தம காணி[2]

கீழ் ஆ... திக்குறிச்சி, ஆனூர், ஆறு மேடு[3] யிந்த ஒன்பது கிறாமத்திலேயுங் குருக்களைய்யரவர்களுக்கு மானியங் கட்டளை யிட்டபடி: வடவிளந்தை கண்டத்தில் நஞ்சை கொன்னையடிக்கு கிழக்கு நஞ்சையில் குழி ஙள (300) தென்விளந்தைக் கண்டத்தில் நஞ்சையிற் குழி (100) ள குமரங்... டி, பந்தப் பிராய, பொதுவிடை ஓடைமெல் தென்பாதி நஞ்சையில் குழி உள (200) பாதிரிக்குடியில் நஞ்சையில் குழி ள, உத்தமதானி நஞ்சையில் குழி ள, கீழ் ஆ.. திக்குறிச்சி பிஞ்சையில் குழி 100 ளஞ் ஆனூர் நஞ்சையில் குழி எயிரு (75), ஆனைமேடு புஞ்சையில் குழிஞ் 100 ள யிந்த மானியங்களுக்கு நயினாரவர்களுங் கடந்தையாரவர்களும் யிந்த கிறாமத்து மானியங்களுக்கெல்லாம் **லிங்க முத்திரைக் கல்லூம் நாட்டிக் கொடுத்துக்** கட்டளை யிட்டோஞ. சோழவதா - நயினாரவர்களுது மெய் காவல்க் கணக்குக் கடந்தையாரவர்களுது ஆள் வைத்துப் பராமரித்துக் கொள்ளுகிறது. பெரிய நாயக கடந்தையார் குமாரத்தி நாகைய ... மழவரா...ய நயினார் மருமகளுக்கு கடந்தையார் **மஞ்சகாணிக்** கொடுத்து வடவிளந்தைக் கண்[ட]ங் கொள் காணி நி[ல]ம் கொன்னையடி யென்னுடைய **மஞ்சக் காணி** நெத்தி [முத்தப்ப] நாயகம் என்னுடைய பிரந்தகத்துக்கும் புத்தகத்துக்கும் முறுவாசாரியாராககிய குருக்களைய்யரவர்களுக்கு என்னுடைய தாகவும் குழி ள நரசிங்க மழவராய சு... யினார் குமாரத்தி பெரிய தங்கச்சியம்மாள், பெரியநாயக கடந்தையார் மருமகள், யென்னுடைய பாட்டனார் நாகைய மளவராய நயினாரவர்கள் மானியமான [மா] க் குடியில் என்னுடைய பிதா நரசிங்க மளவராய நயினாரவர்கள் **மஞ்சக்காணி** யெனக்குக் கொடுத்துது ஊருக்கு மேற்குச் சேரிக்குத் தெற்கு மு[க்]கால் நிலம் யிதில் குருக்களைய்யரவர் களுக்கு மானியம் குழி ள கொடுத்தேன். புத்திர புத்திர பாரம்பரையும் அனுபவித்துக் கொள்ளக் கடவார்களாகவும். சோழவரஞ் [சீ]மை னாட்டவர்கள், குருக்களைய்யர் மடத்துக்கு மானியங் கட்டளை யிட்ட தருமம்

1. கூ (550) பிராயம்' என்று இருக்க வேண்டும்.

2. 'உத்தமதானி' என்று வாசிக்க.

3. இது 'ஆனைமேடு' எனப் பின்னால் காணப்படுகிறது.

4. 'பூர்வாசாரியராகிய' என்று வாசிக்க,

உள்ளூர் நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள குரு..வூர் நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ளம் (110) கீழ் ஆனைமெடு நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ரும் மண்மேடு பளையங்குட்டம் னாட்டவர் தற்மம் நஞ்சையில் குழிளம் பீராக்கன் நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ள [ப]ாவனூர் கூத்தனூர் நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ள மாவுத்த யிருப்பு நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ள வாண்டா யிருப்பு நாட்வர் தர்மம் நஞ்சையில் குழி ள அம்மையப்பன் நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ள மாறாசேரி நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ளம் கிழ்நரிக்குடி நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ள. புத்து நாட்டவர் தர்மம்... கோயிலாச்சேரி கண்ணங்குடையார் தற்மம் [ந]ஞ்சையில் குழி ளரும் களம்பரம் நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள மீழலை நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள சிறுகுடி நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள மட்டியூர் நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள உன்றாத்தம் நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ளம் சீபுரந்தானி நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ளம் நயினாரவர்கள் தற்மம் ஏரியில் காணி அரைக்காணி முட்டம் னாட்டுவரது தற்மம் நஞ்சையில் குழி ள யிருப்புணியாம் னாட்டவரது தற்மம் பிஞ்சையில் குழி எம் மெலத்தியூர் நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழிள வாழைக் குறிச்சி நாட்டவர் தற்மம் புஞ்சையில் குழி ரும் அமக்காவல் நாட்டவர் தற்மம் பிஞ்சையில் குழி ளய காவற்கூடம் நாட்டவர் தற்மம் பிஞ்சையில் குழி ருய காவற்கூடம் நாட்டவர் தற்மம் பிஞ்சையில் குழி ள ஆளங்குரிச்சி நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள கடிச்சம்பாடி நாட்டவர்கள் தற்மம் நஞ்சையில் குா ள நீரெத்த நல்லூர் நாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள தெவனாசேரி நாட்டவர் தற்மம் பிஞ்சையில் குழி ள ஆதனார்[1] னாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள திருப்பிரம்பியம் னாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள திள்ளப்புலியூர் னாட்டவர் தற்மம் நஞ்சையில் குழி ள செயங்க நல்லூர் மகா செனங்கள் தற்மம் நஞ்சையில் குழி ள மடவாங்குடி நாட்டவர் தர்மம் நஞ்சையில் குழி ள **நாகயமழவராய நயினாரவர்களும் பெரிய னாயக் கடந்தையாரவர்களும் சீமை நாட்டாரவர்களும் குருக்களைய் யரவர்கள் மடத்துக்கு பண்ணின தற்மம்:** கலியாணத்துக்கு ஒரு பணம், சிவராத்திரிக்கு ஒரு பணம், யிந்தப்படிக்கு மானியங்களும் வர்த்தனையுங் கட்டளையிட்டோம். யிதுக்கு யாதாமொருவன் அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே மாதா பிதாவையுங் காராம் பசுவையுங் கொன்ற தோஷத்திலெ போகக்கடவ்ராகவும்,

1. 'ஆதனூர் நாட்டவர்' என வாசிக்க.

யிதை பரிபாலனம் பண்ணினவன் புத்திர புத்திர பாரம்பரையுஞ் சுகஞ் சீவவதியாயி இருக்கக்கடவாராகவும், சொழவர்பாக்கியம் அஞ்ஞூாத்திப்பலருங்கூடி மடத்துக்கு கட்டளையிட்ட தற்மந் தசிக்கட்டுக்கு[1] வருஷ வற்தனை கால்பணம் நம்முட சொழவர் பாக்கியம் யெந்த னாட்டிலிருந்தாலுங் கொடுத்து வரவும். யிதுக்கு இயாதாமொருவன் அகிதம் பண்ணினவன் மாதாபிதாவையுங் காராம் பசுவையுங் கொன்ற தோஷத்திலெ போகக்கடவராகவும், யிதைப் பரிபாலனம் பண்ணினவர்கள் சுகஞ்சீவ[வ]தியா யிருக்கக் கடவாராகவும், ஆயத்துரை மகிமைப் பொதிக்கு அரைக்காசு சீமைக்குச் சிட்டியும் மடத்துக்கு வர்தகா[ள]னைவரும் பண்ணின தர்மம். அட்டவணை னோட்டம் மாதங் கால்பணம் மடத்துக்குக் கொடுத்து வரவும். **நரசிங்க மழவராய நயினார் குருக்களையரவர்கள் மடத்துக்கு பணிவிடைக்குக் கட்டளை யிட்டது. அரமனை ஊழியம் பெரியான்,** மனுஷன், குருவன், னாகி, பிரமி, முத்தி ஆகு, சனம், பண்ணைச் சாம்பான், சாயிருவான், வீரன் சனம், ச ஆக சனம் பத்தும் னாவனைஎருங்[2] கொடுத்து புத்திர புத்திர பாரம்பரையும் மடத்துக்கு அடிமையாகக் கட்டளையிட்டோம். **பெரிய நாயகக் கடந்தையாரவர்கள் குருக்களையரவர்கள் மடத்துக்குக் கட்டளையிட்டுது. தாங்களாய் மனை ஊழியம்** சிலம்பன், முருகன், தாண்டவன், லிரி, திருவான், குப்பச்சி, ஆக சனம், சு (6) பண்ணை, சாம்பான், வீரன், இருவான், சனம் ச ஆக சனம் ௰-ம் னாவனைஎருங்[2] கொடுத்து புத்திர புத்திர பாரம்பரையும் மடத்துக்கு அடிமையாக கட்டளையிட்டோம். நாகய மழவராய நயினாரவர்களும் பெரியனாயக கடந்தையாரவர்களுஞ் சீமை நாட்டாரவர்களுங் குருக்களைய்யர் மடத்துக்கு தர்ம சாஸ்சனஞ் **சாம்பராணி** பட்டயண் (தாம்பிரபட்டயம்) கட்டளை யிட்டது. மடத்து தவசி பிள்ளைகளுக்கு பெரிய பண்டாரத்துக் குமிழ் மடத்து மானியமுங் குருப் பண்டாரத்துக்கு சிறு குடியில் மடத்து மானியமும் சிவ பாண்டாரத்துக்கு மட்டியூரில் மடத்து மானியமுங் கொடுத்து இருக்கச் சொல்லி குருக்களைய்யரவர்கள் கட்டளையிட்டு யிந்த மூணு பேருஞ் சொன்ன புத்தி கேட்டுக் கொண்டு யிருக்கவும், **நடுக்கந் தீர்த்த மழவராய நயினாரவர்கள் குருக்களைய்யரவர் களுக்கு பூமி தானம் பண்ணின நிலஞ்** சோழபுரந் தென்வாதியில் கொள்காணியில் குழி உள முன்மானியங் குழி ள ஆக ஙள குழியுங் குருக்களைய்யரவர்களே புத்திர புத்திர பாரம்பரையும் ஆண்டனுபவித்துக் கொள்ளக் கடவாராகவும், **பெரியனாயக**

---

1. 'தலைக்கட்டுக்கு' என்று கொள்க.
2. 'நாம் அனைவோரும்' என்று வாசிக்க.

கடந்தையார் குமாரர் ராமனாதக் கடந்தையாரவர்களே புத்திர புத்திர பாரம்பரையும் ஆண்டனுபவத்துக் கொள்ளக் கடவாராகவும் யிந்த தற்மங்களுக்கு யாதொருவன் அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையில் மாதாவையும் பிதாவையும் காராம் பசுவையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவாராகவும். யிந்த தற்மத்தை பரிபாலனம் பண்ணினவர்கள் புத்திர புத்திர பாரம்பரையுஞ் சுகஞ்சீவதியா யிருக்கக் கடவாராகவும். **திசைமுக தேவரவர்களுக்கு ஸ்தலம் மகம் நரசிங்க தெவராயர் நாளில்ப் பிரித்துக் கொண்டது** சாயாவனஞ் சங்கமுகத்துரைக்கு மேற்கு, காவேரிக்கு வடக்கு, சுவாமி மலைக்கு வடக்குக், கொள்ளிடத்துக்கு மேற்கு **அரியலூருள்ளாக கொல்லைமலைக்கு கிழக்கு**, வெள்ளாத் துக்குத் தெற்கு வீராணத்தேரிக்கு மேற்கு ஓமாம்புலியூர் மட்டுக்குக் கொள்ளிடத்துக்கு கிழக்குத் **தீவு கோட்டைக்குத்** தெற்கு, சங்குமுகத்து வாயிக் குள்ளாகிய தலமெல்லாந் திசைமுகதெவர்க்குத் தத்துக் காணிக்கை. அப்புத் தீர்வை யாசறணை எல்லாந் திசைமுக தெவர்கள் புத்திர பாரம்பரை [யு]ஞ் சந்திராதித்தாளுளள்ளவும் ஆண்டனுபவித்துக் கொள்வது. கும்ப கோணத்தார், பேரளத்தார், திருவெண்க்காட்டார், தாராசுரக் கிராம அவரவற்கு பிரித்த வீதங்களிலே அனுபவித்துக் கொள்வது. உ

அச்சுதராயர் நாளில் **கும்பகோணத்தாரும் பச்சைக் கந்தை யரவர்களும்'** தல்ம் என்னுது உன்னுது எண்ணு ரெண்டு பேரும் அடிச்சுவிட்டார்கள். அப்போ நயினாரவர்கள் பண்டார[ங்]கள் சேதி யெல்லாச் சேதியும் பார்பதித்து தன்மத்தார் சொன்னபடி கேட்டு வெண்டு ரெண்டு பெர் கையிலெயும் முறிவாங்கிக் கட்டிக் கொண்டு தன்ம்மத்தாரைக் கேட்கச் சொன்னவிடத்தில் அதிலே கொவில் பூசகர் அவற்கு வயசு 95 உண்டு. "பூறுவம் உமக்குத் தெரியுமோ யிந்த ரெண்டு பண்டாரங்களும் என்னுது தன்னிது என்று சொல்லுகிறார்களே" என்று அரமனை முத்திரை மனுஷருந் தன்னமத்தாருங் கேட்டதற்கு அவர் சொன்னது: "யிப்படி நம்[முடை]ய வயசுக்குள்ளே அனேக பெருண்டு அடித்து வி[ட்ட]து; நம்முடை பாட்டரை சொல்லியிருப்பார். [நம்முடைய தகப்பனாருக்கு தம்முடைய தகப்பனார் சொன்னது: 'திருவெண்க் காட்டிலே யிருந்து பாளையத்துச் சீமைக்கும் [அரியலூர்ச் சீமைக்கும் அ]வர்கள் தானமகத்து: யிதுக்கு செப்பேடு முத்திரையிவர்கள் வைத்திருக்கிறார்கள்' என்று சொல்லக் கேட்டிருப்பொ'மென்று சொன்னார். யிருவர்கள் முன்பாகவும் யிவர்கள் ரெண்டு பேருக்கும் தத்துத் தினம் அரியலூர்க்கும் பாளையத்துக்கும் தேவையில்லை திருவெண்காடு சோழபுரமேகத்துத் திசை

முகத்தெவர் பூறுவாதகமா யவருடைய தலமென்று தீர்ந்து தென்றார்கள். நயினாரவர்கள் பண்டாரத்தாரவர்களுக்குச் சொன்னது 'நம்முடைய குண்ணத்தூர் காணிக்குப் பூறுவ குருக்களவர். திருபுவனம் எங்களுக்குத் தண்டிகை உம்பளம் நடக்கச் சொல்ல நிலமானியங் கட்டளையிட்டார்கள். மெய்தான பண்டாரங்களே, நீங்களிண்ணு முதல் யிது காரியத்துக்கு வரத் தேவையில்லை 'யென்று அனுப்பிவிட்டார். நயினாரவர்கள் பண்டாரத்தாரவர்களுடனே சொல்லி செரகத்திலெ யிவர்கள் வந்தால் விடவேண்டாம். நம்முடைய குருக்களையய்ய வரர்ந்தனிலும் ஒரு பண்டாரங்களுக்கும் தலம் விட வேண்டாம். தலத்தாண்டியளெ அனுபவித்துக் கொண்டிருக்கட்டும் என்று கட்டளையிட்டார்கள்[2].

---

1. பச்சைக் கந்த தேசிகர் மடம் என்ற பெயருள்ள மடம் ஒன்று சிதம்பரத்திலே இருப்பதாகத் தெரிகிறது. அந்த மடத்தை நிறுவிய ஆதி புருஷர் பச்சைக் கந்த தேசிகர் என்பர். அவர் கன்னட தேசத்திலே அவதரித்த வீர சைவர் ஆவர். கி.பி. 1763-ல் 'அரும் பொருள் விளக்க நிகண்டு' என்னும் நூலைத் தமிழில் இயற்றிய அருமருந்தைய தேசிகர் அந் நூலைத் தம் ஞானாசிரியரும் தில்லைவாசியுமான பச்சைக் கந்த தேசிகருடைய ஆணையை மேற்கொண்டு செய்ததாகக் கூறுகிறார். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் ஞானாசிரியரான சிவஞான பாலையதேசிகர் பச்சைக் கந்த தேசிகருடைய மரபினர் என்பர். (அரும்பொருள் விளக்க நிகண்டு; எஸ். வையாபுரிப் பிள்ளை பதிப்பு முன்னுரை, பக். 25-26). செப்பேட்டின் காலத்துக்கும் இக்குறிப்பில் உள்ள காலத்துக்கும் ஒத்து வரவில்லை (இந்நூலாசிரியர்)

2. இச்செப்பேட்டின் ஆராய்ச்சிக் கட்டுரையை இந்நூலாசிரியரின் 'வன்னியர் மாட்சி' என்னும் நூலில் (2005), பக்கங்கள் 110-120களில் காணலாம்.

# ஆ - 5. நீலம்பூர்ச் செப்பேடு

இடம்: ஈரோடு மாவட்டம், தாராபுரம் நகரில் ஓய்வு பெற்ற பொதுப் பணித்துறைப் பொறியாளர் முத்துசாமிக் கவுண்டர் இல்லம்.

காலம்: கி.பி.1680

செய்தி: கொற்றனூர் பெரியகுல மும்முடி வேணாடுடையாருக்கு அடங்காமலிருந்த வேட்டுவர் சமூகத் தலைவர் விசய காளிராயக் கவுண்டரை அடக்கியதால், நங்கூர் ஈஞ்சகுல ரகுனாதசிங்கக் கவுண்டருக்குத் தென்கரை நாட்டு நீலம் பேரூரில் காணியுரிமை கொடுத்த விபரம் கூறப்படுகிறது.[1]

சேர அரசர் வல்லாள வன்னிய மகாராசர் காலச் செப்பேடு. சேரர் பற்றிய பல அரிய வரலாற்றுச் செய்திகளும், அன்னோரது கொங்கு நாட்டுத் தொடர்பும் கூறப்படுகிறது.

ராமசெயம் காமாட்சிதுணை

1. சொஸ்திஸ்ரீ மன் அக்கினி கோத்திரன் அம்புவிக்குடையான்.
2. பனைந்தார் மார்பன் பவள மாலிகையான் அன்னக் கொ
3. டியான் ஆறு நன் மலையான் செம்பொற் கிரிவான் சீரங்
4. கித் தேவேந்திரன் மணிமுடி மவுலி வளங்கு[2]றாசேந்திரன் நரச
5. ாதிநரசன் றாசபரமேசுவரன் றாசமாந்த்தாண்டன் றாச
6. கெம்பீரன் றாசகோதண்டன் றாசமனோகரன் அழகுக்கு
7. ரேபந்தன் ஆஸ்தான கோலாகலன் கனக சிங்காசன மு
8. டையான் கனகமணி கிரீட ரேபந்தன் கொல்லிமலையா
9. ன் கோட்டை நற்கறையான் வஞ்சி நற்பதியான் ஆவினன்
10. பதியான் ஆம்பொருநை யாறன் விறுதூர் வஞ்சியில் வி
11. ளங்கிய கோமான் வெற்றிநற் பொருப்பு விளங்கும் தே
12. வேந்திரன் தலைமலை சூமர்ந்த்[3] தளப்படை வீரன் குளித்த
13. ண்டலையளவும் கொங்கனானோன் வெ
14. ள்ளாள[4] மகாராசாவாகிய சேர ராசா செங்கோல் செலுத்தி த
15. ற்ம நீதி தப்பாமல் அரசுபுரிந்தருளிய நாளில் செல்லாநி
16. ன்ற கலியுக சகாத்தம் 1602க்கு மேல் பிங்கள வருஷம்
17. புரட்டாசி மாதம் 15ந் தேதி சத்தமியும் புசநற்சேத்திரமும்
18. சுபநாம யோகமும் சுப கரணமும் பெற்ற சுபதினத்தில் தெ
19. ன்கரை நாடு எண்ணாயிரங் கோத்திரத்துக்கு பெரிய கோத்

20. றன் மும்முடி வேணாஉடையான் யீஞ்ச குல ரகுநாத சிங்க
21. கவுண்டனுக்கு யெளுதிக் குடுத்த தாம்புர சாசினப் பட்டை
22. யம் என்னமென்றால் தென்கரை நாட்டுக்குச் சேந்த நீல
23. ம்பேரூர்க் கிராமத்தில் காவுலவன் விசையகாளிநாய கவுண்
24. டநெங்குரவன் நம்மளுக்குள் அடங்காமல் கிராமங்களில்
25. சனங்களை உபத்திரம் பண்ணுகிற படியினாலே ரகுனாத சி
26. ங்க கவுண்டனுக்கு சிருது[5] சனங்குடுத்து அந்த காவுல
27. வனையும் அவனடைய சனத்தையும் செயம் பண்ணி வ
28. ந்தால் நீலம்பேரூர் ஆதீகம் வுனக்கே நிலைபண்ணிவி
29. ச்சு குடுக்குறோமென்று உத்திறவு குடுத்தபடியினாலே அ
30. ந்தப்படிக்கி உத்திறவு வாங்கிக்கொண்டு போயி அவ
31. னுடைய கோட்டையைப் போயி வளைஞ்சு காவுலவ வி
32. சையகாளிராய கவுண்டனையும் அவன் சனத்தையும் சம்
33. மாறஞ் செய்து வெற்றிகொண்டு வந்தபடியினாலே றம்ப[6]
34. வு சந்தோசப்பட்டு அனேக வெகுமதியுங் குடுத்து கொற்ற
35. னூருக் கிராமம் ஆம்பிறாவதிக்குந் தெற்கு மூலனூருக் கிராம
36. த்து எல்லைக்கு மேற்கு பொன்னிவாடி கிறாமத்து யெல்லை
37. க்கு வடக்கு தாறாபுறங்கோட்டை ஆம்பிநாவதிக்குங் கிளக்கு
38. யிது மத்தியிலுள்ள நீலம்பேரூர்க் கிறாமம் உனக்கே காணி.
39. நிலமை பண்ணிவிச்சுக் குடுத்த தாம்புற சாசனப்பட்டைய
40. ம் யிதுக்கு சாச்சி கொற்றனூர்க் குழாயகுலம் வேலாயுத
41. க் கவுண்டன் ஆந்தை.குலம் அவிநாசிக் கவுண்டன் சேற
42. குலம் அமறாபதிக் கவுண்டன் செம்பூத்த குலம் சுந்தற
43. ப்ப கவுண்டன்
44. அப்பரமேசுபரர் பாதமே துணை.[7]

1. ஆவணம் இதழ் 18 (2007)ல் பக்கங்கள் 108–109இல் வெளியாகியிருக்கிறது.
2. 'வணங்கு' என்று படிக்கவும்.
3. 'சூழ்ந்த' என்று படிக்கவும்.
4. 'வல்லாள' என்று படிக்கவும்.
5. 'சிறிது' என்று படிக்கவும்.
6. 'ரொம்பவு' என்று கொள்ளவும்
7. இச்செப்பேடு பற்றிய ஒரு கட்டுரையை இந்நூலாசிரியர் "கனல்" செப்டம்பர், 2007 இதழில் எழுதியிருக்கிறார்.

## ஆ - 6. புரவிப்பாளையம் செப்பேடு

ஸ்வஸ்தி [॥*]ஸ்ரீமன் மகா மண்டலீசுவரன் அறியதளவிபடான் ஒட்டிய மோக[ர*]ன் த்விர்த்தான் ஒட்டிய தளவிபாடன் ஆரிலொன்று கடமை(க்) கொண்டு அருள் பெருகி அன்பு சூர்ந்து ஆது[ல*]ர் சாலையும் அந்தணர் வெள்வியும் வெதவொலியும் விளாவ(ா)[றா]வீதியும் தபொதன மடங்களும் தற்ம்ம சாலையும் யிச்[ை*]சயில் முப்பத்திரெண்டரமும் தீர கொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீரன் ராச மனோபயங்கரன் ராசகுலதீரன், கடல் கலங்கிலும் காவேறி வற்றிலும் மலை யலுங்கிலும் மனங் கலங்காத[சு]ண்டன், கண்டனாடு கொண்டு கொண்ட னாடு குடா தான், சொல்லுக்கு அரிச்சந்திரன், அளகுக்கு அனங்கன், அறிவுக்கு அகத்தியன், பொருமைக்கு தற்மன், பொறுதுக்கு வீமன், வில்லுக்கு விசயன், பநிவுக்கு நகுலன், சாத்திரத்துக்கு சகாதேவன், அரசுபதி, கெசபதி, நரபதி, தனபதி யாகிய மகாராச ஸ்ரீ சூரியகுல தீரனாக திருவாலூரில் விக்கிர சேரன்,[1] சந்திர குல தீரன் மதுரையிலும் பாண்டிய ராசா, அக்கினி குலதீரன் தாராபுரத்திலும் சேறம் பெருமாள் முல[2] ராசாக்கள் ராச்சிய பரிபாலனம் செயிகின்ற நாளையிலும் சோளராசா விக்கிரமன், கனகசபை பெரியமுதலி பண்டிதற்க்கு யெளுதிக்குடுத்த விபரம் யென்னவென்றால்:

கலியுக சகாபுத்தம் தளளயசு-(1714)[க்கு] மேல் செல்லா நின்ற விரோதிகிருது ஹு அற்பப்பிசை மீ யச14--ம் தேதி குருவாரம் திசமியும் அசுபதி நட்சத்திரமும் ஆயுட்ஷ்மனாம யோகமும் கையிதலா கரணமும்[3] பெற்ற சுபதினத்தில் கனகசபை பெரிய முதலி பண்டிதற்க்கு விக்கிறம சோளன் யெளுதிக் குடுத்த சாசனம் யென்ன வென்றால்: அப்பற் சுந்தரற் மாணிக்க வாசகற் யிவர்கள் மூன்று பேரும் தில்லைக்கு வந்து கனக சபை பெரிய முதலி பண்டிதற் யிடத்திலே வந்து உபதேசம் கொண்டாற்கள். செல்லா பணம் செலுத்தி பிள்ளையும் சீகாளியிலெ வை(ய்)த்தார் என்றும் அப்படிக்கொற்ற கனகசபை பெரியோற்க(ள்)ளிடத்தில் சேரம் பெருமாள் பாண்டிய ராசா சோள ராசா யிவர்கள் முதலான ராசாக்களும் அந்தக் கனகசபைப்பதி பெரிய முத[ன்*]மையாராகிய பண்டிதற் கிட்ட தீட்சை திருமுடியும் வணங்கிக் குடுத்து உடல், பொருள், ஆவி மூன்றும் கனகசபை பெரிய முத[ன்*]மை பண்டிதருக்கு தாரா [ர*] பூற்வமாக யெளுதிக் குடுத்த சாசனம் யென்னவென்றால்:

நம்முடைய நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை பூர்வ பிறதிஷ்டையும் உத்தர பிறதிஷ்டையும் உத்ஸவங்களும் தீட்சைத் திருமுடியும் முதலிமார் வெள்ளாளற் பிள்ளைமார் யிவர்களுக்கு தீட்சையும் கிணபதி துற்க்கை கொவில் பிறதிஷ்டை, உச்சவங்கள், சாந்தி, சம்பொறோஷணை, யிது முதலாகிய தெல்லாம் நடப்பிவிச்சுக்கொண்டு வாருங்கொளென்று சன்மதம்ச் சைவாச்சாரத்துக் குள்பட்ட[4] பேரையும் தெண்டினை, பாண்டினை, ஆணை, ஆக்கினை யெப்பேர்ப்பட்டதும் நீங்களே விசாரியுங்களென்றும் அனேகம் விருதுகள் கொடுத்து ஆனையின் மேல் பட்டணப் பிரவேசமும் செயிவிச்சு பச்ச பல்லாக்கும் பகல் தீப்பட்டியும் உபய சாமரம் றெணபாஷி சுகமும் வெங்கல பேரிகையும் ரணவீர சின்னமும் சந்திர சூரிய வாத்தியமும் நாற் கெச வாத்தியமும் யிது முதலாகிய சகலமும் கொடுத்து, தலங்கள்தோரும் பிறதிஷ்டை உச்சவங்களும் நடத்திக்கொண்டு, **சேரம ராசாவும் யிந்த கனகசபை பெரிய முதலியாகிய பண்டி தரு மக்கடப் பேருராகிய பட்டியார்க் கோவில் பிறதிஷ்டையும் அரசம்பலவாண சுவாமி பிறதிஷ்டையும்** செயிது யிருக்குற காலத்திலே, பெரிய பூவல்லாற்ராகிய கவுண்டற் குடி பயலாள் ராச்சியத்திலே யிவற்கள் கூட யிருப்பாற்கள். அப்படி யிருக்குறபோது ராமேசுவரத்திலிருந்து **விசய ரங்க சொக்கலிங்க னாயக்கன் திருவாலூற் மதுரை தாராபுரம் யிந்த ராச்சியங்களை கட்டிக் கொண்டாற்.** அவர் காரியத்துக்கு கற்த்துவாகிய அளகேந்திர நாயக்கன் திருமலை நாயக்கன் யிவற்களை அளைக்க செயிது ராச்சியத்துக்கு விசாரிப்புக்கு வந்தால், அளகாத்திரி னாயக்கன் பேரூறுக்கு வந்து சுவாமியை தண்டம் பண்ணிக் கொண்டு யிருக்கிறபோது அப்ப அம்பலவாண சுவாமி அவர் சொற்ப்பனத்தில் சாதிச்சாற். சொற்ப்பனம் யென்ன வென்றால், 'நமக்கு[ம்*] உன்னடைய அம்மாளு[க்கும்*] யிருப்புக்கு யிடமில்லையே. நீய் நமக்கு தலமுண்டாக்கி வைத்தால் உக்கு சாயுட்சிய பதவியும் நம்முடைய கிட்ட வைச்சுக் கொள்ளுரொம்' என்று சொற்ப்பனம் சாதிச்சார். அப்ப ராச்சியத்திலுள்ள பணம் உள்ளது மூன்று வருஷம் யெடுத்து ஆயிரக்கால் மண்டபமும் அம்பல வாணற் சபையும் உண்டாக்கி வைத்து அதற்கு பிறதிஷ்டையும் செய்யவெணுமென்று யோசித்து யிருக்கிற காலத்துலே அப்ப **பூவல்லவராகிய பூமி பாலகராகிய யிம்முடிப் பட்டம் கொப்பண மன்னாடியாற்** அப்ப அவர் வெள்ளியங்கிரி நகரம் குரிஞ்சி நகரம் யென்று சொல்லப்பட்ட நகரத்திலெ கோட்டை கொத்தளம் ராச்சிய பரிபாலனம் செயிதுக்கொண்டு யிருக்குறார். அவர் சீற்மை ஆனைமனை சென்னிமலை ஒதி குருந்த மலை மருத மலை மந்திரகிரி மலை

பொன்னூதி மலை சிவ மலை யிந்த சீற்மையிலுள்ள சிவதளம் விட்டுனுதலம் குமாரதலம் அமணீசுர சுவாமி தலம் அமணெசுர சுவாமி தலம் சுவாமிகாரியம் பிறாம்மண காரியம் மெற்குக் கரும்பிள்ளைக்கு கிளக்கு யிதிலுள்ள தேவதாயம் விருமதாயம் வரைகடறாமல் நடத்திக் கொண்டு யிந்த சீற்மையிலுள்ள பணம் சுவாமி பணம் மகமை பணம் யிந்த திரவ்வியங்களும் தானே அனுபவிச்சு சுவாமி காரியம் நடப்பிவிச்சுக்கொண்டு வருங்காலத்திலே யிந்த அளகேந்திர னாயக்கன் யிந்த யிம்முடிப் பட்டம் முத்துவேல்மணி சந்திர கொப்பண மன்னாடியாரையும் அளைக்கச் செயிது பெரூரிலே பட்டீசுர சுவாமியும் அம்பலவாணர் சுவாமியும் பச்சை மரகத வல்லி அம்மனையும் பிறதிஷ்டை நடப்பிக்க வெணுமென்று அளகெந்திர னாயக்கன் இம்முடி பட்டம் கொபண மன்னாடியார் யிவர்கள் ஆயிரம் பெற் குருக்கள்மார் வருத்தி ஆயிரம் யாகசாலையும் கட்டி யிந்த காணிய காணியாழ் இம்முடிப்பட்டம் கொபண மன்னாடியாரும் முகூர்த்தம் செயிவிச்சு யிந்த கனக சபை பெரிய முத[ன்*] மையாகிய பண்டிதர்க் கிட்ட முகூர்த்த தேங்காயும் குடுத்து ஆடையாபரணமும் குதிரைப் பல்லாக்குகளும் ஆனையின் பெரில் பட்டணப் பிரவேசமும் செயிவிச்சு குருக்களுக்கு சகல விருதுகள் குடுதது யிந்த கனகசபை பெரிய முதல் பண்டிதற்க்கிட்ட யிந்த அளகேந்திர னாயக்கன் கொபண மன்னாடியார் தீட்சை திருமுடியும் உடல், பொருள், ஆவி, மூன்றும் உமக்கே அடிமையாக யிருக்கிற காலத்தில் யிவர்கள் மூன்றுபேறும் மதுரைக்குப் போயி விசயரங்க சொக்கலிங்க னாயக்கரை சமுகத்தில் கண்டு; அவர் யிவற்களைப் பார்த்து அதிக சந்தோஷமாக யிம்முடிப் பட்டம் முத்துவேல் மணி சந்திர கொப்பண மன்னாடியாருக்கு உத்திரமும் கட்டு செயிது சதுரங்க பிலங்களும் கூடி அனுப்பின விடத்தில் புத்தி உத்திர பிரகாரத்துக்கு மலைச் சாறலிலுள்ள பாளயப்பட்டு முதலாகிய பெரையும் ஒட்டமிட் டடக்கி வைத்து உப்பெளு பாளையப்பட்டு உள்ள பேரையும் கை சேத்தி தாஷ்டீகமா யெடுத்து நின்ற தரியலரையும் குத்தி குலவையிடத் தக்கதாயும் மருவலரை வணங்கத் தக்கதாகவும் ஆராயிரத்தெளுனூறு பேரையும் சங்கரித்து கொப்பம் செத்திக் கொண்டு இருனூத்தி முப்பத்தஞ்சு ஆனையும் கைக் காணிக்கையாக மதுரைக்கிப் பொயி மகாராசா ஸ்ரீ யவர்கள் சன்னியதானத்தில் விண்ணப்பம் செயிதுக்கொண்ட விடத்தில் மெத்தவும் சந்தோஷித்து யிப்பேர்க் கொற்ற வீர சூரனாகிய முத்துவேல்மணி சந்திர கொப்பண மன்னாடியாற்க்கு அனேகம் உடுகரையும் கட்டு செயிது ஆனையின் பேரில் பட்டணப் பிறவேசம் செயிது பச்சப் பல்லாக்கும் பகல் தீவெட்டியும் உபய சாமரம் ரண

பாஷக்கமும் முத்து துராயும் செங்கோல் முத்திரையும் வட்ட வாளும் கட்டக் கயிறும் வெங்கல பேரிகையும் ரணவீர சின்னமும் சந்தர சூரிய வாத்தியமும் நரகெச வாத்தியமும் யிது முதலாகிய தெல்லாம் கட்டு செயிவித்து அய்யாயிரம் பிலங்களுக்கு சம்பளம் உத்தாரமும் குடுத்து யிது நால்ப்பாங்கு யெல்லைக்குள் பட்ட காஞ்சி நதித் துரந்த வெள்ளியங்கிரி நகரத்திலிருந்துக் கொண்டு நஞ்சை புஞ்சை மாவடை மறவடை ஆனை வாய்க்கால் முதலியதெல்லாம் தேவதாயம் விருமதாயம் உள்ளிய மானியம் தெருத் திருனாள் கட்டளை மதுரை அஸ்தாநதிரத்துக்கு ரொசு[5] குத்தகையாக வருஷம் ஒன்றுக்கு சுத்த திருவால சக்கிரம் அ௰௩த (83000) பொன் வருஷம் ஒன்றுக்கு வயல்களிலே நெல்சலகை.... 50700 சலகை விக்கும் தாரணை மேரைக்கு கிரயம் சகிதமாக'கொடுக்கத் தக்கதாக கட்டுச் செயிது யிந்த சீற்மையிலுள்ள சுங்கம் மகமை சகிதமாக அனுபவிச்சுக் கொண்டு செங்கோல் வரை வளுவாமல் சுவாமிக் காரியம் முக்கியமாக நடந்துக்கொள்ளச் சொல்லி உடுகரை வெகுமதியும் குடுத்து உப்பெறாபாளையப் பட்டிலுள்ள பேரையும் கை சேத்தி யிவர்களுக்கு பெரிய முதமையாகிய பெரிய வீட்டுக் காரனாகிய நடந்துக்கொள்ளச் சொல்லி மகாராச ராச ஸ்ரீ யவர்கள் அப்பணை யானபடியினாலெ அதுவே மேரைக்கு தலத்தில் வந்து சுகமே யிருந்துக் கொண்டு அப்படியிருக்குற னானையிலே குருக்கள்ளுக்கு மானியம் வெள்ளியங்கிரி நகரத்திலே ருய-(50)மா னிலமும் குரிஞ்சி நகரத்தில் எ(7) மாநிலமும் பேரூரிலே யங(13) மாநிலமும் திறக் கொண்டருளிய யிருக்கிற காலத்திலே பெரிய களிஞ்சி நகரத்தில் மூணு மிடாக்காடும் ஆறு தோட்டமும் யிப்படியிருக்கிற காலத்திலே வருஷம் பிறதியில் வைய்யாபுரிக்கு தை விருவிளாவுக்கு பழணி யாண்டவர்தரிசினமாகப் போயிருந்த விடத்தில் **விசயகிரி வெல. சின்னோபனாயக்கன்** எங்களுக்கு விருந்து உண்ணச் செயிது வினவினப்படியினாலே கோவித்து கண் சிவந்து கொக்கரித்து தாற்ப்பரித்து ஆண்டவர் திருவிளப் பிரீதியினாலே யெல்லை தாட்டி கிணத்துக்கடவுக்கு வந்து மூன்று நாள் ஆறு பொளுது அன்ன ஆகாரமில்லாமல் யிருந்தபடியினாலே ஆண்டவர் கிருபாகடாக்ஷம் வந்து களிகூர்ந்து திருவிளம்பற்றின விபரம் ஆகையால் இவிடத்திலுள்ள மலையில் குருமரத்தடியில் பாத தாமரையும் பதித்து நிலை கொண்டு...... பால் பொன்மலை யாண்டவற் றென்றும் நிலையாக யிருப்பதாக ஆனபடியினாலே கொவில் கட்டி சுவாமி தண்டாயுதபாணியும் உண்டாக்கி இந்த சுவாமி பிறதிஷ்டை னாட்டாண்மை அளகியக் கவுண்டனை அளைக்கச் செயிது யிந்த கனக சபை பெரிய முதல் பண்டிதரை அழைக்கச் செயது யிந்த சுவாமி காரியம் அஷ்டபந்தனம்

பிறதிஷ்டையும் செயிவிச்சு அவர்கள் யிடத்தில் உபதேசம் செயிவிச்சுக் கொண்டு யிந்தக் குரு புத்திரனாகிய பூமி பாலகர் இம்முடிப் பட்டம் கொபண மன்னர்டியால் புத்திர மித்திர களத்திராதிகள் உள்ள வரைக்கும் உடல், பொருள், ஆவி மூன்றும் குருவுக்கெ தாராதத்துவமாக தெத்தம் செயிது மானியம் குருக்கப் பாளயத்திலே யிருனூற்றி யிருவத்தி னாலு வள்ளக் காடும் யிதுக்கு சிலாசானமும் மதுக்கரை ஒபளியில் தொண்ணுற்றி ஆறு வெள்ளக் காடும் சிவியாருக்குக் குடுத்து அதுக்கு சிலாசாசனமும் யிந்த பிரகாரத்துக்கு நடந்து அதுவெ மேரைக்கு செப்பிலும் சிலையிலும் வெட்டிக் கொண்டு யிந்த தற்ம்ம சாசனம் யெப்ப வென்றால்: கலியுக சகாப்தம் 4367க்கு மேல் செல்லா னின்ற ஆனந்த வருஷம் தை மாசம் ௳ (20) தேதி திரயோதசியும் வெள்ளிக் கிழமையும் சோதி நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில் யெளுதின சாதனம் யென்னவென்றால்; யெங்களுக்கு உள்ள சாமிதிக வெங்கிட்ட கிரஷ்ட்டணய்யன் கணக்கு தாணப்ப முதலி அளகிய கவுண்டன் ராய கவுண்டன் பாரப்பத்தியம் கொபாலய்யன் சென்பொக சுப்பய்யன் கணக்கு முத்துவேல் பிள்ளை சின்னதம்பி கவுண்டன் கெங்காதரம் பிள்ளை பெரிய கமாரசாமி கவுண்டன் பழணிக் கவுண்டன் குப்பாண்டா கவுண்டன் பேரூறு சிதம்பரம் பிள்ளை சங்கரலிங்க கவுண்டன் பின்னும் நாட்டிலுள்ள பேற்சம்மதமாக ஒத்தைக் கால் மண்டபத்தில்[6] புத்தி [ட*]ங் கொண்டீசுரருக்கு மானியம் ௳ வள்ளக் காடும் அவட்த்தில் சுவாமி காரியத்துக்கு முக்கால் பணம் மகமையும் கனகசபை பெரிய முதல்ப் பண்டிதர்க்கு கால் பணம் மகமையும் பொன் மலை யாண்டவருக்கு முப்பத்தினாள் முரையும் நீங்களே அனுபவிச்சுக் கொண்டு சிவஸ்தலம் கிணபதி துற்க்கை ஒரு யிடத்தில் யியெளு தொறு ஒரு யிடத்தில் பிறந்தாலும் நீங்களே யனுபவிச்சுக் கொண்டு வரவும். உமக்கு நாங்கள் அடுமை யானதினாலே சந்திர சூரியற் உள்ளவரைக்கும் ஆகாசம் பூமி உள்ள வரைக்கும் யிந்த தற்மத்தை அனுபவிச்சுக் கொண்டு வரவும். யிந்த தற்மத்தை பரிபாலனம் செய்த பேற்கள் அனேக அயிசுவரிய சம்பன்னராகி தேவ தத்துவத்தை அடைந்து சாயுசிய பதவி யடைவார்கள். யிந்த தற்மத்துக்கு யாதாமொருத்தன் விகாதம் செயித பேற்களுக்கு காசிட்சேத்திரத்தில் கெங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற பாவங்களிலே போவான். யின்ன[ம்*] தொண்ட[க*]ாரண்யத்திலெ யிருந்து பிறந்து கொந்தூவாராயி அனேக நரகத்தை அனுபவிப்பார். யின்ன[ம்*] சதி ஆருண்ணதி பிச்சாசாயிருந்து அனேக நரகத்தை அனுபவிப்பாற்கள். யிந்த தற்மங்களை வரை கடறாமல் நடத்திக் கொண்டு வந்த பேற்களுக்கு

பொன்மலை வேலாயுத சுவாமியாறவர்கள் வேண்டிய பாக்கியத் தையும் புத்திர மித்திர கழத்திரிகளுங் கொடுத்து ரச்சிப்பாக்கள்.... தீத்தான் பெரிய மூர்த்தி யென்றும் தேசிகனை காற்த்தாவும் வெள்ளி நகரில் மூத்தாலும் மெஞ்ஞா[ன*] முத்தி தரும் விதத்தை நினைடையாற் நீதி நிரை வெள்ளி நகரில் நினைத் தவனாசியப்பர் பாத மலர் பாதம் வணங்கி நோறக்குனெ சாப்புர புவியேலும் யாற்க்கு சகாயமும் ஆதரவுமுண்டாம். செறக்கு அதிகபாத மரவை தரு கனக சபை தன் பெரிய முதறியென்றும் குரு பாதத்தில் தெரிசின தீர்த்தம் கொண்ட காலையில் திரு நகனாகிலும் மதிபதியாகிலும் தெவர்களென்றும் மணவார்களாகிலும் மேவிய பண்டிதரான குருவெ கனகசபை பெரியமுதல் பண்டிதர் திருனாரு செய்யவும்.... சிவமயம்.[7]

---

1. ‘விக்கிரம சோழன்’ என்று படிக்கவும்.
2. ‘முதலிய’ என்று படிக்கவும்
3. ‘ஆயுஷ்மான் நாமயோகமும் தைத்துலா கரணமும்’ என்று படிக்கவும்.
4. ‘ஷண்மத சைவாசாரத்துக்குள்பட்ட’ என்று படிக்கவும்.
5. ‘ஆஸ்தானத்துக்கு ரொக்க’ என்று வாசிக்கவும்.
6. ‘ஒத்தைக்கால் மண்டபம்’ என்ற பெயர் கொண்ட ஊர் ஒன்று கோயம்புத்தூர்த் தாலுகாவில் இருக்கிறது.
7. இச்செப்பேடு தெ.இ.கோ. சாசனங்கள், பாகம் 3, பகுதி-1இல் சாசனம் எண் 1187 ஆக பக்கங்கள் 1175-1188களில் வெளியிடப் பட்டிருக்கிறது. கி.பி. 1792.

# ஆ - 7. பேரூர்ச் செப்பேடு

## பேரூர்ச் செப்பேடு

திருவாரூர் சூரியகுல சோழரும், மதுரை சந்திரகுல பாண்டியரும், தாராபுரத்தில் அக்கினிகுல சேரரும் ஆட்சி புரிந்தபோது, வேட்டுவர் பேரூரில் கோயில் மற்றும் மடம் கட்டிய செய்தி இச்செப்பேட்டில் உள்ளது. இச்செப்பேடு தற்போது பேரூர் சின்னக்கோயில் செந்தில்நாத குருக்கள் வசம் உள்ளது. வேட்டுவர் ஐந்து குலங்களில் பூவிலுவர் பிரிவைச் சேர்ந்த புரவிபாளையம் முத்துவேல்மணி சந்திரகோப்பண்ண கவுண்டர் அவர்கட்கு மூவேந்தர் ஒன்றுகூடி மும்முடி பட்டம் தந்து பல சிறப்புகளும் செய்தனர். ஆட்சி செய்ய சீமையும் தந்தனர். இவர் களந்தை ஆதிபுராணலிங்கேசுவரர் கோயில் திருப்பணி செய்ததுடன் தமக்குரிய குலகுருவையும் நியமித்துக் கொண்டார். சோழ விக்கிரமசோழன், பாண்டியன் கூன் பாண்டியன், மற்றும் சேரன் பதுருணசேரன் கூறப்படுகின்றனர். சீர்காழியில் மூவாயிரம் சமணரை அக்கினியினாலே அழியப்பண்ணிவித்த செயல் இதில் வருகிறது. இவை யாவும் உயர்வு நவிற்சியாகும். கனகசபாபதி பெரிய முதலாகிய பண்டிதர் பெயர் வருகிறது.[1]

---

1. இச்செப்பேடு, "தமிழ்நாட்டுச் செப்பேடுகள்," தொகுதி II -இல் பக்கம் 328-இல், நூலாசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தியால் வெளியிடப்பட்டிருக்கிறது. இது சற்றேறக்குறைய புரவிப் பாளையம் செப்பேட்டை ஒத்திருக்கும் போன்று தெரிகிறது. ஆகையால் இதன் காலமும் கி.பி.18-ஆம் நூற்றாண்டாகலாம்.

## ஆ - 8. ஔவையார் குப்பம் செப்பேடு

1. கணபதி துணை காமாஷி துணை சொஸ்த்தஸ்ரீ ரிவகயற்ராயார்பூத சாலிவாகன சாகாற்.

2. ... ௵ 1222 கலியுகதாபிதா ௵ 1423 யிதுக்கு மேல் செல்லா னின்ற சற்வதாரி

3. ௵ வைய்யாசி மீ 23 தி சுக்ற வாறம் அஷ்டமி பூரட்டாதி னஷ்த்திறம் சுபனாம யோகம் யிந்த சுபதினத்தில் சாதன பட்

4. டையம் யெழிதி குடுத்த விபறம் யென்னமென்றால் யிடங்கய்யார் விபறம் தெரிவிப்பது சோமசுந்திற அக்கினி கோத்திற

5. தில் னன்மையாய் பிறம்மா வசிய னகறத்தார், செங்கொந்தம், தேவேந்திற பள்ளன் கோசங்கிறயன் தேரோடும் வி

6. அரியராய விபாடன் பாஷைக்கு தப்புவறாத கண்டண் மூவறாய கண்டண் கண்டனாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்

7. துலுக்கர் தள விபாடன் துலுக்கர் மோகந் தவிற்த்தோன் ஒட்டியர் தள விபாடன் ஓட்டியர் கொட்டந் தவித்தோன் பின் மண்

8. டலமுங் கொண்ட ராஜாதிராஜன் ராஜகெம்பீரன் அஸ்பதி கஜபதி ராஜகோபாலன் ராஜபறமேஸ்பரன் ராஜ

9. மாற்தாண்டன் யிந்திற துறந்திறன் துரந்தரன் அஷ்ட மனோகர இறயன் அசுராண விருது கோடி படைத்தவு

10. ரான நரபாலன் கோதண்டராமன் கலியுகயிரான கண்ணன் வாளுக்கு பீமன் தோளுக்கு அபிமன்னன் குணத்து

11. க்கு தர்மன் அழகுக்கு அர்சுனன் அமர்ந்தாகு அரிச்சந்திரன் ஆன்மைக்கு அனுமான் ஆக்கிணைக்கி சுக்கிரீபன்

12. கொடைக்கி கர்னன் செல்வத்திர்க்கு அதலாகேசூரன் பலத்துக்கு வாயு பகவான் உலகத்துக்கு கதிரோன் உலா

13. வும் உலகமெல்லாம் படைக்க நினைத்ருளிய வீராதிவீர வன்னியப் பிரதாபன், கிருஷ்ணதேவ மகாஇிராயர்,

14. அச்சுதேவ மஹாஇிராயர், புஜபலதேவ மஹாஇிராயர், திருமலை தேவ மஹாஇிராயர், நரசிங்கதேவ மகாஇிரா

15. யர், இிராமதேவ மஹாஇிராயர், பிரவிடதேவ மஹாஇிராயர், மல்லிகா அர்சுனாதேவ மஹாஇிராயர், பிரதிவி ரா

16. ஜ்ஜிய பரிபாலனம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1563 யிதர்க்குமேல் நின்ற ஆங்கிரஷ

17. ஷ மிதுன மாஷத்து பூர்வ பஷ்ஷத்து அஷ்டமியும் பூரட்டாதி நக்ஷத்திரமும் பெற்ற சோமவாரம் நாள்

18. வடகரை விருதப பசங்கற' வளநாட்டுக்கு மேற்கு நாடு யிருங்கோள பாண்டிய வளநாடு தொண்ட மண்

19. டலம் சோழ மண்டலம் பாண்டிய மண்டலம் கொங்கு மண்டலம் யிந்த நாலு மண்டலத்திற்கு

20. அழகான தொண்டா வளாநாடுக்கு அழகான காஞ்சி நாடு திரு காமாஷி அம்மனுக்கு அவள் சன்ன

21. திக்கி. °9°* சாதிக்கும் வன்னியர் மனுமாண்டி ஆசாரி °1000°*2 கோத்திரம், தேவேந்திர பள்ளன் யிவர்

22. கள் எழுதி குடுத்த ஒண்டிபுலி றாமசாமி நாக்கனுக்கு யிவர்கள் யிடங்கை °9°* பாணத்தாரும் கூடி

23. காஞ்சிபுரம் காமாஷி தேவிக்கும் ஏகாம்பர யீஷ்வரருக்கும் திருக்கல்லியாணம் உபயமும் நடத்தி வரும்

24. நாளையில் வலங்கையாருக்கும் யிடங்கையாருக்கும் சச்சரவுபட்டு யிந்த காமாஷி உபயத்தை எ

25. ங்களுக்கும் பேர்பாதி குடுக்க வேணுமென்று வலங்கையார் கேழ்க்க யிடங்கையார் எங்களுடைய உபயத்

26. தை வலங்கையாருக்கு தரமாட்டோம் என்று சொல்லிநாற். ஆனால் உங்களுடைய ரதம் எங்கள் வீதிக்கி வ

27. ற கூடாது என்று சொன்னாற். அதற்கு மின்னோர்கள் நடத்தினபடிக்கி நாங்கு னடத்தி வருவோம். அதில் யி

28. டங்கையாருக்கும் வலங்கையாருக்கும் உத்தங்கள் செய்து சண்டை நேரிட்ட படியால் வலங்கையா

29. ர் படையில் உயிர்ச் சேதம் ஆய்விட்டது. படையில்லை யிடங்கையாருக்கு படைகள் சாஷ்தி. வலங்கையா

30. யார் மதிக்காமல் போய் விட்டார்கள். கெவர்மெண்டார் **வலங்கையாருக்குச் சொன்னது உங்களுடைய வல்**

31. **லமை சூதால் தேறை நிருத்தி விட்டால்** அப்போது அவர்களை நாங்கள் தெண்டித்து விடுகுரோம் என்

32. று கெவர்மண்டார் சொன்னாற். வலங்கையார் எந்த விதத்தில் தேறை நிருத்தலாமென்ற யோசித்தார்கள். அ

33. ப்படி அல்ல நம்ப வலங்கையாரை யாரையாகிலும் மந்திரம் கற்றவரைக் கொண்டு வந்து தேரை விடாமல் படி.

34. க்கி நிருத்தி விட்டு கெவற்மண்டார்யிடம் பிரையாது குடுத்து விடுவோம். அதர்க்கு அவர்கள் என்ன தெண்டிக்குரார்

35. களோ தெண்டிக்கட்டும் என்று வலங்கை சேணியன் ஏரப்பட்ட பல்லாக்கு பூதம் எடுக்குரது. அவன் நெய்யப்

36. பட்ட தரியானது பூதம் நெய்குரது. அப்பேர்ப்பட்ட பூத வசியகாரனைக் கொண்டு வந்து நடுத்தெருவில் வந்த தேரைபூ

37. தத்தை விட்டு நிருத்தி விட்டான். அந்த பூதத்துக்கு ஆகாரம் ஆருமாதம் தலசன் பிள்ளைகாரியும் கன்னியஸ்

38. ரியும் °7° ஆணை °7° ஆட்டுக்கெடா °7°³ அண்டா சாதமும் போயி குடுத்து பிண்ட பிரசாதம் குடுக்குரேன் என்று சே

39. ணியன் பூதங்களுக்கு பிரதிக்கினை செய்து தேரை நிருத்தும்படி பூதங்களை அனுப்பி தேரை நிருத்தி விட்டான்.

40. வலங்கையார் கெவர்மெண்டார் யிடத்தில் பிரையாது குடுத்து விட்டார். கெவர்மெண்டார் யிடங்கையாரை வர

41. வழைத்து வாக்கு மூலம் விசாரித்து யிடங்கையார் சொல்லுகுறார் வலங்கையாருடைய சூது மார்க்கத்தினால்

42. எங்களுடைய தேரை நிருத்தி விட்டான். யிடங்கையார் கெவர்மெண்டார்யிடம் எங்களுக்கு ஒரு மாசம் லீவு குடு

43. த்தால் எங்களுடைய யிடங்கையில் யாராகிலும் கொண்டு வந்து தேரை ஓட்டிக் கொண்டு போகுரோம் அப்படி ஓ

44. ரு மாசத்தில் ஓட்டிக் கொண்டு போகாவிட்டால் பன்னீராயிரம் பேரையும் சிரசாக்கினை செய்து கொள்ளுங்கள் எ

45. ன்று யிடங்கையார் வாக்கு மூலம் கொடுத்து விட்டார். யிடங்கையார் காமாஷி அம்மன் சன்னதியில் வந்து அனைவ

46. ரும் யோசித்து நாலு திக்குக்கும் திருமுகம் எழுதி அனுப்பிநார் மூனுதிக்குத் திருமுகம் வந்துவிட்டது. **மேற்கே மலையாள**

47. **ம் போன திருமுகம் வரயில்லை.** யிதர்கு முந்தி சின்ன காஞ்சிபுரம் வேப்பன் சேரி தெருவு வெங்கடராமநாக்கன்

48. பட்ராஜா வம்முஷத்தில் ஒரு பெண்ணை சிரை எடுத்து அதின் வயிற்றில் யிரண்டு பிள்ளையும் ஒரு பெண்ணும்

49. பிரந்து கல்வி சாலையில் வைத்தார்கள். வாசித்துயிருக்கும் நாளையில் தாய் தகப்பன் யிரந்து விட்டா

50. ர். யிவர்களை ஆதரிப்பார் யாருமில்லை யிவர்கள் தட்டார் அடுப்பு வேலை எடுத்துக் கொண்டு வேளையில் கிளம்

51. பி விட்டார். மூவரில் ஒருவன் யிரந்து விட்டான். மற்றவனும் தங்கையும் பென் மலையாளம் சேர்ந்து வித்தை

52. களைக் கற்றுக் கொண்டு மலையாளத்தில் ஒரு பெண்ணை சிரை எடுத்துக்கொண்டு தன்வித்தைகளை அந்தப்பெண்

53. ணுக்குக் கற்ப்பித்து கொடுத்து அந்தப் பெண் கற்று யிருந்த வித்தையை தான். கற்றுக் கொண்டு ஆண் மலையாளம் போ

54. ய் சேர்ந்து அந்த ராசாவிடத்தில் வித்தைகளாடி கரடிபுலிகளை வரவழைத்து பேய் கூத்தாட்டி பூமியில் புலி

55. போல் சக்கரம் எழுதி தன் பெண்ஷாதியை சக்கரத்தில் உக்கார வைத்து சாட்டுக்கூடை மூடி மந்திரம் சொல்லி திரந்

56. தான் அந்த பெண் புலியாய் விட்டது. அந்த ஒரு புலியை ஆட்டவைத்து ராஜாவிடத்தில் வெகுமானம் பெற்று

57. கொண்டு கொச்சி மலையாளம் போய்ச் சேர்ந்தார் ஏசோந்தர ராஜாவிடத்தில் வேண்டிய வித்தைகளாடி தன் பெண்

58. ஷாதி பாலா ளஷ்ஷிமியை புலி ஆக்கி ராஜாவிடத்தில் ஆடவைத்து வெகுமானம் பெற்றுக் கொண்டான்.

**இரண்டாம் பக்கம்**

1. அவனுடைய நாமதேயம் ராமசாமி நாக்கன் பென்ஷாதியை புலிரூபமாய் ஆட்ட வைத்ததில் சிம்ப அனுமந்தன் ஒ

2. ண்டிபுலி நாமதேயம் ராஜா வைத்தார். காஞ்சிபுரத்தில் யிருந்து திருமுகம் கொச்சிக்கு வர யிடங்கையாரும் வலங்

3. கையாரும் ராஜாவிடத்தில் சென்று இந்த திருமுகத்தை வாசித்து ஒண்டிபுலியை அழைப்பித்து காஞ்சி காமா

4. ஷி தேரை உன்னால் ஓட்ட முடியுமா என்று கேட்டார்கள். அதர்க்கு ஒண்டிபுலி நான் ஓட்டி வைக்குரே

5. ன் என்று சொன்னான். வலங்கையார் இந்த ஒண்டிப்புலியை அனுப்பினால் எந்த விதத்திலும் தேரை

6. ஓட்டி விடுவர்ன் என்று நம்ப வலங்கையாருக்கு அபிமானம் வரும் அனுப்பதகாது என்று சொல்ல இடங்கையார் உ

7. ங்களுடைய வம்முஷமாய் இருந்தால் அனுப்ப வேண்டாம் எங்கள் வம்முஷமாய் இருந்தால் அனுப்புஓம் உடனே

8. ஒண்டிப்புலியை விசாரித்ததில் நான் இடங்கைதான் என்று சொல்ல இடங்கையார் ஒண்டிப்புலியையும் திரு

9. முகம்கொண்டு வந்தவனையும்கூட்டி காஞ்சிபுரம் அனுப்பி விட்டார். ஒண்டிபுலி காஞ்சிபுரம் போய் அங்குள்ள

10. வன்னியர், ஆசாரிமார், செட்டிமார், செங்கொந்தர், பொச்சுக் கொள்ளர், தெலுங்கெடையர், குரும்பெடையார், ஒத்த செக்கன்.

11. தேவேந்திரப்பள்ளன், கொடும்பள்ளன், சொம்பள்ளன், கோசங்கி இந்த ஒன்பது பாணத்தாறும் ஒண்டிப்புலியை

12. பார்த்து சந்தோஷப்பட்டு முப்பத்திரெண்டு விருது 18 ஆயுதமும் குடுத்து காஞ்சி பட்டணம் சுத்திவர சொன்னா

13. ர். அப்படி ஒண்டிப்புலி சுத்தி வரும்போது வலங்கை சேணியன் 12 விருது கட்டிக் கொண்டு அவன் எதிர்பட்

14. டான் ஒருவர்க்கு ஒருவர் உத்தம் செய்து கெவர்மாண்டார் இடம் போய் விழுந்தார்கள். கெவர்மண்டார் இருவரையும்

15. பார்த்து உங்களுடைய வித்தைகளை ஆடுங்கள் பார்ப்போம் என்றார். இவர்கள் வித்தைகளை ஆடினார். ஒருவருக்

16. கு ஒருவர் தோர்ப்பு இல்லை என்று கெவர்மண்டார் சொல்லுகுறார் உபயத்தை சம பாதியாய் போங்கள் என்று கெ

17 வர்மண்டார் சொல்ல அதற்கு ஒண்டிப்புலி வித்தை ஒருவர் பங்கு அல்ல சத்தியத்தில் விடவேண்டும் கா[மா]

18. ஷி அம்மன் சன்னதியில் இரண்டு சூலத்தை நட்டு °32° விருதும் காமாஷி உபயமும் வலங்கையானுக்

19. கு செல்லும் என்று சூலத்தின் மேல் படுக்க வேண்டும் ஒண்டிப்புலி ஒரு சூலத்தின்மேல் படுக்க வேண்டும் இதில் யார்

20. உயிர்ரோடு இருப்பவனுக்கு உண்டு. இருவரும் இரண்டு சூலத்தின் பேரில் படுத்தார்கள். சேணியன் இரந்து விட்டான். ஒ

21. ண்டிப்புலி சூலத்தை விட்டு இரங்கி கோர்ட்டாரையும் இடங்கை யார்ரையும் சருணம் செய்தான். **சத்தியத்தில் நீ கெலி**

22. **த்ததினால் தேரை ஒட்டிக்கொண்டு போங்கலென்று தீர்மாநித்தார் ஒண்டிப்புலி அஞ்சணம் போட்டு** தேரின் பேரில் இருக்கப்

23. பட்ட பூதங்களை தேரைவிட்டு இரங்கும்படி ஆக்காபித் தான் பூதம் எங்களுக்கு தலசன் பிள்ளை ஆருமாதம் கெர்பஸ்ரீயும்

24. கன்னிஸ்ரீ °7° ஆனை °7° கெடா °7 அண்டாசாதம் எங்களுக்குக் குடுத்தால் தேரை விட்டு இரங்குஓம் பூதம் சொல்ல இடங்கை

25. யாரை ஒண்ட்டிப்புலி கேட்க அவர்கள் நரபொலி ஒப்புக் கொள்ளவில்லை ஒண்டிப்புலி துணிந்து தன் பெண்ஷாதியை சிரசை

26. யும் தங்கை சிரசையும் அருத்து பெண்ஷாதி வயத்தில் கருவு எடுத்து °7° அண்டா சாதத்தில் °7° ஆனை உதிரம் °7° கெடா உ

27. திரம் கலந்து உருவு போட்டு பிண்டப் பிரசாதம் பூதங்களுக் குடுத்து தன் வசமாக்கி மூனு தேர் வடத்தையும் ஒன்றாக பூட்டி மூக்கி

28. ல் மாட்டி நாலு வீதியும் தேரை இழுத்து வந்து தன் நிலையில் நிருத்திவிட்டு சருணம் செய்தான். இடங்கையார் நமக்காக

29. ஒண்டிப்புலி, பென்ஷாதி பிள்ளை வெட்டி நரபொலி குடுத்து நம்ப தலையை காப்பாத்தினவனுக்கு என்ன குடுத்தால் பா

30. பம் தீரும் வேண்டிய ஊரும் வேண்டிய மானியமும் குடுத்தாலும் நிலைக்காது உடையார்பாளையம் சச்சிராயர், காஞ்

31. சி ஸ்தளம் செங்கல்ராய நாக்கர், பிச்சவரம் பண்டாரி, திருப்பதி முத்துமல்லரெட்டியார், காலேஸ்திரி திருமலை நாக்கர், வெ

32. ங்கடகிரி ஆருமுக ஆசாரி, மனுமாமண்டி ஆசாரி, சேலம் திருமலபள்ளன், முத்துப்பட்டணம் கொடும்பள்ளன், அரியலூர் சி

33. வலிங்க பத்தர், செஞ்சி ராமசாமி கவுண்டர், படவேடு முத்துசாமி கவுண்டர், முத்துப்பத்தர் இவர்கள் அனைவரும் யோசித்

34. து அவன் அய்யோவென்றால் ஏழு தலமுறைக்கும் பாபம் பிடித்துக் கொள்ளும் என்றும் பில்லும் பூமியும் சந்திர சூரியாள்

35. ஆகாஷவாணி உள்ளவரைக்கும் பிற்ம கற்பனையாய் அன்பத்தாறு தேசத்தில் உள்ள இடங்கையார் பேரில் எ

36. ழுதிக்கொடுத்த சாதீணப் பட்டையம் விபரம். வன்னியாள் தலைக்கட்டுக்கு விராகன் கால், அரிசி 3; பஞ்சாளத்தார் தலைக்

37. கட்டுக்கு விராகன் கால், அரிசி 3; சதகோத்திரம் தலைகட்டுக்கு விராகன் கால், அரிசி 3; செங்கொங்தர் தலைக் கட்டுக்கு

38. விராகன் கால், அரிசி 3; தேவேந்திரன் கொடும்பள்ளன் தலைகட்டுக்கு விராகன் கால், அரிசி 3; கொல்லர் தலைக்கட்

39. டுக்கு விராகன் கால், அரிசி 3; கோசங்கி தலைகட்டுக்கு விராகன் கால், அரிசி 3; அஞ்சி கோழி, அஞ்சி கட்டு பில், அ

40. ஞ்சி கட்டு விரகு, வன்னியாள் ஊருக்கு விருது கட்டினால் பாபந்திர ஆட்டுகிடா கொடுக்க வேண்டும். இதில் ஆறாகிலு

41. ம் பணத்தின் பலத்தினாலேயும், சேனக்கட்டு பலத்தி நாலேயும் சற்காற் பலத்திநாலேயும் வாது ஆடின பேருக்கு 1000* கோ

42. வை கொண்ண தோஷத்தில் போவார்கள். ஆயிரம் பிறமனாளை கொண்ண தோஷத்தில் போவார்கள். இந்த விருதுக

43. ளும் இந்தப் பட்டயத்தைக்யும் கொண்டு வந்த பிள்ளையை தன் பிள்ளையைப் போல் பாவித்து இந்த பட்டயத்தை

44. வாசித்த பேர்களும் தப்புப் பிழை இருந்த போதிலும் அவாள் ஆள்போல் தழைத்து அருகுபோல் வேர்ரோடி மூங்கில் போ

45. ல் முளிசித்து முசியாமல் வாழ்ந்து, நித்த கல்லியாணம் பஸ்துரனமாய் என்று சிரஞ்சீவியாய் வாழ; இதர்க்கு சா

46. க்ஷி சந்திரசூரியாள், ஆகாஷவாணி, பூமி தேவி, காமாஷி தேவி, ராமலிங்க படையாச்சி, சிவலிங்க பத்

47. தர், சச்சலிங்க நயினார், புத்தாமல்ல செட்டியார், கருஊர் முத்துசரப்பள்ளன், செஞ்சி பெரிய அகரம்

48. சோ - வீராசாமி கவுண்டர் கையெழுத்து

49. பழவர்க்காடு[4] - ஆரியமுத்து செட்டியார் கையெழுத்து.[5]

---

1. 'விருதராச பயங்கர' என்று படிக்கவும்.

2. 9,1000 ஆகியவை தமிழ் எண்களில் உள்ளன.

3. '7' எண் தமிழ் எண்ணால் எழுதப்பட்டுள்ளது.

4. 'பழவேற்காடு' என்று படிக்கவும்.

5. இந்தச் செப்பேடு, ஆவணம் இதழ் 2-இல் கொடுமுடி சண்முகம் அவர்களால் பக்கங்கள் 63-71 ஆகியவற்றில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

# ஆ - 9. கொஞ்சிக்குப்பம் செப்பேடு

1. ஜனனி ஜன்ம ஸௌக்கியானாம் வர்தநி குல சம்பதாம். பதவி

2. பூர்வ புண்ணியாநாம். லிக்கியதே ஜன்ம பத்திரிகா சுவஸ்த ஸ்ரீ விஜயாப்புதய ஸாலிவா

3. ஹன ஸகாத்தம் சதஅளச (1804) கலியுக (4983) இதர்க்கு செல்லா நின்ற சறுவதாரி ஷு வையாசி மீ

4. சுக்குரவாரம் பஞ்சமி சுவாதி நக்ஷத்திரம் பத்திர வாகரணம் சிம்ம லக்கினம் கூடிய தினத்தில் ஸ்ரீமது

5. ச்[க]சகல குணசம்பன்றான அசண்டித லக்ஷிமி பிற சன்னறான பிதாவாகிய பரிபாலகறான பல உபகார மூர்த்

6. திகறான பந்துசன போஷாகறான அன்னதான பரிபாலகறான அண்டின பேரை ஆதரிக்கவல்ல

7. வறான அரிபூசை சிவபூசை மறவாமல் துரந்தரிகறான வாடாத மல்லிகை முல்லிகை யிருவாஷ்சி கொ

8. ங்க மந்தாரை புஷ்பங்களை மாலையாக பூண்டவறான வீரகண்டாமணி வீரவெண்டயம் வெத்தி முரசு

9. செங்கழுமணிமாலை ருத்திராஷ்ச மாலை பூண்டவறான **ஜெம்பு மாரிஷி வேர்வையில் உதித்து வுன்னிய றா**

10. ஜா புரந்து வாதாவியை ஜயம் பண்ணவறான 32 பிருது உடையவறான ஜம்புமாரிஷி காந்த மாரிஷி

11. கலைகோட்டு மாரிஷி இவாளாலும் முப்பது [மு]கோடி தேவர்களும் நார்பத்தெண்ணாயிரம் ரிஷிகளு

12. ம் சேர்ந்து ஓம குண்டம் செய்யும்போது சூரிய மண்டலம் சந்திரமண்டலம் கொழுந்து விட்டெரிய அப்

13. போது யீசுவரனுக்கு வேர்வை கண்டுஅந்த வேர்வையை அக்கினியில் விடும்போது பதினெட்டு ஆயுதம்

14. 32 ஆயுததுடனும் தங்க கிரீடத்துடனும் அக்கினி துகிரையுடன் பிடி பூனூலுடன் புரந்தவறாயும்

15. இவ்விதம் அருபத்திரெண்டு நாடு யெழுத்திரெண்டு கோஷ்டம் மகாநாடு கூடி **உபறங்கி காளகத்தோ**

16. ளர் பண்டா்ரத்தார் செஞ்சி பாளயபட்டு பண்ணு காலத்தில் காஞ்சிபுரத்தில் அவர்கள் சமூகத்தி

17. ல் யிதில் சேர்ந்த 9 சாதியார் சேர்ந்து காஞ்சிபுரத்தில் காமாஷ்சியம்மனுக்கு உச்சவம் செ

18. ய்து அதற்கு றதம் உண்டு பண்ணி றததை 18 வீதியிம் பிறதக்ஷணமாக வரும்போது சேணி

19. ய சிங்க புலி யென்தாவன் மந்திரத்திநால் தடை கட்டி நிருத்திப் போட்டான் அதின் பேரில் இடங்கையர் யெ

20. ன்ன செய்யலாமென்று யோகிக்கும்போது அம்மன் சொற்பனத்தில் வந்து கொச்சி மல

21. யாளம் றாஜாவிடத்திலருக்கும் யெகல தொட்டி றாமசாமினு வந்தால் தேறோடுமென்று சொன்

22. னத்தின் பேரில் அம்மன் உத்திரவு பிரகாரம் உடனே காகிதம் யெழுதி ஷெ றாமசாமினானை கா

23. ஞ்சிபுரம் வறவழைத்து அவன் இடங்கையர் கண்டு தேறோடுவதற்கு யென்ன செய்யலா

24. மன்று கேட்டதற்கு அவன் அஞ்சனம் போட்டு பார்த்து சொல்லுவதாயி சொன்னத்தின் பேரி

25. ல் அஞ்சனம் போட்டு பார்க்கும்படி உத்திரவு கொடுத்தார்கள். அதின் பேரில் அஞ்சனம் போ

26. ட்டு பார்த்து நறபலி கேழ்குரதாக சொன்னான் அதற்கு இடங்கையர் நறபெலிக்கி நாங்கள் யெ

27. ன்ன செய்யப் போறோமென்று வருத்தப்பட்டார்கள் ஷெ நாயகன் அவர்களுக்குத் தைரியம்

28. சொல்லி தன்னுடைய பெண்சாதி 3 பேர் தங்கை 4 பேர் ஆக 7 பேரையும் பெலி

29. கொடுத்து யஉத (10000) பூத பிசாசுகளுக்கு தக்க பிறாசிதம் செய்து அதை ஒட்டிவிட்டு யஉத (10000)

30. பேர் இழுக்கப்பட்ட றததை யிவன் ஒரவனும் கைபடாமல் மூக்கினால் இருப்பு சங்கிலி கொண்

31. டு பதினெட்டு வீதியும் யிழுத்து நிலையில் கொண்டு வந்து விட்டான் அதின் பேரில் இடங்

32. *கய்யருக்கு இவன் பேரில் சந்தோஷம் நேரிட்டு உனக்கு யென்ன வேணுமென் று கேட்*

33: *டார்கள் இவன் யெனக்கு பணம் காசி றொக்கம் வேண்டியதில்லை சூரிய சந்திறாள் உள்*

34. *ளளவும் செப்பு பட்டயமும் முப்பத்திரண்டு பிருதும் கொடுக்கும்படி கேட்டு கொண்டான். அதி*

35. *ன் பேரில் இந்த பட்டயமும் கொடுத்த விபறம்* ***வன்னிய ஜாதிக்கி தலைகட்டு க க்கு விறாகன் வ***

36. ***அரிசி 3 மரக்கால் கலியாணத்துக்கு*** *ரூ க மாப்பிளை வேஷ்டி க, அரிசி 3 மரக்கால், மனோ* ***விசுவ பிற்ம்ஹறாவுக்***

37 *கு தலைகட்டு க க்கு வராகன் வ அரிசி 3 மரக்கால் கலியாணத்துக்கு ரூ. க மாப்பிள்ளை வேஷ்ட்டி க அரிசி 3 மரக்கால், ·*

38. ***செங்குந்த ஜாதியாருக்கு தலைகட்டு க க்கு வராகன் வ*** *அசிரி 3 மரக்கால் கலியாணத்துக்கு ரூ. க மாப்பிள்ளை*

39. *வேஷ்ட்டி க,* ***செட்டி நகறத்தாருக்கு தலைகட்டு க க்கு வராகன் வ*** *அரிசி 3 மரக்கால் கலியாணத்துக்கு ரூ க*

40. *மாப்பிள்ளை வேஷ்ட்டி க அரிசி 3 மரக்கால்,* ***தேவேந்திர பள்ள சாதிக்கி தலைகட்டு க க்கு வராகன் வ*** *அரிசி 3 மரக்கால்*

41. *கலியாணத்துக்கு ரூ க ஊ று பொதுவிலே பண்ணி க கெடா க,* ***பிருது கோசிங்கு தலைக***

42. *கட்டு க க்கு வராகன் வ அரிசி 3 மரக்கால் இதல்லாமல் ஆரைக்கி பணம் ரூ கூட்டத்துக்கு பணம் ரூ வேலை கல்லுக்கு*

43. *பணம் ரூ ஆக பணம் யரு பொம்மகாளுக்கு பூசைக்கி கோழி ரு. வன்னிய* ***ஜாதி பிருது,*** *பூசக்கிர கொடை*

44. *அசுமான் கிரி மஹம் மேரு அம்பிலி கொடி சிங்கொடி டால் கத்தி கேடயம் நகபத்து பாங்கா கற*

45. *ணா துத்தாரி மகுடி பிள்ளாங்குழல் நாகசனம் வீற வண்டயம் சுருட்டி சூரேபானு பகல் தீவட்டி*

46. *சாம்பிறாணி கலசம்; விசுவ பிற்ம்ஹறாவுக்கு செருடக் கொடி அனுமக்கொடி; செட்டிக்கு கெருடக்*

47. *கொடி; பன்ஙளுக்கு வெள்ளக் கொடை வெள்ள புறாணம் சேறாயக் கொடை வெண்*

48. *சாமறம் அலகு மாலை யிருகால் சலம்பு சேத்துமுடி நாத்துமுடி; பிருது கோசங்கி பூதக்*

49. *கொடி புலித்தோல் நறல்லி ஆறுச்சி மணி வெங்கலக் கொம்பு. இந்த செப்புப்பட்டயத்தில் க*

50. *ண்ட விபறப்படி வரி குடாதவாள் யேழு கங்கை கரையிலே காறாம் பசுவைக் கொன்ற*

51. *தோஷத்திலும் போவார்கள் கோடி பிறமணாளை கொன்ற தோஷத்தில்*

52. *போவார்கள்*[1]

---

*1. இச்செப்புப் பட்டயம், கடலூர் மாவட்டம், கொஞ்சிக்குப்பம், திரு. முருகனிடமிருந்து திரு.ஆறு. அண்ணல் பெற்று திரு. நா. முரளி நாயகர் மூலப் இந்நூலாசிரியரிடம் வந்தது. நூலாசிரியர் இதனை முதன் முதலில் படித்து* ***'வன்னியர் மாட்சி'*** *என்னும் தம் நூலில் பக்கங்கள் 163-168 ஆகியவற்றில் விரிவாக எழுதியுள்ளார். இப்பட்டயத்தின் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியாக இருக்கலாம்.*

# ஆ - 10. விழுப்புரம் செப்பேடு

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வன்னியச் சாதிப்பிள்ளையிடம் இருந்து இச்செப்பேடு திரு. ஆறு. அண்ணல் மூலம் இந்நூலாசிரியரிடம் படித்துத் தருவதற்காக வந்தது. இச்செப்புப் பட்டயத்தின் உரிமையாளர் பெயர் தெரியவில்லை. இது வரைக் கிடைத்துள்ள இது போன்ற செப்பேடுகளிலிருந்து இச்செப்பேடு சிறிது மாறுபட்டு உள்ளது.

இச்செப்பேட்டில் இடங்கைச் சாதியினரால் அழைத்து வரப்பெற்ற கொச்சி மலையாள மாந்திரீகன் "கெலகெம்பள ராமிசாமி" என்றும், அவனது கர்ப்பிணி மனைவி "அவலு சித்தம்மாள்" என்றும் குறிக்கப்பட்டிருப்பது புதுமையாக உள்ளன. மேலும் மூன்று ரதங்கள் ஓட்டப்பட்டன என்பதும், அவை காமாட்சியம்மனுக்கும், கச்சாலேஸ்வரருக்கும், ஏகாம்பரேஸ் வரருக்கும் அமைக்கப்பெற்றவை என்பதும் ; ரதங்கள் மூன்று என்ற காரணத்தால் மாந்திரீகன் தன் மனைவியையும், அவள் கருவில் உள்ள குழந்தையையும், தம் தம்பியையும் பலி கொடுத்தான் என்று கூறப்பெற்றிருப்பதும் இதுவரை கிடைக்கப்பெற்ற இது போன்ற செப்பேடுகளில் காணப்பெறாதச் செய்திகளாகும். செப்பேட்டின் இறுதியில் மூன்று ரகதங்களின் வரைக்கோட்டு உருவங்கள் காணப்படுகின்றன.

### செப்பு பட்டய வாசகம்

1. சாலி வாகன சதாற்னம் றாசாதி றாச றாச மாத்தாண்ட றாச கோலாகல றாச கெம்பீ
2. **ற கரிகால சோழ றாசா றாச்சிய பாறம் ஆளுகையில்** ஆரில ஒரு கடமை வாங்கி
3. குடிகள் மனம் னோகாமல் றாசிய பரிபாலனம் பண்ணும் ஸ்ரீ கிருஷ்ணறா
4. யர் சமூகத்தில் சாதின பட்டையம் செப்பு பட்டையம் எழுதிக் குடுத்த விபறம்
5. சுளுத ஸ்ரீ விசயாப்புதிய சத உள உயஉ (1222) கலியுகாற்தனம் (4420) அதற்கு மே

6. ல்ச் செல்லா நின்ற சருவதாரி ஷு அல்லது சம்மஷ்சறம் வையாசி மீ யக (11) சுக்கற வாரம் அஷ்த்த
7. நஷ்ச்சத்திறம் சுப னாம யோகம் யிந்த சுப தினத்தில் யெழுதிக் கொடுத்த சாதின பட்டைய விபறம் ஸ்ரீ
8. கயிலாச பிறிதினாமமான காஞ்சிஷ்தலம் எஉ (72) நாடு... (63) மூன்று கோஷ்டம் மரதறசி படைவேடு' தே
9. சத்து யிடங்கை பானத்தார் யெழுதிக் கொடுத்த சாதனப் பட்டயம் ஸ்ரீ பறாபற வஸ்துவான ஸீமத் ச
10. கல குண சம்பன்றான அகண்டித லக்ஷுமி பிரசன்றான பிதாவாகிய பிராமணீகறான சத்யிபாஷ அரிச்
11. சந்திறறான வில்லுக்கு விஜயறான பலத்துக்கு வீமரான கொடைக்கி கர்னறான வய்துக்கு மார்கண்ட
12. றான மகாமேரு சமான தீறறான அன்ன தானம் சொர்ன தானம் வச்தற தானம் கோதானம் பூ தான
13. ம் அரி பூசை குரு பூசை சிவபூசை மறவாதவறான அனேக சாம்பறாச்யெல விசுமிகறறான அக்கினி
14. யில் சென்மமாவதறான ஆண்புலிக் கொடியுடையவறான சம்புமாரிஷி வேழ்வியில் வுதித்தவறா
15. ன பஞ்சவற்ண விறுது படைத்தவறான கங்குக கச்சையுடையவறான வெகு முப்பரினூல் தரிதரித்த
16. வறான வாதாவிசைய வென்றவறான யிடங்கை சிம்மாசனத்துக்கு கற்தறா்ன றண வெம்பிலிக்
17. றான றண களத்தில்பிறமுதுகு காட்டாதவறான வன்னிய புசங்கறான வாடா மாலை செங்கழணி மா
18. லை வெத்திமாலை தரித்தவறான வீறமுறசு வெத்திமுறசு கலியாண முறசு படத்தவறான வீற வண்ட
19. யம் வீற கண்டாமணி தரித்தவறான சிலையெழுபதும் படைத்தவறான சிங்கக் கொடியுடையவறான பக வ
20. த்தி சாம்பிறணி கலசம் வுடையவறான திடுந் திடும் யெனவே பேறிகை டமாறம் சத்தம்செய்யாத தேச
21. த்தில் வன்சவங்கம் பண்ணவறான கும் கும் யெனவே வெட்டி படை கொக்கரித்தவறான கூட்டமுறா

22. ம விற்பந்த நாட்டில் அளித்தவறான வீற சூற விஸ்தாற மாற்க்க பெறுமை பேர் பெற்றவறான ஆ

23. டாதப் புறவியை தட்டி வையாளி விட்டவறான அஞ்சாத சிங்க மதயான குட்டியைப் போல பறா

24. க்கிறமம் படைத்தவறான வந்தவறை ஆதநீக்க வல்லவறான பாலொடு பழமுண்ட வறான பன்

25. னாகமுடைய தரி முறகும் கெங்கை நதியும் மகமேரும் உடையவறான பந்து சன போஷகறான

26. வன்னிய புயங்கறான பின்னயும் ஆறென்றால் மானம் காற்ற பழவறாயறான பதினெட்டு "யஅ" விருதும்

27. "யஅ" ஆயுதமும் வுடையவறான காளிகாதேவியும் அம்மனுட அருணா பெறசாதமும் பெத்த

28. வறான; அஞ்சுசாதி பஞ்சாளத்தாற் அனும கொடி விருது படைத்தவறான அன்மத வேத சிப்பு

29. சாஸ்திர வேத பாறாயணறான அகிலாண்டகோடி பிறமாண்டவறான செகத்குரு மேகவாகனறான

30. சிவபூசை தொறந்திறிகறான றுத்திராக்ஷ மாளிகாபரண; பின்னயும் ஆறெனறால் சாஸ்திற திஷி கோ

31. த்திற சடை வல்லவாபருஷ மூற்த்தியாற் வசியன் காத்தாற் ஆயிறம் கோத்திறத்தாரும்; வுமைய் நகற் பிற

32. மா[ா] னகற் காஞ்சி நகற் காசி னகற் அயோத்தி நகற் பெற வேறான மாணிக்க சிம்மாசனம் படைத்தவறான ஆ

33. யிறம் கோத்திரத்தாருக்கும் குருக்கள் தரும சிவ ஆச்சாரியாற் சட்டநாத சுவாமி கெருடத்துவசம் ஆந்தாறமாலை

34. யும் கிறிகடம் சோளமுளத்தாரையவுடைய வசியந் திறத்தாரும் வன்னியரும்கூடி வீறபோக வசந்தறாயர் மு

35. ன்பாக யெழுதி குடுத்த சாதிப்பட்டையம் யிந்த சாதந பட்டையம் யேது நிமித்தயம் ெ[ய] ழிதிக் குடுத்தாற்களெ

36. ன்றால் இந்த காஞ்சி நகற் தளத்தில் யிடங்கையார் வொன்பது பாணத்தாரு கூடி காமாட்சி தேவிக்கு றதம் நட

37. பித வேணுமென்று பன்னீறாயிரம் பேற் யிழுக்கிற றதம் பண்ணி மூணு றதம் ஓட்டி வைக்கும் வேளையிலே வலங்

38. கையிக்குள்ள யிருக்கிற சேணியன் சிமப்பிலி அவனுடைய கறிவத்தினாலே தடைக்கட்டி றதம் னட

39. வாமல் படிக்கி னிறித்திப் போட்டான் அப்போ நம்மிட யிடங்கையி பாணத்தாருக்கு மனுஸ்தாபபட்டு யிந்த றத

40. ம் நடப்பிக்கப்பட்டவன் நம்மிட பாணத்திலே யெங்கே யிருக்குறா நென்று தேச தேசங்களுக்கு திருமுகம் யெழுதி அனி

41. ப்பி வச்சார்கள் அப்போது கொச்சி மலையாளம் யிடங்கையார் பாத்து அப்போ மலையாளத்திலே யிருக்கும் கெல

42. கம்பள றாமசாமி அவனுடைய தம்பியும் அவனுடைய பெண்சாதி ஆவீஸத்தம்மாளும் யிவற்கள் மூவறையும் அழைப்பி

43. த்து அவர்களுக்கு றதத்தை னடப்பிக்க சொன்னாற் அப்படியே செய்குறேனென்று வந்து கொச்சி தேசத்தை யெடங்கையாறு

44. க்கு சரணாத்திறி பண்ணிக் கொண்டு காஞ்சி னகரத்துக்கு வந்தான் அப்படி வரும்போது அவ்வறசன் கொடுத்த வெகுமா

45. னங்களெயும் வாங்கி கொண்டு மேல் சொல்லிய பட்டணம் வந்து சேந்து தேரைப் பாற்று யந்த தேரை நடவா[ம]

46. ல் யிருக்க வேண்டிய காரணம் யென்ன வென்று அஞ்சண மயி போட்டு பாற்கயில் அந்த றதம் மூன்றிவிருக்கும் காமா

47. ஷ்சியம்மன் கச்சாலேஸ்பறன் யேகாம்பரேஸ்பறன் மூவர்களையும் வாயி தட கட்டியிருக்குர காறணத்தை யரிந்து கொ

48. ண்டு யிந்த தேரை னான் வோட்டி வைக்குரேனென்று அவர்த்திய யிடங்கையருக்கு சரணாத்திறி செய்து கொண்டு மேல்ப

49. டியாரை பாற்று யிந்த ரதம் மூன்றுக்கும் மூணு ரண பொலி கொடுத்தால் ரதம் னடக்கும் யென்று சொன்னான் அதற்கு அ

50. வாள் பின் வாங்கினார்கள் அப்போ னான்வொரு தேசத்துக்கு ராசாவான படியினாலே முன் வந்த காலை பின் வாங்க மா

51. ட்டேன் யென்று தன் மநவியகிய அவலுசித்தம்மாள் கெற்பமான படியால் அவளை பாற்று ரண பொலிக்கி யொப்புக்கொள்

52. ளென்று சொன்னான் யெனக்கு யெட போட்டு மூவேழ் யிருப்பத்தொரு தலை முறைக்கும் யென்னை கொலை தெய்வமாக னினை

53. க்கிறதாயி பாவசம் செய்து கொடுத்தால் னான் ரண பொலிக்கு யொப்புகுறேன் யென்றாள் அவ்விதமா பாவசம் செய்து கொடுத்

54. து தன் தம்பியெயும் பெண்சாதியும் வெட்டி மூன்று ரதத்துக்கும் (மூன்று) மூன்று செரசை கட்டி பிண்டத்தை பூதங்களுக்கு யிரை கொ

55. டுத்து சகல தேவதைகளையும் தடையெயும் விடுவித்து பூதப்படைகளையெல்லாம் தன் கயிவசப் படுத்திக் கொண்டு ப

56. ன்னீறாயிரம் பேர் இழுக்கும் ரதம் மூணு ரதம் ஒன்று போன்று பிணைத்து சங்கிலியை மூக்கிலே போட்டு வாயால்

57. வாங்கிக் கொண்டு தேரோடு வீதி னாலையும் யிழுத்து வந்து னிலையில் கொண்டு வந்து னிருத்திநா

58. ன் சகல விருதும் கொடுத்து வன்னியனுக்கு சாதிபிள்ளை பாரு பாவித்த கோண பெரம வுப்ப..........

59. டி னிரித்தியிட்டு வன்னி குலத்தாருக்கு சரணாத்தி பண்ணி கொண்டார் வன்னிய குலத்தாற் சந்தோஷப்பட்டு யென்

60. ன கொடுத்தாலும் னில்லாது சந்திர சூரியாள் யுள்ள மட்டும் பிரம கட்டளையாயிருக்கும் படியா யிடங்கை யொன்

61. பது பாணத்தாரும் கூடி குடுத்த விருது பூசக்ர கொடை சுருடி அக்கினிக் கொடி புலிக்கொடி அனுமன் கொடி கெருடக்கொ

62. டி சிம்மக்கொடி அபதாக்கிரி யிப்படி சொல்லப் பட்ட பஞ்ச வற்ன விருது "யஅ" கொடுத்து வன்னியரும் கொடுத்த செப்பே

63. டு பட்டயம் யென்ன மென்றால் சம்பன்னா தேசம் அம்பத்தாற மண்டலம் யிதுகளில் யிருக்குர வன்னியற்களெ

64. யும் யிடங்கய் பாணத்தாரெயும் யிந்த படிக்கி னடப்பிக்க சொல்லி யெழுதியிருக்குரோம் வன்னியர் தலை

65. க்கட்டுக்கு வராகன் கால் அஞ்சு பஞ்சானத்தார் தலைகட்டு வொண்ணுக்கு விராகன் கால் வயிசியன் தலைக்

66. கட்டுக்கு வராகன் கால் **முத்திரியன்** தலைகட்டுக்கு வராகன் வ **யெலயாதவன்** தலை (க)ட்டுக்கு வராகன் வ **வீ**

67. ர செங்குந்த மூற்த்தி தலகட்டு வொண்ணுக்கு வராகன் வ **வேமந்த கொல்லான்** தலைகட்டுக்கு வராகன் வ

68. **தேவிந்திர பள்ளான்** தலகட்டுகு வராகன் வ **விரத கோசங்கி** தால கட்டுக்கு வராகன் வ சத்தி (பூசக) பண்ணி ஆ. சரு

69. டு கெடா உயர்ந்த கட்டளை படிக்கி யிடங்கை பாணத்தார் விவாகத்துக்கு பணம் அஞ்சி கோடி வஸ்திரம்

70. வெத்திலை பாக்கு வெகுமானம் யிது கொடுத்து நடப்பிக்க வேண்டியது கூடாமல் போனால் காசி கங்க கரை

71. காராம் பசுவை கொண்ண தோஷத்திலேயும் தன் மாதா பிதாவை கொண்ண தோஷத்திலும் சிசு வதையும் செ

72. யிதவர்கள் போந தோழத்திலே போவார்கள் யிதுக்கு ஒரு வழியும் விகாதம் சொல்ல கூடாது யிந்தபடிக்

73. கி குடுத்து னடப்பிக்க வேண்டியது கஞ்சி காமாஷ்சியம்மன் கிருபாகடாஷ்சம் வுண்டாக வேணும் சந்திர

74. சூரியாள் ஆகாசவாணி பூமாதேவி யிவர்கள் சாஷ்சி காமாட்சியம்மன் சாஷ்சி சகலபேர்களும் அரி

75. ய வேணும் **வீற வன்னியன் கிருஷ்ண வன்னியன்** யிந்த **கையழுத்து வன்னிய றாசன் விருது கோசங்கி கைத்து**

76. **பிறம வ(ன்)யன் சம்பு வன்னியன்**

77. **அக்கினி வன்னியன்**

**அடிக்குறிப்புகள்**

1. "மருதரைசர் படைவீடு" என்று கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது. பார்க்க நடன. காசிநாதன், வன்னியர், (2001), பக் - 124.

# ஆ - 11. சிறிய கிருஷ்ணாபுரம் செப்பேடு

**(முன்பக்கம்)**

*விநாயகர், நடராசர், பார்வதி ஆகியோர் தனித்தனி சப்பரத்தில் இருப்பது போன்று கோட்டுருவங்கள்*

1. *மஹாகணபத*
2. *யே நம:*
3. *ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை சுபமஸ்து சாலிவாகன சகாப்தம் 1156. கலியு*
4. *காப்தம் 4335 இதின் மேல் செல்லாநின்ற செய வருஷம் வைகாசி மாதம் 13-தேதி அ*
5. *மர பக்ஷ மேவிய ஞாயிற்றுக்கிழமை சுகிர்தநாடி யோகமும் பாலவா கரணமு*
6. *ம் பெற்ற சுபதினத்தில் வடகறை றாசாதிறாசன் றாசவளநாடு வெண்ணையூர் நா*
7. *டு வழதலம்பட்டுச் சாவடி சூழ்ந்த தனியூர் பெரும்பத்த புலியூராகிய பூலோக*
8. *கயிலாச மென்னுஞ் சிதம்பரம் சபா நாயகர் சன்னிதானத்தில் இடங்கை வலங்கை முத*
9. *லாகிய தொண்ணூற்றி ஆறு சாதிகளுக்கு மட்டும் நந்தவன பணிவிடையும் மயேஸ்பரபூசை*
10. *யும் திருவிளக்குப்பிச்சையும் அன்னதானமும் கட்டளை உபயங்களும்*
11. *சிதம்பர ஸ்தலத்தில் நடந்து வருகிற படியினாலே தெய்வத் தன்மை முடியுடனே*
12. *பிறந்த தெய்வீக றாசன் பிறப்பு வளர்பு எவ்வாறென்றால் நைமி சாரண்ய வநத்தில் மி*
13. *ருகண்ட மகாமுனி தபசு செய்கிறபோது வஞ்சனை கோவதை என்கிற -2- ராட்சதப் பெ*

14. ண்கள் வந்து வணங்கி அடியேனுக்குப் புத்திர சம்பத்து வேணுமென்று கேழ்க்க அப்

15. படியே உனக்கு கொடுத்தோம் என்றார் அப்போது 3 சிரசும் 6 அஸ்தமும் பிளந்த வா

16. யும் சிங்கப் பல்லும் கரிய நிறமும் வஞ்சனை, கோவதை வயித்தில் பிறந்து காரண்ட

17. ன் என்றும் வல்லாரி என்றும் பேர் பெற்று காரண்டன் பிறையூர் குண்டிலேயும், வல்

18. லாரி திருவண்ணாமலையிலும் யிருந்து இராச்சிய பரிபாலணம் பண்ணுகிற போது பதி

19. விரதைகளுடைய கற்புகளையழித்து தவசுகளை யழித்தும் பூமியெங்கும் மழையில்

20. லாமல்ப் போச்சுது அப்போது ரிஷிகள் முனிவர்கள் சமஸ்தமான பேருங் கூடி சி

21. காசிகா முனியீஸ்பர ரிடத்தில் போய் காரண்டவன், வல்லாரி யிவர்கள் உபத்திர

22. வம் பொருக்க முடியவில்லை யென்று தேவரீர் பாதத்தில் நமஸ்காரஞ் செய்து த

23. ங்களிடத்தில் விண்ணபஞ் செய்ய வந்தோம் என்று சொன்னார்கள் அப்போது சிகா

24. சிகா முனியீஸ்பரர் பார்த்து ஆனால் கேளுங்கள் இயமகூட பருவதத்தில் சுப்பிரமண்

25. ணிய சுவாமியானவர் யெழந்தருளியிருக்கின்றார் அவரிடத்தில் போய் சொல்லுங்கள்

26. அவர் உங்கள் உபர்வத்தை நீக்குவாரென்று சொல்ல அவர்கள் அப்படியே சு

27. ப்பிரமணிய சுவாமியிடத்தில் முறையிட்டார்கள் முறையிட்ட ரிஷிகள் முனிவர்களு

28. க்கு அபையஸ்தம் கொடுத்து அந்த துஷ்ட்டர்களை சம்மாரஞ் செய்கிறேன் என்று தம்முடைய கரத்திலி

29. ருந்த வேலாயுதத்தை விட்டார் அந்த வேலாயுதம் அரச வனத்தில் வந்து நின்றது. அப்போது குகமு

30. னியை அழைப்பித்து யாகம் வளர்த்தார்கள் தெய்வீகன் பிறக்கிறானென்று பிராண கவிக் கும

31. றவேள் அகன்ற பித குகமுனியும் முனிவருடன் குழுமிச் சூழ்ந்து இமயவரும் மகி

32. ழவே யிந்த யாகம் வளர்ந்திடும் வேளையில் வாகசமா பதி காலத்தில் படைவாளும் புனை

33. ய மணிமுடியுந் தாங்கித் தோன்ற அமராபதி யென்ன பசும் புரவி மேல்க் கொண்டு

34. ராசன் வந்தான். ஏது இந்த யாகத்தில் கிரீடமும் மந்திர வாளும் பச்சைப் புரவியும்

35. 12 கரமும் யக (11) கொடியும் யிதுகளுடனே பிறந்து வரப்பட்ட மன்னவன் யிவனாரென கே

36. ழ்க்க குகமுனிவர் முனிவர்களுக்குச் சொல்லுகிறார் பார்வதியைப் பெற்ற பவர்வதராசன்

37. பரமேஸ்பரரும் பார்வதியுமாய் அந்தபுரத்திலிருக்கும் போது பருவதராசன் சுவாமி உத்திரவில்

38. லாமல் தடையின்றி அந்தப்புறம் போக நான் சொல்லி யனுப்பாமல் நீ வந்தபடியால் பூலோ

39. கத்திலே போய் யோனி வழியாய் பிறவாமல் யாகத்தில் பிறந்து கிரீடத்துடன் லோகத்தைப் பார்

40. த்து தபசுகளைச் செய்து நம்மிடம் வருவாயென்று அனுக்கிரகம்

**(பின்பக்கம்)**

41. பண்ணினார் அப்படி பிறந்து வரப்பட்ட சுரிதி மன்னனென்றும் நத்த மன்னரென்றும் தெய்வீக

42. றாசனென்றும் பேராயிற்று வேலாயுதம் நின்ற விடத்திற்கு திருக்கை வேலூர் பே

43. ருண்டாயிற்று. திருக்கோவிலூரிலே தெய்வீகறாசன் பிறந்திருக்கிறபோது சேரன் சோழன்

44. பாண்டியன் என்ற 3 ராசாக்களும் பூமி பிரதக்ஷணம் வருகிற போது உறையூரிலே யிருந்

45. து தெய்வீகராசன் பிறந்த அதிசயத்தைக் கேட்டு மந்திரிமாரை அழைப்பித்து பச்சை

46. ப்பிரவி வாங்கிவரும்படி சொல்லியனுப்பி வைத்தார் மந்திரிமார்கள் பச்சைப் புரவி கே

47. ழ்க்கிறபோது சும்மா குடுக்கிறதில்லை உயுத்தம் பண்ணி செயித்து புரவி வாங்கிக் கொண்டு போ

48. ங்களென்றார் மந்திரிமார்கள் ராசாவினிடம் யிந்த சங்கதியை சொல்ல ராசா யிவ

49. ரை செயிக்க மாளாது யிவர் மகாவரபிரசாலி யிவர் முகாந்திரத்தில் கேழ்ப்போமென்

50. று 3 ராசாக்களும் தெய்வீகராசனுமாக சிதம்பர ஸ்தலத்துக்கு வந்து சுவாமி தரிச

51. னம் பண்ணுகிறபோது சபையில் நின்று தெய்வீக ராசனைப் பார்த்துப் பச்சைப் பு

52. ரவி கேழ்க்க முன்னே தான் சொன்னேனே யிப்பவும்

உயுத்தம் பண்ணி செயித்து புரவி வா

53. ங்கிக் கொண்டு போங்களென்றார் அப்போ உயுத்தம்

பண்ணுகிற போது சேரன் போ

54. ரில் தோர்த்துப் போனான் சோழன் முதுகிட்டோடிப் போனான் பாண்டியன் மறுபோறுக்

55. கிளைத்தான் 3 ராசாக்களும் தோற்றுப் போக தெய்வீகராசன் செயம் பண்ணினாரெ

56. ன்று தங்கள் முடிமேலிருந்த கிரீடத்தை யெடுத்து தெய்வீக ராசனுக்கு முடிசூட்டி சதுர்மு

57. டி வேந்தனென்று பேர் வைத்து உனக்கு எந்த நாடு வேணுமென்று கேழ்க்க எனக்கு ப

58. ச்சைப் புரவியேறி ஒரு வட்டம் வந்த நாடு போதுமென்றார் பரியேறி நடத்தகிறார் புராண

59. த்தில் பாடியிருக்கிற பாடலானது - வடதிசைக்கிக் கடியாறு குணதிசைக்கிக் கரிய கடல்

60. வளம் வராத குடதிசைக்கிக் கொல்லிமலை தென் திசைக்கி திவ்வியாறு குலவு மெல்லை ய

61. டவுபட கணப் பொழுதி லொரு வட்டஞ் சூழ்ந்த பரியதன் மேல் வந்து புடவிதனி லறசரொரு

62. மூவர் திருமுன்பு போந்தான் வேந்தன் - ங - ராசாக்களும் பரி நடந்த தேசமெல்லாம் விட்டு திரு

63. க்கோவிலூரில் வந்து கூடி தெய்வீகராசனுக்குப் பட்டாபிஷேகஞ் சூட்டி வைத்தார்கள் தெய்

64. வீக றாசன் சதுரங்கசேனை சூழ் மந்திரி நிற்க சிம்மாசனத்தில் வீற்றிருந்தார் காரண்ட

65. ன் வல்லாரி யிந்த - 2 - ராட்சதனை சம்மாரம் பண்ணினார் அந்த பிரமகத்தி தோஷந் தீ

66. ர திருக்கோவிலூரி விறைவாநரையூரில் சிவாலயம் திருநந்த(வ)னம் நானூத்தொரு பிராமணார்

67. கு 400 அகிராகாரமும், தேருந் திருவிழாவும் செய்து வருகிறபோது ஈஸ்பரன் ரிஷபவா

68. கனரூடராய் தெய்வீகராசன் முன் தோன்ற மகாராசன் பிரதட்சணம் வந்து நம்ஸ்கா

69. ரம் பன்னி னார் நூத்தொருவருக்' கொரு பங்கும் சிவனுக் கொரு பங்கும் ஆக சகலத்தைப்பு

70. ரித்தார் ஊர் பாகங் கொண்ட யீஸ்பரனென்றும் பேறாச்சுது யிப்படியிருக்கிற தெய்வீக குலத்தி

71. ற்கு யிம்மை கீற்தியும் மறுமை மோட்சமும் வேண்டுமென்று சிதம்பரத்தில் மடம் தற்மம் நடக்க வே

72. ணுமென்கிரதாய் யிந்த பூ மண்டத்திலுண்டாகிய மலைய மன்னர் நத்தமன்னர் யிவாளில் பாளையக்கா

73. றறாகிய பண்டாரத்தார் நயினார் உடையார் யிவர்களில் சீமை நாட்டார் சில்லரை கிராமத்து நாட்டார்

74. யிவர்கள் அனைவருக்கும் பொதுமடத்தார் - தர்ம்மமாய் நடக்க வேணுமென்று தலத்துப் பெரியோர்க

75. ளுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள் - தலத்தார் - மேலமடத்து முதலியார் கீழமடத்து முதலியார் மா

76. ளிகை முதலியார் ஆதிதண்டேஸ்வர நயினார் குதிரை மேற்சொக்கர் உலகநாத தீட்சதர் ப

77. ண்டார தீட்சதர் சபாபதியா பிள்ளை பெரியாழ்ப்பாண முதலியார் கோவில் கணக்குப் பிள்ளை

78. மகுத்தும் பச்சக் கந்தைய்யர் - தலத்து குருநமசிவாய மூற்தி பாதபூசை அம்பலத்தாடுமையர் தா

79. னம் பரிகலத்தார் மற்று முண்டான பேருங்கூடி ள (நூறு) - கால்மண்டபத்தில் வீற்றிருந்தெழுதின தாம்ப்

80. பிர சாதனபட்டயமாவது வடக்கு கோபுரவாசலுக்கு மூன்றாந் தெருவு றாசாங்க முதலியார் வீதியில் - மேல்

81. பாரிசத்தில் வடசிரகில் அழகிய திருச்சிற்றம்பல பிள்ளை மனைக்கி மேற்கு திருவேங்கடப்பிள்ளை மனை

82. க்கித் தெற்கு - சொக்கய்யர் மனையாகிய மனையில் கீழ் மேல் அடி 950 - தெ-வ-அடி 115 சாலைக்கு

83. கிழக்கு சந்துக்கு வடக்கு அடி 15 இமனை கொண்ட கிறையம் போட்டு மடங்கட்டி நம் எனத்தார் மடம்

84. விளக்கமாக வேணுமென்றும் வினைதீந்த சாமிகளால் விளக்கமாக நடந்து வருகவேண்டியது சந்

85. திராள் சூரியாள் உள்ள வரைக்கும் புத்தர பாரம்பரியமாய் அன்னதானம் பண்ணி வாழ்ந்துகொண்

86. டிருங்களென்று அறிக்கை யிட்டார்கள் - யிந்த பட்டயத்துக்கு கையெழுத்து போட்ட பேர்கள் மங்கலூர்

87. சூர பண்டாரத்தார் - வேட்டவலம் - வாணாதிறாய பண்டாரத்தார் கொங்கறாய பாளையம் கொங்கறாயர்

88. ஆசனூர் பொன்னம்பல முதலியார் - பாலி - கொண்டப்ப முதலியார் கோவிந்தப்ப முதலியார் பெரிய

89. சேலூர் கிஷ்ணப்ப முதலியார் காட்டுமயிலூர் வேங்கை பண்டாரததார் மன்றுராபத்து கொங்க

90. றாய பண்டாரத்தார் - குரும்பூர் வீரசம்புராய நயினார் கவஸ்தலம்[2] முத்து மூப்பனார் சீதேவி சீப்ப

91. ந்தி நயினார் தேவநயினார் செங்குறிச்சி செவ்வாய் நயினார் - பாதூர - விஞ்சுவறாய நயினரர் க-

92. ரூர் - உலகப்புடையார் - அரசூர் தேவ நயினார் - பெரும்பத்தூர் தேவ நயினார் - தம்பை - செவ்வாரு

93. டையார் - மேலையூர் அறிய நாயகத்துடையார் - கல்லூர் அரிமை பெருமாளுடையார் சும்ப

94. லூர் பொன். உடையார் வேப்பூர் காளத்தி உடையார் கொத்தனூர் செல்லப்புடயார் பெருமலூ

95. ர் முத்துடையார் - மால்வாய் நாகப்புடையார் - புள்ளம்பாடி விநாயகத்துடையார் - வெம்மணி - ந

96. ல்லப்புடையார் - மங்கலூர் சீமை. திருவண்ணாமலை சீமை விருத்தாசலம் சீமை திருக்கோயிலு

97. ர் சீமை - எலவாச நல்லூர் சூழ்ந்த - யஉ-ய-சீமை- கல்லக்குறிச்சி சீமை வாலிகொண்டாபுறம் சீ

98. மை - கூகையூர் சீமை - வடகாரம் - பூண்டிச் சீமை - ஊற்று நாடு - சீமை - உறையூர் சீமை - ஆத்து நா

99. டு - அரியலூர் சீமை - துரையூர் சீமை - உடையார் பாளையம் சீமை - தஞ்சாவூர் சீமை - சேர மண்

100. டலம் - சோழ மண்டலம் பாண்டிய மண்டலம் - கொங்கு - தேசம் 4 மண்டத்திலுண்டாகிய மலை

101. ய மன்னர்-நத்த மன்னர்-பாளையக் காரராகிய-பண்டாரத்தார்-நயினார்-உடையார்-சீமை நாட்டார்-சி.

102. ல்லரை கிராமத்து வந்நியர் யிவர்கள் அனைவருக்கும் - பொது மடம் கிறமமாய் - நடந்து வருகிறபடியி

103. னாலே வருஷ வர்த்தனையாக - கட்டளையிட்ட - சுவாத்தியம் - தண்டிகை துரைமாருக்கு - பணம் - ய - குதிரை

104. கொடை பெற்ற பேருக்கு பணம் - ரு - தலை கட்டுக்கு - பணம் - 2- கல்யாணத்துக்கு - பணம் - 2 - மாப்பிளை வீட்டு

105. க்கு பணம் - யி 2 - யிந்தப்படி தம்பிறான் வந்தவுடனே - வருஷா வருஷம் படி அரிசிகளும் பணமும்

106. பாக்கு வெத்திலையும் கொடுத்து தங்கள் தங்கள் கிறுத்தியம் போல - கிராமமாய் நடப்பித்து கொ

107. ண்டு வரவும் யிந்த தருமத்துக்கு யில்லை என்று விகாதம் - சொன்னால் - காசியில் - கெங்கைக்

108. கரையில் - காராம்பசுவைக் கொன்ற தோஷத்தில் போவார்கள் யிந்த தருமத்தை - பரிபா

109. லனம் பண்ணின புண்ணியவான்கள் மாற்கண்டாயு (சு)ம் - மன்மத அழகும் - குபேச சம்பத்துமா

110. ய் வாழ்வார்கள் சிவ திருச்சிற்றம்பலம் - சபாப்தி துணை.[3]

111. யிந்த தருமத்தை அந்தந்த கிறாமத்து - மணிய - முனிசீப்பவர்கள் - கிரமப்படி வாங்கிக்[4]

112. குடுக்கவும்

**அடிக்குறிப்பு**

1. 'நா நூற் றுவருக்கு' என்று படிக்கவும்.

2. 'கபிஸ்தலம்' என்று படிக்கவும்.

3. இந்த செப்புப் பட்டயம் சிறிய கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த திரு. ஞானசேகரன் வன்னிய குருக்கள் அளித்தத் தகவலின் பேரில் கண்டறியப்பட்டது. இப்பட்டையம் பற்றிய விரிவான கட்டுரையை இந்நூலாசிரியரின் "தமிழகம் அரபபன் நாகரிகத் தாயகம்" என்னும் நூலில் பக்கங்கள் 62-82 ஆகியவற்றில் காணலாம்.

4. 111-112ஆம் வரிகள் பிற்காலத்தில் எழுதப் பெற்றதாகத் தெரிகின்றன.

## ஆ - 12. ஆதனூர் - சாத்தனூர் செப்பேடு

*திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொள்ளிடத்திற்கு வடக்கே ஊற்றத்தூர் சீமையில் ஆதனூர், சாத்தனூர் என்னும் அக்ரகாரங் களை உருவாக்கி அவற்றை அந்தணர் பலருக்கு,* ***மதுரை அரசி மங்கம்மாளின் பெயரன் விசயரங்க சொக்கநாதர்*** *அளித்த செய்தி இச்செப்பேட்டில் தரப்பட்டுள்ளது. தெலுங்கில் எழுதி, இறுதியில்* ***'விஜயரங்க சொக்கநாதய்யவ்ராலு'*** *என்று முத்திரைக் கையொப்பம் இடப்பட்டுள்ளது. ஒரே ஏட்டின் இருபுறமும் எழுதப்பட்டுள்ள இச்செப்பேட்டில் நாயக்க அரசின் கீழ் சிற்றரசராக இருந்த அரியலூர்* ***பெரிய ரங்கப்ப மழவராயரின்*** *பெயரும் இடம் பெற்றுள்ளது.*

***காலம்: 6.11.1710***

### செப்பேட்டுச் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு[1]

*ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம் 1632 விரோதிகிருது வருடம் கார்த்திகை மாதம் பௌர்ணமி தினத்தன்று, ஸ்ரீ வீரப்பிரதாப ஸ்ரீ வீரவேங்கடதேவ மகாராயர் ஐயன் அவர்கள் கனகிரி என்னும் நகரத்தில் ரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து இவ்வுலகை யாளுகின்ற போது,* ***காஸ்யப கோத்திரத்தைச் சேர்ந்த*** *சொக்கநாத நாயக்கரின் பேரனும் ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் அவர்களின் புதல்வனுமான* ***விஸ்வநாத நாயக்க விஜயரங்க*** *சொக்கநாத நாயக்கர் ஐயன் அவர்கள்,* ***லக்ஷ்ண மழவராயரின் பேரனும் வெங்கடப்ப மழவராயரின் புதல்வனமான பெரிய ரங்கப்ப மழவராயரின்*** *(ஆட்சிக்குள் அடங்கிய) சரபிடி பல கோத்ரங்களையும் பல சூத்ரங்களையும் சேர்ந்த பல சாகாத்யாயிகளான பிராமணர்க்கு வழங்கிய தாராபூர்வ தர்ம சாசனம் என்னவென்றால், ராயர் அவர்கள் எங்களுக்கு* ***நாயங்கர***[2] *முறைப்படி அளித்துள்ள பாண்டி மண்டலம் மதுரை சமஸ்தானத்தைச் சேர்ந்த திரிசிரபுரத்தில் உத்தர காவேரிக்கு வடக்கில் உள்ள ஊட்டத்தூர் சீமையில் ஆதனூர், சாத்தனூர் என்ற அக்ரகாரங்கள் உருவாக்கக் கட்டளையிட்டபடி உருவாக்கினோம்.*

**ஆதனூர் எல்லையாவன:**

*மதிசத்தம் கொட்டடைக்குக் கீழக்கும், மூங்கில் தோப்பு வழிக்குத் தெற்கும், இலந்தைக்குடிக்கு மேற்கும், புரிமிசைக்கு வடக்கும் ஆகும்.*

*சாத்தனூர் எல்லையாவன: மாதேவிக்குக் கிழக்கும் கொட்டடைக்குத் தெற்கும், இலுப்பைக் கோயிலுக்கு மேற்கும், குளக்கானலுக்கு வடக்கும் ஆகும்.*

*இவ்வெல்லையில் அடங்கிய நஞ்சை, புஞ்சை, மாவடை, மரவடை, தோப்பு, துரவு, நிதி, நிக்ஷேப, ஜல,தரு, க்ஷீண்,யாகமி, சித்த சாத்ய அஷ்ட போக, தச ஸ்வாம்யங்களும் புத்திர பவுத்திர பாரம்பரியமாக தானாதி வினிமய விக்கிரயங்களுக்கு யோக்யமாக ஆந்திரார்க்கம் அனுபவித்து வருவீராக.*

**அடிக்குறிப்பு:**

*1. இச்செப்பேடு 'வரலாறு இதழ்-1', ஆகஸ்டு 1993-இல், பக்கங்கள் 8-9-இல், திருவாளர்கள் பெ. கௌதம புத்திரன், எஸ். இராமச்சந்திரன் ஆகியோரால் வெளியிடப் பெற்றிருக்கிறது.*

*2. புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பாளையக்காரரின் ஆட்சியுரிமை 'நாயங்கர' என்று விசயநகர அரசர்களால் அழைக்கப்பெற்றது.*

## ஆ - 13. புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேடு

புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேட்டின் ஒருபுறம் தானம் குறித்த செய்திகள் உள்ளன. மறுபுறம் முழுதும் பல்வேறு புடைப்புச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன.[1]

**காலம் :** கி.பி.1582.

**செய்தி :** முருகனின் படைவீரர்களான நவவீரர்களில் முதல்வரான வீரபாகுவுக்குத் திருமேனி கொண்டு பூசைத் திருப்பணி நடக்க பல்வேறு தொழில்புரிவோர் அளித்த தர்மத்தை இச்செப்பேடு பட்டியலிடுகிறது. பின்புறம் உள்ள சிற்பப்பகுதி ஒன்றன்கீழ் ஒன்றாக 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்பகுதியின் மையத்தில் வீரவாகு நான்கு கைகளுடன் நேராய் நிற்கிறார். கைகளில் கத்தி, கேடயம், வில், அம்பு ஆகியவை காணப்படுகின்றன. அவரது வலது.இடது பக்கங்களில் ஆடு மற்றும் மயில் காட்டப்பட்டு உள்ளன. அத்துடன் காவடி போன்றவைகள் காட்டப்படுகின்றன. அதற்குக் கீழ் இரண்டு வரிசைகளில் 8 வீரர்கள் கையில் கத்தி கேடயத்துடன் நிற்கின்றனர். நான்காவது வரிசையில் நாதஸ்வரம், கொம்பு முதலான இசைக் கருவிகளும், அய்ந்தாவது வரிசையில் உடுக்கை மிருதங்கம் ஜால்ரா போன்ற இசைக் கருவிகளும், ஆறாவது வரிசையில் ஒரு மனிதனின் தலை,[2] கலப்பை போன்றவைகளும், ஏழாவது வரிசையில் கொடி, கட்டுமரம், பணப்பை, எண்ணை ஆட்டும் செக்கு போன்றவைகளும் காட்டப் பட்டுள்ளன.

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1504 இதன் மே
2. ல் செல்லாநின்ற சித்றபானு பங்
3. கூனி மீ 15 திருவிடைற்கழி குமாரசு
4. வ்ாமியார் உடைய வீரபாகு தேவ(ர்)க்கு
5. படைபத்து கச்சிராயர்ரும் மழவராய
6. ர் சோழகனார் காலாக்க தோழன்னு
7. ம் பலனாட்டு கைக்கோள முதலிய
8. ள்ளும் நகரத்தார் படையுள்ளர் சிப்பியர்
9. மயில்க்கொடி மரக்காயர் இடங்கை
10. உள்ளுப் பட்டார்ரும் சமையம் குடுத்தோ
11. ம் தறிக்கு பணம் ½ தான நிறுபாகமாயி யிருக்
12. குற பேர்கள்ளுக்கு ப ½ பல தொழில்லாய்
13. இருக்குற கைக்கோளர்க்கு தலைகட்டுக்கு

14. ப 24 மண்டபக் கொது நட்டுவன்க்கு ப ½
15. னாகபாச கொத்துக்க ப ½ தேவரடியார்
16. சேவுகத்து பு 24 வில்லுக்கு பு 24[3] செக்குக்கு
17. ப ½ காவேரி நகரத்தார் தலைக்கட்டுக்கு
18. பு 24 சிப்பியர் படையுள்ளர் மரக்காயர்
19. தலைக்கட்டுக்கு பு 24 கண்ணப்புகோத்
20. திரம் பேர்க்கு பு 24[4] சித்துற்கு பு 1 வீரபாகு
21. தேவரை திருமேநிக் கொள்ளவும் பூசை தி
22. ருப்பணி திருநாள் நடக்கவும் கட்டளை யி
23. டோம் இந்(த) தந்மத்துகது வருஷவத்தினை
24. யாக குடுத்துவர கடவாராகவும் இத்தம்(ம)த்
25. துக்கு யாருவர் அகிதம் பண்ணினால் கெ
26. ங்கை கரையலே காறாம் பசுவைக் கொண்
27. ண பாவத்திலே போக கடவாராவும் பிறாம
28. ணரை கொண்ண தோஷத்திலே போ
29. ககடவது இவகள் சொல்படிக்கு கந்த
30. புறாண ஞ(ா)ன பிறகாசர் எழுத்து உ.

**அடிக்குறிப்பு:**

1. இச்செப்பேடு, ஆவணம் இதழ் 17-இல் 108, 109 பக்கங்களில் புதுக்கோட்டை திரு. செ. கோவிந்தராஜால் வெளியிடப் பட்டிருக்கிறது.
2. ஒரு மனிதனின் தலை உருவம், சூரபத்மனின் தலை உருவமாக இருக்கலாம்.
3. பள்ளிகளிடமிருந்து வசூலிக்கப் பெறுவது.
4. வேட்டுவர்களிடமிருந்து வசூலிக்கப் பெறுவது. இதிலிருந்து பள்ளிகள் வேறு, வேட்டுவர் வேறு என்பதை உணரலாம்.



புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேடு

## இ. கல்வெட்டுக்கள்

# இ - 1. பலிஞ்சரஹள்ளிக் கல்வெட்டு

### (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு)

"கோவியைய மயீந்திர பருமற்கு

யாண் டைந்தாவது காடந்தைகள்

சேவகன் புதுப்பள்ளிகளோடு பொருத

ஞான்று பட்டா னெருமேதிகாரி"

(தருமபுரி நடுகற்கள் தொகுதி 2, எண் 1973 / 26)

# இ - 2. தோகைமலைக் கல்வெட்டு

### (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு)

1. (கோ) வூரு ஆண்ட கால
2. த்து ஊர் தந்தை பே
3. ரேத்தேஓரே நினஙிநா
4. று தேவறு பட்டான் ப
5. **ள்ளித் துண்டன்**

(கோ)வூர் என்ற ஊரை, ஊர் தந்தை பேரேத்தே ஆண்ட காலத்து, அவரோடு தேவரு என்பார் போரிட்டபொழுது, **பள்ளித்துண்டன்** என்பான் இறந்த செய்தியைத் தெரிவிக்கிறது இந்நடுகல். இக்கல்வெட்டு பற்றிய ஒரு கட்டுரையை இந்நூலாசிரியர் 'தமிழகம் அரப்பன் நாகரிகத் தாயகம்' என்னும் தம் நூலில் பக்கங்கள் 44-47 ஆகியவற்றில் எழுதியிருக்கிறார். அதில் "பள்ளத் துண்டன்" என்று இவரால் இவருக்குக் கிடைத்த இக்கல்வெட்டின் ஒளிப்படத்தைக் கொண்டு படிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டை இவர் நேரில் சென்று பார்த்த பிறகு "பள்ளித்துண்டன்" என்று தற்பொழுது படிக்கப்பட்டுள்ளது.



இ - 3. கருங்காலக்குடிக் கல்வெட்டு

('பள்ளிதறையன்' பற்றி குறிப்பிடுவது)

(கி.பி. 8–9–ஆம் நூற்றாண்டு)

(நடுவண் அரசு கல்வெட்டுத் துறைக்கு எம் நன்றி)

# இ - 4. பழுவூர்க் கல்வெட்டு-1

## (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு)

### (வெளித் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் காணப்பெறும் கல்வெட்டு)

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் (விக்) கிரம சோழ தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது வடகரை ராஜேந்திர சிம்ம வளநாட்டு

2. மேல் காரைக்காட்டுச் செந்நிவலக் கூற்றத்து மிறை நாடாழ்... யிருக்கும் ஸ்ருதிமாந் னரையன் ஒத்தந்னான வைசாலி நாடாழ்வானேன் இந்நா

3. ட்டுத தம்பந்நூரர் இருக்கும் பட்டன் தேவனான திருச்சிற்றம் [பல...] குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்தெட்டாவது எங்கள் ஸ்ருதிமா

4. ந் பகையில் நாங்கள் எய்யா நிற்க இடையே கைய்பிழையாலிவ்வ...... டுப்பட்டமையில் இந்நாட்டுப் **பள்ளிநாட்டார்** என் மேலே பகையிட்டமையில்

5 இந்தப் பகைதீர இந்நாட்டு **பள்ளிநாட்டாரும் ஸ்ருதிமாந்** நாட்டாரும் கூட்ட... (ே)கால் பட்ட கைப்பிழையால்ப் பட்டமையில் இவனைச் சாத்தி ஒரு திருநந்தா விள

6. க்கு கொள்கவென்று ஸ்ருதிமாந் நாட்டார் சொல்ல பள்ளி நாட்டாரும் சம்மதித்த ச[ந்தி] விளாக்கொன்று(க்)கும் வடகரை உத்துங்க துங்க வளநாட்டு குன்றக் கூற்றத்து பிரம்மதே

7. யம் **சிறுபழுவூர்த் திருவாலந்துறை உடைய** மகாதேவர்க்கு **வைப்பதென்று**.... சம்மதித்த மையில் வைச்ச நுந்தா விளக்கொன்றுக்கும் பசு முப்பத்திரண்டு ஸ்ருதி

8. மாந் அரையந் ஒத்தந்நாத வைசாலி நாடாழ் வான் நடைதர பள்ளிநா(டாழ்வான் சந்திராதி)தவர் இரவு பகலெரிய விட்டமைக்கும் இப் பசு முப்பத்திரண்டும் இக்கோ

9. யில் காணியுடைய சிவபிராமமணரோம் கைக் கொண்டு........ விளக்கொன்று இது பன்மாகேஸ் வரர் ரட்சை[2]

**அடிக்குறிப்புகள்**

1. 'ஸ்ருதிமான்' என்று படிக்க வேண்டியதைச் 'சூநிமான்' என்று முன்பு படிக்கப் பெற்றிருக்கிறது.

2. இக்கல்வெட்டு, முனைவர் இரா. கலைக்கோவன் எழுதியுள்ள 'பழுவூர்ப் புதையல்கள், என்னும் நூலில் பக்கங்கள் 290-291-இல் வெளியிடப்பட்டுள்ளது.

# இ - 5. பழுவூர்க் கல்வெட்டு-2

## (மடப்பள்ளியருகே சுவரில் சாய்த்து வைக்கப் பட்டுள்ள கற்பலகையொன்றில் காணப்படும் கல்வெட்டு)[1]

**கல்வெட்டு - 4**

1. பரிதாபி (ஆண்டு) ஷ
2. ஆவணி (மாதம்) மீ உயஉ (22)
3. திருப்பழுவூர்
4. யோகவனீசுர
5. சுவாமிக்கு
6. உச்சி கால
7. திருவிளக்கு
8. கட்டளைக்கி
9. ஏலாக்குறிச்சி யி
10. லுப்பை மரம் மா
11. மரம் மரவடை[2] மர
12. வடை உள்பட தோப்பு
13. அரசு நிலையிட்ட ரெ
14. ங்கப்ப மழவராய
15. பண்டாரத்தார் அவர்
16. ள் உபயம் உ
17. யிந்த தர்மத்துக்கு யாதாமொருவேன்[3] வி
18. காதம் பண்ணினானாகில் கெங்க கரையில்
19 காராம் பசவைக் குண்ண தோழத்திலே
20. போவன் உ

**அடிக்குறிப்பு:**

1. இக்கல்வெட்டை முனைவர் இரா. கலைக்கோவன் தம் பழுவூர்ப் புதையல்கள் என்றும் நூலில், புதிய கல்வெட்டு எண்-38 ஆகப் பதிப்பித்திருக்கிறார்.
2. 'மாவடை' என்று படிக்க வேண்டும்.
3. 'யாதாமொருவென்' என்று படிக்க வேண்டும்.

# இ - 6. திட்டக்குடிக் கல்வெட்டு

**இடம்** : *பெரம்பலூர் வட்டம் திட்டக்குடி.*

**காலம்** : *மாறவர்மன் பராக்கிரம பாண்டியன், யா : 4 (கி.பி.1338).*

**செய்தி** : *விக்கிரமசோழனின் நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி. 1122ல்) கர்நாடகத்தில் போசள நாட்டை ஆண்டு வந்த முதலாம் விஷ்ணு வர்த்தனன் என்பவன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்தான். இதனைப் பராக்கிரமப் பாண்டியனின் கல்வெட்டு 'பெரியவடுகன் கலகம்' என்று குறிப்பிடுகிறது. சோழநாட்டின் மீது படையெடுத்த போசள மன்னன் ஆடுதுறை பகுதியிலும் தாக்குதல் நடத்தி ஆடுதுறை சிவன் கோயிலில் இருந்த தெய்வத் திருமேனிகளையும் நாயன்மார் மூவர் பிரதிமங்களையும் கவர்ந்து சென்று போசளர் தலைநகரமாகிய துவாரசமுத்திரத்தில் வைத்திருந்தனர்.*

*பின்னர் இதனை அறிந்த ஆடுதுறை பகுதியைச் சேர்ந்த* ***பள்ளிகள் (வன்னியர் இனத்தில் ஒரு பிரிவினர்)*** *அங்கிருந்து துவாரசமுத்திரம் சென்று போசளர்களுடன் சண்டையிட்டு, அவர்களால் கவரப்பெற்ற ஆடுதுறை கோயிலுக்குரிய தெய்வத் திருமேனி களையும், நாயன்மார் மூவர் பிரதிமங்களையும் மீட்டு வந்து அத்திருவுங்களை மீண்டும் ஆடுதுறை சிவன் கோயிலிலேயே வைத்து, நாள் வழிபாடுகள் செய்தவற்கு* ***ஆண்டொன்றுக்கு 100 கலம் அரிசியும், 5000 காசும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அத்திருமேனிகளை வழிபாட்டில் வைத்தனர்.*** *அதற்காக அவர்கள்* ***குடி ஒன்றுக்கு ஒரு குறுணி அரிசியும், 50 காசும்*** *வசூல் செய்வது என்று முடிவு செய்தனர்.*

*சிலைகளை மீட்ட பள்ளிகளைக் கௌரவிக்கும் பொருட்டு, அவர்களுக்குப் பட்டுப்பரிவட்ட மரியாதை கொடுத்து,* ***இறைவன் திருமுன் நின்று வழிபாடு செய்யும் உரிமையும் அளித்து, அவர்களுக்கு 'பன்னாட்டார் தம்பிரான்' என்ற பட்டமும் அளித்து பெருமை படுத்தினர்.*** *இதற்கான ஆணையை இரண்டாம் குலோத்துங்கன் பிறப்பித்தான் என்றும் இக்கல்வெட்டு கூறுகின்றது.*

கி.பி. 1122ல் விக்கிரமசோழன் காலத்தில் நடந்த ஒரு அருஞ் செயலுக்காக 216 ஆண்டுகள் கழித்து சோழர் ஆட்சிக்குப் பிறகு மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் காலத்தில் அதே பள்ளி இன மக்களுக்கு மரியாதை மற்றும் சலுகைகள் வழங்கியமை தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்!

**கல்வெட்டு வாசகம்:**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்தில் ஸ்ரீ பராக்ரம பாண்டிய தேவர்க்கு யாண்டு ச(4) ஆவது வைகாசி மாதம் நாலாந் தியதி பல மண்டலங்களில் நாடும் நகரமும் எல்லா மண்டலங்களில்

2. பல நாட்டவரும் பழி காரியங் கேழ்ப்பதாக உள்ளூரில் பெரிய நாட்டான் காவி நிறைவற நிறைந்து குறைவறக் கூடி இருக்க உடையார் குற்றம் பெறுத்தருளிய நாயனார்

3. கோயிலில் எங்கள் மூதாதிகள் கல்வெட்டினபடி திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு ச(4) ஆவது முடிகொண்ட சோழ வளநாட்டு உகளூர் கூற்றத்து இறையான புஞ்

4. சை குரங்காடி மகாதேவர்க்கு இந்நாட்டில் ஆய்க்குடியில் காணி உடைய பள்ளிகளில் பொன்னநான முடிகொண்ட சோழ முத்தரையன் உள்ளிட்டாரும் ஒலைப்பாடியில் காணி உடை

5. ய பள்ளிகளில் காரிகிரிச்சன் விக்கிரமசோழ மூத்தரையன் உள்ளிட்டாரும் தொங்கபுரத்தில் காணி உடைய பள்ளிகளில் அழகந் அம்பலவன் குலோத்துங்க சோழ முத்தரையன் உள்ளிட்டாரும்.

6. மகதை மண்டலத்து தொழுவூர் பற்றில் குறுக்கையில் காணி உடைய பள்ளிகளில் பாண்டியன் சொக்கன் மரகதசோழ முத்தரையன் உள்ளிட்டாரும் இவ்வனைவரோம் கல்வெட்டி குடுத்த ப

7. ரிசாவது இன்னாயநார் கோயிலில் திருமேனி நாயமார் பெரிய வடுகன் கலகத்தில் செமம— தோரசமுத்திரதேற எழுன்தருளி போகையில் இன்னாயமாற்கு நெடு அத்தம் குடுத்து மீண்டும் கோயிலிலே எழுன்த

8. ருளப் பண்ணிநர்களென்று கொண்ட உபயமாவது இன்னாயநார் திருநாளுளிட்ட பல திவலைகளுக்கும் அமுதுபடிக்கும் அரிசி நூற்றுக் கலமும் படிவெஞ்சனமஞ் சாத்துபடிக்கு காசு ஐய்யாயிரமும் இந்

9. த குறுக்கையில்க் காணி உடைய பள்ளிகளில் மரகத சோழ முத்தரையன் உள்ளிட்டார் திருநாளகத்தோறும் குறைவறுத்து வீரநாரர்யணன் பேரேரிக்கு மேற்க்கு பச்சை மலைக்கு கிழக்கு

10. காவேரி ஆற்றுக்கு வடக்கு பெண்ணை ஆற்றுக்குத் தெற்க்கு உள்ளிட்ட பள்ளிகள் திருநாள்தொறும் குடிக்கு ஐம்பது காசும் அரிசி குறுணியுமாக நாட்டில் வெண்கலம் எடுத்து மண்கலம் இடித்து(ம்)

11. குத்தியும் தண்டியும் முதலாக்கி திருநாள்தொறும் இப்படி குறைவறுக்கக் கடவோமாகவும் சம்மதித்துச் சந்திராதித்த வரையும் செல்லக் கல்வெட்டிக் குடுத்தோம் பள்ளி நாட்டவரோம் இப்படி செய்

12. த பள்ளி நாட்டவர்க்கு பட்டுப் பரிவட்டமும் திருமுனொடுக்கும் பெறக் கடவதாகவும் எழுந்தருளிப் புறப்பட்ட(ால்) 'வந்தான் தேவர்கள் தேவன்' என்கிற திருச்சின்னத்து முன்பே 'பன்னாட்டான் தம்பிரான்' என்கிற திரு

13. ச் சின்னம் பணிமாறக் கடவதென்று[2] பெருமாள் குலோத்துங்க சோழ தேவர் திருவாய் மலர்ந்தருளின படிக்கு ஸ்ரீ மாஹேஸ்வர ரக்ஷை இக்கல்வெட்டினபடியே திருநாளகத் தொறும் தண்டி கொ

14. ள்ளவும் இன்னாயநாற்க்கு அமுதுபடி சாத்துபடிக்கு உடலாக நாலாவது முதல் வில்லுக்கொரு பணமாக .............. வெண்கலம் எடுத்தும் மண்கலம் உடைத்தும் குத்தியும் அடிக்கடி தண்டியு(ம்) முத

15. லாக்கவும் இதுக்கு இலங்கணமஞ் சொன்னாருண்டாகில் நம்மிலொருவன் அல்லவாகவும் இவன் (ஹ)பத்தி........ சோழன் எடுத்த இந்நாயனாற்க்கு திருப்பணி

16. க்கு முதலாக்கவும் இப்படி சம்மதித்து சன்திராதித்தவரையுஞ் செல்ல கல்வெட்டிக் குடுத்தோம் **பல மண்டலங்களில் பள்ளி நாட்டவரோம்** இப்படிக்கு இவை பல

17. மண்டலங்களில் பள்ளி நாட்டவர் பணியால் இடங்கை விக்கிரம.......... எழுத்து **பள்ளி நாட்டவர் வம்சம் விளங்க.**

---

1. இக்கல்வெட்டு, ஆவணம் இதழ் 18-இல், 84-86 ஆகிய பக்கங்களில் தஞ்சாவூர் திரு. இரா. ஜெயராமனால் வெளியிடப் பெற்றிருக்கிறது.

2. 'வந்தான் தேவர்கள் தேவன்' என்னும் அரசனின் பெயர் தாங்கிய திருச்சின்னத்துக்கு முன்பாகப் 'பன்னாட்டான் தம்பிரான்' திருச்சின்னம் எடுத்துச் செல்ல அரசன் அனுமதி வழங்கியது பள்ளிகளின் தியாகத்துக்குத் தரப்பட்ட சிறப்பாகும்.

# இ - 7. பரங்கிமலைக் (சென்னைக்) கல்வெட்டு

**இடம் :** சென்னை, பரங்கிமலை, வெள்ளித்தெரு (Silver Street)வில், முதல் வீட்டுச் சுவரில் அமைந்துள்ள 1 அடி அகலமும் 3½ அடி நீளமும் கொண்ட கற்பலகையில் வெட்டப்பட்ட கல்வெட்டு.[1]

**காலம் :** கி.பி. 1906-04-13.

**செய்தி :** செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், பறங்கிமலை வெள்ளித்தெருவைச் சேர்ந்த வேல்பிலி நாய(க்)கர் மனைவி மங்கத்தாயம்மாள் அவர்கள் நந்தம்பாக்கம், கோதண்டராம சுவாமியார் கோயிலில் வேத பாராயணம் தொடர்ந்து நடக்க, தன்னுடைய வீட்டைத் தானமாக அளித்துள்ளார்.

1. சொஸ்த்தகாயி விஜயாரபுத்ய சாலிவாகன ச
2. காப்த ஷு 1829 கலியுகாப்த ஷு 5008 பிரபவ
3. திகாப்தி ஷு 40க்கு மேல் செல்லா நின்ற
4. பவ ஷு சித்திரை மீ° உ வெள்ளிக்கிழமைக்கு
5. ச் சரியான 1906 ஷு ஏப்ரல் மீ° 13 செங்கல் ப
6. ட்டு டிஸ்டிரிக்கு சைதாப்பேட்டை சப் டிஸ்
7. டிரிக்கு பறங்கிமலை சில்வர் சையிட்டில் 473
8. வது நெ(ம்பர்) வீட்டிலிருக்கும் வன்னிய குலம் வி
9. ஷ்னு மதம் மகரிஷி கோத்திரம் காலஞ் செ
10. ன்ற வேல்பிலினாயகர் பாரியாள் மங்கத்தா
11. யம்மாளகிய நான் மனப்பூர்வமாய் நல்ல
12. சுய ஞு(ா)பகத்துடன் ப்ரிதிழ்டை[2] செய்து வைத்
13. த சிலசாஸனம் என்னவென்றால் ஷெ டிஸ்
14. டிரிக்கு நந்தம்பாக்கம் கிராமத்தில் எழுந்தருளி
15. யிருக்கும் கோதண்டராம சுவாமியார் சன்

16. நதியில் கான்யிப்பொழுது வருழுவாறிய
17. ல்[3] நடத்தி வரும் துவாதிசித்தி[4] இரிபதகன்[5] வே
18. த பாராயண கைபிங்கரியங்கள் எனக்கு பி
19. ற்காலமும் சாஸ்வதமாய் நடக்கும் பொரு
20. ட்டு 473வது 9 நம்பருள்ள என் வீட்டை
21. ஷை சன்நதிக்கு தானமாய் கொடுத்துவிட்டேன்
22. ஆகையால், இதுமுதல் நான் ஜீவதித்திருக்கிற
23. வரையில் நான் அனுபவித்து வர வேண்டி
24. யது எனக்கு பிற்காலம் ஷை வீட்டை ஷை சன்
25. நதி தர்மகர்த்தா உடனே கைபத்திக்கொண்டு
26. அதில் வரப்பட்ட குடிக்கூலி வரும்படியை
27. வாங்கி ஷை வீட்டுக்குண்டான வரி ரிபேர் முத
28. லான செலவுகள் போக மிகுதியைக் கொண்
29. டு மேல்கண்ட கையிங்கரியம் சாஸ்வதமாய்
30. நடத்தி வர வேண்டியது. ஷை வீட்டை எவ்வித
31. பார்தினமும் செய்ய வொருவருக்கும்
32. தொரு பாத்தியதை கிடையாது
33. **மங்கத்தாயம்மாள்**
34. **கை நாட்டு**

**அடிக்குறிப்பு:**

1. இக்கல்வெட்டை, ஆவணம் 18-இல், 127-128 ஆகிய பக்கங்களில் காவேரிப்பாக்கம் முனைவர் டி. வெங்கடேசன் பதிப்பித்திருக்கிறார்.
2. 'சுய' என்று படிக்கவும்.
3. 'காலைப் பொழுது வருஷவாறியல்' என்று படிக்கவும்
4. 'துவாதசிதிதி' என்று படிக்கவும்
5. இருபதகன என்று படிக்கவும்.

## ஈ - 1. உடையார்ப் பாளையம் வன்னியர் ஜமீன் ஆவணம்

# The Udayar Palayam Vanniya Zamindar Genealogical Tree, copied By Natana. Kasinathan

1. Genealogical tree of the **Zamin family of Udayar**
2. **Palayam of Bargava Gotram in Ganganooja family**
3. **that took its origin from Vanniya Kulam (the family of the God of**
4. **Fire.) This family has been in existence since the year 1176**
5. **after the era of Salivahana or since 1253 A.D to the present date**
6. with abridged notes in each of the successor.
7. This family originally settled itself in Conjevaram. Hence
8. and by the honorary...... members had earned the Zamindars
9. names are prefixed by Kachi and affixed by Kalacca Thola Udayari
10. Vide the history of this family as to other particulars

1

**Kachi**

**Pallikonda**

**Rangappa**

**Kalacca thola**

**Udayar,** the

founder

Ruled 50 years.

11. *He was first appointed by Veera Narasimma Royer at the*
12. recommendation of Senji Ramabhadra Naickar

13. as the mansubadar gained archory over Parithoo
14. Bakshayee, made **Arasangudi his capital** and
15. settled himself there enjoying the profits of his
16. mansuba and jaghirs of **Kunnathoor**
17. **Doorg etc.** All royal honours and
18. victorious titles earned of his own valour
19. were praised on him by Bhattoos
20. He was a veteran of the four
21. political expedients as
22. conciliation, donation, device
23. and amercement with
24. which he put down all
25. his enemies petty poliyagars
26. and the ..... Troop that
27. frequented ghillikavanam
28. He enjoyed from 1176 after the era of Salivahana
29. till 1227 of the same **the profits of Odayarpoliyam,**
30. **Tittagudy, Bhuvanagiri, Vriddhachalam, Mannargudi**
31. **and Chidambram subahs** with the kavals thereof
32. Honorary titles **"Paritha Sapthanga harana, Rana Vijaya Vasikritha, Kamsiyuth thooth thoombi"**
33. **Kabharana, Kanaka manditha, Ranabhadra**
34. **Lanchana, Navavithanga Barirava mukar**
35. **-itha thiganthara, Kanchi purathipala**
36. **Kalakka Thola invested by Royer**
37. He had under his command 5000 men
38. 300 horses and 12 elephants he caused
39. the erection of the one Odayar temple Kalak-
40. Ka tholapuram Agrah

2

His son

**Kachi peria**

**Nallappa kalakka**

**Thola Udyar**

He ruled 31 years.

41. He was very courageous and daring
42. spirited enjoyed only the profits
43. of his ancestral property
44. **He was killed by a petty Poliyagar**
45. **in the street of Bhuvangagiri** during
46. A battle.

3

His brother

**Kachi Chinna**

**Nallappa Kalaka**

**Thola Udyar**

He ruled

55 years.

47. Though minor when he took the management caused
48. erection of one **odayar temple**, Kalakka Tholapuram
49. **in remembrance of his father and**
50. **brother in Bhuvangiri where they died**
51. **dug one of Ayeekula**, made himself
52. pilgrim to wholly waters, rendered pecu-
53. niary **assistance to the repairs of the**
54. **Chidambaram temple, gave jaghirs to the**
55. **Three Kattalai of the same temple, obtained**
56. the leer of Guru Namasivaya Anticipating

57. ........ *and dreams in jhillikavanam*
58. some good, **he in 1236 after era in the Tamil year**
59. **Anantha on the 15th of Thai being full moon Thursday**
60. **ordered to lay foundation to erect the town of Odayar poliyam**
61. **with all temples, agraharams and a palace in it** & colonized
62. the same town on the same auspicious day made
63. conveyances of gold and silver to all gods, cleared the forests
64. and opened 150 villages in it, made liberal donations for char-
65. itable institutes.

4

His son

**Kachi**

**Mooniappa**

**Udyar**

Ruled 23

Years

66. He was installated in 1289
67. after the era, improved
68. the town of Odayarpoliyam
69. and its people was very
70. obedient to his superior (throne)
71. fostered all mirasus earned by his ancestors
72. managed all temple and brahmins
73. with no wants to whatever

5

His son

**Payappa**

**Kalacca Thola**

**Udyar**

Ruled 42 years.

6

His *(son)*

**Kachi Ramapa**

**Kalacca Thola**

**Udyar**

7

His son

**Kachi**

**Vencadappa**

**Kalacca**

**Thola Udyar**

Ruled 40

Years

74. cleared forests, increased the number

75. of villages and their annual incomes

76. employed a large number of men

77. under his service and command-

78. **had a mint of his own newly**

79. **coined Odayarpoliyam panam**

80. **(His) revenue then amounted to**

81. **50, 000 getty pons.**

8

His son

**Kachi Moothu**

**Krishna**

**Kalakka**

**Thola Udyar**

Ruled 36 years

9

His son

**Kachi Chandra**

**Sakara Kalacca**

**Thola Udyar**

Ruled 30 years

10

His son

**Kachi Nalla**

**Nynaga**

**Kalacca Thola**

**Udyar**

Ruled 25 years

11

His son

**Kachi Kalyana**

**Rungappa Kala**

**Kka Thola**

**Udyar**

Ruled 36 years

12

His son

**Kachi Nallapa**

**Kalacca**

**Thola Udyar**

*Ruled 49 years*

82. In 1596 after the era **waged war with**
83. **Chokkanatha Naickar of Trichy Royal**
84. **family in favour of his brother**
85. **Muthoo Alagathri Naickar whereby**
86. **he obtained as inam the villages of**
87. **Villangudy and Sithamally firkahs**
88. made Kasankottai fort for the safety
89. of Muthu Alagathri Nayakar
90. **He was favoured by the East India Company**
91. **with the kaval mirasi of Devanampatnam**
92. *He was very heroic, courageous, hospitable and*
93. merciful
94. **The Royal family of Yachami Naickar and**
95. **that of the Royer state took refuge**
96. **under this Odyar** owing to the tyrannical
97. tumult of Suruppa singh **Ekambareswarar**
98. **Kamatshi amman Vartharaja (these idols)**
99. **were brought to Odayarpoliyam as it was then**
100. **well fortified by the dense forests and**
101. **the large military force. This palayam then**
102. **consisted of 22 mahanams yielding 70,000 gettippons besides**
103. **the Kaval miras income of Thittagudi etc which yielded**
104. **6000 pons. He had 8 wives 52 concubines and 30 children,**

13

His son

**Kachi Uttama**

**Rungappa**

**Kalacca Thola**

**Udyar**

Ruled 6 years

105. assumed charge in the 60th year of his age
106. when Senji state and Royer's court
107. fell into the hands of Suruppa
108. Singh and Akkanna Mathanna
109. respectively. It is in his reign
110. that Nizam Ali Khan Bahadur
111. took Hyderabad and Dawood
112. Khan Bahadur took Senji by force
113. **Kunnathur Dhurg of this Odayar was also**
114. **attacked**. Only the Kavalmiras of those
115. village and Jaghir of the 5 mahanams given
116. instead. **The nabob ordered the odayar to enjoy the**
117. **poliyagar miras of Odayarpoliyam estate on an annual**
118. **payment of Rs. 40,000 peshcush.**
119. **A battle was fought**
120. **with Managammal**
121. **whose force (was)**
122. **driven away**
123. **taking Mahara**
124. **dhwajam (and)**
125. **Surutty by force**

Brother of
The 13th of this
genealogy. Name
*not known*

14

His brother's
Son
**Kachi Rungapa**
**Kalacca**
**Thola Udyar**
He ruled
37 years

126. He was regular in payment of Peshcush
127. **made sodasa mahadanam spending 3 lacs**
128. **of getty pons. He was praised by pandits**
129. **"Vasud Vidya Sankia, Punkitha maha Dana**
130. ***Samada yeso visala"*** *He was very pious*
131. *and faithful to Brahmins whereby he*
132. *was called* **"royal sage"** *(ராஜரிஷி)*
133. He did costly servitudes to idols Ekambareswarar
134. etc which were kept here only, during his whole reign.

15

His son
**Kachi yuva**
**Rungappa**
**Kalacca**
**Thola**
**Udayar**
Ruled 18 years.

# 29. நகரத்தார் கட்டடக் கலை - வீடுகள்

மனித நாகரிக வளர்ச்சியினைக் குறிக்கையில் பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோக காலம் என அறிஞர் பகுத்துக் கூறுவர். குகைகளில் வாழ்ந்த மனிதன் படிப்படியாக வளர்ந்து நல்ல வீடுகளை அமைத்து வாழக் கற்றுக்கொண்டான்.

## பழந்தமிழர் இல்லங்கள்

ஆதியில் குறிஞ்சி நில வாழ்வில் மனிதன் இயற்கையான குகைகளில் வாழ்ந்தான். இவ்வாறு குறிஞ்சி நில வாழ்வில் பயன்பட்ட குகை போன்ற அமைப்பை ஏனைய நில வாழ்க்கையில் செயற்கையாக அமைத்துக் கொண்டான். இவையே பிற்காலத்தில் கோயில் மண்டபங்களுக்கு அடிப்படையாக அமைந்தன.[1]

இதற்கு அடுத்த முல்லை நில வாழ்வில் மனிதன் மரநிழலில் கூட்டமாக வாழ்ந்து வந்தான். அம்மர நிழலே அவர்கள் இல்லமாக பயன்பட்டது. இவ்விடங்கள் மன்றம் எனப்பட்டன. இத்தகைய மரநிழலில் மக்கள் வாழ்ந்த மன்றங்கள் **வாகை மன்றம் (மாமலர் பெருஞ்சினை வாகை மன்றமும்** - மணிமேகலை) **வெள்ளில் மன்றம் (புள்ளிறை கூரும் வெள்ளின் மன்றமும்** - மணிமேகலை) என்று மணிமேகலையும், **வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம்** பலவும் சிலம்பும் குறிக்கிறது. இம்மன்றங்களே பொது அவைகளுக்கும், கோயில்களுக்கும் அடிப்படையாக அமைந்தன.

முல்லை நில வாழ்க்கையின் தொடர்ச்சியாக விலங்கினின்று தம்மைக் காத்துக்கொள்ள மரங்களின் மீது பரண் அமைத்து வாழத்தொடங்கினான். இவை வரகு தாட்கள் வேய்ந்த குடிசைகளாக இருந்தன. இதுவே பின்னர் விளை புலங்களைப் பாதுகாக்கப் பரணாகப் பயன்பட்டுக் காலப்போக்கில் எழுந்த பலநிலை மாடங்களாக வளர்ந்தன. (**முகில்தோய் மாடம்** - சிலம்பு).[2]

---

1. பழந்தமிழர் குடியிருப்புகள், உலகத்தமிழ் மாநாடு விழாமலர், சென்னை, 1968.

2. மா. சந்திரமூர்த்தி, சங்ககாலக் கலைகள், தமிழகக் கோயிற்கலைகள், முதற்பதிப்பு, தொல்லியல் துறை வெளியீடு, சென்னை, 1973, பக் – 5.

17

His son

**Kachi Moothoo**

**Vijaya Rungappa**

**Kalacca Thola**

**Udyari**

Ruled 27 Years

157. As this was a minor when his father died
158. Thulaja Maharajah of Tanjore gave all
159. the horses and elephants which his
160. father had left there. He lived in
161. Tanjore for five years. In 1693
162. after the era he flew away to Thatha
163. -Ayyangar pettah in the Senthamangalam
164. taluq Mysore territories where
165. he lived 4 years with the per-
166. mission of Hyder Ali. Again he
167. went to Gangaivalli village wherefrom he sent
168. one Venkatachalaiyar to the Nabob to get
169. back his country once lost. An agreement
170. was entered into whereby he got back his polium
171. In his days the ruling authority had good many
172. changes

18

His son

**Kachi Abhimana**

**Yuva Rungappa**

**Kalacca Thola**

**Udaiyar**

Ruled 9 years

173. Remained in Madras waiting in the
174. Nabob's palace. **He enjoyed only the**
175. **Kaval miras as the Zamindary was**
176. **then under the attachment of the East**
177. **India company**

19

His younger

Brother

**(Kachi) Rungappa**

**Kalacca**

**Thola**

**Udyar**

Ruled 34 years

178. In 1724 after the era of Salivahana
179. John Wallace Esq the then Collector
180. of Trichnopoly partonized him and
181. ........ him ....... one........
182. ......... assessment of the Odayar poliyam
183. Zamindari etc

20

His son

**Kachi Moothoo**

**Vijaya Rungappa**

**Kalacca Thola**

**Udyar**

**Ruled** 6 months

**Kachi prasa**

**na Rengap**

**Pa Kalakka**

**Thola Odaiyar**

**Kachi**

**Vijaya Rengappa**

**Kalakka Thola**

**Odaiyar** son

of the 3rd wife.

21

His son (minor)

**Kachi Rungappa**

**Kalacca Thola**

**Udyar**

184. He was a minor when his father died
185. and he died himself at the age of
186. six before he attained majority.
187. The Zamindari was under the court
188. of wards when he was a minor

**Kachi**

**Rengappa**

**Kalakka**

**Thola odayar**

**Kachi**

**Muthu Vijiya**

**Rengappa**

**Kalakka**

**Thola odaiy**

**ar**

22

Younger brother

of the 20th Raja

**Kachi Kalayana**

**Rungappa**

**Kalacca**

**Thola udyar**

Ruled 43

Years.

189. *Made liberal* donations, *worked several*
190. charitable institutes, made trustee of the Sri
191. - *mushnam* temples.

23

His brother's

*grandson*

**Kachi yuva**

**Rungappa Kalaca**

**Thola Udyar**

192. Those marked in number were the successors; The rest simply members of the family[2].

**அடிக்குறிப்புகள்**

1. *அளக்குடி ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், (அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள்), தொகுதி-11, பக்கம் 40.*

2. I am exteremely thankful to Maha ra ra sri Periya Kulandai Raja Kalatkal Thola Udaiyar, Zamindar of Udayarpalayam for having kindly placed before me and permitted me to copy this genealogy.

   For details of this document read the chapter written by this author in his book 'Tamilakam Arappan Nagarigat Thayagam' (Tamil), in the pages 128-144.

## ஈ - 2. "அரியலூர் வன்னியர் பாளையம் ஆவணம்"

**ஓலைச்சுவடி வாசகம் (முதல் ஓலை)**

1. *பல்லாண்டுயிருடன் சொல்லாண்டுலகய் பருதியும் சோம னும் பரிவுடன் புரக்க ரேழுலுகம் படைத்தருளின*

2. *பூலோகத்தின் புதுமை தான் பார்க்க மாலுடன் தேவரை வாவென்றளைத்து ஆலோசனையுட னன்புடன் கேள்க அபசார*

3. *துமையாள் ஆக மகிள்ந்து யிப்போது நாமும் யேருவதல்லால் ஒப்புடன் நாரதர்தனை யளைத் தோங்கென செப்பம்*

4. *மாயானாரடக் கண்ணோநிட நற்புடன் னாரதர் நாடிவரவே நாரத முனியை னேறாயளைத்து பாரேழுலகம் பார்த்து வாவென*

5. *வே சீர்பெறு நாரதர் சீக்கிரத்தெழுந்து யீரேளுலகம் யியல்புடன் பார்த்துக்காரேழுத்திரர் காலன்ந்தனிலே யிமையை கிரியுடன்*

**(இரண்டாம் ஓலை)**

6. *மனிய மந்தாகினி சமைய்ய கயிலையங் கிரி வட விந்தம் நிடத கிரியுடன் நீள் கந்தபர கிரி நீலகிரியுடன் சூள்ந்தங்கிருந்த*

7. *வதுவைய ரெழுவர் வாள் காவனத்தில் நிஷ்ட்டூரே நெடிய துட்ட வல்லவியள் கூடறலிற் காலும் கயிற் தளையும் திடமுனிருவர் செகதல*

8. *முழுது மன்னுயிரெல்லாம் பாரி வளைத்து தன்னுயிர் பிளைத்து தன் தாவளத்தில் தின் று கொண்டு திறமுடனிருவர் ஒன் றுபட வாளின்*

9. *உறுதியை கண்டு நாரத முனிவர் நடுங்கி பய்ந்து பறாபாவலி கூவிள பீரத்திற் சென் று விண் ணப்பம் செய்ய விமலருமையுடன் கண்ணயரு*

10. *ருத்திரர் கமலாசனனும் தும்புரு நாரதந் தும்பை மாலயனும் அன்புடன் சூள அரசனாருமையுடன் செங்கையில் மான் மளு சிறப்பு (ட)*

**(மூன்றாம் ஓலை)**

11. னிலங்க திங்கள் மௌலியன் சேவிடை யேரி நான் சதுமறையோர்கள் தான்வர தானவர் வானவர் சூள வந்து காவனதி அதிசயம்

12. கண்டு அரனாரிவரை வசதி செய்திடும் வகை வனப்பம் கேள்க்க தேவரீருமது சிறமென்று சொல முக்க(ா)ணீசர் முகமலர்ந்தருளி யரகரக தினம்

13. மியற்றி வல்லகளைச் சங்காரஞ் செய்யத்தான் செய்யவேணு மென்று யிந்தக் காலத்திலினி யாகம் செய்ய சந்திரகிரியென மந்தலமிகுவாமென

14. அக்கினி வளர்க்க ஐந்து பேர் தோன்றினர் ஐந்து பேர் கையிலழகா வல்லயமும் பட்டாக்கதியும் பார் வில்லம்பும் வாள் முதலாயுத வகை பதினெட்டும்

15. கொண்டு பிறந்து கோரித்து நிற்க கண்டுமையீசனும் கண்களிகூர்ந்து யிந்த வல்லவிக்க யிவரால் செயிக்கலாமெண சொல்லிள் யகமகிள்ந் துமையாள்.

**(நான்காம் ஓலை)**

16. கையினால் மாலை களத்தி கொடுத்திட மனமுற வாங்கி சிலை வைளத்து அம்பு தெரிந்தே ஐவரு முடிக்கி நிஷ்ட்ட நெடிய துஷ்ட்ட

17 வல்லியள் முன் கொட்டமிட்டு குறித்து கொக்கரித்து திடமாய் வென்று செயங்கொண்டு மீண்டு அக்காவனத்திலாளுமை முன்வர

18. முக்கண்ணர் தாமு முகமலர்ந்தருளி பக்கத்தில் வைத்து பஞ்சாக்ஷரம் சொல்லி நீறுதரித்து நிமலரரெ(ன்)ன சொல்வார் ஒங்களுக்குப் பெண் உறுதி செய்வதற்கு

19. சிங்கள தேசஞ் செயங்கொண் டவ்வூரில் அரசன் பயந்து ஐந்து கன்னியரை கொண்டு வந்தே மனங்கூட்டுவாயென்ன அம்மொழி கேட்டு

20. அக்ஷணந்தனிலே செம்மையாய் சிங்கள தேசத்திற் சென்று வெட்டியொடுக்கி வீரத்துடனே (லங்கே)சன் பயந்து ஐவர் கன்னியரை உடனே கொண்டு...த

21. உமையாள் முன்வர அப்போதரனானார் மகிள்ந்து செயவிவாகம் செய்யவேணுமென்று அங்கயற்கண்ணா ளரனு மாதவனும்

**(ஐந்தாம் ஓலை)**

22. பங்கய பிரமன் பரதேவர்களும் முப்பத்து முக்கோடி தேவர்கள் வாத்தியம் வ(ாழ்த்தி) நின்று பண்பாயுரைத்திட மத்தளம் தானும்,

23. மல்லக பேரிகை, தளாமுந், தவிர்கள், கதப்பா மிகுமேள முளங்க மிகு சின்னம் பூரிகை... குளலுடன், கூண்டநாகசுரம், எக்காளம் பூரி

24. கை யெங்கு முளங்கிடச் சங்கு தொனிக்க தயவுடன் **ஐவர்க்கும் ஐந்து கன்னியரைய் திரு மணமியற்றிக்** கட்டுபாக்கத்துடன் கனக தண்டிகையும்,

25. மட்டலர் முல்லை மாலை, மயில், சிங்கக்கொடியுடன் சிறந்த கயற்கொடி, மகரக்கொடி, வளஞ்சேர் புலிக்கொடி, விருது கவரி மிகவே

26. கொடுத்து, ஆடகந்துலங்க, **அக்கினிப் பரியும்** சந்திர வட்டக்குடை தரளக்கொடையும் பவளக்குடையும் பதுமாதகமும், கவளக் கரியும்

27. கதிந்மணிமுரசும், வில்லினம் சல்லி கொடுத்துத் தண்டு சூலுமுஞ் சக்கர்மும் படைவாள் யெண்டிசை புகள் யெறி வல்லையமும் சிங்ககரடி

**(ஆறாம் ஓலை)**

28. கை யம்பு சேர்ந்த கட்டாரி நெரி நெரி வல்லயம் நிரை நிரை கொடுத்து பகல்வெத்தி பாவாடை பருதியிடாலும் மிக விருதெல்லாம்

29. விரைவாய் கொடுத்து **அக்கினிக் குலத்தோர் ரறுமைக்குரிய புத்திரரென்று புகள் பட்டங்கெட்டி** அஷ்ட ஐஸ்வர்யமும் அரசுங் கொடுத்து நமக்

30. குளவரிசை நாலா விதமும் உமக்குக் கொடுத்தோ மென்றோதி யரனார் தாரணி மீதினில் தாளவானந்தி உருமெனச் சிந்தை மகிள்ந்து திசை

31. **கம்ப நாட்டி சந்திரகிரியும் தனதரியூரும் சொந்தமாய் கொடுத்து சுகமேயிருமென சிவனாருமையும் திடவுளம் பத்திட்** வானவ ரிமையவர்

32. வாத்தியம் பாடிட ஞாநியர் பெரியோர் நற்பதங் கொடுக்க ஐந்து பேரும் அரனாரடியைச் சிந்தையால் வணங்கச் சிவனாருமையும்

**(ஏழாம் ஓலை)**

33. அந்தியும் மாதியும் அருளி ஐவர்க்கு வன்னிகுலத்து வன்னிய ரெனவே சித்தமகிள்ந்து திடநாமங் கூறி பாலிநதி வடகரையில் கிஷ்ண வன்னியன்,

34. பார்புகள் பெண்ணை மட்டும் செம்பு மன்னியன், சீலமுறு காவேரியில் விறு வன்னியன், சேதளவு கங்கை வன்னியன், தில்லை கீள்பாள்

35. ஆலமிக் காளாத்தி (செ)தன்பாலி விந்திர வன்னியன் ஐந்து பேருக்கு மருள் பல கொடுத்து ஓலாய்ப் பூமியில் லுண்டு வாள்ந்திடுமென கயிலை யங்கிரிக்கு கடவு

36. ளேகினார். ஐந்து பேரு மதிக சந்தோஷமாய் யெந்தத் தலமா மிருப்பதற்கென்று ஆலோசனை செய்யின் னேரத்தில் காஞ்சியர் கோனுங் கருணை

37. கொண்டளைக்க ஆமென காஞ்சி(யி) லகமகிள்ந் திருந்து காஞ்சி றாயர்க்கு களபகையாகிய ஆரியன் தன்னை யறவே துணித்து வாளு நாளில் வளர்

38. காஞ்சியர் கோன் பெண் கேட்டதனால் பிறிந்தே யரசனை பேருலகறிய்ய சிறஞ்சாய வெட்டி அத்தலந்தனை விட்டகன்று வேலூரில் வாள் விற்

**(எட்டாம் ஓலை)**

39. படைய் தேவமாறாயர் தன்பாற் செல்லத் தயுவடன் மகிள்ந்து வாருமெனவே மனங்களி கூர்ந்தது பேரேதென்று கந்தவர்

40. கேள்க்க காவனந்தன்னில் கன்னியரெழுவரில் வல்லவி யிருவர் வதைத்து..... ளடக்கி சிவனும் முமையும் செலகண் ணாதரும் பார்க்க

41. வல்லவிகளை வெல்லும்படிக்கு சிறப்பு வேள்வி திறமாய் வளத்ததில் வீரவல்லையமும் வில்லம்பு முதலாய உயர் பதினெட்டாயுதத்

42. துடன் வேள்வியில் ஐவர் பிறக்க அரனுமை மகிள்ந்து மகிள்ந்து மலர்மாலை யீய்ந்திட வாங்க வல்லவியனை செயங்கொண்டு வேறிடஞ் சேறோமென

43. வே உம்பால் வந்தோமென மகள்ந்துரைத்திட மகாறாயர் தானு மகிள்ந்தே யிவர்கள் அக்கினிதன்னி லரனருள் கொண்டு மிக்காய் வளர்ந்த

(ஒன்பதாம் ஓலை)

44. வீரன் என்பதனால் அக்கினி பொறுத்தா லது நிசமாமென செப்புக்குதிரை திற்முடனமைத்து கனலென காய்ச்சி கருத்துடன்

45. வீரர்கள் தன்பால் விடுத்து தயவுடன் னடத்தென அரனுமையாள் மலரடியினை வாள்த்தி செப்புக் குதிரை திறமுடன் நடத்தலும் மகாறாயர்

46. தானும் மனது சந்தோஷயமாய் பள்ளியரைக் காவல் பரிவுடன் கொடுத்து குலமு நலமு மச்ச நம் பேரும் கொடுப்போமென

47. மகிள்(சி) கொண்டு சந்திரபதி பல்லி வில்லி படையாண்டவர்கள் அரியகுல மழுவெறி ராயரிவரென வரிசைப்பேர் கூறி மானிலம் புரக்

(பத்தாம் ஓலை)

48. க(பண்) வரம்பறியும் மனமகிள்ந்தே தறவாங்கி மேற்கொண்டு வடமேல் திசையில் வளர் மிகச் சிறந்து.

49. விக்கிறம பாண்டியன் மெய் மகிளும்படி வாழும் நாழில் வளர் படை தலைவர்கள் தந்தன வல்லையம் துணை

50. ஒரு மிக்க பண்ணையம் பதியில் படர்ந்த புளியில் சாற்ற புளியது தாங்களமற் சாய்ந்திட மற்றொரு புளி

51. வளைத்து பிடித்து தக்க வல்லையம் துணை அதிர்ச சாற்றிட காடு நாடாக்கி காசினி புறக்க பெருமை பெற்றதன்

52. பின் பிறதிஷ்டை செய்து பெரும்படை வினாய(க)ன் பிறபல்லியமாக யேறியும் நகரும் இனிதுடன் கண்டு பதிவாய்

(பதினொற்றாம் ஓலை)

53. தனது நற்பண்ணை யுண்டாகி மாற்றர் துதிக்க வாளும் அன்னாளில் கொண்டம கோட்டற் குலமது தளைக்க

54. மானியம் காத்து மனுமுறை செலுத்தி தென்காசி தன்னில் சிறந்த பாண்டியனை சேவித்திருந்து

55. செகமெல்லாம் புகழ் உண்மை உபதேசம் உறைத்த சற்குருவாம் ஊருடைய தேசிகற் (குகந்த) நக

56. ர் தன்னில் மடவாலயந்தான் வருவிக்கவென்று விசுவலிங்கேசர் மிக மகிள்(ந்) திருக்கும் சன்னியதான

**(பன்னிரண்டாம் ஓலை)**

57. த்தில் தயவுடன் செய்து மகிள்ச்சியுற்றிருக்க வளர் பாண்டியர்கள் வல்லையம் சாத்தி வளம் புளி சாய்

58. ந்த வளமது கேட்டு மகாபெரும் சேனை பள்ளி வில்லி படையாண்ட பறாக்கிரமற் யென்று உள்ள

59. மகிள்ந்தே உயர்ந்த பேர்கூறி சுந்தற வல்லைய கோட்டை றாய ரென்று சிந்தை மகிள்ந்து சிறப்பாய்

60. வரிசையும் மீனக் கொடியும் வெகு பல வரிசையும் கானக்கவரியும் கனக தண்டிகையும் வெத்தி சங்க மிகவே கொடுத்து தேவ நல்லூரும்

61. செய கயற்றாரு காவலாய் நீங்கள் கதித்து வாளென்று அவ்வுரை மீனவனு மன்பாயுரைத்திட கவவெனுஞ் சற்றங் கருதாமல்

**(பதின்மூன்றாம் ஓலை)**

62. மருவலர் துதிக்க வாளுநாளில் பாண்டியன் கூடார் பதிதனில் வந்து வேண்டிய வரிசையும் மீனக் கொடியும் வாழ்த்திக் கொடுக்க

63. (வண்ணான் நாவிதனும்) வரிசைகள் பெற்றனும் போற்றியே பின்னும் பொன்னடி வணங்க சிந்தையுற்றிருந்து சிறக்கும்

64. அன்னாளில் வள்ளியூர் தன்னில் வளர் குலசேகற பாண்டியன் முன்போய் பகையிற் செய்த்து மன்னன், மதிப்பன் யென்

65. றிருபேரில் மன்னன் சிறசை வதைத்து பகைவனை தன் றாள் படித்து தலையறக் கொய்து இருவரையும் இயல்

66. செக மதிப்பன் குலைசேகறர் முன் கொண்டுபோய் வைக்க அதிகவரிசை அன்பாய்க் கொடுத்து கனக தண்டிகையும்

(பதினான்காம் ஓலை)

67. வாள் (த)ந்து பாளையத்துடனே வல்லையத்திரள் படையரசு யாகி படவுடன் செலுத்தி ஆள்வார் குறிச்சி யதிபண்ணை யம் பதியாள்

68. வீரர்களா(ன) வன்னிய குலத்தோர் பொன் போலுகிலகில் பொலிந்து வாள்ந் துயர்ந்தோராகிய சந்திரபதி உ யலூர் பள்ளி வில்லி

69. படையாண்டவர்கள் உ பெரும்படை வினாயகன் துணை உ.[1]

அடிக்குறிப்பு

1. இந்த ஆவணம் இந்நூலாசியரால் தம் 'தமிழகம் அரப்பன் நாகரிகத் தாயகம்' என்னும் நூலில், 83-92 ஆகிய பக்கங்களில் விரிவாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. திரு. நா. முரளி நாயகரால் கொண்டு வரப்பெற்ற இவ்வாவணம் கிடைத்த உடன் அவசரமாக ஓலை வரிசையில் இருந்தவாறு படிக்கப்பட்டது. அவ்வோலையின் வரிசையை மாற்றிச் சரியான முறையில் இந்நூலில் படிக்கப் பெற்றிருக்கிறது.

## ஈ - 3. கீழூர் வன்னியர் பாளையம் ஆவணம்

A Car'te granted by George Dan'son Esq (The) Chief of Council of Cuddalore to Andeapah Nainar.

1. We have constituted and appointed you to be watchman of
2. the Hon'ble Company's Jageer villages of Chinnama naick
3. Pallam and Naidpet on the following terms.
4. That you keep twelve taluks one corporation five common (Ree)
5. to watch at the Villages and the several weaving Pettahs to
6. protect the property of the Inhabitants against Thieves,
7. prevent any riots or Distrubances, and if any goods belonging (to)
8. the company shall be stolen, or if any Inhabitant's House or Godown
9. shall be robbed then your shall make satisfaction for what is lost also
10. produce the person or persons who committed the Robbery and if any
11. person delivered into you (x) custody shall make his escape you shall pay
12. the Debts
13. That you (should)Depute an Assistant to keep and exact Register of all the In
14. (come)...................................... .
15. specifying their, employment (and) place of their abode, also a Register of the Looms
16. sh...ng by whom and in what manner they are employed and you must
17. be answerable for the appearance of the weavers and produce him or them when required.

18. That you keep two concicoplies the Tuncan Choultrys in the villages which

19. are to keep an account of all clothes and goods sent out and brought into the

20. villages and be a check upon the village conicoplies:-

21. That you take care cattle not destroy the paddy watch the heaps of

22. grain in he fields also the .......... at (sofur of goods)

23. That you keep two Orderly peons with the Resident and report to him

24. daily or immediately and to the Chief weekly extraordinary occurrences

25. observing all orders given you by the Resident or by the Chief of Council

26. That you endeavour to promote or increase of the looms keeping an

27. of the produce of the lands and (engage) ......... the

Husbandman to cultivate fallow grounds about the .......... .

**2nd Page**

28. and to render you capable of supporting the above mentioned charges as.........

29. as to maintain yourself, you are to be allowed to the amount of pay

30. 410 per year to be collected as follows Viz:

31. a fee to be levied on the looms at the rate of four fanams

32. each loom per annum computed at sixtyeight pagodas 68.0.0

33. Do on the amount of all Goods carried out and brought into the

34. Villages at the rate of 14 percent unkened at one hund'ed and seventy 170.0.0

35. for the Residue a Tope of Jack Trees and the Enam lands

36. hitherto enjoyed by the late Polygars will be let out

37. in the same manner as the other grounds form the

38. Produce of which will be paid you one hundred and seven-

39. ty two pagodas - 172.0.0

40. (making) together (annually the sum) of four hundred and ten Pagodas p. 410.00[1]

---

1. This has been copied from the book, 'Vanniyar Matchi' written by this author, in the pages 126-127.

# ஈ - 4. செஞ்சி வன்னியர் சமஸ்தானமு கைபியது (ஆவணம்)

"கைப்பியது செஞ்சி சமஸ்தானம் பாளையக்காரு கர்னாடகம், **வன்னியகுலம், பல்லவாரு,** வொாடையாரு பாளையம்."[1]

*சாலிவாகன சகம் 1656-இல் (கி.பி. 1734) யுவரங்கக் காழக்கத் தோவுடையாரு பாளையகாரு இருந்தார். அவருக்கு அவருடைய அப்பா ரங்கப்பா இவருக்கு ஜாகீர் கொடுத்தார். இவருக்கு மகன் இல்லை. இவர் தம்பி நல்லப்பா காழக்கத் தோழ வொாடையார் பாளையக்காரராக இருந்தார். A.D. 1779 நவாபு சாஹேபு சுமுதலெ சாஹெபு ஜாகீர் கொடுக்கவில்லை. ஜாகீர் காடாக இருந்தால் சாஹேவு திருப்பி ஜாகீர் கொத்தார் இவருக்குப் பிறகு இவருடைய மகன் ரங்கப்ப காழக்கத் தோழவொாடையார் ஜாகீராக வந்தார். ஜாகீர்தார் எல்லோரும் பைகம் நவாபுக்கு கொடுத்து விட்டு இருந்தார்கள்.*

*அதற்கு பிறகு அவர் மகன் யுவரங்கக் காழாக்கத் தோவொாடையார் வந்தார். ஸ்ரீமேஸ்த்தர் வாலீஸ் தொர ஜாகீர் கொடுத்தார். இவர் ஆறு தொடலகட்ல வீடு கட்டினார். இவர்கள் வன்னிய ஜாதிக்கு சோர்ந்தவர்கள்.*

*வன்னிய ஜாதி செஞ்சி சமஸ்தானம் வொாடையார் பாளையகாரர். கைபியத் எழுதினது யுவரங்க காழாக்கத் தோழவொாடையார் வக்கீல். மன்னார்குடி மாவட்டம் வக்கீல் பழய எழுதுவைச்சது. குமாஸ்தா நிட்டலநாயன் எழுதி வைத்தார்.*

*யுவரங்கக்காழாக்கத்தோழ வொாடையார் பாளையக்காரர் கிராமங்கள். வொாடையார் பாளையம், ஜெயங்கொண்ட சோழபுரம், குழுக்காவல், பொரகுடி, கங்கை கொண்டபுரம், வானகரயம்பட்டினம், கருப்புர், தாதம்பேட், பழூர் (பழூவூர்), வேலாம்குடி, சுத்தமல்லி; சொம்துரை (செந்துரை), வெண்ணாமடார்குடி, சென்னவனம், குழுமூர், பம்பரப்பி (பொன்பரப்பி), ராஜேந்திரப் பட்டணம், ஆண்டிமடம், வெழுந்தெ (விளந்தை), திருகழல்பூர் (திருக்களப்பூர்), முத்துசெவ்வாமடம், பல்லிகொண்ட பெருமாழ் குடி (பள்ளி கொண்ட பெருமாள் குடி).*

இந்த கிராமங்கள் இருக்கும் கோவில்கள் ரிப்பேர் பண்ணி பூஜை நடத்த வைத்தார்.

அக்கரஹாரங்கள் - வானையம் பட்டிணம், வொரடையார் பாளையம், கருப்பூர், அண்டியாவரம், ஆயதி பாளையம், வூர்கோட (உட்கோட்டை), புலியம்தோபு (புளியந்தோப்பு), மோட்டூர் முட்டம், பழூவூர், காடெம்பேட், கிழியப்பட்டு, பிராமணர்களுக்கு வீடு கட்டி கொடுத்தார்[2].

**அடிக்குறிப்பு:**

1. இந்த கைபியது தெலுங்கு மொழியில் உள்ளது. இதைத் தமிழ்நாடு அரசு ஓலைச் சுவடி நூலகம் 'Chidambaram Kaifyat and Kaifyats' என்னும் நூலில் வெளியிட்டிருக்கிறது. வெளியிட்ட நூலகக் காப்பாட்சியர் முனைவர் சௌந்தர பாண்டியன் அவர்களுக்கும் மற்றும் தெலுங்கு பண்டிதருக்கும் நன்றி.

2. இவ்வாவணம் இந்நூலாசிரியரின் 'வன்னியர் மாட்சி' என்னும் நூலில் பக்கங்கள் 204-205 ஆகியவற்றல் வெளிவந்துள்ளது.



சேரர் வல்லாள வன்னியர் மகாராசர், திருவுருவச் சிற்பம்
திருவண்ணாமலை வல்லாளகோபுரம்.

# சமுசிகாபுரம் வன்னியப் பாளையக்காரர்

கருப்பண பாண்டிய வன்னியனார் – (கி.பி. 1922–1943)





வன்னியர் குலக்கோமான்

பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ஐயா அவர்களும்

வன்னியர் குலக்குரு இந்நூலாசிரியர்

நடன. காசிநாதன் அவர்களும்